
திருஅருட்பா

உரைநடைப் பகுதி



திரு அருட்பிரகாச வள்ளலார்

திருஅருட்பா

உரைநடைப் பகுதி

உரைநடை நூல்கள், வியாக்கியானங்கள்
மருத்துவக் குறிப்புகள், உபதேசங்கள், திருமுகங்கள்
அழைப்புகள், அறிவிப்புகள், கட்டளைகள்
விண்ணப்பங்கள்]

திரு அருட்பிரகாச வள்ளலார்

முதல் பதிப்பு :
ஊரன் அடிகள் பதிப்பித்தது

இரண்டாம் பதிப்பு :
இராமலிங்கர் பணிமன்றம்
31, போயசு தோட்டம், சென்னை-600 086

திரு அருட்பா

முதற்பதிப்பு - 1972 சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்
இரண்டாம் பதிப்பு - 1981 இராமலிங்கர் பணிமன்றம்
முன் இணைப்புகள் © ஊரன் அடிகள்
நூல் Non-Copyright

Complete Prose Works of
Sri Ramalinga Swamigal
(Chronologically arranged)

விலை ரூபாய் 50

ஸ்ரீ ஆப்செட், 84, கதீட்ரல் ரோடு கலிலாயபுரம்
சென்னை-600 086

பொருளடக்கம்

உபதேசங்கள்

பின் இணைப்புகள் 2 அன்பர்கள் எழுதியவை

உபதேசக் குறிப்புகள் - பொருளடக்கம்

அணிந்துரை

சுவாமி சரவணுனந்தா

திருஅருட்பா மூன்று பகுதிகளாக இருக்கின்றன. முதல் பகுதி திருஅருட்பா பாடல்களில் முதல் ஐந்து திருமுறைகளைக் கொண்டது. இரண்டாவது பகுதி ஆறும் திருமுறைப் பாடல்களை உடையது. மூன்றும் பகுதி உரைநடைப் பகுதி.

திருஅருட்பா ஆறு திருமுறைப் பாடல்களையும் விளங்கிக்கொள் வதற்கு வேண்டிய சன்மார்க்க விளக்கங்கள் திருஅருட்பா உரைநடைப் பகுதியில் இருக்கின்றன.

திருஅருட்பா பாடல்களின் பொருள்கள். உபாயப் பொருள், உண்மைப் பொருள், அனுபவப்பொருள் என்று மூன்று வகைப்படும்.

உபாயப் பொருள் என்பது திருஅருட்பா பாடலில் எல்லாராலும் அறியக்கூடிய உபாயப் பொருள்-அதாவது பொது அறிவுப் பொருள்.

உண்மைப் பொருள் என்பது திருஅருட்பா பாடல்களின் சிறப்புப் பொருள்; அதாவது நுட்பமான சத்தியப் பொருள்.

அனுபவப் பொருள் என்பது திருஅருட்பா பாடல்களில் இருக்கும் கடவுள் அனுபவத்தை அறிவிக்கும் பொருள்.

இந்த அனுபவப் பொருளை விளங்கிக்கொள்ள திருஅருட்பா பாடலில் ஈடுபாடு உள்ளவர்களும், இறை நம்பிக்கை உள்ளவர்களும்' ஜீவகாருண்ய ஒழுக்கம் உள்ளவர்களும் அமர்ந்து சத்விசாரம் செய்ய வேண்டும். அதாவது தங்கள் தங்கள் அனுபவங்களை ஒப்பிட்டு விவாதித்து முழு அனுபவ உண்மையை அறிந்துகொள்ள வேண்டும்.

அனுபவப் பொருள் இது என்ற உண்மையைத் தெரிந்துகொண்டால் மட்டும் போதாது.

அந்தப் பொருளோடு ஒன்றவேண்டும். அதை வாழ்க்கையிலும் மேற்கொள்ளப் பழகவேண்டும். இப்படி வாழும் வாழ்வுதான் அனுபவப் பொருளுடன் இணைந்து வாழும் முழு வாழ்க்கை ஆகும்.

ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம், விண்ணப் பங்கள், வியாக்யானங்கள், குறிப்பு விளக்கங்கள், திருமுகங்கள் அதாவது கடிதங்கள், உபதேசப் பகுதிகள் முதலிய திருஅருட்பா உரைநடைப் பகுதிகளை ஒரு முறைக்குப் பலமுறை படிக்கவேண்டும். படித்து அதன் அனுபவ உண்மையைப் புரிந்துகொள்ளவேண்டும். புரிந்துகொண்ட அனுபவ உண்மைகளை வாழ்க்கையிலும் கடைப்பிடித்து ஒழுக முயல வேண்டும்; தொடர்ந்து முயலவேண்டும்.

திருஅருட்பா உரைநடைப் பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டு வாழ்க்கையில் மேற்கொள்வதற்கு ஒரு உறுதிப்பாடுவேண்டும். சுத்த சன்மார்க்க லட்சியத்தோடு திருஅருட்பா உரைநடையைப் பயில வேண்டும். அப்போதுதான் அதனால் உண்டாகும் பயனை அடைந்து அனுபவிக்கமுடியும்.

சுத்த சன்மார்க்க லட்சியம் என்பது ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை. அதாவது எல்லா உயிர்களையும் நேசித்து அவைகளிடம் சகோதர உரிமை பாராட்டுவதாகும்.

வள்ளலாரின் உபதேசங்கள் அவர் உபதேசித்தபோது பல அன்பர் களால் அவரவர்க்கு முடிந்தவரை; புரிந்தவரை குறிப்பு எடுக்கப் பட்டவை. வள்ளலாரின் உபதேசங்களை குறிப்பு எடுத்த அன்பர்களின் கவனக் குறைவாலும், தவறாலும், தெளிவின்மையினாலும் சில இடங்கள் மாறுபட்டும் விடுபட்டும் இருக்கின்றன.

இந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்கி வள்ளலாரின் உபதேசங்களைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு முதலில் இறைவன் நம்பிக்கைவேண்டும். இரண்டாவது திருஅருட்பா பாடல்களுடன் பொருத்தமாக இருக்கும் உபதேசப் பகுதிகள் எவை எவை என்று ஒப்பிட்டுப் பார்த்துப் பரிந்து கொள்ளவும் வேண்டும்.

இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டால் இறைவன் அதன் உண் மைப் பொருளையும் அனுபவப் பொருளையும் புரிந்துகொள்வதற்கு நமக்குத் துணைபுரிவார்.

இன்றைய உலகம் புலன் இன்பம் ஒன்றிலேயே அதிக நாட்டம் உள்ளதாக இருக்கிறது. இதனால்தான் மக்களிடம் துன்பமும்; துயரமும் அழிவும் பெருகி வருகின்றன.

இந்த வாழ்க்கை முறை மிகத் தவருன முறையாகும். இதை முதலில் அடியோடு மாற்றியாக வேண்டும்.

அப்படி மாற்றிக்கொண்டு வாழப் பழகுவதற்குத் திருஅருட்பா பாடல்களையும் திருஅருட்பா உரைநடைப் பகுதிகளையும் துணையாகக் கொள்ளவேண்டும். வள்ளலார் எவ்வளவு இரக்கத்துடனும், தயா பண்புடனும் வாழ்ந்திருக்கிருர் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

வள்ளலாருக்குத்தான் எவ்வளவு எளிமை! எவ்வளவு இரக்கம்! எவ்வளவு தன்னடக்கம்! எவ்வளவு திருஅருள் நம்பிக்கை!

இவற்றை நினைந்து நினைந்து; உணர்ந்து உணர்ந்து நாம் வாழ்க்கையில் தொடர்ந்து மேற்கொள்ள முயற்சி செய்யவேண்டும். பரிபூரணமாகப் பின்பற்ற முயலவும் வேண்டும்.

தன்னை மறைத்தல் என்ற பண்பில், தான் என்ற அகங்காரத்தை அடியோடு விடுவதைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிரு

தன்னைப்பற்றியோ, மற்றவர்களைப்பற்றியோ, போலி உலக விவகாரங்களைப் பற்றியோ, வள்ளலார் ஏதாவது கூறி இருக்கிருரா? இல்லை!

இதில் இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன?

இறைவன் அருளையே பெறவேண்டும் என்ற உண்மைதான்.

இறைவன் அருளைப்பெற, நாம் என்ன செய்யவேண்டும்?

தயவே வடிவமாக இருந்து ஜீவகாருண்ய ஒழுக்கத்துடன் நாம் வாழ முயலவேண்டும்.

இப்போது நாம் அப்படி வாழவில்லை. அழியக் கூடிய, துன்பம்தரக் கூடிய, புலன் பொறி இன்ப வாழ்க்கையிலேயே மூழ்கிக் கிடக்கிருேம்.

இப்படி வாழ்வது வாழ்வு அல்ல என்கிருர் வள்ளலார்.

நம் உள்ளே நமக்கு அழியா வாழ்வைத் தருகின்ற இயற்கை உண்மையாகிய அருட்பெரும் ஜோதி இருக்கிறது.

புறத்தில் அடிக்கடி மாறிக்கொண்டும் அழிந்துகொண்டும் இருக்கும் நிலை இல்லாத பொருள்கள் இருக்கின்றன.

இயற்கை உண்மையாகிய நிலையான அருட்பெரும் ஜோதியை நம்பாமல், மாறிக்கொண்டும் அழிந்துகொண்டும் இருக்கும் நிலையற்ற பொருள்களை நம்பி புலன் இன்பத்துக்காகவே வாழ்கிருேம். இப்படி வாழ்வது வெறும் விலங்கு வாழ்க்கை.

இந்த விலங்கு வாழ்க்கையை விட்டு, சிரநடு சிற்றம்பலத்தில் இருக்கும் அருட்பெரும் ஜோதியை உணர்ந்து, அதனுடன் ஒன்றி வாழ்வதுதான் உண்மையான மனித வாழ்க்கையாகும். அருள் அனுபவத்தில் உயரும் மாமனித வாழ்க்கையும் ஆகும்.

இங்கு ஒரு உண்மையைப் புரிந்துகொள்ளவேண்டும்

உள்முகமாகவே இருந்து ஒழிந்துபோகவும்கூடாது. புற வாழ்க்கையிலேயே மிதந்து அழிந்துபோகவும் கூடாது.

வேறு என்ன செய்யவேண்டும்?

இறைவனின் திருவடியை இறுகப் பற்றிக்கொண்டு, உயிர்களிடம் இரக்கம் காட்டி அவைகளுக்குப் பணிபுரிந்துகொண்டு வாழவேண்டும்.

நடைமுறையில் இப்போது நாம் உலகில் வாழ்கிற வாழ்க்கை, உண்மையான வாழ்க்கை அல்ல.

இறைவனிடம் நாம் வைத்திருக்கும் பற்று உறுதியாக இருக்க வேண்டும். அதைப் பற்றிக்கொண்டே உலக உயிர்களிடம் அன்பு செலுத்தியும் வாழவேண்டும்.

இப்படி வாழ்ந்தோமானுல், நம் உள்ளே இருக்கும் இறைவன் அங்கிருந்து அனகமாக விரிந்து, நம் உயிரிலும், மனதிலும், உடம்பில் இருக்கும் ஒவ்வொரு உயிர் அணுவிலும், நம் சூழ்நிலையிலும் பரவி நிலை கொள்வார். நம்மையும் நிலைபெறச் செய்வார்.

இவ்வாறு உள் இருந்து இறைத்தன்மை விரிந்து உருவாகும் வாழ்க்கைதான் அனக வாழ்க்கை. சத்திய வாழ்க்கை.

இதனுல் அகத்தில் இருக்கும் இன்பம் வளர்ந்து பொங்கி எங்கும் பாயும். சதா ஆனந்தமயமாக நம்மை வாழவைக்கும்.

திருவருளின் துணையைக்கொண்டு, நம் உள் இருந்து தழைத்துப் பொங்கும் பேரின்ப வாழ்க்கையை உலக மக்கள் அனைவர் இடமும் நாம் பரப்ப முயலவேண்டும்.

இதற்கு இராமலிங்கர் பணிமன்றம் வெளியிட்டுவரும் அருள் நூல்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

திருஅருட்பா பாடல்கள் முதல் ஐந்து திருமுறைகளையும், ஆறும் திருமுறையையும், திருஅருட்பா உரைநடைப் பகுதியையும் இப்போது இராமலிங்கர் பணிமன்றத் தலைவர் திரு நா. மகாலிங்கம் அவர்கள் இந்த ஆண்டு தம் பணிமன்ற வெளியீடாச வெளியிட்டு இருக்கிறுர்.

இவ்வாறு சன்மார்க்க சீலர் திரு நா. மகாலிங்கம் அவர்கள் திருஅருட்பா நூல்களை முழுவதுமாக வெளியிட்டு இருப்பதும் திருவருளின் திருவுள்ளச் செயல்தான்.

உலகில் உள்ள மற்றவர்கள் இப்போது மேற்கொள்ளும் நடைமுறைகளை மாற்ற சுத்த சன்மார்க்கத்தைப் பரப்பும் நூல்களை வெளியிடுவது மிகச் சிறந்த சன்மார்க்கப் பணியாகும்.

இந்தப் பணியைச் செம்மையாகவும், தொடர்ந்தும் செய்துவரும் சன்மார்க்க சீலர் திரு நா. மகாலிங்கம் அவர்களுக்கு இறைவன் மேலும் மேலும் திருஅருள்புரிய வேண்டுகிறேன்.

திருஅருட்பா நூல்களை எல்லாரும் வாங்கி, இவை உணர்த்தும் இயற்கை உண்மையின் இரகசியங்களைப் புரிந்துகொண்டு, ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையுடன் வாழ்ந்து, பேரின்பம் பெறுவார்களாக

—தயவு—

சத்திய ஞானக்கோட்டம் — சரவணானந்தா
திண்டுக்கல்—624001 — 27—9—81

பதிப்புரை

நா. மகாலிங்கம்,

(இராமலிங்கர் பணிமன்றத் தலைவர்)

வள்ளலார் எண்ணாயிரம் திருஅருட்பா பாடல்களைப் பாடி இருக்கிறார். இவை ஆறு திருமுறைகளாக வெளிவந்திருக்கின்றன. இவைகளை எல்லாரும் அறிவார்கள்.

அவர் எழுதி இருக்கும் உரைநடைகள் மிகப் பெரும்பாலோருக்குத் தெரியாது. வள்ளலாரின் உரைநடைகள் எல்லாம் "திருஅருட்பா உரைநடைகள்" என்ற பெயரில் ஒரு நூலாகவே வெளிவந்திருக்கிறது. இது ஐந்நூறு பக்கங்களுக்கு மேல் கொண்ட மிகப் பெரிய நூல்.

இந்த உரைநடை நூல் மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், உபதேசங்கள், வியாக்யானங்கள், விண்ணப்பங்கள் கடிதங்கள், அழைப்புகள், கட்டளைகள், மருத்துவக் குறிப்புகள் என்று பத்துப் பகுதிகளாக இருக்கிறது.

மனுமுறை கண்ட வாசகம் பெரிய புராணத்தில் உள்ள மனுச் சோழனின் வரலாறுகும். அன்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நூலை வள்ளலார் எழுதி இருக்கிறார். இதை ஜீவகாருண்யத்தின் விளக்கமாகவே எல்லோருக்கும் புரியும் நடையில் எழுதி இருக்கிறார்.

இந்த நூல் நூற்று இருபத்து ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் 1854ஆம் ஆண்டு ஜுன் மாதம் வெளிவந்திருக்கிறது.

அந்த நாளிலேயே எவ்வளவு எளிமையாகவும், இனிமையாகவும், உயிர்த்துடிப்புடனும் வள்ளலார் தமிழ் உரைநடையைக் கையாண்டு இருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

மனுச்சோழன் தன் மகன் செய்த காரியத்தை எண்ணி வேதனைப் படுவதை வள்ளலார் சொல்லுகிறார். அதைச் சக்தி வாய்ந்த தமிழில் எவ்வளவு ஆற்றலுடன் கூறுகிறார் என்பதைக் கேளுங்கள்;

'சிவ தரிசனம் செய்யப்போகிறவன் தேரில் போகப்படாது. அவ்வாறு போனாலும் நாலு புறத்திலும் நடப்பவர்களை விலக்கும்படி ஆள் விலக்கிகளை விட்டு விலக்கிக்கொண்டு செல்லவேண்டும். முன்னே பரிக்காரர் வரவு குறித்துப்போக வேண்டும். பின்னே மெல்லெனத் தேரைவிட வேண்டும்.

''அப்படிச் செய்யாமல் பாலியப் பருவம் பயம் அறியாது என்பதற்குச் சரியாகப் பரபரப்பாகத் தேரை நடத்திப் பசுங் கன்றைக் கொன்றான்:

''ஐயோ! இவன் கல்வி அறிவு உள்ளவனாக இருந்தும் அறிவு அழிந்து அரசின் பிள்ளை ஆகாமல் அணிற் பிள்ளை ஆனானே!

''கொடிய பாதகங்களில் எல்லாம் கொலைப் பாதகமே தலையானது. என்று வேதம் முதலிய கலைகளில் தானும் படித்து அறிந்தான் சான்றோர் சொல்லக் கேட்டும் அறிந்தான்.

''அப்படி அறிந்து இருந்தும் அப்பாதகம் சேரவொட்டாமல் தன்னைக் காத்துக்கொண்டு பட்டப்பிள்ளை ஆகாமல் பழிப்பிள்ளை ஆனானே!

''நான் நெடுநாளாகத் தியாகராஜப் பெருமானை மனம் உருகி வேண்டிக் கொண்டது இப்படிப்பட்ட பெரிய பழிக்கு ஆளாகிய பிள்ளையைப் பெறத்தானோ!

''பிள்ளை என்ன செய்யும்! பெருமான் என்ன செய்வான்! 'மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கு!' என்னும் பெரியோர் வார்த்தையின் படி நான் செய்த தீவினையே என் புத்திரனுக்கு நேரிட்டது என்று நினைத்து. என்னை வெறுத்துக் கொள்ளவேண்டும். என்றாலும் இந்தப் பிறப்பில் என் புத்தி அறிந்து நான் ஒரு தீங்கும் செய்ததில்லையே! இந்தப் பிறப்பில் இல்லாவிட்டாலும், முற்பிறப்பில்:—

''நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!
வலிய வழக்கிட்டு மானம் கெடுத்தேனோ!
தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!
கலந்த சினேகிதரைக் கலகம் செய்தேனோ!''

என்று வேதனைப்படுகிறான் மனுச்சோழன்.

அவன் வேதனைப்படும் இதயத்திலிருந்து எழுவதுபோல சுமார் நாற்பது அறிவுரைகளை அற்புதமாகக் கூறுகிறார் வள்ளலார்.

வள்ளலார் தம்முடைய லட்சியம் என்ன என்பதை அவருடைய நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கிறார். அக்கடிதத்தை பாருங்கள். அதில் அவர் கையாளும் உரைநடையைக் கவனியுங்கள்.

''பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் முதலியவர்களுடைய பதவிகளும், அவர்களும், அவர்களால் படைக்கப்பட்டும், காக்கப்பட்டும், திருத்தப் பட்டும் வருகிற நமது உடம்பு முதலிய உலகங்களும் அனித்தியம்.

''ஆதலின், நித்தியமாகியும், என்றும் ஒரு தன்மை உள்ளதாகியும், சச்சிதானந்த வடிவம் ஆகியும், அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப் பொருள்.

''தாய், தந்தை, குரு, தெய்வம், சிநேகிதர், உறவினர், முதலிய வர்களும் மேலே குறித்த சிவத்தின் திருவருள் அல்லது வேறு இல்லை.

''நாம் பல பிறவிகளையும் தப்பி மேலான இந்த மனிதப் பிறவி எடுத்தது சிவத்தின் திருஅருளைப் பெறுவதற்காகத்தான். எவ்வகை முயற்சியினாலும் அந்த அருளை அடையவேண்டும்.

''அந்த அருள் எவ்வகையில் வரும் என்றால், எல்லா உயிர்களிடத் திலும் தயவும், பிரபஞ்சத்தில் பற்றின்மையும், சிவத்தினிடத்தில் அன்பும் மாறாது இருந்தால் அவ் அருள் நம்மை அடையும். நாமும் அதனை அடைந்து ஒப்பற்ற சுகத்தில் இருப்போம்.''

இவ்வாறு, தம்முடைய லட்சியம் மரணமிலாப் பெருவாழ்வே என்பதை ஒரு கடிதத்தில் சொல்லி இருக்கிறார்.

இந்தக் கடிதத்தில் வள்ளலார் குறிப்பிடும் 'சிவம்' என்பது சைவ சமயத்தில் குறிக்கப்படும் சிவம் அல்ல.

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான அருட்பெரும் ஜோதி ஆண்டவரையே 'சிவம்' என்று குறிப்பிடுகிறார்.

வள்ளலார் சுத்த சன்மார்க்கத்தைப் பரப்புவதற்காகவே சன்மார்க்க சத்திய சங்கம், சத்திய தருமச்சாலை, சத்திய ஞானசபை ஆகிய மூன்று சன்மார்க்க நிலையங்களையும் உருவாக்கினார்.

சத்திய தருமச்சாலையை நிர்மாணித்தபோது அதாவது 1867ஆம் ஆண்டு, அதன் நடைமுறைகளை விளக்குவதற்காக வள்ளலார் இயற்றிய முதல் நூல் ஜீவகாருண்ய ஒழுக்கம்.

இந்த நூலில் வளளலார் என்ன சொல்லி இருக்கிறார் என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்கிறேன்.

இவ்வுலகில் நிலையாக வாழ்வதற்காகவே மனிதப் பிறப்பு கடவுளால் கொடுக்கப்பட்டு இருக்கிறது. கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற வேண்டுமானால் இவ்உலகில் நிலைத்து வாழவேண்டும். அந்த நிலை

யான வாழ்வாகிய கடவுளின் இயற்கை இன்பத்தை, கடவுளின் இயற்கை விளக்கத்தைக் கொண்டுதான்அடையமுடியும்.

கடவுளின் இயற்கை விளக்கத்தையோ, ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் மூலமாகவே பெறமுடியும். ஜீவகாருண்ய ஒழுக்கமோ ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகிற உயிர் உருக்கத்தைக்கொண்டு கடவுள் வழிபாடு செய்வது.

ஜீவர்கள் எல்லாம் கடவுளால் படைக்கப்படட்டவர்கள். அதனுல் ஜீவர்கள் எல்லோரும் ஒத்த உரிமை உடைய சகோதரர்கள.

ஒரு ஜீவன் பசி, தாகம், பிணி, இச்சை, வறுமை, பயம், கொலை முதலியவற்ருல் துன்பப்படுவதை இன்னொரு ஜீவன் பார்த்தபோதும், அறிந்தபோதும், கேட்டபோதும் அந்த ஜீவனுக்குத் தன்னை அறியாமலே உருக்கம் உண்டாகும்.

ஜீவர்கள் ஆன்ம விளக்கமும் அருள் விளக்கமும் பெற்று இன்புறு வதற்கு அவைகளுக்கு உரிய உடம்பு மிகவும் அவசியம்.

இந்த உடம்புக்குப் பசி, கொலை முதலியவற்ருல் அபாயங்கள் ஏற் படும். இந்த அபாயங்களை முன்னதாக அறிந்து கொள்ள முடியாத ஜீவர் களும் இருக்கிருர்கள்.

இவர்கள் போதுமான அறிவும், சுதந்தரமும் இல்லாதவர்கள். இவர்களுக்கு அறிவும் சுதந்திரமும் உள்ள ஜீவர்கள் வஞ்சனை செய்யாமல் அவர்கள் துன்பங்களைத் துயரங்களை; கவலைகளை நீக்குவது தான் ஜீவகாருண்ய ஒழுக்கம்.

ஒரு ஜீவனின் பசியைப் போக்குவதற்கு இன்னொரு ஜீவனைக் கொன்று, அதன் மாமிசத்தைக் கொண்டு, அந்த ஜீவனின் பசியை ஆற்றுவது ஜீவகாருண்யம் அல்ல.

மரம், புல், நெல் முதலியவைகளின் விதை, காய், கனி, தழை முதலியவற்றைச் சாப்பிடுவது ஜீவகாருண்யத்துக்கு விரோதம் அல்ல.

ஒரு ஜீவனுக்குப் பசியினுல் ஏற்படும் துன்பத்தைப் போக்குவதில் ஏற்படும் இன்பம்தான் மேலான இன்பம். இது யோக சித்திகளாலும், ஞான சித்திகளாலும் ஏற்படும் இன்பங்களுக்கும் மேலான இன்பம். இவற்றின் மூலமாக முடிவாகக் கிடைக்கும் சுவர்க்க இன்பத்தைவிட மேலான இன்பமாகும்.

எனவே ஜீவகாருண்யமே உண்மையான சுவர்க்கத்தின் திறவுகோல். இந்தத் திறவுகோலைப் பெற்றவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்கிற சாதனங்களின் உதவி இல்லாமலே சுவர்க்கத்துக்குச் சென்று நித்திய முத்தர்களாய் வாழலாம்.

ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடிக்காமல் அதைப் பெறுவதற்காக விரதம் இருப்பவர்களுக்கும், பக்தர்களுக்கும், ரிஷிகளுக்கும், யோகிகளுக்கும், சித்தர்களுக்கும், ஞானிகளுக்கும் சுவர்க்கம் கிடைக்காது.

அறிவு விளக்கம் பெற்ற ஜீவர்களுக்கு எல்லாம், ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு. ஜீவகாருண்ய ஒழுக்கம் உள்ளவர்கள் கடவுளின் அருளுக்கு முழுவதும் பாத்திரம் ஆகிருர்கள்.

இதைச் ''சர்வ சக்தி உடைய கடவுள் சாட்சியாகச் சொல்கிறேன்'' என்று வள்ளலார் சத்தியம் செய்கிருர்.

இவைதான் ஜிவகாருண்ய ஒழுக்கம் என்ற நூலின் சாரமாகும்.

சத்திய ஞானசபையையும் அதன் நோக்கத்தையும் விளக்குவதற்காக, நாலு சன்மார்க்க விண்ணப்பங்களே, ஆற்றல் உள்ள அருமையான தமிழ் நடையில் மிக எளிமையாக, எல்லாரும் விளங்கிக்கொள்ளும்படி திரு அருட்பிரகாச வள்ளலார் எழுதி இருக்கிருர்

இவற்றுள் முதல் விண்ணப்பம் சிறு விண்ணப்பம். இது மனிதப் பிறவியின் வரலாற்றைக் கூறுகிறது. மனிதப் பிறவியின் அருமையையும் பெருமையையும் விளக்குகிறது. எங்கும் எதிலும் எப்போதும் இருக்கும் கடவுள் ஒருவரே என்பதை வற்புறுத்துகிறது. அந்த ஒரே கடவுளே ஜீவகாருண்ய ஒழுக்கத்துடன் வழிபட்டால் அவர் திருஅருள் கட்டாயம் கிடைக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

சன்மார்க்கத்திற்கு, சமயங்களும், மதங்களும், மார்க்கங்களும், இவற்றின் நடைமுறைகளும், நால்வகைச் சாதிகளும், இந்த சாதிகளுக்கு உரிய ஒழுக்கங்களும், உலக ஆசாரங்களும், அவற்றின் வேறுபாடுகளும் முக்கியமான தடைகளாக இருக்கின்றன என்பதை அழுத்தமாகக் கூறுகிறது. ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைதான் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் என்பதை வலியுறுத்திச் சொல்கிறது

இரண்டாவது விண்ணப்பம் பெருவிண்ணப்பம். இதில் வள்ளலார் தாம்தாய் வயிற்றிஇருந்து இன்றுவரை தமக்கு ஏற்பட்ட எல்லாவிதத் தடைகளேயும் அருள் ஆற்றலால் கடந்து, பெருவாழ்வு பெற்று இருப்பதை மிக அருமையாக விளக்குகிருர். வள்ளலாரின் சுத்த சன்மார்க்க வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு இது ஒரு ஞானக் களஞ்சியமாகும்.

மூன்ருவது விண்ணப்பம், ஞான விண்ணப்பம். இந்தப் பிறவியில் நாம் எடுத்த உடம்பை அழியாத உடம்பாக; அருள் உடம்பாக மாற்றிக் கொள்ளவேண்டும். இதற்குத் திருஅருள் உதவி இல்லாமல் முடியாது. திருஅருள் உதவியை எப்படிப் பெறுவது என்பதைப்பற்றி மிகத் தெளிவாக; அனுபவபூர்வமாக இதில் கூறி இருக்கிறது.

நாலாவது விண்ணப்பம், சத்திய விண்ணப்பம். இது பெருவாழ்வு பெறுவதற்கு வேண்டிய முறைகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக்காட்டி இருக்கிறது.

வள்ளலார் செய்த மகா உபதேசம் உட்பட வள்ளலாரின் மற்ற உபதேசங்களும், வியாக்யானங்களும், பிரசங்கங்களும் அன்பர்கள் கேட்டு எழுதியவை. சித்திவளாகத்தில் விளக்கிச் செய்த உபதேசங்களாகும் சித்திவளாகம் வள்ளலார் முத்தேக சித்தி பெற்ற சித்தித்தலம்.

இவைகள் எல்லாம் திருஅருட்பிரகாச வள்ளலாரின் உரைநடை நூல்களைப் பற்றிய சிறப்பாகும்.

வள்ளலார் பாமர மக்கள் வழங்கும் சொற்களையே, மிக எளிய, இனிய, இலக்கியச் சொற்களாக மாற்றி அற்புதமாகக் கையாண்டு இருக்கிறார். ஆற்றலுடன் கையாண்டு இருக்கிறார்.

வள்ளலார் கையாண்டு இருக்கும் சொற்றொடர்களும், வாக்கியங்களும், அருள் ஆற்றலுடனும், புதிய புதிய அழகுடனும், களங்கம் இல்லாத குழந்தையின் முகம்போல் சாந்தமும் தூய்மையும் பெற்று அற்புதமாக விளங்குகின்றன.

மிக்க சிக்கல் நிறைந்த ஆன்மிக விஷயங்களைக்கூட எளிதாகச் சொல்லும் ஆற்றல் திருஅருட்பிரகாச வள்ளலாரின் உரைநடைக்கு உரிய தனிச் சிறப்பாகும்.

அவருடைய உரைநடைகளின் இனிய ஓசை அதன் அதன் அளவுடன் நேர்மையாக அமைந்து நம்மை மயக்குகின்றன

சன்மார்க்க விண்ணப்பங்களை வாய்விட்டு இரைந்து படித்தால், அதில் எழும் தெய்விக ஓசை, நாம் முன் பின் கேட்டு அறியாத ஒரு தெய்விகச் சுவையை நமக்கு ஊட்டி நம்மையே நாம் மறந்து இன்புறச் செய்யும் விந்தையைக் காணலாம்.

அவர் உரைநடையில் தமிழ்த்தாய் புத்திளமையும், பொலிவும் பெற்று ஜொலிக்கிறாள்.

இந்த நூலில் சிறப்பாகக் குறிப்பிடவேண்டியது உபதேசப்பகுதி. இந்த உபதேசங்கள் பல காலங்களில், பல இடங்களில் வள்ளலாரால் உபதேசிக்கப்பட்டவை.

இந்த உபதேசங்கள் பல பதிப்புகளாகப் பலவாறு அச்சிடப்பட்டு இருக்கின்றன. அவற்றை முறைப்படுத்தித் தொகுத்து, தலைப்புகள் இட்டு, அந்த அந்தத் தலைப்புகளில் திருஅருட்பிரகாச வள்ளலார் அதுசம்பந்தமாக உபதேசித்த உபதேசங்களை வசைப்படுத்திப் பதிப்பித்த பெருமை திரு ஊரன் அடிகளுக்கு உண்டு.

வள்ளலார் உரைநடை அருளிச்செயல்கள் அனைத்தையும் ஒரே நூலாக வெளியிட்ட பெருமையும் திரு ஊரன் அடிகளைச் சார்ந்ததுதான்.

திரு ஊரன் அடிகள் பதிப்பித்த "திருஅருட்பா உரைநடைப்பகுதி" என்ற இந்த வள்ளலாரின் நூலையும் இராமலிங்கர் பணிமன்றம், இரண்டாம் பதிப்பாக வெளியிடுகிறது.

இதற்கு அனுமதி அளித்த தொகுப்பாசிரியர் திரு ஊரன் அடிகளுக்கு இராமலிங்கர் பணிமன்றத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய நாளில் சுத்த சன்மார்க்க ஞானியாக விளங்கும் அருள் திரு சுவாமி சரவணனந்தா அவர்கள் இதற்கு அருமையான அணிந்துரை ஒன்று வழங்கி இருக்கிறார். அந்த அணிந்துரை சுத்த சன்மார்க்கத்தின் விளக்கமாகவே அமைந்திருக்கிறது. வள்ளலாரின் லட்சியத்தைப் பரிபூரணமாக விளக்குகிறது.

சுத்த சன்மார்க்கத்தை விளங்கிக்கொள்ளும் முறையில் இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கி இருக்கும் அருள்திரு சுவாமி சரவணனந்தா அவர்களுக்கு இராமலிங்கர் பணிமன்றத்தின் சார்பில் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த முறையில் இந்நூலை அச்சிட்டுக் கொடுத்த 'ஸ்ரீ ஆப் செட்' உரிமையாளர் திரு மயன் அவர்களுக்கும் என் நன்றி.

திருஅருட்பாவின் ஆறு திருமுறைகளையும் புரிந்துகொள்வதற்கு வள்ள்லாரின் திருஅருட்பா உரைநடைப்பகுதியைப் படிக்கவேண்டியது மிக அவசியம். திருஅருட்பாவில் வரும் நுட்பமான சொற்களுக்கு எல்லாம் இந்த நூலில் வள்ளலார் சுத்தசன்மார்க்க விளக்கம் சொல்லி இருக்கிறார். எனவே இந்த உரைநடைப்பகுதியைப் படித்த பிறகே திரு அருட்பா பாடலைப் படிப்பது அந்தப் பாடலின் அடிப்படையான அனுபவப் பொருளைப் புரிந்துகொள்வதற்குத் துணைபுரியும்

இந்த நூல் ஒவ்வொரு தமிழரின் வீட்டிலும் இருக்கவேண்டிய ஞானக் களஞ்சியம் ஆகும். தமிழ் மக்கள் இதை வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டுகிறேன்.

வள்ளலாரின் உரைநடையை எல்லாரும் படித்து, அருள் அனுபவம் பெற்று, வாழ்க்கையில் எல்லா நலமும் பெற அருட்பெருஞ் ஜோதியின் தனிப்பெருங்கருணை அருள்புரியப் பிரார்த்திக்கிறேன்.

இராமலிங்கர் பணிமன்றம்,
31, போயஸ் தோட்டம்,
சென்னை-600086.

நா. மகாலிங்கம்
27-6-81

முன்னுரை

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் அருளிய திருப்பாடல்கள் ஆறு திருமுறைகளாக வகுக்கப் பெற்றுத் திருவருட்பா என்ற பெயருடன் நூலாகப் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

பாடல்கள் தவிர அடிகள் அருளிய உரைநடை அருளிச்செயல்கள் பலவாம். அவற்றை 1. உரைநடை நூல்கள், 2. வியாக்கியானங்கள், 3. மருத்துவக் குறிப்புகள், 4. உபதேசங்கள், 5. திருமுகங்கள், 6. அழைப்புகள் - அறிவிப்புகள் - கட்டளைகள், 7. விண்ணப்பங்கள் என ஏழு வகையாகப் பிரிக்கலாம்.

1. உரைநடை நூல்கள்

1. மனு முறைகண்ட வாசகம்
2. ஜீவகாருண்ய ஒழுக்கம்

2. வியாக்கியானங்கள்

1. பொன்வண்ணத் தந்தாதி 22-ம் செய்யுள் உரை
2. வேதாந்த தேசிகர் குறட்பா ஒன்றன் உரை
3. ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி
4. தொண்ட மண்டல சதகம் - நூற்பெயர் இலக்கணம், வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை
5. "உலகெலாம்" என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம்
6. "தமிழ்" என்னும் சொல்லுக்கிட்ட உரை

3. மருத்துவக் குறிப்புகள்

1. மூலிகை குண அட்டவணை
2. சஞ்சீவி மூலிகைகள்
3. மருத்துவக் குறிப்புகள்

4. உபதேசங்கள்

1. அனுஷ்டான விதி
2. கணபதி பூஜாவிதி
3. செவ்வாய்க்கிழமை விரத முறை
4. நித்திய கரும விதி
5. உபதேசக் குறிப்புகள்
6. சுப்பிரமணியம்
7. அருள்நெறி
8. திருவருண் மெய்ம்மொழி
9. பேருபதேசம்

5. திருமுகங்கள்

1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்தவை
2. புதுவை வேலு முதலியார்க்கு வரைந்தவை
3. மற்றைய அன்பர்களுக்கு வரைந்தவை
4. திருமுகக் குறிப்புகள்

6. அழைப்புகள் – அறிவிப்புகள் - கட்டளைகள்

1 – 18. சாலைத் தொடக்கவிழா அழைப்பிதழ் முதலாகச் சன்மார்க்க சங்கத்தார்க்கு இட்ட இறுதிக் கட்டளை ஈருகப் பதினெட்டு.

7. விண்ணப்பங்கள்

1. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்
2. சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்
3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்
4. சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்

உரைநடை அருளிச்செயல்கள் இவ்வளவு இருந்தும், திருவருட்பாப் பாடல்கள் மக்களிடையே பரவியுள்ள அளவுக்கு இவை பரவாத காரணம், இவை சிதறிக் கிடந்து சிறிது சிறிதாக வெளிப்பட்டமையும், பெரும்பாலன அண்மையில் வெளிப்பட்டமையும், வெளிவந்த பதிப்புகள் அரிதாக வழங்கியமையும், அடுத்தடுத்துப் பல பதிப்புகள் வெளிவராமையுமாம்.

இவற்றுட் சில, அவ்வவற்றின் முதற் பதிப்பில் வெளிவந்தன. சில, ஆருந்திருமுறை முதற் பதிப்பிலும் (1885), பிருங்கிமாநகரம்

இராமசாமி முதலியார் பதிப்பிலும் (1896), ச. மு. கந்தசாமிபிள்ளை பதிப்பிலும் (1924) முதன் முதலாக வெளிவந்தன. உபதேசங்களுட் பெருபாலானவையும், திருமுகங்கள் அனைத்தும், அழைப்பு, அறிவிப்பு கட்டளைகளில் சபை விளம்பரம் ஒன்று தவிர மற்றவை அனைத்தும் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பில் முதன் முதலாக வெளிவந்தன.

உரைநடை அருளிச்செயல்கள் அனைத்தையும் வசனப் பகுதி, வியாக்கியானப் பகுதி, உபதேசப் பகுதி, திருமுகப் பகுதி என நான்கு புத்தகங்களாகப் பாலகிருஷ்ணபிள்ளை வெளியிட்டார். வசனப் பகுதியிலுள்ளவை பாலகிருஷ்ண பிள்ளை பதிப்புக்கு முன்பே வெளியானவை. வியாக்கியானப் பகுதியுட் பெரும்பாலானவையும் அவ்வாறே. உபதேசப் பகுதி, திருமுகப் பகுதிகளிற் பெரும்பாலானவை பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பின் மூலம் முதன் முதலாக வெளிவந்தவை.

ஒழிவிலொடுக்கம் முதற்பதிப்பு - 1851, தொண்ட மண்டல சதகம் முதற்பதிப்பு - 1855, ஜீவகாருண்ய ஒழுக்கம் முதற்பதிப்பு - 1879, திருவருட்பா ஆருந்திருமுறை முதற்பதிப்பு - 1885, ஆறு திருமுறைகளுஞ் சேர்ந்த முதற்பதிப்பு - 1892, பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பு - 1896, ச. மு. கந்தசாமி பிள்ளை பதிப்பு - 1924, ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு - 1931 ; 61 சென்னை சன்மார்க்க சங்கப்பதிப்பு 1932; 42 ஆகியவற்றையும், திருவருட்பெருங்கருணையால் எமது பார்வைக்குக் கிடைத்த அடிகளே திருக்கரஞ்சாத்திய மூல ஏடுகள், அன்பர்களின் படி ஏடுகள் ஆகியவற்றையும் ஆராய்ந்து, உரைநடை அருளிச்செயல்கள் அனைத்தையும் ஒரே புத்தகமாக யாம் இப்பதிப்பை வெளியிடுகிறோம்.

திருஅருட்பா வரலாற்றிலேயே முதன் முதலாக உரை நடை அருளிச் செயல்கள் முழுவதும் ஒரே புத்தகமாக வெளி வருவது இப் பதிப்பேயாகும். இதன் முதற்பதிப்பை 24-1-1978 தைப்பூச நாளில் எமது சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலைய வெளியீடாக வெளியிட்டோம்.

இரண்டாம் பதிப்பைத் தமது இராமலிங்கர் பணிமன்றம் அச்சிட்டு வெளியிட இசைவளிக்குமாறு அதன் தலைவர் திரு. நா. மகாலிங்கம், பி. எஸ்சி., எப். ஐ. இ., அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறே இசைவளித்தோம் இப்போது இவ்விரண்டாம் பதிப்பு இராமலிங்கர் பணிமன்ற வெளியீடாக வெளிவருகிறது. இதனை இவ்வாறு அச்சிட்டு வெளியிடும் இராமலிங்கர் பணிமன்றத் தலைவர் சன்மார்க்கப் பேரன்பர் திரு. நா. மகாலிங்கம், பி. எஸ்சி., எப். ஐ. இ. அவர்களுக்கு நமது பாராட்டும் வாழ்த்துகளும் உரியவாகுக.

சன்மார்க்க நெறியில் இவ்வாறு எம்மையும் பணிகொண்டு வாழ்வித்துவரும் எம்மையாளுடைய பெருமானார் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளின் பொன்னார் திருவடிகளைச் சிரமேற் கொண்டு வழுத்துகின்றோம்.

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே !

சமரச சன்மார்க்க ஆராய்ச்சி
நிலையம், வடலூர்

சன்மார்க்க தேசிகன் ஊரன்
25-9-1981

ஆராய்ச்சிக் குறிப்புகள்

1. உரைநடை நூல்கள்

1. மநு முறைகண்ட வாசகம்

இது மநுச்சோழர் முறை செய்த வரலாற்றைக் கூறுவது. பெரிய புராணத்திலுள்ள மனு நீதி கண்ட புராணத்தை முதல்நூலாகக் கொண்டு அதன் வழி நூலாக அடிகள் இதனை எழுதியருளினர். இதனை எழுதும்படி அடிகளைக் கேட்டுக் கொண்டவர்கள் சென்னை சாஸ்திர விளக்க சங்கத்தார். எழுதப் பெற்ற காலம் அடிகள் இளம் போதில் சென்னையில் உறைந்த காலம். சென்னையிலிருந்த காலத்திலேயே 1854 ஞ ஜுன் மீ இது அச்சிடப் பெற்றது. அம்முதற் பதிப்பின் முகப்பேடு வருமாறு :

> உ - சிவமயம் - திருச்சிற்றம்பலம் - மனுமுறை கண்ட வாசகம் - இஃது பலருக்குமுபயோகமாகச் சாஸ்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி மனுநீதி கண்ட புராணத்தை விரிவுள்ள வாசக நடையாகச் **சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளை** யவர்களால் இயற்றப்பட்டு பாளையம் சுப்பராயச் செட்டியாரவர்களால் மேற்படி சங்கத்தா ரவர்களது வித்தியானந்த அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது. ஆனந்த ஞ ஆனி மீ.

2. ஜீவகாருண்ய ஒழுக்கம்

அடிகளின் சமரச சுத்த சன்மார்க்கத்தை இரண்டே சொற்களிற் கூற வேண்டுமானல் 1. ஜீவகாருண்யம், 2. மரணமிலாப் பெருவாழ்வு என்று சொல்லலாம். ஜீவகாருண்யம் சன்மார்க்கத்தின் முதல். மரணமிலாப் பெருவாழ்வு சன்மார்க்கத்தின் முடிபு. ஜீவகாருண்யம் ஆன்மநேயம். மரணமிலாப் பெருவாழ்வு ஆன்மலாபம். ஆன்மநேயமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தால் ஆன்மலாபமாகிய மரணமிலாப் பெருவாழ்வைப் பெற வேண்டும். ஜீவகாருண்யம் சாதனம். மரணமிலாப் பெருவாழ்வு சாத்தியம். ஜீவகாருண்யமாகிய சாதனத்தைக் கொண்டு மரணமிலாப் பெருவாழ்வாகிய சாத்தியத்தை அடைய வேண்டும். இதுவே அடிகளின் முடிந்த முடிபான கொள்கை. ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்பது அடிகள் வாக்கு; அடிகள் எழுத்து. ஜீவகாருண்யத்தை அடிகள் இரு வகையிற் கூறுவர். 1. அற்றுர் அழி பசி தீர்த்தல். 2. புலால் மறுத்தல். இவ்விரண்டையும் வற்புறுத்தி எழுதியருளப் பெற்றதே '' ஜீவகாருண்ய ஒழுக்கம் '' என்னும் நூல்.

1867-ல் வடலூரில் சத்திய தருமசாலையைத் தொடங்குவதற்கு முன்னமேயே, கருங்குழியில் உறைந்த காலத்திலேயே, அடிகள் இந் நூலை எழுதத் தொடங்கினர். 23 - 5 - 1867 பிரபவ ௵ வைகாசி மீ 11உ வியாழக்கிழமையன்று வடலூரில் நிகழ்ந்த தருமசாலைத் தொடக்க விழாவில் இந்நூல் எழுதப் பெற்றிருந்த வரையிற் படித்து விளக்கப் பெற்றது. 1869 ஆம் ஆண்டிலும் இந்நூல் எழுதி முற்றுப் பெறவில்லை என்பது இறுக்கம் இரத்தின முதலியார், சாலை சண்முகம் பிள்ளைக்கு எழுதிய இரு கடிதங்களால் (பக்கம் 483 ; 485) அறியப்படுகிறது.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதற்பதிப்பு அடிகள் சித்தி பெற்ற ஐந்தாண்டுகளுக்குப்பின் 1879-ல் புதுச்சேரியில் பு. பெ. கிருஷ்ணசாமி நாயகரால் அச்சிடப் பெற்றது. பூல்ஸ்கேப் (Fools cap) ⅛ அளவில் 58 பக்கங்களைக் கொண்ட அதன் முகப்பேடு வருமாறு :

> உ - அருட்பெருஞ்சோதி - திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை யவர்கள் திருவாய் மலர்ந் தருளிய சீவகாருண்ய ஒழுக்கம் - இஃது கூடலூர் டிஸ்ட்ரீக்ட் இஸ்கூல் இனிஸ்பெக்டர் சீ. இரங்கசாமி பிள்ளை புதுவைக்கடுத்த வைத்தி குப்பம் மே. அப்பாசாமி நாயகர் இவர்கள் கேட்டுக் கொள்ள கலவை முத்தியாலு செட்டியார் குமாரர் சங்கர செட்டியார் முயற்சியில் பு. பெ. கிருஷ்ணசாமி நாயகரால் சபா. மாணிக்க பிள்ளை அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ஜீவகாருண்ய ஒழுக்கம் மூன்று பிரிவுகளாக உள்ளது. மூன்றாவது பிரிவு முற்றுப் பெறவில்லை. 1879 முதற்பதிப்பிலும், ஆறாந் திருமுறை முதற்பதிப்பிலும் (1885), பொன்னேரி சுந்தரம் பிள்ளை பதிப்பித்த ஆறு திருமுறைகளுஞ் சேர்ந்த முதற் பதிப்பிலும் (1892), பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியாரின் திருவருட்பாப் பதிப்பிலும் (1896), ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதற்பிரிவு மட்டுமே உள்ளது. ச. மு. கந்தசாமி பிள்ளையின் திருவருட்பாப் பதிப்பில் (1924) முதலிரண்டு பிரிவுகளும் மூன்றாம் பிரிவின் ஒரு பகுதியும் உள்ளன மூன்றாம் பிரிவு இப்போது வழங்கும் வரை உள்ளது ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பிலேயேயாகும். "சுவாமிகள் ஜீவ காருண்ய ஒழுக்கத்தை மிக்க விரிவாக ஏழுபிரிவில் எழுதி உபதேசித்த தாகக் கேள்வி. அது முற்றிலும் உண்மையானால் மூன்றாவது பிரிவின் தொடர்ச்சியும் மற்ற நான்கு பிரிவுகளும் இதுகாறும் கிடைக்கா திருபபது தமிழ் நாட்டின் தவக்குறை என்றே கொண்டு வருந்திப் பிரார்த்திக்கவேண்டியிருக்கிறது" என்று ஆ. பா. அடிக்குறிப்பெழுதி யுள்ளார்.

முதல் அச்சிலும், ஆரூர்திருமுறை முதற்பதிப்பிலும் பொ. சு., ச. மு. க. பதிப்புகளிலும் நூலின் தலைப்பு 'சத்த சன்மார்க்கத்தின் முதற் சாதனமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம்' எனக் காணப்படுகிறது. பி. இரா. பதிப்பில் 'சுத்த சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்றும், ஆ. பா. பதிப்பில் 'சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்றும் காணப்படுகிறது. 'சன்மார்க்க விளக்கம்' அடிகள் எழுதத் திட்ட மிட்டிருந்த நூல்களுள் ஒன்று (பக்கம் 394; 400 காண்க). அது எழுதாது தவிர்ந்ததுபோலும். அல்லது அதன் முதற்பிரிவாக ஜீவ காருண்ய ஒழுக்கம் அருளப் பெற்றது போலும். 'சன்மார்க்க விளக் கத்தின் முதற் பிரிவாகிய' என்பதினும், 'சுத்த சன்மார்க்கத்தின் முதற்சாதனமாகிய' என்பதே பொருத்தமாகத் தோன்றுதலின் முதல் அச்சிலும் ஆரூர் திருமுறை முதற்பதிப்பிலும் ச. மு. க. பதிப்பிலும் காணப்பெறும் அத்தலைப்பே இங்கு இப்பதிப்பிற் கொள்ளப்பெற்றது.

2 வியாக்கியானங்கள்

1. ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி

ஒழிவிலொடுக்கம் காழிக் கண்ணுடைய வள்ளலாரால் அருளப் பெற்ற சிறந்த ஞான நூல். அதற்கு உரை செய்தவர் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள். அதனை முதன் முதலிற் பதிப்பித்தவர் நம் அடிகள். நூலின் சிறப்புப்பாயிரச் செய்யுளுக்கு ஒரு விருத்தியுரையும், சிதம்பர சுவாமிகளின் உரையிற் காணும் அருஞ்சொற்கள் சிலவற்றிற் குப் பொருளும், நூலினுள் ஆங்காங்கே சில அடிக்குறிப்புகளும், நூலிறுதியில் அமைத்துக்கொளல் என்ற தலைப்பிற் சில குறிப்புகளும் எழுதி 1851-ல் ஒழிவிலொடுக்கத்தைச் சிதம்பர சுவாமிகள் உரையுடன் அடிகள் பதிப்பித்தருளினர். அடிகள் பதிப்பின் முகப்பேட்டை இந் நூல் பக்கம் 505-ல் காண்க.

2. தொண்டமண்டல சதகம் - நூற்பெயர் இலக்கணம்; வழிபடு கடவுள் வணக்கப்பாட்டுரை

அடிகள் பதிப்பித்த நூல்களுள் இரண்டாவது தொண்டமண்டல சதகம். நூலின் பெயராகிய தொண்டமண்டல சதகம் என்பதற்கு இலக்கணமும் நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு உரையும் எழுதித் தொண்டமண்டல சதகத்தை அடிகள் 1855-ல் பதிப்பித்தார். அடிகள் பதிப்பின் முகப்பேட்டைப் பக்கம் 506-ல் காண்க. தொண்ட மண்டலம் என்பது சரியா தொண்டைமண்டலம் என்பது சரியா என்ற வாதம் அக்காலத்தில் சென்னையிலிருந்த புலவர் சிலரிடையே எழுந்தது. 'டகரமா' அல்லது 'டகர ஐகாரமா' என்ற அவ்வாதம்

இறுதியில் அடிகளிடம் வந்து சேர்ந்தது. அடிகள் இரு கூற்றையும் ஆராய்ந்து இலக்கணம், இலக்கியம், வரலாறு, வழக்கு, கல்வெட்டு ஆகிய சான்றுகளுடன் நூற்பெயரிலக்கணத்தை வரைந்து தொண்டமண்டலம் என்பதே சரியென்று நிறுவினர். நூற்பெயரிலக்கணத்தின் ஈற்றில் அடிகள் திருவலிதாயம் திருமுல்லைவாயிற் கல்வெட்டுகளைச் சான்று காட்டி முடிக்கிறார். அக்காலத்தில் தமிழ்ப்புலவர்கள் கல்வெட்டுகளைப் பற்றிக் கருதியதேயில்லை. சாசன ஆராய்ச்சி (Epigraphy) யும் தொல்பொருளாராய்ச்சி (Archaeology) யும் மேலை நாட்டறிஞர்கள் நமக்களித்தவை. தமிழ்ப் புலவர்களெல்லாம் கல்வெட்டுகளில் கவனஞ் செலுத்தாத காலத்தில் அடிகள் கல்வெட்டுகளை ஆராய்ந்திருப்பது அடிகளின் பல்கலைப் புலமைக்குச் சான்றாகும். அடிகள் தமிழ்நாட்டின் முதற் கல்வெட்டாராய்ச்சியாளர் ஆவார்.

3. உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம்

மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என்று ஒரு நூலை அடிகள் செய்யக் கருதியிருந்தனரென்பது இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த இரு திருமுகங்களால் (பக்கம் 394, 400) அறியப்பெறுகிறது.

திருவருட்பாப் பாடலொன்றில் மூன்று மெய்ம்மொழிப் பொருள்கள் குறிக்கப்பெறுகின்றன.

திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
　　செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
　　உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
　　காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும்
　　வண்ணமும் திருவுளம் அறியும் 3527

திருவளர் திருஅம்பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப் பொருள் சேக்கிழார்க்கு உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்தது. திருமந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும் அடிகளின் உளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருளும் இன்னவெனத் தெரியவில்லை. இம்மூன்று மெய்ம்மொழிப் பொருள்களையும் விளக்கியே அடிகள் 'மெய்ம்மொழிப் பொருள் விளக்க'த்தை எழுதத் திட்டமிட்டிருக்கக் கூடும். முதல் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் எழுதப் பெற்றது. ஏனைய இரு மெய்ம்மொழிப் பொருள்களின் விளக்கங்கள் எழுதப் பெறாது தவிர்ந்தன போலும். உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்

கம் " திருவருட்பா உட்கிடை " என்ற தலைப்புடன் ஆறுந்திருமுறை முதற் பதிப்பில் முதன் முதலாக அச்சாயிற்று. பொ. சு. பதிப்பிலும் திருவருட்பா உட்கிடை என்பதே தலைப்பு. பி. இரா. பதிப்பில் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் என்று மாறிற்று. ச. மு. க. பதிப்பில் உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் என்ற தலைப்பைப் பெற்றது.

4. " தமிழ் " என்னும் சொல்லுக்கிட்ட உரை

அடிகள் சென்னையிலுறைந்த காலத்தில் சங்கராசாரிய சுவாமிகளுடன் அளவளாவ நேரிட்ட போது அச்சுவாமிகள் சம்ஸ்கிருதமே " மாத்ரு பாஷை " எனக் கூறிச் சமஸ்கிருதத்தைச் சிறப்பித்துப் பேசினராம். அப்படியாயின் " தமிழ் பித்ரு பாஷை " என அடிகள் கூறித் தமிழின் ஞானச் சிறப்பை விளக்கி ஓர் உரையுஞ் செய்து சங்கராசாரியர்க்குத் தமிழருமையை விளக்கினராம். அடிகள் செய்த அவ்வுரை " உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை " என்னும் திங்களிதழில் 21-8-1897-ல் " தமிழ் - ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது " என்னும் தலைப்போடு முதன் முதலாக அச்சாயிற்று. பின்னர் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் சித்தாந்தம் - தொகுதி 2 பகுதி 7 - 1913 ஜுன் இதழில் " தமிழ் - இராமலிங்க சுவாமி யெழுதியது " எனச் சித்தாந்த தீபிகையிலிருந்து எடுத்து அச்சிடப்பெற்றது. திருவருட்பாப் பதிப்பில் முதன் முதலாகச் சேர்ந்தது ச. மு. க. பதிப்பிலாம்.

3. மருத்துவக் குறிப்புகள்

1. மூலிகை குண அட்டவணை

இதற்கு மூலம் ஆ. சபாபதி சிவாசாரியரின் நோட்டுப் புத்தகமாகும். இது முதன் முதலில் ச. மு. க. திருவருட்பாப் பதிப்பில் (1924) அச்சாயிற்று.

2. சஞ்சீவி மூலிகைகள்

அடிகளின் உபதேசங்களைக் கேட்ட அன்பர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புகளிற் காண்பன. ' வேறு குறிப்பு ' என்பது வேறொருவரால் எழுதப் பெற்றது.

3. மருத்துவக் குறிப்புகள்

இவையும் அன்பர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புகளே. இவற்றுள் முதல் நான்கும் ஆ. பா. பதிப்பிற் காண்பவை. 5, 6-வது குறிப்புகள் சென்னை சன்மார்க்க சங்கப் பதிப்பிற் காண்பன.

4. உபதேசங்கள்

1. நித்திய கரும விதி

1893-ல் ச. மு. கந்தசாமி பிள்ளை, ஆ. சபாபதி சிவாசாரியரின் விருப்பத்தின் வண்ணம் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைச் சிறு நூலாக வெளியிட்ட போது அதனுடன் நித்திய கரும விதியையும் இன்னும் சில உபதேசக் குறிப்புகளையும் சேர்த்துப் பதிப்பித்திருக்கிறார். அஃதே இதன் முதல் அச்சு ஆகலாம். திருவருட்பாப் பதிப்பில் முதன் முதலாகச் சேர்க்கப் பெற்றது பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பிலாம் (1896).

2. உபதேசக் குறிப்புகள்

இவை அடிகளின் உபதேசங்களைக் கேட்ட அன்பர்கள் எழுதி வைத்த குறிப்புகள். இவற்றுட் சில 1893-ல் ச. மு. க. பதிப்பித்த தாக முற்கூறிய ஜீவகாருண்ய ஒழுக்கக் கையடக்கப் பதிப்பில் அச்சாகியுள்ளன. சில பி. இரா. திருவருட்பாப் பதிப்பிற் சேர்ந்துள்ளன. அவற்றுடன் மற்றும் சில ச. மு. க. திருவருட்பாப் பதிப்பிற் சேர்ந்துள்ளன. இப்போது வழங்குமளவு முழுமையாக வெளிவந்தது ஆ. பா. பதிப்பிலேயேயாகும். சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள், சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைச் சிறு குறிப்புகள், சுத்த சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைத் தனிக் குறிப்புகள் என மூன்று தொகுதியாக இவற்றை ஆ. பா. அச்சிட்டிருக்கிறார். அடிகளது உபதேசங்களைக் கேட்ட அன்பர் சிலர் நீண்ட குறிப்புகளாகக் குறித்து வைத்தனர். இவை (பெருங்) குறிப்புகள். வேறுசிலர் அவற்றையே துண்டு துண்டாகச் சிறுகுறிப்புகளாகக் குறித்து வைத்தனர். இவை சிறுகுறிப்புகள். ஒரு விஷயமே ஒருவரால் பெருங்குறிப்பாகவும் மற்றொருவரால் சிறுகுறிப்புகளாகவும் குறித்து வைக்கப் பெற்றுள்ளது. ஒரு பெருங்குறிப்பிற் காணப் பெறும் விஷயமே பல சிறுகுறிப்புகளாகக் குறித்து வைக்கப் பெற்றுள்ளது. பல சிறுகுறிப்புகளிற் காணும் விஷயங்கள் ஒரு பெருங்குறிப்பில் அடங்குகின்றன. பெருங்குறிப்பிற் காணப்பெறும் ஒரு விஷயம் சிறுகுறிப்பில் அதைவிடத் தெளிவாக உள்ளது. சுருங்கச் சொல்லி விளங்கவைத்தற்கு உதாரணமாகப் பல சிறுகுறிப்புகள் திகழ்கின்றன. சிறுகுறிப்புகள், அவை பெருங் குறிப்புகளில் அடங்கி விடுகின்றன என்ற காரணத்திற்காகப் புறக்கணிக்க இயலாதவாறுள்ளன. பெருங்குறிப்புகளிலும் சிறுகுறிப்புகளிலும் சேராதவற்றைத் தனிக்குறிப்புகள் என்ற தலைப்பில் ஆ. பா. அச்சிட்டிருக்கிறார்.

யாம் இப்பதிப்பில் (பெருங்) குறிப்புகள், சிறு குறிப்புகள், தனிக் குறிப்புகள் ஆகிய மூன்றையுமே ஒன்றுபடுத்தி யுள்ளோம். பெருங்

குறிப்பைத் தொடர்ந்தே அதைச் சேர்ந்த - அதனுள் அடங்கும் - சிறு குறிப்புகளை வைத்துள்ளோம். பெருங்குறிப்புகளுக்கு எண் கொடுத்து அவற்றின் தலைப்பைப் பெரிய எழுத்தில் அச்சிட்டுள்ளோம். சிறு குறிப்புகளுக்கு எண் கொடாது பெருங்குறிப்பின் கீழேயே வைத்து அவற்றின் தலைப்பைச் சிறிய எழுத்தில் அச்சிட்டுள்ளோம். தனிக் குறிப்புகளை, அவை சிறுகுறிப்புகளிற் சேராத போது பெருங்குறிப்புப் போன்றே எண் கொடுத்துப் பெரிய எழுத்தில் தலைப்பிட்டுள்ளோம். இவ்வாறு மூவகைக் குறிப்புகளையும் யாம் ஒன்றுபடுத்தியிருப்பது, ஒரு விஷயத்தைப் பற்றிய பல குறிப்புகளையும் ஒரே இடத்திற் காண்பதற்கு ஏதுவாகும். பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பிற் பல இடங்களிற் காணப் பெறுவது இப்பதிப்பில் ஒரே இடத்திற் காணப்பெறும்.

எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைக் காட்டுவோம். ஆ. பா. பதிப்பில் நினைப்பு மறைப்பு என்ற தலைப்பில் பெருங்குறிப்பு ஒன்றும் சிறு குறிப்புகள் இரண்டும் முறையே 27, 67, 81-ஆம் பக்கங்களில் உள்ளன. இப்பதிப்பில் இவை மூன்றும் ஒரே பக்கத்திற் காணப்படும் பக்கம் - 289. காவி வேஷ்டியைப் பற்றிய மூன்று குறிப்புகள் ஆ. பா. பதிப்பில் மூன்று இடங்களில் உள்ளன. பக்கம் 22, 61, 64. அவை மூன்றும் இப்பதிப்பில் ஒரே இடத்திற் காணப்பெறும் பக்கம் 321. பிண்ட இலக்கணம் என்பது ஒரு பெருங்குறிப்பு. இப் பெருங்குறிப்பிலுள்ள விஷயங்களே பிண்டநியாயம், ஜீவஸ்தானம், சுவர்க்க நரகம், ஆன்மாவும் ஜீவனும், பூர்வோத்தரம், பெருங்கோயில், ஆதி அநாதி, காட்சி என்ற எட்டு சிறுகுறிப்புகளாகவும் உள்ளன. இவ்வெட்டு சிறு குறிப்புகளும் ஆ. பா. பதிப்பில் வெவ்வேறு இடங்களில் - பக்கங்களில் - உள்ளன. அங்கும் இங்கும் புரட்டிப் பார்க்கவேண்டும். இப்பதிப்பில் இவை அனைத்தும் ஒரே இடத்தில் வைக்கப்பெற்றுள்ளன. பக்கம் 262 காண்க. பிண்ட இலக்கணம் என்னும் பெருங்குறிப்பின் கீழேயே பிண்ட நியாயம் முதலிய சிறு குறிப்புகள் எட்டும் வைக்கப் பெற்றுள்ளன. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பில் (பெருங்) குறிப்புகள் 58, சிறுகுறிப்புகள் 144, தனிக்குறிப்புகள் 50, ஆக 252. இவற்றுள் சஞ்சீவி மூலிகைகளைக் குறித்தவற்றை யாம் மருத்துவக் குறிப்புகளிற் சேர்த்துள்ளோம். ஏனைய அனைத்தையும் 133 பெருந் தலைப்புகளில் நிரவியுள்ளோம். 274 ஆம் பக்கத்திலுள்ள கற்பமும் பிரளயமும் என்னும் குறிப்பு ஆ. பா. பதிப்பிற் காணாதது, சென்னை சன்மார்க்க சங்கப் பதிப்பிற் காண்பது.

3. சுப்பிரமணியம். 4. அருள்நெறி

அடிகளின் உபதேசத்தைக் கேட்ட அன்பர் ஒருவர் எழுதிவைத்த

5. திருவருண் மெய்ம்மொழி

சித்திவளாகத்திற் செய்த உபதேசம். கேட்ட அன்பர் ஒருவரின் குறிப்பு.

6. பேருபதேசம்

சித்திவளாகத் திருமாளிகையில் 22 - 10 - 1873-ல் முதன் முதலாகச் சன்மார்க்கக் கொடியைக் கட்டி அடிகள் செய்த உபதேசம். அடிகளின் முடிந்த முடிவான கொள்கைகள் கருத்துகள் பலவற்றை இதனுட் காணலாம்.

5. திருமுகங்கள்

இளமையில் சென்னையில் உறைந்த அடிகள் தம் முப்பத்தைந்தாம் அகவையில் 1858-ல் சென்னை வாழ்வை நீத்துச் சிதம்பரம் பக்கம் வந்தார். 1858 முதல் 1867-ல் வடலூரில் சத்தியதருமசாலையைத் தொடங்கும் வரை கருங்குழியில் உறைந்தார். 1867-ல் வடலூரில் சாலை தொடங்கியது முதல் 1870 வரை சாலையே அடிகள் உறைவிடமாயிற்று. 1870-ல் அடிகள் மேட்டுக்குப்பம் நோக்கினர். சென்னையை நீத்த 1858 முதல், மேட்டுக்குப்பம் சென்ற 1870 வரை, அதாவது கருங்குழியிலும் வடலூரிலும் இருந்த காலங்களில் அடிகள் அன்பர் சிலர்க்குத் திருமுகங்கள் வரைந்தனர். 1870-ல் மேட்டுக்குப்பம் சென்ற பின் யாருக்கும் திருமுகங்கள் வரைந்ததாகத் தெரியவில்லை. தாமே கடிதம் எழுதுதல், தமக்கு வரும் கடிதங்களுக்கு விடை எழுதுதல் ஆகிய வியவகாரங்களுங் கடந்த மேல்நிலையில் அடிகள் இருந்தனராதலின் மேட்டுக்குப்ப நாள்களில் நேரிடைக் கடிதத் தொடர்பில்லை. இந்தக் காலங்களில் அடிகளிடமிருந்து கடிதங்கள் இல்லையெனினும் கட்டளைகள் பிறந்தன · அறிவிப்புகள் வெளியாயின.

அடிகள் எழுதியருளிய கடிதங்கள் பெரும்பாலும் டெம்மி ⅛ அளவு நான்கு பக்கங்கள் உள்ள கடிதத் தாள்களில் (லட்டர் பேப்பரில்) எழுதப் பெற்றவை. சில கடிதங்கள் சற்றுச் சிறிய அளவுள்ள கடிதத் தாள்கள். நான்கு பக்கங்களில் மூன்று பக்கம் கடிதம். நான்காம் பக்கம் முகவரி, தபால் தலை, தபால் முத்திரைகள். கடிதங்களையே மடித்து அதன்மேல் முகவரி எழுதித் தபாலில் சேர்க்கப்பெற்றுள்ளன. உறையில் (கவரில்) வைத்து அனுப்பும் வழக்கம் பிற்காலத்திலேயே ஏற்பட்டது. தபாலில் அனுப்பிய எல்லாக் கடிதங்களும் அரை அணா தபால் தலை (Half Anna Postage Stamp) ஒட்டியே அனுப்பப்பெற்றுள்ளன. நான்காம் பக்கம் முகவரி எழுதி, தபால் தலை ஒட்டப் பெறாத சில கடிதங்கள் நேரில் அன்பர் மூலம் அனுப்பப்பெற்றவை. தபாலிற் சென்றவையன்று.

1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்தவை

அடிகள் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த 37 திருமுகங்களை முதன் முதலாகத் தமது பதிப்பில் ஆ. பா. வெளியிட்டிருக்கிறார். இப்பதிப்பில் 38 திருமுகங்கள் இடம்பெறுகின்றன. ஆ. பா. பதிப்பில் திருமுகக் குறிப்புகள் என்ற தலைப்பில் முதற் குறிப்பாக உள்ள "பற்றவேண்டியவை" என்பது இரத்தின முதலியார்க்கு வரைந்த ஒரு திருமுகத்தின் பகுதி. அத்திருமுகம் முழுவதையும் [இடையில் சில வரிகள் நீங்கலாக] ஏழாவது திருமுகமாகச் "சாதுக்கள் சார்பு" என்ற தலைப்புடன் அதற்குரிய இடத்தில் சேர்த்திருப்பதால் இப்பதிப்பில் இ. இ. முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள் 38 ஆயின. 38 திருமுகங்களுக்கும் அடிகள் கைப்பட எழுதியருளிய மூலங்களே ஆதாரம். இவை யனைத்தையும் யாம் பார்த்திருக்கிறோம். பார்த்ததன் பயனாக முற்பதிப்பின் எழுத்துப் பிழைகள் சில திருந்தின, குறைகள் சில நிரம்பின. 6, 8, 24, 29 ஆகிய நான்கு திருமுகங்களின், அடிகள் திருக்கரஞ் சாத்திய மூலவடிவம் இப்பதிப்பில் அச்சிடப்பெற்றுள்ளது.

2. புதுவை வேலு முதலியார்க்கு வரைந்தவை

ஆறு திருமுகங்கள் ஆ. பா. பதிப்பில் முதன் முதலாக வெளியாயின. ஆதாரம் அடிகள் திருக்கரத்தா லெழுதிய மூலங்களே. ஏழாவது திருமுகமாக இப்பதிப்பில் அச்சிடப்பெற் றிருப்பது ஆ. பா. பதிப்பிற் காணாதது; சென்னை சன்மார்க்க சங்கப் பதிப்பிற் காண்பது. முதல் திருமுகத்தின் மூலத்தை மட்டும் யாம் பார்த்திருக்கிறோம்.

3. மற்றைய அன்பர்களுக்கு வரைந்தவை

திருநறுங்குன்றம் ராமசாமி நயினர், பொன்னுசாமி பிள்ளை, ஆடூர் சபாபதி சிவாசாரியர் ஆகிய மூவர்க்கு வரைந்த முதல் மூன்று திருமுகங்களுக்கும் அடிகள் கைப்பட எழுதப் பெற்ற மூலங்களே ஆதாரம். இவற்றை யாம் பார்த்திருக்கிறோம்.

பொன்னுசாமி பிள்ளைக்கு வரைந்த திருமுகம் யோகக் குறிப்பும் மருத்துவக் குறிப்பும் கொண்டதாக உள்ளது. அடிகட்குப் பொன்னுசாமி பிள்ளை எழுதிய கடிதத்துடன் நாகவல்லியும் சப்பீர டலங்களும் அனுப்பியிருக்கிறார். நாகவல்லி - வெற்றிலை. சப்பீர டலம் - எலுமிச்சம்டழம். கடிதத்துடன் மங்கலப் பொருள்களான இவற்றை மரியாதைக்காக அனுப்புவது இவருக்கு வழக்கமென்பது, 'இவ்விடம் கடிதம் அனுப்புந்தோறும் இந்தப்பிரகாரம் அனுப்புவது பிரயாசம் என்று என் மனம் என்னை வருத்துகின்றது' என்று அடிகள் பதிலெழுதுவதால் தெரிகிறது. பொன்னுசாமிபிள்ளைக்கும் அடிகட்கும் கடிதத்

தொடர்பு அதிகம் இருந்திருக்கிறது. எனினும் அடிகள் வரைந்த ஒரு திருமுகமே வெளிப்பட்டிருக்கிறது. வெளிப்படாத பலவோ சிலவோ வெளிப்படத் திருவருள் துணைசெய்ய வேண்டும்.

இலக்கண நுண்மாண் இயல் என்னும் நான்காம் திருமுகத்தின் வரலாறு :

கருங்குழியில் அடிகள் உறைந்த வீட்டிலிருந்த புருஷோத்தம ரெட்டியார் ஒரு சமயம் வீட்டில் கோபித்துக் கொண்டு வெளியேறி விட்டார். அவர் மதுரைக்குச் சென்று திருஞானசம்பந்தர் மடத்தில் திருச்சிற்றம்பல ஞானிகளுடன் இருப்பதாகக் கேள்வியுற்ற குடும்பத்தினர் மதுரை மடத்திற்குக் கடிதமொன்றெழுதி அவரை வருவித்துதவுமாறு அடிகளை வேண்டினர். அடிகளும் மடத்துச் சுவாமிகளுக்கு ஒரு திருமுகம் அனுப்பினர். அத்திருமுகத்தை மடத்திலிருந்த சிலர் பார்க்க நேரிட்டது. கணக்கிலவதானி தேவி பட்டினம் முத்துசாமி பிள்ளை என்பவர் அப்போது அங்கிருந்தார். அடிகளின் திருமுகத்தைப் பார்த்த அவர், 'வள்ளலாரைப் பெரிய வித்துவான் என்று சொல்கிறார்களே, அவருடைய படிப்பு இலக்கணமில்லாப் படிப்பு' என்றார். திருச்சிற்றம்பல ஞானிகள் அதனைக் கேட்டு வருந்தியவராய், வள்ளற் பெருமான் விவகரிக்குங் காலத்தில் சிதறிய இலக்கணத்தில் கோடியிலொரு கூறே இவ்வுலகில் வழங்குகின்றது என்றார். அப்படியாயின் இலக்கணச் சிறப்புடன் வள்ளலாரிடமிருந்து ஒரு கடிதம் வருவித்து அனைவருக்கும் காட்டுமாறு மடத்துச் சுவாமிகள் கூறினர். ஞானிகள் அடிகட்கு ஒரு கடிதமெழுதி, அவ்விடத்திய செய்திகளை இலக்கண வகையால் தனக்குத் தெரிவிக்க வேண்டுமென விண்ணப்பித்தார். தொழுவூர் வேலாயுத முதலியாரும் ச. ஆறுமுகமுதலியாரும் குடியிருந்த வீட்டின் முகப்பில் அடிகள் இருந்தபோது அந்தக் கடிதம் வந்தது. கடிதத்தைக் கண்ட அடிகள் 'பிச்' என்று சொல்லி எறிந்து விட்டார். உடனிருந்த தொழுவூர் வேலாயுத முதலியாரும் மற்ற அன்பர்களும் இலக்கணப் புலமையுடன் ஒரு திருமுகம் எழுதியனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தினர். அடிகளும் மறுக்க மாட்டாது இரண்டொரு வரிகள் மட்டும் எழுதி வேலாயுதனரிடம் கொடுத்துக் கடிதத்தை முடித்தனுப்பக் கட்டளையிட்டார். அவ்வாறே வேலாயுதனர் இவ்விலக்கணத் திருமுகத்தை எழுதியனுப்பினர்.

ச. மு. க. பிரபந்தத் திரட்டில் (1923) உள்ள இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகளிலும், திருவருட்பா, ச. மு. க. பதிப்பில் (1924) உள்ள இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகளிலும் இதன் தலைப்பு 'இலக்கணவியகடை வழக்கப்பாடுறுத்துவிக்கும் பத்திரிகை' என்றிருக்கிறது. இதன் கீழுள்ள கையொப்பம் 'இங்ஙனம், நங்கோச் சோழன் வீரமணிச்குடியார் திருவாணைப்படிக்கு அடிமை தொழுவூர்

வேலாயுதம்' என்றிருக்கிறது. 'பார்வதிபுரம், சுக்கில ௵ துலாரவி உஎவ' என இடமும் காலமும் குறிக்கப்பட்டுள்ளன. ஆ. பா. வியாக்கியானப்பகுதி முதற்பதிப்பிலும் (1931-ல் உரைப்பகுதி என்ற பெயருடன் வெளிவந்தது) மேற்குறித்தவாறே தலைப்பு, கையெழுத்து, இடம், காலம் ஆகியவற்றைப் பதிப்பித்திருக்கிறார். வியாக்கியானப் பகுதி இரண்டு (1935) மூன்றும் (1961) பதிப்புகளில் தலைப்பு 'இலக்கணப் பத்திரிகை' என்று காணப்படுகிறது. கையெழுத்து 'இங்ஙனம் நங்கோச்சோழன் வீரமணி சூடியார் திருவாணைப்படிக்கு' என்று மட்டுமே இருக்கிறது. 'அடிமை தொழுவூர் வேலாயுதம்' என்பது இல்லை. இடம், காலம் குறிப்புகளும் இல்லை. இவ்விலக் கணத் திருமுகத்தின் வரலாறு அடியில் கண்டபடி ஓர் பிரதியில் காணப்படுகிறது' என ஆ. பாலகிருஷ்ண பிள்ளை குறிப்பிடுகிறார்.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்தில் திருவருட்பிரகாச வள்ளலார் ஜக சகாப்தம் உ-ல் நிகழாநின்ற விபவ ௵ ஆவணி மீ த்தில் திருக்கழுக்குன்றம் திருச்சிற்றம்பல ஞானிகள் போயிருந்த தருணத்தில், கடந்த அக்ஷய ௵த்தில் கருங்குழி புருஷோத்தம ரெட்டியார் தன்வீட்டிலிருந்து கோபத்தால் மதுரைக்குக் போயி ருந்த தருணத்தில் ஷியாரை யுபசரித்து இவ்விடம் அனுப்ப வேண்டுமென்று ஷ மடத்து சுவாமிகளுக்கு சி. இராமலிங்கம் பிள்ளை யவர்களால் அனுப்பப்பட்ட கடிதத்தால் - ஒரு தருணம் நாவலர் மனுஷியர்களி லங்கிருந்த சிலர் திருவருட்பிரகாச வள்ள லார் விசேஷ வித்வானென்று சொல்கிறார்களே யவருடைய படிப்பு இலக்கண மில்லாப் படிப்பு - என்று சொல்லக் கேட்ட திருச்சிற்றம்பல ஞானியார் புகன்றது. அவர்களால் விவகரிக்கும் விவகாரத்திற் சிதறிய இலக்கணத்தின் மொழிகளில் கோடியி லொரு கூறிவ்வுலகி லிருக்கிறதென்று வாதிக்க அம்மடத்து சுவா மிகளப்படியாகி லந்த சுவாமிகளா லிலக்கண விதிப்படி யொரு கடித மனுப்பும்படி கேட்டு வருவிக்க வேணு மென்று கேட்டுக் கொண்டபடி - மேற்படி ஞானி யிவைகளைக் குறியாமல் சன்னி தானத்திற்கு ஒரு கடிதம் அனுப்பினர். ஷ கடிதத்தினால் இவ் விடத்திய சுகுணங்களையும் அற்புதங்களையும் இலக்கண வகை யாற் றனக்குத் தெரிவிக்க வேண்டு மென்று பிரார்த்தித்ததால் - அதன் பொருட்டெழுதி விடுத்த குசல பத்திரிகை பின்புறங் காண்க.

இலக்கணப் பத்திரிகை

ச. ஆறுமுக முதலியார் வேலாயுத முதலியா ரிவர்கள் குடியிருந்த முகப்பிலிருந்து அய்யா அவர்களாற் சில வரியும் மற்றவை ஆக்ஞையின் பேரில் வேலாயுத முதலியாராலும் எழுதியது.

இலக்கணத் திருமுகத்தைப் பெற்ற திருச்சிற்றம்பல ஞானிகள் மடத்திலுள்ள அனைவருக்கும் காட்டினார். அவதானியார் முத்துசாமிப் பிள்ளைக்குப் பொருள்விளங்காததால் "வேணுமென்றே ஒருவித்வான் பூட்டுப்போட்டால் அந்த வித்வான்தான் அதைத் திறக்க வேண்டும்" என்றார். 'ஞானியார் அப்படியாயின் நீர் ஒரு பூட்டுப் போடும்' என்றனர். அவதானியார்,

> தகரவரிக் கூந்தலர்கா மாதிமுந்நீர் தாழும்
> தகரவரி நாலைந்து சாடும் - தகரவரி
> மூவொற்றி யூர்பொருளை மூன்றுமங்கை யேந்துமொரு
> சேவொற்றி யூரானைச் செப்பு.

என்ற வெண்பாவை இயற்றி யனுப்பினர். இதற்கு அவதானியார் கருதிய உரையையும் அவர்க்கும் விளங்காத வேறு ஒரு விசேட உரையையும் அடிகள் செய்து விடுத்தனர். அவற்றைக் கண்ட அவதானியார் செருக்கொழிந்தவராகி வடலூருக்கு வந்து தெருக்கோடியிலேயே வண்டியை விட்டிறங்கி வீதியில் வீழ்ந்து வணங்கிக் கொண்டே வந்து அடிகளைக் கண்டு பணிந்து 'வித்வான் என மதித்திருந்தேன், பரிபூரண ஞானி, என்று உணர்ந்திலேன், மன்னிக்க வேண்டும், என வேண்டினர். அடிகளின் தோத்திரமாக ஒரு பாடலையும் பாடிப் பணிந்தார். அப்பாடல் கிடைக்கவில்லை – என்ற இவ்வரலாறு ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் பதிப்பினு லறியப்படுகிறது.

இவ்விலக்கணத் திருமுகத்திற்கு சேலம் வேலூர் கண்டர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. ப. ரா. கந்தசாமி அவர்கள் ஓர் உரை எழுதினர். அது 1968-ல் இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழில் இதழாசிரியராகிய எம்மால் வெளியிடப் பெற்றது. பின்பு உரை யெழுதியவரே தனி நூலாகவும் அச்சிட்டார்.

திருவருள் வல்லபம் என்னும் ஐந்தாம் திருமுகத்தின் வரலாறு "பிரமோதூத ஹூ தை மாசத்தில் புதுச்சேரி சுவாமிகள் சமாதி திருக்கோயில் புகுமுன்னர் சந்நிதானத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டதற்கு பதில் திருமுகக் குறிப்பு" என ஓர் படியில் காணப்படுவதாகப் பாலகிருஷ்ண பிள்ளை குறித்துள்ளார். பிரமோதூத, தை என்பது 1871 ஜனவரி, பிப்ரவரி.

4. திருமுகக் குறிப்புகள்

திருமுகக் குறிப்புகள் பதின்மூன்றில் முதல் ஒன்பது குறிப்புகள் ஆ. பா. பதிப்பிலுள்ளவை. 10; 11; 12; 13 ஆம் குறிப்புகள் ஆ. பா. பதிப்பிலில்லாது சென்னை சன்மார்க்க சங்கப் பதிப்பி லுள்ளவை. பதிமூன்றாவது குறிப்பு மிக அரிய குறிப்பு.

6. அழைப்புகள், அறிவிப்புகள், கட்டளைகள்

அழைப்புகளும் அறிவிப்புகளும் கட்டளைகளுமாகக் கிடைத்துள்ளவை 18. இவை அடிகள் வடலூரிலும் மேட்டுக்குப்பத்திலும் எழுந்தருளியிருந்த காலத்தில் (வடலூரில் சத்திய தருமசாலை தொடங்கிய 1867 முதல் மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் சித்தி பெற்ற 1874 வரை எட்டாண்டுகளில்) அருளப் பெற்றவை. அடிகள் நிறுவியருளிய சன்மார்க்க சங்கம், சத்தியதருமசாலை, சத்தியஞான சபை, சித்திவளாகம் ஆகிய நான்கு சன்மார்க்க நிலையங்களைக் குறித்தும். நிறுவத்திட்டமிட்டிருந்த மற்றும் சில நிலையங்களைக் குறித்தும் இவை அருளப் பெற்றனவாகலின், நிலையங்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கொள்கை விளக்கங்கள் பற்பல இவற்ருல் தெளிவாக அறியப் பெறுகின்றன. இவற்றுள் 'சபை விளம்பரம்' ஒன்று மட்டும் 'அற்புதப் பத்திரிகை' என்ற தலைப்புடன் 1885-ஆரும் திருமுறை முதற்பதிப்பில் வெளியாயிற்று. ஏனைய பதினேழும் பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பில்தான் முதன் முதலாக அச்சாயின. இவற்றைப் பத்திரிகைகள், கட்டளைகள் என இருவகையாகப் பிரித்துப் பத்திரிகைகள் என்ற தலைப்பின்கீழ் ஐந்தையும் கட்டளைகள் என்ற தலைப்பின் கீழ்ப் பத்தையும் காலவரிசைப்படி ஆ. பா. அமைத்திருக்கிருர். யாம் பதினெட்டையுமே ஒரு தொகுதியாக்கிக் காலவரிசைப்படி அமைத்துள்ளோம்.

1. சாலைத் தொடக்கவிழா அழைப்பு

(1) இது துறவிகளுக்கு அடிகளின் பெயரில் அனுப்பிய திருமுகம். "ஓர் அன்பரின் கையெழுத்துப் பிரதியில் இவ்வளவே காண்கிறது" என ஆ. பா. குறித்துள்ளார்.

(2) இது சங்கத்தார் பெயரால் மற்ற அன்பர்களுக்கு அனுப்பப் பெற்ற அழைப்பிதழ். அச்சிடப் பெற்றும் உள்ளது. "அச்சுப் பத்திரிகையில் மாதமும் தேதியும் கையொப்பமும் இல்லை. ஓர் அன்பரது கையெழுத்துப் பிரதியில் இதில் கண்ட மாத தேதித் தகவலும் கையொப்பமும் இருக்கின்றன. ஆனல் அதில் 'ருஷப லக்கினத்தில்' என்பதற்குப் பதிலாக 'சிங்க லக்கினத்தில்' என்று இருக்கிறது' என்பது ஆ. பா. குறிப்பு.

2. சாலை விளம்பரம்

இது சத்திய தருமசாலைத் தொடக்க நாளில் வெளியிடப் பெற்ற அறிவிப்பு. கூடலூர் துரைசாமி என்பவர் அடிகளுக்கு எழுதிய கடிதத்தில் (பக்கம் 474) 'நோட்டிசு ஆயிரங் காப்பி தயாராகின்றது. அதில் புருபு காப்பி வொன்று சமுகத்துக்கு அனுப்பியிருக்குது' என்று குறிப்பிடும் நோட்டீஸ் இதுவாகவும் இருக்கலாம்.

3. கிளைச் சாலைகள்

இச் சிறுகுறிப்பு, இவ்வளவே, சாலைத் தொடக்கவிழா அச்சிட்ட அழைப்பிதழைப் பிரதிசெய்து வைத்துள்ள மேற்குறிப்பிட்ட அன்பரால் அப்பிரதியின் பின்பக்கத்திலேயே எழுதப்பெற் றுள்ளதென்று ஆ. பா. குறிப்பிடுகிறார்.

4. சன்மார்க்க விவேக விருத்தி

இதில் தேதிக் குறிப்பு ஒன்றும் இல்லை என்றும் இதன்கண்ணுள்ள 49 வகைப்பட்ட எண் ஊர்ப்பேர் கையொப்பம் தொகை முதலியனவெல்லாம் அடிகள் உட்பட அவரவர்கள் கையெழுத்திலேயே இருக்கின்றனவென்றும் ஆ. பா. கூறுகின்றார். தொடங்கியதோடே நின்றுபோயிருந்த இச் சன்மார்க்க விவேக விருத்தி - திங்களிதழை 1969 முதல் யாம் நடத்தி வருகிறோம்.

5. சன்மார்க்க போதினி

" இவ்வளவே, முன்னுள்ள ஏடு கிழிபட்டும் இடையிலும் பின்னுமுள்ளவை எழுதப்படாமலும் ஓர் அன்பர் கையெழுத்தில் இருக்கிறது" என்று ஆ. பா. குறிக்கிறார். இவ்வறிவிப்பு அரையும் குறையுமாகக் கிடைத்துள்ளதெனினும் இதன்மூலம் அருமையான செய்திகள் தெரிகின்றன. சன்மார்க்க போதினி தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளைப் போதிக்கும் மும்மொழிப் பாடசாலை. சிறுவர்க்கு மட்டுமன்றி முதியோர்க்கும் போதிக்கும் பாடசாலை. தமிழ்நாட்டில் முதியோர் கல்வியை முதன் முதலில் ஏற்படுத்தியவர் அடிகளே.

6. சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம்

"ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான தருமச்சாலையில் பிரமோதூத ஸ்ரீ சித்திரை மீ ௯உ புதவாரம் சுமார் பகல் ௬ மணி நேரத்தில் வேலூர் ஆனந்த நாத ஷண்முக சரணலய சுவாமிகள் பெருமானிடத்தில் சாதலைக் குறித்து விண்ணப்பித்த தருணத்தில் பெருமான் திருக்கரத்தால் எழுதித் தந்த பிரதம பத்திரிகை" என்று இதன் வரலாறு ஓர் பிரதியில் காண்கிறது என ஆ. பா. குறித்துள்ளார்.

7. அன்பர்களுக்கு இட்ட சாலைக் கட்டளை

" இது பிரமோதூத ஸ்ரீ அற்பிசி மீ ௩உ சாலையிலுள்ளார்க்குப் பெருமான் மேட்டுக்குப்பமென்னும் சித்திவளாகத்திலிருந்து எழுதிய திருக்குறிப்பு" என்று ஒரு பிரதியிலும், " இது பிரமோதூத ஸ்ரீ

ஐப்பசி மீ ௰௧ ௨ சாலை நடத்திவந்த புதுவை சதாசிவ செட்டியாருக்குப் பெருமான் திருக்கரத்தால் வரைந்தனுப்பியது" என்று மற்றொரு பிரதியிலும் இதன் வரலாறு காணப்படுகிறது என ஆ. பா. குறிப்பிடுகிறார்.

8. சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை

இக்கட்டளைக்கு ஆ. பா. அடிக்குறிப்பு வருமாறு :

"பிரமோதூத ஹூ பங்குனி மீ ௰அ ௨ சாலை சம்பந்திகளுக்குப் பெருமான் மேல் விளையப் போகின்ற அற்புத விளக்கங்களின் திருக்குறிப்பைச் சாலை சம்பந்தமுடையவர் வழிபட்டு உண்மை லாபத்தைப் பெற்று உய்யும் பொருட்டு தயவோடு சுஹஸ்தலிகிதமாய் வெளிப்படுத்திய அற்புத மஹாபத்திரிகை" என்று இத்திருமுக வரலாறும், இத் திருமுகம் அனுப்பப்பட்ட அன்பர்க்கு ஓர் விசேஷக் குறிப்பாக "இந்தப் பத்திரிகையைச் சாலை சம்பந்திகள் தவிர மற்றவர்களுக்குக் காட்டொணாது. பணத்தாலாயினும் தேகத்தாலாயினும் உழைப்பெடுத்துக்கொண்டு உண்மை நம்பிக்கையுடன் இருக்கின்றவர்கள் விஷயத்தில் காட்டத் தடையில்லை. நான் சாலைக்கு வந்தவுடன் தெரிவிக்கின்றேன். அப்போது வரலாம், பெருங்களிப்பையடைவீர்கள். உண்மையுடனிருங்கள்" என்று மேல் கொண்டு எழுதப்பட்டிருப்பதும் ஓர் பிரதியில் காணப்படுகின்றன. இங்கு அச்சிட்டிருக்கும் இவ்வற்புத மஹாபத்திரிகை சுவாமிகள் திருவடிகளுக்கு மீளா ஆளெனத் தொண்டுபூண்ட பேரன்பர் சிலர்க்கே சுவாமிகள் சாலையை விட்டுத் தனித்து வேறிடத்திருந்தபோது அருளிச் செய்யப்பட்டு, அவரவர்களாலும் அவரவர்க்குப்பின் அந்த அந்தக் குடும்பத்தினராலும் சன்மார்க்கப் பரம ரகசியம் ஒன்றாக இதுகாறும் போற்றி வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. கொஞ்ச நாளைக்குமுன் இஃது ஓர் துண்டுப் பிரசுரமாக வழங்கப்பட்டதாதலினாலும், பெரும்பாலும் சன்மார்க்க சாதகர்க்காகவே இப்பதிப்பு அச்சிட்டு வருவதாலும் ஓர் மெய்யன்பர் கையெழுத்தில் உள்ளபடி அச்சிடுவது ஒருவாறு அமையும் என்று கருதி இதை இங்குச் சேர்த்திருக்கிறது. திருவருட்பிரகாச வள்ளலார் திருவடி வாழ்க. (ஆ. பா. அடிக்குறிப்பு)

ஓர் மெய்யன்பர் கையெழுத்தில் உள்ளபடி இக்கட்டளையை ஆ. பா. அச்சிட்டிருக்கிறார். அம் மெய்யன்பர் அடிகள் சுயஹஸ்த லிகிதமாய் எழுதிட்டருளிய மூலத்திலிருந்து பிரதி செய்து வைத்திருக்கிறார்.

யாம் இக்கட்டளையின் மூன்று பிரதிகளைப் பார்த்திருக்கிறோம்.

1. அடிகளின் திருக்கரத்தால் எழுதியருளப் பெற்ற மூலப்பிரதி (Original). 40 பக்க நோட்டு அளவுக் காகிதம் நான்கு பக்கங்கள்.

மூன்று பக்கங்களில் கட்டளை. நான்காம் பக்கம் எதுவும் எழுதப்படாத வெறும் பக்கம். அடிகள் கையெழுத்து, அடிகள் கையொப்பம். இந்த ஒரிஜினல் ஆள் மூலமாக ஆடூர் சபாபதி சிவாசாரியர்க்கு ஒரு உறையில் (கவரில்) வைத்து அனுப்பப் பெற்றது. உறையின் ஒரு பக்கம் 'தென்னார்க்காடு ஜில்லா சிதம்பரம் தாலுக்கா ஆடூரில் பிரம்ம ஸ்ரீ ஆ. சபாபதி சிவாசாரிய சுவாமிகளுக்கு. பார்வதிபுரத்தி லிருந்து வருவது' என்றும் 'பிரமோதூத ஹூ பங்குனி மீ 19-பகல் 5 மணிக்கு கூடலூர் அப்பாசாமி செட்டியார் காரியஸ்தன் அயில் செட்டியார் மூலமாய் வந்தது' என்றும் வேறு கையெழுத்தில் காணப்படுகிறது.

2. வேறு ஒருவரால் எழுதப்பெற்று அடிகளால் கையொப்பமிடப் பெற்று இறுக்கம் இரத்தின முதலியார்க்கு அவரது சென்னை முகவரிக்குத் தபாலில் சென்றது. வேறு ஒருவரால் எழுதப்பட்டு, அடிகளால் கையொப்பமிடப்பட்டிருக்கும் இதில் கையொப்பத்தைத் தொடர்ந்து வேறு சில செய்திகள் சில வரிகளில் அடிகளால் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதப்பட்டுள்ளன. இது கவரில் வைத்துத் தபாலிற் சென்றிருக்கிறது.

3. வேறு ஒருவரால் எழுதப்பெற்று அடிகளால் கையொப்பமிடப் பெற்றுப் பரமானந்த பிள்ளைக்கு அனுப்பப் பெற்றது. ா-ா-பரமானந்த பிள்ளையவர்கட்கு என்று தொடங்குகிறது. இஃது மகா ராஜ ராஜ ஸ்ரீ பிள்ளை அவர்கள் பரமானந்த பிள்ளை அவர்களுக்கு கொடுப்பது என்று 4ஆம் பக்கம் முகவரி எழுதப்பட்டுள்ளது.

சபாபதி சிவாசாரியருக்குச் சென்ற ஒரிஜினலில் காலக்குறிப்பு எதுவும் இல்லை. இ. இ. க்குச் சென்றதில் நான்காவது பக்கத்திலும் கவரிலும் ஹூ மீ உ இருக்கிறது. பரமானந்த பிள்ளைக்குச் சென்றதில் வருடமும் மாதமும் இருக்கிறது; தேதி இல்லை. பாலகிருஷ்ண பிள்ளை கொண்டுள்ள அன்பர் படியிற் காணப்படும் விசேடக் குறிப்பு இம் மூன்றில் ஒன்றிலுமே இல்லை.

அடிகளின் இக்கட்டளை ஒரு சுற்றறிக்கையாகச் சாலை சம்பந்திகள் (சாலைக்குச் சம்பந்தமுடையவர்கள்) பலருக்கும் அனுப்பப்பட்டதெனத் தெரிகிறது. அடிகளால் எழுதப் பெற்ற மூலம் ஒன்று. அதை அன்பர்கள் படி செய்து அடிகளிடம் கையொப்பம் பெற்றுப் பலர்க்கு அனுப்பப் பெற்றுள்ளது. விசேஷக் குறிப்பைக் கொண்டது யாருக்குச் சென்றதென்று தெரியவில்லை. இது போல் ரகசியம் என்று அடிகளாற் குறிக்கப் பெற்ற வேறு சிலவும் உள. விசேடக் குறிப்பைக் கண்ட ஆ. பா. எவ்வளவு அச்சத்தோடு இக்கட்டளையைப் பதிப்பித்திருக்கிறார் என்பது அவரது அடிக்குறிப்பாற் புலப்படுகிறது.

9. சன்மார்க்கப் பெரும்பதி வருகை

"ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சங்க சாதுக்களில் சிறந்த ஆனந்த நாத சண்முக சரணலய சுவாமிகள் சந்நிதானத்திற் காலஹரண ஹேதுவைப்பற்றி விசாரிக்குங் காலத்தில் பத்திரிகை மூலமாய் தெரிவித்த சரிதம்" என்று இதன் வரலாறு ஒரு பிரதியில் குறித்திருக்கிறதென்பது ஆ. பா. குறிப்பு.

10. சமரச வேத பாடசாலை

இஃது மேட்டுக்குப்ப மென்னும் சித்திவளாகச் சந்நிதானத்தில் வெளியிட்ட பத்திரிகை என்பது ஓர் பிரதியிலுள்ள குறிப்பு என்று ஆ. பா. குறித்துள்ளார்.

11. சபை விளம்பரம்

ஞானசபையைப் பற்றிய இவ் வறிவிப்பு ஆறாந் திருமுறை முதற் பதிப்பில், 'அற்புதப் பத்திரிகை' என்ற தலைப்புடனும், இறுதியில் 'சென்னபட்டணம் இராஜதானியைச் சார்ந்த கூடலூர் ஜில்லா ஷெ தாலூகா பார்வதிபுரம் அல்லது வடலூர், ஸ்ரீமுக ஹூ தை மீ கக உ ச்க்கிரவாரம்' என்ற இட, காலக் குறிப்புகளுடனும் காணப்படுகிறது. கையொப்பம் எதுவும் இல்லை. பொ. சு. பதிப்பிலும், ச. மு. க. பதிப்பிலும் 'அற்புதப் பத்திரிகை' என்பதே தலைப்பு. ஆயின் இட, காலக் குறிப்புகள் இல்லை. ஆ. பா. பதிப்பில் 'இங்ஙனம் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை' என்று கையொப்பம் காணப்படுகிறது. அடியிற் குறித்த தருணந் தொடங்கி என அறிவிப்பிலேயே கூறப்படினும் இதனடியில் காலம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. "வேறொருவரால் எழுதப்பட்டு சுவாமிகள் கையெழுத்திட்டிருக்கும் இதன் மூலத்தில் இந்தத்தருணத்தின் விபரம் எதுவும் குறிக்கப்பட்டிருக்கவில்லை. 'ஷெ பத்திரிகை பல பாஷையிலும் அச்சிட்டிருப்பதை அற்புதம் விளங்குங் காலத்தில் தினங்குறித்து ஷெ பத்திரிகையைப் பிரசுரஞ் செய்யப்படும்' என்று ஓர் அன்பர் பிரதியிலுள்ள குறிப்பையும், கிடைத்த பழந் துண்டு ஒன்றில் தேதி வரிசையாக விஷயங்களைக் குறித்திருப்பதில் இதைச் சுவாமிகள் திருக்காப்பிட்டுக்கொண்ட தேதியாகிய ஸ்ரீமுகஹூ தை மீ ௧௯ உக்கு எதிராகக் குறித்திருப்பதையும் கருதி இந்நாட் குறிப்பை ஒருவாறு உய்த்துணர்க" என்று ஆ. பா. அடிக்குறிப்பெழுதுகிறார்.

பலவகையாலும் ஆராயுமிடத்து இவ்வறிவிப்பின் காலம் அடிகள் சித்திபெற்ற நாளாகிய ஸ்ரீமுக தை 19 (30 - 1 - 1874) என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. சத்தியஞானசபையின் தொடக்க

நாளாகிய (சபையில் முதன் முதலாக வழிபாடு தொடங்கிய நாளாகிய) 25 – 1 – 1872 பிரஜோத்பத்தி தை 13 வியாழன் பூசநாள் என்பதே பொருத்தமாம்.

12. சாலையிலுள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை

தருமசாலையில் இருந்தவர்களைக் கண்டித்து அடிகள் மேட்டுக் குப்பத்திலிருந்து விடுத்த கண்டனக் குறிப்பு.

13. சன்மார்க்கப் பிரார்த்தனை

அடிகளுக்கு ஆட்பட்ட அன்பர்களுள் கல்பட்டு இராமலிங்க சுவாமிகளும் ஒருவர். இப்பிரார்த்தனை அவருக்காக அடிகளே எழுதித் தந்ததாகும். "இந்த விண்ணப்பம் கல்பட்டு சுவாமிகளுக்காகச் சந்நிதானமே எழுதி வைத்தது" என்று ஓர் பிரதியில் இத்திருமுக வரலாறு காணப்படுகிறது' என்பது ஆ. பா. குறிப்பு.

யாம் பார்த்த ஒருபிரதி பூல்ஸ்கேப் ½ பேப்பரில் ஒரு பக்கம் வேறு ஒருவர் கையெழுத்தில் எழுதிக் கல்பட்டு இராமலிங்க சுவாமிகள் கையொப்பமிட்டது.

14. சபை வழிபாட்டு விதி

ஞானசபை வழிபாடு தம் கொள்கைப்படிச் செவ்வையாக நடைபெறாததை அறிந்த அடிகள் ஞானசபை வழிபாட்டையும் பராமரிப்பையும் குறித்துச் சில விதிகளை வகுத்து அருளிய கட்டளை. சங்கம், சாலை, சபை ஆகிய நிலையங்களின் பெயர் மாற்றம் இக்கட்டளையின் முதற் பத்தியில் அறிவிக்கப்பெறுகிறது. "ஞான சபைக் கதவை நேர்ந்த காலத்தில் திறந்து நேர்ந்தவர்களுக்குக் காட்டி மரியாதையில்லாது இருந்ததைப் பற்றி ஷ சங்க பிரபுக்களிலொருவராகிய உத்தரவாத முடைய ஆறுமுக முதலியார் சன்னிதானத்தில் விண்ணப்பித்துக் கொண்டதற்கு வெளியான பத்திரிகை" என்பது ஓர் பிரதியில் கண்ட இத் தெய்வத் திருமுக வரலாறாகும் என்று இதன் வரலாற்றை ஆ. பா. குறிப்பிட்டுள்ளார்.

15. சன்மார்க்க சங்கத்தார் பழக்க விதி

மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையிலும் வடலூர் சத்திய தருமசாலையிலும் இருந்தவர்களை எச்சரித்து அடிகள் விடுத்த அறிவிப்பு.

16. சித்திவளாக விளம்பரம்

"மேற்குறித்த காலத்தில் விருதா வதந்தியால் விசேஷ கூட்டம் நேரப்போவதைப் பற்றி பெருங்கருணையால் சுஹஸ்த லிகிதமாய் அறிவித்த அறிவிப்பு" என்று இதன் வரலாறு ஓர் பிரதியில் காணப் படுவதாக ஆ. பா. குறிக்கிறார். ஆ. பா. பதிப்பிற்குக் கொண்ட பிரதியில் தலைப்பு 'உலக அறிவிப்புப் பத்திரிகை' என்றும் கையொப்பம் 'சிதம்பரம் இராமலிங்க பிள்ளை' என்றும் இருக்கிறது. 'ஞ, அறிவிப்பு' என்ற தலைப்புடன் நாற்பது பக்க நோட்டு அளவு கெட்டித் தாளில் வேறு ஒருவர் எழுத்தில் எழுதி அடியில் சி. இராமலிங்கம் என்று கையொப்பமிட்ட ஒரு பிரதியை யாம் பார்த்திருக்கிறோம்.

17. சித்திவளாக வழிபாட்டு விதி

இஃது சுவாமிகளின் உபதேசத் தெய்வத் திருவாக்காக ஓர் பிரதியில் காணப்படுகிறது என்று ஆ. பா. குறிக்கிறார்.

18. சன்மார்க்க சங்கத்தார்க்கு இட்ட இறுதிக் கட்டளை

இது சுவாமிகள் (திருக்காப்பிட்டுக் கொண்ட காலத்தருளிய) பரமோபதேசத் திருவாக்காக ஓர் பிரதியில் காணப்படுகிறது என்று ஆ. பா. குறித்துள்ளார்.

அழைப்புகள், அறிவிப்புகள், கட்டளைகளாகிய இப்பதினெட்டினையும் எமது இராமலிங்க அடிகள் வரலாற்றில் விரிவாக ஆராய்ந்து விளக்கியுள்ளோம். விளக்கம் விரும்பும் அன்பர்கள் இராமலிங்க அடிகள் வரலாற்றைக் காண்க.

7. விண்ணப்பங்கள்

சன்மார்க்க விண்ணப்பங்கள் நான்கும் ஆறாந் திருமுறை முதற் பதிப்பில் முதன் முதலில் அச்சாயின. பின்வந்த பதிப்புகள் அனைத்திலும் சேர்ந்துள்ளன.

1. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

"சுவாமிகளது தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூலமே இங்கு இதற்கு ஆதாரம். இதற்காகக் கிடைத்த அன்பர்கள் கை எழுத்துப் பிரதிகள் ஆறு. இவற்றுள் இரண்டில் விண்ணப்பத்தின் இறுதியில் 'ஆங்கீரச ஹு வைகாசி மீ 5 ஷ உத்தரஞான சித்திபுரம்' என்றும், வேறொன்றில் 'ஆங்கீரச ஹு வைகாசி மீ' என்றும், மற்றொன்றில் 'ஆங்கீரச ஹு சித்திரை மீ ஞானசித்திபுரம்' என்றும் குறித்திருக்கிறது. ஸ்ரீ மகாதேவ முதலியாரது நோட்டில் இவ்விண்ணப்பத்தைத் தொடர்ந்து "திருநிலைத்து நல்லருளொடும் அன்பொடும்" என்ற

தனிப்பாடல் எழுதியிருக்கிறது. இவ்விண்ணப்பமே சுவாமிகள் எழுதிய முதல் வாசக விண்ணப்பமாக எல்லாப் பிரதிகளிலும் கொண்டிருக்கிறது. இவ்விண்ணப்பத்தின் தலைப்பு சுவாமிகளாலேயே 'திருச்சிற்றம்பலம்' என்பதன் பின் குறிக்கப்பட்டிருக்கிறது'' — என்பது ஆ. பா. அடிக்குறிப்பு.

முதற்பதிப்பு, பொ. சு., பி. இரா., ச. மு. க. பதிப்புகளில் இவ் விண்ணப்பம் நான்காவது விண்ணப்பமாக வைக்கப் பெற்றுள்ளது. முதற் பதிப்பில் இதன் பெயர் சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம். பொ. சு., ச. மு. க. பதிப்புகளில்: சமரச சுத்த சன்மார்க்க சத்திய விண்ணப்பம். பி. இரா. பதிப்பில்: சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்தியச் சிறு விண்ணப்பம். ஆ. பா. பதிப்பில் அடிகளது கையெழுத்து மூலத்தின் சுயவடிவம் போட்டோ எடுத்து பிளாக் செய்து அச்சிடப் பெற்றுள்ளது.

2. சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

''சுவாமிகளது தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூலமே இங்கு இதற்கு ஆதாரம். இதற்காகக் கிடைத்த அன்பர்கள் கை எழுத்துப் பிரதிகள் ஆறு. இது சுவாமிகளின் இரண்டாவது வாசக விண்ணப்பமாக எல்லாப் பிரதிகளிலும் கொண்டிருக்கிறது. இவ்விண்ணப்பத்தின் பெயர் மூலத்தில் சுவாமிகளால் குறிக்கப்படவில்லை'' — என்பது ஆ. பா. அடிக்குறிப்பு. அடிகள் எழுதியருளிய மூலத்தை யாம் பார்த்திருக்கிறோம்.

3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்

'' இங்கு இதற்காதாரம் அன்பர்கள் கை எழுத்துப் பிரதிகள் ஆறு. ''மூன்றாவது அருளிச் செய்த விண்ணப்பம்'' என்று ஸ்ரீ மகாதேவ முதலியாரது பிரதியிலும், 'திருவருட் சமுக விசேஷ விண்ணப்பம்' என்று ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை அவர்களது பிரதியிலும், 'ஞான விண்ணப்பம்' என்று வேறு இரண்டு பிரதிகளிலும், 'இஃது மூன்றாவது வாசக விண்ணப்பம், திருவருட் சமுகத் திருவண்ணத் தருமையினையும் அத் திருவருட் சமுகத்தையடைந்த உண்மை ஞானிகளின் சித்தி வல்லபத்தினது பேரருமையினையுங் கூறுகின்றது' என்று மற்றொன்றிலும் இவ்விண்ணப்பத்தின் தலைப்பில் எழுதியிருக்கிறது'' என்பது ஆ. பா. அடிக்குறிப்பு. பி. இரா. பதிப்பில் இதன் பெயர் 'திருவருட் சமுக விசேஷ விண்ணப்ப மென்னும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்' எனக் காணப்படுகிறது.

4. சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்

"இங்கு இதற்காதாரம் அன்பர்கள் கை எழுத்துப் பிரதிகள் நான்கு. இதன் பெயர் விண்ணப்பத்திலேயே கண்டிருக்கிறது. கிடைத்த பிரதிகளில் இது முன் போந்த மூன்று விண்ணப்பங்களோடு தொடர்ந்து எண்ணப்படாமலிருக்கிறது" — என்பது ஆ. பா. அடிக் குறிப்பு.

முதற் பதிப்பு, பொ. சு., பி. இரா., ச. மு. க. பதிப்புகளில் இது முதலாவது விண்ணப்பமாக வைக்கப் பெற்றுள்ளது. முதற் பதிப்பில் இதன் பெயர்: சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்தியச் சிறு விண்ணப்பம். பொ. சு., ச. மு. க. பதிப்புகளில் சமரச சுத்த சன் மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம். பி. இரா. பதிப்பில்: சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம். இதன் பெயர் சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் என்று மூலத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கையெழுத்துப் பிரதிகள் மூன்றில் விண்ணப்பத்தின் இறுதியில், 'இங்ஙனம் சிதம்பரம் இராமலிங்கம்' என்பது காணப்படுகிறதென ஆ. பா. குறிப்பிடுகிருர். பி. இரா. பதிப்பிலும் 'இங்ஙனம் சிதம்பரம் இராமலிங்கம்' என்று விண்ணப்பத்தின் ஈற்றில் இருக்கிறது.

பின் இணைப்புகள் 1

அடிகள் அருளியவை

வியாக்கியானங்கள்

1. பொன்வண்ணத் தந்தாதி 22-ம் செய்யுள் உரை

'இதற்குக் கிடைத்த பிரதி ஒன்றில் இவ்வியாக்கியானத்தின் தலைப்பில் "சைவ சித்தாந்தப் பெருநெறியோரால் வழங்கும் திருமுறை பன்னிரண்டனுள் பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களி லொன்ருகிய பொன்வண்ணத் தந்தாதி உஉ-ம் பாசுரத்திற்குத் திருவருட் பிரகாச வள்ளலா ரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர் களால் வரைந்துள்ள வியாக்கியானம்" என்றெழுதியிருக்கிறது' என்ற அடிக்குறிப்புடன் இதனை ஆ. பா. முதன் முதலாகப் பதிப்பித் திருக்கிருர்.

2. வேதாந்த தேசிகர் குறட்பா ஒன்றன் உரை

"இஃது உபதேசம் விரும்பிய ஓர் வடகலை வைஷ்ணவர்க்குச் சுவாமிகள் கூறிய வழி வந்ததாகத் தெரிகிறது. இதற்காகக் கிடைத்த பிரதிகள் மூன்று. உரையின் தலைப்பில், ஒன்றில் "திருவறங்கம்,

விசிட்டாத்துவித சித்தாந்தம்'' என்றும், மற்றொன்றில் ''விஷ்ணு பரமான இந்தக் குறள் வெண்பாவுக்குத் திருவருட் பிரகாசப் பெருமானால் விசிஷ்டாத்வைதமாகவும், சிவாத்வைதமாகவும், பௌராணிக சித்தாந்தமாயும் செய்த வியாக்கியானம் என்றும் எழுதியிருக்கிறது'' — என்பது ஆ. பா. அடிக்குறிப்பு. ச. மு. கந்தசாமி பிள்ளையின் திருவருட்பாப் பதிப்பில் இது முதன் முதல் அச்சாகியுள்ளது.

உபதேசங்கள்

அனுஷ்டான விதியும், கணபதி பூஜா விதியும் இறுக்கம் இரத்தின முதலியாருக்கு உபதேசித்தவை. செவ்வாய்க்கிழமை விரத முறை சென்னை ராயல் ஹோட்டல் புதுவை வேலு முதலியார்க்கு உபதேசித்தது.

பின்னிணைப்பாக அச்சிடப் பெற்றுள்ள இரு வியாக்கியானங்களும் மூன்று உபதேசங்களும் சமயஞ் சார்ந்தனவாயிருப்பதால் அடிகளின் ஏனைய சமரச சுத்த சன்மார்க்க உபதேசங்களினின்றும் இவற்றைத் தனிப்படுத்திப் பின்னிணைப்பாக அச்சிடலாம் என்ற எண்ணத்துடன் இவ்வாறு அச்சிடப் பெற்றன. ஆயின் இவற்றை நூலுள் உரிய இடங்களிற் சேர்ப்பதே நேரிதென்று இப்போது (முன்னுரையெழுதும் போது) தோன்றுகிறது. என்னை? அடிகளின் உபதேசங்களிற் சமயஞ் சார்ந்தவை என இவற்றைப் பின்னிணைப்பிற் றள்ளின், ஏனைய வியாக்கியானங்களிலும், உபதேசங்களிலும் ஆங்காங்கே விரவிக் கிடக்கும் சமயக் கருத்துகளை என் செய்வது? எங்கே தள்ளுவது? இக்காரணம் பற்றியே முன்னுரையில் அடிகளின் உரைநடை அருளிச்செயல்களை வரிசையாகக் கூறும்போது இவற்றை உரிய இடங்களிற் குறிப்பிட்டதுமாம்.

பின் இணைப்புகள் 2

அன்பர்கள் எழுதியவை

இவையனைத்தும் அவ்வவற்றின் மூலங்களிலிருந்து முதன் முதலாகப் பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பில் அச்சிடப்பெற்றவை.

இப்பதிப்பைப் பற்றிய சில குறிப்புகள்

மநுச்சோழர் - மனுச்சோழர், அநேக - அனேக, சிநேக - சினேக, அநுக்கிரகம் - அனுக்கிரகம், தநு கரணங்கள் - தனு கரணங்கள், அநுபவம் - அனுபவம், ஆநந்தம் - ஆனந்தம் முதலிய சொற்கள் மூலங்களிலும் முற்பதிப்புகளிலும் பெரும்பாலும் தந்நகரத்துடனும் சிறுபான்மை றன்னகரத்துடனும் காணப்பெறுகின்றன. இப்பதிப்பில் வேறுபாடின்றி றன்னகரமே ஆளப்பெற்றுள்ளது. தந்நகர றன்னகர வேறுபாடுபற்றி அடிகளின் கருத்தை ஒழிவிலொடுக்கப் பதிப்பு, அமைத்துக் கொளலிற் காண்க. பக்கம் 112.

ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தியிலும், மெய்ம்மொழிப்பொருள் விளக்கத்திலும், ஏனைய சில இடங்களிலும் கடினசந்திகள் பிரிக்கப் பெற்றுள்ளன. ஒழிவிலொடுக்கப்பாயிரவிருத்தியில், அருஞ்சொற் பொருள், அடிக்குறிப்புகள், அமைத்துக்கொளல் ஆகிய மூன்றிலும் கொடுக்கப் பெற்றுள்ள எண்கள், செய்யுள் எண்கள்.

மூலங்களிலும் முற்பதிப்புகளிலும் தமிழ் எண்களே உள்ளன. இக்காலத்திற் பலர் அவற்றை அறியார். ஆதலின் அவை இப்பதிப்பில் அரபி எண்களாக அச்சிடப் பெற்றுள்ளன. ஆயினும் அடிகள் எழுத்தாகிய திருமுகங்களில் இம்மாற்றம் செய்யப் பெறவில்லை. தமிழ் எண்களாகவே அச்சிட்டுள்ளோம். அழைப்பு, அறிவிப்பு, கட்டளை களிலும் அவ்வாறே.

திருமுகங்களின் தலைப்பிற் கொடுக்கப் பெற்றுள்ள திருமுகப் பெயர்களும் ஆங்கிலத் தேதியும் பதிப்பாசிரியர் பாலகிருஷ்ண பிள்ளையாலும் இப்பதிப்பாசிரியராலும் கொடுக்கப் பெற்றவை

.........:— இவ்வாறு புள்ளியிட்ட இடங்களில் ஏடு சிதைவு என்று கொள்க.

உபதேசங்களைப் பற்றி ஒரு கருத்து

அனுஷ்டான விதி முதலாகப் பேருபதேசம் ஈறாக அடிகளின் உபதேசங்கள் அனைத்திற்கும் அன்பர்கள் எழுதிவைத்துள்ள குறிப்புகளே மூலங்களாகும். இவற்றிற் சில இடங்கள் ஐயந்திரிபுகளுக்கு இடனாக உள்ளன. ஆதலின் உபதேசங்களிற் காணப்படும் சொற்பொருள்களைக் கொள்ள வேண்டிய முறையைப் பற்றித் திருவருட்பாவின் சிறந்த பதிப்பாசிரியர் பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் கருத்தையும், நம்முடைய கருத்தையும் இங்குக் குறிப்பிடுதல் இன்றியமையாததாம்.

திருவருட்பா, உபதேசப்பகுதி, முன்னுரையில் பதிப்பாசிரியர் பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் "இப்பகுதியில் உள்ள சொற்பொருள்களைக் கொள்ள வேண்டிய முறை" என்ற தலைப்பில் எழுதுவது வருமாறு: "இந்த நூல் முழுவதற்கும் அன்பர்கள் எழுதி வைத்திருப்பனவே மூலமாகும். அடிகளார் ஒரு கால் எழுதியிருந்து, அவ்வெழுத்தினைப் பெயர்த்து எழுதியதாகக் கருதப்படக்கூடிய 1, 2, 9-ஆம் பிரிவுகளில்* பெருந்தவறுகள் குற்றங்கள் குறைகள் நுழைந்திருக்க முடியாது. 7-ம் பிரிவு அடிகளாரின் எழுத்தினின்றும், வாய் மொழியான் கேட்டதினின்றும், அன்பர்கள் நினைத்துக் கொண்டதினின்றும், தொகுத்து எழுதியிருப்பதால், குற்றங் குறைகள் நுழைந்து இடம்பெற வழி உண்டு. ஆனால் 3, 4, 5, 6, 8-ஆம் பிரிவுகளில் அடிகளார் வாய் மொழியான் உபதேசித்தவற்றை நேர்முகமாகக் கேட்டவர்களோ பிறரோ கேள்வி ஞாபகம் கொண்டு அப்போதப்போதோ, சிலபோது கழித்தோ எழுதி வைத்திருப்பனவற்றில் மிகப் பெருந்தவறுகள், குற்றங் குறைகள் நுழைந்து இடம் பெற்றிருத்தல் இயல்பு. எடுத்துக்காட்டாக, மஹோபதேசத்தில் "இதுபோல் வியாகரணம் - தொல்காப்பியம் பாணிநீயம் - முதலியவைகளில் சொல்லியிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதுங் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கிறார்கள்" என்ற இருசொற்பொருள் தொடர்கள் காண்கின்றன. இந்தப்படி அடிகளார் சொல்லியிருப்பார்கள் என்று எவரும் நம்ப மாட்டார்கள். அடிகளார், ஒருகால் தென்மொழி வடமொழி வியாகரண நூல்களிலும் குற்றம் குறைகள் உண்டென்று சொல்லி அவற்றிற்காக

---

* ஆ. பா. பதிப்பில் 1, 2, 9-ஆம் பிரிவுகள்: 1 – அனுஷ்டான விதி, கணபதிபூஜாவிதி, செவ்வாய்க்கிழமை விரதமுறை. 2 – நித்திய கரும விதி. 9 – மூலிகை குண அட்டவணை. 7-ஆம் பிரிவு: திருவருண்மெய்ம்மொழி. 3, 4, 5, 6, 8,-ஆம் பிரிவுகள்: 3 – உபதேசக் குறிப்புகள், 4 – சிறுகுறிப்புகள், 5 – தனிக்குறிப்புகள், 6 – சுப்பிரமணியம், அருள்நெறி, 8 – பேருபதேசம்.

எடுத்துக் காட்டுகள் காட்டியிருந்திருக்கலாம். அதை மேலே திரித்துக் கூறியபடி கேட்டதாகத் தவறுதலாகக் கருதி அன்பர்கள் எழுதியிருப்பார்கள். அடிகளார், தொண்டமண்டல சதகம் சார்பாகத் தொல்காப்பியத்தையும் வடமொழி தென்மொழி இலக்கணங்களில் காணப்பெறாத சிற்சில நுண் இசை இயல்புகளையும் மிகமிக நுட்பமாகக் கையாண்டிருக்கிறார்கள். தவிர, அகரஉயிரின் இலக்கண நியாய விசார வினாக்கள் என்றெடுத்து, 45 வினாவினை எழுப்பிய பின், "என்பன முதலாக இவ்வகர உயிர் ஒன்றற்கே இன்னும் பற்பல இலக்கண நியாய விசார வினாக்கள் உள" என்று எழுதுகிறார்கள். மேலும் இலக்கணப் பத்திரிகை என்றொரு திருமுகமும், அடிகளார் முதலெடுத்துக் கொடுத்தபடி, அவர்கள் முதல் மாணாக்கர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால் இலக்கணச் சொற்கள் கொண்டே இயற்றப்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் திருவருட்பா, வியாக்கியானப் பகுதியில் பரக்கக் காணலாம். ஆகலான் அடிகளார் சொன்னதாக அன்பர்கள் எழுதியிருப்பதை நாம் நேர் நேரே கொள்ளக் கூடாது. இங்ஙனம் "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு", "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் அறிவினைக் கொண்டு ஆராய்ந்தே அவற்றைக் கொள்ளுதல் வேண்டும். அதாவது, அடிகளார் தெய்வத் திருக்கரத்தால் எழுதியிருக்கும் நூல்களுக்குப் பொருத்தமானவற்றைப் பொருத்தமான அளவு கொள்ளுதலும், பொருத்தமில்லாதவற்றைப் பொருத்தமற்ற அளவு தள்ளுதலும், அல்லது பொருத்தப்படும் அளவே கொள்ளுதலும் கடனாம். இக்கருத்தினை இந்நூலின் சிற்சில அடிக்குறிப்புக்களிலும் வற்புறுத்தியிருப்பது காண்க. இந்நூலினைப் பயில்பவர் இதை நன்குணர்ந்து கடைப்பிடிப்பார்களாக".

இவ்வாறு முன்னுரையில் எழுதும் பாலகிருஷ்ண பிள்ளை, பேருபதேசத்திற்கு (மஹோபதேசத்திற்கு) எழுதியுள்ள அடிக்குறிப்பு வருமாறு: "இந்த வாய்மொழி உபதேசத்திற்காகக் கிடைத்தவை நம் இராமலிங்க அடிகளார்க்கு ஆட்பட்டு வதிந்த அன்பர்கள் இருவரின் படிகளாகும். அடிகளார் திருவாய்மலர்ந்த செஞ்சொற்களை அங்ஙனமே - சொல் சிதைவுறாது பொருள் வேறுபடாது - எழுதி வைத்தல் எவர்க்கும் இயலாது, ஆதலால் இதன்கண் காணப்பெறும் சொற்பொருள்களை நேர் நேரே கொள்ளாது, அடிகளாருடைய முடிவான நூல்களொடு முழுவதும் இயைந்து பொருந்துவனவற்றை மட்டும் கொள்ளுதல் அன்பர்களின் ஒன்றான தனிக்கடன் ஆகும். இப்பகுதியில் உள்ள சொற்பொருள்கள் அனைத்திற்குமே இந்நன்னெறி முற்றிலும் அமையும் என்க."

இனி நம்முடைய கருத்து:

'தொல்காப்பியம் பாணிணீயம் முதலியவைகளில் சொல்லியிருக்கிற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே; அவைகளில் குற்றமே சொல்லி யிருக்கின்றார்கள்' என்று அடிகள் கூறியிருப்பரோ? 'முழுவதும் குற்றமே என்று கூறியிரார்? 'குற்றங் குறைகளும் உள்ளன' என்று கூறித் தொண்ணூறு தொள்ளாயிரத்தின் புணர்ச்சி விதிகளின் பொருந்தாமையை எடுத்துக் காட்டியிருக்கக் கூடும். தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்றிற்குத் தொல்காப்பியர் கூறும் புணர்ச்சி விதிகள் பொருந்தாதனவே. இப்பொருந்தாமையை டாக்டர் மு. வரத ராசனார் அவர்கள் மொழியியற்கட்டுரைகள் என்னும் நூலில் பெரியோர் சிறு பிழை என்ற கட்டுரையில் விரிவாக ஆராய்ந்து விளக்கி யுள்ளார். தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகப் பதிப்பில் பதிப்பாசிரியர் தேவ நேயப்பாவாண ரவர்களும் இப்பொருந்தாமையை 445 ஆம் சூத்திரத் திற்கு எழுதிய நீண்ட அடிக்குறிப்பால் விளக்குகிறார். புதுச்சேரி புலவர் சுந்தரசண்முகனார் தொண்ணூறும் தொள்ளாயிரமும் என்று ஒரு சிறு நூலே (30 பக்கங்கள்) எழுதியுள்ளார். 1971 ஜூன் மீ அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் மூன்றாவது கருத்தரங்கிற் படிக்கப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் விரிவே அந்நூல். தொல்காப்பியர் கூறும் புணர்ச்சி விதியின் பொருந்தாமையை ஆசிரியர் அந்நூலுள் விளக்குகிறார். மேலும் அவர் எழுதிய "தமிழ் இலத்தீன் பாலம்" என்னும் நூலிலும் இதனை ஆராய்ந்துள்ளார். இவ்வாறு தொல்காப்பி யத்திற் சில குறைகள் காணப்படுகின்றனவென்பதால் தொல்காப்பியம் முழுவதும் குறையுடையதெனக் கூறவியலாது. அடிகளும் அவ்வாறு கூறியிரார். தொல்காப்பியம் போன்ற சிறந்த நூல்களிலும் குறைகள் உள எனக்கூறித் தொண்ணூறு தொள்ளாயிரத்தை எடுத்துக்காட்டி யிருப்பார். இவற்றைக் கேட்ட அன்பர்கள் 'முழுவதும் குற்றமே' என்று சற்று அதிகப்படியாகக் குறித்து வைத்துவிட்டனர் என்றே கருதவேண்டும். 'தேவாரம் திருவாசகம் முதலிய உண்மைநூல்களிலும் சில வழுக்கள் காணப்படுகின்றனவே? தேவரீர் அருளிய வாசகத்திலும் செய்யுளிலும் விளங்காத இடங்கள் உள்ளனவே'? என்று ஆனந்த நாத சண்முக சரணாலய சுவாமிகள் கேட்டதற்கு அடிகள் கூறிய சமாதானமும் (பக்கம் 502), சமயநூல்களில் பிழை என்ற உபதேசக் குறிப்பும் (பக்கம் 274) இங்கு காணத்தக்கன.

தொல்காப்பியத்தைப் பற்றியதாவது நமக்கு விளங்கக் கூடியது. நமக்கு விளங்காத புதிய செய்தியொன்று உபதேசக் குறிப்பில் உள்

ளது. 'சமய நூல்களின் உண்மை', 'புராண ஹிருதயம்', 'சமயநூல் உண்மை' என்னும் தலைப்புகளில் மூன்று குறிப்புகள் உள்ளன. பக்கம் 273 பார்க்க. அறுபத்து மூன்று நாயன்மார்களும் மாணிக்க வாசகரும் மனிதரல்லர்; தத்துவங்களே; தேவார திருவாசகங்கள் அவர்கள் பாடியனவன்று; பிற்காலத்தில் யாரோ பாடி அவர்கள் பேரில் ஏற்றிவிட்டார்கள் எனக் கூறப் பெற்றிருக்கிறது. அடிகள் இவ்வாறு கூறியிருப்பரோ? சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வர்க்கும் நான்கு மாலைகள் பாடும் அடிகள், அவற்றில் அவர்களையெல்லாம் மனிதர்களாகக் கருதியே பாடுகின்றார். தத்துவங் களாகக் கருதிப் பாடியதாகத் தோன்றவில்லை. நால்வரும் நான்கு தத்துவங்களை விளக்க வந்தவர்கள், அவர்களது வாழ்க்கை நிகழ்ச்சி களெல்லாம் தத்துவ விளக்கங்களே என்று அடிகள் கூறியிருக்கக் கூடும். கேட்ட அன்பர்கள், நால்வரும் தத்துவங்களே என்று எழுதி யிருப்பர். இன்னும் நூறு இருநூறு ஆண்டுகளுக்குப் பின், ஒருவர் "வள்ளலார் இராமலிங்க அடிகள் மனிதரல்லர்; அப்படி ஒருவர் இருந்ததில்லை, வள்ளலார் என்பது ஒரு தத்துவம், திருவருட்பா அவர் பாடியதன்று, வடலூரில் சத்திய தருமசாலையும், சத்தியஞானசபை யும் அவர் நிறுவியனவன்று, யாரோ இவற்றைப் பாடியும் ஏற்படுத்தி யும் வள்ளலார் பேரில் ஏற்றி வழங்க விட்டுவிட்டனர்," என்று கூறப் புகுந்தால் என்னுவது?

இனி இன்னொரு வகையாகச் சிந்திக்கவும் இடமிருக்கிறது. புராண விஷயங்கள் பலவற்றிற்குத் தத்துவப்பொருள் கூறுகின்றார் அடிகள். அவ்வாறு கூறும் அடிகள் இவ்வாறு இதனையும் கூறியிருப் பினும் வியப்பதற்கில்லை. அடிகள் போன்ற கடந்த மேல்நிலையில் உள்ளவர்களது திருவுள்ளக் கருத்தை நம்போலியர் எங்ஙனம் அறிய இயலும். சன்மார்க்க சங்கம் விளங்குங் காலம் என்னும் அறிவிப்பில் (பக்கம் 429) 'இஃது தூற்றுமல் வைக்க' என்றும், 'இது விஷயத்திற் றருக்கஞ் செய்யப்படாது, உண்மை' என்றும் அடிகள் கூறுகின்றார். நமக்கு விளங்காதனவற்றைத் தூற்றுமல் வைப்பதும் அவற்றின் விஷ யத்தில் தர்க்கஞ் செய்யாதிருப்பதுமே அபசாரத்திற் கிடமில்லாததாம். விளங்காத பொருளை விளங்கவைக்க வேண்டுமென்று திருவருளிடத்து விண்ணப்பிப்பதும் செய்யத்தக்கதாம். இன்று விளங்காதன நாளையோ, மற்றோ விளங்குதல், திருவருட்டுணையானும் நமது பக்குவ முதிர்ச்சி யானும் கூடுமாதலின். அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன், வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்.

அடிகளின் பன்முகஞானம்

சேக்கிழார் நூலாசிரியரும், உரையாசிரியரும், போதகாசிரியரும், ஞானசிரியரும் ஆவரெனத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் பாடியுள்ளார்.

நாடிய விரிநூல் சொற்றிடு திறனல் நன்னூலா சிரியன்
நகுபா சுரமுத லுரைசெய் தலினல் நவிலுரை யாசிரியன்
நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய்
நிலையாற் போத காசிரி யன்னிவை நிகழ்தொறு நிகழ்தொறும்
ஆடிய ஞானத் திறனுற லான் ஞானசிரி யனுநீ யென்
றுன்றோர் பலரும் புகழப் படுபவ வகில மெலாஞ் சென்று
கூடிய புகழ்சால் குன்றத் தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி.

- சப்பாணிப் பருவம் 9

நம் அடிகளோ, நூலாசிரியரும், உரையாசிரியரும், போதகாசிரியரும், ஞானசிரியரும் ஆதலொடு பதிப்பாசிரியரும் பத்திரிகாசிரியரும் ஆவார். இவ்வாறு பல்வகை ஆசிரியராய் விளங்கியதோடன்றி வியாக்கியான கர்த்தரராய், சித்தமருத்துவராய், சீர்திருத்தவாதியாய், அருட்கவிஞராய், இவை இத்தனைக்கும் மேலாக அருண் ஞானியாய் அடிகள் விளங்கினர்.

நூலாசிரியர்

மனு முறைகண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூல்களை இயற்றியமையான் நூலாசிரியர்.

உரையாசிரியர்

ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி, தொண்டமண்டல சதகத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல் உரை முதலியவற்றைச் செய்தமையான் உரையாசிரியர்.

பதிப்பாசிரியர்

ஒழிவிலொடுக்கம், தொண்டமண்டல சதகம், சின்மயதீபிகை ஆகியவற்றைப் பதிப்பித்தமையான் பதப்பாசிரியர்.

பத்திரிகாசிரியர்

சன்மார்க்க விவேகவிருத்தி என்னும் பத்திரிகையைத் தொடங்கியமையான் பத்திரிகாசிரியர்.

போதகாசிரியர்

தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், கிரியாயோக சாதகராகிய பண்டார ஆறுமுக ஐயா, பொன்னேரி சுந்தரம் பிள்ளை, காயாறு ஞானசுந்தர ஐயர் ஆகிய பலருக்குப் பாடஞ் சொன்னமையான் போதகாசிரியர்.

ஞானசிரியர்

திருவருண் ஞானத்தை அனைவர்க்கும் வாரிவழங்கியமையான் ஞானசிரியர்.

வியாக்கியானகர்த்தர்

உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம், தமிழ் என்னும் சொல்லுக்கிட்ட உரை முதலிய வியாக்கியானங்களைச் செய்தமையான் வியாக்கியானகர்த்தர்.

சித்தமருத்துவர்

தாமே பல மருந்துகளைச் செய்து பிணியாளர் பலருக்குக்கொடுத்து நோய் தீர்த்ததோடன்றிச் சிலருக்குக் கடித வாயிலாக மருந்து எழுதியது, மருந்துச் சரக்குகளின் குண அட்டவணை எழுதியது ஆகியவற்ருன் சித்தமருத்துவர்.

மருத்துவத்தோடன்றி ரசவாதத்திலும் அடிகள் வல்லவர். வைத்தியம், வாதம், யோகம், ஞானம் இவை ஒன்றுக் கொன்று தொடர்புடையவை. நம் நாட்டுச் சித்தர்கள் இவற்றில் வல்லவர்கள். அடிகளும் வல்லவர். பொன்செய்யும் வகையை இறைவன் தமக்கு உணர்த்தினன் என அடிகள் ஒரு பாடலிற் கூறுகின்ருர். திருவருட்பா 3962 காண்க. இந்நூலுள் ரசவாதம் என்ற உபதேசக் குறிப்பையும் (பக்கம் 330), பொன்விளைவு என்ற திருமுகத்தையும் (பக்கம் 401) காண்க. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த வேருெரு திருமுகத்தில் "தற்காலம் ஒருவகை முயற்சி நிமித்தம் சுமார் நடுவ வராகனெடை பொன் வேண்டுவது. அவை நஷ்டமாகாது, விருத்தியேயாகும். இவையும் சிவபுண்ணியம் பற்றியே" என்றெழுதியுள்ளதுமுண்டு. பொன் செய்யும் ஆற்றலை ஒரு பேருகவே அடிகள் கூறுகின்ருர். ஏமசித்தி என்னும் அப்பேற்றைச் 'சாகாக்கலை ஆராய்ச்சி' பக்கம் 158-ல் காண்க.

சீர்திருத்தவாதி

இன்று துறைதோறும் துறைதோறும் தோன்றியுள்ள பல சீர்திருத்தங்களுக்கு வித்திட்டவர் அடிகளே. அடிகளின் தோற்றத்திற்கு முன் தமிழ்நாடு இருந்த நிலைவேறு. அடிகளின் தோற்றத்திற்குப் பின் தமிழ்நாடு உள்ள நிலை வேறு.

சென்ற பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியிலும் இவ்விருப தாம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் சைவசமயத்தில் பல சீர்திருத் தங்கள் தோன்றின. 'சீர்திருத்தச் சைவம்' என்ருென்று தோன்றிற்று. மறைமலையடிகளும் திரு. வி. கலியாணசுந்தரனரும் தங்களைச் சீர் திருத்தச் சைவர் எனச் சொல்லிக் கொள்வதில் பெருமையடைவர். சீர்திருத்தச் சைவம் தோன்றற்குக் காரணர் அடிகளே. அடிகளின் சமரச சுத்த சன்மார்க்கம் தோன்றிலதேல் சீர்திருத்தச்சைவம் தோன்று வதெங்கே? சமயத் துறையில் மட்டுமின்றிச் சமூக வாழ்விலும் பெரும் மாறுதல்களும் சீர்திருத்தங்களும் அடிகளால் ஏற்பட்டன.

இதுவரை உலகில் தோன்றிய சீர்திருத்தவாதிகளுள் தமக்கு ஒப்பும் உயர்வும் அற்றவர் அடிகளே. சீர்திருத்தத்தில் அடிகள் யாருக்கும் பின்னிற்பவர்-இரண்டாமவர்-அல்லர். அடிகள் கூறிய சீர்திருத்தங்கள் பல அதுவரை யாராலும் கூறப்பெருதவை. பின்னும் இதுவரை யாராலும் கூற்ப்பெருதவை. சீர்திருத்த வானில் அடிகள் ஒரு சூரியன். அவரை எட்டிப்பிடித்தல் இயலாது. எடுத்துக்காட்டாக ஒன்று கூறுவோம். கணவன் இறந்தால் மனைவி தாலி அறுக்க வேண்டாம் என்பது அடிகள் கூறிய சீர்திருத்தங்களுள் ஒன்று.

இத்தகைய சீர்திருத்தங்களைச் சொன்னுர் வேறு யார்? அடிகள் சாதாரண சீர்திருத்தவாதி யல்லர்; சீர்திருத்தவாதிகளுக் கெல்லாம் சீர்திருத்தவாதி.

அருட்கவிஞர்

அடிகள் அருட்கவிஞர் என்பதைப் பலவாறு எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? அதற்கு அவர் அருளிய 'திருஅருட்பா' வொன்றும் போதாதோ?

அருண்ஞானி

அடிகள் அருள்ஞானி என்பதற்குப் பற்பல பகர்தல் வேண்டுமோ? 'திருஅருட்பிரகாச வள்ளலார்' என்று அவர் பெற்ற பேரொன்றும் போதாதோ?

பொதுவாக, நூல்செய்ய வல்லார் உரைசெய்ய வல்லாரா யிருப்ப தில்லை. உரைசெய்ய வல்லார் நூல் செய்ய வல்லாரா யிருப்பதில்லை. செய்யுள் வல்லார் உரைநடை வல்லாரா யிருப்பதில்லை. உரைநடை வல்லார் செய்யுள் வல்லாரா யிருப்பதில்லை. இயல் வல்லார் இசை வல்லாரா யிருப்பதில்லை. இசைவல்லார் இயல் வல்லாரா யிருப்ப தில்லை. இலக்கியம் வல்லார் இலக்கணம் வல்லாரா யிருப்பதில்லை. இலக்கணம் வல்லார் இலக்கியம் வல்லாரா யிருப்பதில்லை. சமயநூல்

வல்லார் இலக்கணவிலக்கிய வல்லாரா யிருப்பதில்லை. இலக்கண விலக்கியம் வல்லார் சமய நூல் வல்லாரா யிருப்பதில்லை. இலக்கண விலக்கியம் வல்லாராயிருப்போர், சமய நூல் வல்லாராயிருப்போர் அவற்றைப் பாடஞ் சொல்ல வல்லாரா யிருப்பதில்லை. எழுத்து வல்லார் பேச்சு வல்லாரா யிருப்பதில்லை. பேச்சுவல்லார் எழுத்து வல்லாரா யிருப்பதில்லை. அருளியல் வல்லார் உலகியல் வல்லாரா யிருப்பதில்லை. உலகியல் வல்லார் அருளியல் வல்லாரா யிருப்பதில்லை. இவ்வாறு ஒன்றில் வல்லார் பிறிதொன்றில் வல்லாரல்ல ராதலையே யாண்டும் காண்கிறோம். அன்றும் காண்கிறோம். இன்றும் காண்கிறோம். சென்ற நூற்றாண்டிலே - அடிகள் காலத்திலே - நூல் செய்தல், உரைசெய்தல், பாடஞ்சொல்லுதல், பதிப்பித்தல், என்னும் துறைகளுள் ஒவ்வொன்றில் வல்லாரே பலராக இருந்தனர். ‘ இயற்றமிழாசிரியர் ’ என்றே சிலர் வழங்கப்பெற்றதைக் காணலாம். ஒன்றின் மேற்பட்ட துறைகளில் வல்லார் மிகச்சிலரே.

அடிகள் ஒருவரே செய்யுள்நூல் செய்தல், உரைநடை செய்தல், செய்யுள் நூல்களுக்கு உரை செய்தல், பாடஞ்சொல்லல், பதிப்பித்தல் எனும் பலதுறைகளிலும் வல்லராய் மொழிப்புலமை மட்டுமே யன்றி மருத்துவம் முதலிய கலைப்புலமையும் வல்லராய் இவையனைத்தினுக்கு மேற்பட்ட அருட்புலமையும் முற்றினராய்ப் பன்முகஞானத்தோடு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கினர்.

பலவற்றில் முதன்மையும் தனிச்சிறப்பும்

முற்கூறியவாறு நூலாசிரியராய், உரையாசிரியராய், பதிப்பாசிரியராய், பத்திரிகாசிரியராய், போதகாசிரியராய், ஞானசிரியராய், வியாக்கியான கர்த்தராய், சித்தமருத்துவராய், சீர்திருத்தவாதியாய், அருட்கவிஞராய், அருண்ஞானியாய்ப் பன்முகஞானத்தோடு விளங்கிய அடிகள், பலவற்றில் முதல்வராயும் தனிச்சிறப்புடையராயும் திகழ்ந்தார்.

பலவற்றில் முதன்மை

தமிழ்நாட்டில் பொது மக்களுக்கு முதன்முதலாகத் திருக்குறள் வகுப்பு நடத்தியவர் அடிகளே.

தமிழ்நாட்டில் முதன்முதலாக முதியோர் கல்வியை எற்படுத்தியவர் அடிகளே.

தமிழ்நாட்டில் முதன் முதலில் மும்மொழிப் பாடசாலை (தமிழ், வடமொழி, ஆங்கிலம்) நிறுவியவர் அடிகளே.

தமிழ் நாட்டின் முதல் கல்வெட்டாராய்ச்சியாளர் அடிகளே.

தனிச்சிறப்பு


தமது கொள்கைக் கென்று ஒரு தனி மார்க்கத்தைக் கண்டவர் அடிகளே.

தமது மார்க்கத்திற் கென்று ஒரு தனிச் சங்கத்தை நிறுவியவர் அடிகளே.

தமது மார்க்கத்திற் கென்று ஒரு தனிக் கொடி கண்டவர் அடிகளே.

தமது மார்க்கத்திற் கென்று ஒரு தனி மந்திரம் கண்டவர் அடிகளே.

தமது மார்க்கத்திற் கென்று ஒரு தனிச் சபையையும் கட்டியவர் அடிகளே.



அடிகளின் கையொப்பம்

சிதம்பரம்
இராமலிங்கம்

என இரண்டு வரிகளாகவும் கையொப்பமிடுவர்.

இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த 6ஆம் திருமுகம்
அடிகள் திருக்கரஞ்சாத்தியவாறு

பக்கம் 1

சிவமயம்.

[illegible] இரத்தின முதலியாருக்கு
அம்பலவாணர் அருள் [illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]


[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
இனி [illegible]
[illegible]

பக்கம் 2

[illegible]

[illegible]

பக்கம் 4




சிவமயம்


அன்பு அறிவு முதலிய
கல்யாணகுணங்களிற் சிறந்து - சிவநேசச்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அவ்விடத்திய சுகசெய்தி
[illegible]
கேட்க விரும்புகின்றேன்


[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]






பக்கம் 4



இருக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த 24ஆம் திருமுகம்
அடிகள் திருக்கரஞ்சாத்தியவாறு


பக்கம் 1



[illegible]

[illegible]

பக்கம் 4





இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த 29ஆம் திருமுகம்
அடிகள் திருக்கரஞ்சாத்தியவாறு

பக்கம் 1

[illegible]

பக்கம் 2





திருவருட்பிரகாச வள்ளலார்

தோற்றம் : 5-10-1823 சித்தி 30-1-1874

உரை நடை நூல்கள்

1. மனு முறைகண்ட வாசகம்

2. ஜீவகாருண்ய ஒழுக்கம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

1. மனு முறைகண்ட வாசகம்

காப்பு

நேரிசை வெண்பா

அன்ன வயல்சூழ் அணியாரூர் வாழ்மனுவாம்
மன்னன் முறைகண்ட வாசகத்தைப் — பன்னுதற்கு
நேய மிகத்தான் நினைப்போர்க் கருள்புழைக்கைத்
தூய முகத்தான் துணை.

கங்கைச் சடையான்முக் கண்ணுடையான் அன்பர்தம்முள்
அங்கைக் கனிபோல் அமர்ந்திருந்தான் — அங்கை
முகத்தான் கணங்கட்கு முன்னின்றான் மூவாச்
சுகத்தான் பதமே துணை.

கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுஞ் சிறப்புடையதாய், காவிரி என்னுந் தெய்வத்தன்மையுள்ள நதியினால் எந்தக் காலத்திலுங் குறைவுபடாத நீர்வளப்ப முடையதாய் வாழைச்சோலை, பலாச்சோலை, மாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்க, அசோகு, குருக்கத்தி, சண்பகம், பாதிரி முதலான விருக்ஷங்களால் நெருங்கி, வண்டுகள் பாடுகின்ற மலர்ச்சோலைகளும், தாமரைத் தடாகங்களும், நீர் நிறைந்து அல்லி நீலம் முதலான புட்பங்கள் மலர்கின்ற ஓடைகளும், பொய்கைகளும், ஏரிகளும், குளங்களும் பலவிடங்களிலு முள்ளதாய், செந்நெல் முதலாகிய பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய வயல்கள் நெருங்கி யுள்ளதாய், சிதம்பரம், பஞ்சநதம், மத்தியார்ச்சுனம், சம்புகேச்சுரம் முதலான திவ்வியக்ஷேத்திரங்கள் இடையிடையி லுள்ளதாய், இல்லற தருமத்தில் எள்ளளவும் பிழைபடாது செல்வத்திலும் கல்வியிலும் நிறைவுள்ள குடிகளுக்கிடமானதாய், பல வளப்பங்களுங் கொண்டு பூமிதேவிக்கு முகம்போல விளங்குகின்ற சோழதேசத்தில்; பாதாளலோகத்தைப் பார்த்திருக்கின்ற ஆழமுள்ள அகழியினாற் சூழப்பட்டு, இந்திரலோகத்தை எட்டிப்பார்க்கின்ற உன்னதமுள்ள கோபுரங்களையுடைய மதிலும், உய்யானம் நந்தவனம் பூஞ்சோலை முதலான

வைகளும், தெய்வதீர்த்தம், பிரமதீர்த்தம், வசந்தவோடை, செங்குவளை யோடை முதலான நீர்நிலைகளு முள்ளதாய், தேர்நிலைகள், யானைக் கூடங்கள், குதிரைப்பந்திகள், சேனையிடங்கள், ஆஸ்தானமண்டபம், அரசமண்டபம், விசித்திரமண்டபம், விநோதமண்டபம், நியாய மண்டபம், நிருத்தமண்டபம், கல்விமண்டபம், கணக்கறிமண்டபம், பாடல்மண்டபம், பரிசனமண்டபம், சித்திரமண்டபம், தேவாசிரிய மண்டபம், சித்திரத்தெற்றி, சிலம்பக்கூடம், ஆயுதசாலை, அமுதசாலை, அறச்சாலைகளும் உடையதாய், ரத்ன பீடிகைகளும், கனக மாளிகை களும், பளிங்கு மாடங்களும், மணிப்பந்தல்களும், மகரதோரணங்களும், மங்கல கோஷங்களுமுள்ள கடைவீதி, கணிகையர்வீதி, சூத்திரர்வீதி, வைசியர்வீதி, அரசர்வீதி, அந்தணர்வீதி, ஆதிசைவர்வீதி, சைவர் வீதி, வைதிகர்வீதி, தபோதனரிருக்கை, சைவமுனிவர்மடம், உட் சமயத்தார் உறையுள் முதலான வளப்பங்களை உடையதாய், தியாக ராஜப்பெருமான் எழுந்தருளிய கமலாலயம் என்னும் திருக்கோயிலை உள்ளே உடையதாய், சோழராஜர்கள் பரம்பரையாக அரசாட்சி செய்வதற்கு உரிய ராஜதானியாய், நிலமகள் திருமுகத்திலிட்ட திலகம் போல் விளங்கிய திருவாரூர் என்கிற நகரத்தில்; மூன்று சுடர்களிலும் முதற்சுடராகிய மேன்மையடைந்த சூரியகுலத்திற் பிறந்து அர சாட்சி செய்துவந்த சோழராஜர்களில் சிறந்தவராய், அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவராய், உயிருக்கு உறுதியைத் தருகின்ற நல்ல கேள்விகளை யுடையவராய், எல்லா உயிர்களுக்கும் இதஞ் செய்கின்றவராய், வேதமோதுதலும், யாகஞ்செய்தலும், இரப் பவர்க்கீதலும், பிரஜைகளைக் காத்தலும், ஆயுதவித்தையில் பழகுதலும், பகைவரை அழித்தலும் என்னும் ஆறு தொழில்களும், வீரமுள்ள சேனைகளும், செல்வமுள்ள குடிகளும், மாறுத பொருள்களும், மதி நுட்பமுள்ள மந்திரியும், அன்புள்ள நட்பும், பகைவரால் அழிக்கப் படாத கோட்டையும் உடையவராய், வழக்கை அறிவிப்பவரையும் தங் களுக்குள்ள குறையைச் சொல்லிக்கொள்பவரையும் இலேசிலே தமது சமுகத்துக்கு அழைப்பித்து அந்த வழக்கைத் தீர்த்தும் அக்குறையை முடித்துங் கொடுப்பவராய், பாலொடு பழஞ்சேர்ந்தாற்போல முக மலர்ச்சியோடு இனியவசனஞ் சொல்லுகின்றவராய், பின்வருவதை முன்னே அறிந்துகொள்வதும் உறவினர், அயலார், சினேகர், பகைவர், இழிந்தோர், உயர்ந்தோர் முதலான யாவரிடத்தும் காலவேற்றுமையாலும் குணவேற்றுமையாலும் உண்டாகின்ற நன்மை தீமைகளை உள்ளபடி அறிந்துகொள்வதுமாகிய விவேகமுள்ள வராய், அகங்காரம் காமம் கோபம் லோபம் மோகம் பொறாமை வஞ்சகம் டம்பம் வீண் செய்கை முதலான குற்றங்களைத் தினையளவுங் கனவிலும் காணுதவராய், துர்க்குணங்களையுடைய சிறியோர்களைச் சேர்த்துக் கொள்வதை மறந்தாயினும் நினையாமல்

நற்குணங்களில் நிறைந்து செய்வதற்கு அரிதான செய்கைகளையுஞ் செய்து முடிக்கவல்ல பெரியோர்களைச் சகாயமாகக்கொண்டு செய்யத் தக்க காரியங்களைத் தெரிந்து செய்தும், செய்யத்தகாத காரியங்களைத் தெரிந்து விடுத்தும், பகைவலியும் தன்வலியும் துணைவலியும் காலநிலைமையும் இடநிலைமையும் அறிந்து காரியங்களை நடத்தியும், அடுத்தவர்களது குணம் வல்லமை ஊக்கம் முதலான தன்மைகளை ஆராய்ந்து தெளிந்து அவரவர் தரங்களுக்குத் தக்க உத்தியோகங்களை அவரவர்க்குக் கொடுத்தும், பழமைபாராட்டியும், சுற்றந்தழுவியும், கண்ணோட்டம் வைத்தும், சாதியியற்கை, ஆசிரமவியற்கை, சமயவியற்கை, தேசவியற்கை, காலவியற்கை முதலான உலகியற்கைகளை அறிந்து அவ்வவற்றிற்குத் தக்கபடி ஆராய்ந்து செய்தும் நல்லொழுக்கத்துடன் நடப்பவராய், குடிகளுக்கு அணுவளவு துன்பம் நேரிடினும் அதை மலையளவாக எண்ணித் தமக்கு வந்ததுபோல் இரக்கங்கொண்டு மனமுருகுவதனால் தாயை யொத்தவராய், அத் துன்பத்தைவிட்டு இன்பத்தை அடையத்தக்க நல்வழியை அறியும்படி செய்விப்பதனால் தந்தையை யொத்தவராய், அவர்களுக்கு அந்த நல்வழியைப் போதித்து அதிலே நடத்துகின்றபடியால் குருவை யொத்தவராய், அந்தக் குடிகளுக்கு இகபர சுகத்தைக் கொடுப்பதற்கு முன்னின்று அது பற்றி முயற்சி செய்யும்போது வரும் இடையூறுகளை நீக்குகின்றபடியாலும் அந்த ஒழுக்க வழியிலிருந்து தவறினால் அந்தக் குற்றத்துக்குத் தக்க தண்டனை விதித்து அவ்வழியில் பின்னும் நடத்துகின்ற படியாலும் தெய்வத்தை யொத்தவராய், குடிகளுக்கு ஆபத்து நேரிடும்போது கட்டியவஸ்திரம் அவிழ்ந்தவன் கைபோல் உடனே அந்த ஆபத்திலிருந்து நீங்கும்படி கைகொடுப்பதினால் சினேகனை யொத்தவராய், நல்லகாரியமிது கெட்ட காரியமிது என்று காட்டுகிறபடியால் கண்போன்றவராய், குடிகளுக்கு அச்சம் அவலம் முதலானவை நேரிடாமல் காத்து வருதலால் உயிர் போன்றவராய், குடிகள் தம்மை நினைக்குந்தோறும் ‘ இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகளையுடைய புண்ணியமூர்த்தியை அரசனாகப் பெற்ற நமக்குக் குறையொன்றும் இல்லை ’ என்று களிக்கின்றபடியால் பொன்புதையலை யொத்தவராய், கைம்மாறு வேண்டாது கொடுத்தலால் மேகத்தை யொத்தவராய், அறிவே ஆயிரங் கண்களாகவும் கைகளே கற்பகமாகவும் கண்களே காமதேனுவாகவும் திருமுகமே சிந்தாமணியாகவும் மனோதிடமே வச்சிராயுதமாகவுங் கொண்டபடியால் இந்திரனை யொத்தவராய், சிங்காதனமே செந்தாமரையாகவும் அறம்பொருள் இன்பம் வீடென்னும் நான்கு பொருளும் அடைதற்குரிய நான்கு மார்க்கமே நான்குமுகமாகவுங்கொண்டு அந்தந்த மார்க்கங்களில் அந்தந்தப் பொருள்களை விருத்தி பண்ணுகிறபடியால் பிரமனை யொத்தவராய், ஆக்கினைசக்கரமே சக்கராயுதமாகவும் செங்கோலே திருமகளாகவும் சிறந்த பெரும்புகழே திருப்பாற்கடலாகவும் யுக்தமல்லாத காரியங்

களை யொழிந்திருப்பதே யோகநித்திரை யாகவுங் கொண்டு மண்ணுலகிலுள்ள உயிர்களைக் காத்து வானுலகிலுள்ள தேவர்களுக்கு யாகங்களால் அமுது கொடுத்து வருகின்றபடியால் திருமாலை யொத்தவராய், சோர்வில்லாமை தூய்மை வாய்மை என்னும் மூன்றுமே மூன்று கண்களாகவும் துணிவுடைமையே சூலமாகவுங் கொண்டு பாவங்களை யெல்லாம் நிக்கிரகஞ் செய்து வருகின்றபடியால் உருத்திர மூர்த்தியை யொத்தவராய், வாட்டத்தை நீக்கி மகிழ்ச்சி செய்கின்ற அருளுள்ள படியால் அமுதத்தை யொத்தவராய், சிவபக்தியில் மிகுந்தவராய், பொறுமையில் பூமியை யொத்தவராய், தருமமே உருவாகக் கொண்டு நடுநிலையிலிருந்து மனுநீதி தவறாது விளங்கிய மனுச்சோழர் என்னும் பெயரையுடைய சக்கரவர்த்தியானவர், கலிங்கர் குலிங்கர் வங்கர் கொங்கர் அச்சியர் கொச்சியர் தெங்கணர் கொங்கணர் தெலுங்கர் முதலான தேசத்தரசர்களெல்லாம் திறைகட்டி வணங்க, உலக முழுவதையும் ஒருகுடை நிழலில் வைத்துச் செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்யுங்காலத்தில்: உலகமெங்கும் புலியும்பசுவும் கூடிப்போய் ஒரு துறையில் நீர்குடித் துலாவியும், சிங்கமும் யானையும் சேர்ந்து திரிந்தும், பருந்துங் கிளியும் பழகி மகிழ்ந்தும், கூகையுங் காகமும் கூடிப் பறந்தும், பூனையும் எலியும் பொருந்தி யிருந்தும், இந்தப்படி மற்றுமுள்ள விரோதமாகிய உயிர்களும் ஒன்றுக் கொன்று விரோதமில்லாமல் சினேகஞ்செய்து வாழ்ந்திருக்கவும், மரங்கள் புல்லுகள் முதலான நடையில்லாத உயிர்களும் வாடுதல் உலர்தல் உதிர்தல் வெட்டுண்ணல் முதலான குறைகளில்லாமல் வளர்ந்தோங்கி வாழ்ந்திருக்கவும், பெருங்காற்று பெருவெள்ளம் பெருமழை தீப்பற்றல் இடி விழுதல் முதலான உற்பாதங்கள் சிறிதுமில்லாமல் சுகுணமான காற்றும் மிதமான வெள்ளமும் பருவமழையும் தவறாமல் உண்டாயிருக்கவும், பசிநோய் உடம்புநோய் அவமிருத்து உயிரச்சம் முதலான துக்கங்களொன்றும் சேராமல் சுகமே சூழ்ந்திருக்கவும், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்கின்ற ஜாதியாரும், பிரமசாரி கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நியாசி என்கின்ற ஆசிரமத்தாரும், சைவர் வைணவர் வைதிகர் என்கின்ற சமயத்தாரும், தங்கள் தங்களுக்குரிய ஆசாரங்களில் குறைவுபடாமல் வாழ்ந்திருக்கவும், அன்னதானம் சொர்ணதானம் கோதானம் பூதானம் முதலான தானங்களும் தேவாலயங் கட்டுவித்தல் திருக்குளமெடுத்தல் செழுஞ்சோலை வைத்தல் தண்ணீர்ப்பந்தல் வைத்தல் சத்திரங் கட்டுவித்தல் முதலான தருமங்களும், சாந்திராயண முதலான விரதங்களும், தியானஞ்செய்தல் ஜெபஞ்செய்தல் முதலான தவங்களும் தவறுபடாமல் ஓங்கியிருக்கவும், தியாகேசப் பெருமானுக்கும் மற்றுமுள்ள தெய்வங்களுக்கும் திரிகால பூசைகளும் திருப்பணிகளும் திருவிழா முதலான சிறப்புகளும் குறைவில்லாமல் நடக்கவும் அவரது ஆக்கினையே செய்வித்து வந்தது.

அவர் ஆளுகைக்குட்பட்ட உலகங்களில், பூவே பறிபடுவது, புனலே சிறைபடுவது, காற்றே அலைபடுவது, கல்லே கடின முடையது, மாவே வடுப்படுவது, வாழையே குலைபடுவது, வண்டே மதுவுண்பது, பந்தே அடிபடுவது, பரியே கட்டுண்பது, நெல்லே குத்துண்பது, நெற்கதிரே போர்படுவது, வயலே வளைபடுவது, மாதரிடையே குறைபடுவது. தரித்திரமே தரித்திரப்படுவது, துக்கமே துக்கப்படுவது பொய்யே பொய்படுவது. இவையல்லாமல், பொருள் பறிக்கப்படுவோரும், சிறைச்சாலையில் வைக்கப்படுவோரும், பகைவரால் அலைக்கப்படுவோரும், கடின மனமுள்ளவர்களும், வடுப்படுவோரும், குலைபடுவோரும், மதுவுண்போரும், அடிபடுவோரும், கட்டுண்போரும், குத்துண்போரும், போரிற்படுவோரும், வளைபடுவோரும், குறைபடுவோரும், தரித்திரப்படுவோரும், துக்கப்படுவோரும், பொய்படுவோரும் வேறேயில்லாமல் மேன்மையே விளங்கியிருந்தது.

இந்தப் பிரகாரமாக மந்திரி முதலான உறுதிச் சுற்றங்களுடன் உலகாண்டிருந்த அம் மனுச்சோழரென்னும் சக்கரவர்த்தியானவர் புத்திரப் பேறில்லாமல் மனம் வருந்தி அதுபற்றியும் அறுபது வருஷ காலமாக அனேக தானங்களும் தருமங்களும் யாகங்களும் விரதங்களுஞ் செய்தும் புத்திரோற்பத்தி இல்லாமையால், "புத்திரச் செல்வம் பெறாதவர் பொருட்செல்வம் பெற்றும் பயனில்லையே ; புத்திரன்போல் நமக்கு இந்த அரசச் செல்வம் இம்மை மறுமை இன்பங்களைக் கொடாதே ; சந்ததியில்லாவிட்டால் பிற்காலத்தில் கண்களில்லாத முகமும் சூரியனில்லாத பகலும்போல, அரசனில்லாது இவ்வுலகந் தலைதடுமாறிப்போமே ; ஆதலால் இனிப் புத்திரனைப் பெற்றுக் கொள்வதற்குத் தக்க முயற்சி நமது ஆண்டவனாகிய தியாகராஜப் பெருமானை வழிபடுவதே யல்லது வேறொன்றுமில்லை ; ஆனால் மோக்ஷப் பேறு குறித்து நிஷ்காமியமாக இத்தனை நாளும் வழிபட்டு வந்த நாம் இப்போது புத்திரப்பேறு குறித்துக் காமியமாக நமதாண்டவனை வழிபடுவது தகுதியல்ல வாயினும், 'தீராக் குறைக்குத் தெய்வமே முடிவு' என்கின்றபடி எவ்விதத்திலும் தீராத புத்திரனில்லாக் குறையைச் சிவபெருமானது திருவருளாலேதான் தீர்த்துக்கொள்ள வேண்டும்" என்று ஆலோசித்துத் துணிவுகொண்டு, தமது மனைவியாருடன் ஆகம விதிப்படி கமலாலயம் என்னும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பயபக்தியுடன் பூங்கோயிலைப் பஞ்சாவரண வலமுஞ் செய்து உடபுகுந்து, தியாகராஜப் பெருமானது சந்நிதிக்கெதிரே அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்து, வணங்கிய முடியும், மலர்ந்த முகமும், நீர் பொழிகின்ற கண்ணும், துதிக்கின்ற நாவும், கூப்புகின்ற கையும், புளகமெழும்புகின்ற உடம்புங் கொண்டு நின்று, 'புத்திரப் பேறில்லாத குறையைத் தீர்த்தருள வேண்டும் என்று விண்ணப்பித்துப்

பலவிதமாகத் தோத்திரஞ்செய்து தமது அரண்மனைக்குச் சென்று இந்தப் பிரகாரமே நாள்தோறும் போய் வழிபட்டுப் பிரார்த்தித்துக் கொண்டே வந்தார். அவர் செய்யும் வழிபாட்டுக்கும் வந்தனைக்கும் இரங்கித் தியாகராஜப் பெருமான் புத்திரப் பேறுண்டாகும்படி அனுக்கிரகஞ்செய்ய, அந்த அனுக்கிரகத்தால் மகாராஜனுக்கு மகிழ்ச்சி யுண்டாகும்படி வலம்புரிச் சங்கு விலையுயர்ந்த வெண்முத்தினைக் கருப்பங்கொண்டதுபோலத் தேவியார் தமது திருவயிற்றில் கருப்பங் கொண்டு, பத்து மாதமுஞ் சென்று நல்ல சுபதினத்தில், தர்மதேவதை தாண்டவமாடவும் வானகத்தார் மலர் சொரிந்து வாழ்த்தவும் வையகத்தார் மனங் களிக்கவும், அதிதியாரானவர் ஆதித்தனைப் பெற்றதுபோலவும் மல்லிகைக்கொடி மணமுள்ள மலரைப் பூத்தது போலவும், எவ்வெவர்களும் அதிசயிக்கத் தக்க சர்வ லட்சணங்களும் நிறைந்த வடிவுள்ள ஒரு புத்திரனைப் பெற்றூர்.

புத்திரன் பிறந்த சந்தோஷமான சமாசாரத்தைப் பாங்கிகள் அதிசீக்கிரமாக வந்து தம்மை மறந்த மனக் களிப்புள்ளவர்களாக எதிர் நின்று "ஆண்டவனே! எங்கள் தலைவியார் திருவயிற்றிலிருந்து தேவரீர் புகழே வடிவாகவும் புண்ணியமே உயிராகவும் கொண்டு பொன் னுலகத்தைக் காக்கின்ற புரந்தரனும் நாணமடையப் பூவுலகத்தைக் காக்கத் தக்க வல்லமையுள்ள புத்திர சிகாமணி உதயஞ்செய்தது" என்று விண்ணப்பஞ்செய்யக் கேட்ட மனுச்சக்கரவர்த்தியானவர், தூரதேசத்திற் போயிருந்த கப்பல் துறைமுகத்தில் வந்ததென்று சொல்லக்கேட்ட வர்த்தகனைப் போலவும், கூடிப் பிரிந்த மங்கையின் குரலோசை கேட்ட நாயகனைப்போலவும், தாகங்கொண்டு தவிக்குங் காலத்தில் சமீபத்தே தண்ணீருண்டென்று சொல்லக்கேட்ட தேச சஞ்சாரியைப் போலவும், மனங்குளிர்ந்து உடல் பூரித்து அளவிடப் படாத களிப்புடையவராய், அந்தப் பாங்கிகளுக்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்களை வெறுப்படையும்படி பரிசு கொடுத்து, தாம் நீராடி நியமங்கள் முடித்து, வேதவித்துக்களாகிய பிராமணர்களுக்கு விதைதானம் சொர்ண தானம் கன்னிகாதானம் அசுவதானம் கஜதானம் பூதானம் கோதானம் முதலான தானங்களைக் கொடுத்து, புத்திரன் பிறந்த நாள்தொட்டுப் பன்னிரண்டு வருஷமட்டுங் குடிகள் வரி கொடாமல் சர்வ மானியமாகத்தாமே அனுபவித்துக்கொள்ளவும், திறை கட்டி வரும் அரசர்கள் ஏழு வருஷமட்டும் அந்தத் திறை களைக் கட்டாமல் தாங்களே எடுத்துக்கொள்ளவும், சிறைச்சாலை யிலிருந்த சத்துருக்களை விட்டுவிடவும், பொக்கிஷசாலையைத் திறந்துவிட்டு நகரிலும் நாட்டிலும் உள்ளோர் யாவரும் தங்கள் தங்களுக்கு வேண்டிய மட்டில் ஏழு நாள் வரையில் எடுத்துக் கொண்டு போகவும், தேவாலயங்களிலெல்லாம் புதிதாகத் திருப் பணிகளும் திருவிழா முதலான சிறப்புகளும் செய்விக்கவும் கட்டளை

யிட்டு, பின்பு தாம் முன் தேடிவைத்த திரவியத்தைத் தெரியக் கண்டு கொண்டவனைப் போலத் திரை மறைவிலிருந்த அச்செல்வக் குழந்தையை வெளிப்படக்கண்டு மனமகிழ்ச்சியடைந்து இளஞ் சூரியோதயம்போல இந்தப் புத்திரன் இவ்விடத்தில் உதயஞ்செய்தது சிவானுக்கிரகமே யல்லது வேறல்லவென்று வியப்படைந்து, சோதிட சாஸ்திரங்களில் வல்லமையுள்ள பெரியோர்களைக் கொண்டு ஒப்பற்ற செல்வம் கல்வி வெற்றி முதலிய அதிர்ஷ்டங்கள் நடனஞ் செய்கின்ற சாதக பலனைக் குறித்து, தியாகராஜப் பெருமானது திருவருளால் வந்ததுபற்றி அக் கடவுளின் திருப்பெயர் கொண்டு வீதிவிடங்கன் என்னும் நாமகரணமும் அன்னப்பிராசனம் சௌளம் முதலான சடங்குகளும் மிகுந்த விபவமாகவும் வேதயுக்தமாகவும் அது அது செய்யத்தக்க பருவங்களில் செய்வித்து, அந்தப் புதல்வனை வாச நீராட்டுவித்தும், இனிய உணவுகளை ஊட்டுவித்தும், பொன்னாலும் இரத்தினங்களாலுஞ் செய்த பூஷணங்களைப் பூட்டுவித்தும், மார்மேலும் தோள்மேலும் மடிமேலும் வைத்து வைத்து முத்தாடியும் திருந்தாத குதலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தும், கற்பக விருக்ஷத்தின் கனியைக் கேட்கினும் அந்தக் கணமே தருவித்துக் கொடுத்தும், சிறிய விளையாடல்களைச் செய்யக் கண்டு களித்தும், கற்புள்ளவள் கணவனை உபசரிப்பதுபோல உபசரித்தும், படிப்பில் ஆசையை வைத்தவன் பாடத்தைப் பாராட்டுவது போலப் பாராட்டியும், தன்னை உயர்ந்தவனாக்க நினைத்தவன் தருமத்தை வளர்ப்பதுபோல வளர்த்தும், முன் சிறுமையடைந்து பின் செல்வத்தைப் பெற்றவன் அச்செல்வத்தைப் பாதுகாப்பது போலப் பாதுகாத்தும், புத்திரசம்பத்தினால் வரும் பயனை அடைந்தவரா யிருந்தார்.

இந்தப்படி இணையில்லாத செல்வப் பெருக்கத்தினால் வளர்க்க வாழையிளங் குருத்துப் போல வளர்ந்து வருகின்ற புத்திரனுக்கு, ஐந்தாம் வயதில் அட்சராப்பியாசஞ் செய்வித்து, ஏழாம் வயதில் சகல தேசத்தரசர்களுக்குந் தெரிவித்து, நகரை அலங்காரஞ் செய்வித்து பத்மராகம் கோமேதகம் வயிரம் வைடூரியம் முதலான இரத்தினகசிதமான கல்யாண மண்டபத்தில் வேத வேதாங்கங்களில் வல்லவரான பிராமணர்களும் சாபானுக்கிரக சாமர்த்தியமுள்ள தபோதனர்களும் ஆசீர்வதிக்கவும் மன்னர் மண்டலீகர் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் அமைச்சர் உறவினர் சிநேகர் முதலானவர்கள் கண்டு களிக்கவும் சுமங்கலப் பெண்கள் சோபனம் பாடவும் பேரி, சங்கம், மிருதங்கம் முதலான மங்கல வாத்தியங்கள் முழங்கவும் நல்ல சுப முகூர்த்தத்தில் வேதவிதிப்பிரகாரம் உபநயன கல்யாணஞ் செய்வித்து, பலவகைத் தானங்களும் செய்து சகல வேதாகம சாஸ்திரங்களிலும் வல்லமையுள்ள ஆசாரியரைக் கொண்டு வித்தியாரம்பஞ் செய்வித்தார். சில நாள்களுக்குள்ளே வீதிவிடங்கனென்னும் அப் புத்திரனானவன் வேதங்கள்

சாஸ்திரங்கள் புராணங்கள் ஸ்மிருதிகள் இதிகாசங்கள் முதலான கலைகளில் ஆசாரியனைப் பார்க்கிலும் எண்மடங்கு வல்லமையுள்ளவனாகி, யானையேற்றம், குதிரையேற்றம், ரதாரோசணம், வில்வித்தை, வாள் வித்தை, இந்திரஜாலம், மகேந்திரஜாலம் முதலான ஸமஸ்த வித்தைகளையுங் குறைவறக் கற்றுக்கொண்டு, ஆதிசேடனைப்போல் அறிவும், காமனைப்போல் கட்டழகும், ஆண்சிங்கம்போல் ஆண்மையும், மதயானைபோல் நடையும், மார்த்தாண்டன்போல் வாய்மையும், கற்பகவிருக்ஷம் போல் கொடையும் உடையவனாகி; சிவபக்தி, சீவகாருண்ணியம், பொறுமை, அன்பு, ஆசாரம், ஒழுக்கம், ஊக்கம், சாந்தம், சற்சனநேயம் முதலான நற்குணங்களுடன் உயிர்க்கு முடிவு நேரிடுமானாலும் உண்மையே பேசுவதும், உறுதியே சொல்லுவதும், இன்சொல்லே கூறுவதும், இதமே செய்வதும், பயனுள்ள காரியங்களையே பாராட்டுவதும், பிராமணர் தவத்தோர் முதலான பெரியோர்களைக் கண்டால் அன்போடும் அச்சத்தோடும் எதிர்கொண்டு தலையால் வணங்கி வாயால் வாழ்த்துவதுமாகிய நற்செய்கைகளைப் பெற்று, மாதா பிதாக்களது மனக்குறிப்பறிந்து அவர் இச்சையின்வழி நடந்து மகிழும்படி செய்வித்து, இளமைப் பருவத்திற்றானே எல்லாம் அறிந்தவனாகி, கண்டோர் கொண்டாடவும் கேட்டோர் மனங் களிக்கவும், இளவரசுப் பட்டத்துக்குத் தகுந்த பருவத்துட னிருந்தான்.

அப்படியிருந்த நாள்களில் ஒருநாள் அவ் வீதிவிடங்கனென்னும் இராஜபுத்திரன் தன் பருவத்துக்கொத்த இராஜகுமாரர்களும் மந்திரி குமாரர்களும் சூழ்ந்துவர தன் பிதாவாகிய மனுச்சோழருடைய சமுகத்துக்கு வந்து பிதாவினது திருவடிகளுக்கு அஷ்டாங்க பஞ்சாங்கமாகத் தண்டனிட்டு எழுந்து தூசொதுக்கியும் உடம்பொடுக்கியும் கைகட்டியும் வாய்புதைத்தும் எதிரே நிற்க அப்போது மனுச்சக்கரவர்த்தியானவர் நெடுநாள் பிரிந்திருந்த கன்றினைக் கண்ட பசுவைப்போலவும் இடந்தெரியாதிருந்த புதையலை யெதிர்ப்படக் கண்டவனைப் போலவும் கண்கள் களிகூரக் கண்டு, உள்ளமும் உடலும் பூரித்துத் தமது இரண்டு கைகளாலும் தழுவி அணைத்தெடுத்து மடிமேல் வைத்து உச்சிமோந்து முதுகைத் தடவி "எனக்கு நெடுநாளாக விருந்த மனக்குறையைத் தவிர்த்து இம்மை மறுமைப் பயனைக் கொடுக்கும்படி பிறந்த அருமையாகிய அமுதத்தை யொத்த என் புத்திரனே! உன் மனதில் ஏதோவொரு எண்ணமுண்டானதாகத் தோன்றுகின்றது; அவ்வெண்ணம் இன்னதென்று வெளிப்படுத்த வேண்டும்" என்று கேட்க, அது கேட்ட வீதிவிடங்கன் "மூன்றுலகத்திலுங் கேடில்லாத கீர்த்தியை நாட்டிய பெருந்தன்மையுடைய தேவரீரைப் பிதாவாகப் பெற்ற அடியேனுக்கு எண்ணங்கொள்வதற்கு என்ன குறையிருக்கின்றது? நமது குலதெய்வமாகியும் இஷ்டதெய்வமாகியும் கமலாலயத்தில் எழுந்தருளிய தியாக

ராஜப் பெருமானைத் தரிசித்துவர வேண்டுமென்னும் எண்ணம் ஒன்று மாத்திர முண்டு; இவ்வெண்ணம் இடையூறில்லாமல் நிறைவேறும்படி தேவரீர் திருவுள்ளங் கொள்ளவேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தான்.

அதுகேட்டு அரசனைவர் ''சர்வ வல்லமையுள்ள சுயம்புவாகியும் கருணைக்கடலாகிய கடவுளாகியும் பிள்ளைக்கலி தீர்த்த பெருமானுகியும் விளங்கிய தியாகராஜப் பெருமானைச் சேவிப்பதற்குத் தடையுண்டோ? தனக்கிணையில்லாத தரும மூர்த்தியைத் தரிசிக்க வேண்டுமானல் தடுப்பவர் யார்? புண்ணியந் தேடப் புத்திரன் தொடங்கினல் தந்தை தடை செய்வானே? நானே கற்பிக்கவேண்டிய நல்விஷயத்தை நீயே தெரிந்து செய்யத் தொடங்குவது நான் பூர்வஞ்செய்த புண்ணிய மல்லவோ? 'பிள்ளை தேடும் புண்ணியம் பிதாவுக்கும் உண்டு' என்று பெரியோர் சொல்வது பிழைபடாதென்பதை நானறியேனே? நெல் முதலான பயிர்க்கு நீர்விடுவோரையும், குருடர்க்குக் கோல் கொடுப் போரையும், இரவில் வந்தவர்க்கு இடங் கொடுப்போரையும், அஞ்சி வந்தடுத்தவர்க்கு அபயம் கொடுப்போரையும், தாகங் கொண்டோர்க் குத் தண்ணீர் கொடுப்போரையும், பசிகொண்டு பரிதபிப்போர்க்கு அன்னங்கொடுப்போரையும், சேற்றில் விழுந்து திகைக்கின்றோர்க்குக் கைகொடுப்போரையும், ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டோரைக் கரை யேற்றுவோரையும், சத்திரங்கட்டித் தருமஞ் செய்வோரையும் தடுத் தாலும், குருதரிசனம் சிவஞானிதரிசனம் சிவதரிசனம் செய்வோரை ஒருகாலுந் தடுக்கப்படாது; ஆதலால் புத்திரனே உனக்குவேண்டிய சிறப்புக்களுடன் சுகமாகப்போய் ஆண்டவனைத் தரிசனஞ் செய்து சிவஞானமும் தீர்க்காயுளும் பெற்று வருவாய்'' என்று கட்டளை யிட்டார்.

அந்தக் கட்டளையை அன்புடன் தலைமேற்கொண்டு வணங்கி விடைபெற்று, மாதாவினிடத்திற் போய்ப் பக்தியுடனே பணிந் தெழுந்து கைகூப்பி நின்று ''அநேக விரதங்களை அனுஷ்டித்து அடியேனைப் பெற்றெடுத்து, கண்களை இமைகள் காப்பதுபோற் காத்து வளர்த்த தாயே! அடியேன் தெய்வ சிகாமணியாகிய தியாகராஜப் பெருமானைத் தரிசனஞ் செய்யவேண்டும்; இதற்குத் தந்தையாருடைய சம்மதம் பெற்றுக்கொண்டேன்; இனி உமது உள்ளமும் ஒருமித் தருளவேண்டும்'' என்று குறையிரந்துகொண்டான். அது கேட்ட தாயானவர் உருக்கத்துடன் மனமகிழ்ச்சி கொண்டு முகமலர்ந்து முலை களிலிருந்து பால் பிரிடவும் கண்களில் ஆசை நீரரும்பவும் தம் அருமைத் திருமகனை நோக்கி ''இறைவனையும் என்னையும் நற்கதியிற் சேர்க்கவந்த நாயகமே! நாங்கள் முன் செய்த தவப்பயனலே கிடைத்த முத்தமே! எங்கள் வருத்தமெல்லாந் தீர்க்கவந்த மாணிக்கமே! கல்வியிற் சிறந்த

கண்மணியே! சுந்தர வடிவமுள்ள சூரியனே! சாந்தகுணமுள்ள சந்திரனே! பேரறிவுடைய பிள்ளாய்! நெடுநாளாகப் பலவிதமான தருமம் தானம் தவம் முதலானவைகளைச் செய்தும் பெற்றுக்கொள்ளாமல், தியாகேசர் சந்நிதிக்கு நடந்து அந்தக் கடவுளின் அனுக்கிரகத்தால் உன்னைப் பெற்றுக்கொண்டோம். அப்படிப்பட்ட பெருங்கருணையுள்ள பெருமானை நீ தரிசிக்கவேண்டுவது அடுத்த காரியந்தான். ஆதலால் நீ போய்க் கண்குளிரக் கண்டு தரிசித்து, 'உபநயனம் முதலான மங்கலக் கோலங்கண்ட நமது கண்கள் மணக்கோலமுங் கண்டு களிப்படைய வேண்டும்! என்று எண்ணியிருக்கிற என்னெண்ணம் விரைவில் முடியும்படி ஒரு வரத்தையும் பெற்றுவரக்கடவாய்'' என்று விடை கொடுத்தார்.

அவ்விடையைப் பெற்றுக்கொண்ட வீதிவிடங்கன் தன் அரண்மனைக்கு வந்து, தைலம், சந்தனம், கஸ்தூரி, பால், தயிர், நெய், பழம் முதலான அபிஷேக திரவியங்களும்; மாணிக்கமாலை, மரகதமாலை, முத்துமாலை, பவளமாலை, பொன்மாலை, வச்சிரமுடி, இரத்தின குண்டலம் முதலான திருவாபரணங்களும்; கொன்றைமாலை, தும்பை மாலை, வில்வமாலை, சண்பகமாலை, முல்லைமாலை, மல்லிகைமாலை முதலான திருமாலைகளும்; வெண்பட்டு, கோசிகப்பட்டு, பீதாம்பரம் முதலான திருவாடைகளும், மற்றும் வேண்டிய திரவியங்களெல்லாமும் தியாகேசர் கோயிலுக்குக் காரியக்காரர்கள் வசத்தில் முன்னதாக அனுப்புவித்து, பின்பு தான் மஞ்சனச்சாலையில் வாச நீராடி வெண் பட்டுடுத்துச் சிவத்தியானத்துடன் திருநீறு தரித்துத் திலகமணிந்து கிரீடம், குண்டலம், கண்டசரம், வாகுவலயம், பதக்கம், சரப்பளி, கடகம், ஆழி, பொற்பூணுநூல், பொன்னரைஞாண், உதரபந்தனம், வீர கண்டை முதலான பூஷணங்களும் பூண்டுகொண்டு ஜோதிமயமான பீதாம்பர உத்தரியம் மேலே தரித்துக்கொண்டு நவரத்தினமிழைத்த வொரு பொற்பிரம்பைக் கையில் பிடித்துக்கொண்டு, அரண்மனைவாசலை விட்டு வெளியே புறப்பட்டு, வேத பாரகராகிய வேதியர் முதலானவர்களுக்குப் பலபலதானங்கள் செய்து, மனோவேகமும் பின்னடையத்தக்க வேகமான நடையுள்ள நான்கு குதிரைகளைக் கட்டிய மகாமேருவைப் போல உயர்வுள்ள ரத்தின கசிதமாகிய ரதத்தின்மேல் ஆரோகணித்துக்கொண்டு வேதவேதியர், மீமாம்சகர், தார்க்கீகர், வையாகரணர், சோதிடர், ஆயுள்வேதியர், வேதாந்தியர், ஆகமசித்தாந்தர், புராணிகர், சமய சாஸ்திரப் பிரசங்கர் முதலான வித்தியாவல்லவர்களும்; மந்திரி பிரதானி, தானபதி முதலான காரியத்தலைவர்களும்; சினேகர், உறவினர், புரோகிதர் முதலானவர்களும்; மன்னர், மண்டலீகர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் முதலான அரசர்களும் தங்கள் தங்கள் பெருமைக்குத் தக்க வாகனங்களிலேறிச் சூழ்ந்துவரவும், நெற்றிப்

பட்டம் கிம்புரி முதலான அணிகளை அணிந்து அலங்காரஞ்செய்த மதயானைகள் கர்ச்சித்து வரவும், முத்துக்குஞ்சம் முத்துவடம் முத்து வாளி கிண்கிணிமாலை பொற்கலனை முதலான அணிகளால் அலங்கரித்த வலியுள்ள குதிரைகள் கனைத்து வரவும், வீரபட்டம் வீரசங்கிலி வீரகண்டை முதலான அணிகளை யணிந்த வீரர்கள் ஆரவாரித்து வரவும், மங்கலப்பாடகர் பாடவும், வந்தியர் மாகதர் புகழவும், மங்கல மங்கையர் வாழ்த்தவும், நாடகக் கணிகையர் நடனஞ்செய்யவும், பட்டாங்கு படிக்கவும், கட்டியங் கூறவும், அஷ்டமங்கலங்களை ஏந்திச் சுமங்கலிகள் சூழ்ந்து போகவும், வெள்ளை வட்டக் குடைகள் நிழற்றவும், வெண்சாமரை வீசவும், மயிற்குஞ்சங்கள் சுழற்றவும், பூந்தட்டேந்தவும் பேரிகை, தம்பட்டம், தக்கை, உடுக்கை, சச்சரி, தாளம், மத்தளம், தாரை, சின்னம், மல்லரி, சங்கம், எக்காளம், ருத்திரவீணை, நாரதவீணை, தும்புரு வீணை, இராவணாஸ்தம், கின்னரி, புல்லாங்குழல் முதலான தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி, நரப்புக்கருவி என்கின்ற ஐவகையான முப்பத்திரண்டு வாத்தியங்களும் முழங்கவும், தேரிற்கட்டிய மணிகளினோசை கணீர்கணீரென்று சத்திக்கவும், ஆடுகின்ற மாதரது அடிகளிற் பூண்ட சிலம்போசை கலீர்கலீரென்று ஒலிக்கவும், சகல மங்கல சம்பிரம ஆடம்பரங்களுடன், மாளிகைகளின் வாயில்கள்தோறும் மலர்ப்பந்தரிட்டு மணிமாலைகள் தூக்கி வாழை கமுகுகள் நாட்டி மெழுகிக் கோலமிட்ட திண்ணைகளில் பூரணகலசங்களும் பொற்பாவைகளும் முளைப்பாலிகைகளும் முகவிளக்குகளும் வெண் சாமரைகளும் இணைக்கயல்களும் கண்ணாடிகளும் பூந்தட்டுகளும் மங்கலமாக வைத்து அலங்கரித்தும் பரிமள திரவியங்களைக் கலந்த பனிநீர் தெளித்துத் தூளியெழும்பாமல் [illegible]ஞ்செய்தும் ஆடல்பாடல் முதலான விநோதங்களைக் கொண்டு [illegible]ய வீதியினிடத்து தேவேந்திரன் தியாகராஜ தரிசனஞ் செய்யப்போவது போல அவ் வீதிவிடங்கனென்னும் இராஜகுமாரன் தேரை நடத்தினன்.

அப்பொழுது, இரதி இந்திராணி முதலான தேவமாதர்களை யொத்த அவ்வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்களெல்லாம் அப்புத்திரனைக் கண்டு மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்ததுபோலவும் இனிய சுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியதுபோலவுஞ் சூழ்ந்துகொண்டு, கலை நெகிழ்ந்தும், கைவளை சோர்ந்தும், கண்ணீர் ததும்பியும், குழல் அவிழ்ந்தும், கொங்கைகள் விம்மியும், பசலைபோர்த்தும் மையலடைந்த மனத்தவர்களாய், "கரும்பை வில்லாக வுடைய காமனைப் பார்க்கிலும் எண்மடங்கு அழகுடைய இளவரசே! கன்னிகைப் பருவம் உள்ள வளே நான்; என்மேற் கடைக்கண் செய்யாயோ?" என்றும், "எழுதப் படாத சுந்தர வடிவமுள்ள இளங்காளையே! புருஷர் முகம் பாராத பூவையே நான்; என்னைப் புணர்ந்து போகாயோ?" என்றும்

"கண்களுக்கு நிறைந்த கட்டழகனே! காவல் அழியாத காரிகையே நான்; என்னைக் கலந்து போகாயோ?" என்றும், "சுபலக்ஷணங்கள் நிறைந்த சுந்தர வடிவனே! கல்யாணமில்லாத கன்னிகையே நான்; என்மேல் கருணை செய்யாயோ?" என்றும், "மனுச்சக்கரவர்த்தி பெற்ற மதயானையே! சிறுவயதுள்ளவளே நான்; என்னைத் திரும்பிப் பாராயோ?" என்றும், "அதிசயிக்கத்தக்க அழகனே! நிறையழியாத நேரிழையே நான்; சற்றே நின்று போகாயோ?" என்றும், "இந்த ராஜபுத்திரனுக்கு வீதிவிடங்கனென்று பெயரிட்ட பெரியோர்க்கு அனந்தந்தரம் அடிக்கடி தெண்டனிட்டாலும் போதாதே" என்றும், "வாசமுள்ள தைலம் பூசி மணமுள்ள மலர்மாலை சூழ்ந்து வாழைப்பூ இதழ்போல வகிர்ந்து குயில்முகம் போல முடியிட்டுப் பளிங்குச் சிமிழ்க்குள்ளிருந்து தோன்றுகின்ற பருத்த நீலக்கல்போல் தாவள்ளியமான தலைச்சாத்துக்குள்ளிருந்து சிறுகித் தோன்றுகின்ற குடுமியும், பார்க்கின்றவரது பார்வைக்கு இன்பந்தருகின்ற தோற்றமும் மாறாத மலர்ச்சியும் மனோரஞ்சிதமான அழகும் குளிர்ச்சியும் ஒளியும் பெற்றுச் செந்தாமரை மலர்போல் விளங்கும் முகமும், கருமை மிகுந்து செம்மை கலந்து காருண்ணியந் ததும்பி இங்கிதமறிந்து சிறிதே இமைத்து மனோரம்மியமாய் மலர்போன்று நீண்ட கண்களும், ஒளிகொண்டு உயர்ந்த நீண்ட நாசியும், குண்டலமணிந்து நீண்டு அகன்ற செவியும், திரிபுண்டரந் தரித்துத் திலகந்திட்டி அழகு பெற்று அகன்று உயர்ந்த நெற்றியும், பவளம்போற் சிவந்து திரண்ட உதடும், முல்லை யரும்புகள் போலச் சிறுகி நெருங்கி ஒளிவீசும் பற்களும், குறுகி மென்மையாகிச் சிவப்பேறிய நாவும், கண்டசரம் முதலான ஆபரணங்களை அணிந்து வலம்புரிச்சங்குபோல் திரண்ட கண்டமும், மத்தளம் போலத் திரண்டு மந்தர மலைபோல உயர்ந்து கண்டோர் கண்களையுங் கருத்தையுங் கட்டுகின்ற சுகந்தமாலை யணிந்த வெற்றியுள்ள தோளும், வீணைத்தண்டுபோல நீண்டு தாழ்ந்து கடகமணிந்த கையும், தாமரை மலர்போற் சிவந்து மிருதுவாகி மழைபோற் சொர்ணம் பொழிகின்ற முன்கையும், விளக்கமிகுந்து பதக்க முதலானவை அணிந்து களபகஸ்தூரிகள் பூசிக் கண்ணடிபோல அகன்று மலைபோல உயர்ந்த மார்பும், சிறுகி உயர்ந்த வயிறும், ஆழ்ந்து அழகு பெற்ற உந்தியும், யானைத் துதிக்கை போன்று திரண்ட தொடையும், வட்டந் தோன்றுது தசைகொண்டு செழிப்புள்ள முழங்காலும், திரண்டு நீண்ட கணைக்காலும், தாமரை மலர் போன்று வீரகண்டை யணிந்த கால்களும், வரம்பு கடவாத வடிப்பமுள்ள வடிவமு முடைய இந்த இராஜபுத்திரனைக் கண்டு களிப்பதற்கு நானென்ன தவஞ் செய்தேனோ!" என்றும், "இராஜ சிங்கமாகிய இந்தக் குமரனைச் சிருஷ்டித்தவன் பிரமதேவனே யானல் இவனழகுக்குத் தக்க மாதினை இனி எங்கே உண்டுபண்ணுவானோ!" என்றும், "இவ்வழகனது

வடிவைக்கண்டால் உருகாத கருங்கல்லும் உருகுமானல் பேதைமை யுள்ள பெண்கள் மனம் உருகாதிருக்குமோ!'' என்றும், ''இவனது பூர்ணசந்திர பிம்பம் போன்ற புன்னகையொன்றுமே மூன்றுலகத்தி லுமுள்ள பெண்களுக்கெல்லாம் பித்தேற்றுமே!'' என்றும் பலவித மாகத் தனித்தனி சொல்லி மோகங்கொண்டு நின்ருர்கள்.

அவ்வீதியிலுள்ள வாலிபர் வார்த்திபர் முதலான புருஷ ஜனங்க ளெல்லாங் கண்டு, ''ஆ! ஆ!! இந்தப் புத்திரனே இராஜ புத்திரன்; இவனுக்குமுன் மற்ற இராஜ புத்திரரெல்லாம் இராக்ஷச புத்திரரே'' என்றும், ''இவன் வடிவே வடிவு; இவன் வடிவுக்குமுன் மற்றவர் வடி வெல்லாம் மர வடிவே'' என்றும், ''இவன் கற்ற வித்தையே வித்தை; இவனுக்கு முன் மற்றவர் கற்ற வித்தையெல்லாம் மாயவித்தையே'' என்றும், ''இவன் குணமே குணம்; இவனுக்குமுன் மற்றவர் குண மெல்லாம் வில்லின் குணமே'' என்றும், ''இவனே இளவரசு; இவனுக்கு முன் மற்ற இளவரசெல்லாம் பூவரசே'' என்றும், ''இவனே சீமான்; இவனுக்குமுன் மற்றச் சீமான்களெல்லாங் கலைமான்களே'' என்றும், ''இவன் வீரமே வீரம்; இவன் வீரத்துக்குமுன் மற்றவர் வீர மெல்லாம் சவ்வீரமே'' என்றும், ''இவன் யௌவனமே யௌவனம்; இவன் யௌவனத்துக்கு முன் மற்றவர் யௌவனமெல்லாம் வெவ்வ னமே'' என்றும், ''இவன் பாக்கியமே பாக்கியம்; மற்றவர் பாக்கிய மெல்லாம் நிர்ப்பாக்கியமே'' என்றும், ''இவனைப் பெற்றவரேபெற்றவர்; மற்றவரெல்லாம் பெண் பெற்றவரே'' என்றும், ''இந்தக் குணரத்தின மான புதல்வனைப் பெறுதற்கு நமது மகாராஜனும் அவரது மனைவி யாரும் என்ன நோன்பு நோற்ருரோ'' என்றும், ''வெற்றியையுடைய வீரசிங்கம்போன்ற இந்தப் புத்திரனது திருமுகமண்டலத்தில் சாந்தந் ததும்புகின்றதே'' என்றும், ''இவனது கண்கள் கருணை பொழி கின்றனவே'' என்றும், ''இவனது வடிவில் அழகு ஒழுகுகின்றதே'' என்றும், ''நெடுநாளாகக் கண்டுகளிக்கவேண்டுமென்று எண்ணி எதிர் பார்த்திருந்த நமக்கு இன்று தியாகராஜப் பெருமான் திருவருளல்லவோ இந்த இராஜ புத்திரனை இவ் வீதியில் வரும்படி செய்தது? இனி அவ் வருளுக்கு என்ன கைம்மாறு செய்வோம்'' என்றும், ''இந்தப் புத்திரன் தியாகேசப்பெருமான் வரத்தினல் தோன்றினன் என்பதை இவனது அற்புதமான வடிவமே காட்டுகின்றதே'' என்றும், ''நமதரச னுக்குச் சந்ததி யில்லாமையால் பிற்காலத்தில் உலகம் என்ன பாடு படுமோ என்று எண்ணி இளைத்திருந்த நமது துன்பத்தையெல்லாம் நீக்கி இன்பத்தைக் கொடுத்த இப்புத்திரனுக்கு நாம் செய்யும் உப காரம் ஒன்றுமில்லையே'' என்றும், மனுச்சோழ மகாராஜனைப்போல நம்மையெல்லாம் பாதுகாத்து வருவானென்பதற்கு வேறே அடையாளம் வேண்டுமோ? இவனிடத்திற் கருணை துளும்புகின்ற கடைக்கண்களே

காட்டுகின்றன'' என்றும் பலவிதமாகத் தனித்தனி சொல்லிக் கொண்டு சூழ்ந்து நின்றூர்கள்.

இந்தப் பிரகாரம் அவ்வவ் வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்களும் புருஷ ஜனங்களும் பார்த்துப் பார்த்துப் பலவிதமாகப் புகழ்ந்து நெருங்க வீதி விடங்கன் தேரிலேறிச் செல்லும்போது, ஒரு வீதியில், தேரிலே கட்டிய குதிரைகள் தேர்ப்பாகன் வசத்தைக் கடந்து தெய்வத்தின் வசமாகி, அதிவேகமாக அத்தேரை இழுத்துக்கொண்டு சென்றன. அத் தருணத்தில் தாய்ப்பசுவானது பின்னே வர முன்னே வந்த அழகுள்ள ஒரு பசுங்கன்றுனது 'இளங்கன்று பயமறியாது' என்ற மொழிப்படியே துள்ளிக்குதித்துக்கொண்டு எதிர் வந்து, இராஜகுமாரனைச் சூழ்ந்து வருகிற சனத்திரள்களுக் குள்ளே ஒருவருமறிந்து கொள்ளாதபடி ஊழ்வினையாற் கண்மயக்கஞ் செய்வித்து உட்புகுந்து, அதிவேகமாகச் செல்லுகின்ற தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு அரைபட்டு உடல் முறிந்து குடல்சரிந்து உயிர்விட்டுக் கிடந்தது.

உடனே அந்தப் பசுங்கன்று தனது தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டதைக் கேட்ட வீதிவிடங்கன் இடியோசை கேட்ட நாகம் போலத் திடுக்கிட்டு, நடுநடுங்கித் தேரிலிருந்து கீழே விழுந்து, எண்ணப்படாத துன்பத்தோடும் பயத்தோடும் எழுந்துபோய் அப் பசுங்கன்று இறந்து கிடப்பதைக் கண்டு, மதிமயங்கி மனம் பதைத்துக் கையுங்காலும் நடுக்கெடுத்துப் பெருமூச்சுவிட்டு உடம்பு வியர்த்துச் சோபமடைந்து விழுந்து, சிறிதே தெளிந் தெழுந்து கண்களிலே நீர் ஆறுகப் பெருக நின்று, "சிவசிவா! சிவசிவா!! சங்கரா! சங்கரா!! சம்புவே! சம்புவே!! மஹாதேவா! மஹாதேவா!! தியாகராஜப்பிரபு! தியாகராஜப்பிரபு!! தேவரீரைத் தரிசிக்கவேண்டு மென்று வந்த அடியேனுக்கு இப்படிப் பட்ட இடரும் வரலாமா? நன்றறியாத பாவி இவன் நம்மைத் தரிசிக்கத் தக்கவனல்ல னென்று திருவுளங் கொண்டு தானே என்னை இந்தப் பழிக்கு ஆளாக்கியது? தேவரீரைத் தரிசனஞ் செய்ய எண்ணி வந்த அடியேன் கால்வருந்த நடந்து பயபக்தியுடனே வந்து தரிசிக்க வேண்டும்; அவ்வாறு செய்யாமல், செல்வச் செருக்கினல் தேரிலேறிக் கொண்டு ஆடம்பரங்களுடன் பக்தி யில்லாது பகல்வேஷக்காரன் போல டம்பவேஷங் காட்டி வந்த அன்பில்லாத பாவியாகிய என் பிழையைக் குறித்து நோவதல்லது, எம்பெருமானிடத்திற் குறை சொல்லத் தகுமோ? இப்படிப்பட்ட பெரும்பாதகம் செய்யத்தானே பிள்ளையாகப் பிறந்தேன்? விரிந்த பாற்கடலில் விஷம் பிறந்ததுபோல் மறைநெறி தவருத மனுவின் வமிசத்தில் எதிரற்ற பாவியாகிய நான் ஏன் பிறந்தேன்? பழிபாவங்களைக் கனவிலும் கண்டறியாத மனுச்சோழராகிய என் பிதாவுக்குப் பெரும்பழியைச் சுமத்தத்தானே பிறந்தேன்? சிவபெருமானைத் தரிசித்துச் சீர்பெறலாமென்று எண்ணி

வந்த எனக்குச் சிவதரிசனங் கிடையாது தீராப்பழி கிடைத்ததே! ஓகோ! 'எண்ணம் பொய்யாகும் ஏனிதம் மெய்யாகும்' என்ற வார்த்தை என்னிடத்திலே இன்று அனுபவப்பட்டதே! ஐயோ! நான் கற்ற கல்வியெல்லாம் கதையாய் முடிந்ததே; நான் கேட்ட கேள்வியெல்லாம் கேடாய் முடிந்ததே; நான் அறிந்த அறிவெல்லாம் அவலமாய்விட்டதே; நான் தெளிந்த தெளிவெல்லாம் தீங்காய் விட்டதே! அரஹரா! இப்படிப்பட்ட தீங்கு வருமென்று அறிந்தால் தேரிலேறேனே, பசுவைக் கொலை செய்வதே பாவங்களிலெல்லாம் பெரும் பாவம், அதைப் பார்க்கிலும் பசுங்கன்றைக் கொலைசெய்வது பஞ்சமா பாதகத்தினும் பதின்மடங்கு அதிகம் என்று பெரியோர் சொல்லக் கேட்டறிந்திருக்கிற நான் இன்று அந்தப் பாதகத்துக்கு ஆளாகியும் உயிரை விடாமல் உடலைச் சுமந்திருக்கின்றேனே; இளங்கன்று எதிரே வரவும் அதைப்பாராமல் அதன்மேல் தேரை நடத்தியது செல்வச் செருக்கல்லவோ என்று உலகத்தார் பழிக்கும் பழிக்குத்தான் உடம்பெடுத்தேன்; நான் புத்தி பூர்வமாக எள்ளளவாயினும் அறிந்திருப்பேனுனல் இப்படிப்பட்ட அபாயம் நேரிடவொட்டேன்; என்ன செய்வேன்! என்ன செய்வேன்!! மனுச்சோழர் காலத்தில் அவர் புத்திரன் ஒரு பசுங்கன்றைக் கொன்றுன் என்னும் பழிமொழியை உலகத்தில் நிலைபெற நாட்டினேனே! நீதி தவருது உலகத்தை யெல்லாம் ஆளுகின்ற மனுச்சக்கரவர்த்தி யென்னும் மகாராஜனுக்குப் பிள்ளையாகப் பிறக்கும்படி இருந்த நல்வினை இப்போது பேயாகப் பிறப்பதற்குத் தக்க தீவினையாய் விட்டதே! இந்தப் பிறப்பிலே இப் பழியை ஏற்றுக் கொள்வதற்கு முன் பிறப்பில் என்ன பாவஞ் செய்தேனே? தூய்மையுள்ள சூரிய குலத்திற்கு ஆதியாகிய மனுவென்பவரும் அவர் வழிக்குப்பின் வழிவழியாகத் தோன்றிய குலோத்துங்க சோழர், திருநீற்றுச்சோழர், காவிரிகரைகண்ட சோழர், மனுநீதிச்சோழர், இராஜேந்திரசோழர், இராஜசூடாமணிச்சோழர், இராஜராஜசோழர், உறையூர்ச்சோழர், மண்ணளந்தசோழர், கங்கைகொண்டசோழர், தேவர்சிறைமீட்ட சோழர், மரபுநிலைகண்ட சோழர், எமனைவென்ற சோழர், சுந்தரச்சோழர், மெய்ந்நெறிச் சோழர் முதலான என் முதாதைகளான முன்னேர்களெல்லாம் தீமையைச் சேராது செங்கோல்நடத்தி அடைந்த கீர்த்தி இக்காலத்தில் எடுக்கப்படாத பழியைச்சுமந்த என்னால் மறைந்து போகும்படி நேரிட்டதே! ஐயோ! இதை எண்ணும்போது, நான் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பானேனே! மரபழிக்கவந்த வச்சிராயுதமானேனே! கன்றுக்குப் பாலூட்டாதவனைக் கண்டாலும் பாவமென்று சொல்லுகிற பெரியோர்கள் சேங்கன்றைத் தேர்க்காலிலிட்ட என்னைக் குறித்து என்ன சொல்வார்கள்? இந்தக் கன்று எங்கே பிறந்ததோ? எங்கே வளர்ந்ததோ? எங்கே போக எண்ணியதோ?

இங்கே வந்து இறக்க நேரிட்டதே! சுந்தரமுள்ள இக் கன்று இறந்ததைக் கண்ட எனக்கே இவ்வளவு துக்கமுண்டாயிருக்கின்றதே! இதை ஈன்ற தாய்ப்பசு கண்டால் என்ன பாடு படுமோ? இச் செய்தியை என் பிதாவானவர் கேட்பாரானால் ஏதாய் முடியுமோ? வார்த்தைமாத்திரத்திலே பழியென்று சரசஞ் செய்கின்றவர்களையுந் தண்டிக்கின்ற தந்தையார் திருமுகத்தில் தகுதியல்லாத பழியைச் சுமந்து தண்டனைக்காளாகிய நான் எவ்வாறு விழிப்பேன்? இனி இவ்வுலகில் பழிக்காளர்கி உண்டுடுத்து உலாவி உயிர் வைத்திருக்க மாட்டேன்; இன்றே என்னுயிரை இழந்துவிடுகிறேன்!'' என்று பலவிதமாகப் பரிதபித்து, துக்க சமுத்திரத்தில் அழுந்திக் கரை காணாதவனாகி நின்றபோது, உடன் சூழ்ந்துவந்த அந்தணர் அமைச்சர் முதலானோர் ராஜகுமாரனைப் பார்த்துத் தாமும் விசனமடைந்தவர்களாய், ''ஓ விவேகமுள்ள வீதிவிடங்கனே! நீர் என்ன கெடுதி நேரிட்டதென்று இப்படிப் பிரலாபிக்கின்றீர்? அந்தப் பசுவின் கன்றை நீர்கொல்லவேண்டுமென்று கொன்றீரோ? அல்லது அந்தக் கன்று தேர்க்காலில் அகப்படுவதை அறிந்தும் அஜாக்கிரதையாயிருந்தீரோ? அக்கன்று ஓடிவந்ததைச் சூழ்ந்திருந்த நாங்கள் ஒருவரும் அறியோமே; நீர் எப்படி அறிவீர்? அது கர்மவசத்தாலே எல்லார் கண்களிலும் மண்களைத் தூவி வலிய வந்து மடிந்ததே; அதற்கு நீர் என்ன செய்வீர்? மிருக ஜாதிகளிலே உயர்வுள்ள பசுவின் கன்று இறக்கநேரிட்டதே யென்று எண்ணி யெண்ணிச் சோர்ந்து போகின்றீர். ஆனால் அதற்கென்ன செய்வோம்? பொன்கத்தி என்று கழுத்தரிந்து கொள்ளலாமோ? இதனால் நமக்குப் பழி பாவம் ஒன்றுமில்லை; ஆயினும் இதுபற்றி உமது மனது ஆலைபாய்ந்து அவலங் கொள்ளுகின்றபடியால், வேதத்தில் விதித்திருக்கின்ற பிராயச்சித்தங்களுள் இதற்குத் தக்கது எதுவோ அதைக் கேட்டறிந்து செய்துகொள்ளலாம்; நீர் சித்தங் கலங்காமல் தேரிலேறும்'' என்று சொன்னார்கள்.

அதுகேட்ட வீதிவிடங்கன் ''நடுவாகப் பேசுகின்ற நல்லோர்களாக விருந்தும் காலவேற்றுமையால் கருத்துவேறுபட்டு முகநட்பாகப் பேசி முகந்துடைக்கின்றவர்கள்போற் சொன்னீர்கள். இதென்ன ஆச்சரியம்! பூர்வம் எங்கள் வம்சத்தில் சிபிச்சக்கரவர்த்தி என்பவர் ஒருவர் ஒரு வேடன் துரத்திக்கொண்டு வரப்பயந்து அடைக்கலமாகப் புகுந்த புறவுக்கு அபயஹஸ்தஞ் செய்து, பின்பு அவ்வேடன் வந்து புறவைக் கேட்டு வழக்கிட்டபோது, அந்தப் புறவுக்கு ஈடாகத் தமது சரீரத்திலுள்ள மாமிசத்தை யெல்லாம் அரிந்தரிந்து தராசில் வைத்தும் நிறைகாணுயலிருக்க, அதுகண்டு தாமும் அந்தத் தராசிலேறினர். அவர் பட்சி ஜாதிகளில் சாமானியப் பிறவியாகிய புறவின் உயிர்க்

கொலைக்கே அஞ்சித் தம் உடம்பைக் கொடுத்ததுமன்றி உயிரையுங் கொடுத்தாரானால், அப் பட்சி ஜாதிகளில் விசேடப் பிறப்பாகிய கருடன் முதலான உயிர்களினிடத்து எப்படிப்பட்ட காருண்ணிய முள்ளவராய் இருக்கவேண்டும்? அதனினும் உயர்ந்த மிருக ஜாதி களில் எவ்வகைப்பட்ட கிருபையுடையவராய் இருக்கவேண்டும்? அதனினும் அம்மிருக ஜாதிகளில் விசேடமாகிய பசுக்களினிடத்தில் எப் படிப்பட்ட இரக்கமுள்ளவராய் இருக்கவேண்டும்? அதனினும் பசுவின் கன்றுகளிடத்தில் எவ்வகைப்பட்ட தயவுள்ளவராய் இருக்க வேண் டும்? அப்படிப்பட்டவருடைய வம்சத்தில் நான் பிறந்தும், இன்று வீதியில் வரும்போது யாரோ பயங்காட்டித் துரத்த, அதனால் நடுங்கி என்னெதிரே அடைக்கலமாகத் துள்ளியோடி வந்த இந்தப் பசுங் கன்றை அபயஹஸ்தங் கொடாமல், அநியாயமாகத் தேர்க்காலில் அகப்பட்டிறந்துபோகச் செய்தேனே! இப்படிப்பட்ட என்னை என்ன செய்தால் தீரும்? என்னை இதற்குத்தக்க பிராயச்சித்தஞ் செய்து கொள்ளும்படி சொன்னீர்கள்; எங்கள் வமிசத்திலிருந்த அரசர்கள் இரக்கத்துடன் நீதி தவறாது அரசு செலுத்தி வந்த கிரமத்தையும், என் பிதாவாகிய மனுச்சோழர் நடுநிலை தவறாமல் எவ்வுயிர்களையும் தம் முயிர்போலப் பாதுகாத்து வருகின்ற முறைமையையும், அரசர்க்குக் கோபூசை செய்வது கடனென்ற வேதவாக்கியத்தையும், அரசர் பசுக் களுக்கு யாதொரு குறைவும் நேரிடவொட்டாமல் மிகுந்த ஜாக்கிரதை யுடன் விருத்தி செய்விக்க வேண்டுமென்கிற பெரியோர் வாக்கியத்தை யும், ஐயோ! எங்கே அனுப்பிவிட்டு இங்கே பிராயச்சித்தஞ் செய்து கொள்ளுவேன்!'' என்று துயரத்துடன் சொல்லினான்.

அதுகேட்ட அவ்வந்தணர் முதலானவர்கள் "வாராய் இராஜ புத்திரனே! நாங்கள் முகத்துக் கிச்சையாக முன்னொன்று பேசிப் பின்னொன்று சொல்லுகின்றவர்களல்ல; நெடுநாளாக எங்களுடன் பழகியிருந்தும் எங்கள் சுபாவம் இன்னமும் உமக்கு நன்றாகப் புலப்பட வில்லை என்று தோன்றுகின்றது. உலகம் தலைகீழாகுமானாலும் உள்ள படி சொல்லுவோமே யல்லது புதிதாகத் தொடுத்துப் பொய் பேசமாட் டோம். நாங்கள் சொல்லும் வார்த்தையில் நம்பிக்கை வைத்துக் கேட் கக் கடவீர். அந்தப் பசுங்கன்று ஒருவர் துரத்த அதனால் பயந்து அடைக்கலமாக வேண்டுமென்கின்ற அறிவோடு உமக்கெதிரே ஓடிவந்த தல்ல; அல்லது தானே துள்ளிக்குதித்து ஓடிவந்ததுமல்ல; அதை இன்னவிடத்தில் இன்ன காலத்தில் இன்னபடி இறக்குமென்று விதித்திருந்த அதன் தலைவிதியே அதனைத் துரத்திக்கொண்டுவந்து தேர்க்காலில் அகப்படுத்திச் சிதைத்துவிட்டது; அதன் விதி அப்படி யிருக்க நீர் வீணாக விசனப்படுவதில் என்ன பலன்? 'கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளை கொண்டுபோகத் தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங்

கொடுத்தான்' என்னும் பழமொழிபோல அதனுயிரை விதி கொள்ளை கொள்ள உம்முயிரைத் தண்டங்கொடுப்பதேன்? நீர் ஒன்றுக்கும் அஞ்சாமல் தேரிலேறும்" என்று சொன்னார்கள்.

அதுகேட்டு ராஜபுத்திரன், "சிவதரிசனம் செய்ய எண்ணித் தேரிலேறும்போதே கால்தவறியும் இடது தோளும் இடது கண்ணும் துடித்தும் காட்டிய உற்பாதங்களை ஆலோசியாமல் புறப்பட்ட என் மதியை நினைத்துத்தான் துயரப்படுவேனோ! அரசர் குலத்திற் பிறந்தும் என்னை இழிகுலத்தார் செய்யும் செய்கையைச் செய்வித்த என் விதியை நினைத்துத்தான் துயரப்படுவேனோ! மாசில்லாத சூரிய குலத்துக்கு மாசுண்டாகும்படி செய்ததைக் குறித்துத் துயரப்படுவேனோ! பிதாவுக்குப் பழிசுமத்தப் பிள்ளையாகப் பிறந்ததைக் குறித்துத் துயரப் படுவேனோ! இந்தக் கன்று இறந்ததை நினைத்துத்தான் துயரப்படு வேனோ! இக்கன்றின் இறப்பைக் கண்ட தாய்ப்பசு துக்கப்படுமென் பதை நினைத்துத் துயரப்படுவேனோ! நானொருவன் எதற்கென்று துயரப் படுவேன்! என்ன செய்வேன்! செய்யத் தக்கதொன்றும் இன்ன தென்று அறியேனே! ஆயினும் 'முற்ற நனைந்தார்க்கு ஈரமில்லை' என்பதுபோல முழுதும் பழிப்பட்ட எனக்கு இனியென்ன துக்கமிருக் கின்றது! இனிப் பெரியோர்சொல் கடக்கப்படாது என்பதுபற்றி உமது சொற்படியே இதோ இரதத்தில் ஏறுகின்றேன்! என்னை எப்படிப் புனிதனாக்க வேண்டுமோ அப்படிச் செய்து கடைத்தேற்றுவது உங்களுக்கே கடன்" என்று சொல்லி, ஏறி, இரதத்தை வந்த வழியே திருப்பிவிட்டுப் பிராயச்சித்தம் அறிந்து செய்விக்கத்தக்க பெரியோர் களிடத்துக்குப் போயினன்.

இந்தப் பிரகாரம் இராஜகுமாரன் போனபின்பு, இறந்துவிட்ட அக்கன்றை ஈன்ற தலையீற்றுப் பசுவானது தன் கன்று துள்ளிக் குதித் தோடிய வழியேபோய் அந்தக் கன்று கீழேவிழுந்து கிடப்பதைத் தூரத்தே கண்டவளவில் குலைகுலைந்து நடுநடுங்கி புத்திமயங்கி ஒன்றுந் தெரியாமல் சூறைக்காற்றில் அகப்பட்ட துரும்பைப்போல் சுழன்று சுழன்று ஓடிச் சமீபத்தில் வந்து உடல் சிதைந்தும் குடல் சரிந்தும் உயிர்விட்டுக் கிடப்பதைப் பார்த்துச் சோர்ந்துவிழுந்து பிரக் ஞை தப்பிப் பிணம்போற் கிடந்து, பின்பு சற்றே தெளிந்தெழுந்து பெருமூச்சு விட்டு அந்தக் கன்றைச் சுற்றிச் சுற்றிக் கோவென்று அலறி யலறி அதனுடம்பை முகர்ந்து முகர்ந்து, "இதென்ன தீவினையோ; இதென்ன இந்திரசாலமோ! இதென்ன விபரீதமோ! வாலசைத்துக் கால்விசைத்து எனக்குமுன் துள்ளியோட இப்போது பார்த்தேனே! இத்தனை விரைவில் இப்படிப்பட்ட இடியிடிக்கும் என்று எள்ளளவும் அறியேனே! காவிரி முதலான தீர்த்த யாத்திரை செய்தும், சிதம்பரம் முதலான ஸ்தலயாத்திரை செய்தும், திருக்கோயில்களிலும் திருவீதிகளி

லும் உள்ள புல் முதலானவைகளை வாயினாற் களைந்து திருப்பணி செய்தும், புல் மேயாமலும் நீர் குடியாமலும் நெடுநாள் விரதங்காத்தும் உன்னைப் பெறப்பட்ட பாடு தெய்வம் அறியுமே! அவ்வளவு பாட்டையும் அவலமாக்கிப் போட்டு, சேங்கன்றே! என்னைத் தெருவில் விட்டாயே! உன்னைப் பெறுகிறதற்கு நோற்ற நோன்புகளால் வந்த இளைப்பு இன்னும் ஆறவில்லையே! இதற்குள் இப்படிப்பட்ட ஆறுத பெரு நெருப்பை அடிவயிற்றில் வைத்தாயே! இந்தத் துக்கத்தை இனி எந்த விதத்தினாற் சகித்துக்கொள்ளுவேன்! 'பாவிக்குப் பாக்கியந் தக்காது' என்பதற்குச் சரியாகப் பளிங்கு போன்ற நிறமும், பால் வடிகின்ற முகமும், சிறுகித் திரண்ட திமிலும், கடைந்தெடுத்தது போன்ற கால்களும், வாழைச் சுருள் போன்று வளர்ந்த வாலும், சித்திரக்கன்று போன்று சுபலக்ஷணங்களைப் பெற்ற வடிவுமுடைய நீ நிர்ப்பாக்கியமுள்ள எனக்குத் தக்காமற் போய்விட்டாயே! உன்னுடைய சுந்தரமுள்ள வடிவத்தைக் கண்டாற் காமதேனுவுங் கட்டி யணைத்து முகங் குளிர்ந்து முத்தங் கொள்ளுமே! நான் உன்னைப் பற்றியல்லவோ உயிர் தரித்து உலகத்தில் உலாவியிருந்தேன்! இன்னும் ஒருதரம் உன்னழகிய முகத்தைக்கண்டு என் மடிசுரந்து பால் சொரியக் காண்பேனோ! ஐயோ! உன்னை 'ஆயிரங் கன்றுகளிலும் அழகுள்ள கன்று' என்று கண்டோர் சொல்லக் களிப்புடன் கேட்ட என் காதுகளால் இன்று 'இளங்கன்றை இறக்க விட்டு மலட்டுப் பசுப்போல் வருந்துகின்றதே' என்று பலபேரும் பழித்துப் பேசுகின்ற வார்த்தையை எவ்வாறு கேட்பேன்?" என்று எண்ணியெண்ணி இளைப்படைந்து மூர்ச்சித்து, மறுபடியுந் தெளிந்து இறந்து கிடக்கின்ற கன்றினுடம்பை உற்றுப் பார்த்து இரதத்தின் சக்கரம் ஏறுண்டு இரத்தஞ்சொரிய அழுந்திக் கிடக்கின்ற வடுவைக் கண்டு, "ஓகோ!! என் ஏழை மதியால் ஏதோ ஒரு சொற்பமான அபாயத்தால் விழுந் திறந்ததென்று எண்ணி யிரங்கினேனே! இவ் வடுவைப் பார்க்கும்போது தேர்ச்சக்கரம் ஏறுண்டு உடல் சின்னப்பட்டு இறந்ததாகத் தெரியவருகின்றதே! ஆ! ஆ!! உனக்கு இப்படிப்பட்ட பெரிய அபாயம் வந்து சம்பவிக்கும்படி நானென்ன பாவஞ் செய்தேனோ! ஓ குழந்தாய்! நீ தேர்க்காலில் அகப்பட்டபோது எப்படிப் பயந்தாயோ! என்ன நினைந்தாயோ! எவ்வாறு பதைத்தாயோ! உயிர்போய் உடல் குழம்பிக் கிடக்கின்ற உன்னைப் பார்க்கப் பார்க்கப் பெற்ற வயிறு பற்றி யெரிகின்றதே!" என்று கண்ணீர் விட்டுக் கதறிக் கதறி அழுதழுது புரண்டு புரண்டு விம்மி விம்மி வெதும்பி வெதும்பிப் பெருமூச்சுவிட்டு விழுந்து விழுந்து மெய்மறந்து கிடந்து, பின்பு எழுந்து "என் கன்றினைத் தேர்க்காலில் அழுத்திக் கொன்ற காருண்யமில்லாத கண்மூடியைக்கண்டால் என்னிரண்டு கொம்புக்கும் இரையாக் காது விடுவேனோ! மைந்தரைப் பெறாத மலட்டுத்தனமுள்ளவர்களும் இப்படிச் செய்யத் துணிவு கொள்ளார்கள்! ஆ! இது செய்யத்

துணிந்தவன் இன்னுமென்ன செய்யத் துணியான்!'' என்று வெம்பியும் ''துன்பஞ் செய்விக்கும் துஷ்டர்களுக்கும் கொலை செய்கின்ற கொடுந் தொழிலோர்க்கும் இடங்கொடாத இந்நகரம் இன்று வலியற்ற உயிர் களை மாய்த்து விடுகின்ற வஞ்சகர்க்கும் இடங்கொடுத்ததே! ஐயோ, இதில் அரசனில்லையோ! நீதியில்லையோ! நெறியில்லையோ! இதென்ன அநியாயமோ!'' என்று முறையிட்டும், தன் கன்றையிழந்ததனால் உண்டாகிய துக்கத்தைச் சகிக்க மாட்டாததாய் வருந்தி, 'நமக்கு நேரிட்ட துக்கத்தை நமது இறைவராகிய மனுச்சோழரிடத்திற் சென்று குறிப்பித்து நிவர்த்தி செய்து கொள்ளுவோம்' என்றெண்ணி அக்கன்றைப் பசுந்தழைகளால் மூடி, கண்ணீர் சொரிந்து கதறிக் கொண்டே மனுச்சக்கரவர்த்தியின் வாயிலில் வந்து, குடிகளுக்குக் குறைவு நேரிட்டால் அதை அரசனுக்கு அறிவிக்கும்படி அவ்வரண்மனை வாயிலில் கட்டியிருக்கிற ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால் மிகுந்த விசையோடும், வலியோடும் அடித்தசைத்தது.

அப்படியசைத்தபோது அந்த நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம், ''ஒரு காலத்திலுங் கேட்டறியாத ஆராய்ச்சிமணியினது ஓசையை யின்று நூதனமாகக் கேட்டோம்; என்ன விபரீதமோ!'' என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ள, அந்த மணியிலிருந்து காதமட்டுங் கேட்கக் கணீரென்று ஓசையுண்டானது. அவ்வோசையைச் சபா மண்டபத்தில் மந்திரி முதலானவர்கள் சூழச் சிங்காதனத்தின்மேல் வீற்றிருந்த மனுச்சக்கரவர்த்தியானவர் கேட்டு, மாதர்கள் காலி லணிந்த சிலம்போசை கேட்ட மாதவர்போலவும், அழுகுரலோசை கேட்ட அந்தணர் போலவும், சண்டையிரைச்சலைக் கேட்ட சற்சனர் போலவும், புலி முழக்கங்கேட்ட புல்வாய்போலவுந் திடுக்கிட்டு, திகைப் படைந்து சிங்காதனத்திலிருந்து பெருங்காற்றால் அடியற விழுந்த பனைமரம் போலக் கீழே விழுந்து மூர்ச்சை யடைந்து, சிறிது நேரஞ் சென்று தெளிந்தெழுந்து உடல் நடுங்கி உள்ளம் பதைத்து உயிர் சோர்ந்து நா உலர்ந்து கண்கலங்கி நடை தள்ளாடி அதிவேகமாக அரண்மனை வாசலுக்கு வருமுன், வாயில் காப்பாளர் அரசனுக்கெதிரே அஞ்சி யஞ்சி வந்து அடியில் விழுந்தெழுந்து, ''ஆண்டவரே! அரண்மனை வாயிலில் கட்டியிருக்கிற ஆராய்ச்சிமணியை ஒரு தலை யீற்றுப் பசுவானது தன் கொம்பினால் அடித்து ஓசை யுண்டாக்கியது'' என்று விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு விரைவில் வந்து, அவ் வாராய்ச்சிமணியின் அருகே உடல் மெலிந்து முகஞ்சோர்ந்து கண்ணீர் சொரிந்து கதறி நிற்கின்ற பசுவைக் கண்டு, சாவியாய்ப் போன தன் பயிரைக்கண்ட தரித்திரனைப் போல் மனம் நைந்து நைந்துருகி நொந்துநொந்து வருந்தி, ''ஐயோ! சாதுவான இந்தப் பசுவுக்கு என்ன துன்பம் நேரிட்டதோ! இதன் குறையை இன்ன

தென்று மதித் தறிந்துகொள்ள வல்லமை யில்லாதவனாக இருக்கின்றேனே!'' என்று பதைத்துத் தம் அருகில் அச்சத்துடன் நிற்கின்ற அமைச்சர்களைப் பார்த்து 'எனக்குப் புகழும் புண்ணியமும் வரும்படி செய்விக்கின்ற உங்கள் மந்திரிச் செய்கை நன்றாக விருந்தது! உங்கள் அஜாக்கிரதையினால் அல்லவோ இந்தப் பசுவுக்கு ஏதோ வொரு குறை நேரிட்டது!'' என்று கோபித்துப் பார்க்க, அது கண்டு அச்சங் கொண்ட மந்திரிகளுள் அப்பசு துயரப்படுவதற்குக் காரணம் இன்னதென்று முன்னே அறிந்தும் அரசனிடத்திற் சொல்வதற்கு அஞ்சியிருந்த ஒரு மந்திரியானவன் 'இனி இதை நாம் மறைத்து வைத்தாலும் வேறொருவரால் வெளிப்படுமாதலால் நாமே அறிந்த மட்டில் அறிவிப்போம்' என்றெண்ணி அரசனை வணங்கித் ''தலைவனே! உமது புத்திரன் இன்று ஏறிப்போன இரதத்தின் சக்கரத்தில் இளங்கன்று ஒன்று எதிரே குதித்து வந்து அகப்பட்டு இறந்துவிட்டது; அந்தக் கன்றை யீன்ற இந்தப் பசுவானது ஆற்றாத்துயர் கொண்டு ஆராய்ச்சிமணியை யசைத்தது'' என்று சொன்னான்.

அச்சொல்லானது வெந்த புண்ணில் வேலுருவியதுபோல் மணியொலிகேட்டு வருந்தியிருந்த செவிகளினுள்ளே சென்றுருவிச் சுருக்கிட்டுவெதுப்பவிழுந்து, விஷந்தலைக்கேறினாற்போல வேதனையடைந்து, அஞ்சுபுலனும் அறிவுங் கலங்கிப் பஞ்சப் பிராணனும் பதைபதைத்தொடுங்க, பேச்சு மூச்சில்லாமற் சோர்ந்து கிடந்து, அருகிலிருந்த அமைச்சர்கள் செய்த சாந்தோபசாரத்தினால் சோர்வுநீங்கி அப்பசுவை யடிக்கடி பார்த்துப் பார்த்து, கண்ணீர் கடல்வெள்ளம் போல் பெருகவும் நெருப்பில் விட்ட நெய்யைப் போல் நெஞ்சம் உருகவும் ''ஐயோ! இந்தப் பசுவுக்கு இப்படிப்பட்ட துக்க முண்டாவதற்கு நானே முக்கிய காரணமாக இருந்தேனே; தன் கன்றுக்கு அபாயமொன்று மில்லாதிருக்கினும் சுபாவத்திலே காணுந்தோறுங் கதறியுருகுகின்ற அன்பையுடைய இந்தப் பசுவானது தன் கன்று இறந்து கிடக்கின்றதைக் கண்டபோது எப்படி யுருகியதோ! என்ன பாடு பட்டதோ! கன்று சமீபத்திலிராமல் சற்றே தூரத்திலிருக்கினும் பார்த்துப் பார்த்துப் பதைக்கின்றதும், 'அம்மா! அம்மா!' என்று அலறுகின்றதுமாகிய சுபாவச் செய்கைகளையுடைய பசுவானது, கன்று இறந்து கண்மறைவிற் கிடக்கின்றதை எண்ணி எண்ணி எப்படிப் பதைக்கின்றதோ! ஐயோ! அடிக்கடி அலறுகின்றதே! புலி முதலான துஷ்ட மிருகங்களிலொன்று எதிரிடுமானால் முன்சென்று தன்னுயிரைக் கொடுத்தாயினுங் கன்றினுயிரைக் காக்க வேண்டு மென்னுங் கருத்துள்ள பசுவுக்கு, இறந்த கன்றை எதிர் கண்டபோது எப்படி உயிர் பதறியதோ! சிவசிவா! சிறுகன்று தேர்க்காலில் அகப்பட்டபோது எப்படித் துடித்ததோ என்று எண்ணுங்

தோறும் என்னுள்ளம் பகீரென்று பதைக்கின்றதே! இந்தப் பசுவானது குள்ளனைக் கொண்டு ஆழம்பார்க்க வந்தது போலவும், பேயைத் தெய்வமென்று பிள்ளைவரங் கேட்க வந்தது போலவும், கொல்லையாள் காட்டியைக் கூலி கேட்க வந்தது போலவும், விழலிடத்து நிழலுக்கு வந்தது போலவும், என்னைக்கொண்டு தன் துயரைத் தீர்த்துக்கொள்ள எண்ணியல்லவோ இவ்வாராய்ச்சிமணியை அசைத்து இவ்விடத்து நிற்கின்றது! இதற்கு என்ன செய்வேன்!

"எமன் கையிலகப்பட்ட உயிர் எந்த விதத்தாலுந் திரும்பாதென்று உலகத்தார் சொல்லும் உறுதியான வார்த்தை வீண்போக, முன்னொரு காலத்தில் நமது நகரத்தில் ஓரந்தண னீன்ற சிறுவன் அகாலத்தில் மரணமடைய, அதுபற்றி அவ்வந்தணன் துயர்கொண்டு தமது சமுகத்தில் வந்து, " சிவநெறி திறம்பாமற் செங்கோல் செலுத்துகிற உமது காவலைக் கடந்து அகாலத்திலே அந்தகன் வந்து இரவும் பகலுந் தவஞ்செய்து யான் அருமையாகப் பெற்ற ஒரு பேறான புத்திரனை உயிர்கொண்டு போனானே ; தலைவனே! இது தகுமோ!" என்று முகமும் மனமுஞ் சோர்ந்து முறையிட்டுக் கொள்ள, அதுகேட்டு மனமுருகி நொந்து, சிவபெருமான் திருவடியன்றி மற்றொன்றிலும் மனம் வையாத தமது வல்லமையால் எமலோகத்தி லிருந்த உயிரை மீட்டுக் கொண்டு வந்து முன்னிருந்த உடலில் விட்டு, அவ்வந்தணனை மகிழ்ச்சி செய்வித்து, அன்றுதொட்டு எமனைத் தாமுள்ளவரையிலும் தமது நகரத்திலும் நாட்டிலும் வரவொட்டாமற் செய்த என் குலமுதல்வராகிய சைவச்சோழரைப்போல, அவ்வளவு பெரிதான காரியஞ் செய்யாவிட்டாலும், இப் பசுங்கன்றின் உயிரொன்றை மாத்திரமானாலும் மீட்டுக்கொடுக்க வலியற்றவனாகி யிருக்கின்றேனே! அவமிருத்து நேரிட்டபோது சஞ்சீவகரணி என்னுந் தெய்வத்தன்மையுள்ள மருந்தைக் கொடுத்துப் பிழைப்பிக்கச்செய்த என் குலத்தலைவர்களிற் சிலர் போல் அம்மருந்தையாயினும் பெற்றுக்கொள்ளத்தக்க த்வஞ்செய்தேனோ! தமது அஜாக்கிரதையினால் பிற உயிர்க்குக் கெடுதி நேரிட்டபோது அது பொறாமல் தம்முயிரை விட்டுவிட்ட சில அரசர்களைப் போல என் அஜாக்கிரதையினால் நேரிட்ட இப் பசுங்கன்றின் முடிவைக் கேட்டறிந்த நான் உயிரையாயினும் விட்டேனோ! அன்னிய தேசத்தரசர் குற்றஞ் செய்தோரைக் கொலை செய்தாரென்று கேட்டாலும் 'குற்றம் வந்ததென்ன! கொலை செய்ததென்ன! என்று குலைநடுங்குகின்ற நல்லோர்கள் மரபில், நான் குற்றம் வரவும் கொலைசெய்யவும் அரசுசெலுத்தி, அந்த நல்லோர்கள் இயல்புக்கு நாணமுண்டாகத் தானோ வீட்டின் வாயிலில் வெள்ளெருக்குப் பூத்ததுபோலத் தோன்றினேன்!

" நாம் அரசாட்சிசெய்ய ஏற்பட்ட நாள்தொட்டு இந்நாள் வரையிலும் எவ்வுயிரும் எவ்விதத்திலும் யாதொரு குறையுமில்லாமல் வாழ்ந்து மகிழ்ந்திருக்க, நீதியுடன் முறை தவறாது செங்கோல் செலுத்தி வரும்படி சிவானுக்கிரகம் பெற்றோமே' என்பதுபற்றி ஒருநாழிகைக்கு முன் வரையிலும் உண்டாயிருந்த மனக்களிப்பையெல்லாம் மண்ணிற் கவிழ்த்தேனே! 'நாமும் பழிபாவங்களுக்குப் பயந்தே அறநெறி தவறாது அரசுசெலுத்தி வருகிறோம், பழைய தரித்திரனுக்குப் பணங் கிடைத்ததுபோல் நமக்கும் சிவானுக்கிரகத்தால் ஒரு சிறுவன் பிறந்தான், அவனும் கற்றவர் மகிழக் கல்வி கேள்விகளில் நிறைந்து பண்பும் பருவமும் உடையவனானான்; இனி நமக்கென்ன குறை' என்று எண்ணி எண்ணி இறுமாப்படைந்தேனே! 'புத்திரப்பேறு பெற்றுப் புனிதனானோம்' என்று பூரித்திருந்தேனே! 'நமது புத்திரன் இளவரசுப் பட்டத்திற்கேற்றவனானான், இனிக்கல்யாணஞ் செய்விப்போம்' என்று கனவு கண்டிருந்தேனே! 'நமது புத்திரன் நற்குணங்களை யுடையவனாக விருக்கின்றான், பெற்றெடுத்த நமது பேர் கொண்டுவருவான்' என்று மனோராச்சியம் பண்ணி மகிழ்ந்திருந்தேனே! இளங்கன்று எதிர்வரவுங் கண்கெட்டுக் கருத்தழிந்தவன்போல் தேரை நடத்தித் தீராப்பழிபூண்டானே! ஐயோ! இவன் என் செங்கோலைப் பிடிக்கத் தக்க செல்வப்பிள்ளை யாகாமல் தென்னம்பிள்ளை யானானே!

" சிவதரிசனஞ் செய்யப் போகிறவன் தேரூர்ந்தே போகப்படாது; அவ்வாறு போயினும் நாற்புறத்திலும் நடப்போர்களை விலக்கும்படி ஆள்விலக்கிகளைவிட்டு, முன்னே பரிக்காரர் வரவு குறித்துப் போகப் பின்னே மெல்லெனத் தேரை விடவேண்டும்; அப்படிச் செய்யாமல் பாலியப்பருவம் பயமறியாது என்பதற்குச் சரியாகப் பரபரப்பாகத் தேரை நடத்திப் பசுங்கன்றைக் கொன்றான்! ஐயோ! இவன் கல்வி யறிவுள்ளவனாக விருந்தும் அறிவழிந்து அரசன் பிள்ளையாகாமல் அணிற்பிள்ளை யானானே! கொடிய பாதகங்களிலெல்லாம் கொலைப் பாதகமே தலையென்று வேதமுதலாகிய கலைகளில் தானும் படித் தறிந்தான், சான்றோர் சொல்லவுங் கேட்டறிந்தான்; அப்படி யறிந் திருந்தும் அப்பாதகஞ் சேரவொட்டாமல் தன்னைக் காத்துக்கொண்டு பட்டப்பிள்ளை யாகாமல் பழிப்பிள்ளையானானே; ஐயோ! புதல்வனைப் பெற்றால் புண்ணியம் பெறலாம் என்றெண்ணிய எனக்கு மலடா யிருந்தாலும் வாழ்வுண்டென்று நினைக்கும்படி நேரிட்டதே! நான் நெடுநாளாகத் தியாகராஜப் பெருமானை வேண்டிக்கொண்டது இப் படிப்பட்ட பெரிய பழிக்காளாகிய பிள்ளையைப் பெறத்தானோ! பிள்ளை யென்ன செய்யும்! பெருமான் என்ன செய்வான்! 'மாதாபிதாக்கள் செய்தது மக்களுக்கு' என்னும் பெரியோர் வார்த்தையின்படி நான் செய்த தீவினையே என் புத்திரனுக்கு நேரிட்டதென்று நினைத்து

என்னை வெறுத்துக்கொள்ள வேண்டுமென்றாலும், இந்தப் பிறப்பில் என் புத்தியறிந்து ஒரு தீங்குஞ் செய்ததில்லையே! இந்தப் பிறப்பில் இல்லாவிட்டாலும் முற்பிறப்பிலே

நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!
வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!
தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!
கலந்த சினேகரைக் கலகஞ் செய்தேனோ!
மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ!
குடிவரி யுயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ!
உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!
களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!
பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ!
ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ!
வரவுபோக் கொழிய வழியடைத்தேனோ!
வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ!
இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றேனோ!
கோள் சொல்லிக் குடும்பங் குலைத்தேனோ!
நட்டாற்றிற் கையை நழுவவிட்டேனோ!
கலங்கி யொளித்தோரைக் காட்டிக்கொடுத்தேனோ!
கற்பழிந்தவளைக் கலந்திருந்தேனோ!
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ!
கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ!
கருப்பமழித்துக் களித்திருந்தேனோ!
குருவை வணங்கக் கூசிநின்றேனோ!
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ!
பெரியோர் பாட்டிற் பிழைசொன்னேனோ!
பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ!
ஊன்சுவை யுண்டு உடல் வளர்த்தேனோ!
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!
அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!
குடிக்கின்ற நீருள்ள குளந் தூர்த்தேனோ!
வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ!

பகைகொண்டு அயலோர் பயிரழித்தேனோ!
பொதுமண்டபத்தைப் போயிடித்தேனோ!
ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
சிவனடியாரைச் சீறி வைதேனோ!
தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ!
சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!
தந்தைதாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ!
தெய்வ மிகழ்ந்து செருக்கடைந்தேனோ!

என்ன பாவம் செய்தேனோ! இன்னதென்றறியேனே!

"ஐயோ! இந்தப் பசுவின் சோர்ந்த முகத்திற் கண்ணீர் ததும்புகின்றதைக் கண்ட என் கண்களை நுங்கு சூன்றெடுப்பதுபோலப் பிடுங்கி யெறியேனோ! 'இதன் கன்றை உன்புத்திரன் தேர்க்காலில் ஊர்ந்து கொன்றான்' என்று சொல்லக்கேட்ட என் செவிகளைச் செம்பு நீருருக்கிவிட்டுச் செவிடாக்கேனோ! இந்தப் பசு ஆராய்ச்சி மணியினால் தன் குறையை யறிவித்த நாழிகை தொட்டு இந்நாழிகை வரையிலும் அக்குறையைத் தீர்ப்பதற்கு வேண்டிய உறுதிமொழியைக் கூறாதிருக்கிற என் நாவைச் சூடுள்ள நெருப்பாற் சுட்டுவிடேனோ! இதற்குத் துன்பமுண்டாக்கினவன் இன்னானென்று அறிந்தும், அவனை இன்னும் தண்டனை செய்யாது தாழ்த்திருக்கின்ற என் கைகளைக் கத்தியைக் கொண்டு கண்டித்து விடேனோ! இதன் கன்றைப் பிழைப்பிப்பதற்குத் தக்க நன்முயற்சியைத் தேடி நாலுதிக்குகளிலும் நடவாத என் காலைக் கோடரிகொண்டு குறுக்கே வெட்டேனோ! இதன் மெலிவை யடிக்கடி கண்டும் வற்றியொடுங்காத மலபாண்டமாகிய என் உடம்பை வாளாயுதங்கொண்டு மடித்துக் கொள்ளேனோ! இதன் பரிதாபத்தையும் நமக்கு நேரிட்ட பழியையும் எண்ணி உருகி யழியாத உள்ளத்தை வலிய விஷத்தையிட்டு மாய்த்து விடேனோ! நிலையிலா உயிர்க்கஞ்சி இவைகளில் ஒன்றுஞ் செய்யாது உயிர் வைத்திருக்கின்றேனே! என்ன செய்வேன்! பாவிக்குத் தீர்க்காயுள் என்பதற்குச் சரியாகப் பெரும் பாவியாகிய என்னுயிர் தனக்குத் தானேயும் போகின்றதில்லையே! "நல்ல பூஜாபலத்தினால் தெய்வ பக்தியுடன் செங்கோல் செலுத்தி வருகின்றான் மனுச்சோழன்" என்று மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் புகழ்ந்த புகழெல்லாம் பொய்யாய்ப் போய்விட்டதே! நான் அப்புகழை வேண்டினவனல்ல ; ஆதலால் அது போகட்டும் ; உயிரினும் ஒன்பது பங்கு அதிகமாகத் தேடிவைத்த புண்ணியமும் போகின்றதே!

"ஆ! நான் நீதி தவறாது அரசு செய்கின்றேன் என்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாக விருக்கின்றதே! சேங்கன்றைத்

தெருவிற் சிதைக்கவும் ஒருமித்த என் செங்கோலை அளவுகோ லென்பேனே! அஞ்சனக்கோ லென்பேனே! எழுதுகோ லென்பேனே! ஏற்றக்கோ லென்பேனே! கத்தரிக்கோ லென்பேனே! கன்னக்கோ லென்பேனே! குருடன்கோ லென்பேனே! கொடுங்கோ லென்பேனே! துடைப்பக்கோ லென்பேனே! துலாக்கோ லென்பேனே! மரக்கோ லென்பேனே! வைக்கோ லென்பேனே! அல்லது இன்று இறந்த பசுங்கன்ருகிய பிரேதத்தைப் புரட்டிச் சுடுகின்ற பிணக்கோ லென்பேனே! என்ன கோலென்று எண்ணுவேன்! இளங்கன்றைக் கொலை செய்யவுஞ் சம்மதித்திருந்த என் ஆக்கினை சக்கரத்தைக் கிரகச்சக்கர மென்பேனே! வருஷ சக்கர மென்பேனே! தண்டசக்கர மென்பேனே! அல்லது இச்சேங்கன்றைச் சிதைத்த தேர்ச்சக்கர மென்பேனே! என்ன சக்கரமென் றெண்ணுவேன்! இந்தப் பசுவின் கன்றுக்கு அபாயம் நேரிடக் காத்திருந்த என் காவலைச் சிறு பெண் காக்கின்ற தினைக்காவ லென்பேனே! குருடன் காக்கின்ற கொல்லைக் காவலென்பேனே! புல்லாற் செய்த புருடன் காக்கின்ற புன்செய்க் காவலென்பேனே! வரும்படி யில்லான் காக்கின்ற வாயிற்காவ லென் பேனே! பயிரைக்காக்க வைத்த பண்ணைக்காவ லென்பேனே! வேலை வேண்டிக் காக்கின்ற வெறுங்காவ லென்பேனே! அல்லது இக்கன்றை அடக்கஞ் செய்யக் காத்திருக்கின்ற அரிச்சந்திரன்காவ லென்பேனே! என்ன காவலென்று எண்ணுவேன்! என்ன செய்வேன்! ஐயோ! இப்படிப்பட்ட பாவியாகிய என்னை மனுவென்று பேரிட்டழைப்பது காராட்டை வெள்ளாடென்றும், அமங்கள வாரத்தை மங்களவார மென்றும், நாகப்பாம்பை நல்லபாம்பென்றும் வழங்குகின்ற வழக்கம் போன்றதல்லது உண்மையல்லவே! இனி, இப்பசுங்கன்று உயிர்பெற் றெழுந்திருப்பதற்கு உபாயம் என் புத்திரனுயிரையன்றி யென்னுயிரை யும் என்மனையாளுயிரையும் என்னரசாட்சியையும், எனக்கு உரித் தாகிய எல்லாப் பொருள்களையுங் கொடுத்துவிட்டால் நேரிடுமென்று சொல்வோருண்டானல், இதோ கொடுத்துவிடுகிறேன். அவ்வாறு சொல்வோரு மில்லையே! இதற்கு நேரிட்ட துக்கமும் எனக்கிதனு லுண்டாகிய துயரமும் எப்படித் தீருமோ! இப்படியென்றறியேனே! என்ன செய்வேன்!" என்று பலவிதமாகப் பரிதபித்திருந்தார்.

இந்தப் பிரகாரம் பரிதபித்து வருந்துகின்ற மனுச்சக்கரவர்த் தியை அருகிலிருந்த அமைச்சர்கள் நோக்கிக் கைகுவித்துத்தொழுது நின்று, " ஓ மனுநீதி தவருத மஹாராஜனே! விதி வசத்தாலே வலிய வந்து மடிந்த இளங் கன்றைக் குறித்து நீர் துன்பப்படுவது உயிர் களிடத்து உமக்குள்ள காருண்ணியத்துக்கு இயல்பேயென்று எண்ணி இதுவரையும் எதிரொன்றுஞ் சொல்லாது சும்மா இருந்தோம்; இனிக் காரியக் கேடுதியில் வாய்மூடிக் கொண்டிருப்பது மந்திரிகளுக்கு

அழகல்லவென்றபடியால், நாங்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டருளவேண்டும். உமது புத்திரன் சீவகாருண்ணியமே தேகமாகக் கொண்டவன். தான் பூமியதிராது எந்தச் செந்துக்கள் எதிர்வந்து அகப்பட்டுக் கொள்ளுமோவென்று கீழ்நோக்கி அஞ்சி யஞ்சி மெல் லென நடக்கின்றபோது, வேறோர் அதிர்ச்சியினால் நடுங்கிச் சிற் றெறும்புகள் விரைவாக ஊர்ந்து போகின்றதைப் பார்த்துத் திடுக் கிட்டு, 'ஓகோ என்ன பாவம்! இந்த உயிர்களுக்கு நடுக்கம் உண் டாக நடந்தோமே' என்று எண்ணி முகஞ்சோர்ந்து பிரமைகொண்டு நிற்க நாங்கள் அனேக முறை பார்த்திருக்கின்றோம். அப்படிப்பட்ட கிருபையுள்ளவன் இந்தக் கன்றை அசாக்கிரதையினால் கொன்றா னென்று எண்ணுவதற்கு இடமில்லை. அன்றியும் அவருடன் சூழ்ந்து போன பிராமணர் முதலானோர்களுக்கும், தேரைச் சூழ்ந்துபோன எங்களுக்கும், தேர்க்கு முன் நடந்த ஜனங்களுக்கும், தெருவில் நின்று பார்த்திருந்த பிரஜைகளுக்கும் இலேசமுந் தெரியாதபடி அக்கன்று மாயமாகக் குதித்துவந்து மடிந்தது'; அன்றியும் தேர்க்கு முன்னே யானைவீரர் குதிரைவீரர் முதலானோர் அணியணியாக யூகம் வகுத்தது போல நெருங்கிப்போக, விருது பிடிப்போர், எச்சரிக்கை சொல்வோர், கட்டியங் கூறுவோர், பட்டாங்கு படிப்போர், சோர்வு பார்ப்போர், ஆள்விலக்குவோர் முதலானவர்கள் நடக்க, இத்தனைபேரையுங் கடந்து, தேர்க்குச் சமீபத்தில் சிங்கக்குட்டியாயிருந்தாலும் வரமாட் டாது; இதுவோ கோல்பிடித்தவனைக் கண்டால் கூப்பிடுதூரம் ஓடு கின்ற இயல்பையுடைய இளங்கன்று; இந்தக் கன்று அந்தக் காவலை யெல்லாங் கடந்து தேர்க்குச் சமீபத்தில் எதிரே துள்ளியோடி வந்த தென்றால், இந்திரசால் மென்றுதான் எண்ணவேண்டுவதாக விருக் கின்றது! ஆதலால் அக்கன்றை அதன் விதியே இப்படிப்பட்ட ஆச்சரிய மரணஞ் செய்வித்ததன்றி உமது புத்திரன் செய்வித்ததல்ல, இந்தக் காரியம் இப்படியிருக்க, புத்திரன் கொன்றானென்று அவனை நோவதும் அவனைப் பெற்றதனால் பழி வந்ததென்று உம்மை நீர் நோவ தும், எய்தவன் இருக்க அம்பை நோவதுபோலவும் அம்பு செய்து கொடுத்த கருமானை நோவதுபோலவும் அல்லவோ இருக்கின்றது? நீர் சகல கலைகளையுங் கற்றுக் கேள்வியில் மிகுந்து, அரசர்களெல்லாம் புகழ்ந்து கொண்டாடத்தக்க தன்மையை யுடையவர்; உமக்கு இது விஷயத்தில் நாங்கள் விரித்துச் சொல்ல வேண்டுவதென்ன? இனித் துன்பப்படுவதை விட்டு, 'உயிர்க் கொலை தம்மை யறியாது நேரிட்டா லும் பிறர் செய்யக் கண்டாலும் அதற்குத்தக்க சாந்தி செய்துகொள்ள வேண்டும்.' என்னும் விதிப்படி வினைவசத்தால் நேரிட்ட இந்தக் கன்றின் கொலைக்கு முன்னிலையாகவிருந்த உமது புத்திரனையும் பெரி யோர்களைக் கொண்டு இதற்குத் தக்க பிராயச்சித்தத்தை யறிந்து செய்விக்க வேண்டுவதே உமக்கு முறை" என்று சொன்னார்கள்.

அதுகேட்ட மனுச்சக்கரவர்த்தியானவர் வியர்வு, துடிப்பு, நகை முதலான கோபக்குறிகள் தோன்ற மந்திரிகளைப் பார்த்து "அமைச்சர்களே! உங்கள் நியாயம் நன்றாயிருந்தது; நீங்கள் சொல்லிய நீதி உங்களுக்கே ஒப்பாகுமல்லது தருமதேவதை சம்மதிக்குமோ! கன்றையிழந்து வருந்துகின்ற இப்பசுவின் சஞ்சலத்தையாவது சாந்தப்படுத்துமோ! இப்படி நீங்கள் சொல்லியது என் முகத்தைக் குறித்தோ? என் புத்திரன் உயிருக் கிரங்கியோ? அல்லது உங்கள் ஜீவனத்தை எண்ணியோ? எது பற்றியோ? உலகத்தையாளும் அரசன் ஆசை பற்றியாவது வெகுளி பற்றியாவது தாட்சண்ணியம் பற்றியாவது உறவு பற்றியாவது நடுநிலையாக நியாயங்கண்டு சொல்லாமல் மாறுபட்டால், அதை மறுத்து,' இது விஷயத்தில் அரசன் நம்மைக் கொல்லுவானாயினுங் கொல்லட்டும், அவனுக்கு உறுதி கூறுவதே நமக்குக் கடன்' என்று நிச்சயித்துக்கொண்டு, நியாயங்கண்டு நடுநிலையாகச் சொல்வது மதியுடைய மந்திரிகளுக்குத் தருமமாக விருக்க, நீங்கள் அதை நினையாமல் இப்படிச் சொல்லியது என்ன நினைத்தோ? சந்திரசூரியர் திசைமாறினாலும், சமுத்திரந் தடை மீறினாலும், மகாமேரு நிலைகுலைந்தாலும் மனங் கலங்காது விவகாரங்களிற் பழுதுவாராது பாதுகாக்கின்ற குணத்தையுடைய நீங்கள், இன்று நீதியில்லாத சில குறும்பரசரைக் கூடி, அவ்வரசர் தூளியென்றால் நிர்த்தூளியென்றும், கரும்பு கசப்பென்றால் எட்டிக்காய்போற் கசப்பென்றும், தாயைக் கொலைசெய்வது தக்கதென்றால் வேதத்தின் முதற்காண்டத்தில் விதித்திருக்கின்றதென்றும், வெள்ளத்திற் கல் மிதக்குமோவென்றால் ஆற்றில் அம்மி மிதக்கக் கண்டோமென்றும், காக்கை வெளுப்பென்றால் நேற்றைப் பொழுதில் நிற்கக் கண்டோமென்றும், கல்லின்மேல் நெல்லு முளைக்குமென்றால் கொத்தாலாயிரங் குலையாலாயிர மென்றும், கள்ளனைப் பிடிக்கலாமோ வென்றால் பிடித்தால் பெரும் பாவமல்லவோ வென்றும், பொய் ஆயிரமட்டுஞ் சொல்லலாமோ வென்றால் ஐயாயிரமட்டுஞ் சொல்லலாமென்று விதியிருக்கிறதென்றும், பெண்சாதியுள்ளவனுக்குப் பிள்ளை கொடுப்பது ஆரென்றால் ஐயா! பெண் கொடுத்தவனே பிள்ளை கொடுக்க வேண்டுமென்றும், ஒருவன் மனையாள் மற்றொருவனைக் கூடலாமோ வென்றால் அடக்கத்தில் ஆயிரம் பேரோடு கூடினாலுங் குற்றமில்லை யென்றும், இந்தக்கழுவில் இவனை யேற்றலாமோ வென்றால் கழுவுக்குத்தக்க கனமில்லை யென்றும், என் பிள்ளையும் எச்சரிக்கைக்காரன் பிள்ளையும் ஒருவனை யொருவன் உதாசினமாகத் திட்டினாராம் இதற்கென்ன செய்யலா மென்றால் உமது சற்புத்திரன் வாய்க்குச் சர்க்கரையிடவேண்டும் மற்றவன் வாய்க்கு மண்ணிட வேண்டுமென்றும் சொல்லுகின்ற துர்மந்திரிகளைப் போல, நியாயம் பாராது, நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள்; இது காலவேற்றுமையென்றே யெண்ணுகிறேன்.

''தன்னைக் கொடுத்தாவது தருமத்தைத் தேட வேண்டுமென்னும் பெரியோர் வார்த்தையைப் பிடிப்பது சற்குணமுடையோர்க்குத் தகுதி யென்றும், தாய் தந்தை யிடத்திலாயினுந் தராசுக்கோல்போலச் செப்ப மாக நின்று தீர்ப்புக்கொடுக்க வேண்டுவது அரசர்க்கு அவசியம் வேண்டிய சற்கருமமென்றும் எனக்கு அடிக்கடி அறிக்கையிட்ட நீங்கள், இன்று, அதோகதியில் தள்ளிவிடத்தக்க அநியாயத் தீர்ப்பை யங்கீ கரிக்கப் போதிக்கின்றீர்கள். இது உங்களிடத்து நேரிட்ட அவஸ்தை வசமென்றே யெண்ணுகிறேன். ஒருவரிடத்துத் தண்டனை விதிக்கும் போது எவ்வுயிர்களும் தன்னுயிர்போல் எண்ணுவதும், எந்தப்பொருள் எந்தப்பிரகாரமாயிருந்தாலும் அந்தப் பொருளினுண்மையை யறிந்து கொள்வதும், உருவுநோக்காது அறிவை நோக்குவதும், ஊழ்வினை நோக்காது செய்வினை நோக்குவதுமாகிய இப்படிப்பட்ட இலக்கணங் களுக்குப் பொருந்த விதிக்க வேண்டுமென்று எனக்கு அறிவித்துவந்த நீங்கள், இன்று, என் புத்திரன் இரக்கமுள்ளவனென்றும், அவன் அசாக்கிரதையினால் கொன்றதல்லவென்றும், பழவினையாற் பசுங்கன்று மடிந்ததென்றும், அதனால் அதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விக்க வேண்டுமென்றும், வாதியை மாத்திரம் வரவழைத்துக் கொண்டு நடுக் கொள்ளைக்காரன் நியாயந் தீர்த்தா னென்பது போற் சொல்லி நின் றீர்கள். ஓஹோ! அமைச்சர்களே! உங்களை, 'அந்நாளிருந்த அமைச் சர்களல்ல, இந்நாளில் என்னைக்கெடுக்க நினைத்துக்கொண்டு எங்கே யிருந்து வந்தவர்களோ!' என்று எண்ணுகின்றேன். ஐயோ! எனக்கு இப்படிப்பட்ட அநியாயத்தைக் கற்பித்தோ இம்மை மறுமை யின்பங்களை வருவிப்பீர்கள்! என்றும் மீளாத சிவகதியை யடையத் தக்க உறுதி வார்த்தைகளைப் பேசிய நீங்கள், இன்று, என்றும் மீளாத அவகதியை யடையத்தக்க இழிவுள்ள வார்த்தைகளைப் பேச எங்கே கற்றுக்கொண்டீர்களோ! ஆ! ஆ!! இந்த ஓரவஞ்சனையை உற்று நினைக்குந்தோறும் நெஞ்சந் திடுக்கிடுகின்றதே! உங்கள் சொற்படி இது காரியத்தில் உடன்பட்டேனானால் தருமமும் தவமும் சலிப்படை யுமே! இக் காலத்தில் எனக்கு மேற்பட்டவர்களில்லை யென்று வழக் கழிவு செய்து வஞ்சித்துப் பேசுவேனானால், காலம் போகும் வார்த்தை நிற்குமே! மனுநூலில் சொல்லிய நீதியின்படி நடத்துகின்றபடியால் மனுச்சோழன் மனுச்சோழனென்று நெடுந்தூரம் நீண்ட பெயரைச் சுமந்தநான் இதற்குச் சம்மதித்தேனானால், எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்தது போலவும், கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்தது போலவும், வாசனையறியாதவன் மலரைச் சுமந்ததுபோலவும் வீணாகவே இந்தப் பெயரை எடுத்துக்கொண்டானென்று ஏழுலகத்தாரும் இகழ்ந்து பேசுவார்களே! இன்றைக்கு என் புத்திரன் செய்த இந்தக் கொடுங் கொலையாகிய பாதகத்துக்குப் பரிகாரஞ் செய்து, இலேசாக விட்டு, நாளைக்கு மற்றொருவன் இதைப் பார்க்கினுஞ் சிறிய கொலை

யொன்று செய்யக் கண்டு, அவனைக் கொலை செய்விப்பேனானால், ‘தரும மறியாத இவ்வரசன் தனக்கொன்று பிறர்க்கொன்று செய்கின்றான்’ என்று பார்த்தவர்களெல்லாம் பழித்துப் பேசுவார்களே ; அல்லது ‘தன் வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாது விடாது’ என்பது போல என்புத்திரன் செய்த கொலை யென்று ஆசையால் அடக்கிக் கொள்வேனானால், அது பற்றி வரும் பழிபாவங்கள் என்னை யடையாமலிருக்குமோ? ஆதலால், இப் பசுவானது அருமையான இளங்கன்றை இழந்து வருந்துகின்றதைத் தவிர்க்க வழியில்லாதவனாகிய நானும், இந்தப் பசுவைப்போல நெடுநாளாக வருந்தி அருமையாகப் பெற்ற என் புத்திரனைப் பழிக்குப் பழியாகக் கொன்று வருத்தங் கொள்வதே தகுதி ” என்று சொல்லினார்.

அதுகேட்டு மனங்கலங்கிய மந்திரிகளுக்குள் ஒரு மந்திரியானவர் அரசனை வணங்கித் “தருமநெறி தவறாத தலைவனே ! சாவதானமாகத் தயவுசெய்து என் வார்த்தையைக் கேட்டருள வேண்டும். ஆன்மாக்களுக்கு அறிவின் உயர்வு தாழ்வு பற்றியே புண்ணிய பாவங்களும் ஏறிக் குறைந்திருக்கும் என்னுஞ் சுருதி வாக்கியத்தின்படி தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பெறுதற்கு யோக்கியமான அறிவுள்ள மனிதப் பிறவியெடுத்த ஜீவர்களுக்குள் ஆனை மதப்பட்டு அடவி அழித்தது என்னும் நியாயம்போல மதத்தினால் காமக்குரோத முதலானவைபற்றி ஒருவரை யொருவர் கொலை செய்தாரானால் அக்கொலைக்கு ஈடாக கொன்றவரைக் கொலை செய்விக்கக் கடவரென்றும், அப்படி யன்றிக் காக்கை யேறிப் பனம்பழம் விழுந்தது என்னும் நியாயம்போல் வலிமை பகைமை முதலானவை யில்லாமல் விதிவசத்தால் ஒருவர் இறந்ததற்கு வியாஜமாக முன்னிட்டவர்களை அவ்வாறு இனி முன்னிடவொட்டாமலிருக்கத் தண்டித்து முன்னிட்டதனால் வந்த பாவத்துக்குப் பரிகாரஞ் செய்விக்கக் கடவரென்றும், அப்படியன்றி அமுதம் ஊட்டுகின்றபோது அதுவே விஷமாகிக் கொன்றதென்னும் நியாயம்போல் நல்ல வழியில் நிறுத்தும் பொருட்டு அச்சமுறுத்தித் தண்டிக்கும்போது அபாயம் நேரிட்டு இறந்ததற்கு வேறு காரணமாகியிருந்த தந்தை குரு அதிகாரி முதலானோர்களை அநசன முதலான அரிய விரதங்கள் தவங்கள் செய்விக்கக் கடவரென்றும், மிருகம் பட்சி முதலான மற்ற உயிர்களுக்கு மனிதர்களால் கொலைநேரிட்டால் அந்தந்த உயிர்களின் தரத்துக்கும் அவரவர் குணகுணங்களுக்குஞ் செய்கைகளுக்குங் காரணங்களுக்குந் தக்கபடி யறிந்து பிராயச்சித்தஞ் செய்விக்கக் கடவரென்றும், பொதுவாக அறநூல்களில் விதித்திருக்கப்பட்ட விதியை இன்று கன்றின் கொலைபற்றி நீர் செய்விக்க எண்ணிய அபூர்வமான விதி விலக்குகின்றதே ; இது தகுதியைக் கடக்கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடமுண்டுபண்ணுமே” என்றார்.

அதுகேட்ட அரசன் "மந்திரியே" நீர் பயனைத் தரும் விருக்ஷத்திலுள்ள பழத்தைப் பாராது பிஞ்சைப் பிடித்ததுபோல் பிடித்தீர். நன்றாயிருந்தது உமது வார்த்தை! அறிவின் உயர்வு தாழ்வுகளைப் பற்றிப் புண்ணிய பாவங்கள் ஏறிக் குறையுமென்று பூர்வபாகத்திற் சொல்லிய சுருதி, உத்தரபாகத்தில் பரமேசுவரன் ஆன்மாக்கள் தோறும் விகற்பமில்லாமல் நிறைந்திருக்கின்றபடியால், மாயையின் காரியமாகி வேறுபட்ட அறிவை நோக்காமல், அப்பரமேசுவரனை நோக்கி எல்லா உயிர்களையும் சமமாக எண்ணி நடக்க வேண்டும் என்ற உத்தர பாகத்தின்படி, பிறப்பு, குணம், சாதி, தொழில் முதலான விகற்பங்களை நாடாது உயிர்க்கொலையினிடத்துச் சமானமாகத் தண்டிப்பதே தகுதி; என் புத்திரன் தேரிலேறிக்கொண்டு செல்வச் செருக்கினால் மறதி பற்றியே இப் பசுவின் கன்றைக் கொன்றான், ஆதலால் இவன் காக்கை ஏறிப் பனம்பழம் விழுந்தது போல வியாஜமானவனுமல்லன், அமுத மூட்டி விஷமானதுபோல் நன்மை செய்விக்கப்போய்க் கொலைக்குக் காரணமானவனுமல்லன், ஆனை மதப்பட்டு அடவி யழித்தது என்று நீர் சொல்லிய நியாயத்துக்குச் சரியாக விருக்கின்றான், ஆதலால் இவனைக் கொல்வதே முடிவு" என்று சொன்னார்.

அதுகேட்டு மற்றொரு மந்திரியானவர் அரசனைத் தொழுது "மகாராஜனே! சுருதியில் எல்லா உயிர்களையும் உயர்வு தாழ்வு நோக்காது சமனாக நோக்கவேண்டுமென்று உத்தரபாகத்தில் விதித்திருக்கின்றது அந்தணரொழுக்கத்துக் கன்றி அரசரொழுக்கத்துக்குப் பொருந்தாதே; அது பொருந்துமானால், பிராமணர் முதலான குலாசாரமும் பிரமசாரி முதலான ஆசிரம ஆசாரமும் பெரியோர் சிறியோர் நல்லவர் தீயவர் என்கிற கிரமப்பாடுகளும் வேறுபட்டு உலகநிலை தவறி அரசாட்சி மழுங்கிவிடுமே, இது ஒழுக்கத்தைக் கடக்கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடங்கொடுக்குமே, ஆதலால் பூர்வ பாகத்தில் விதித்த விதிப்படி அறநூல்களிற் குறித்த நியாயங்களைக் கொண்டு தீர்ப்பிடுவதே நெறியாகும்" என்று சொன்னார்.

அதுகேட்டு மனுச்சோழர் நகைத்து "அமைச்சரே! நீர் வழிக்குத் துணையாக வருவான்போல் வந்து நடுக்காட்டிற் பயங்காட்டிப் பணம் பறிக்கின்றவன் போலப் பயம் காட்டுகின்றீர். பரமேசுவரன் அவ்வவ் வுயிர்களிடத்திலும் வேறுபடாமல் விளங்குகின்றபடியால் எவ்வுயிர் களையும் பொதுவாக நோக்கவேண்டும் என்ற உத்தரபாகத்தின் விதியை நான் அனுசரித்துக்கொண்டது உயிர்க்கொலையாகிய பாவ நிவர்த்திக்கு மாத்திரமே யல்லது மற்றொன்றிலுமல்ல. இக் கருத்தை அறிந்து கொள்ளாமல் 'கருத்தறியாதவன் சொன்னதே கொள்வான்' என்பதுபோலக் கொண்டு ஒழுக்கங் கடந்த குற்றம் வருமென்று

கூறினீர். ஆனல் மற்றவை யெல்லாம் நிற்க, கொலைப்பாதக நிவர்த்திக்கு மாத்திரம் எவ்வுயிர்களையுஞ் சமமாகக் கொள்ளவேண்டுமென்பது எவ்வகையாலென்பீரேல் :- உயிர்களெல்லாஞ் சிற்சத்தியினுருவமாகலானும் எல்லா உயிர்களுக்கும் இறைவனே தனுகரணங்களைக் கொடுத்தலானும், அவனது சிற்சத்தியாகிய உயிர்களை அவன் கொடுத்தருளிய உடம்பினின்றும் நீக்குதல் நினைக்கப்படாத அபராதமாகலானும், எங்கெந்த உயிர்களும் இயல்பினல் அல்லாமல் இம்சையினல் உடம்பை விட்டுப் பிரியும்படி நேரிட்டால் அந்தந்த உயிர்களுக்கும் அவ்வவ் வுடம்பை விட்டு நீங்கும்போதுண்டாகும் வருத்தம் பெரிதாக இருக்குமாகலானும், அன்றியும் கொலை செய்யுமிடத்து, கரும்பையும் எள்ளையும் ஆலையிலுஞ் செக்கிலும் வைத்தாட்டும்போது நெருக்கிலகப்பட்டு அரைபட்டு நசுக்குண்டு சின்னபின்னப்பட்டு அக்கரும்பிலும் எள்ளிலுமிருந்து ரசமும் நெய்யும் எப்படிக் கலங்கி வருமோ அப்படியே, உடல் நசுக்குண்டு அரைபட்டுச் சின்னமாக அதிலிருந்து நடுநடுங்கி அறிவுகெட்டுத் திகைப்படைந்து கலங்கி வருவது எவ்வுயிர்களுக்கும் பொதுவாகலானும், தமக்குக் கொலை நேரிடுவதை அறிந்தபோது உடம்பு நடுங்கியும், பதைத்தும், வியர்த்தும் தடதடத்துந் தள்ளாடியும், கால்சோர்ந்தும், கண்கலங்கியும், இருளடைந்தும், காதுகள் கும்மென்று அடைபட்டும், நாசி துவண்டும், வாய்நீருலர்ந்தும், நாக்குழறியும், வயிறு பகீரென்று திகிலடைந்தும், மனம் திகைத்துப் பறை யடித்தாற்போற் பதபதவென்று அடித்துத் துடித்துத் துக்கமுஞ் சோர்வுங் கொண்டு மயங்கவும், பாய்மரச் சுற்றி லகப்பட்ட காக்கை போலவும், நீர்ச்சுழியி லகப்பட்ட வண்டு போலவும், சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போலவும், உயிர் சுழன்று சுழன்று அலையவும் உண்டாகின்ற பயங்கரம் எவ்வுயிர்களுக்கும் இயல்பாகலானும், இறந்தவுடன் அவ்வுயிர்கள் இழப்பினற்பட்ட இம்சையுமன்றி உடனே பிறப்பினலும் வருத்தமடைந்து துக்கப்பட வேண்டுமாகலானும், நாம் வேண்டி ஒருயிரைப் பிறப்பிப்பதற்குச் சுதந்தரமில்லாதபடியால் நாம் வேண்டி ஒருயிரை இறப்பிப்பதற்கும் சுதந்திரமில்லை ; இறப்பிப்பதற்கும் பிறப்பிப்பதற்கும் இறைவனே சுதந்தரமுள்ளவனென் றெண்ணமல் ஆகாமியத்தால் கொலை செய்வதனல் மீளாநரகம் நேரும் என்றறிந்து கொள்வீர் ; ஆதலால் எவ்வுயிர்களிடத்துங் கொலைப்பாதகத்தைச் சமமாகக் கொள்ளவேண்டும். இந்த நியாயத்தின்படி என்புதல்வனைப் பழிக்குப் பழியாகக் கொன்று விடுவதே முடிவு'' என்று சொன்னர்.

அதுகேட்டு வேறொரு மந்திரியானவர் மனுச்சோழரை வணங்கி ''அரசனே! உமது பெயரினல் விளங்கும் மனுநூலிற் குடுமியையும் முகரோமத்தையும் க்ஷவரஞ்செய்து, தான் கொன்ற பசுத்தோலைப்

போர்த்துப் பசுமந்தையினிடத்தில் வாசஞ் செய்து, கோசலத்தினல் ஸ்நானம் பண்ணி, இந்திரியங்களை அடக்கியிருத்தல், கஞ்சிகுடித்தல், அவிசுபண்ணியுண்டல், பட்டினியிருத்தல், பசுமந்தையினுடன் போதல், பசுக்களுக்கு உபசாரஞ் செய்தல், பசுதானஞ் செய்தல் முதலான செய்கைகளைப் பசுக்கொலை செய்தோர்க்குப் பிராயச்சித்தமாகச் செய்விக்க வேண்டு மென்று விதித்திருக்கின்றதே; அதற்கு மாருகப் புதல்வனைக் கொலை செய்வீரானல் விதிமாருட்டமென்னும் குற்றம் வருவதாகத் தோன்றுகின்றதே'' என்று சொன்னர்.

அதுகேட்ட மனுச்சக்கரவர்த்தியானவர் ''மந்திரி! நீர் சொன்னது பால்வேண்டி யழுகின்ற குழந்தைக்குப் பழத்தை எதிர்வைத்துப் பராக்குக் காட்டுவது போலிருக்கின்றது, விதிமாருட்டமென்னுங் குற்றம் வருவதாகத் தோன்றுகின்றதென்று சொன்னீர். அந்த மனுநூல் அநித்தியமாகிய தேகத்தில் அபிமானமும் அசுத்தமாகிய பிரபஞ்சபோகத்தில் ஆசையும் வைத்த கர்மிகளுக்கே அவ்விதி கூறியதல்லது, நித்தியமாகிய சிவத்தில் அபிமானமும் சுத்தமாகிய சிவபோகத்தி லாசையும் வைத்த என்பிதா மூதாதை முதலானவர்களுக்குக் கூறியதல்ல. உயிர்க்கொலை நேரிட்டால் உயிர்விடக் கடவரென்றே குறிப்பினற் கூறியிருக்கின்றது. என் பிதா மூதாதைக்கு எவ்விதியோ அவ்விதியே எனக்கும் என் புத்திரனுக்கும் வேண்டத்தக்கது. ஆதலால் விதிமாருட்ட மாகாது. இந்த நியாயத்தால் என் புத்திரனை யிழந்து விடுவதே முடிவு'' என்று சொன்னர்.

அதுகேட்ட மற்றெருரு மந்திரியானவர் மகாராஜனை வணங்கி ''உலகந் தோன்றியது முதல் இது பரியந்தம் தெய்வ கடாக்ஷத்தினலும் வல்லமையினலும் நீதியுடன் உலகாண்ட அரசர்கள் தாங்கள் ஆளுங் காலங்களிற் பசுமுதலான மிருகவர்க்கங்களுள் ஒவ்வொன்றை அகங்காரத்தால் அடித்துக் கொன்ற அந்நியமானவர்களையும் பிராயச்சித்தஞ் செய்வித்தார்களே யல்லது, கொலை செய்வித்தவர்கள் உண்டென்று கேட்டதில்லை. அப்படியிருக்க, உமது புத்திரன் இந்தப் பசுவின் கன்றைக் கொல்லவேண்டுமென்று கறுவுகொண்டு கொன்றவனல்லன். நீரெப்படி அவனைக் கொலைசெய்யும்படி தீர்ப்பிடலாம்? அவ்வாறு தீர்ப்பிட்டால் முன்னோர் செய்கைக்கு முரணுன தென்னும் குற்ற முண்டாகுமே?'' என்றார். அதுகேட்டு மனுச்சோழரானவர் ''மந்திரி! நீர் மர பறியாதவன் மணம் பேச வந்ததுபோற் பேசவந்தீர். முன்னோர் செய்கைக்கு முரணுன தென்னும் குற்றம் வருமே யென்றீர். ஆனல் நான் சொல்வதை நன்ருகக் கேளும். பூர்வம் என் முன்னோர்கள் ஆளுங் காலங்களில் இப்படிப்பட்ட கொலை நேர்ந்ததேயில்லை. ஏகதேசங்களில் ஒவ்வொரு கொலைப்பாதகம் நேரிட்டபோது தம்முயிரையுங் கொடுத்துப்

பழிக்கு ஈடுகட்டி யிருக்கின்றார்கள். அவர்கள் நிற்க, மற்ற அரசர்களோ வென்றால் தாங்கள் ஆளுங் காலங்களில் தேசாசார முதலான கற்பனை களைப்பற்றி நூதன நூதனமாக நியாயங்களை யேற்படுத்திக்கொண்டு அவைகளின்படி நடத்தினார்கள். அவ்வரசர்கள் என்னொடு சேர்க்கப் பட்டவர்களல்லர். ஆதலால் என் தீர்ப்பின்படி நடத்துவதே துணிவு'' என்றார்.

அதுகேட்டு மற்ற மந்திரிகளெல்லாம் சேர்ந்து வணங்கி நின்று, ''மஹாராஜனே! கூறியதே கூறுகின்றார்களென்று கோபஞ் செய்யா மல் யாங்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டருள்வீராக; இந்தப் பசுவோ ஐயறிவுள்ள மிருகவர்க்கத்துள் ஒன்று; இது பெற்ற கன்றோ பால் கொடுத்தற்குரிய பசுவாகத்தக்கதன்று. ஏருழுதற்குரிய எருதாகத்தக்க சேங்கன்று; உமது புத்திரனோ ஆறறிவுள்ள ஆண் மக்களிற் சிறந்த நல்லறிவுடையவன்; அவனோ அக்கன்றைக் கொல்ல வேண்டுமென்று கொன்றவனல்லன்; இக்கொலையோ கன்றினுடைய ஊழ்வினையென்று உலகமெல்லாஞ் சொல்லும்; ஆதலால் இதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விப்பதேமுறை'' என்று சொன்னார்கள்.

அதுகேட்டு அரசன் ''மந்திரிகளே! நீங்கள் உண்மையைக் கண்டறிந்து சொல்வதற்குச் சக்தியற்றவர்கள்போல் இலேசாகச் சொல்லுகின்றீர்கள்; நல்லது, நான் சொல்லுகின்றதைக் கேளுங்கள். 'இப் பசுவோ ஐயறிவுள்ள மிருகவர்க்கத்திலொன்று' என்று சொன்னீர்கள். நன்றாயிருக்கின்றது உங்கள் நியாயம்! உயர்வு தாழ்வு களை உயிர்களின் அறிவினிடத்து வைத்துத் தாழ்ந்த அறிவுள்ள மிருகங்களைக் கொன்றால் பிராயச்சித்த மென்றும் உயர்ந்த அறிவுள்ள மனிதர்களைக் கொன்றால் கொலை செய்வதென்றும் சொல்லுகின்ற உங்கள் வார்த்தையின்படியே, இப்பசு மனிதரறிவைப் பார்க்கினும் உயர்ந்த அறிவுள்ளதாகவிருக்கின்றது. எவ்வாறெனில், எந்த உலகத் தில் எந்தக் காலத்தில் எந்தப்பசு இந்தப் பசுவைப்போலக் கன்று இறந்ததைக் குறித்து ஆற்றப்படாத துக்கத்தோடும், அதிகாரிகளாலும் பகைவராலும் அயலாராலும் மற்ற உயிர்களாலும் ஒருவர்க்குக் குறை நேரிட்டால் அக்குறையை அரசன் தனக்குத் தெரிவிப்பதற்கு அரண் மனைவாயிலில் ஆராய்ச்சிமணி கட்டுவித்திருக்கிறானென்று சாதாரண மனிதர்களாலும் அறியப்படாத இந்தக் காரியத்தை அறிந்து வந்து, அந்த மணியைக் கொம்பினா லடித்துச் சத்தமெழுப்பிக் கதறிக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றது? இதனை யெப்போதாவது கேட்டிருக் கின்றீர்களோ? இல்லையே, இந்தப் பசு மாத்திரம் அப்படி அறிந்து செய்ததை யின்று பார்த்து நின்றீர்கள். ஆதலால் இது முன் தவக் குறையால் பசுவுடம்பெடுத்த தாயினும், மனிதப் பிறப்பில் உயர்

குலத்தில் மேலான அறிவோடு பிறந்திருக்கின்றதாகவே கொள்ள வேண்டும். அன்றியும் பசு எல்லாப் பிறப்பிலும் உயர்வுள்ளதென்றும் அதன் கொம்பினடியில் பிரம விஷ்ணுக்கள் இருக்கின்ருர்க ளென்றும், காவிரி முதலான புண்ணிய தீர்த்தங்கள் அந்தக் கொம்பி னுனியில் இருக்கின்றன வென்றும், சிவபெருமான் சிரசிலும் சிவசக்தி நெற்றியி லும் இருக்கின்ருர்களென்றும், சுப்பிரமண்யக் கடவுள் நாசியிலும், அசுவினிதேவர் காதுகளிலும், சந்திரசூரியர் கண்களிலும், வருணன் நாவிலும், சரஸ்வதி குரலிலும், கந்தருவர் மார்பிலும், இந்திரன் கழுத்திலும், உருத்திரர் முதுகிலும், சத்தமாதர்கள்குறியிலும், இலக்குமி குதத்திலும், கங்கை மூத்திரத்திலும், பூமிதேவி வயிற்றிலும், யமுனை சாணத்திலும், திருப்பாற்கடல் முலையிலும், யாகாக்கினி வயிறு முகம் இதயம் என்னும் உறுப்புக்களிலும், அருந்ததி முதலான கற்புள்ளவர் கள் உடம்பிலும் இருப்பார்களென்றும் சொல்லியிருக்கின்றதே. அன்றி யும் பரமசிவன் திருமுடிக்கு அபிஷேகஞ் செய்ய யோக்கியமான பால் முதலான திரவியங்களைக் கொடுக்கின்றதே. அன்றியும் திருவெண்ணீற் றின் காரணமான திரவியம் பிறப்பதற்கும் இடமாக விருக்கின்றதே. அன்றியும் நான்கு வேதமும் கால்களாகவும், கருமமும் ஞானமும் கண்களாகவும், ஆகமங்களும் சாத்திரங்களும் கொம்புகளாகவும், தருமமே உடலாகவும், தவமே நடையாகவுங் கொண்டு பரமேசுரனுக்கு வாகனமாக விளங்கிய தருமவிடபத்துக்கு இனமாகவும் இருக் கின்றதே. இப்படிப்பட்ட மேன்மையுள்ள பசுவை ஐயறிவுடைய மிருக வர்க்கத்துள் ஒன்றென்று சொல்லப்படுமோ?

"இதன் கன்ருே பால்கொடுத்தற்குரிய பசுவாவதில்லை, ஏருழுதற் குரிய எருதாகத் தக்க சேங்கன்று' என்று சொன்னீர்கள்; தேவர்க ளெல்லாம் பிறப்பதற்குத் தவஞ் செய்கின்ற மகத்துவ முள்ள இந்தத் திருவாரூரிலே பிறந்த எல்லா உயிர்களும் சிவகணங்க ளென்கிற சித்தாந்தப்படி, இந்த க்ஷேத்திரத்திலே பிறந்த இக்கன்றைச் சிவகண மென்று கொள்வதை விட்டு, சேங்கன்றென்று சொல்லப்படுமோ? 'புத்திரனே ஆறறிவுள்ள ஆண் மக்களிற் சிறந்த நல்லறிவுள்ளவன்' என்றீர்கள்; சிவதரிசனஞ் செய்யத் தேரூர்ந்து போய்ச் செல்வ மறைப்பினுற் கண்மறைந்து கன்றைக் கொன்றவன் நல்லறிவுள்ளவ னென்று சொல்லப் படுவனே? கன்றிறந்ததை ஊழ்வினையென்று உலகஞ் சொல்லு மென்றீர்கள்; பிராரத்துவ வாதிகளுக்கல்லாமல், காமக் குரோதாதிகளாற் பாவங்களைச் செய்வதற்குச் சீவனே ஆகாமிய கர்த்தாவென்று கொள்ளுகிற உத்தமமார்க்கத்தை யுடையோர்க்கு ஊழ்வினை யென்று சொல்லத் தகுமோ? 'இதற்குத் தக்க பிராயச் சித்தஞ் செய்விப்பதே முறை' யென்றீர்கள்; மலையை யெடுத்துண்டு வயிறு நோகின்றவனுக்குச் சுக்கிடித்துக்கொடுத்துச் சொஸ்தப் படுத்து

வார்களோ ? அதுபோலக் கொலைப்பாதகஞ் செய்தோர்க்குப் பிராயச் சித்தஞ் செய்வித்துப் பாவநிவர்த்தி செய்யப்படுமோ? அவ்வாறு செய்வேனானால் என்றும் மீளா நரகத்தில் என் புத்திரனை விழுத்துவது மன்றி, யானும் விழுந்து வருந்துவேன்; இவ்வுலகத்தினும் மீளாத பழிக்கு ஆளாகச் சமைவேன்; அன்றியும் எண்ணிறந்த பெருமை பெற்ற இரவி குலத்திற்கும் என்னை யடுத்திருக்கின்ற உங்களுக்கும் ஒரிழுக்கு வார்த்தையும் உண்டாகும். ஆதலால், இனி என் சொல்லுக் கிரண்டில்லை; இந்தப் பசுவின் கன்றைக் கொன்ற பழிக்கு ஈடாக என் புத்திரனைக் கொலை செய்வதே நிச்சயமாகிய தீர்ப்பு'' என்று சொல்லிவிட்டு, பின்பு மந்திரிகளுக்குள் கலாவல்லபன் என்கிற மந்திரியைப் பார்த்து ''மந்திரி! என் புத்திரனை யழைத்துப்போய் அந்தக் கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் கிடத்தி, நீ தேரிலேறிக் கொண்டு அவனுடம்பின்மேல் தேர்ச்சக்கர மேறும்படி செய்து கொலை செய்து வருவாய்'' என்று கட்டளையிட்டார். அப்போது மற்ற மந்திரிகளெல்லாம் கைநெரித்துக்கொண்டு கண்களிலே நீரரும்ப மனங்கலங்கிப் பிரமைகொண்டு நின்றார்கள்.

கலாவல்லபனென்கிற மந்திரியானவன், கடுந்தவம் புரிந்து பெற்ற கவுத்துவ மணியைக் கடலிலெறிந்து விட்டு வாவென்றும், பலநாள் வருந்தி வளர்த்த பஞ்சவர்ணக் கிளியைப் பருந்துக் கிரையிட்டு வாவென்றும், செய்தற்கரிய தவஞ்செய்து பெற்ற தேவாமுதத்தைச் சேற்றிற் கழித்து வாவென்றும் சொல்லக் கேட்டவன்போல் திடுக்கிட்டு உணர்வழிந்தும், திகைப்பூண்டு மிதித்தவன்போல் மயங்கி நின்றும், சற்று உணர்வுதோன்ற அது விஷயத்தில் மனமில்லாதவனா யிருந்தும் அரசன் ஆணையைத் தடுப்பதற்கு அஞ்சி வணங்கி விடைபெற்றுக் கொண்டு, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தளர்ந்த நடையோடு முகங்கருகி நெடுமூச்சு விட்டுக்கொண்டு, ''சிவசிவா! சம்போ! சம்போ! இந்தப் பாதகஞ் செய்யத்தானோ நான் மந்திரியாக ஏற்பட்டேன்! கொலையென்று சொல்லுகின்றோர்களைப் பார்த்தாலும் பயங் கொள்ளு கின்ற எனக்குத்தானோ இப்படிப்பட்ட விதி வரவேண்டும்! இந்தக் காரியத்தைச் செய்யாது விடுவோமென்றால் அரசன் கட்டளையைக் கடந்தா னென்னுங் குற்றம் நேரிடுமென்றும், அல்லது செய்வோ மென்றால் நமது உயிர்போற் சிறந்த வீதிவிடங்கன் விஷயத்தில் எப்படிக் கொலைசெய்யத் துணிவு உண்டாகுமென்று எண்ணி யெண்ணி என் மனம் இருதலைக் கொள்ளிக்குள் அகப்பட்ட எறும்புபோல் திகைக் கின்றதே! இதற்கு என்ன செய்வேன்! என்ன செய்வேன்!'' என்று வருந்தி வருந்தி ஒரு கால் முன் வைப்பதும் மற்றொரு கால் பின் வைப்பதுமாகி ஊசலாடுகின்றவனைப் போல் அலைந்தும், வேந்தன் விஷமுண்ணென்று கட்டளையிடினும் உண்ணவேண்டிய உரிமை நமக்

கிருக்கிறபடியால் போய்த் தொலைப்போம் என்று சற்றே நடந்து, 'எண்ணுதற்கும் யோக்கியமல்லாத இப்பாதகத்தை யெப்படிச் செய்வோம்' என்று சற்றே நின்று நடைத்தூக்கங் கொண்டவன்போல் தெளிந்தும் மயங்கியும், பித்தம் பிடித்தவன்போல் பிதற்றியும், கண்ணீர் சொரிந்து கலங்கினவனாகிப் பின்பு தெளிந்து, அரசன் நமக்கும் தந்தையாதலால் வீதிவிடங்கன் செய்த குற்றத்தை நாமேற்றுக் கொண்டு நம்முயிரைக் கொடுத்துவிடுவோம்' என்று துணிவுகொண்டு, அக்கன்று இறந்து கிடக்கிற வீதியினிடத்து அணைகடந்த வெள்ளம்போல அதிவேகமாக வந்து நின்று, தன்னரையி லிருந்த உடைவாளை உறையிலிருந் துருவியெடுத்துக்கொண்டு, தனது கழுத்தில் வைத்து ஊட்டியை அரிந்துகொண்டு உயிரிழந்து விழுந்தான்.

அதுகண்டு சில ஒற்றர்கள் அதிசீக்கிரமாகப்போய் மனுச்சோழரிடத்தில் "ஆண்டவரே! தேவரீர்க்குக் கண்போல் விளங்கிய கலாவல்லபனென்னும் மந்திரியானவர் சேங்கன்றிறந்து கிடக்கின்ற தெருவிற்போய் அரையிலிருந்த உடைவாளைக் கொண்டு தமது கழுத்தை யரிந்துகொண் டிறந்துவிட்டார்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அதுகேட்ட அரசன் அளிந்த புண்ணில் அம்பு பட்டதுபோல் துடிதுடித்து மிகவும் மனங் கலங்கி "ஓஹோ இதென்ன பாவம்! இதென்ன பாவம்! ஐயோ! கலாவல்லபனென்கிற மந்திரியானவன் நானிட்ட ஏவலைச் செய்வதற்குச் சம்மதித்தவன்போல் சென்றது 'நம் அரசனுக்குக் கன்றைப்பற்றி வந்த பழி மாத்திரம் போதாது, நாமும் பழி சுமத்துவோம்' என நினைத்துத்தானோ! எனக்கு நேரிட்ட இடரை யறிந்தும் எரியுங் கொள்ளியை யேறத்தள்ளுவது போலவும், நீண்டெரியும் நெருப்பில் நெய்விடுவது போலவும், அவ்விடருக்குமே லிடருண்டாகும்படி செய்தானே! கப்பல் உடைந்து கலங்கும்போது தெப்பமும் உடைந்தது போல், கன்றின் பழிக்குக் கலங்கும்போது மந்திரி பழியும் வளைத்துக்கொண்டதே! எனக்கு வந்த துன்பமெல்லாந் தனக்கு வந்ததாக வெண்ணி, என்னை இரவும் பகலும் காத்திருந்த மதியுள்ள மந்திரியை யினி எக்காலத்திற் காண்பேன்! இதைக் கேட்டவர்களெல்லாம் 'இதென்ன கொடுமையோ! கொள்ளைகொண்டவனை விட்டுக் குறுக்கே வந்தவன்மேற் குற்றம் நாட்டியது போலவும், கொண்ட மனையாளிருக்கக் கூலிவாங்க வந்தவளைத் தாலிவாங்கச் சொன்னது போலவும், பசுங்கன்றைக் கொன்ற தன் புதல்வனிருக்கவும், அவனை விட்டு அப்பழியை அமைச்சன்மேல் வைத்து அவனுயிரை வாங்கச் சொன்ன இவ்வரசன் அநியாயக்காரன்' என்று இகழ்ச்சி செய்வார்களே! அறிவில்லாதவன் செய்த காரியம் பயன்படாதது மாத்திரமோ?

பழியும் பாவமும் கொடுக்குமென்ற பெரியோர் வார்த்தைக்கு இலக்காயினேன்! ஐயோ! நான் என்ன காரியஞ் செய்தேன்! என்ன காரியஞ் செய்தேன் !" என்றும், 'திருவாரூர்ப் பூங்கோயிலினிடத் தெழுந்தருளிய தெய்வமே! அடுத்தவர்களுக்கு அருள்செய்கின்ற ஆண்டவனே! உன்னை நம்பியிருக்கின்ற அடியேனை இப்படிப்பட்ட சோதனையுஞ் செய்யலாமோ! உன் திருவடிகளுக்கு ஆளாகியிருக்கிற அடியேனை இப்படிப்பட்ட பழிக்கும் ஆளாக்கலாமோ ! என்றும் பலவிதமாகப் புலம்பிப் பரிதபித்துக்கொண்டு, "பின்னே துக்கம் தருவதான காரியங்களை முன்னே அறிந்து அக்காரியத்தைச் செய்யாதுவிட வேண்டும்; ஆலோசித்தறியாது செய்துவிட்டால் அதுபற்றித் துயரப் படாமல் மேல் செய்யத்தக்க காரியங்களை ஆலசியப்படுத்தாமல் செய்ய வேண்டுமாதலால், வருவது தெரியாது மந்திரியை யனுப்பிய நாம் துக்கப்படுவதிற் பயனென்ன? இனி நாமே போய்ப் புத்திரனைத் தேர்க்காலி லூர்ந்து, மந்திரி பழிக்கு நம்முயிரைக் கொடுத்துவிடுவோம்" என்றெண்ணி, அரண்மனைக்குப் புறத்தில் வந்து, தமது புத்திரனை யழைத்து வரும்படி காவற்காரர்களுக்குக் கட்டளையிட்டார்.

அவர்கள் கண்ணீர் வடிந்த முகத்துடன் "ஐயோ! மனுநீதி தவறாத மன்னவனுக்கும் இப்படிப்பட்ட ஆபத்து நேரிடலாமோ! நமது இளவரசனாகிய வீதிவிடங்கனிடத்திற் சென்று 'ஐயா! உம்மை அரசன் அழைத்துவரச் சொன்னார்' என்று எவ்வாறு சொல்வோம்! என்ன செய்வோம்!" என்று துயர்கொண்டு வீதிவிடங்கன் இருக்கும் அரண்மனைக்குச் சென்றார்கள்.

அதற்கு முன்னதாகவே, பெரியோர்களிடத்துப் பிராயச்சித்த விதியைக் கேட்கப்போன வீதிவிடங்கன் தமது பிதாவினிடத்தில் பசுவானது வந்து முறையிட்ட சமாசாரத்தை ஒற்றர்களாலே கேள்விப் பட்டு 'இனி நமக்கென்ன பிராயச்சித்த மிருக்கின்றது ! நமது பிதாவானவர் செய்கிற தீர்ப்பின்படி நடந்துகொள்ளுவோம்' என்று தேகமெலிந்து மேனி வேறுபட்டு, மனந்தளர்ந்து, முகஞ் சோர்ந்து தனது அரண்மனை யிடத்து வந்திருந்தான். அப்போது அரசன் அனுப்பிய காவற்காரர்கள் அவ்வீதிவிடங்கனைக் கண்டு கைகுவித்து எதிர் நின்றார்கள். அவர்களைப் பார்த்து 'நீங்கள் என்ன காரியமாக என்னிடத்தில் வந்தீர்கள்? என்று கேட்க, அவர்கள் ஒன்றுஞ் சொல்லாது ஊமைகளைப்போல விம்மிவிம்மி அழுது கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றார்கள். அதுகண்டு வீதிவிடங்கன், 'இவர்கள் ஏதோ ஒரு துன்பமான சமாசாரத்தைச் சொல்ல வந்தவர்கள் நாவெழாமல் நடுங்குகின்றார்கள்' என்று அறிந்து "ஓ காவற்காரர்களே! வந்த காரியம் இன்னதென்று சொல்லாமல் துக்கப் படுவதில் பலனில்லை; அந்தக் காரியம் எனக்குந் தெரியும், ஆயினும்

துயரப்படாமல் சொல்லுங்கள்'' என்றான். அதுகேட்டு, ''ஐயா! எப்படிச் சொல்வோம்! என்ன செய்வோம்! எங்கே போவோம்! எல்லார் குடியையுங் கெடுக்க எங்கே இருந்தோ தாட்சண்யமில்லாத தலையீற்றுப் பசுவானது ஒன்று வந்து ஆராய்ச்சி மணியை யசைத்து இனி உலகத்தை ஆள்வாரில்லாமல் அழிந்துபோகும்படி உம்மை அரசன் அழைத்து வரச் செய்வித்தது'' என்று சொன்னார்கள்.

அதுகேட்டு வீதிவிடங்கனைச் சூழ்ந்திருந்த உறவினர் சிநேகர் முதலானோரெல்லாம் ''இப்படிப்பட்ட அவதி நேரிடத்தானோ தியாகேசர் கோயிலுக்குப் போகத் தொடங்கியது! எள்ளளவும் இப்படிவரும் என்று அறியோமே! இதற்கு என்ன செய்வோம்!'' என்று அழுது சோர்ந்தார்கள். அந்தப் பிரகாரமே அரண்மனையிலுள்ள மற்றவர் களும் புலம்பி ஆவலித்தார்கள். இந்த அழுகையொலியை வீதிவிடங் கன் தாயானவள் கேட்டு இதென்ன காரணமென்று விசாரித்து, இன்ன காரணமென்று அறிந்து, கொழுகொம்பற்ற கொடியைப்போல் கீழே விழுந்து மூர்ச்சையடைந்து, சற்றே அறிவுவரத் தெளிந்து ''பாவியாகிய விதி என் பாக்கியத்தை யழித்ததே! தீமையாகிய வினைப்பயன் என் செல்வத்தை யழித்ததே! வஞ்சமாகிய ஊழ் என் வாழ்வை யழித்ததே! பலநாள் வருந்திப் பெற்ற என் வயிறு பற்று கின்றதே! பகீரென்று பதைக்கின்றதே! ஐயோ! என் புத்திரன் செய்த குற்றத்திற்கு என்னைக் கொன்றாலாகாதோ!'' என்று பலவித மாகச் சொல்லிக் கைநெரித்துக்கொண்டு கண்ணீர் விட்டுக்கொண்டு வயிறு பிசைந்துகொண்டு மாரடித்துக்கொண்டு வாயில் அறைந்து கொண்டு மனம் பதைத்துக்கொண்டு மண்ணிற் புரண்டு கொண்டு கோவென்று அழுதழுது புலம்பினாள்.

அப்போது வீதிவிடங்கனென்கிற இராஜபுத்திரன் அழுகின்ற தாய் முதலானவர்களைப் பார்த்து ''வீணாக நீங்கள் அழுது புலம்பு கின்றதில் என்ன லாபம்! பிரமதேவன் முதலான கர்த்தர்களுக் கானாலும் விதியைக் கடக்கக் கூடுமோ! எலும்பு நரம்பு தோல் முதலான அசுத்தங்களாற் கட்டிய இந்தச் சிறுவீட்டை நிலையென்று நம்பப்படுமோ! என்று பிறந்தார்களோ அன்றே இறந்தார்களென்று நினைக்கவேண்டும்; ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவென்றும், நிலத்தில் முளைத்த பூண்டுகள் நிலத்திலே மடியுமென்றும், சாமானியரான அசே தனர்களும் சொல்லிக் கொள்ளுகின்றார்களே; அறிவுள்ள உங்களுக் குத் தெரியாமற் போனதென்ன? இதுபற்றி எவ்வளவுந் துயரப்பட வேண்டுவதில்லை'' என்று பலவிதமான உறுதி வார்த்தைகள் கூறி, அவ்விடத்திலிருந்து புறப்பட்டு மனதில் நாணமும் நடுக்கமும் உண் டாகத் தந்தையாரிடத்திற்கு வந்து தொழுது வணங்கித் தூரத்தே நின்றான்.

அப்படி நின்ற புதல்வனை மனுச்சக்கரவர்த்தியானவர் நேரே பாராதவராய் வேறொருவன் முகத்தைப் பார்த்து, "இவன் இளங் கன்றை யெவ்வாறு கொன்றானோ, அவ்வாறு கொலை செய்யப் படுதற் குத் தக்க குற்றவாளி யாயினான்" என்றார். அப்பொழுது புத்திரன் "பசுங்கன்றைக் கொன்ற பாவியாகிய நான் அப்போதே உயிர்விட்டுப் பழிக்குப்பழி சரிக்கட்டுவேன்; ஆனால் தேவரீர் கட்டளை எப்படி நடத்துகிறதோ, அப்படி நடப்போமென்று அக் கட்டளையை எதிர் பார்த்திருந்தேன்" என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டான். உடனே அரசனானவர் கொலை வீரர்களை அழைப்பித்து, "இந்தக் குற்றவாளியை ஏற்பாட்டின்படி கடுங்காவல் செய்து கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் கொண்டு போய்க் கிடத்துங்கள்" என்று கட்டளையிட்டார். அந்தக் கட்டளைக்கு அஞ்சி அவ்வீரர்கள் உருவிய கத்தியோடு சூழ்ந்து நடுவே இராஜபுத்திரனைக் காவல் செய்து நடத் திக்கொண்டுபோக, மனுச்சக்கரவர்த்தியும் மலைபோல் உயர்ந்த ஒரு தேரிலேறிக்கொண்டு பின்னே நடந்தார்.

அதுகண்ட அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் "இந்த இராஜ குமாரனுக்கு ஐசுவரியமும் அழகும் அறிவும் குறைவில்லாது கொடுத்த தெய்வம் இடையிலே இந்தப் பழிக்கு ஆளாகச் செய்து, நல்லவிதி நடுவே யிருக்கக் கோணியவிதி குறுக்கே வந்ததென்று சொல்வதற்குச் சரியாக்கியதே! இன்பத்தை யனுபவிக்கின்ற இளமைப் பருவத்தில் எடுக்கப்படாத பழி வந்து சூழ்ந்து, சோறுண்ணும்போது தொண்டை விக்கிக் கொண்டதென்பதுபோல் துன்பத்தை யுண்டுபண்ணியதே! கல்யாணக் கோலங்கொள்வதற்கு இசைந்துவரும் பருவத்தில் செல்வத் திருமேனிக்குத் தீங்கு உண்டாகும்படி, வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி யுடைந்ததென்பதுபோல நேரிட்டதே! சிவதரிசனத்துக் குப் போனவிடத்தில் சேங்கன்றின் பழி வந்து, கிணறு வெட்டப் போனவிடத்தில் பூதம் புறப்பட்டதுபோல் தோன்றியதே! கடை கொள்ளப் போகும்போது கள்ளன் எதிர்ப்பட்டதுபோல், அருள் பெற்றுவரப் போகும்போது இந்தப் புத்திரனுக்கு அந்தக் கன்றானது எமனைப்போல எங்கே யிருந்து எதிர்ப்பட்டதோ! இந்தக் குமாரனைப் பற்றி நமக்கெல்லாமுண்டாகிய இரக்கம் பழிவாங்கவந்த பசுவுக்கும் உண்டாயிருக்குமானால், ஆராய்ச்சிமணியை யசைத்து முறையிட்டுக் கொள்ளாதே! ஐயோ! இந்தப் பசுவானது சூரியவமிசத்தை யழிக்கத் துசங் கட்டிக்கொண்டதே! இனி நம்மரசனுக்குப் பிற்காலத்தில் நீதியுடன் அரசாட்சி செய்யத்தக்க அரசனைப் பெறாமல் எல்லா உயிர் களும் நிலைதடுமாறி நின்று மயங்குமே; இந்த இராஜபுத்திரன் முன்பு சேனை சூழத் தேரிலேறி வந்த மங்கலமாகிய கோலத்தைக் கண்டு மகிழ்ச்சி யடைந்த நாம் இப்போது இப்புத்திரன் காவல்சூழக்

காலால் நடந்து வருகின்ற பரிதாபமாகிய கோலத்தைப் பார்ப்ப தற்கு என்ன பாவஞ் செய்தோமோ! இந்தப் புத்திரனுயிர்க்கு ஈடாக நம்முயிரை யெல்லாங் கொடுத்துவிடுவோமென்றாலும் அரசன் சம் மதிக்கமாட்டாரே! இந்தப் புத்திரன் உயிரிழந்தால் பின்பு அரசனும் உயிரிழப்பார், பின்பு நாமிருந்து என்ன செய்வது! இதற்கு முன் இறந்து விடுவதே சுகமாக விருக்கின்றதே! ஆ! ஆ!! நம்மரசனைப் போல இப்படிப்பட்ட அருமையான நீதியோடு அரசு செய்கிறவர்கள் முன்னுமில்லை பின்னுமில்லையே! தியாகராஜப் பெருமான் நமது இராஜனுடைய மனத்தைச் சோதிக்கும்படியாகவே இப்படிச் செய் வித்ததாகத் தோன்றுகிறதே! தரும தேவதை நமது அரசனது உண்மையாகிய நீதியின் தன்மையைச் சோதிக்கும்படி இவ்விதஞ் செய்ததாகத் தோன்றுகின்றதே!'' என்று பலவிதமாக அவரவர்களுந் தங்கள் தங்களுக்கு நேரிட்ட ஆபத்தென்று நினைத்தும் புலம்பியும் அதிசயித்தும் நின்றார்கள்.

ஆகாயத்தினிடமாக இவ்வதிசயத்தைப் பார்க்கும்படி வந்திருக் கின்ற தேவர்களெல்லாம் ''இந்த மனுச்சக்கரவர்த்தியானவன் செய்யத் துணிந்த காரியம் இவனுக்கு முன்னிருந்த அரசர்களுக்குச் சொல்லத்தான் கூடுமோ? அல்லது நினைக்கத்தான் கூடுமோ? இம் மனிதர்களைப் பார்க்கிலும் உயர் பிறப்பினராகிய நம்மவர்களுக்குத் தான் செய்யக் கூடுமோ? இவ்வரசன் நீதியிலும் மனோதிடத்திலும் சிறந்தவனாக விருக்கின்றான். இவனுக்குச் சிவகடாக்ஷம் கைகூடு மல்லது மற்றவர்களுக்குக் கூடுமோ? ஆயினும் இன்னும் நடக்கப் போகிற அற்புதங்களை யெல்லாம் பார்த்தறிவோம்'' என்று புகழ்ந்து சொல்லி நின்றார்கள்.

இந்தப் பிரகாரமாகச் சொல்லிக்கொண்டு நிற்க, மனுச்சக்கர வர்த்தியானவர் அந்தப் பசுங்கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் போய், தமது புத்திரனைக் காவல் செய்து முன்னே நடத்தி வந்த கொலைவீரர்களைப் பார்த்து ''இனிக் காலதாமதம் பண்ணாமல் இந்தப் பசுங்கன்றை யெடுத்து அப்புறத்தே வைத்து, அவ்விடத்தில் இவ் வீதிவிடங்கனைக் கிடத்தி வையுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

அதுகேட்டுக் கொலைவீரர்கள் மனம் பதைத்து மதிமயங்கி நின்றார் கள். அப்பொழுது தந்தையாகிய மனுச்சக்கரவர்த்தியின் கட்டளை யைக் கேட்டு மயங்கி நிற்கின்ற கொலைவீரர்களை வீதிவிடங்கன் பார்த்து, ''நீங்களேன் மயங்கி வருந்துகின்றீர்கள்? அந்தக் கட்டளை யின்படி நானே செய்து கொள்ளுகிறேன்'' என்று சொல்லித் தியாக ராஜப்பெருமான் சந்நிதிக்கெதிராகத் திரும்பி இரண்டு கைகளையுங் குவித்துச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு ''சிறு பிள்ளைக்குத் திருப்

பாற்கடலை அழைத்துக் கொடுத்த தியாகராஜப் பெருமானே! அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுயம்பிரகாச சாட்சாத்கார சிதாகாச சொரூப சின்மயனாகிய சிவசங்கரனே! அடியேன் பசுங்கன்றைக் கொன்ற பாதகனாயினேன். அதுவும் போதாமல் ஐயோ! எனக்கு நல்வழியைக் கற்பித்துக் கண்போல் விளங்கிய நின்னடிமையிற் சிறந்தவனாகிய மதியுள்ள கலாவல்லபனென்கிற மந்திரியையும் இறப்பிப்பதற்குக் காரணமாகியிருந்தேன்! இப்படிப்பட்ட என்போல் பாவிகளெங்கே யுண்டு? என் பிதா தண்டிக்கப்போகிற தண்டனை என் பாதகத்துக்குத் தக்க தண்டனையுமல்லவே! என்ன செய்வேன்! பாவியாயினும் எனக்கு வேறொரு கதியுமில்லாதபடியால், முன் தாயைக் கூடித் தந்தையைக் கொலை செய்தவனது மாபாதகத்தை மன்னித்து அனுக்கிரகஞ் செய்ததுபோல், அடியேனுக்கும் அனுக்கிரகஞ் செய்ய வேண்டும்; என் பிதாவுக்கும் எனக்கும் உரித்தாகியிருந்த மற்றவர்களுக்கும் என்னைப் பற்றி வந்த பழி பாவங்களை நீக்கியருள வேண்டும்; என் பொருட்டு இறந்த மந்திரியை யெழுப்பிக் கொடுத்தருள வேண்டும்; இதோ இந்தப் புலாலுடம்பைப் போட்டுவிட்டு வருகிறேன்; என்னையுந் திருவடி நீழலிற் சேர்த்துக்கொள்ள வேண்டும்; இந்தப் பிறப்பிலே யெனக்குத் திருவடி கிடையாதானால் வரும் பிறப்பிலாயினுங் கிடைக்கத் தக்க நல்லறிவும் பேரன்பும் உள்ளவனாகப் பிறப்பிக்க வேண்டும்'' என்று சொல்லி விண்ணப்பஞ் செய்துகொண்டு திரும்பி நின்று, மாதா பிதா குரு முதலானவர்களுக்கும் மனத்கினால் வந்தனஞ் செய்து, ''இம் மனுச்சோழருடைய செங்கோல் மாறாது நிலைபெற்றிருக்க வேண்டும்'' என்று இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டு பஞ்சாட்சரத்தை யுச்சரித்துக் கொண்டு விழுந்து வடக்கே தலையும் தெற்கே காலும் வைத்துக்கொண்டு இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு சிந்தையைச் சிவபெருமான் திருவடித் தியானத்தில் வைத்துக்கொண்டு யோகநித்திரை செய்பவன்போல உடம்பைக் கிடத்தினான்.

அப்போது மனுச்சக்கரவர்த்தியானவர் சிவத்தியானஞ் செய்துகொண்டு, தியாகேசர் சந்நிதியை நோக்கி ''அடியேனை யாட்கொண்ட ஆண்டவனே! இவ் வீதிவிடங்கனென்பவன் பசுங்கன்றைக் கொலை செய்தானென்பது பிரத்தியட்சமாக உண்மையென்று வெளிப்பட்டபடியால், இந்தக் குற்றவாளியின் கொலைப் பாதகந் தீரத் தக்க தண்டனை செய்வதற்குச் சக்தியில்லாத அடியேன், தேவரீர் திருவுளப்பாங்கின்படி மேலோர் ஏற்படுத்திய தரும நூல்களில் கொலை செய்தவனைக்கொலை செய்யக் கடவரென்று விதித்திருக்கின்ற விதியின்படி, விதி மாறுபட்ட முதலான குற்றங்களுக்குச் சிறிது மிடங்கொடாமல், இவனைக்கொலை செய்யும்படித் திரிகரண சுத்தியாகத் தீர்ப்பிட்டுக்

கொண்டு. இதோ தேர்க்காலிலூர்ந்து கொலை செய்யத் தொடங்குகின்றேன், இத் தீர்ப்பினிடத்துத் தேவரீர் திருவடி சாட்சியாக என் மனமறிந்து யாதொருபிசகும் நேரிட்டதில்லை. என்னையுமறியாது ஏதாகிலுங் குறை நேரிட்டிருக்குமானால் அதைத் தேவரீர் மன்னித்துக்கொள்ள வேண்டும். இந்தக் குற்றவாளியின் பாவாத்மாவை அப்பாவத்தினின்று நீங்கும் வண்ணந் தக்க தண்டனை செய்வித்தருளி, மறுபிறப்பிலாயினும் கடைத்தேறும் வழியைக் கடாக்ஷிக்கவேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்துகொண்டு, தேரிற்கட்டிய குதிரைகளை விழுந்து கிடக்கின்ற வீதிவிடங்கன் கழுத்தடியிற் சக்கரமழுந்தும்படி நேராக முடுக்கித் தேரை நடத்தினர்.

அப்போது தேர்ச்சக்கரமானது வீதிவிடங்கன்மேல் அழுந்திக் கறகறவென்று இழுத்துக்கொண்டு அதிவேகமாகச் செல்ல, உடல் குழம்பிச் சின்னபின்னப்பட்டு நசுக்குண்டு, கையாற் பிசைந்து ரசம் பிழிந்த மாங்கனியின் கோதுபோல, உடல்வேறு உயிர்வேறாக இறந்தான்.

அதுகண்ட தேவர்களெல்லாம் ''அருமையாகப் பெற்ற புத்திரனை நோக்காமல் புண்ணியத்தை நோக்கிய கண்ணியவானே! உனக்குச் சுபகர முண்டாவதாக!'' என்று வாழ்த்திக் கற்பகப் பூமாரி பொழிந்தார்கள். தேவதுந்துபிகள் அதிர்ந்தன. அந் நகரத்தா ரெல்லாம் ''இப்படிப்பட்ட நீதி செலுத்துகின்ற மஹாராஜனை என்ன தவஞ் செய்து பெற்றுக் கொண்டோம்'' என்றும், ''ஐயோ! இனி எக் காலத்தில் வீதிவிடங்கனைக் காண்போம்'' என்றும் இன்பக் கண்ணீரும் துன்பக்கண்ணீரும் விட்டுக்கொண்டு நின்றார்கள். உடனே மனுச்சக்ரவர்த்தியானவர் மந்திரியின் பழிக்காகத் தன் உயிரைக் கொடுக்கத் துணிந்து தேரிலிருந்து கீழே யிழிந்தார். அப்போது ஸ்ரீகண்டர், அனந்தேசர், காலச்செந்தீயுருத்திரர், துவாதசருத்திரர், ஏகாதசருத்திரர், புத்தியட்டகர், கூர்மாண்டர், ஆடகர், சதவுருத்திரர், அஷ்டமூர்த்திகள், நீலலோகிதர், கங்காளகபாலர், அசுவாரோகணர், அஷ்டபயிரவர், வீரபத்திரர், சக்ரதரர், நான்முகர் முதலான பதமூர்த்திகளும், கபாலிகன், அசன், புதன், வச்சிரதேகன், பினாகி, கிருதசாதிபன், உருத்திரன், பிங்கலன், சாந்தன் க்ஷயாந்தகன், பலவான், அதிபலவான், பாசாத்தன், மகாபலவான், சுவேதன், ஜயபத்திரன், தீர்க்கபாகு, ஜலாந்தகன், மேகவாகனன், சௌமியகேசன், சடாதரன், லக்ஷ்மீதரன் ரத்நந்திரன், ஸ்ரீதரன், பிரசாதன், பிரகாசன், வித்தியாதிபன். ஈசன், சர்வஞ்ஞன், பலிப்பிரியன், சம்பு, விபு, கணாத்தியக்ஷன், கிரியக்ஷன், திரிலோசனன் முதலான பதத்தலைவர்களும்; இந்திரர், சந்திரர், சூரியர் முதலான தேவர்களும்; வசிட்டர். அகத்தியர், புலத்தியர், பராசரர், வியாசர் முதலான முனிவர்களும், கண்ணுவர், கருக்கர்,

சதானந்தர் முதலான இருடிகளும்; அசுரர், அந்தரர், ஆகாயவாசிகள், விஞ்சையர், வித்தியாதரர், கருடர், காந்தருவர், இயக்கர், கின்னரர், கிம்புருடர், சித்தர், நிருதர், பூதர், பைசாசர், போகபூமியர், உரகர் முதலான கணங்களும்; நந்தி, பிங்கிருடி, சண்டன், பிரசண்டன், சங்குகன்னன், வாணன், அந்தகன், கும்போதரன், விருபாக்ஷன் முதலான பிரமத கணங்களும் சூழ்ந்து துதித்து வரவும்; பேரிகை, மத்தளம், தாளம், சங்கம், சச்சரி, தடாரி, முதலான வாத்தியங்கள் முழங்கி வரவும்; "எல்லாம் வல்ல இறைவன் வந்தான்! நல்லோர்க் கருளும் நாயகன் வந்தான்! முப்புரமெரித்த முன்னோன் வந்தான்! தப்பிலார்க் கருள்செயுந் தயாநிதி வந்தான்! வள்ளல் வந்தான்! மஹா தேவன் வந்தான்! எள்ளிலெண்ணெய்போ லிருப்பவன் வந்தான்! அன்பர்க்கருளும் ஐயன் வந்தான்! இன்பங்கொடுக்கும் இறைவன் வந்தான்! முத்தொழில் நடத்தும் முதல்வன் வந்தான்! பத்தர்கள் புகழும் பதத்தோன் வந்தான்! தேவர்கள் போற்றுந் தியாகன் வந்தான்! மூவர்கள் வாழ்த்தும் முக்கணன் வந்தான்!" என்று சின்னங்கள் பிடித்து வரவும்; தும்புருநாரதர் யாழிசை பாடிவரவும்; உருத்திர கணிகையர் நடனஞ்செய்து வரவும்; ஒற்றை வெண்குடை, சாமரை முதலான மங்கல விருதுகள் நெருங்கி வரவும்; ஆனைமுகக் கடவுளும் ஆறுமுகக் கடவுளும் இருபக்கங்களினு மிசைந்து வரவும்; உலகமாதா வாகிய உமாதேவியார் இடது பக்கத்திலிருக்க, சடாமகுட திரிநேத்திர காளகண்ட சதுர்ப்புஜம் முதலானவை விளங்க, தர்மசொரூபமாகிய இடபவாகனத்தின்மேல் சர்வ மங்கல சக்தியே திருமேனியாகக் கொண்ட தியாகராஜப் பெருமான் எழுந்தருளி, மனுச்சோழ ராஜனுக்கு முன் தரிசனங் கொடுத்தருளி, குளிர்ந்த நிலவு துளம்பி வீசுகின்ற புன்னகைகாட்டி, அரசனுக்கு ஜில்லென்று உடம்பும் உள்ளமும் உயிரும் குளிரும்படி செய்வித்து, கருணையென்னும் வெள்ளம் நிறைந்து பொங்கித் ததும்பிப் பெருக்கெடுத்து ஒளிகொண்டோங்கி மடைதிறந் தோடுகின்ற மலர்போன்ற திருக்கண்களால் அருள்நோக்கஞ் செய்து, அவ்வரசனுக்குண்டாயிருந்த விடாய் முழுதுந் தீர்த்து, "நம்மிடத்து நம்பிக்கையும் பேரன்பும் வைத்து மனுநீதிதவறாது அரசாட்சி செய் கின்ற மனுச்சோழனே! நீ நடத்துகின்ற நீதியின் பெருமையை உலகத்தவர் செவ்வையாகத் தெரிந்து கொள்ளும்படி நாமே இவ்வாறு சோதித்தோம், இனி ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்" என்று திருவாய் மலர்த்தருளி, இறந்துகிடக்கின்ற பசுங்கன்றும் கலாவல்லபனென்னும் மந்திரியும் வீதிவிடங்கனென்னும் இராஜ குமாரனும் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி கடாக்ஷித்தருளினர்.

அந்தக்கணமே நித்திரை நீங்கி யெழுகின்றதுபோல், இளங் கன்றானது உயிர்பெற்றெழுந்து தன் தாய்ப் பசுவினிடத்தில் சென்றது.

மந்திரியும் புதல்வனும் உயிர்பெற்றெழுந்து, ஆண்டவனை வணங்கி அருகே மலர்ந்த முகத்தோடு வந்தனை செய்துகொண்டு மகிழ்ந்து நின்றார்கள். அதுகண்டு அந்நகரத்திலுள்ள ஜனங்களும் மற்றவர்களும் தம்மையறியாத பெருங் களிப்புடையவர்களாய்ச் சிலர் "அற்புதம்! அற்புதம்! அற்புதம்! அற்புதம்! என்று ஆடினார்கள்; சிலர் "பண்ணிய பூசை பலித்தது பலித்தது!" என்று பாடினார்கள்; சிலர் "சூரியகுலந்தோன்றியது! தோன்றியது! என்று துதித்தார்கள்; சிலர் "துக்கம் நீங்கியது! சுகம் கிடைத்தது!" என்று துள்ளினார்கள்; சிலர் "குறையெல்லாந் தீர்ந்தது! குறையெல்லாந் தீர்ந்தது!', என்று கொண்டாடினார்கள்; சிலர் "கும்பிட்ட தெய்வம் குறுக்கேவந்தது!" என்று குதித்தார்கள்; சிலர் "எம்பெருமான் எதிர்ப்பட்டால் என்ன முடியாது!" என்று எக்களித்தார்கள்; சிலர் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டு ஒரு காதமட்டும் ஓடித் திரும்பினார்கள்; சிலர் "கலக்கந் தீர்ந்தது! களிப்பு வந்தது!" என்று கைகொட்டினார்கள்; சிலர் தோள் தட்டிக்கொண்டும் தொடை தட்டிக்கொண்டும் முகரோமத்தை முறுக்கிக்கொண்டும் முகமலர்ந்துகொண்டும் உடல் நிமிர்த்துக்கொண்டும் உலாவி நின்றார்கள்; சிலர் "வாழ்வு வந்தது!" என்று மனம் பூரித்தார்கள்.

இப்படி அவரவர்களும் அளவில்லாத ஆனந்தமுடையவர்களாய் இழந்துவிட்ட பொருள் எதிர்வரப் பெற்றவர்கள்போல் சந்தோஷ கோஷஞ் செய்து நிற்க, மனுச்சக்கரவர்த்தியானவர் கங்கையும் இளம் பிறையும் விளங்குகின்ற சடாமகுடத்தையும், திரிபுண்டரமுந் திலகமும் திருநோக்கும் விளங்குகின்ற நெற்றியையும், அருள் ததும்பி வழிகின்ற திருநோக்கங்களையும், சங்கு குண்டலமணிந்து தாழ்ந்த செவிகளையும், நறுங்குமிழ் போன்று விளங்குகின்ற நாசியையும், வேதமாகிய தெள்ளமுதத்தைக் கொள்ளைகொண்டு உண்ணும்படி அன்பர்களுக்கு அருளிச் செய்கின்ற செம்பவளம் போன்ற திருவாய் மலரையும், வானவர்க்கு உயிர் கொடுத்த மணிகண்டத்தையும், கொன்றைமாலை யணிந்து குலவரைகள்போல் உயர்ந்த திருத்தோள்களையும், மானும் மழுவும் வரதமும் அபயமுங் கொண்ட மலர்க் கரங்களையும், சிவந்து மெல்லென்று திருவருள் பழுத்து ஆனந்தமொழுகிப் பத்தர்கள் மனத்தில் தித்தித்திருக்கும் பாதமலர்களையும், செம்பவளமாலை போன்ற திருமேனியையும், பச்சைக்கொடி படர்ந்ததுபோன்று பார்வதியார் மகிழ்ந்து விளங்குகின்ற பாகத்தையும் கண்குளிரக் கண்டு களிப்படைந்து ஆனந்தநீர் ஊற்றுநீர் போலச் சுரந்து சுரந்து விழுந்து விழுந்து மார்பினிடத்து வண்டலாடவும், உடல் குழைந்து விதிர்விதிர்த்துச் சிலிர்சிலிர்த்து மயிர்க்கூச்செறிந்து என்பு நெக்குவிட்டுருகியும், மனங் கனிந்துகனிந்து கசிந்துகசிந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து படபடவென்று பதறிப்பதறி உருகியுருகி ஆனந்த வெள்ளத்தி லழுந்தியழுந்திப் பரவசமாகியும்,

"சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிற்பர தற்பர சிற்குண சின்மய சிவசிவசிவ" என்று வாய்நீர்சுரந்து பாடிப்பாடி நாக்குழறித் தழும்பேறியும், "ஹர ஹர" என்று ஆனந்தக் கூத்தாடியும், தண்டு போல் அனந்த முறை கீழே விழுந்து விழுந்து வணங்கி உடம்பிற் புழுதியாடியும், குளிர்ச்சி பொருந்திய சந்திரபிம்பம் போன்ற முகத்தின்கண் முத்துமாலை யணிந்ததுபோல வியர்வரும்பி இளநகை தோன்றி மலர்ந்து விளங்கக் கைகளைக் கூப்பிச் சிரசின் மேல் வைத்துக் கொண்டு, அன்பே வடிவமாகி நின்று, "பிரமன் முதலாகிய பெரிய தேவர்களெல்லாம் அரியதவஞ் செய்தும் கனவினுங் காண்பதற் கருமை யாகிய கடவுளே! அன்பு அணுவளவு மில்லாத அடியேனுக்கு அருமை யாகிய திருமேனியை நனவிலே எளிதாகக் காட்டியருளிய தேவரீர் பெருங்கருணையை யென்னென்று துதிப்பேன்! பொய்யுலகத்தை மெய் யென்று நம்பிப் புன்மையாகிய போகத்தை விரும்பி, புவியாண்டு மீளாநரகில் விழத் துணிந்திருந்த அஞ்ஞானத்தையுடைய அடியேனை யும் ஓர் பொருளாகத் திருவுள்ளத்திற் கொண்டு காட்சி கொடுத் தருளிய கருணைக் கடலே! கண்ணுண் மணியே! கரும்பின் சுவையே! கற்பகக் கனியே! கருணைநிதியே! தேவரீர் திருவருட்பெருமையை யென்னென்று சொல்லுவேன்! யான் என்கின்ற ஆணவப் பேயும், எனதென்கின்ற இராட்சதப் பேயும், மாயையென்கின்ற வஞ்சகப் பேயும், பெண்ணாசை யென்கின்ற பெரும்பேயும், மண்ணாசை யென்கின்ற மானிடப்பேயும், பொன்னாசை யென்கின்ற பொல்லாப்பேயும், குரோத மென்கின்ற கொள்ளிவாய்ப்பேயும், உலோப மென்கின்ற உதவாப் பேயும், மோகமென்கின்ற மூடப் பேயும், மதமென்கின்ற வலக்காரப் பேயும், மாச்சரிய மென்கின்ற மலட்டுப்பேயும், மனப்பேயோடு கூடி இரவும் பகலும் ஆட்ட, ஆடியாடி யிளைக்கின்ற அடியேனைக் காத் தருளத் திருவுள்ள மிரங்கித் தரிசனங் கட்டளையிட்டுத் துன்பத்தை நீக்கி யின்பத்தை யளித்த எம்பெருமானே! என்னாண்டவனே! என் தந்தையே! என் தாயே! என் குருவே! என் தெய்வமே! என் குல தெய்வமே! என்னுயிர்த் துணையே! என்னறிவுக் கறிவாகிய இறை வனே! தேவரீர் திருவடிப்புகழை வேதங்களு மறியாது விழித்துக் கொண்டு தேடித்தேடி இளைக்கின்றன வென்றால், கிருமி கீடங்களிலுங் கீழ்ப்பட்ட அசேதனனாகிய அடியேன் எப்படி யறிந்து துதிப்பேன்! தேவரீர் திருவடிக் காட்சி பலிக்கும்படி செய்வித்த இந்தப் பசுவுக்குங் கன்றுக்கும் என்னை யடிமையாகக் கொடுப்பேன் அல்லது வேறென்ன கைம்மாறு செய்வேன்! தேவரீர் திருமேனிக்காட்சி கிடைப்பதற்குக் காரணமாகிய வீதிவிடங்கனென்னும் புத்திரன் இன்றுதான் எனக்குப் புத்திரனாயினன்! தேவரீரது திருவருட் கோலத்தைக் காணப்பெற்ற அடியேனுக்கு இனி என்னகுறை இருக்கின்றது! அன்பர்களுக்கு இன்பமளிக்கின்ற ஆண்டவனே! தேவரீர் கிருபாநோக்கஞ் செய்யப்

பெற்று உடல்பூரித்தேன் ! உள்ளங்குளிர்ந்தேன் ! உயிர் தழைத்தேன்! பசுங்கன்றும் மந்திரியும் மைந்தனும் உயிர்பெற்று எழுந்திருக்கவும் வரம்பெற்றேன் ! வாழ்வடைந்தேன் ! துக்கமெல்லாம் நீங்கினேன் ! சுகப்பட்டேன் ! மனத்துக்கு அடங்காத மகிழ்ச்சிகொண்டு நின்றேன்! இனி அடியேனுக்குத் தேவரீர் திருவடியினிடத்துத் தவறாத தியானமும் சலியாத அன்பும் தந்தருளி யென்னை அடிமை கொள்ளவேண்டும். குற்றஞ் செய்தாலும் குணமாகக் கொள்கின்ற குணக்குன்றே ! பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த பரம்பொருளே ! புலிமுலையைப் புல் வாய்க்குக் கொடுத்த புண்ணியமூர்த்தியே ! கல்லடிக்கும் வில்லடிக்குங் கருணைபுரிந்த கருத்தனே ! திருவாரூர்ப் பூங்கோயிலி லெழுந்தருளிய தியாகராஜப் பிரபுவே ! போற்றி ! போற்றி !'' என்று தோத்திரஞ் செய்து தொழுதுநின்றார்.

அரசன் செய்த தோத்திரங்களைத் திருச்செவி ஏற்றுக்கொண்டு தியாகராஜப் பெருமான் ''நம்மிடத்தில் அன்புள்ள அரசனே! நீ இன்னும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று, நமது அருளே துணையாகக்கொண்டு, இவ்வுலகத்தை யெல்லாம் ஒரு குடைக் கீழ் ஆண்டு, மெய்யறிவு விளங்கி, மாறாத மகிழ்ச்சியோடிருக்கக் கடவாய் ! பின்பு எக்காலத்தும் மீளாத பேரானந்த போகத்தை நாம் தருவோம்'' என்று அருள்புரிந்து கணங்களுடன் அந்தர்த்தானமாக எழுந்தருளினர்.

அதுகண்டு மனுச்சக்கரவர்த்தியானவர் பின்பும் கீழ் விழுந்து நமஸ்கரித்துத் தொழுது தோத்திரஞ் செய்துகொண்டு, அப்பசுவையுங் கன்றையும் உபசாரத்துடன் நல்ல புல்லுள்ள விடங்களில் மேய்த்து மிகுந்த சுகத்திலிருக்கும்படி செய்வித்து, கலாவல்லபனைக் கட்டியணைத்துக் கொண்டு ''என்புத்திரன் பழிக்கு ஈடாகச் செய்தற்கரிய செய்கையைச் செய்துகொண்ட அன்புள்ள அமைச்சனே! உன்போலெனக் கினியவர்கள் உண்டோ !'' என்று உபசரித்து, பின்பு வீதிவிடங்கனென்னும் மைந்தனை எடுத்து மடிமேல் வைத்து முத்தங்கொண்டு உச்சிமோந்து ''யான் செய்த புண்ணியத்தால் கிடைத்த புத்திரனே ! உன்னாலல்லவோ உயர்வையடைந்தேன் !'' என்று உபசரித்து, பின்பு மைந்தனும் மந்திரியுந் தாமுமாகக் கமலாலயமென்னும் கோயிலுக்குச் சென்று, ஆசாரத்தோடும் அன்போடும் விதிப்படி சிவபெருமானைத் தரிசனஞ் செய்து அபிஷேகாதி சிறப்புகளும் அனேகம் திருப்பணிகளுஞ் செய்வித்துத் தொழுது வணங்கித் துதித்து வலங்கொண்டு விடைகொண்டு புறப்பட்டு, அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் மனங்களித்து வாழ்த்திப் புகழும்படி மங்கல வாத்தியங்கள் முழங்க வீதியை வலமாக வந்து, அஷ்டமங்கலங்க ளேந்திய சுமங்கலிகளும்

அந்தணர் அமைச்சர் முதலானவர்களும் வாழ்த்தி மங்கலச் செய்கைகளோடு எதிர்கொள்ள அரண்மனையிற் சென்று, வேதியர், துறவினர், விருந்தினர், உறவினர் முதலானோர்களுக்கு அவரவர்க்குத் தக்க வரிசைகளைச் செய்து மகிழ்வித்து, கற்புநிலை தவறாத மனைவியார் மனங்குளிர்ந்து களிக்கும்படி மைந்தனைக் காண்பித்து, மந்திரி முதலானவர்கள் சூழச் சிவானுக்கிரகத்தால் சிங்காசனாதிபதியாய் உலகத்தையெல்லாம் ஒருகுடைநிழலில் வைத்து அறநெறிப்படியே அரசாட்சி செய்திருந்தார்.

வாழ்த்து

நேரிசை வெண்பா

வாழி மனுச்சோழர் வாழி யவர்மைந்தன்
வாழியவர் மந்திரியாம் வல்லவனும் - வாழியவர்
செங்கோன் முறையவர்தஞ் சீர்கேட் பவர்வாழி
எங்கோன் பதம்வாழி யே.

திருச்சிற்றம்பலம்

மனு முறைகண்ட வாசகம் முற்றிற்று

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

2. சுத்த சன்மார்க்கத்தின் முதற் சாதனமாகிய

ஜீவகாருண்ய ஒழுக்கம்

முதற் பிரிவு

ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

உலகத்தில் மனிதப்பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்மலாபத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடையவேண்டும்.

அந்த ஆன்மலாபம் எதுவென்று அறியவேண்டில்:— எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லாச் சீவர்களையும், எல்லா ஒழுக்கங்களையும், எல்லாப் பயன்களையுந் தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கைஉண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கைஇன்பத்தைப் பெற்று எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரியவாழ்வே இந்த மனிதப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்மலாபமென்று உண்மையாக அறியவேண்டும்.

இயற்கைஇன்பத்தைப்பெற்றுத் தடைபடாமல்வாழ்கின்றஅந்தப் பெரியவாழ்வை எதனால் அடையக்கூடுமென்று அறியவேண்டில்:— **கடவுளின் இயற்கைவிளக்கமாகிய அருளைக்கொண்டே** அடையக் கூடும் என்றறியவேண்டும்.

கடவுளின் இயற்கைவிளக்கமாகிய அருளை எதனால் பெறக்கூடுமென்று அறியவேண்டில்:— சீவகாருணிய ஒழுக்கத்தினால் கடவுள் அருளைப் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக் கூடாது என்று உறுதியாக அறிதல்வேண்டும்.

கடவுள் அருளைச் சீவகாருணிய ஒழுக்கத்தினால் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் பெறக்கூடாதென்பது எப்படி என்னில்:— **அருளென்பது கடவுள் தயவு, கடவுளியற்கை விளக்கம். சீவ காருணிய மென்பது சீவர்கள் தயவு, சீவர்கள் ஆன்ம இயற்கை**

விளக்கம். இதனல் தயவைக்கொண்டு தயவைப் பெறுதலும் விளக்கத்தைக்கொண்டு விளக்கத்தைப் பெறுதலும் கூடும். வேறென்றினல் பெறக்கூடாமை அனுபவமாகலின், சீவகாருணியத்தைக் கொண்டு அருளைப் பெறுதல் கூடும்; வேறென்றினலும் பெறக்கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டாமென் றறியவேண்டும்.

அருளைப் பெறுவதற்குச் சீவகாருணியமே வழியாதலால், **ஞான வழி என்பதும் சன்மார்க்கம் என்பதும் சீவகாருணிய ஒழுக்கம்** என்றும், **அஞ்ஞானவழி என்பதும் துன்மார்க்கம் என்பதும் சீவ காருணிய ஒழுக்கமில்லாமை** என்றும் அறியப்படும். சீவகாருணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனுக நின்று விளங்கும்; அதனல் உபகாரசத்தி விளங்கும்; அந்த உபகாரசத்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும். சீவகாருணியம் மறையும்போது அறிவும் அன்பும் உடனுக மறையும்; அதனல் உபகாரசத்தி மறையும்; உபகாரசத்தி மறையவே எல்லாத் தீமைகளுந் தோன்றும். ஆகலின் **புண்ணிய மென்பது சீவகாருணியமொன்றே** என்றும், **பாவமென்பது சீவ காருணிய மில்லாமையொன்றே** என்றும் அறியப்படும்.

சீவகாருணிய ஒழுக்கத்தினல் வரும் விளக்கமே கடவுள் விளக்க மென்றும், சீவகாருணிய ஒழுக்கத்தினல் வரும் இன்பமே கடவுள் இன்ப மென்றும், இவ்விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால்கண்டு அனுபவித்துப் பூர்த்தியடைந்த சாத்தியர்களே சீவன்முத்தரென்றும், அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள்மயம் ஆவார்கள் என்றும் சத்தியமாக அறியவேண்டும்.

ஆனல், சீவகாருணிய ஒழுக்க மென்பது என்னெனில்:— சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வவழிபாடுசெய்து வாழ்தலென்று அறிய வேண்டும்.

சீவர்கள் விஷயமாக ஆன்மஉருக்கம் எப்போது உண்டாகுமென்னில்:— சீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதாயினும் கேட்டபோதாயினும் இவ்வாறு உண்டாகுமென்று அறிந்த போதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகுமென்று அறியவேண்டும்.

சீவகாருணியம் உண்டாவதற்கு உரிமை எது என்னில்:— சீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கையுண்மை ஏகதேசங்களாய்ச் சர்வசத்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமையுள்ள சகோதரர்களேயாவர் சகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும், துக்கப்படுவாரென்று அறிந்தபோதும் அவரைத் தமது சகோதரரென்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்க

முண்டாவது சகோதர உரிமையாகலின், ஒரு சீவன் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும், துக்கப்படுமென் றறிந்தபோதும் மற்ருெரு சீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய ஆன்ம உரிமையென்று அறியவேண்டும்.

சீவர்கள் துக்கப் படுகின்றதைக் கண்டபோதும், சிலர் சீவகாருணியமில்லாமல் கடினசித்தர்களா யிருக்கின்ருர்கள்; இவர்களுக்குச்சகோதர உரிமை இல்லாமற்போவது ஏனெனில்:— துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென்றும் துக்கப்படுகின்ருரென்றும் துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க ஆன்மஅறிவு என்கிற கண்ணனது அஞ்ஞானகாசத்தால் மிகவும் ஒளி மழுங்கினபடியாலும், அவைகளுக்கு உபகாரமாகக்கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணடிகளும் பிரகாச பிரதிபலிதமில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. அதனல், சகோதர உரிமையிருந்தும் சீவகாருணியம் உண்டாகாம லிருந்ததென் றறியவேண்டும். இதனல் சீவகாருணியமுள்ளவர் ஆன்ம திருஷ்டி விளக்கமுள்ளவரென் றறியப்படும்.

சீவர்களுக்குப் பசி தாகம் பயம் முதலியவற்ருல் வருந் துன்பங்களெல்லாம் மனம் கண் முதலிய கரணேந்திரிய அனுபவங்களல்லது, ஆன்ம அனுபவங்களல்ல; அதனற் சீவகாருணியங் கொள்வதில் விசேஷ பிரயோசனம் இல்லையே என்னில் :—இந்தத் தூலதேகத்தில் சீவனுக இருக்கிற ஆன்மாவும் அறிவுக் கறிவாயிருக்கிற கடவுள் இயற்கைவிளக்கமுந் தவிர, கரணம் இந்திரியம் முதலிய மற்றவைகளெல்லாம் கருவிகளாகிய தத்துவசடங்களே யல்லது சித்துக்களல்ல. ஆகலில் சுகதுக்கங்களைச் சடங்கள் அனுபவிக்க அறியா. செம்மண் சந்தோஷித்தது துக்கித்தது என்று சொல்லப்படாது. அதுபோல், மனஞ் சந்தோஷித்தது துக்கித்தது என்று சொல்லப்படாது. செம்மண்ணினல் தேகவாழ்க்கைக்கு வீடுகட்டிக்கொள்வதுபோல, மனமுதலான கரணேந்திரியங்களால் சீவவாழ்க்கைக்குக் கடவுளால் கட்டிக் கொடுக்கப்பட்ட தேகம் ஒரு சிறிய வீடாகும். இன்பதுன்பங்களை வீட்டிலிருக்கின்றவன் அனுபவிப்பானல்லது, வீடு அனுபவிக்க மாட்டாது. அன்றியும் காசத்தினல் ஒளி மழுங்கப்பட்டு உபநயனங்களாகிய கண்ணடிகளால் பார்க்கின்ற கண்கள் துன்ப விஷயத்தைக் கண்டபோது, அக்கண்கள் நீர்சொரியுமே யல்லது, கண்ணடி நீர் சொரிய மாட்டாது. ஆகலில் ஆன்ம திருஷ்டிக்கு உபநயனங்களாக இருக்கின்ற மனம் முதலான கருவிகள் சுகதுக்கங்களை அனுபவிக்க மாட்டா ; ஆன்மாவே அனுபவிக்குமென்று அறியவேண்டும்.

ஒரு சீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது ; துக்கம் நேரிட்டபோது மனம் தளர்கின்றது ; ஆகலில், சுகதுக்கங்களை

அம்மனம் அனுபவிப்பதாக அறியப்படாதோ என்னில்:— அறியப் படாது. பளிங்கினற் செய்த வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத் தலைவ னுடைய தேகவிளக்கமும் தேகச்சோர்வும் அந்தப் பளிக்கு வீட்டில் பிரதி பலித்துப் புறத்தில் தோன்றுவதுபோலும், கண்களின் மலர்ச்சியும் சோர்வும் அக்கண்களிலிட்ட உபநயனங்களில் பிரதிபலித்துப் புறத் தில் தோன்றுவதுபோலும், சுகதுக்கங்களால் ஆன்மாவுக்கு உண்டாகிற மகிழ்ச்சியும் தளர்வும் மனம் முதலான கரணேந்திரியங்களில் பிரதி பலித்துப் புறத்திற் றோன்றுகின்றன. ஆகலில், சுகதுக்கங்கள் ஆன்மாவுக்கே அனுபவமென்றும், சுகதுக்கங்களை அறிந்தனுபவிப்ப தற்குக் கரணேந்திரியங்கள் ஆன்மாவுக்கு உபகாரக்கருவிகளாகு மென்றும் அறியவேண்டியது.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சீவர்களில் அனேகர் பசி, தாகம், பயம் முதலியவற்ருல் மிகவுந் துன்பப்படுகின்றது என்னெனில் :— முன் தேகத்தில் சீவகாருணிய ஒழுக்கத்தை விரும்பாமல் கடினசித்தர்க ளாகித் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களாதலால், கடவுள் விதித்த அருளாக்கினைப்படி பசி, தாகம், பயம் முதலியவற்ருல் மிகவுந் துன்பப் படுகிருர்கள் என்றறியவேண்டும்.

முன்தேகம் உண்டென்பது எப்படி யென்னில் :— ஒரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்யவந்த சமுசாரி அதற்குமுன் வேறொரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்திருந்தா னல்லது வீடில்லாமல் குடித்தனஞ் செய்யமாட்டா னென்றும், இப் போது வந்த வீட்டிலும் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு வீட்டில் குடிபோவான் என்றும் அறிவதுபோல்; இந்தத் தேகத்தில் ஆகாரக் கூலி கொடுத்துக் குடியிருக்க வந்த சீவன் இதற்கு முன்னும் வேறோரு தேகத்தில் அந்தக் கூலியைக் கொடுத்துச் சீவித்திருந்தானல்லது தேகமில்லாமல் சீவித்திருக்க மாட்டானென்றும், இந்தத் தேகத்திலும் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு தேகத்தில் குடிபோவானென் றும் துணியவேண்டும். ஆதலால், முன்னும் பின்னும் சீவர்களுக்குத் தேகங்கள் நேரிடும் என்றறியவேண்டும்.

சீவர்கள் முன்தேகத்தில் செய்த பாவகர்மங்கள் இந்தத் தேகத்தி லும் வருமென்பது எப்படியென்னில் :— ஒரு சமுசாரி முன் குடித்தனஞ் செய்திருந்த வீட்டில் தன் தலைவன் கட்டளைப்படி நடவாமல் துன் மார்க்கர்களை வருவித்து அவர்களோடு கூடிப் பழகியிருந்தானுனல், அந்தச் சமுசாரி அந்த வீட்டைவிட்டு வேறொரு வீட்டில் குடிவந்த காலத்திலும் அந்தத் துன்மார்க்கர்கள் இந்த வீட்டிலும் வந்து அவனுடன் பழக்கஞ் செய்வார்கள். அதுபோல், ஒரு சீவன் முன் குடியிருந்த தேகத்தில் கடவுள் கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கத்

தாற் பாவகர்மங்களை விரும்பிச் செய்திருந்தானானால், அந்தச் சீவன் வேறொரு தேகத்தில் வந்தபோதும் அந்தப் பாவகர்மங்கள் இப்போது வந்த தேகத்திலும் வந்து அந்தச் சீவனைச் சேருமென் றறியவேண்டும்.

முன் பிறப்பில் சீவகாருணிய ஒழுக்கத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களை இந்தப் பிறப்பில் பசி தாகம் பயம் முதலியவற்றால் துக்கப்படச் செய்வது கடவுள் அருளாக்கினை நியதியென்றால், அந்தச் சீவர்கள் விஷயத்தில் காருணியம் வைத்து ஆகாரம் முதலியவை கொடுத்து அவர்கள் துக்கத்தை மாற்றுவது கடவுள் அருளாக்கினைக்கு விரோதமாகாதோ என்னில் :— ஆகாது. அரசன் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்து, கால்களுக்கு விலங்கிடப் பட்டுச் சிறைச்சாலையில் இருக்கின்ற பெரிய குற்றவாளிகளுக்கும் தன் சேவகர்களைக்கொண்டு ஆகாரங்கொடுப்பிக்கின்றான். அதுபோல், கடவுள் தம் கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பலவகையால் பந்தஞ் செய்யப்பட்டு நரகத்திலிருக்கின்ற பாவிகளுக்கும் தம் பரிவாரதேவர்களைக்கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றார். அரசன் தன் கட்டளைப் படி நடவாமல் வேறுபட்ட சாதாரண குற்றமுடையவர்களைத் தன்னவர்கள் பெறத்தக்க லாபத்தைப் பெறவொட்டாமல் உத்தியோகத்தினின்றும் நீக்கி அவர்களுக்கு நல்லறிவு வருவிக்கின்ற நிமித்தம் அவ்விடத்தைவிட்டு வேறிடங்களில் வெளிப்படுத்துகின்றான். அவர்கள் உத்தியோக மிழந்தபடியால், சுகபோஜன முதலிய போகங்களை இழந்து ஊர்ப்புறங்களிற் போய் ஆகாரம் முதலியவை குறித்து அலைந்து வருந்துகின்றபோது, தயவுள்ளவர்கள் கண்டு ஆகார முதலியவை கொடுக்கின்றார்கள். அதை அரசன் கேட்ட காலத்திலும் கண்ட காலத்திலும் கொடுத்தவர்களை இரக்கமுள்ள நல்ல சமுசாரிகளென்று சந்தோஷித்து உபசரிக்கின்றானே யல்லது கோபிக்கின்றானில்லை. அதுபோல், கடவுள் தம் கட்டளைப்படி நடவாத சாதாரண குற்றமுடைய சீவர்களைத் தமது சத்தியால் அவர்கள் பெறத்தக்க சுகங்களைப் பெறவொட்டாமல் தாம் கொடுத்த சௌக்கிய புவனபோகங்களை விடுவித்து, அந்தச் சீவர்களுக்கு நல்லறிவு வருவிக்கும் நிமித்தம் அந்தத் தேகத்தினின்றும் நீக்கி வேறொரு தேகத்தில் விடுகின்றார். அந்தச் சீவர்கள் சௌக்கிய புவன போகங்களை இழந்தபடியால், சௌக்கிய போஜன முதலியவற்றை இழந்து வேறு வேறிடங்களில் ஆகார முதலியவை இல்லாமல் வருந்தும்போது, தயவுள்ளவர்கள் அந்த வருத்தத்தைக் கண்டு ஆகார முதலியவை கொடுத்தால் அப்படிக் கொடுத்தவர்களை நல்ல இரக்க முள்ளவர்கள் மேன்மேலுஞ் சுகத்தையடையக் கடவார்களென்று சந்தோஷித்து உபசரிப்பாரல்லது கோபிக்கமாட்டார். ஆதலால், கடவுள் அருளாக்கினைக்குச் சீவர்களிடத்துச் சீவர்கள் காருணியம் வைப்பதே சம்மதமென்று உண்மையாக அறியவேண்டும்.

இந்தச் சீவகாருணியத்தால் இகலோக ஒழுக்கம் வழங்குகின்றது. சீவகாருணிய மில்லையாகில், இகலோக ஒழுக்க மெவ்வளவும் வழங்க மாட்டாதென்று அறியவேண்டும். எப்படியென்னில் :—சீவகாருணிய மில்லாதபோது அறிவும் அன்புந் தோன்ரு ; அவை தோன்ருதபோது கண்ணேட்டமும் ஒருமையும் உபகாரமும் விளங்கா ; அவை விளங்காத போது வலியசீவர்களால் எளிய சீவர்களொழுக்கம் பொருமை முதலான வைகளால் தடைப்பட்டழிந்துபோம். பின்பு வலியசீவர்கள் ஒழுக்கங் களும் தாமச ஒழுக்கங்களாகி ஒருவ ரொழுக்கத்தால் மற்றெருவரொழுக் கம் மதத்தினல் சோர்ந்தவிடத்தில் மாறுபட் டழிந்துபோம். சீவ காருணிய ஒழுக்கஞ் சிறிது மில்லாத புலி சிங்கம் முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோக ஒழுக்கம் வழங்கவேயில்லை அது போல் சீவகாருணிய மில்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென் றறியவேண்டும்.

பரலோக ஒழுக்கமுஞ் சீவகாருணியத்தால் வழங்குகின்றது. அது இல்லையாயின் பரலோக ஒழுக்கமும் வழங்கமாட்டாது. எப்படியென் னில்:— சீவகாருணிய மில்லாதபோது அருள்விளக்கந் தோன்ருது. அது தோன்ருதபோது கடவுள்நிலை கைகூடாது. அது கூடாதபோது முத்தி யின்பம் ஒருவரும் அடையமாட்டார்கள். அடையாத பட்சத்தில் பர லோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென் றறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கம் மிகவும் வழங்காமையால் துன்மார்க்கப் பிறவியே பெருகி, எங்கும் புல்லொழுக்கங்களே வழங்குகின்றன. எப் படியென்னில் :—சீவகாருணிய மில்லாத கடின சித்தர்க ளெல்லாம் அவரவர் கடின செய்கைக்குத் தக்கபடி, சிலர் நரகவாசிகளாகவும், சிலர் சமுத்திரவாசிகளாகவும், சிலர் ஆரணியவாசிகளாகவும், சிலர் புலி, கரடி, சிங்கம், யாளி, யானை, கடமை, கடா, பன்றி, நாய், பூனை, முதலிய துஷ்ட மிருகங்களாகவும், சிலர் பாம்பு, தேள் முதலிய விஷ செந்துக்களாகவும், சிலர் முதலை சுரு முதலிய கடின செந்துக்களாகவும் சிலர் காக்கை கழுகு முதலிய பக்ஷி சண்டாளங்களாகவும், சிலர் எட்டி கள்ளி முதலிய அசுத்த தாவரங்களாகவும் பிறந்திருக்கின்ருர்கள். ஆக லால், புல்லொழுக்கங்களே மிகவும் வழங்குகின்றன என்றறிய வேண்டும்.

சீவகாருணியம், கடவுளருளைப் பெறுவதற்கு முக்கிய சாதன மென்பது மல்லாமல் அந்த அருளின் ஏகதேச விளக்க மென்றும் அறியவேண்டும். சீவகாருணியம் ஆன்மாக்களின் இயற்கைவிளக்கம் ஆகலால், அந்த இயற்கைவிளக்கமில்லாத சீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது.

சீவகாருணியத்திற்கு முக்கியமான லக்ஷியம் எதுவென்னில் :— ஆன்மாக்களெல்லாம் இயற்கைஉண்மை ஏகதேசங்களாயும், இயற்கை

விளக்கமாகிய அருள் அறிவுக்கறிவாய் விளங்குதற்கு ஒற்றுமை உரிமை இடங்களாயும் இருக்கின்றன என்றும், அந்த ஆன்மாக்கள் சீவர்களாகி அதிகரிப்பதற்குப் பூதகாரிய தேகங்களே உரிமையாக இருக்கின்றன என்றும், அந்தத் தேகங்களில் ஆன்மாக்கள் சீவர்களாகி அதிகரியா விடில் ஆன்ம விளக்கம் மறைபடுமென்றும், அதனால் அருள்விளக்கம் வெளிப்படாதென்றும், அப்போது மூடமுண்டாகு மென்றும், அதுவே ஆன்மாக்களுக்குப் பந்தமாகுமென்றும், அதுபற்றி அவசியம் பூதகாரிய தேகம் வேண்டுமென்றும், பூதகாரிய தேகங்களுக்கு மாயை முதற்காரண மாதலால் அந்த மாயையின் விகற்ப ஜாலங்களாகிய பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை என்பவைகளால் அந்தத் தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடுமென்றும், அப்படி அபாயங்கள் நேரிடாமல் கரணேந்திரிய சகாயங்களைப் பெற்ற தம் மறிவைக்கொண்டு சர்வ ஜாக்கிரதையோடு முயற்சிசெய்து தடுத்துக் கொள்வதற்குத் தக்க வல்லப சுதந்தரம் சீவர்களுக்கு அருளாற் கொடுக்கப்பட்டதென்றும், அந்தச் சுதந்தரத்தைக் கொண்டு சீவர்களெல்லாம் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி ஆன்மலாபத்தைப் பெறுதற்கு முயற்சி செய்யக் கடவரென்றும், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்து கொள்ளமாட்டாமல் வருந்துகின்ற சீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத் தக்க சுதந்தரமுள்ள சீவர்கள் காருணியத்தால் நிவர்த்தி செய்விக்கவேண்டுமென்றும், அப்படி நிவர்த்தி செய்விப்பதில் **பசியினால் வருந் துன்பமுங் கொலையினால் வருந் துன்பமுந் தவிர மற்றவைகளால் வருந் துன்பங்களை மாற்றுவது** அபரசீவகாருணிய மாதலால் இவ்வுலக இன்பத்தை மாத்திரம் சிறிதுண்டுபண்ணுமென்றும், **பசியினால் வருந் துன்பத்தையும் கொலையினால் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது** பரசீவகாருணிய மாதலால் இவ்வுலக இன்பங்களையும் அளவிறந்த சித்தியின்பங்களையும் எக்காலத்து மழியாத முத்தியின்பத்தையும் அருளாலடையப்படுமென்றும், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் அன்னிய சீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத் தக்க சுதந்தரமும் அறிவு மிருந்தும் அவ்வாறு செய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு இவ்வுலக இன்பத்தோடு மோக்ஷ இன்பத்தையனுபவிக்கின்ற சுதந்தரம் அருளாலடையப்படுவதில்லையென்றும், தற்காலத்தில் அனுபவிக்கின்ற புவன போக சுதந்தரங்களையும் இழந்துவிடுவரென்றும் கடவுள் வேதத்தில் விதித்திருக்கின்றபடியால்; ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி கொலையென்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க அறிவும் சுதந்தரமுமில்லாத சீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத்தக்க அறிவும் சுதந்தரமுமுள்ள சீவர்கள் வஞ்சியாமல் தயவினால் நிவர்த்தி

செய்விப்பதே சீவகாருணியத்திற்கு முக்கியமான லட்சியமென்றும், அதில் சத்தியமாக நம்பிக்கை வைத்துப் பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்கியும், கொலைப்படும் சீவர்களுக்குச் செய்வகையால் கொலை நீக்கியும் திருப்தி இன்பத்தை உண்டுபண்ணுவதே மேலான பிரயோசன மென்றும் அறியவேண்டும்.

பசி, கொலை, பிணி, தாகம், எளிமை, பயம், இச்சை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்விப்பது விதியாகவிருக்கவும், இவ்விடத்துப் பசியினாலும் கொலையினாலும் வரும் அபாயங்களை மாத்திரம் நிவர்த்தி செய்விப்பது விசேஷமென்று குறித்தது என்னென்றறியவேண்டில் :— சீவகாருணிய ஒழுக்கத்தில் **அபரசீவகாருணியமென்றும் பரசீவகாருணியமென்றும் இருவகையாம்.** அவற்றில் **பசிநீக்கலும் கொலைநீக்கலும் பரசீவகாருணிய** மாதலால் விசேஷமாகக் குறிக்கப்பட்டதென் றறியவேண்டும். அன்றியும் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்குப் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடைய வர்கள் தாகம் நீங்குதற்குத் தண்ணீர் கொடாமலிரார்கள், தண்ணீர் கொடுப்பது பிரயாசமுமல்ல. தண்ணீர் ஏரி குளம் கால்வாய் முதலான இடத்து மிருக்கின்றது. தாகத்தால், மாற்றிக்கொள்ளத் தக்க ஏகதேச அபாயம் நேரிடுமேயல்லது, அதனால் தேகத்திற்கு ஆனி நேரிடாது; பசியினால், மாற்றிக்கொள்ளக் கூடாத கெடுதி தேகத்திற்கு நேரிடும். பசியினால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விக்கத் தக்க தயவுடையவருக்குப் பிணியினால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதற்குத் தயவுண்டாகாம லிராது. பசி மிகுதியினாலேயே பிணிகள் விருத்தியாகின்றன. ஆகாரப் பக்குவங்களாலேயே அப்பிணிகள் நீங்குகின்றன. பிணிகளுக்கு வேறு மருந்து கொடுப்பினும், பத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு அவசியமான ஆதாரமா யிருக்கின்றது. பிணியோடு தேகத்தை நெடுநாள் வைத்திருக்கக் கூடும். ஒரு நாளாகிலும் ஆகாரமில்லாமல் தேகத்தை வைத்திருக்கக் கூடாது. பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்குவிக்கின்ற தயவுடையவர்களுக்கு இச்சையால் வருந்துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயவு வராமலிராது. சீவர்களுக்கு உள்ளபடி பசிநேரிடுமாகில் ஆகாரத்திலல்லது மற்றொன்றிலும் இச்சையே இராது. ஆகாரங் கிடைக்கில் உண்டு பசி தீர்ந்தவர் தம் இச்சையைச் சிறிய முயற்சிகளால் முடித்துக் கொள்ளவுங்கூடும்; அல்லது சமாதானஞ் செய்து கொள்ளவுங் கூடும்; இச்சையோடு பலநாள் தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு ஒரு நாளும் வைத்திருக்கமுடியாது. பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுள்ளவர்களுக்குச் சுதந்தர மற்ற சீவர்களது எளிமையை நீக்கத் தயவுவராமலிராது. பசியினால் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையே இல்லை. எளிமை

யைச் சிலநாள் சென்று மாற்றிக் கொள்ளக் கூடும்; பசியை அவ்வாறு மாற்றிக்கொள்ளக் கூடாது. எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக் கூடும்; பசியோடு வைத்திருக்கமுடியாது. பசியை நிவர்த்தி செய்விக் கின்ற தயவுடையவருக்குப் பயத்தை நிவர்த்தி செய்விப்பதில் தயவு வராமலிராது. பசியினால் வரும் பயத்திற்கும் கொலையினால் வரும் பயத்திற்கும் மேற்பட்ட பயமேயில்லை. பயத்தை உபாயத்தால் நீக்கிக் கொள்ளக்கூடும்; பசியை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக் கூடாது. பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு வைத்திருக்கப் படாது. பசியினால் வரும் அவத்தைகளுந் துன்பங்களும் கொலையினால் வரும் அவத்தைகளுந் துன்பங்களும் தம்முள் ஒத்திருக்கின்றன ஆகலால், பசியினால் வருந் துன்பத்தையும் கொலையினால் வருந் துன்பத் தையும் நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியத்திற்கு முக்கிய லட்சிய மென்றறியவேண்டும்.

பசியினால் வருந் துன்பத்தை நீக்குதலும் கொலையினால் வருந் துன் பத்தை நீக்குதலும் சீவகாருணியத்திற்கு முக்கிய லக்ஷியமாக இருக்க வும், இவ்விடத்தில் **பசிநீக்குதலை மாத்திரம்** அடிக்கடி வலியுறுத்து வது என்னெனில்:— ஒரு சீவன் பசியினால் கொல்லப்படுமென்பதை யறிந்து காருணியத்தால் பசியை நீக்கி உயிர் பிழைக்கும்படி செய்பவர். வேறுவகையால் உயிர்க்கொலை நேரிட்டால் அதற்கிரங்கி அந்தக்கொலை யால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்யாமலிரார்கள். கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்வியாதவர்கள் பசியால் வருந் துன்பத் தையும் நிவர்த்தி செய்விக்கத்தக்க தயவுடையவர்களாகார்கள். பசி யால் வருங் கொலையை ஆகாரத்தாலன்றி வேறு வகையால் நிவர்த்தி செய்விக்கப்படாது; பகை முதலியவற்றால் வருங்கொலையை அநேக உபாயத்தால் நிவர்த்தி செய்விக்கக் கூடுமாதலால், கொலையால் வருந் துன்பத்தைப் பசியால் வருந் துன்பத்திலமைத்து அடிக்கடி வலியுறுத்து கின்றதென் றறியவேண்டும்.

அன்றியும், தாகத்தால் வருந்துகின்றவரும், பிணியால் வருந்து கின்றவரும், இச்சையால் வருந்துகின்றவரும், எளிமையால் வருந்து கின்றவரும், பயத்தால் வருந்துகின்றவரும் பசிவருத்த முண்டாகும் போது அவ்வவ் வருத்தங்களை யெல்லாம் மறந்து பசிவருத்தம் மேற் பட்டு, ஆகாரந்தேட முயற்சி செய்கின்றார்கள். அன்றி, அரசன் ஆக் கினையால் கொலைக்குற்றம் பற்றிக் கொலைசெய்ய விதிக்கப்பட்ட குற்ற வாளியும் பசிவந்தபோது தன் பயத்தையும் துன்பத்தையும் மறந்து அந்தப் பசியை மாற்றிக் கொள்ள முயலுகிறான். வைத்தியரால் தாம் இறந்துவிடுவது நிச்சயமென்று தெரிந்துகொண்ட வியாதியாளரும் மூப்பாளரும் பசிவந்தபோது தமது துன்பத்தை மறந்து பசிநீக்க முயலு கின்றார்கள். பசிக்குத் தயவினால் ஆகாரங் கொடுக்கத் துணிந்தவன்

வேறுவகையால் சீவர்கள் இம்சைப் பட்டழிவதற்குச் சம்மதிக்கவேமாட்டான்; ஆகலினும் பசியால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விக்கிற தருமத்தை அடிக்கடி வலியுறுத்துவதென் றறியவேண்டும்.

பசியினால் வருங் கெடுதி எல்லாச் சீவர்களுக்குந் தேகநாசஞ் செய்வது உண்மையானல், எல்லாச் சீவர்கள் பசியையு மறிந்து நிவர்த்தி செய்விக்க வேண்டும்; அப்படி நிவர்த்தி செய்விக்கத் தொடங்கில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர் மனிதர் நரகர் மிருகம் பறவை ஊர்வன தாவரம் என்கிற இவ்வெழுவகைப்பட்ட அளவிறந்த பேதங்களுடைய சீவர்களது பசியை யறிந்து நீக்குவது அசாத்தியமாகுமே யென்னில்:—தேவர்கள் மனித சுதந்தரத்தினும் மேற்பட்ட சுதந்தர முடையவர்களாய்த் தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முயற்சியினலேயே மாற்றிக்கொள்ளத் தக்க வல்லபமுடையவர்க ளாதலால் அவர்கள் பசியைக் குறித்து மற்றவர்கள் யோசிப்பது அவசியமல்ல வென்றும், தேவர்களுக்கும் பசிநேர்ந்தால் துன்பமுண்டாகுமே யென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும்; நரகர் நாம் பசியாற்றுவிக்கத் தக்க இடங்களில் இல்லாமல் வேறிடங்களி லிருக்கின்ற படியாலும், நரகர் பசிக்குத் தண்டனைப் பரிவாரங்களால் பசியாற்றுவித்தலாலும், நரகர் பசியைக் குறித்து யோசிப்பது அவசியமல்லவென்றும், நரகரும் பசி நேரிடில் வருந்துவார்களேயென்று இரங்குவது மாத்திரம் அவசிய மென்றும்; ஊழ்வகையினல் சிறிதுஞ் சுதந்தர மில்லாத மரம் புல் முதலிய தாவரங்களில் மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் முயற்சியால் விளைவிக்கின்ற தாவர வர்க்கங்களுக்குப் பசி குறித்து நீர் விடுவது அவசிய மென்றும், மற்றைத் தாவரவர்க்கங்களெல்லாம் அருள் நியதியின்படி ஆகாரங் கொடுப்பிக்க உயிர்த்திருக்கின்றனவாதலால் அவைகளுக்கெல்லாம் பசியறிந்து ஆகாரங் கொடுப்பது நமது சுதந்தரமல்ல கடவுள் சுதந்தர மென்றும், அவை குறித்து யோசிப்பது அவசியமல்ல வென்றும், ஆகாரமில்லாவிடில் வருந்துமே யென்று இரங்குதல் மாத்திரம் அவசியமென்றும்; நிலத்திலும் நீரிலும் ஊருகின்ற உயிர்களுக்கும் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் அவ்வவற்றின் ஊழ்வகைக்குத் தக்கபடி அருள் நியதி ஆகாரங் கொடுப்பிக்க உண்டு பசியாறுகின்றன வென்றும், அவ்வவைகளுக்குத் தக்க ஆகாரம் அறிந்து கொடுப்பது நமது சுதந்தரமல்ல கடவுள் சுதந்தர மென்றும், அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்தரத்தால் சம்பாதித்துக் கொள்ளுகின்ற பசு எருது எருமைகடா ஆடு குதிரை முதலிய சில மிருகங்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியாற்றுதல் அவசிய மென்றும்; மனிதர்களில் ஆண்மக்கள் பெண்மக்கள் என்றிருவகைப்பட்ட எல்லா மனிதர்களுக்கும் பசியால் வரும் நஷ்டங்களும் துன்பங்களும் பசி நிவர்த்தியால் வரும் லாபங்களும் இன்பங்களும் பொதுவில்

ஒரு தன்மையாயிருத்தலாலும், பசியால் வரும் நஷ்டங்களையுந் துன்பங் களையும் மன முதலான அந்தக்கரண விருத்தியினாலும் கண் முதலான இந்திரியங்களாலும் மிகவும் அறிந்து கொள்கின்ற ஆன்மஅறிவு ஒத் திருத்தலாலும், மனிதர்களுக்கு ஊழ்வகையினால் அருள்நியதியின்படி கொடுப்பிக்கின்ற ஆகாரமட்டில் சீவித்துத் தேகத்தை வைத்திருக்கக் கூடாமையாலும், தங்கள் முயற்சியாலும் அறிவாலும் சுதந்தரத்தாலும் சம்பாதிக்கின்ற ஆகாமிய ஆகாரத்தாலும், பசியை நீக்கித் தேகத்தை வைத்திருக்கவேண்டு மாதலாலும், ஆகாமியத்தால் சம்பாதிக்கின்ற சீவசுதந்தரம் மனிதர்களுக்கு அருளால் மிகவும் கொடுக்கப்பட்டபடி யாலும், ஊழ்வகையால் ஆகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும்படி யாகவும் அந்தப் பசியை நீக்குநிமித்தம் ஒருவரையொருவர் எதிர்பார்க் கும் படியாகவும் அவர் தயவினால் ஆகாரங் கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன்முயற்சியிற் செலுத்தவும் ஆகாரங் கொடுத்தவர் சித்திமுத்திகளை யடையவும் அருள் நியதியாக விதிக்கப்பட்ட படியா லும், மனிததேகம் மற்றச் சீவதேகம்போல் இலேசிலே எடுக்கக்கூடா தாகலாலும், மனிததேகத்தில் **ஆன்மவிளக்கமும் அருள்விளக்கமும் மிகவும் விளங்குதலாலும்,** இந்த மனித தேகம் போனால் மீளவும் இந்தத்தேகம் வருமென்கிற நிச்சய மில்லாமையாலும், இந்த மனித தேகம் **முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும்,** இந்த மனிததேக மாத்திரமே முதற் சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவையுடைய தேகமாதலா லும், மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற சீவகாருணிய விதி யைப் பொதுவில் அவசியம் உறுதியாகப் பிடிக்கவேண்டுமென்றும் கடவுள் விதித்திருக்கின்ற படியால், பசியை ஆகாரத்தினால் நிவர்த்தி செய்விக்கின்ற சீவகாருணியஒழுக்கம்மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்தவேண்டுமென்று அறியவேண்டும்.

ஊழ்வகைக்குத் தக்கபடி மிருகம் பறவை முதலிய சீவர்களுக்கு அருளால் நியதி ஆகார மாத்திரம் இருக்க மனிதர்களுக்கு மாத்திரம் ஊழ்நியதி ஆகாரத்தோடு ஆகாமிய முயற்சி ஆகாரமும் வேண்டுவது அவசிய மென்றது எப்படி யென்னில்:— மனிதர்கள் பிராரத்தப்படி நியதி ஆகாரத்தைப் புசித்துப் பிராரத்த அனுபவத்தை நீக்கிக் கொண்டு, ஆகாமியத்தால் முயற்சி ஆகாரத்தைப் புசித்துக் கரணேந் திரிய தேகத்தை வலுவுள்ளதாகச் செய்துகொண்டு, சன்மார்க்க சாத னத்தை அனுசரித்துச் சித்தி முத்தி இன்பங்களைப் பெறக்கடவரென்று கடவுள் விதித்திருக்கின்றபடியால், மனிதர்களுக்குப் பிராரத்த ஆகார மும் ஆகாமிய முயற்சி ஆகாரமும் அவசியம் வேண்டுமென்று அறிய வேண்டும். மிருகம் பட்சி ஊர்வன தாவரம் என்கிற சீவதேகங்கள் தண்டனை நிமித்தம் விதித்த தேகங்களாதலால், பிராரத்த ஆகாரம்

கடவுள் விதித்த வண்ணம் அருட்சத்தியால் தடைபடாமல் கொடுக்கப் படு மாகலில், ஆகாமிய ஆகாரம் சம்பாதிக்க வேண்டாமென் றறிய வேண்டும்.

ஆனால் சீவகாருணியம் எல்லாச் சீவர்களுக்கும் பொதுவென்று முதலில் குறிக்கப்பட்டது என்னை யெனில் :— சீவகாருணிய ஒழுக்கத் தில் முக்கியமாக எல்லா மனிதர்களுக்கும் பொதுவில் பசியினால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்து ஆகாரத்தினால் திருப்தி இன்பத்தை உண்டுபண்ணவேண்டு மென்றும், பசியைப்போல் வேறு வகையினால் சீவகொலை நேரிடுவதானால் அந்தச் சீவகொலையைத் தம்மாற் கூடிய வரையில் எவ்விதத்திலாயினும் தடைசெய்து உயிர்பெறுவித்துச் சந் தோஷிப்பிக்கவேண்டு மென்றும், பிணி பயம் முதலிய மற்ற ஏதுக் களால் சீவர்களுக்குத் துன்பம் நேரிடில் அத்துன்பங்கள் தங்களால் நீக்கத்தக்கவை களாகில் நீக்கவேண்டு மென்றும், மிருகம் பறவை ஊர்வன தாவரம் முதலிய சீவர்களிடத்துப் பயத்தினால் வருந் துன்பத் தையும் கொலையினால் வருந் துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்தி செய்ய வேண்டு மென்றும், அவற்றுள் துஷ்ட சீவர்களிடத்தும் சிறிது பயத்தினால் வருந் துன்பம் மாத்திரமே யல்லது கொலையினால் வருந் துன்பங்களைச் செய்யப்படாதென்றும், இவ்வகை முழுதும் சீவ காருணியமேயாதலால் எல்லா உயிர்களிடத்தும் சீவகாருணியம் வேண்டுமென்று கடவுளால் ஆணைசெய்ததென் றறியவேண்டும்.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகச் சம்பாதிக்கின்ற உயிர்களில் சில உயிர்கள் தாமச ஆகாரமாகிய மாமிச ஆகாரஞ் செய் வதானால், அவைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது அந்த ஆகாரத்தைக் கொடுத்து ஆற்றுவிக்கப்படாதோ என்னில் :—ஒரு சீவனைக் கொன்று ஒரு சீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் சீவகாருணியஒழுக்கமே யல்லவென்றும், கடவுள் சம்மதமும் அல்லவென்றும், இவைகட்கு முழு விரோதமென்றும் அறிய வேண்டும். எல்லாச் சீவர்களும் இயற்கை யுண்மை ஏகதேசங்களாகிக் கடவுள் இயற்கைவிளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றபடியாலும், கடவுள் இயற்கைவிளக்கம் மறைபடும் போது சீவத்தன்மை இல்லாதபடியாலும், கடவுளியற்கைவிளக்கமும் ஜீவனியற்கைவிளக்கமும் ஒன்றேடொன்று மாறுபடாதாகலாலும், கடவு ளியற்கைவிளக்கமுஞ் சீவன் இயற்கைவிளக்கமும் அந்தந்தத் தேகங் களினும் விளங்குகின்ற படியாலும், ஒரு சீவனை வதைத்து அதனால் மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுதல் சீவகாருணிய ஒழுக்கத்திற்கு முழு விரோதமென்றே அறியவேண்டும்.

புலி சிங்கம் முதலிய மிருகங்கள் மற்றொரு சீவனைக் கொன்றுதின்று தாமச ஆகாரத்தால் பசியாற்றித் திருப்தி யின்பத்தை யடைந்து சந்தோஷிக்கின்றன ; அந்தச் சந்தோஷம் கடவுளியற்கை விளக்க ஏக

தேசமும் சீவன் இயற்கைவிளக்க நிறைவும் என்று கொள்ளக்கூடாதோ என்னில் :—கூடாது. தாமச ஆகாரத்தால் பூரண சத்துவமாகிய கடவுளியற்கைவிளக்க ஏகதேசமும் ஏகதேச சத்துவமாகிய ஆன்ம இயற்கைவிளக்கமும் விளங்கா ; இருளால் ஒளி விளங்காதது போல். இதைத் தாமச ஆகாரமென்பது என்னையெனில் :—கடவுள் விளக்கம் வெளிப்படாதபடி ஆன்ம விளக்கத்தை மறைத்த இம்சை ஆகாரமாதலால் தாமச ஆகாரமாயிற்று. இந்த ஆகாரத்தால் வந்த திருப்தி யின்பமாகிய சந்தோஷ விளக்கம் எதனுடைய விளக்கமென்னில் :—அனாதி பசுகரண மாயாவிளக்கம் என்று அறியவேண்டும். பசு வென்பது என்னை? ஆணவம் மாயை கன்மம் என்கிற மும்மல பந்தத்தால் ஒன்றுபட்டு அறிவிழந்த ஆன்மாவையே பசு வென்பது. அப்பசுவிற்கு விளக்கந் தோன்றுவது எப்படியென்னில் :—சூரியனை மறைத்த மேகவண்ணத்தி லுள்ள இருளினிடத்தும் சூரியப்பிரகாச விசேஷந் தோன்றுதலால் அவ்விருளும் விளக்கமாக வழங்குகின்றது. அதுபோல், அசுத்தமாயா கரணங்களும் தாமச குணமும் இருள்வண்ணமுடைய வாயினும் தம்மால் மறைக்கப்பட்ட பரசீவவிளக்க விசேஷத்தால் அசுத்தமாயா கரணமும் தாமசகுணமும் விளக்கமாக வழங்குகின்றன. இதனால், தாமச ஆகாரத்தில் வரும் விளக்கம் அசுத்தமாயாகரணவிளக்கமே என்றறியவேண்டும்.

ஆனால் மரம் புல் நெல் முதலான தாவரங்களும் உயிராகவே சொல்லப்படுகின்றனவே, அவைகளை இம்சைசெய்து ஆகாரமாகக் கொண்டால் அவை தாமச ஆகார மல்லவோ, அதனால் வந்த சந்தோஷம் அசுத்த மனோகரண சந்தோஷமல்லவோ என்னில் :— மரம் புல் நெல் முதலான தாவரங்களும் உயிர்கள்தான். அவைகளை இம்சைசெய்து ஆகாரங்கொண்டால் அது ஏகதேச தாமச ஆகாரந்தான். அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்தகரண சந்தோஷந்தான். ஆனாலும் அப்படியல்ல. மரம் புல் நெல் முதலான சீவர்கள் பரிச மென்கிற ஓரறிவையுடைய சீவர்களாதலாலும், அவ்வுடம்பில் சீவ விளக்கம் ஒருசார் விளங்குதலாலும், அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக் களும் மற்ற வித்துக்கள் போல் சடமாதலாலும், அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர் விளைவு செய்யக்கூடுமாதலாலும், அவ்வுயிர் களை வேறுசெய்யாமல் அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாமல் உயிர் தோன்றற்கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும் காய்களை யும் கனிகளையும் பூக்களையும் கிழங்குகளையும் தழைகளையும் ஆகாரங் களாகக் கொள்வதேயன்றி அவ்வுயிருள்ள முதல்களை ஆகாரமாகக் கொள்ளாதபடியாலும், அவைகளில் வித்து காய் கனி முதலானவை கொள்ளும்போது சுக்கிலம் நகம் ரோமம் முதலியவைகளை வாங்கும் போது இம்சை உண்டாகாமைபோல் இம்சை உண்டாகாதபடியாலும்,

தாவரவர்க்கங்களுக்கு மன முதலான அந்தக் கரணங்கள் விருத்தியில்லாதபடியாலும் அது உயிர்க்கொலையுமல்ல; துன்ப முண்டுபண்ணுவது மல்ல; அதனால் அது சீவகாருணிய விரோதமாகாது. அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் சீவவிளக்க சகிதமான கடவுள் விளக்கமேயாகுமென்று அறிய வேண்டும்.

மர முதலிய தாவரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிரேறுதற் கிடமாகிய சடங்க ளென்பது எப்படியென்னில் :—வித்துக்களில் சீவனிருந்தால் நிலத்தில் விதையா முன்னமே விளைய வேண்டும்; நிலத்தில் விதைத்த காலத்தும் சில வித்துக்கள் விளையாமலேயிருக்கின்றன. அன்றியும் வித்தென்பது காரணம். இந்தக் காரணம் உடம்பு தோன்றுதற்கே யென்று சிறு பிள்ளைகளாலும் அறியப்படும். அன்றி உயிர் நித்தியம், உடம்பு அநித்தியம்; நித்தியமான உயிர் காரணம் வேண்டாது; அநித்தியமாகிய உடம்பே காரணம் வேண்டும். ஆகலில் வித்துக்களைச் சடமென் றறியவேண்டும். ஆனால் வித்துக்களிடத்து ஆன்மாக்கள் ஏறுவது எப்படி யென்னில் :—நிலத்திற் கலந்த வித்திற்கு நீர்விடில் அந்த நீரின் வழியாகக் கடவுள் அருள் நியதியின்படி ஆன்மாக்கள் அணுத் தேகத்தோடு கூடி நிலத்திற் சென்று அந்நிலத்தின் பக்குவ சத்தியோடு கலந்து வித்துக்களினிடமாகச் செல்கின்றன வென்று அறிய வேண்டும்.

முளைகளையே பிடுங்கப்படா தென்று சிலர் சொல்கின்றார்கள்; வித்து காய் இலை முதலியவைகளைப் புசிக்கலாமென்று சொல்வ தெப்படி யென்னில் :—வித்து நிலத்திற் படிந்தபின் நீர் வழியாக ஆன்மாவானது சென்று பக்குவ சத்தியிற் கலந்து வித்திலேறி முளைத்த படியால், முளையானது வித்து காய் முதலியவைகளைப்போலச் சடமல்ல. ஆகலால், முளைகளைப் பிடுங்கப்படாதென்பது உண்மையென்று அறிய வேண்டும்.

வித்து காய் கனி முதலியவற்றில் உயிர்க்கொலை இல்லாவிடினும் நகம் ரோமம் சுக்கிலம் முதலியவற்றிலிருக்கிற அசுத்தமாவதில்லையோ என்னில் :—தத்துவவிருத்தியும் தாதுவிருத்தியும் இல்லாதபடியால் அசுத்தமுமில்லை.

ஆகலில் மரம் புல் நெல் முதலியவைகளின் வித்து காய் கனி தழை முதலியவற்றைப் புசிப்பது சீவகாருணிய விரோதமல்ல என்றறிய வேண்டும்.

மாமிச ஆகாரம் புலி முதலாகிய துட்ட மிருகங்களுக்கு நியதி ஆகார மல்லவோ என்றறிய வேண்டில் :—அது அவ்வுயிர்களுக்குச் சிருஷ்டிநியதிஆகார மல்ல; பரம்பரை வழக்கத்தாற் பெற்ற ஆகாரமா

மென் றறியவேண்டும். ஆதலில், அதை நிவர்த்தி செய்வித்துச் சத்துவ ஆகாரங்களைப் புசிப்பிக்கும்படி செய்யவுங்கூடும்; ஒரு சீலமுடையவன் கிரகத்தில் வழங்குகின்ற பூனைக்கும் நாய்க்கும் வேறிடங்களிற் போய் அசுத்தஆகாரங்கொள்ளாமல் காவல் செய்து அடிநாள் தொடங்கிச் சுத்தஆகார வழக்கமே செய்விக்கின்றான்; அவைகள் அவைகளைப் புசித்து உயிர் வழங்கி வருகின்றன. அப்படியே புலி சிங்கம் முதலிய துட்டவர்க்கங்களையும் மேல்நின்று சுத்தஆகாரத்தில் பழக்குவாரில்லாமையால் அசுத்தாகாரங்களைப் பழக்கத்தாற் புசிக்கின்றனவென் றறியலாம்.

ஆகலில், ஒரு சீவனைக்கொன்று மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுவித்தல் கடவுளருளுக்குச் சம்மதமுமல்ல, சீவகாருணிய ஒழுக்கமுமல்ல என்று சத்தியமாக அறியவேண்டும்.

இந்தச் சீவகாருணிய மென்கின்ற சாதனத்தில் சாத்தியமாகின்ற இன்பம் **அபர இன்பமென்றும் பரஇன்பமென்றும் இருவகைப் படும்.**

இச்சை முதலியவைகளைப் பற்றி உண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் அபர இன்பமாகும். அவை இம்மையில் அனுபவிக்கின்ற இன்பங்களில் சிலவென் றறிய வேண்டும். அவை எவையென்னில்:—உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும், இருப்பதற்கு இடமில்லாமலும், உழுவதற்கு நிலமில்லாமலும், பொருந்துவதற்கு மனைவியில்லாமலும், விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலிய வேறு வேறு கருவிகளில்லாமலும் துன்பப்படுகின்ற சீவர்கள் விஷயத்தில் சீவகாருணியந் தோன்றி, உடுப்பதற்கு வஸ்திரம், இருப்பதற்கு இடம், உழுவதற்குநிலம், பொருந்துவதற்குப் பெண், விரும்பியப்டி செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்தபோது, பெற்றுக் கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்ப விளக்கமும், அந்த இன்பத்தைக் கண்டு கொடுத்தவர்களுக்கு உண்டாகின்ற இன்ப விளக்கமும் கடவுள்கரணத்தில் ஏகதேசமும் சீவகரணத்திற் பூரணமுமாகத் தோன்றுகின்றவை யாகலால் அது அபர இன்பமென் றறியவேண்டும்.

அன்றி, தன் வத்திரம் தாழ்ந்ததாகவும் அன்னியன் வத்திரம் உயர்ந்ததாகவும் கண்டு அதில் ஆசை வைத்து வருந்துகின்ற வருத்தமும் கண்டால், காருண்யம் வேண்டாவோ என்னில்:—

....

....

பசியினால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் பரஇன்பமாகும். அவை இம்மையில் போகசித்திகளாலும்

யோகசித்திகளாலும் ஞானசித்திகளாலும் வருகின்ற இன்பங்களும் முடிவில் அனுபவிக்கப்படும் மோட்ச இன்பமும் ஆகுமென்றறியவேண்டும். உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த சீவர்களுக்குச் சீவகாருணியத்தால் ஆகாரங் கொடுக்க உண்டு பசி நீங்கிய தருணத்தில், அந்தச் சீவர்களுக்கு அகத்தினிடத்தும் முகத்தினிடத்தும் தழைந்து பொங்கித் ததும்புகின்ற இன்பமும், அது கண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும் முகத்திலும் அவ்வாறுண்டாகின்ற இன்பமும், ஆன்ம சகிதமாகிய கடவுள் கரணத்திற் பூரணமாகத் தோன்றுகின்றவை யாகலால், பர இன்பமென்றது என்றறியவேண்டும்.

வஸ்திரம், இடம், நிலம், பெண், பொருள் முதலானவைகள் இல்லாமல் துன்பப்படுகின்றவர்கள், அத்துன்பங்களை மனஎழுச்சியால் சகித்துக்கொண்டு உயிர்தரித்துத் தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக்கூடும். பசியினால் துன்பம் நேரிட்டபோது மனஎழுச்சியால் அத்துன்பத்தைச் சகித்துக்கொள்ளக் கூடாது. சகிக்கத் தொடங்கில் உயிரிழந்து விடுவார்கள். பசிநேரிட்டபோது பெற்றவர்கள் பிள்ளைகளை விற்றும், பிள்ளைகள் பெற்றவர்களை விற்றும், மனைவியைப் புருடன் விற்றும், புருடனை மனைவி விற்றும், அந்தப் பசியினால் வருந்துன்பத்தை மாற்றிக் கொள்ளத் துணிவார்களென்றால், அன்னியமாகிய வீடு, மாடு, நிலம், உடைமை முதலியவைகளை விற்றுப் பசியை நீக்கிக் கொள்வார்களென்பது சொல்லவேண்டுவதில்லை. உலக முழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய அரசனும் பசிநேரிட்டபோது தனது அதிகார உயர்ச்சி முழுதும் விட்டுத் தாழ்ந்த வார்த்தைகளால் 'பசிநேரிட்டது, என்ன செய்வது!' என்று அருகிலிருக்கின்ற அமைச்சர்களிடத்துக் குறை சொல்லுகிறான். பகைவரால் எறியப்பட்டு மார்பிலுருவிய பாணத்தையுங் கையாற் பிடித்துக்கொண்டு எதிரிட்ட பகைவரையெல்லாம் அஞ்சாது ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்த வீரரும் பசிநேரிட்டபோது, சௌகரியத்தை யிழந்து பசிக்கஞ்சிப் பக்கத்தில் நிற்கின்றவரைப் பார்த்து 'இளைப்பு வருமே! சண்டை எப்படிச் செய்வது!' என்று முறையிடுகின்றார்கள். இவ்வுலக போகங்களோடு இந்திரபோக முதலிய போகங்களையும் துரும்பாக வெறுத்து முற்றும் துறந்து அறிவையறிந்து அனுபவம் விளங்கிய ஞானிகளும், இந்திரியங்களை அடக்கி மனோலயஞ்செய்து உண்மைநிட்டையிலிருக்கின்ற யோகிகளும், இறந்தோரையும் எழுப்பத்தக்க அளவிறந்த மகத்துவங்கள் விளங்கிய சித்தர்களும், முனிவர்களும், தவசிகளும் பசிநேரிட்டபோது தங்கள் தங்கள் அனுபவலட்சியங்களை விட்டு அடுத்த ஊரை நோக்கிப் பலிக்கு வருகின்றார்கள்; பலி நேராதபோது நிலை கலங்குகின்றார்கள். சொற்பனத்தில் ஓர் இழிவு வரினும் அதுகுறித்து உயிர்விடத்தக்க மானிகளும் பசிநேரிட்டபோது, சொல்லத் தகாத

வரிடத்துஞ் சொல்லி மானங் குலைகின்றார்கள். சாதி சமய ஆசாரங்களில் அழுத்தமுடைய ஆசாரியர்களும் பசிவந்தபோது, ஆசாரத்தை மறந்து ஆகாரத்திற்கு எதிர்பார்க்கின்றார்கள். கல்வி கேள்விகளில் நிரம்பி அறிதற்கரிய நுட்பங்களை யறிந்து செய்தற்கரிய செய்கைகளைச் செய்து முடிக்கவல்லவர்களும் பசிநேரிட்டபோது, அறிவுங் கருத்தும் அழிந்து தடுமாறுகின்றார்கள். இராப்பகல் தோன்றாது புணர்ச்சி இன்பத்திற் பொங்குகின்ற காமிகளும் பசிநேரிட்டபோது, புணர்ச்சியை மறந்து காமத்தைக் கசந்து கலங்குகின்றார்கள். நாமே பெரியவர் நமக்குமேற் பெரியவரில்லை யென்று இறுமாப்படைகின்ற அகங்காரிகளும் பசிநேரிட்டபோது, அகங்காரங் குலைந்து ஆகாரங்கொடுப்பவரைப் பெரியவராகப் புகழ்கின்றார்கள். ஒருவகைக் காரியங்களில் அனேக வகைகளாக உபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும் பசிநேரிட்ட போது, டம்பத்தை இழந்து மயங்குகின்றார்கள். இவரிவர் இப்படி இப்படி யானால் ஒருவகை ஆதாரமுமில்லாத ஏழைகள் பசிநேரிட்ட போது என்ன பாடு படார்கள்! அந்தக் காலத்தில் அந்த ஏழைகளுக்கு ஆகாரங்கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷமுண்டாகும்! அந்தச் சந்தோஷத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு எப்படிப்பட்ட லாபங் கிடைக்கும்! இப்படிப்பட்டதென்று சொல்லுதற்கும் அருமை என்றறிய வேண்டும்.

சீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில் சீவஅறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது - அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது - அது மறையவே புருடதத்துவம் சோர்ந்துவிடுகின்றது-அது சோரவே பிரகிருதிதத்துவம் மழுங்குகின்றது-அது மழுங்கவே, குணங்களெல்லாம் பேதப்படுகின்றன - மனம் தடுமாறிச் சிதறுகின்றது - புத்தி கெடுகின்றது - சித்தம் கலங்குகின்றது - அகங்காரம் அழிகின்றது - பிராணன் சுழல்கின்றது - பூதங்களெல்லாம் புழுங்குகின்றன - வாத பித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன - கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது - காது கும்மென்று செவிடுபடுகின்றது - நா உலர்ந்து வறளுகின்றது - நாசி குழைந்து அழல்கின்றது - தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது - கை கால் சோர்ந்து துவளுகின்றன - வாக்குத் தொனிமாறிக் குளறுகின்றது - பற்கள் தளருகின்றன - மலசலவழி வெதும்புகின்றது - மேனி கருகுகின்றது - ரோமம் வெறிக்கின்றது - நரம்புகள் குழைந்து நைகின்றன - நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன - எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன - இருதயம் வேகின்றது-மூளை சுருங்குகின்றது - சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது - ஈரல் கரைகின்றது - இரத்தமும் சலமும் சுவறுகின்றன - மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது - வயிறு பகீரென் றெரிகின்றது - தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன -

உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும் மேன்மேலும் தோன்றுகின்றன. பசியினால் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது சீவர்களுக்கெல்லாம் பொதுவாகவேயிருக்கின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்தபோது உண்டு பசி நீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து உள்ளங் குளிர்ந்து அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் சீவகளையும் கடவுள்களையுந் துளும்பி ஒப்பில்லாத திருப்தியின்பம் உண்டாகின்றது. இப்படிப்பட்ட இன்பத்தை உண்டுபண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம்? இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்தத் தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுளம்சமென்றே சத்தியமாக அறியவேண்டும். இதனால் **நரக வேதனை சனனவேதனை மரண வேதனை என்கின்ற மூன்று வேதனைகளுங் கூடி முடிந்த வேதனையே பசிவேதனை** என்றும், அகம் புறம் நடு கீழ் மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத **மோக்ஷ இன்பமே ஆகாரத்தினாலுண்டாகும் திருப்தியின்பம்** என்றும் அறியப்படும்

பசியில்லாவிடில் சீவர்கள் ஆகாரங் குறித்து ஒருவரையொருவர் எதிர்பார்க்க மாட்டார்கள்; எதிர்பாராத பக்ஷத்தில் உபகாரச் செய்கை தோன்றாது. அது தோன்றாதபோது சீவகாருணியம் விளங்காது; அது விளங்காதபோது கடவுளருள் கிடைக்க மாட்டாது. ஆகலால், **பசியும் கடவுளாற் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவியென்றே** அறியவேண்டும்.

பசியினால் துன்பப்படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷமும் தாய், பிதா, பெண்டு, பிள்ளை, காணி, பூமி, பொன், மணி முதலானவைகளைக் கண்ட காலத்திலும் அடையார்களாயின், ஆகாரம் உண்ட காலத்தில் உண்டாகும் சந்தோஷம் எப்படிப்பட்டதாக இருக்கும்? ஆகலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்களும் கடவுளருளின் ஏகதேச சொரூப ரூப சுபாவங்களாகவே அறியவேண்டும்.

பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்ற போது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருணியம் - பசி என்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம் - கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகாரங்

கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே சீவகாருணியம் - கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித் தனஞ் செய்கின்ற சீவரது தத்துவக் குடும்ப முழுதும் பசியினால் நிலை தடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவகாருணியம் - பசி என்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப் புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே சீவகாருணியம் - பசி என்கிற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத் தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவ காருணியம் - பசி என்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத் தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம் - 'நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்றுதின்ற பசி யென்கிற பாவி இன்றும் வருமே! இதற்கு என்ன செய்வோம்!' என்று ஏக்கங் கொள்கின்ற ஏழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவகாருணியம் - 'வெயிலேறிப் போகின்றதே, இனிப் பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது!' என்று தேனில் விழுந்த ஈயைப்போல, திகைக்கின்ற ஏழைச் சீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் சீவகாருணியம் - 'இருட்டிப் போகின்றதே, இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்!' என்ற விசாரத்தில் அழுந்திய ஏழைச் சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருணியம் - 'நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது, கேட்டுக்கேட்டு வாயுஞ் சோர்ந்தது, நினைத்து நினைத்து மனமுஞ் சோர்ந்தது, இனி இப்பாவி வயிற்றுக் கென்ன செய்வோம்!' என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருணியம் - 'பகற் போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற் போக வெட்கந் தடுக்கின்றது, வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின் றது, வயிறு எரிகின்றது, உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை; இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்!' என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப் போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம் - 'நாம் முன் பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப் பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப் பிறப்பில் நமது பசிக்குறிப் பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறி தொருவர் நேர்வார்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை' என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச் சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம் - தேக

முழுதும் நரம்புகள் தோன்றப் பசியினல் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடிய காலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைத்து நினைத்து நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல, அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவதே சீவகாருணியம் - 'நேற்றுப் பட்டினி கிடந்தது போல் இன்றும் பட்டினி கிடப்பது எப்படி? நாம் பாலிய வசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோ மாயினும் பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்? இவள் பசியைக் குறிப்பதும் பெரிதல்ல, வார்த்திப திசையால் மிகவுஞ் சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்துவிடுவார்களே! இதற்கென்ன செய்வோம்? பசியினல் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம்?' என்று எண்ணி எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப்போல், பசி நெருப்பும் பயநெருப்பும் விசாரநெருப்பும் உள்ளே மூண்டபடியிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக் கொண்டு கண்களில் நீர்கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே சீவகாருணியம் - 'கண் கை கால் முதலிய உறுப்புக்களிற் குறைவில்லாதவர்களாகி ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தி யுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள்; குருடும் செவிடும் ஊமையும் முடமுமாக விருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும்! பசி எப்படி நீங்கும்!' என்று தனித்தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவகாருணியம் - **பசியினல் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச் சாதியாராயினும் எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை ஒழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள்** பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம் - சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசிநிவர்த்தி செய்து கொள்ளத் தக்க மிருகம் பறவை ஊர்வன தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது பசிநிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்.

பசியை நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க புவனபோக சுதந்தரங்களைப் பெறுதற்குரிய அறிவிருந்தும் பூர்வகர்மத்தாலும் அஜாக்கிரதையாலும் அச்சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பசியினல் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசிவருத்தத்தை நீக்கித்

திருப்தியின்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய சீவ காருணியம் என்கின்ற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழவேண்டும். ஆகலில், சீவ காருணிய மென்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலைக் காலமுள்ள போதே சம்பாதித்துக்கொண்ட சமுசாரிகள் சரியை, கிரியை, யோகம் ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

புண்ணியபூமிகளை வலஞ்செய்தல், புண்ணியதீர்த்தங்களிலாடல், புண்ணியதலங்களில் வசித்தல், புண்ணியமூர்த்திகளைத் தரிசித்தல், தோத்திரஞ்செய்தல், ஜெபஞ்செய்தல், விரதஞ்செய்தல், யாகஞ் செய்தல், பூசைசெய்தல் முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும் பத்தர்களும் இருடிகளும், உணவை நீக்கி உறக்கத்தை விட்டு விஷயச்சார்புகளைத் துறந்து இந்திரியங்களை அடக்கி மனோ லயஞ் செய்து யோகத்திலிருக்கின்ற யோகிகளும், அளவிறந்த சித்தியின்பங்களைப் பெற்ற சித்தர்களும், நித்தியா நித்தியங்களை அறிந்து எல்லாப்பற்றுக்களையும் துறந்து பிரமானுபவத்தைப் பெற்ற ஞானிகளும், சீவகாருணியம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால், மோட்ச மென்கிற மேல்வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்திற் காத்திருந்து மீளவும் அத்திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்களல்லது, கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழமாட்டார்களென்று உண்மையாக அறிய வேண்டும். இதனால், அறிவு விளங்கிய சீவர்களுக்கெல்லாம் **சீவ காருணியமே கடவுள் வழிபாடு** என்றும் அறியப்படும்.

அன்றியும், சீவகாருணிய ஒழுக்கத்தை உடையவர்களாகி அருந்தல் பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங்களை அனுபவிக்கின்ற சமுசாரி களெல்லாம் சர்வசக்தியுடைய கடவுளருளுக்கு முழுதும் பாத்திர மாவார்கள். சீவகாருணிய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுளருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்மவிளக்க முள்ளவர்களாகவும் நினைக்கப்படாது. **சீவகாருணிய மில்லாது செய் யப்படுகிற செய்கைக ளெல்லாம் பிரயோஜன மில்லாத மாயா சாலச் செய்கைகளே** யாகுமென்று அறியவேண்டும்.

எல்லாச் சீவர்களும் கடவுள் இயற்கையுண்மை ஏகதேசங்களாத லாலும் அவரவர் இடங்களிற் கடவுள் அருள்விளக்கம் விளங்குதலா லும், சமுசாரிகளுள் தமது தாய் தந்தை புணர்ந்தோர் மக்கள் துணைவர்

முதலிய குடும்ப மட்டில் பசியாற்றிக் கொள்ளத் தக்க அற்பசக்தியுள்ள சமுசாரிகள் தாய் பிதா மக்கள் துணைவர் முதலிய குடும்பத்தாரைப் பசியினால் பரிதபிக்க விட்டு அயலார்க்குப் பசியாற்றத் தொடங்குதலும், தம்மிடத்துப் பசித்து வந்த அயலாரை அந்தப் பசியால் பரிதபிக்க விட்டுத் தம் குடும்பத்தார் பசியை யாற்றத் தொடங்குதலும், கடவுளருளுக்குச் சம்மதமல்ல. ஆதலால், தமது குடும்பச் செலவைக் கூடிய மட்டில் சிக்கனஞ் செய்து இருதிறத்தார் பசியும் நீக்குதல் வேண்டுமென்றும்; அற்பசத்தியினுங் குறைபட்டுத் தமது குடும்ப மட்டிலும் பசியாற்றுவிப்பதற்குப் பிரயாசையால் மிகச் சிறிய முயற்சியுடைய சமுசாரிகள் தமது குடும்ப மட்டிலாவது பசியாற்றுவித்துக் கொண்டு, தம்மிடத்துப் பசித்துவந்த அயலார் விஷயத்தில் மிகவும் தயவுடையவர்களாகி அவர் பசியை மற்றொருவரைக் கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத் தக்க முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டுமென்றும்; இயல்புள்ள பிரபல சமுசாரிகள் தங்கள் தங்கள் வருவாய்க்குத் தக்கவரையில் தாய், பிதா, புணர்ந்தோர், மக்கள், துணைவர், உறவினர், சிநேகர், அதிதிகள், பெரியர், அடிமைகள், அயலார், பகைவர் முதலியவர்களுக்கும், தமது குடும்பத்திற்குச் சகாயமாகத் தேடிய பசு, எருது, எருமை, ஆடு, குதிரை, தாவர முதலிய பிராணிகளுக்கும், பசியை ஆற்றுவித்துத் திருப்தியின்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும்; விவாகம் புத்திரப்பேறு தெய்வம்படைத்தல் முதலிய பலவகைச் செய்கைகளில் வேறு வேறு சடங்குகளும் வேறு வேறு விநோதங்களும் வேறு வேறு பெருமைப்பாடுகளும் குறித்துப் பொருட் செலவு செய்தலை அமைத்து, விவாக முதலிய அந்தந்தச் செய்கைகளிலும் பசித்த சீவர்களுக்குப் பசியை ஆற்றுவித்து இன்பத்தை யுண்டுபண்ணுகின்ற சிறப்பினையே செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யில் பசித்தவர் பசி நீங்கி அடைந்த இன்பத்திலும் அனேக மடங்கு அதிகமான இன்பத்தைத் தாம் அடைவார்களென்றும் சத்தியமாக அறிய வேண்டும்.

சமுசாரிகள் விவாக முதலிய விசேஷ காரியங்களில் பந்தலை அலங்கரித்தும், அவ்விடத்தில் வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல் பாடல் வரிசை ஊர்வலம் முதலிய விநோதங்களையும் அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளையும் நடத்தியும், எக்களிப்பில் அழுந்தியிருக்குந் தருணத்தில் பசித்த ஏழைகள் முகத்தைப் பார்க்கவும் சம்மதிக்கவில்லை. இப்படிப்பட்ட சந்தோஷ காலத்தில் தமக்காயினும் தமது மக்கள் துணைவர் முதலியோர்க்காயினும் ஒவ்வோர் ஆபத்து நேரிடுகின்றது. அப்போது அவ்வளவு சந்தோஷத்தையும் இழந்து துக்கப்படுகிறார்கள். இப்படித் துக்கப்படும்போது, அலங்காரஞ் செய்த பந்தலும், சங்கல்ப விகல்பமான சடங்குகளும்,

ஆடல் பாடல் வாத்தியம் வரிசை ஊர்வலம் முதலிய விநோதங்களும், அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளும் அந்த ஆபத்தைத் தடைசெய்யக் கண்டதில்லை. அந்தச் சுபகாரியத்தில் உள்ளபடியே பசித்த சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியை நீக்கி அவர்கள் அகத்திலும் முகத்திலும் கடவுள் விளக்கத்தையும் கடவுளின் பத்தையும் வெளிப்படச் செய்திருந்தார்களானால், அந்த விளக்கமும் இன்பமும் அத்தருணத்தில் நேரிட்ட ஆபத்தை நீக்கி விளக்கத்தையும் இன்பத்தையும் சத்தியமாக உண்டுபண்ணுமல்லவா ? ஆகலில், விவாக முதலிய விசேஷச் செய்கைகளிலும் தங்கள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களது பசியை ஆற்றுவித்துத் திருப்தி யின்பத்தை உண்டுபண்ணுவது முக்கியமென் றறியவேண்டும். சூலை குன்மம் குஷ்டம் முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களுக்குப் பசி யாற்றுவிப்பதே விரதமாக அனுசரித்தார்களானால், அந்தச் சீவகாருணிய அனுசரிப்பே நல்ல மருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்தி செய்து, விசேஷ சௌக்கியத்தை உண்டுபண்ணு மென்பது உண்மை. பலநாள் சந்ததி யில்லாமல் பலபல விரதங்களைச் செய்து வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்தச் சீவகாருண்ய அனுசரிப்பு நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டுபண்ணு மென்பது உண்மை. அற்ப வயதென்று குறிப்பினால் அறிந்துகொண்டு இறந்து போவதற்கு அஞ்சி விசாரப்படுகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்தச் சீவகாருணிய அனுசரிப்பு தீர்க்காயுளை உண்டுபண்ணு மென்பது உண்மை. கல்வி அறிவு செல்வம் போகம் முதலியவைகளைக் குறித்து வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்தச் சீவகாருணிய அனுசரிப்பு கல்வி அறிவு செல்வம் போகம் முதலானவைகளை உண்டுபண்ணுமென்பது உண்மை.

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக் கொண்ட சீவகாருணிய முள்ள சமுசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது, மண்ணும் சூடு செய்யாது - பெருமழை, பெருங்காற்று, பெரும்பனி, பேரிடி, பெருநெருப்பு முதலிய உற்பாதங்களும் துன்பம் செய்விக்க மாட்டா - விடுசிகை * விஷக்காற்று விஷசுரம் முதலிய அசாத்தியப் பிணிகளு முண்டாகா - அந்தச் சீவகாருணியமுள்ள சமுசாரிகள் ஆற்று வெள்ளத்தாலும் கள்ளர்களாலும் விரோதிகளாலும் கலக்கப்படார்கள் - அரசர்களாலும் தெய்வங்களாலும் அவமதிக்கப்படார்கள் -

---

* வீடுசிகை - வைசூரி, அம்மை

சீவகாருணிய முள்ள சமுசாரிகளது விளைநிலத்தில் பிரயாசை யில்லாமலே விளைவு மேன்மேலும் உண்டாகும் - வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியோகத்திற் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும் - சுற்றங்களாலும் அடிமைகளாலும் சூழப்படுவார்கள் - துஷ்ட மிருகங்களாலும் துஷ்ட ஜந்துக்களாலும் துஷ்டப் பசாசுகளாலும் துஷ்ட தெய்வங்களாலும் பயஞ்செய்யப்படார்கள் - சீவகாருணிய முள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அஜாக்கிரதையினாலும் ஊழ்வகையினாலும் சத்தியமாக வாராது.

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற சீவகாருணிய ஒழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள் மனிதர்கள், பிரமசாரிகள், சமுசாரிகள், தவசிகள், சந்நியாசிகள், ஆண் சாதியர், பெண்சாதியர், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவ்சியம் செய்யத்தக்க தென்பது கடவுளாணை யென்றறியவேண்டும்.

பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப் பெண்சாதி தடுத்தாலும், பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும், பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும், தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும் சீஷரை ஆசாரியர் தடுத்தாலும், அடியாரை ஆண்டவன் தடுத்தாலும், குடிகளை அரசன் தடுத்தாலும் அந்தத் தடைகளால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மை தீமைகள் அவரவரைச் சேருமல்லது வேரிடத்திற் போகா வென்பதை உண்மையாக நம்பிச் சீவகாருணிய ஒழுக்கத்தை நடத்த வேண்டு மென்றும் அறியவேண்டும்.

உள்ளபடி பசியால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங்கொடுக்க நினைத்தபோது, நினைத்த புண்ணியரது மனம் வேறு பற்றுக்களை விட்டுச் சுத்தக் கரணமாகி நினைத்தபடியால், அந்தப் புண்ணியர்களை **யோகி**களென்றே உண்மையாக அறியவேண்டும். ஆகாரங் கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது, அவருண்ணுவது தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்ற படியால், **ஞானி**களென்றே உண்மையாக அறியவேண்டும். ஆகாரங்கொடுக்க உண்டு பசி தீர்ந்தவர்களுக்கு அத்தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத்தும் கீழும் மேலும் நடுவும் பக்கமும் நிறைந்து கரண முதலிய தத்துவங்களெல்லாம் குளிர்வித்துத் தேகமுழுதும் சில்லென்று தழைய முகத்தினிடமாகப் பூரித்து விளங்குகின்ற கடவுள்விளக்கத்தையும் திருப்தியின்பமாகிய கடவுளின் இன்பத்தையும் பிரத்தியட்சத்தில் தரிசித்து அனுபவிக்கின்றார்களாதலால், அந்தப் புண்ணியர்கள் **கடவுளைக் கண்டவர்**களென்றும் கடவுளின்பத்தை அனுபவிக்கின்ற முத்தரென்றும் அறியவேண்டும். பசி நீங்க உண்டு சந்தோஷித்தவர்கள் இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப்

பாவிக்கின்றார்களாதலால், இவர்களே தெய்வமுமென்று உண்மையாக அறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்க முடையவர்களாகிச் சீவர்களைப் பசியென்கின்ற அபாயத்தினின்றும் நீங்கச் செய்கின்ற உத்தமர்கள், எந்தச் சாதியாராயினும், எந்தச் சமயத்தாராயினும், எந்தச் செய்கையை யுடையவர்களாயினும், தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையராவர்களென்று சர்வசக்தியை யுடைய கடவுள்சாட்சியாக சத்தியஞ் செய்யப்படுமென்று அறிய வேண்டும்.

இன்னும் இந்தச் சீவகாருணிய ஒழுக்கத்தின் விரிவைச் **சமரச வேதத்திற்** கண்டுகொள்ளலாம்.

பிரபவ ஹூ சித்திரை மீ

திருச்சிற்றம்பலம்

ஜீவகாருண்ய ஒழுக்கம் முதற்பிரிவு முற்றிற்று.

ஜீவகாருண்ய ஒழுக்கம்

இரண்டாவது பிரிவு

ஆன்ம இன்ப வாழ்வு

திருச்சிற்றம்பலம்

உலகத்தில் உயர்பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினுல் அடையத்தக்க தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகத்தைக் காலமுள்ள போதே விரைந்து அறிந்து அடைய வேண்டும்.

அந்தத் தலைப்பட்ட **ஆன்மஇன்ப வாழ்வு** எத்தனை வகையென் றறியவேண்டில்:— **இம்மையின்ப வாழ்வு, மறுமையின்ப வாழ்வு, பேரின்ப வாழ்வு** என மூன்றுவகை யென்று அறிய வேண்டும்.

இம்மை யின்பமாவது :— சிறியதேககரணங்களைப் பெற்றுச் சிறிய முயற்சியால் சிறியவிடயங்களைச் சிலநாள் அனுபவிக்கின்ற இன் பத்தை **இம்மை யின்பம்** என்றறிய வேண்டும்.

இம்மை இன்ப லாபமாவது:— மனிதப்பிறப்பில் தேகத்திலும் கரணங்களிலும் புவனத்திலும் போகங்களிலும் குறைவின்றி நல்லறிவு உடையவர்களாய், பசி பிணி கொலை முதலிய தடைகளில்லாமல், உற வினர் சிநேகர் அயலார் முதலியருந் தழுவ, சந்ததி விளங்கத்தக்க சற் குணமுள்ள மனைவியுடன், விடயங்களைச் சில நாள் அனுபவிக்கின் றதை **இம்மையின்ப லாபம்** என்றறிய வேண்டும்.

மறுமை யின்பமாவது:-உயர்பிறப்பில் பெரிய தேககரணங்களைப் பெற்றுப் பெருமுயற்சியால் பெரியவிஷயங்களைப் பலநாள் அனுபவிக் கின்ற இன்பத்தை **மறுமை யின்பம்** என்றறிய வேண்டும்.

மறுமையின்ப லாபமாவது :— உயர்பிறப்பைப் பெற்று இம்மை யின்பலாபத்தில் குறிக்கப்பட்ட நற்குணங்களெல்லாம் பொருந்த உயர் நிலையில் சுத்த விடயங்களைப் பலநாள் அனுபவிக்கின்ற இன்ப லாபத்தை **மறுமையின்ப லாபம்** என்றறிய வேண்டும்.

பேரின்பமாவது:—எல்லாத்தேகங்களையும், எல்லாக்கரணங்களை யும், எல்லாப்புவனங்களையும், எல்லாப் போகங்களையும், தமது பூரண

இயற்கைவிளக்கமாகிய அருட்சத்தியின் சந்நிதிவிசேடத்தால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற பூரண இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் அநுபவிக்கப்படுகின்ற ஒப்பற்ற அந்தப் பெரிய இன்பத்தைப் பேரின்பமென்றறிய வேண்டும்.

பேரின்ப லாபமாவது :—யாவுந் தாமாய் விளங்குவதே.

இம்மை இன்பத்தை யடைந்தவர் பெருமை எதுவென் றறிய வேண்டில்:— அன்பு, தயை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை முதலிய சுபகுணங்களைப் பெற்று விடய இன்பங்களை வருந்தி முயன்று அநுபவித்துப் புகழ்படவாழ்தலென் றறிய வேண்டும்.

மறுமையின்ப லாபத்தை யடைந்தவர் பெருமை யாதென்றறிய வேண்டில் :—அன்பு தயை முதலிய சுப குணங்களைப் பெற்றுச் சுத்த விடய இன்பங்களை எண்ணியபடி தடைபடாமல் முயன்று பலநாளநுபவித்துப் புகழ்படவாழ்தலென் றறிய வேண்டும்.

பேரின்ப லாபத்தை யடைந்தவர் பெருமை எது என்றறிய வேண்டில்:—தோல், நரம்பு, என்பு, தசை, இரத்தம், சுக்கிலம் முதலிய அசுத்தபூத காரியங்களும் அவற்றின் காரணங்களாகிய அசுத்தப் பிரகிருதி அணுக்களுமாகிய தேகத்தை மாற்றி, மாற்று இவ்வளவு என்றறியப்படாத உயர்ந்த பொன்னாகிய சுத்தபூதகாரிய **சுத்த தேகத்தையும்**, பொன்வடிவாகத் தோன்றுதல் மாத்திரமே யன்றி ஆகாயம்போல் பரிசிக்கப்படாத சுத்தபூதகாரண **பிரணவ தேகத்தையும்**, தோன்றப்படுதலு மின்றி ஆகாயம்போல் விளங்குகின்ற **ஞான தேகத்தையும்** பெற்றவர்களா யிருப்பார்கள். உள்ளே மண்ணினது திண்மையால் தறிக்கப்படார்கள் ; புறத்தே மண் கல் முதலியவற்றால் எறியினும் அவை அவர் வடிவில் தாக்குவனவல்ல. உள்ளே நீரினது தண்மையால் குளிரப்படார்கள்; புறத்தே நீரிலமுத்தினும் அவர் வடிவம் அழுந்தாது. உள்ளே நெருப்பினது வெம்மையால் சுடப்படார்கள் ; புறத்தே நெருப்பிற் சுடினும் அவர் தேகத்தில் சூடும் வடுவும் தோன்றுவனவல்ல. உள்ளே காற்றினது ஊக்கத்தால் அசைக்கப்படார்கள் ; புறத்தே காற்று அவர் வடிவைப் பரிசித்தசைக்கமாட்டாது. உள்ளே ஆகாயத்தினது கலப்பினால் அந்தரிக்கப்படார்கள் ; புறத்தே ஆகாயம் அவர் தேகத்தை அந்தரிக்கமாட்டாது. ஆதாரத்திலன்றி நிராதாரத்திலும் அவர் தேகம் உலாவும். அவரது கண்கள் முதலிய ஞானேந்திரியங்களும் வாக்கு முதலிய கர்மேந்திரியங்களும் பார்த்தல் முதலிய விஷயங்களையும் பேசுதல் முதலிய விஷயங்களையும் பற்றுவன வல்ல ; தயையினால் விஷயங்களைப் பற்றவேண்டில், சுவர் மலை

முதலிய தடைகளும் அவர் கண்களை மறைப்பன வல்ல. அண்ட பிண்டங்களில் அகம் புறம் முதலிய எவ்விடத்துமுள்ள விடயங்களை அவர் கண்கள் இருந்த விடத்திருந்தே கண்டறியும். அண்ட பிண்டங்களி லெவ்விடத்திருந்து பேசினும் அவர் செவிகள் இருந்த விடத்திருந்தே கேட்டறியும். எவ்விடத் திருக்கின்ற ரசங்களையும் அவர் நா இருந்த விடத்திருந்தே சுவைத்தறியும். எவ்விடத் திருக்கின்ற பரிசங்களையும் அவர் மெய் இருந்த விடத்திருந்தே பரிசித் தறியும். எவ்விடத் திருக்கின்ற கந்தங்களையும் அவர் நாசி இருந்த இடத் திருந்தே முகர்ந்தறியும். எவ்விடத்திலிருக்கின்றவர்களுக்கும் அவரது கைகள் இருந்த விடத்திருந்தே கொடுத்தல் கூடும். எவ்விடத் திலும் அவரது கால்கள் இருந்த விடத்திருந்தே நடத்தல் கூடும். அவரது வாக்கு எவ்விடத்திலிருக்கின்ற எவ்வெவர்களோடும் இருந்த விடத்திருந்தே பேசுதல் கூடும். மற்ற இந்திரியங்கள் இருந்த விடத் திருந்தே எவ்விடத்தும் ஆனந்தித்தல் கூடும். அவரது மன முதலான கரணங்கள் எப்படிப்பட்ட விஷயங்களையும் பற்றுவனவல்ல; தயவினால் பற்றத் தொடங்கில் எல்லா உயிர்களினது எல்லாச் சங்கற்ப விகற்பங் களையும் ஒரு நிமிடத்தில் ஒருங்கே நினைத்து விசாரித்து நிச்சயித்துக் கொள்ளும். அவரறிவு ஒன்றையும் சுட்டியறியாது; தயவினால் சுட்டி யறியத் தொடங்கில் எல்லா அண்டங்களையும் எல்லா உயிர்களையும் எல்லாப் பண்புகளையும் எல்லா அனுபவங்களையும் எல்லாப் பயன்களை யும் ஒருங்கே ஒரு நிமிடத்தில் சுட்டியறியும். அவர்கள் நிர்க்குணத்த ராவார்களல்லது, தாமச இராசத சாத்துவிக முதலிய முக்குணங்களா லும் உள்ளே விகாரப்படார்கள்; புறத்தே அவரது குணங்கள் கரணங் களைப் பற்றுவனவல்ல. உள்ளே பிரகிருதியினால் மூடப்படார்கள்; புறத்தே அவரது பிரகிருதி குணங்களைப் பற்றுவனவல்ல. உள்ளே கால தத்துவத்தால் வேற்றுமைப்படார்கள்; புறத்தே காலத்தால் அவரது திருமேனி தடைபடாது. உள்ளே நியதி அளவால் அளக்கப் படார்கள்; புறத்தே நியதியால் அவரது திருமேனி வரைபடாது. அன்றிக் காலம் வித்தை ராகம் புருடன் முதலிய மற்றைத் தத்துவங் களும் தத்துவகாரியங்களும் அவர்களுக்கு இல்லை. மாயையால் பேதப்படார்கள்; சுத்தமகாமாயையைக் கடந்து அதன்மேல் அறி வுருவாக விளங்குவார்கள். ஆகாரம், நித்திரை, மைதுனம், பயம் என்பவைகளால் தடைபடார்கள். அவர்கள் தேகத்திற்குச் சாயை, வியர்வை, அழுக்கு, நரை, திரை, மூப்பு, இறப்பு முதலிய குற்றங்கள் உண்டாவனவல்ல. பனி, மழை, இடி, வெயில் முதலியவற்றாலும், இராக்கதர், அசுரர், பூதம், பசாசு முதலியவற்றாலும், தேவர், முனிவர், மனிதர், நரகர், மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்பவைகளாலும் எவ்விடத்தும் எக்காலத்தும் அவர் தேகம் வாதிக்கப்படாது; வாள் கத்தி முதலிய கருவிகளாலும் கண்டிக்கப்படாது. எல்லா அண்டங்

களும் அணுக்கள் போலச் சிறிதாகத் தோற்றலும், எல்லா அணுக்களும் அண்டங்கள் போலப் பெரிதாகத் தோற்றலும் அவர் தேகத்திற்கு உரித்து. இறந்தோரை எழுப்புதல் வார்த்திபரை வாலிபராக்கல் முதலிய **கருமசித்தி**களும் **யோகசித்தி**களும் **ஞானசித்தி**களும் அவர் சந்நிதியில் இடைவிடாது விளங்கும். சிருஷ்டித்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்கிரகித்தல் என்கின்ற கிருத்தியங்களும் அவர் நினைத்த மாத்திரத்தில் நடக்கும். பஞ்சகர்த்தாக்களும் அவர் கடைக்கண் பார்வையால் தங்கள் தங்கள் தொழில் நடத்துவார்கள். அவர்கள் அறிவு கடவுளறிவாக இருக்கும். அவர்கள் செய்கை கடவுள் செய்கையாக இருக்கும். அவர்கள் அனுபவம் கடவுள் அனுபவமாக இருக்கும். சர்வசக்தியு முடையவர்களாய், எக்காலத்தும் அழிவில்லாதவர்களாய், ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களும் அம்மலவாதனைகளும் இல்லாதவர்களாய், பேரருள்வண்ண முடையவர்களாய் விளங்குவார்கள். ஜடமாகிய ஒரு துரும்பும் அவரது திருநோக்கத்தால் உயிர் பெற்றுப் பஞ்சகிருத்தியங்களும் செய்யும். அவரது பெருமை வேதாந்த, சித்தாந்த, கலாந்த, போதாந்த, நாதாந்த, யோகாந்தம் என்கின்ற ஆறந்தங்களிலும் விளங்கும்; அவற்றைக் கடந்தும் விளங்குமென்று அறியவேண்டும். இவை பேரின்பலாபத்தை யடைந்தவர் பெருமையென்று அறிய வேண்டும்.

இம்மூவகை இன்பலாப வாழ்வையும் எதனால் பெறக்கூடுமென்றறியவேண்டில்:— கடவுளின் இயற்கைவிளக்கமாகிய அருளின் ஏகதேசத்தைக் கொண்டும் அருட்பூரணத்தைக் கொண்டும் அடையக்கூடுமென்று அறியவேண்டும்.

இம்மூவகை இன்பங்களில் ‘அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையத்தக்கவை எவை? அருட்பூரணத்தைக் கொண்டு அடையத் தக்கது யாது?’ என்றறியவேண்டில்:— இம்மையின்பலாபம் மறுமையின்பலாபம் என்கின்ற இரண்டையும் அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையக்கூடு மென்றும் பேரின்பலாப மென்கின்ற ஒன்றையும் அருட்பூரணத்தைக் கொண்டு அடையக்கூடு மென்றும் அறியவேண்டும்.

கடவுளின் இயற்கைவிளக்கமாகிய அருள் எந்த வண்ணத்தை உடையது என்றறியவேண்டில்:—சொல்லுவார் சொல்லும் வண்ணங்களும், நினைப்பார் நினைக்கும் வண்ணங்களும், அறிவார் அறியும் வண்ணங்களும், அனுபவிப்பார் அனுபவிக்கும் வண்ணங்களும் ஆகிய சர்வசத்தி வண்ணங்களும் தனது ஏகதேசவண்ணங்களாக விளங்க விளக்கி விளங்குகின்ற பூரணவிளக்க வண்ணத்தை யுடையது என்று அறியவேண்டும்.

அந்த அருள் எவ்விடத்து விளங்குகின்றதென்று அறிய வேண்டில் :—நோக்குவார் நோக்குமிடம் நோக்கப்படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படுமிடம், சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப் படுமிடம், முகர்வார் முகருமிடம் முகரப்படுமிடம், பொருந்துவார் பொருந்துமிடம் பொருந்தப்படுமிடம், பேசுவார் பேசுமிடம் பேசப்படு மிடம், செய்வார் செய்யுமிடம் செய்யப்படுமிடம், நடப்பார் நடக்குமிடம் நடக்கப்படுமிடம், விடுவார் விடுமிடம் விடுக்கப்படுமிடம், நினைப்பார் நினைக்குமிடம் நினைக்கப்படுமிடம், விசாரிப்பார் விசாரிக்குமிடம், விசாரிக்கப்படுமிடம், துணிவார் துணியுமிடம் துணியப்படுமிடம், தூண்டுவார் தூண்டுமிடம் தூண்டப்படுமிடம், அறிவார் அறியுமிடம் அறியப்படுமிடம், அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படு மிடம் முதலிய எவ்விடங்களிலும் எக்காலத்தும் விளங்குகின்றதென்று அறியவேண்டும்.

அந்த அருளை எதனாற் பெறக்கூடுமென் றறியவேண்டில் :— சீவ காருணிய ஒழுக்கத்தினாற் பெறக்கூடும் என்றறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கத்தினால் அருளைப் பெறக்கூடு மென்பது எப்படியென் றறியவேண்டில் :—**அருள் என்பது கடவுள் இயற்கை விளக்கம்** அல்லது **கடவுள் தயவு. சீவகாருணிய மென்பது ஆன்மாக்களின் இயற்கை விளக்கம்** அல்லது **ஆன்மாக்கள் தயவு.** இதனால், ஒருமைக் கரணமாகிய சிறியவிளக்கத்தைக்கொண்டு பெரிய விளக்கத்தைப் பெறுதலும் சிறியதயவைக்கொண்டு பெரிய தயவைப் பெறுதலும் கூடும். சிறுநெருப்பைக் கொண்டு பெருநெருப்பைப் பெறுதல்போல என்றறிய வேண்டும்.

இதனால் **சீவகாருணிய ஒழுக்கமே சன்மார்க்கம்** என்றறியப் படும். சீவகாருணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக விளங்கும்; அதனால் உபகாரசத்தி விளங்கும்; அந்த உபகாரசத்தி யால் எல்லாநன்மைகளும் தோன்றும். சீவகாருணியம் மறையும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று மறையும்; அதனால் உபகாரசத்தி மறையும்; உபகாரசத்தி மறையவே எல்லாத்தீமைகளுந் தோன்றும். ஆகலில் **புண்ணியமென்பது சீவகாருணிய மொன்றே** என்றும், **பாவமென்பது சீவகாருணிய மில்லாமை யொன்றே** என்றும் அறிய வேண்டும். அன்றி, **சீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும், அதனால் வரும் இன்பமே கடவுள் இன்ப** மென்றும், இவ்விளக்கத்தையும் இன்பத்தையும் பலகாலறிந்து அடைந்து அனுபவித்து நிறைவு பெற்ற சாத்திய ஞானிகளே மேற் குறித்த பேரின்பலாபத்தைப் பெற்ற முத்தர்களென்றும், அவர்களே கடவுளை அறிவாலறிந்து கடவுள்மயமானவர்களென்றும் சத்தியமாக அறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கத்தின் இலக்கணம் என்னென்று அறிய வேண்டில்:-சீவர்களுக்குச் சீவர்கள் விஷயத்தில் பொதுவாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு கடவுள்வழிபாடு செய்து வாழ்தல் என்று அறியவேண்டும்.

சீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு கடவுள்வழிபாடு செய்வது எப்படி என்றறியவேண்டில்:—சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம்—காருணியம்—உண்டாக உண்டாக, அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டுப் பூரணமாக விளங்கும்; அத் திருவருள் விளங்கவே கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாகும். அவ்வனுபவம் பூரணமாதலே கடவுள்வழிபாடு என்றறிய வேண்டும்.

ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள்விளக்கமாகிய அருள் வெளிப்படுவது எப்படியென் றறியவேண்டில்:— தயிருக்கும் கட்டைக்கும் கடைதலால் நெகிழ்ச்சி உண்டாக உண்டாக அதன் அதன் உள்ளிருக்கின்ற வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படுவதுபோல் வெளிப்படுமென்று அறியவேண்டும்.

திருவருள் விளங்க அதனல் கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாவது எப்படியென் றறியவேண்டில்:- வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படவே அவற்றின் உண்மைத் தன்மை அனுபவமாகிப் பூரணமாவது போல், கடவுள் இன்பம் பூரணமாகுமென் றறியவேண்டும்.

சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது வெளிப்படுமென் றறியவேண்டில்:- பசி, கொலை, பிணி, ஆபத்து, தாகம், பயம், இன்மை, இச்சை இவைகளால் சீவர்கள் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும் கேட்டபோதும் அறிந்தபோதும் ஆன்ம உருக்கம் உண்டாகுமென் றறியவேண்டும்.

பசி என்பது, ஆகாரம் பெருமையால் வயிற்றினுட் பற்றிநின்று தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களின் தன்மைகளைச் சுடுதல் செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு முதற்காரணமாகிய விகற்ப மாயாகாரியப் பிண்டப்பகுதி நெருப்பு. **கொலை** என்பது, தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களைப் பலவேறு கருவி கரணப் புடைபெயர்ச்சிகளால் பதைப்புண்டாகக் கலக்கஞ் செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்தமாகிய விகற்ப பூதகாரியக் கொடுந் தொழில். **பிணி** என்பது, வாத பித்த சிலேட்டும விகற்பங்களால் மாறுபட்டு, தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களை நலிவுசெய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்தமாக நின்ற விகற்ப மாயாகாரியப் பிண்டப் பகுதி வேற்றுமை

விளைவு. **ஆபத்து** என்பது, அகங்காரத்தாலும் மறதியாலும் கரும வேறுபாட்டாலும் தேகபோக அனுபவங்களைத் தடுக்கின்ற விக்கினங்கள். **பயம்** என்பது, தேக முதலிய கருவிகளுக்கு நட்டஞ் செய்வதாகிய விடயங்கள் நேரிட்டபோது கரணங்களுக்கும் அறிவுக்கும் உண்டாகின்ற நடுக்கம். **இன்மை** என்பது, கல்வி செல்வம் முதலிய கருவிகளைத் தற்சுதந்திரத்திற் பெறுமை. **இச்சை** என்பது, அடையக் கருதிய விடயங்களில் அருமை குறித்து அவற்றை மேன்மேலும் கருதச் செய்கின்ற சித்தவிருத்தி என்று அறியவேண்டும்.

இவற்றுள் பசி கொலை என்பவை இம்மைஇன்பம், மறுமை இன்பம், பேரின்பம் என்கிற மூன்றையும் தடுத்தலால் முதற்பட்ட தடைஎன்றும்; பிணி, பயம், ஆபத்து, இன்மை என்பவை இம்மை மறுமை இன்பங்களைச் சிறிதுதடுத்தலால் இடைப்பட்ட தடை என்றும்; ஆசை இம்மைஇன்பத்தைச் சிறிதுதடுத்தலால் கடைப்பட்ட தடை என்றும் அறியவேண்டும்.

சீவகாருணியத்தின் வல்லபம் யாதென் றறியவேண்டில்:- பிற உயிர்களிடத்துப் பசி கொலை முதலியவற்றுள் எதனாற் காருணியந் தோன்றியதோ அதனால் அவ்வுயிர்கள் வருந்தாதபடி அதை நீக்குதற்கு முயல்விப்பது அதன் வல்லபமென் றறியவேண்டும்.

சீவகாருணியத்தின் பிரயோசனம் யாதென் றறியவேண்டில்:— உயிர்களுக்கு இன்பம் உண்டுபண்ணுவது அதன் பிரயோசனம் என்றறியவேண்டும்.

இந்தச் சீவகாருணியத்தின் சொரூப ரூப சுபாவ வியாபக முதலியவைகள் **மூன்றாவது பிரிவில்** கண்டுகொள்ளப்படும்.

திருச்சிற்றம்பலம்

ஜீவகாருண்ய ஒழுக்கம் இரண்டாவது பிரிவு முற்றிற்று

ஜீவகாருண்ய ஒழுக்கம்

மூன்றாவது பிரிவு

ஜீவகாருண்யத்தின் சொரூபம் முதலியன

திருச்சிற்றம்பலம்

சீவகாருணியமாகிய ஆன்ம உருக்கம் உண்டாவதற்கு உரிமை எதுஎன் றறிய வேண்டில்:— சீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய கடவுளியற்கை உண்மை ஏகதேசங்களாகிக் கடவுளருட்சத்தியால் பூதகாரியதேகங்களில் வருவிக்கப்பட்டபடியால் இச்சீவர்களெல்லாம் ஒருரிமை இனத்தவர்களே யாகும். சகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்டபோதும் கேட்டபோதும் அறிந்த போதும் - அவர் தேகம் தமது சகோதரதேகமென்று தெரிந்துகொண்ட - மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது தேக உரிமையால் என்று அறிவதுபோல், ஒரு சீவன் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்ட போதும் கேட்டபோதும் அறிந்தபோதும் அந்த சீவனைத் தமது ஆன்ம இனம் என்று தெரிந்து கொண்ட மற்றொரு சீவனுக்கு உருக்க முண்டாவது ஆன்மஉரிமை யென் றறியவேண்டும்.

சீவர்கள் துக்கப்படுவதைக் கண்டபோதும் சிலர் சீவகாருணியமில் லாமல் கடின சித்தர்களாக இருக்கின்றார்களே, இவர்களுக்கு ஆன்ம உரிமை இல்லாமற்போவது என்னென் றறிய வேண்டில்:— துக்கப் படுகின்ற சீவரைத் தமது ஆன்ம இனமென்றும் துக்கப்படுகின்றா ரென்றும் துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க ஆன்ம அறிவு என்கின்ற கண்ணனது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளிமழுங்கின படியாலும் அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மனமுதலான உபநயனங்க ளாகிய கண்ணாடிகளும் பிரகாசப் பிரதிபலித மில்லாமல் தடிப்புள்ள வைகளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. அதனால் ஆன்மஉரிமை இருந்தும் சீவகாருணியமில்லாமல் இருந்ததென் றறிய வேண்டும்.

ஆனால் இந்த ஆன்மஉருக்கம் என்கின்ற சீவகாருணியத்திற்கு ஆற்றல் எவ்விடத்து உண்டாகுமென்று அறியவேண்டில்:— பசி கொலை பிணி முதலிய தடைகளில் எந்தத் தடைபற்றி சீவகாருணியந் தோன்றியதோ அந்தத் தடையை நிவர்த்தி செய்கின்ற விடத்துத்தான் சீவகாருணியத்திற்கு ஆற்ற லிருந்ததென்று அறியவேண்டும்.

இதனால், 'சீவர்களுக்குப் பசி கொலை பிணி முதலியவற்றால் வருந் துன்பங்களெல்லாம் மனம் கண் முதலிய கரணேந்திரிய அனுபவங்களே

யல்லது ஆன்ம அனுபவங்களல்ல; ஆகலில் சீவகாருணியத்தால் விசேஷ பிரயோசனமில்லையே' என்பார்க்கு உத்தரம் யாதென்றறிய வேண்டில் :— இந்தத் தேகத்தில் ஆன்மாவும் அறிவுக்கறிவா யிருக்கிற கடவுள்விளக்கமுந் தவிர, கரணம் இந்திரியம் முதலிய மற்றத் தத்துவங் களெல்லாம் மூடமாகிய கருவிகளேயல்லது அறிவாகிய ஆன்மாக் களல்ல. ஆகலில் சுகதுக்கங்களை அறிவாகிய ஆன்மாக்கள் அனுப விக்குமே யல்லது மூடமாகிய தத்துவங்கள் அனுபவிக்க அறியா. மன முதலாகிய கரணங்களும் கண்முதலாகிய இந்திரியங்களும் சீவர் வாழ்க்கைக்குக் கடவுள் அருளால் கட்டிக் கொடுக்கப்பட்ட சிறிய வீட்டின் கருவிகளாகும். இன்ப துன்பங்களை வீட்டிலிருக்கின்றவன் அனுபவிப்பானல்லது வீட்டின் கருவிகளாகிய மண் கல் மரம் கால் தீ நீர் முதலியவைகள் அனுபவிக்க அறியமாட்டா.

அன்றியும் காசத்தினல் ஒளிமழுங்கப்பட்டு உபநயனங்களாகிய கண்ணுடியால் பார்க்கின்ற கண்கள் துன்ப விஷயத்தைக் கண்டபோது அக்கண்கள் நீர் சொரியுமே யல்லது கண்ணுடி நீர் சொரியாது. ஆகலில் ஆன்ம திருஷ்டிக்கு உபநயனங்களாக விருக்கிற மனமுதலிய கருவிகள் சுகதுக்கங்களை அனுபவிக்க அறியா வென்றறிய வேண்டும். ஒரு சீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது, துக்கம் நேரிட்டபோது மனந் தளர்கின்றது; என்றல் சுகதுக்கங்களை அம் மனம் அனுபவிப்பதாக அறியப்படாதோ என்பவர்க்கு உத்தரம் யாதென் றறியவேண்டில் :— பளிங்கு வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத் தலைவனுடைய தேகவிளக்கமும் தேகச்சோர்வும் அந்த வீட்டிற் பிரதி பலித்துப் புறத்தில் தோன்றுவது போலவும், கண்களின் மலர்ச்சியுஞ் சோர்வும் அக்கண்களிலிட்ட உபநயனங்களில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவது போலவும், சுகதுக்கங்களால் ஆன்மாவுக்கு உண்டா கின்ற மகிழ்ச்சியும் தளர்வும் மனம் கண் முதலிய கரணேந்திரியங்களிற் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுகின்றது.

அன்றியும், ஒரு வீட்டினுள் வைத்த தீபமானது மிகுந்த விளக்க முள்ளதாக விளங்குகின்றபோது அந்த வீடும் அந்த வீட்டின் கருவி களும் மிகவும் விளக்கமுள்ளதாக விளங்குகின்றன. அந்தத்தீபம் விளக்கம் குறைகின்றபோது வீடும் வீட்டிலுள்ளவைகளும் விளக்கம் குறைகின்றன.

ஆகலில், சுகதுக்கங்கள் மனத்துக்கு அனுபவமல்ல வென்றும் ஆன்மாவுக்கே அனுபவமென்றும், அனுபவத்திற்குக் கரணேந்திரி யங்கள் ஆன்மாவிற்கு உபகாரக் கருவிகள் என்றும் பிரமாணிப்பதே உத்தரமென் றறியவேண்டும்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சீவர்களில் அனேகர் பசி கொலை பிணி முதலியவற்றால் மிகவுந் துன்பப்படுவது எதனாலென்றறிய வேண்டில் :- முன் தேகத்தில் சீவகாருணிய ஒழுக்கத்தை விரும்பாமல் விட்டுக் கடின அறிவுள்ளவர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களாதலால் கடவுள் விதித்த அருளாக்கினைப்படி பசி கொலை பிணி முதலியவற்றால் மிகவுந் துன்பப்படுகின்றார்களென் றறிய வேண்டும்.

முன்தேகம் உண்டென்பது எப்படியென் றறியவேண்டில் :— ஒரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடியிருக்க வந்த ஒரு சமுசாரி அதற்கு முன்னும் வேறொரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனம் செய்திருந்தானென்றும், வீடில்லாமல் குடித்தனம் செய்ய மாட்டானென்றும், பின் வந்த வீட்டிலும் கலகம் நேரிட்டால் திரும்ப வேறொரு வீட்டில் குடிபோவானென்றும், தனக்கென்று சுதந்தரமாக ஒரு வீடு கட்டிக் கொண்டால் முன்போல் குடிக்கூலி கொடுத்துக் குடிபோவதைத் தவிர்வானென்றும் அறிவதுபோல ; இந்தத்தேகத்தில் ஆகாரக்கூலி கொடுத்துக் குடியிருக்க வந்த சீவன் இதற்கு முன்னும் வேறொரு தேகத்தில் அந்தக்கூலி கொடுத்துச் சீவித்திருந்தானென்றும், தேகமில்லாமல் சீவித்திருக்கமாட்டானென்றும், இந்தத்தேகத்திலும் கலகம் நேரிட்டால் இன்னும் வேறொருதேகத்திற் குடிபோவானென்றும், தனக்கென்று சுதந்தரமாக நித்தியமாகிய அருட்டேகத்தைப் பெற்றுக் கொண்டால் பின்பு வேறொருதேகத்தில் குடிபோக மாட்டானென்றும் அறியவேண்டும்.

சிலர் முன்தேகம் எடுத்ததும் பின்தேகம் எடுப்பதும் இல்லை, இப்பொழுது எடுத்த தேகம் அழிந்தால் தேகியும் அழிந்துவிடுவானென்றும், சிலர் முத்தியடைவானென்றும், சிலர் பாவ புண்ணியங்களை எக்காலத்தும் அனுபவிப்பானென்றும், சிலர் தேகம் இல்லாமல் தேகம் அழிந்தவிடத்தி லிருப்பானென்றும் பலவாறு வாதிப்பது எதனாலென் றறியவேண்டில் :— அவரவர்களும் தேகமே ஆன்மாவென்றும் போகமே முத்தியென்றும் கொள்ளப்பட்ட லோகாயத மதத்தாரது கொள்கைக்குச் சம்பந்தப்பட்டவர்களாதலால், மூடமாகிய தேகத்தில் அறிவாகிய ஆன்மா ஒருவன் உண்டென்றும் அவனுக்குப் பந்த முத்தி உண்டென்றும் முத்தியடைகின்ற பரியந்தம் பந்தவிகற்பத்தால் வேறுவேறு தேகத்தை எடுப்பானென்றும் பிரத்யட்ச அனுமான முதலிய பிரமாணங்களால் உண்மையை அறிந்துகொள்ள மாட்டாதவர்களென்றும், அவர்கள் கொள்கைக்குப் பிரமாணமும் யுக்தியும் அனுபவமும் இல்லையெ றும் அறியவேண்டும்.

இல்லையென்பது எப்படியென் றறியவேண்டில் :— சீவர்கள் தங்கள் தங்கள் சுதந்தரத்தாலே தேக போகங்களை யடைகின்றார்களென்றால், தங்கள் தங்கள் இச்சைக் கடுத்த தேகங்களையும் போகங்

களையும் அடையவேண்டும். அப்படி யின்றிச் சிலர் இச்சைக்கடுத்த பழுதற்ற அங்கமுள்ளவர்களாகவும் சுகங்களை யனுபவிக்கின்றவர்களாகவும் சிலர் இச்சைக்குஅடாத பழுதுள்ள அங்கமுள்ளவர்களாகவும் துக்கங்களை அனுபவிக்கின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகலில், சீவர்கள் தேகபோகங்களைத் தங்களிச்சையால் அடைந்தவர்களல்ல வென்றும்; அவரவர்கள் அப்படி அப்படி யடைவது இயற்கை என்றால், இயற்கை என்பது எக்காலத்தும் வேறுபடாமல் ஒரு தன்மையாக இருத்தல் வேண்டும்; அப்படி ஒரு தன்மையாக இராமல் பல வேறு வகைப்படுதலால் இயற்கையல்லவென்றும்; கடவுள் இச்சை யென்றால் கடவுள் கருணையும் நீதியும் உடையவராதலில் எல்லாச் சீவர்களுக்கும் ஒரு தன்மையாகச் சுக அனுபவங்களையே அடைவிக்கவேண்டும்; அப்படி யடைவிக்காமையால் கடவுளிச்சை யல்ல வென்றும்; கடவுளருளால் சிருஷ்டித்த முதல்சிருஷ்டியில் தமது இயற்கையின்பத்தை அடையும்படி விதித்த விதிகளைப் பழமையாகிய மல வாசனையால் முயற்சி தவறினபடியால், அந்த அநாதிமல வாசனையின் முயற்சி பேதங்களால் பின் பல பல தேக போகங்கள் இரண்டாவது சிருஷ்டியில் நேரிட்டதென்றும் பிரமாணித் தறிய வேண்டும்.

எடுத்துக்கொண்ட தேகம் தவறினால் வேறு தேகம் எடுப்பதில்லை யென்றால், முதல் சிருஷ்டி தொடங்கி இதுவரையில் அழிந்த தேகங்களுக்கு அளவில்லை, அப்படியே ஆன்மாக்களுக்கும் அளவில்லை; ஆகவே இனி ஆன்மாக்கள் தேகங்களை எடுக்காமலிருக்க வேண்டும். அப்படியில்லை; தேகங்களை எடுத்துக்கொண்டே யிருக்கிறார்கள். ஆயின் ஆன்மாக்களை நூதன நூதனமாகச் செய்து அது அதற்கு நூதன நூதனமாகத் தேகங்களை வருவிப்பதென்றால்; நூதன நூதனமாகத் தேகமாத்திரம் செய்யக்கூடும், தேகத்துள்ளிருக்கிற ஆன்மாவை நூதனமாகச் செய்யப்படாது; ஆன்மா எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டது, அது தோன்றுதலும் அழிதலுமில்லை, அதை ஆக்கவும் அழிக்கவும் படாது. ஆன்மாக்களும் குடத்தைப்போல் செய்யப்பட்டதானால், சுக துக்கங்களை அனுபவிக்க அறியாது, புண்ணிய பாவங்களை அடைய மாட்டாது, குடம் அழிவதுபோல் அழிந்து போய்விடும். அழியுமானால், பந்த முத்திகளு மில்லை; புண்ணிய பாவங்களு மில்லை. ஆகலால் குடம் உடைகின்றபோது குடத்தினுள் இருந்த காற்றும் ஆகாயமும் உடையாமலிருப்பது சிறுவர்களுக்கும் தெரியும். ஆகலில் தேகம் அழியும் போது தேகத்தினுள் இருக்கின்ற ஆன்மவிளக்கமும் கடவுள்விளக்கமும் அழியாதென்றும், ஆன்மாக்கள் முயற்சி பேதத்தால் தேக போக பேதங்களை யடைவது உண்மையென்றும் யுக்தியால் அறியவேண்டும்.

ஒரு தாய்தந்தைகளுக்கு ஒரு காலத்தில் இரட்டைப் பிள்ளை பிறக்கின்றது. அவற்றில் ஒரு பிள்ளை சிவந்தது, ஒரு பிள்ளை கறுத்தது;

ஒரு பிள்ளை அங்கப் பழுதுள்ளது, ஒரு பிள்ளை அங்கப்பழுதில்லாதது; ஒரு பிள்ளை பால் குடிக்கின்றது, ஒரு பிள்ளை பால் குடிக்கில் சத்தி* பண்ணுகின்றது; ஒரு பிள்ளை வியாதியுள்ளது, ஒரு பிள்ளை வியாதி யில்லாதது; ஒரு பிள்ளை இரண்டு வயதில் பேசுகின்றது, ஒரு பிள்ளை பேசத் தெரியாம லிருக்கின்றது. இந்த இரட்டைப் பிள்ளைகளுக்கு இந்த பேதம் இவ்விடத்தில் யாதொரு ஏதுக்களு மில்லாமல் வந்ததை ஊன்றி விசாரிக்கில், முன் பிறப்பில் எடுத்த தேகத்தின் கர்மமாகிய முயற்சி பேதங்களென்றும்; இந்த இரட்டைப் பிள்ளைகளுக்கு மூன்று வயதில் விளையாடும்போது தாய்தந்தைகள் தனித்தனி கொடுத்த தின் பண்டங்களை வைத்துத் தின்னுகின்ற தருணத்தில், இவ்விரண்டு பிள்ளைகளும் தவிர வேறு பிள்ளையொன்று வந்தால் அதைக்கண்டு இவ்விருவரில் ஒரு பிள்ளை தன் கையிலிருக்கின்ற தின்பண்டத்தைக் கொடுக்கின்றது, மற்றொரு பிள்ளை கொடுக்கப்படாதென்று தடுக் கின்றது; ஒரு பிள்ளை புத்தகத்தை எடுத்துச் சிறுவர் படிக்கின்றது போல் படிக்கின்றது, மற்றொரு பிள்ளை புத்தகத்தைப் பிடுங்கியெறிந்து படிக்கப்படாதென்று அடிக்கின்றது; ஒரு பிள்ளை பயப்படுகின்றது, மற்றொரு பிள்ளை பயப்படாம லிருக்கின்றது; இப்படியே இந்தப் பிள்ளைகளுக்குத் தயை அன்பு அறிவு செய்கை முதலியவைகள் தாய் தந்தையர்கள் கற்பியாத காலத்திற்றானே உள்ளதாகவும் இல்லதாக வும் எப்படி வந்ததென்று ஊன்றி விசாரிக்கத் தொடங்கில், இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் முன் பிறப்பில் எடுத்த தேகத்திலிருந்த வாசனை இந்தப் பிறப்பில் இந்தத் தேகத்தில் கற்பியாமல் வந்த தென்றும் அனுபவத்தால் கருதி யறியவேண்டும். இப்படி யறிந்தால் சீவர்களுக்கு முன்னும் பின்னும் தேகமுண்டென்பது நன்றாகத் தெரியும். இப்படி யறியமாட்டாமையால் பிறப்பில்லை என்கின்றார்களென் றறிய வேண்டும்.

அன்றி, இந்தத் தூலதேகம் அழியாமலிருக்கிறபோதே சொப் பனத்தில் ஆன்மா வேறு வேறு தேகமெடுத்துப் பல பல விசித்திரங் களை யனுபவிக்கின்றதானால், இந்தத் தேகம் நீங்கும் போது வேறு தேகமெடுத்து வாசனைக் கடுத்த அனுபவங்களை அனுபவிக்கு மென் பதைச் சொல்லவேண்டுவ தில்லை. அன்றி, சித்திவிசேஷத்தால் இந்தத் தேகத்திலிருந்த ஒருவன் இந்தத் தேகத்தைவிட்டு வேறுதேகத்திற்குப் பிரவேசிக்கின்றான் என்றால், இந்தத் தேகம் அழியும்போது இதிலிருந்த ஆன்மா கன்ம பேதத்தால் வேறுதேகத்தில் பிரவேசிக்கு மென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

அன்றி, ஒரு பட்சியானது கால வேற்றுமையாலும் குண வேற்று மையாலும் முன் முட்டை என்கின்ற ஒரு தேகத்திலிருந்து பின்பு குஞ்க

* சத்தி - வாந்தி

என்கின்ற மற்றொரு தேகத்தில் வருகிறதானால், ஆன்மாக்கள் கர்ம பேதத்தால் இந்தத் தேகத்திலிருந்து வேறுதேகத்தில் வருமென்பது சொல்லவேண்டுவதில்லை. அன்றி, ஒரு குளவியால் ஒரு கிருமி புழுவென்கின்ற தேகத்திலிருந்து குளவியென்கின்ற தேகத்தில் வருமேயானால், கருமத்தினால் ஒரு ஆன்மா ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்தில் வருமென்பதைச் சொல்லவேண்டுவதில்லை.

அன்றி, ஒரு ஆன்மா ஒரு பிறப்பிற்றானே சிசுதேகத்திலிருந்து பாலதேகத்திலும் பாலதேகத்திலிருந்து வாலிபதேகத்திலும் வாலிப தேகத்திலிருந்து வார்த்திபதேகத்திலும் வருமானால், அந்த ஆன்மா கன்மபேதத்தால் வேறு பிண்டதேகத்தில் வருமென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. அன்றி, மந்திர தந்திர பேதத்தால் ஒரு பிறப்பிற்றானே பெண் தேகத்திலிருந்து ஆண்தேகத்திலும் ஆண்தேகத்திலிருந்து பெண் தேகத்திலும் ஆன்மாக்கள் வருமானால், கர்மபேதத்தால் வேறு தேகம் எடுக்கும் என்பது சொல்ல வேண்டுவதில்லை.*

அன்றி, ஒரு தாவர தேகத்திலிருந்த ஆன்மாவானது அந்தத் தேகத்திற்றானே மரகதக்கிருமி என்கின்ற புழுதேகத்தில் வருகின்றது. அன்றி, ஓர் எறும்பானது அந்தத் தேகத்திலிருந்தே பிபீலிக பட்சி என்கின்ற தேகத்தில் வருகின்றது. அன்றி ஓர் பாம்பானது அந்தத் தேகத்திலிருந்தே சர்ப்ப பட்சியென்கின்ற வேறொரு தேகத்தில் வருகின்றது.

இப்படியே மனிதர் மிருகம் பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவர முதலிய அந்தந்தத் தேகங்களிலிருக்கின்ற ஆன்மாக்கள் அந்தந்தத் தேகத்திலிருந்தே வேறு தேகங்களை யெடுக்கின்றனவானால், அந்தந்தத் தேகங்க ளழியும்போது வேறு தேகங்க ளெடுக்குமென்பது சொல்ல வேண்டுவதில்லை.

சிலர் 'முன்தேகம் உண்டென்பது உண்மையானால், அந்தத் தேகத்தில் நீ யார்? உன் சரிதமெது? சொல்' என்கின்றார்களே; அவர் கேள்விக்கு உத்தரம் என்னென்றறிய வேண்டில்:— எழுபது வயதுள்ள ஒருவனைப் பார்த்து 'உனக்கு ஐந்து வயதில் உன்சரித்திரம் என்ன' வென்று கேட்டபோது, 'நேற்றைப் பொழுதில் நடந்த என் சரித்திரம் இன்றைப் பொழுதில் அவஸ்தையால் சொல்லத் தெரியாது விழிப்பே னென்றால், என் ஐந்து வயதின் சரித்திரத்தை எப்படிச் சொல்ல மாட்டுவேன்? நீ எப்படிக் கேட்கக்கூடும்?' என்கின்றான். ஒரு பிறப்பில் நடந்த அவனது சரித்திரங்களையே அவஸ்தை பேதங்களால் அறிந்து சொல்ல மாட்டாமல் திகைப்புண்டாவ தென்றால், முன்

---

* ச. மு. கந்தசாமி பிள்ளை யவர்களின் திருவருட்பாப் பதிப்பில் (1924) இதுவரையுமே உள்ளது. இதற்குமேல் இல்லை.

தேகத்தில் நடந்த சரித்திரங்களை அநேக அவஸ்தையில் திகைக்கின்ற நாம் எப்படியறிந்து சொல்லக் கூடும் என்பதே உத்தரம் என் றறிய வேண்டும்.*

சீவர்கள் முன்தேகத்திலே செய்த புண்ணிய பாவ கர்மங்கள் இந்தத் தேகத்திலும் வரும் என்பது எப்படி என்று அறிய வேண்டில் :- ஒரு சமுசாரி முன் குடித்தனஞ் செய்திருந்த வீட்டில் துன்மார்க்கர்களை வருவித்து அவர்களோடு கூடிப்பழகியிருந்தானானால், அந்தச் சமுசாரி அந்த வீட்டை விட்டு வேறொரு வீட்டுக்குக் குடிவந்த காலத்திலும் அந்தத் துன்மார்க்கர்கள் அந்த வீட்டிலும் வந்து அவனுடன் பழக்கஞ் செய்வார்கள். அதுபோல, ஒரு சீவன் முன் குடியிருந்த தேகத்தில் பாவ கர்மங்களை விரும்பிச் செய்திருந்தானானால், அந்தச்சீவன் வேறொரு தேகத்தில் வந்தபோது அந்தப் பாவ கர்மங்கள் அந்தத் தேகத்திலும் வந்து அந்தச் சீவனைச் சேருமென்றும் புண்ணிய கர்மங்களும் இப்படியே என்றும் அறியவேண்டும்.

முன்பிறப்பில் சீவகாருணிய ஒழுக்கத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களை இந்தப் பிறப்பில் பசி தாகம் முதலியனவற்றால் துக்கப்படச் செய்வது கடவுள் அருளாக்கினை நியதி என்றால், அந்தச் சீவர்கள் விஷயத்தில் தயவு வைத்து ஆகாரம் முதலியவை கொடுத்து அவர்கள் துக்கத்தை மாற்றுவது கடவுள் அருளாக்கினைக்கு விரோதமாகாதோ என்கின்ற சிறிய கேள்விக்கு உத்தரம் எது என்று அறிய வேண்டில் :- அரசன் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்துக் கால்களுக்கு விலங்கிடப்பட்டுச் சிறைச்சாலையி லிருக்கின்ற பெரிய குற்றவாளிகளுக்கும் தன் சேவகர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றான். அதுபோல், கடவுள் தம் கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பலவகையால் பந்தம் செய்யப்பட்டு நரகத்தில் இருக்கிற பாவிகளுக்கும் தம் பரிவார தேவர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றார். அரசன் தன் கட்டளைப்படி நடவாமல் வேறுபட்ட சாதாரணக் குற்றவாளிகளைத் தன்னால் அவர்கள் பெறத்தக்க லாபத்தைப் பெறவொட்டாமல் உத்தியோகத்தினின்றும் நீக்கி, அவர்களுக்கு நல்லறிவு வருகிற நிமித்தம் அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்கு வெளிப்படுத்துகின்றான். அவர்கள் உத்தியோகம் இழந்தபடியால், சுகபோஜனம் முதலிய போகங்களையும் இழந்து ஊர்ப்புறங்களில் போய் ஆகாரம் முதலியவை குறித்து அலைந்து வருந்துகின்றார்கள். அப்போது, தயவுள்ளவர்கள் கண்டு ஆகாரம் முதலியவை கொடுக்கின்றார்கள். அதை அரசன் கண்ட

* சென்னை சன்மார்க்க சங்கத்தின் திருவருட்பாப் பதிப்பில் இது வரையுமே உள்ளது. இதற்குமேல் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பில் மட்டுமே உள்ளவை.

காலத்திலும் கேட்டகாலத்திலும் ஆகாரம் கொடுத்தவர்களைத் தயவுள்ள நல்ல சமுசாரி என்று சந்தோஷித்து மேலான நிலையில் வைத்து உபசரிக்கின்றானல்லது கோபிக்கவில்லை. அதுபோல, கடவுள் தம் கட்டளைப்படி நடவாத சாதாரண குற்றமுடைய சீவர்களைத் தமது சத்தியால் அவர்கள் பெறத்தக்க இன்பங்களைப் பெற வொட்டாமல் தாம் கொடுத்த சௌக்கிய புவன போகங்களை விடுவித்து, அந்தச் சீவர்களுக்கு நல்லறிவு வருவிக்கும் நிமித்தம் அந்தத் தேகத்தினின்றும் நீக்கி வேறொரு தேகத்தில் விடுகின்றார். அந்தச் சீவர்கள் சௌக்கிய புவன போகங்களை இழந்தபடியால், சௌக்கிய போஜனம் முதலியவற்றையும் இழந்து வேறு வேறு இடங்களில் ஆகாரம் முதலியவை இல்லாமல் வருந்துகின்றபோது, தயவுள்ளவர்கள் அந்த வருத்தத்தைக் கண்டு ஆகாரம் முதலியவை கொடுக்கின்றார்கள். அப்படிக் கொடுக்கின்றவர்களை நல்ல தயவுள்ளவர்கள், மேன்மேலும் சுகத்தை அடையக் கடவர்கள் என்று சந்தோஷித்து மேல்நிலையில் வைத்து உபசரிப்பாரல்லது கோபிக்கமாட்டார். ஆதலால், கடவுள் அருளாக்கினைக்குச் சீவர்களிடத்தில் சீவர்கள் தயவு வைத்து உபசரிப்பதே சம்மதமென்று உண்மையறிந்து சொல்லுவதே உத்தரமென்று அறியவேண்டும்.

இந்தச் சீவகாருணிய ஒழுக்கத்தால் இகலோக ஒழுக்கம் விளங்குகின்றது. இல்லையாகில், இகலோக ஒழுக்கம் எவ்வளவும் விளங்கமாட்டாது. சீவகாருணியம் இல்லாதபோது அறிவும் அன்பும் தோன்றா. அவை தோன்றாதபோது கண்ணோட்டமும் ஒருமையும் உபகாரமும் விளங்கா. அவை விளங்காதபோது வலிய சீவர்களால் எளிய சீவர்கள் ஒழுக்கம் பொறுமை முதலானவையால் தடைப்பட்டு அழிந்துபோம். பின்பு வலிய சீவர்கள் ஒழுக்கங்களும் மதத்தினால் தாமச ஒழுக்கங்களாகி மாறுபட்டு அழிந்துபோகும். சீவகாருணிய ஒழுக்கம் சிறிதும் இல்லாத புலி சிங்கம் முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோக ஒழுக்கம் வழங்கவே இல்லை. சீவகாருணியம் இல்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக ஒழுக்கமும் வழங்கவே மாட்டாதென்று அறியவேண்டும். பரலோக ஒழுக்கமும் சீவகாருணியத்தால் வழங்குகின்றது. அது இல்லையாயின் பரலோக ஒழுக்கமும் வழங்க மாட்டாது. சீவகாருணியம் இல்லாதபோது அருள் விளக்கம் தோன்றாது. அது தோன்றாதபோது கடவுள்நிலை கைகூடாது. அது கூடாதபோது முத்தியின்பம் ஒருவரும் அடையவே மாட்டார்கள். அடையாத பட்சத்தில் பரலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென்று அறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கம் மிகவும் வழங்காமையால் துஷ்டப் பிறவிகளே பெருகித் தீய ஒழுக்கங்களே மிகவும் வழங்குகின்றன. முன்தேகத்தில் சீவகாருணியம் இல்லாத பாவ சீவர்கள் எல்லாம்

அவரவர் பாவச் செய்கைக்குத் தக்கபடி, சிலர் நரகவாசிகளாகவும், சிலர் சமுத்திரவாசிகளாகவும், சிலர் ஆரண்யவாசிகளாகவும், சிலர் புலி, கரடி, சிங்கம், யாளி, யானை, கடமை, கடா, பன்றி, நாய், பூனை முதலிய துஷ்ட மிருகங்களாகவும், சிலர் காக்கை கழுகு முதலிய பட்சி சண்டாளங்களாகவும், சிலர் பாம்பு தேள் முதலிய துர்ச்செந்துக்களாகவும், சிலர் முதலை சுறு முதலிய கடினசெந்துக்களாகவும், சிலர் எட்டி கள்ளி முதலிய அசுத்த தாவரங்களாகவும் பிறந்திருக்கின்றார்கள். ஆகலால், தீய ஒழுக்கங்களே மிகவும் வழங்குகின்றன வென்று அறிய வேண்டும்.

சீவகாருணியம் கடவுள் அருளைப் பெறுதற்கு முக்கிய சாதன மாவதுமன்றி அந்த அருளின் ஏகதேசவிளக்கம் என்றும், சீவகாருணியம் ஆன்மாக்களின் இயற்கைவிளக்கம் ஆகலால் அந்த இயற்கை விளக்கம் இல்லாத சீவர்களுக்குக் கடவுள்விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாதென்றும் அறியவேண்டும்.

சீவகாருணியத்திற்கு லட்சியம் எது என்று அறியவேண்டில் :— ஆன்மாக்கள் எல்லாம் இயற்கைஉண்மை ஏகதேசங்களாயும் இயற்கை விளக்கமாகிய அருள் அறிவுக்கறிவாய் விளங்குதற்கு ஒற்றுமை உரிமை இடங்களாயும் இருக்கின்றன என்றும் அந்த ஆன்மாக்கள் சீவர்களாகி அதிகரிப்பதற்குப் பூதகாரியதேகங்களே உரிமையாகி இருக்கின்றன என்றும், அந்தத் தேகங்களில் ஆன்மாக்கள் சீவர்களாகி அதிகரியாவிடில் ஆன்மவிளக்கம் மறைபடும் என்றும், அது மறையில் அருள்விளக்கம் வெளிப்படாதென்றும், வெளிப்படாதபோது மூடம் உண்டாகும் என்றும், அதுவே ஆன்மாக்களுக்குப் பந்தமாகும் என்றும் அது பற்றி அவசியம் பூதகாரியதேகம் வேண்டுமென்றும், பூதகாரிய தேகங்களுக்கு மாயை முதற்காரண மாதலால் அந்த மாயையின் விகற்ப ஜாலங்களாகிய பசி, கொலை, தாகம், பிணி, ஆபத்து, பயம், இன்மை, இச்சை என்பவைகளால் அந்தத் தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடும் என்றும், அப்படி அபாயங்கள் நேரிடாமல் கரணேந்திரிய சகாயங்களைப் பெற்ற தம் அறிவைக்கொண்டு சர்வ ஜாக்கிரதையோடு முயற்சி செய்து தடுத்துக் கொள்வதற்குத் தக்க சுதந்தரம் சீவர்களுக்கு அருளால் கொடுக்கப்பட்ட தென்றும், அந்தச் சுதந்தரத்தைக் கொண்டு சீவர்கள் எல்லாம் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி ஆன்மலாபத்தைப் பெறுதற்கு முயற்சி செய்யக் கடவார்கள் என்றும், மேற்குறித்த பசி கொலை தாகம் பிணி ஆபத்து பயம் இன்மை இச்சை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க சுதந்தரமில்லாமல் வருந்துகின்ற சீவர்கள் விஷயத்தில் அவை நிவர்த்தி செய்யத்தக்க சுதந்தரமுள்ள சீவர்கள் காருண்யத்தால் நிவர்த்தி செய்விக்க வேண்டும் என்றும், அப்படி

நிவர்த்தி செய்விப்பதில் பசியினாலும் கொலையினாலும் வருந் துன்பங்களை நிவர்த்தி செய்விப்பது தலைமையான காருண்யம் என்றும், அது தவிர மற்றவைகளால் வருந் துன்பங்களை மாற்றுவது அபரசீவகாருணியம் என்றும், அது இவ்வுலக இன்பத்தை மாத்திரம் சிறிது உண்டு பண்ணுமென்றும், பசியினால் வருந் துன்பத்தையும் கொலையினால் வருந் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பரசீவகாருணியம் என்றும், அது இவ்வுலக இன்பம் எல்லாவற்றையும் அளவிறந்த சித்தி இன்பங்களையும் எக்காலத்தும் அழியாத முத்தியின்பத்தையும் அருளால் அடைவிக்கும் என்றும், அன்னிய சீவர்களுக்கு நேரிடுகிற மேற்குறித்த அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத் தக்க சுதந்தரமும் அறிவும் இருந்தும் அவ்வாறு செய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு இவ்வுலக இன்பம் அவ்வுலக இன்பத்தோடு மோட்ச இன்பத்தை அனுபவிக்கச் சுதந்தரத்தை அடையப்படுவதில்லை என்றும், தற்காலத்தில் அனுபவிக்கின்ற புவன போக சுதந்தரங்களையும் இழந்துவிடுவார்கள் என்றும் கடவுளருளால் விதிக்கப்பட்டிருக்கின்றபடியால், அபாயங்களை நிவர்த்தி செய்து கொள்ளத் தக்க அறிவும் சுதந்தரமும் இல்லாத சீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத் தக்க அறிவும் சுதந்தரமும் உள்ளவர்கள் வஞ்சியாமல் நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியத்திற்கு லக்ஷியம் என்று அறியவேண்டும்.

பசி, கொலை, தாகம், பிணி, ஆபத்து, பயம், இன்மை, இச்சை என்பவைகளால் வரும் அபாயத்தை நிவர்த்தி செய்விப்பது சீவகாருணியத்திற்கு லக்ஷியமாக இருக்கவும், இவ்விடத்துப் பசியினாலும் கொலையினாலும் வரும் அபாயங்களை மாத்திரம் நிவர்த்தி செய்விப்பது தலைப்படு காருணியம் என்று குறித்தது ஏன் என்று அறியவேண்டில்:- சீவகாருணிய ஒழுக்கத்தில் பரசீவகாருணியமென்றும் அபரசீவகாருணியம் என்றும் இருவகையாம். அவற்றில் பசிநீக்கலும் கொலைநீக்கலும் பரசீவகாருணியம். மற்றவை அபரசீவகாருணியம். ஆகலில், பரசீவகாருணியம் விசேஷமாகக் குறிக்கப்பட்டதென்று அறியவேண்டும். அன்றியும், பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்குப் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவர்கள் தாகம் நீங்குவதற்குத் தண்ணீர் கொடாமலிரார்கள். தண்ணீர் கொடுப்பது பிரயாசமுமல்ல. தண்ணீர் ஏரி, குளம், கால்வாய் முதலிய இடங்களிலும் இருக்கின்றது............

திருச்சிற்றம்பலம்

ஜீவகாருண்ய ஒழுக்கம் மூன்றாவது பிரிவு முற்றிற்று

சுத்த சன்மார்க்கத்தின் முதற் சாதனமாகிய
ஜீவகாருண்ய ஒழுக்கம் முற்றிற்று

வியாக்கியானங்கள்

1. ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி

2. தொண்டமண்டல சதகம் - நூற் பெயர் இலக்கணம்
வழிபடு கடவுள் வணக்கப்பாட்டுரை

3. ‘‘உலகெலாம்’’ என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்

4. ‘‘தமிழ்’’ என்னும் சொல்லுக்கிட்ட உரை

1. ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி

சிறப்புப் பாயிரம்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா-னுள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண
வொழிவி லொடுக்கநூ லோர்ந்து.

இச்செய்யுள் கருதிற்று யாதோ எனின், இந்நூன்முகத்து ஆசிரியர் பெயர் முதலியவற்றைக் குறித்து நிற்றலின் சிறப்புப் பாயிர ஒழுக்கம் உணர்த்தல் கருதிற்று என்க.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த் தாடலைமேல் வைத்து என்பது:— வள்ளலார் என்னும் திருப் பெயருடையவர், ஞானசாரிய நிருபராகிச் சமயவாதிகள் தருக்கச் செருக்குகள் பிற்பட்டொழியப் பேரருள் நெறியான் வெற்றிகொண்டு சீகாழி என்னும் திருநகர்க்கண்ணே மெய்ந்நெறி விளங்க வீற்றிருந் தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய மலர்போலும் திருவடிகளைத் தமது நன்முடிக்கண் ஓர் பொன்முடியாக அணிந்து.

ஓர்ந்து உள்ளத் தழிவி லடுக்குந் தேனை யன்ப ரெலா முண்ண வொழிவி லொடுக்கநூ லுரைத்தான் என்பது:— அத் திருவடிகளின் அருட்டுணையால் தத்துவங்க ளனைத்தும் சடமென்று ஓர்ந்துணர்ந்து அவற்றைக் கடந்து தற்காட்சியோடு திருவருட்காட்சி யும் செய்து, அங்ஙனம் வாதனையால் அசைந்தெழும் போதந்தோற் றுது அதனை அத்திருவருள் ஒளியில் அடக்கி ஆண்டு மேன்மேலும் எழாநின்ற சிவானந்தத்தேனைத் தாம் அனுபவஞ் செய்தவாறு அதன் கண் அன்புள்ள பக்குவரும் செய்தற்பொருட்டு, அச் சிவானந்தானுபவ அந்தரங்க மெல்லாம் வெளிப்பட்டு விளங்க, ஒழிவிலொடுக்கம் என்று ஓர் உபதேச முறையை உரைத்தருளினர் என்றவாறு.

வள்ளல் என்னும் பெயர் ஆசிரியர்க்குத் தாம் முன்னிருந்த கிரியா சாரிய நிலைக்கண் அவ்வாசாரிய மரபின் வழித்தாய் வந்த காரண அபி டேகச் சிறப்புப் பெயர் என்க. அல்லதூஉம், பின்னர் ஞானசாரிய நிலைக்கண் தமது அருள்ஞான நோக்கால் இயைந்த கண்ணுடைய

என்னும் காரண விசேடண மேற்கொண்டு நின்ற இவ்வள்ளலென்னும் பெயர் ஈண்டு அவ்விசேடணம் இசையெச்ச நிலையில் நிற்ப நின்றது எனினும் அமையும் என்க.

இஃது வினை பண்பு முதலிய அடுத்த தொகைநிலைச் சொற்றொட ராகாது தொகாநிலையாய்த் தனைத் தொடர் பயனிலை அண்மைப் பொருளுணர்ச்சியின்றி இடையிட்டு நிற்கத் தான் செய்யுள் முதற்கண் தனித்திருந்தமையின் ஆற்றலின்றாலோ எனின், அற்றன்று. கொடை மடங் குறித்த குணங் காரணமாக வந்த இவ்வள்ளல் எனும் பெயர் தன்னுறுப்புகளுட் கொடை, குணம், புகழ், அழகு, வளம் என்னும் நல் வகைகுறித்த பல்பொருட் பகுதியாய வண்மை என்னும் முதலுறுப்பான் ஆசிரியர்க்குளவாய அக்கொடை முதலிய அருட்குணங்களைக் குறிப்பிற் புலப்பட விரித்தலின் பொருளாற்றல் உண்டென்க. அல்லதூஉம், இப்பெயர் உயர்பொருட்கிடனாய் உடனிலைக்கூட்டாய் ஒருநெறி யசைத்தாய் ஓரினந்தழுவிப் பல்வகைக்குறிப்பிற் படர்ந்து முற்றியைபு வண்ணப் பெருஞ் சொல்லாக நிற்றலின் சொல்லாற்றலும் உண் டென்க. ஆயின் இவ்வாசிரியர் பெயர் இச்செய்யுளின் இடை கடை களில் ஒன்றின் நிறுத்தாது முதலடி முதற்சீர் எதுகைத் தொடைக்கண் நிறுத்ததிற் குறித்தது யாதோஎனின், ஒன்றிரண்டெனக் கொண்டுறும் மறை ஆகம நன்றிரு முடியின் நடுநிலை நடாஅய்ப் புலம்பெறு தத்துவ நியதியிற் போந்து உண்மலந்தெறும் அறிஞர் வாழ்த்திப் பரவும் ஆசிரியர் சன்மார்க்கம் முதலிய மார்க்கம் நான்கனுள் தலைமையில் தலைமையாய உத்தம சன்மார்க்கத்தினர் என்பது குறித்த தென்க. இங்ஙனம் உத்தம சன்மார்க்கத்தினர் என்பதை ஆசிரியர் கூறிய "இதுவென்ற தெல்லாம் பொய்யென்றான்"[1] என்னுந் திருவெண்பா வாற் காண்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

குருராயன் என்பது திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்குச் சிறப் பிற் சிறப்பாய காரணப் பெயராய் நின்று, ஓதி உணர்ந்து பன்னாள் பல சாதனங்களில் முயன்று முயன்று ஆசாரியத்தன்மை ஒருவாறு அரிதிற் கிடைப்பப்பெற்றும் ஓரோர் காலங்களில் அவத்தை வயப்பட்டு மயங்கும் மற்றை ஆசாரியர் போலாது ஓதாமல் வேதாகமாதிகளை முற் றும் உணர்ந்து இறைப்போதும் ஓர் சாதனங்களில் முயன்றதின்றி ஞானாசாரிய அருளிலக்கணங்கள் அனைத்தும் தாமே தம்பால் நிரம்பி நிற்ப அமர்ந்தனர் என்பதூஉம், ஓதி உணர்ந்த அவ்வாசாரியர்க்கெல்

இதுவென்ற தெல்லாம்பொய் யென்றான் எனக்குப்
பொதுவன்றித் தங்குமிடம் போச்சு - அதுநாங்காண்
என்றா னதன்பேர் இரவைப் பகலாக்கும்
ஒன்றே பரமசுக மோ, 44

லாம் அவரவர் அறிவின்கண் அருளுருவாய் நின்று அறிவித்தும் ஆசாரிய உருவாய் வெளிநின்று அனுக்கிரகித்தும் நின்றனர் என்பதூஉம், திருநோக்கஞ்செய்தல் முதலிய அறுவகைத் தீக்கையானும் அன்றித் தமது திருவுருவைக் காண்டல் நினைத்தல் மாத்திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன் பெற நின்ற திருவருட் பெருமையர் என்பதூஉம் குறித்ததென்று உணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாகமாதி உணர்ந்தமை முதலியவற்றை ஆசிரியர் கூறிய "தன்மையு முன்னிலையும்"[2] என்னும் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், குருராயன் என்பது வாதுவென்ற சம்பந்தன் என்பதற்கு மேனிற்க வைத்த விதப்புக் குறிப்பால் பிள்ளையார் இவ்வவதாரத்தின் மேனின்ற அவதாரத்தினும் குமாரசற்குருவாய் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்தருளிய ஆசாரியத் தலைமையும் குறித்ததெனக் கொள்க. அருணகிரிநாதர்,

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
தென்ன வனங்கனன் னீற்றுற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே.[3]

என்றதனால் பிள்ளையார் இவ்வவதாரத்திற்கு மேனின்ற அவதாரத்தில் குமாரசற்குரு வென்பது காண்க.

கல்லாடம்,

உழன்மதிற் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்[4]

குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்[4]

சித்தியார்,

அருமறைஆ கமம்அங்கம் அருங்கலைநூல் தெரிந்த
அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருளை[5]

என்பவைகளால் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்த ஆசாரியத் தலைமையை உணர்க.

---

[2] தன்மையு முன்னிலையுந் தானைப் படர்க்கையுமாய்
என்னொழிவில் இன்புமாய் இன்புமிது - என்னுதை
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்றான்
ஓதாமல் வேதமுணர்ந் தோன். 42

[3] கந்தரந்தாதி, 56

[4] முருகன் துதி.

[5] பரபக்கம், முருகன் துதி.

ஆயின், குருவேந்தன் என்னது குருராயன் என்றது எது குறித் தற்கோ எனின், நான்கன் வேற்றுமையால் அடுத்து மிக்குயர் நெறிப் பொருண்மையின் வந்த காரகச் சிறப் பொருதலைத் தொடர் மொழிப் பெயராய இக் குருராயன் என்பதன்கண் குரு என்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும், ராயன் என் பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதியின்றி ஆரியவியல் விதிப் படி மொழிக்கு முதலாகியும் வந்து இருவகை இயலுங் கோடலின், இதனைத் தம் பெயராகவுடைய பிள்ளையாரும் தமிழ்நூல் வடநூல் என்னும் இருவகை நூற்கும் உரியார் என்பது குறித்தற்கு என்க. ஆசிரியர் "மறைப்புலவன் தமிழ்க்குரிசில் சீகாழிச் சம்பந்தன்"[6] என் றதனல் இருவகை நூற்கும் உரியர் என்பது காண்க என்க. அல்லதூ உம், பொருள் வேறுபடாது சிறிதே வடிவு வேறுபட்டு நின்ற குருராயன் என்பது தன்னை உள்ளூன்றி நோக்கினர்க்கு இலைமறைகாய்போல் ஐ என்னும் உயிர்மெய்யோடிருந்த தன் முன்வடிவ முட்கொண்டு விளங்கக்காட்டி நிற்கின்றதாகலின், இதனையுடைய பிள்ளையாரும் தமது கடவுட்டன்மை வேறுபடாது உத்தமபுருட உருவங்கொண்டு நின்ற தம்மை அன்பால் உள்ளூன்றி நோக்கினர்க்குக் குமாரசற்குரு என்னும் பெயர் கொண்டு அளவிகந்த சூரியர் உதயம்போன்று ஒளி வீசும் தம் முன்னுருவாய தெய்வத் திருவுரு வுட்கொண்டு விளங்கக் காட்டி நின்றனர் என்று குறித்தற் கென்பதுமாம் என்க. ஆளுடைய பிள்ளையார் புராணம்,

மறையவர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியின் ஒளியே வெளியேவந்
திறையவன் உமையா ளுடனருள் தரவெய் தினையென்பார்.[7]

என்று மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக் கண்டு சீகாழி யுள்ளார் வியந்து கூறிய வாருய இச்செய்யுளால் உள்ளூன்றி நோக் கினர்க்குத் தம் முன்னுருவைக் காட்டி நின்றனர் என்பது காண்க என்க. இனி இன்றியமையாக் காட்டுளதேற் காட்டுவதன்றி மற்றைய விரிக்கிற் பெருகும் என்க.

அல்லதூஉம், குரு என்பதன் ஈற்று உயிர்மெய்யோடு ராயன் என்பதின் முதலுயிர்மெய்ப் புணராப்புணர்க்கையாய் நின்றதாகலின்,

[6] சத்தியநிர் வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்துவழி காட்டு மறைப்புலவன் - சுத்தன்
றமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பான்
எமக்கருளிச் செய்த திது. 11

[7] 92 வது திருப்பாட்டு (பெரிய புராணம் 1995)

இங்ஙனம் ஆனந்த வடிவராகிய பிள்ளையாரும் தாம் கொண்டருளிய மானிடத் திருவுருவோடு புணராப்புணர்க்கையாய் நின்றனர் எனக் குறித்தற் கென்பதுமாம் என்க.

அல்லதூஉம், குறிலிணைக் கெதிர் நெடில் குறில் எண்ணீடாக நிற்பவும் ஈற்றில் அவ் வெண்ணீடின்றி ஒற்று நிற்பவும் தொடர்ந்த மொழியாகலின் பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைப்பொருளாயும் அதிபக்குவர்க்கு அனுபவப்பொருளாயும் இவ்விரண்டினும் கலவாது அதீதப் பொருளாயும் நின்றனர் என்று குறித்தற் கென்பதுமாம் என்க. இங்ஙனம் குருராயன் என்பதில் கு வ்வென்பது இருள், ரு வ்வென்பது அருள், ராயன் என்பது விளங்கச் செய்கின்றோன் பொருளாம். இதனால் கு வ்வென்னும் அசுத்தாவத்தையில் நின்றோரை ரு வ்வென்னுஞ் சுத்தாவத்தையில் தாம் நின்றவண்ணம் நிறுத்துகின்றோர் குரு ஆவர். இச்சுத்தாவத்தைக்கு ஆதாரனாகியும் அதீதனாகியும் விளங்கி இவ் வவத்தையினின்றும் அக்குருவாயினோர் தாழாத வண்ணம் அருள்செய்து நின்று அதீதப் படுத்துகின்றோன் ராயன் ஆவன் ஆகலின், இதனாலும் உணர்க என்க.

எழுத்தாதிப் பல்வகைக் குறிப்பிற் பொருள்நெறி பற்றி நின்ற நோக்கம் செறிவு நுட்பம் இங்கிதம் இன்பம் கம்பீரம் சிறப்பு உறுதி முதலிய நற்குணந் தழீஇய சொற்புண ரீதென்றே, ஆசிரியரும் ''சரிதாதி நான்கினுக்கும்''[8] என்னும் திருவெண்பாவின் இடைக்கண் குருராயன் என்று இதன்பெருமை தோன்றவைத்தனர் என்க. இஃது இன்னும் விரிக்கிற் பெருகு மென்க.

வாது வென்ற சம்பந்தன் என்பதில் பொதுவானே வாதுவென்ற என்றது என்குறித்தோ எனின், எண்வகைக் குன்றத்து எண்ணாயிரவராய பாயுடுக்கைப் பறிதலைச் சமணர்கள் ஒருங்கே கூடித் தென் மதுரைக்கண் செந்தமிழ்ப் பாண்டியனை முன்னிட்டுச் செருக்காற் செய்த சுரவாதம் அனல்வாதம் புனல்வாதங்கள் பிற்படத் திருநீற்றானும் திருவாக்கானும் வென்று திறல்கொண்டமை யன்றியும், பரசமய கோளரி என்று தானே ஒலித்த திருச்சின்னத்தின் தெய்வப்பேரொலி கேட்டு உளம்பொறுது எதிரிட்டுமறித்த போதமங்கைப் புத்தநந்தியின் பொய்த்தருக்கமும் புழுத்தலையும் பொடிபட்டழியவும், பின்னர் உள்ளது

---

[8] சரிதாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல் - குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ளல்வர்க் குபதேச
மானத் தையுநிகழ்த்தி னான், 64

போன் றில்லதைப் பற்றிச் சாக்கியக் குழுவுள் தலைவனுய சாரிப்புத்தன் சிற்சில வகையாற் செய்த சமயவாதந் தலைதடுமாறவும், செந்தமிழ் வேதத் திருமுறை தாங்கி மேம்படும் அறிஞரான் வெற்றிகொண்டமையும், திருவோத்தூரின்கண் அரனுக்கிடுபனை ஆண்பனையாயிற்றே என்று அசதியாடிய அமணக்குழூஉக்களின் வாய்வாதங்கள் மண்பட்டொழியத் தாம் திருவாய்மலர்ந்த திருக்கடைக்காப்புள் ஓர்மொழியானே அவ்வாண்பனை பெண்பனையாகச் செய்து விறல்கொண்டமையும் குறித்ததென்க.

அல்லதூஉம், வாது என்பது இலக்கணையாகக் கொண்டு பெருமண நல்லூரின்கண் திருமண நல்விழாவைத் தரிசிப்பான் வந்த மக்கட்கெல்லாம் தொன்றுதொட்டு இடைவிடாது உடல்நிழல் போல் சூழ்ந்துள பிறவிப் பெருவாதுகள் அனைத்தும் வென்றதூஉம், திருப்பாச்சில் ஆச்சிராமத்தின்கண் மழவன் மகளார்க்கு அடுத்த முயலக வாது வென்றதூஉம், மருகற்கண் ஓர் வைசியனுக்கு அடுத்த விடவாது வென்றதூஉம், இவை முதலியவும் குறித்த தெனினுமாம் என்க.

வெற்றிகொண்ட பொருட்டிறன் முதலியவற்றுள் ஒன்றேனும் தோன்றக் கூறாது இலேசானே வாது என்றது என்குறித்தோ எனின், பிறர்க்கு இங்ஙனம் வேறல் தம்மானும் துணைமையானும் பற்பல நாள் பற்பல வகையில் முயற்சி செயினும் முற்றாதெனினும், பிள்ளையார்க்குச் செந்தமிழ் பொழியும் திருவாக்கானே ஆண்டாண்டு அவ்வேறல் முற்றியதென்பது குறித்தென்க. வாது என்பது குருராயன் என்பதனோடும் சம்பந்தன் என்பதனோடும் சாராது நடுநின்றமையின், அத்துவித நெறியினும் சேராது துவிதநெறியினும் சாராதுநின்ற பதிதவாதிகளது பயனில்வாதம் எனினும் அமையும் என்க.

எதிரேற்கப்பட்டு எதிர்வினைக் கீழ்ப்பட மேற்கொள் வினையெழுச்சிப் பொருளின் வந்த வெல் என்னும் பிறவினைப் பகுதியால் அடுத்த வென்ற என்னும் பெயரெச்சம் சம்பந்தன் என்னும் பெயர் கொண்டு முடிந்து, இங்ஙனம் வெற்றி கொண்ட பருவம் பிள்ளையார்க்கு இளங்குமாரப்பருவம் எனக் குறித்ததென்க. என்னை? எச்சம் என்பது இளஞ்சேய் மேற்றாகலின்.

சம்பந்தன் என்பது பிள்ளையார்க்கு மூவகைவைக்கண் மூவுலகம் புகழப் பொற்பொடு புணர்ந்த அற்புதத் திருப்பெயராகலின் ஆண்டுப் பெருமான்அருளப் பிராட்டியார்அளித்த சிவஞானத் தெள்ளமுதருந்தி அச்சிவஞானத்திற்கு உரிமை பூண்டமை குறித்ததென்று உணர்க. ஆயின் சிவஞானசம்பந்தன் என்னாது சம்பந்தன்என வைத்தது என் கொலோ எனின் :- சிவஞானமுமன்றிச் சிவானந்தம் ஆனந்தாதீதம்

என்பவைக்கும் உரிமை பூண்ட தலைமை பற்றியும் அவற்றை உலகுயிர்க்கு இங்ஙனமென் றுணர்த்தி உரிமை செய்விக்கும் மாட்சி பற்றியும் அங்ஙனம் வைத்த தென்க.

அல்லதூஉம், சுருங்கச் சொல்லுதல் வனப்பினல் சம்பந்தன் எனவே சிவஞானசம்பந்தன் என உரிமைச்சிறப்பு வழக்கால் தானே தோன்றும் என வைத்ததெனினுமாம் என்க. எங்ஙனம் எனின், இந்திரன் என்பது இறைமைச்சிறப்பு வழக்கால் தேவேந்திரனையும், உடையானென்பது பொருட்சிறப்பு வழக்கால் பொன்னுடையானையும் குறிக்குமாகலின் என்க.

வள்ளல் மலர்த்தாள் என்னும் ஒருவகைவனப்பு இருவகைச் சந்தி மூவகைமொழித்தொகைச் சொற்றொடர்க்கண் வள்ளல் என்னும் குணிப்பெயர் வினைமுதற்றொழிற் பயனுறப்படு முடைமைக் குணப்பெயராய் நின்று பிள்ளையாரது திருவடிகள் தம்மை அடைந்தோர்க்கு வரையாது ஆனந்தப் பேற்றை அளித்து அவரைத் தாங்கிக்கோடலைக் குறித்த தென்று உணர்க. அஃதேல் ஆனந்தப்பேற்றைத் தருதற்குந் தாங்கிக் கோடற்குங் கருத்தர் பிள்ளையாரன்றோ? அங்ஙனம் இருப்பத் திருவடிகட்கு இங்ஙனங்கூறல் எங்ஙனமெனில்:- திருவடிகள் தம்மை வழிபடுவோர்க்கு இரங்கி இன்பமீதற்பொருட்டு எழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை அவ்வழிபடுவோர்பால் வருவித்தலானும், ஞானதீக்கை பண்ணுங்கால் அவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வருவித்தலானும், நித்தியானந்தப் பேறு வாய்க்குமாகலின் இங்ஙனமென்க.

அல்லதூஉம், வாட்டமில் அருளும், கோட்டமில் குணனும், அசையா நிலையும், நசையா மனனும், வெகுளாப் பண்பும், விடாப் பேரன்பும் செவ்வியின்மரீஇ எவ்வெவர் எவ்வகை வேட்டனர் அவ்வகை விருப்பொடு குறிப்பின் வரையாதீதல் வள்ளற்றன்மை என்பவாகலின், இவ்வள்ளற் றன்மையைத் தம்பால் அடைந்தோரிடை அடைவித்தருளும் கருணைபற்றி அங்ஙனங் கூறியதெனினும் அமையும் என்க. அஃதேல் வள்ளற் றன்மை வழங்கு மலர்போலுந் திருவடியென்றன்றோ உரை விரித்தல் வேண்டும், அங்ஙனமன்றி வள்ளற் றன்மை யுடைய மலர்போலுந் தாளென விரித்திருக்கின்றதே எனின்; அங்ஙன மடைவித்தலும் வள்ளற் றன்மையே யாகலினும் உடையதொன்றன்றே உதவப்படு மாகலினும் இங்ஙனம் விரித்தல் அங்ஙனம் கூறற்கும் அமைதியாம் என்க.

அல்லதூஉம், அருளின்றி அமையாத வள்ளற் றன்மைக்கு அவ்வருளே முதற்காரணமா மாகலின், ஆனந்த வடிவராகிய பிள்ளையார்

அவ்வானந்தப் பேற்றை அளிக்கும் வள்ளற் றன்மைக்கு முதற் காரணமாகிய திருவருட்சத்தியே திருவடி என்று குறித்தற்குக் காரணத்தைக் காரியமாக ஈண்டு உபசரித்த தெனினும் அமையுமென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்பம் எளிதில் தருவேம் என்று பிள்ளையார் விதித்தருளிய அருள் விதிப்படி அறிந்து வழிபடின், அவ்வழிபாட்டால் அவ்வீட்டின்பந்தரப்பெறுதல் உண்மையாகலின், அவ்வுண்மை நோக்கி ஈண்டுக் கூறியதெனினும், பிள்ளையார் திருமேனி முற்றுந் தெய்வத்தன்மை பூரணமாகலின் அதனை யறிவிக்க ஈண்டுக் கூறியதெனினும் அமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளல் என்பதூஉம் ஆசிரியர் பெயராய வள்ளல் என்பதூஉம், அடி இணை எதுகைத் தொடையாய் எழுத்து அசை சீர் ஒலி பொருளாதிகளால் ஒற்றுமை கொண்டு நின்று பிள்ளையாரது திருவடித் தீக்கைக்கும் ஆசிரியர் அதிபக்குவத் தன்மைக்கும் உள்ள ஒற்றுமைப் பொருத்தம் விளக்கின என்க.

வள்ளல் என்பது பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப் பெயராகக் கொண்டு பொருள் கூறுவாரும் உளர். அங்ஙனங் கூறின், இத்துணைச் சிறப்பின்று என்று மறுக்க. என்னெனின், அவயவச் சிறப்பால் அவயவிக் குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலும் இன்பமாகலில் என்க. இதனைப் "போற்றிமா லன்முகனுங் காணாத புண்டரிகம்"[9] என்பதனாற் காண்க என்க. வள்ள மலர்த்தாளெனப் பாடமோதி வள்ளம் போலுங் குவிந்த வாய்மலரென மலர்க்கடையாக உரை விரிப்பாரும் உளர். அங்ஙனம் விரித்தலின் இத்துணைப் பெரும்பயனின்றென மறுக்க. இங்ஙனம் இன்னும் விரிக்கிற் பெருகும் என்க.

மலர் என்பது வள்ளற் றன்மையின் அருகு வைத்தமையின், ஈண்டு நிறைதலுங் குறைதலுமாய் உள்ள நீர்நிலைக்கண் தோன்றியும் அழிந்தும் விரிந்தும் குவிந்தும் வாடியும் நின்று, வண்ணமும் நறையும் வாசமும் சிறிதே சிறுபோது கொண்டு பறித்தலாதிய சிறுதொழிற் படும் மலர்களை நீக்கி, ஆண்டுத் திரிபிலாத் தெய்வத் தெண்ணீர் நிலைக்கண் ஒழியாமலர்ச்சியும் அழியாமணமும் பொன்னிறப்பொலிவும் இன்னறவொழுக்கும் மென்மையுந் தண்மையும் வியப்புறுமுருவும் கண்டோர் கண்கவர்காட்சியும் மாட்சியுங் கொண்டு முக்காலமுங் குன்றா மலரைக் குறித்தமை காண்க. என்னெனில் பிள்ளையார் திருவடிகள் மெய்ஞ்ஞான விளக்கமாய் அருண்மணம்வீசிப் பொன்னிறம்பொலிந்து ஆனந்தமொழுக்கி மெல்லெனவுற்றுத் தண்ணெனக்குளிர்ந்து தரிசிக்கின்றோர் வியப்புறுமுருவாய் அவரது விருப்பநோக்கம்பரவ என்றும்

[9] திருவாசகம், திருவெம்பாவை, 20

ஒரு தன்மையவாய் இருக்கின்றமையின் என்க. ஆயின் மலர் போலுந் தாளென்று உவமை விரிந்தபடி நிற்றற்கு இடங்கொடாது மலர்த்தா ளென்றது என்னெனின், அத்தெய்வத் திருமலர் தனைக் கண்டோர்க்குச் சிறிய விடயானந்தம் தருதலேயன்றித் திருவடிபோற் சிவானந்தந் தரமாட்டாச் சிறுமை நோக்கி என்க.

அல்லதூஉம், சுபவடிவாய் எவ்வகைச் சுபங்கட்கும் முன்னின்று அதனை விளங்குறச் செய்வதாய் மகிழ்வுடையோர் யாரும் மேற்கொண் டணியப்படுவதாய் நிற்கும் நன்மலர் போலும் எனக் கூறினும் அமை யும்; என்னெனின், திருவடிகள் அருள் வடிவாய் ஆனந்தப் பேற்றிற்கு முன்னின் றளிப்பதாய் அறிவுடையோர் தம் தலைமேற்கொண்டு அணி யப்படுவதாய் நிற்றலின் என்க.

அல்லதூஉம், மலரை அடைந்த வண்டுகள் அதனது தேனுண்டு களிகொள்ளுதல் போல் திருவடிகளை அடைந்தோரும் அருளானந்தம் பெற்று இறுமாத்தலின் இங்ஙனம் கூறிய தெனினும் அமையும் என்க. இதனைத் தொகையுவமை அணியாகக் கூறலின்றி வள்ளன் மலர்த்தா ளெனக் கூட்டி அற்புதத் தொகையுவமை யணியாகக் கொண்டு பொருள் கூறுவாரும் உளர். அவர் கூறுங் கூற்றிற் பெரும் பயனின் றென மறுக்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகு மென்க.

தாள் என்பது அடிகட்கன்றியும் முயலுதற்கும் உண்ணின்ற பொருள் வெளிப்படாமைக்கும் அதனை வெளிநின்றோர் உட்சென்று கவரப்படாமைக்கும் காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கும் அணிதற் கணியின் இருகடையும் இணைத்து நிற்கும் இடைப்பூட்டிற்கும் இடனாகி வந்த பலபொரு ளொரு சொல் லாகலின், திருவடிகள் தம்மை அடைந்தோரை ஆனந்த நிலையுட் சேர்த்தலும் அங்ஙனஞ் சேர்ந்தோர் மீட்டும் அவ்வானந்த நிலையினின்றும் போத அசைவு தோற்றி வெளிப்படாமைக்கும் அவத்தைகளுள் சென்று தாக்கிக் கவரப்படாமைக்கும் காப்பாக அருளுருவாய் அதன் முன்னிற்றலும் சிவத்துடன் சீவனை இடைநின்று கூட்டுவித்தலும் குறித்தது காண்க. இக்குறிப்புணர்த்த வன்றே மலர்க்கால் என்னாது மலர்த்தாள் என்ற தென் றுணர்க.

தலைமேல் வைத்து என்பது ஆசிரியர் தம் ஆசாரியராகிய பிள்ளை யார் திருவடி தீக்கை செய்யத் தாம் பெற்றமை குறித்தது காண்க. அஃதேல், வைக்கப்பட்டு எனச் செயப்பாட்டு வினையெச்சத்தால் இருத் தற் பாலதன்றோ எனின், ஆசிரியர்க்கு அத்திருவடிக்கண்ணே உள்ள பிரியத்தொடர்ச்சியின் பெருமை தோன்ற இங்ஙனம் நின்று அங்ஙனங் குறித்தது என்க. இதற்கு இவ்வாறன்றித் தலைமேல் பாவனையால்

வைத்தெனக் குறித்ததென்று கூறுவாரும் உளராலோ எனின், அவ்வாறு கூறிற் பிள்ளையார் இந்நூலாசிரியர்க்கு ஞானசாரியர் என்பதும் இவர் ஞானதீக்கை யுடையார் என்பதும் விளங்குதலின்றி மற்றை ஆசிரியர்போல் எடுத்த நூல் இனிது முடிதற்பொருட்டுப் பாவனையால் வழிபடு கடவுட் பழிச்சினர் என்று இலேசிற் கருதப்படுமாகலின் அங்ஙனங் கூறல் மரபன்றென்க. தலையில் வைத்து என்னாது தலைமேல் வைத்து என்றமையால், மறைமுடிக்கண்ணே வயங்காநின்ற அச்செல்வத் திருவடியின் சீர்மை தோன்றிற்று என்க.

ஓர்ந்து என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனிலை, அறிவு தனக்கெதிரிட்ட உணர்ச்சிப் பொருட்கண் எதிரிடுவது போன்று எதிரிடாது உள்ளாழ்ந்த அப்பொருட்டிறன் எதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியும் எதிரிட்ட பின்னர் விகற்பியாது எதிர்க்குந்தொறும் எதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியுங் கோடலின் கருவித்திறனும் தன்திறனும் அருட்டிறனும் உற்றுணர்ந்து அவ்வுணர்ச்சி விகற்பியாது தேறிநின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்புத் தோன்றவன்றே திருவள்ளுவநாயனாரும் "ஓர்த்துள்ள முள்ளதுணரின்"[10] என்ருரென்று அறிக.

உள்ளத் தழிவில் என்பதில் உள்ளம் என்பதன் பகாப்பதவியீற்றுப் பகுபதப் பொருளின் இடவாகு பெயராய் அணுப் பொருட்கண் வந்த உள் என்னும் பகுதி உட்புறத்தும் அப்போதம் எழுஞ் சிற்றசைவும் பேரசைவுங் குறித்தது காண்க.

உள்ளம் என்பது வாதனையால் உள்ளெழும் போதத்திற்கு ஆகு பெயராயது. வள்ளலென்பது போன்று ஒழுகிசையாய் வர உள்ள வழிவில் என்னாது பொறுத்திசையாய் வர உள்ளத் தழிவில் என்றது என்கொலோ எனின் :— வேற்றுமை வழியாகலினும், போதவசைவு சார்பின்றி யமையாமை குறிக்கவேண்டு மாகலினும், சாரியையோடு புணர்த்தி அங்ஙனங் கூறியதென்க. அழிவு என்பதில் அழி என்னும் பொதுவினைப்பகுதி முன்னர்த்தோற்ற நிகழ்ச்சிப் பின்னர் ஓர் காலத்தும் ஓரிடத்துமின்றிக் கெடுதற் பெயர்ச்சிக்கண் வந்ததாகலின், அப்போத நிகழ்ச்சி பின்னரெக்காலத்தும் உட்புறமென்னுமெவ்விடத்துந் தோற்ற நிகழ்ச்சியின்றி ஒடுங்கியவாறு குறித்ததென்று உணர்க. இங்ஙனமன்றி உள்ளத்தழிவில் என்பதற்கு மனத்தின் அசைவற்ற இடத்தெனப் பொருள் கூறுவாறும் உளராலோ எனின், மனத்தின் அசைவு போதவசைவறில் தானேயறும் ஆகலினும் அஃதருத விடத்து இஃதெவ்வாற்

10 ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

றானும் அறாதாகலினும் அது பொருந்தாதென்க. இதனை ஆசிரியர் கூறிய "பற்றாத போதும் பதறும்"[11] என்னும் திருவெண்பாவாற் காண்க என்க.

அடுக்குந் தேன் என்பதில் அடுக்கும் என்பது அடுத்தல் என்னும் தொழிற்பெயர்க்கண் தல் விகுதி தன்னொற்றுச் சந்தியொடு நீங்க எதிர் காலப் பெயரெச்ச இடைநிலை உம்மை ககரமெய்ச் சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்திபெற்று ஆண்டு நின்று இறையும் இடைப்பாடு தோற்றாது செறிதற் பெயர்ச்சியும், அடுக்கல் என்னும் தொழிற்பெயர்க் கண் அல் விகுதி நீங்க அவ் வெதிர்காலப் பெயரெச்ச இடைநிலை உம்மை விகுதி நீங்க நின்று தன் வரவு கண்டோடிய குற்றுகரமூர்ந்த மெய்க்கண்ணேறி நின்று இறையும் இடைப்போதின்மை படாது பன் முறை மேன்மேலுறுதற்பெயர்ச்சியும் பொருளாகக்கொண்டு இருவகைப் பகுதி யொருவகை யெச்சமாக நிற்றலின், சிறிதும் இடத்தானும் காலத் தானும் பிரிவு தோன்றாது செறிந்து பன்முறை மேன்மேலெழும் ஆனந்தத் தேனென்று குறித்ததென் றுணர்க.

உள்ளத் தழிவி லடுப்பது ஆனந்த மாகலின் தேனென்பதை உவமக் குறிப்பால் சிவானந்தத்தேன் என்றதென்று உணர்க.

தேனுண்ட வண்டு அசைவின்றி அத்தேன்மயமாயிருத்தல் போல, ஆனந்தானுபவத்தர் போத அசைவின்றி இவ்வானந்த மயமா யிருத் தலின் உவமையாகக் குறிக்கப்பட்டதென்று உணர்க. இதனை யொப் புமைக் கூட்ட மொட்டாதிகளாகக் கூறுவாறும் உளராலோ எனின், அவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையின் ஒருவாறு அமையும் என்க. போத அசைவின்கண் தோற்றல் விடயானந்த மாகலில், போத ஒழிவின் கண் தோற்றல் சிவானந்த மெனக் குறித்தற்கு உள்ளத் தழி வில் அடுக்குந் தேன் என்றதென்று உணர்க. எங்ஙனமெனின், உள் ளத் தழியாமையின் அடாத் தேனென்று எதிர்மறுக்கப் படுதலின் என்க. மதுரம் பற்றித் தேனை ஆனந்தத்திற்கு உவமை கூறுவாரும் உளராலோ எனின் அது நா விடயமாய் இறைப்போது நிற்றலின் இத் துணைச் சிறப்பின்று என்க.

அன்பரெலா முண்ண என்பதில், அன்பர் என்பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைதும் என்று இடைவிடாது அதனையே விரும்பிப் பயில்வோரைக்

11 பற்றாத போதும் பதறும் பழக்கமதைக்
கற்றா லென்னைக் கலக்காது—சற்றேநீ
தீண்டிவிடிற் றான்காண் செனன மரணமது
மாண்டுவிடி னீசிவமா வை.

குறித்ததென்று உணர்க. எலாம் என்பது சரிதாதி கன்ம மார்க்கங் களைக் கூறும் பிற நூல்களெல்லாம் பருவம் நோக்காது சாதி சமயாசார விகற்பங்களை நோக்கிச் சிலரை நீக்கியும் சிலரை நிறுவியும் அதிகரித் தல் போலாது அச்சாதிசமயாதிகளில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாரே னும் பருவத்தராயின் இந்நூற்கு உரியராவர் என்பது குறித்தது என்று உணர்க.

உட்கொள என்னும் பொருளுட்கொண்டு பொருட்டுப் பொருளிற் போந்த உண்ண என்னும் வினையெச்சம் ஆனந்தானுபவத்திற்கு விடாத இலக்கணை யாயிற்று என்று உணர்க. என்னை எனில், உண்ண லில் பசி நீங்கல் போல் ஆனந்தானுபவத்திற் பசுத்துவ நீங்கலின் என்க.

பயன் காரணம் பற்றி வந்த ஒழிவிலொடுக்கநூல் என்பது ஒழிவி லொடுக்க மென்னும் நூல் ஒழிவிலொடுக்கந் தரு நூல் என இரு வழிக் கும் பொதுவாய சந்தியால் வந்தமையில், தன்னை வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பொதுவென்று குறித்த தென்று உணர்க.

ஒழிவிலொடுக்கநூ லுரைத்தான் என்பதில் வேற்றுமை சாரியை உருபு முதலிய ஒன்றும் விரியாது நிற்றலின், ஞானசார மன்றிக் கருமா சார மொன்றும் விரியாத இந்நூலின் நின்மலத் தன்மை தோன்றிற் றென்று உணர்க. உரைத்தான் என்பது ஒருவர் மதி நுட்பத்தால் தாம் கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்னின் தன்மையைப் பிறரும் அறிந்து பயன் கோடற்குக் கட்டளைக்கல்லில் உரைத்துக் காட்டல் போல், சுருதி குரு அனுபவத்தால் தாம் அனுபவித் தறிந்த சிவானந்தப் பேற்றின் தன்மையைப் பக்குவரும் அறிந்து பயன் கோடற் பொருட்டு நூற்கண் உரைத்துக் காட்டினர் என்று குறிப்புறுத்திற்று என்று உணர்க.

என்னெனில் உரை என்பது பொன்னுரையும் பொருளாகக் கோட லின் என்க. உரைத்தான் என்னும் பயனிலை செயப்படு பொருளின் இறுதியில் இயையாது செயப்படு பொருட்கும் கருவிப் பொருட்கு மேல் தாடலைமேல் வைத்து என்பதன் இறுதியில் தொடர்ந்து நின்றது என்னெனின், சிவஞானத் தீக்கை யுடையராய் உரைத்தா ரென்பது மன்றித் தமதாசாரியர் திருவடி சான்றாகத் தாம் கண்ட அனுபவத்தை விளங்க உரைத்தா ரென்பதும் குறித்தற்கு என்க. என்னை? தாடலை மேல் வைத்து எனவே சான்றாக வைத்து என்பது தானே அமையு மாகலின்.

தலைமேல் வைத்து என்பதன்பின் நிற்கக் கடவதாய ஓர்ந்து என் பது செயப்படு பொருட்பின் இறுதி நிலையாய் நின்றது என்னெனின், இந்நூல் கற்றோர்க்குக் கருமங்குறைந்து ஞானமேலிடுதலுண்மை குறித்

தற்கு என்க. எங்ஙனம் எனின், அவ்வோர்ந்து என்பது வினைக்குறை யாகலின் என்க. 'உள்ளத்தழிவி லடுக்குந் தேனை யன்பரெலா முண்ண வொழிவிலொடுக்கநூ லோர்ந்துரைத்தான்' எனக்கொண்டு போத ஒழிவின்கண் அடுப்பதாய ஆனந்தத்தை அன்பரெல்லாம் அனுபவிக் கும்பொருட்டு வேதாகம முடிபான ஞானநெறியை ஆராய்ந்து ஒழிவி லொடுக்கம் என்றோர் நூலை உரைத்தார் எனப் பொருள் கூறுவாரும் உளர். அங்ஙனங் கூறின் ஆசிரியர் பரஞானமுடையா ரென்பது தோற்றாது அபரஞான முடையாராகப் பொருள்படு மாகலினும், அபர ஞானத்தாற் கூறப்பட்ட நூல் மிகச் சிறவாமையானும் அது பொருந் தாதென்க.

இந்நூல் இயற்றற்கேற்ற நற்பொருளுடைமையுஞ் சிறப்புப்பாயிர இலக்கணத்துள் ஆக்கியோன் பெயரே என முதனிறுத்தப்பட்ட நிமித்த காரணச் சிறப்புடைமையும் இச்செய்யுள் முடிபுக்கு எழுவா யாந் தலைமை யுடைமையும் பற்றி வள்ளல் என முதல் நிறுத்தியது என்க. இந்நூலாசிரியர்க்கு ஆசாரியர் இவரென்பது தோன்றற்கு அவ்வள்ளல் என்பதன்புடை குருராயன் என்பதை நிறுத்தியதென்க. இங்ஙனம் ஆசாரிய ரென்பவர் பிள்ளையார் என்பது தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத்தல் வேண்டுமாகலின் அந்த ஞானத்தைக் குறிக்கும் பாசவெற்றியாய 'வாதுவென்ற' என்பது முன் கூட்டிச் சம்பந்தன் என அதன்புடை நிறுத்தியதென்க. இரண்டாம் அடிக்கண் பிள்ளையார் தாள்கள் நிறுத்தத் தொடங்கி முன்னர் அத்தாள்களின் இயற்கை அருளென்று குறிக்க வள்ளல் என்றும், அதன் வடிவம் ஆனந்தமென்று குறிக்க மலரென்றும் முறையே வைத்து வள்ளல் மலர்த்தாள் என நிறுத்தியதென்க. தாள்களன்றியும் பிள்ளையாரும் அருளியற்கையரே என்பது குறிக்கச் சம்பந்தனென்னுஞ் சத்தந் தோற் றியவுடன் வள்ளற் சத்தந் தோன்ற நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொற்பொருண் முறைநிலை. தாள் என்பதற்கும் தலை என்பதற்கும் உள்ள சொற்பொருள் சம்பந்த இன்பம் பற்றித் தாடலை என்றும், தலை என்பதற்கும் மேலென்பதற்கும் உள்ள உரிமை நோக்கம் பற்றித் தலைமேலென்றும், மேலென்னும் இடப் பொருட்கு வைத்தற் றொழில் சிறந்தது பற்றி மேல்வைத்து என்றும், வைத்து என்பதற்கும் உரைத்தான் என்பதற்கும் இறுதியும் முதலும் இனமாதல் பற்றி வைத்துரைத்தான் என்றும் முறையே நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொன்முறை நிலையும் சொற்பொருண்முறை நிலையுமாம். இங்ஙனம் முற்றும் முறைநிலை கூறப்புகின் மிகப் பெருகுமாகலின் ஒரு வாறு காட்டினம். மற்றையவும் இவைகொண்டு உணர்க என்க.

இச்செய்யுட் பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானும் குறிப்பானும் விளங்க விரித்தலின் வாகைத்

திணையுள் சால்பு முல்லைப் பொருளின்பாற் பட்டதென்க. என்னை? "சால்பு முல்லைப் பொருள்: வான்றோயு மலையன்ன சான்றோர்தஞ் சால்புரைத்தன்று"[12] என்பவாகலின்.

இச்செய்யுள் தன்னுள் செயப்படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னாலும் தன்னுறுப்புக்களாலும் குறிப்பாற் குறித்து நின்ற நன்னேக்குடைச் செய்யுள் என்று உணர்க. அங்ஙனம் குறித்தவை எங்ஙனமெனின் :—

இச்செய்யுள் தான் கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா என்னும் முப்பாவினும் சிறந்த வெண்பாவாகலின், இக்குறிப்பால் இந்நூல் சரியை நூல், கிரியை நூல், யோகநூல் என்னும் மூந்நூலினும் சிறந்த ஞானநூல் என்று குறித்தது என்க.

தான் ஈரசையான் ஆசிட்டு இருவகைத் தளைதழீஇ ஒழுகிசைச் செப்பலோசையான் வந்ததாகலின், இக்குறிப்பால் இந்நூல் ஆகம முடிவும் வேதமுடிவும் கூறும் இருவகை நெறியும் ஒருவகை நெறியாத் தழீஇக் கொண்டிருந்தமை குறித்தது என்க.

தான் ஒன்றடுத்த இரட்டை முப்பத்தா றெழுத்துக்களைக் கொண்டு நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் பாசமொன் றடுத்த தத்துவ முப்பத்தாறென்றும் முப்பத்தாறன் தன்மை இவையென்றும் பகுத்தறிதல் வகையு முணர்த்துவ தெனக் குறித்த தென்க.

தான் நான்கடுத்த முப்பத்தாறு அசைகளை அசைத்து நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் அத்தத்துவ முப்பத்தாறனையும் நியதி களைதல் முறையை உணர்த்துவ தெனக் குறித்தது என்க. அஃதேல் முப்பத் தாறன்மேல் நான்கடுத்தது என்னெனின், ஆன்ம தத்துவத்தின் வன்மை தோன்றற்கு ஓரசையும், வித்தியா தத்துவத்தின் வலி தோன்றற்கு ஓரசையும், நாத தத்துவத்தின் பெருமை தோன்றற்கு ஈரசையும் மிகுந்தன என்க.

தான் பதினைந்து சீர் சீர்கொள நிற்றலின், இக் குறிப்பான் இந்நூல் ஆசாரியத் தன்மை, சீடத்தன்மை, பதித்தன்மை, பசுத்தன்மை, பாசத் தன்மை, உபதேசத் தன்மை, பக்குவத்தன்மை, யோக நிவர்த்தி, கிரியை நிவர்த்தி, சரியை நிவர்த்தி, விரத்தி விளக்கம், துறவுத் தன்மை, அருளவத்தைத் தன்மை, வாதனை மாண்டார் தன்மை, நிலை இயல்பு என்னும் இப் பதினைந்தனையும் சீர் பெறக் கொண்ட தெனக் குறித்தது என்க.

தான் எழுவகைத் தளையின் இயைந்த தாகலின், இக்குறிப்பான் இந்நூல் ஆன்மதரிசனம், அருட்டரிசனம், பரைதரிசனம், பரையோகம்,

[12] புறப்பொருள் வெண்பாமாலை, 185

பரையோக நீக்கம், போத ஒழிவு, இன்பப்பேறு என்னும் எழுவகை நிலையும் அறிவிப்ப தெனக் குறிந்தது என்க.

தான் தனிச்சொல் பெற்று நான்கடியுடன் நடந்ததாகலின், இக் குறிப்பான் இந்நூல் கூறும் ஒப்பற்ற ஞானமும் சுத்தச்சரியை, சுத்தக் கிரியை, சுத்தயோகம், சுத்தஞானம் என நான்கு பாதத்தோடு நடப்ப தெனக் குறித்தது என்க.

தான் ஒரூஉத்தொடையொடு முத்தொடையான் இயன்றதாக லின், இக்குறிப்பான் இந்நூல் சுருதி குரு அனுபவம் என்னும் மூன்றும் ஒத்தியன்ற தெனக் குறித்தது என்க.

அல்லதூஉம், இச்செய்யுள் அடி நேரடியாய் விதித்த எழுத் தெல்லையின் இகவாது நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் மெய்வீட் டின் நெறித்தாய் அவ்வீட்டின் நெறிக்கு எல்லையாய ஞானத்தின் இக வாது நின்றது எனினுமாம் என்க. எல்லை என்னெனில், "பத்தெழுத் தென்ப நேரடிக்களவே, ஒத்த நாலெழுத் தொற்றலங் கடையே"[13] என்பவென்க. இங்ஙனங் குறித்தற் கன்றே இச்செய்யுள் ஈற்றடியில் நூற்பெயரை வேறு அடை கொடாது தனிமையில் நிறுத்தியது என்க.

இச்செய்யுள் சிறப்புப் பாயிரத்தது ஆயின் அப்பாயிரத்திலக்கணம் இதனுள் இருந்தவாறு எங்ஙனம் என்னின் :- வள்ளல் என்பதனல் ஆசிரியர் பெயரும், குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தா டலேமேல் வைத்துரைத்தா னென்பதனல் ஞானசாரியராகிய பிள்ளையார் அருளுபதேச வழித்தென உட்கொளப்படுதலின் வழியும், இந்நூற்றெடர் தமிழ்த்தொட ராகலின் இத்தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்கு நிலமெனக் கருதப்படுதலின் எல்லையும், ஒழிவி லொடுக்க நூல் என்பதனல் நூற்பெயரும், ஒழிவிலொடுக்கமென அன் மொழித்தொகைப் பெயர் மாத்திரையின் நில்லாது நூலென விரித் தமையின் இந்நூலுந் தொகை விரி யுடைய தெனக் கருதப்படுதலின் யாப்பும், உள்ளத் தழிவில் என்பதனற் கருதிய பொருளும், அன்ப ரெலாம் உண்ண என்பதனல் அன்பரெலா முணற்பொருட்டு இஃதி யற்றுக என்று உள்ளெழுந்து எதிரிட்டு நின்றது ஆசிரியரது பெருங் கருணை எனக் கருதப்படுதலின் கேட்போரும், உள்ளத் தழிவில் அடுக்குந்தேன் என்பதனல் பயனும் புலப்படு மாகலின்; அவை இருந்தவாறு இங்ஙனம் என்க.

இப்பாயிரச் செய்யுள் முற் காலத்தது
இவ்வுரை சி. இராமலிங்க பிள்ளை யவர்களாற்
செய்யப்பட்டது

ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி முற்றிற்று

---

13 தொல்காப்பியம், செய்யுளியல், 38

இந்நூல் உரைபாடத்திற் சிலசில இடங்களிலுள்ள மறைசொற் பொருட்குத் தெளிசொற் பொருள்

1. பவுரிக்கூத்து—வலமிடமாகச் சூழ்ந்தாடுங் கூத்து.

குறுமன்னியர்—சிலரால் அறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவ முடையோர்.

மகாமன்னியன்—பலராலும் அறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவ முடையோன்.

பிரளயாகலர்—மும்மலங்களுள் ஒருமல நீத்தோர், அவர் பிரமன் முதலானோர்.

2. ஞாதுரு—காண்பான், ஞானம்—காட்சி, ஞேயம்—காணப் பட்டது.

3. சூக்குமை வாக்கு—வார்த்தை தோன்றற்கு முதற்காரணமாய் உந்தியிலே நாதவடிவாய் நிற்கும் ஒரு சத்தி.

பகடிக் கூத்து—உள்ளது போன்று இல்லாததைக் காட்டும் வெளிவேடம் அல்லது அகசியக் கூத்து

4. பரஞானம்—அனுபவஞானம், அபரஞானம்—வாசகஞானம்.

5. அரிப்பாளன்—குப்பை முதலிய இடங்களில் பொன் முதலிய அரித்தெடுக்கின்றோன்.

கொழுந்தாடை—கரும்பின் நுனித்தழை

10. சாயாபுருடன்—தன் நிழலைப் பார்த்துப் பின் ஆகாயத்தை உற்று நோக்குகின்றார்க்கு அவ்வாகாயத்தின்கண் புருட வடிவம் போல் தோன்றும் அந்நிழற் காட்சி.

12. பைமறித்தல்—உள்ளிருந்த சரக்கு வெளிப்படப் பைவாய் தொட்டு உட்புறம் மேற்பட்டும் வெளிப்புறம் உட்பட்டும் மடங்க மடக்கல்.

16. கிண்கிணி வாய்செய்தலர்தல் — வட்ட வடிவாக முகங் கொண்டு மலர்தல்.

21. பஃறுளி — பலதுளி.

42. பற்ற — பார்க்கிலும்.

43. அருகித் தோற்றல் — சுருங்கித் தோற்றல்.

52. பிரேரகம் — காரியப்படுத்தல்.

54. பிரதிபலிதம் — எதிர்பிம்பம்.

56. சகச மலம் — அனாதியாகிய மலம்.

65. கடா — வினா.

66. விட்டிசையா திசைத்தல்—நடுவே நில்லாமல் ஒலித்தல்

67. நக்கினம் — நிருவாணம்.
80. தேறிட்ட நீர்—தேற்றாங்கொட்டையால் தெளிவிக்கப்பட்டநீர்.
99. கவுசனை—யாதாயினும் ஓர் பொருளை உள்வைத்து மறைய மேல்மூடிக்கட்டும் மேற்கட்டு.
105. சுழல் விறிசு—கொள்ளி வட்டம்போல் சுற்றுவதாய ஒருவகை மருத்துவாணம். இத்தேயத்து இக்காலத்தில் சுழல்புறிசு என்று வழங்குகின்றது.
109. அநன்னியம்—அன்னிய மல்லாமை.
113. நெற்பொலி—தூற்றுநெல்
114. தும்பு செறித்து—தும்பு அவிழ்த்து
121. அனுபவிக்கச் சிதைக்கும்—அனுபவிக்க வறிகின்ற போதும்.
150. அவித்தியாகதம்—அஞ்ஞானமயம்.
153. முடி களச முத்தி: முடி—சிரசு, களசம்—நீக்கம், முத்தி—வீடு.
154. வாசி யென்ற வார்த்தை—இது செய்க விடுகவென்று நியாய மாகக் கூறும் வார்த்தை.
159. வியாபகம்—கலப்பு, வியாத்தி—கலக்கப்படுவது.
160. விசர்க்கரித்தல்—விடுத்தல்
167. வெறுவீடர் — அனுபவிப்பதற் கில்லாமையால் விட்டோர் போனிருப்போர்.
கறண்டல்—பற்களால் நெருக்கிப் புறண்டுதல்.
177. சேட்டித்தல் — தொழிற்படுத்தல் அல்லது குணக்கேடான தொழில் விளைத்தல்.
183. சிங்கி—விலங்கு.
194. நாங்கூழ்—நாகப்பூச்சி யென்னும் ஓர் கிருமி.
விகளம்—மௌனம்.
198. மடலெடுப்பு—பனைமடலால் குதிரைசெய்து ஏறுதல்.
207. ஐவ ரரசர்—பாண்டு மக்களாகிய தருமன் முதலிய ஐவர்.
227. மந்தகாசப் பிரகாசம்—புன்னகைப் பிரகாசம்.

அடிக்குறிப்புகள்

காப்பு 3:— "உள்ளவுரை நாயேற் குறச் செய்யும்" என்று பாடமோதலுமுண்டு.

காப்பு:- ஈண்டு - இத்தோத்திரச் செய்யுட்கள் உரையாசிரிய ரால் இந்நூற்கு உரை இனிது முடிதற் பொருட்டு இயற்றப் பட்டன.

41. பரிபூரணமே பரையாய் என்பதைப் பரிபூரணப் பரையேயாய் என்று கூட்டுக.

42. இங்ஙனம் செய்யுட்கட் டானு யென்னு மொருமையை யுரைக் கட் டாமாகி யெனப் பன்மையாகக் கூறியது என்னையெனின், பிள்ளையார் என்னும் திருவருட்பெயரின் பெருமை நோக்கி என்க. இவ்வாறு கூறியவற்றிற் கெல்லாம் விதி யிங்ஙனமென் றுணர்க.

51. கதறல் கதற்றல் என விகாரமாயிற்று.

53. அகந்தை யென்பது அந்தையென் றிடைக்குறையாயிற்று.

76. செட்டையாற் பரிசித்தல் முதலியன அவ்வம் முட்டைகள் தத்தம் பருவமடைதற் கென்றறிக.

அமைத்துக்கொளல்

காப்பின்கண் "ஈண்டு - இத்தோத்திரச் செய்யுட்கள்" என்ற வையுள் ஆனைமுக னாறுமுக னென்னுஞ் செய்யுளை யொழித்து வேறு கொள்க.

4. "இக்கதையை இப்பொருளுக்கு" என்றதை அக்கதை இப் பொருளுக் கெனக் கொள்க. இங்ஙன மின்னும் சில விடங்களி லுள: அவற்றையு மங்ஙனங் கொள்க.

"மாறுபாடாய்க் கருதி" என்பதில் செய்து என்னும் வாய் பாட்டு வினையெச்சமாய ஆய் என்பதை செயவென்னும் வாய் பாட்டு வினையெச்சமாய ஆகவெனக் கொள்க. இங்ஙனம் இன்னும் சில இடங்களிலுள: அவற்றையு மங்ஙனங் கொள்க.

5 ; 10 முதலியன வடசொற்களுள் ஞாநம் - ஞானம், ஆநந்தம் - ஆனந்தம் எனத் தமிழிற்குப் பொதுவுஞ் சிறப்புமாய நகர னகரங்கள் சிற்சில விடங்களில் விரவி நின்றன. அவற்றைத் தமிழ்ச் சிறப்பு வழக்கு நோக்கி யமைத்துக் கொள்க.

8. "இருப்பது மன்றி அங்ஙன நின்று கேட்குமொழி பிரமோபதேச மொழியாகலின்" என்பதும் சில வுரை பாடங்களி னுண்டு.

69. "ஞானத்தி லின்பை நசிப்பித்து நானதுவா மூனத்தையா ரொழிவிப்போர்" என்பதற்கு, "சுவாநுபவத்தான் ஞானா நந்தத்தைப் பெறாது அதனை விடயச் சேற்றாற் கெடுப்பித்து விடயச் சேற்றி லழுந்தி நின்று அவ்வாநந்தத்தை யடைதற் கேதுவாய்க் கூறும் ஞான சாத்திரங்களைக் கேட்டறிந்த மாத்திரத்தினால் அவ்வாநந்தமய னானென்று கூறும்" என்பது சிலவுரை பாடங்களி லுண்டு: இது உரை வேறுபாடு.

2. தொண்டமண்டல சதகம்

1. நூற்பெயர் இலக்கணம்

தொண்டமண்டல சதகம் — ஒருவாறிதனிலக்கணம் விரிக்கின்ரும்.

இஃது மூவகைமொழி, இருவகைச்சந்தி, முத்திறத்தொகை, ஒரு தலைநோக்க முந்நிலை யிலக்கணச் செந்நிலைத் தொடர்.

முற்பாட்டுயர்பொருட் டலைமை யுடையதி னிலைமை, இடைப் பாட்டுடைய துரிமை யுடைமை நிலைமை, பிற்பாட்டுடைமை யுரிமை யுடைய துடைமையாய இத்தொடரைச் சொற்றிறந் தோன்றத் தொடர்பின்மை செயின், தொண்டன்-மண்டலம்-சதகம் என்று செய்க.

இதனுள், தொண்டனென்பது வழக்கியற்பாடு, ஒற்றுமைச்செறிவு, வேற்றியற்கரணம், குறிப்புயர்நோக்கம், பொருள்விரியாக்கம். குற்றியல் வண்ணம், இடைப்பல்வயிற்ரெகை முதலிய சொல்லியற் பாகுபாட்டி னமைந்த முதற்ரெகைச் சிறப்புயர்திணைக் காரணப் பொருட்பெயர். மண்டலமென்பது வடசொன் ஞேக்கியற் காரணப் பண்புகோ ளிடப் பெயர். சதகமென்பது வடசொற் பாட்டியற் காரண எண்ணிலைக் குழூஉக்கோட்பெயர்.

இத்தொடர்க்கண் இயைபின்மையிற் பொருள் கொளின் :— தொண்டன் - ஆதொண்டன், மண்டலம் - வட்டம், சதகம் - நூற் றிஞலாய கூட்டம் என்று கொள்க. இயைபுண்மையிற் பொருள் கொளின்:—தொண்டன் - ஆதொண்டனென்னுமோர் அரையன், மண் டலம் - இருபதின்காத எல்லை வட்டமாய நாடு, சதகம் - நூறு செய்யுட்களாலாய கூட்டம் என்று கொள்க. பொருத்தஇயைபிற் பொருள் முடிபு கொளின் :-ஆதொண்ட னென்னும் அரையனல் ஆளப் பட்ட இருபதின் காத எல்லை வட்டமாய நாட்டின் வண்மையைக் குறித்த நூறு செய்யுட் கூட்டத்தாநய ஓர்வகை யாப்பென்று கொள்க. இங்ஙனம் வழங்கல் சொற்சுருங்கியல், பொருளாழ்பியல், குறிக்கோளி யல், தொகையின்பம், அளவிசைப்பாடு, பல்வயின் வழக்கு, ஒருங்கிய லுடைமை முதலிய தோன்றக் காரணம் பற்றிய பெயர்க்கோள்களை வழங்குவிக்குங் கலைவல்லோர் கண்ணியநிலை யென்றுணர்க. இஃதின் னும் விரிக்கிற் பெருகும்.

இதனுள் தொண்டமண்டல மென்பத னியலை விளங்க வகுத் துணர்த்துக வெனின் :— ஆதொண்டந் தழைவயிற் கிடத்தப்பட்ட தனல் ஆதொண்டன் எனக் காரணக்குறிப்பெய ரேற்று, இரவி மரபின் கண் ஓர் இறைமகனல் ஆளப்பட்ட எதிரிலாட்சி யுடைமையின் இம் மண்டலத்திற்குத் தொண்டமண்டலமெனப் பெயர் வழங்கிற்று.

இனி, ஆதொண்டந் தழையானும் மலரானும் இயற்றிய தொங்கலணிந்தமையின் ஆதொண்டனெனப் பெயர் வழங்கிற்று என்பாரும் உளராலோ எனின் அங்ஙனங் கூறினும் இங்ஙனம் வழங்கல் ஒத்ததிலையென்க.

அற்றேல், ஆதொண்டந் தழைவயிற் கிடத்தப் பட்டவனை ஆதொண்டனென்று குறியீடு செய்தல் எங்ஙனமெனின் :—மேற் கலைவல்லோர் கண்ணியதிலை யென்றும், அதனலுணர்கவென்க. அன்றி, கடப்பந்தழைவயிற் கிடத்தப்பட்டவனைக் கடம்பனென்றும், வேப்பந்தழையானும் மலரானுந் தொடுத்த தொங்கலணிந்தோனை வேம்பனென்றும் இங்ஙனம் பலபட வழங்குங் காரணக் குறிப் பெயர்கள் பலஉள. அவற்றாற் றேர்ந்து தெளிகவென்க.

அற்றேல், ஆதொண்டன் மண்டலமெனல் வேண்டும்; தொண்ட மண்டல மெனல் எங்ஙனமெனின் :— நிறுத்த மொழிக்கண் ணீற்றுச் சிறப்புயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதியாய அன் னென்பதன் னகரமெய் குறித்துவரு கிளவியோடந் நிறுத்தமொழி பிளவுபட் டிருசொன்னீர்மையிற் பொருந்தாப் புணர்ச்சியாய்ப் புணர்ச்சியின்பம் பெறுமை நோக்கி, அவை யொன்றுபட் டொருசொன்னீர்மையிற் பொருத்தப் புணர்ச்சியாய்ப் புணர்ச்சியின்பம் பெறற்பொருட்டு ஒத்த கிழத்திக்குங் கிழவோற்கும் புணர்ச்சியின்பந் தோன்றற் பொருட் டகன்றுநிற்கு முயிர்ப்பாங்கிபோன் றகன்றுநிற்பவும், நிறுத்தமொழிக் கண் முதனிலை வேற்றுமை யொற்றுமை விரவுறுப்பாகாரம் பல்வயின் வழக்குத் தொகையின்ப முதலிய நோக்கித் தொகுக்கப்பட்டுந் தொகாவியலின் ஞாபக விடய வுருவி னருகிக் கண்ணுற்று நிற்பவும் தொண்ட மண்டல மென்று வழங்கிற்றென்க.

இஃது இருவயிற்றோற்றம், சிறப்பாட்சியுடைமை, பொருளடைச் சேர்பு, ஒற்றுமைச்செறிவு, ஒத்திசைப்பேறு, நுனித்துணர்புணர்வு, முதலிய நோக்கியலைப் பெற்றுத் தேயவழக்குச் சிறப்புடைச் சொற்றொடரிற் போந்த காரணக் குறிப்பெயரென்க.

தொண்டமண்டல மெனிற் காரணக்குறி விளங்கப் புலப்படலின் றுலோ வெனின் :— மேற் சொற்சுருங்கியன் முதலிய குறித்து வழங்குவித்தல் கவிஞர் கண்ணிய நிலை யென்றும், ஆதலிற் கூர்ந்தறிகவென்க.

கூர்ந்தறிதற் றன்மையது செய்யுள் வழக்கே யன்றிப் பாடைவழக்குத் தேயவழக்கு முதலிய வன்று லெனின் :— இத் தொண்ட மண்டலமென்பது செய்யுள்வழக்கு முதற் பல்வகைவழக்கினும் பயின்று வரலானும் முற்காலத்ததன்றிப் பிற்காலத்துக் காரணக்குறியாகக் பெயராய் வழங்கலானும் புறப்பாட்டிற் பொருண்முடிபு வல்லுநரல்

லார்க்கும் விளங்கப் புலப்படுதலானு மதனகப்பாட்டிற் செய்கை முடிபு முதலிய இயன்மாத்திரையே கூர்ந்தறிக வென்றுமென்க.

இஃது செய்யுண் முதலிய பல்வகை வழக்கினும் பயின்று வருதன் முதலிய இச்சதக யாப்பின்கண்ணும் காஞ்சிமான்மியத்தைக் குறித்த காப்பிய முதலியவற்றின்கண்ணும் பாடைவழக்குத் தேயவழக்கு நகர் வழக்கு முதலிய வழக்கியற்கண்ணும் பல்வகைப் பெயர்க்கு மிலக்கணம் புலப்படுத்தற் கருவியாய முந்துநூன் முதலிய நூன்முடிபின்கண்ணும் வழக்குணர்ச்சிக்கண்ணுங் காண்க வென்க.

அற்றேல் கூர்ந்தறிக என்ற அகப்பாட்டிற்செய்கைமுடிபு முதலிய விளங்கப் புலப்படுத்துக வெனின் :— பயன்றருஉந் தொழிலது புடைபெயர்ச்சிக்கண் உரிமைதோற்றி உரிமையுடைமைக்கு முதலாய முதற்பொருளெஞ்சிநிற்ப அம்முதலாய முதற்பொருட் டொழின் முடிபிடனேற்ற தன்றொழிற்பயனுறுதற் கிடனுய செய்பொருளம்முதற்பொருளுேைக்கிய லொருபுடை யொப்பத் தொழிற்பயன் றேற்றற் கிடனுய தாப் பொருள் வேற்றுரிமை யேற்றுத் தன்றொழின் முடிபின் முற்றிப் புடைபெயர்ச்சியி னுரிமை பெற்ற முதற் பொருண்மையி னெப்புமை பெற்றுந் தன் புடைபெயர்ச்சியி னுரிமை யேற்று வேற்றுரிமை முதற் பொருட் கரணத் தொழிற்பய னுறப்படூஉஞ் செய்பொருளைத் தன் கருமத் தொழிற் பய னுறப்படூஉஞ் செய்பொருளாப் புடைபெயர்ந் தத னுரிமை யேற்ற முதலாய முதற்பொருட்பாடு பெற்றும் வந்த விரிசொற் றெரிநிலை வினைமுற்று னணைந்த பெயர்க்கோணிலை நோக்காய, ஆதொண்டந் தழையிற் கிடத்தப்பட்டவன் ஆதொண்டைத் தழையிற் கிடத்தப்பட்டவன், ஆதொண்டந் தழையானு மலரானு மியற்றப்பட்ட மாலையைத் தரித்தவன் என்பன தன் வினைமுதற்றொழிற்பயன் றேற்று மிடனுந் தன்றொழிற்பய னுறப்படூஉஞ் செய் பொருளு மிடனுக ஆதொண்டந் தழையன் ஆதொண்டைத் தழையன் என விரிசொற் குறிப்பு வினைமுற்றனணைந்த பெயர்க்கோணிலை நோக்காய்ப் பின்னர் இடப்பொருளவயவியுங் கருவிப்பொருளவயவி மிடனுகப் பெற்று, ஆதொண்டை யென்பதனீற்றைகாரங்கெட் டஃதூர்ந்த மெய்ம்மேல் விகுதிஅன்னூர்ந்து ஆதொண்டன் எனக் குறுந்தடியுஞ் செம்பட்டு மாயவாறு போற் றொகைநிலை யேற்றுப் பெயரேயாய் நின்றது.

அல்லதூஉம், ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

பனையு மரையு மாவிரைக் கிளவியு
நினையுங் காலை யம்மொடு சிவணு
மையெ னிறுதி யரைவரைந்து கெடுமே
மெய்யவ ணொழிய வென்மனர் புலவர்[1]

---

[1] தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உயிர்மயங்கியல், 81

என்னுஞ் சூத்திரத்துள் 'நினையுங்காலை' யென்பதனாற் றழை யென்னுஞ் சொல்வந்துழி தொண்டை யென்னுஞ்சொல் இறுதி ஐகாரங் கெட்டஃதூர்ந்த மெய்ம்மேல் அம்முச்சாரியை யூர்ந்து நின்றதன்றே; அங்ஙனம் உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதியாய அன்னென்பதனை யேற்குமிடத் தத்தழையென்ப தெஞ்சி யத்தழையிற் கிடத்தப் பட்டவனென் றறிந்துகோடற் குறியாத் தழையாற் போந்த அம்முச் சாரியையின் மகரவொற்றுநீங்க நின்ற அகரத்தின் பின்னர் அவ்வுயர்திணை ஆண்பால் விகுதி அன்னென்பதி னகர நீங்க நின்ற னகரவொற் றடுத்து ஆதொண்டன் என்றாயது எனினு மமையும். இதனை, முதனிலை இறுதிநிலை இடைநிலை முதலிய பல்வகை யுறுப்புக்களிற் பல்வகை நோக்குடைப் பல்வகைப் பெயரும் செறிப்பிற் றிறப்பட நெறிப்படூஉம் வழக்கிற் பல்வகை விகாரத்தாற் செந்நிலைபெறாஉமென விதித்தவுணர் வுடையோ ருயர்நெறி வழக்கா லுய்த்துணர்க.

இங்ஙனம், ஆதொண்டனென்னும் பெயர் முதற்பொருண் முடிபு தன்முடிபிற் பெற்ற தல்லாழிற் பயனுறப்படூஉஞ் செய்பொருட் டன்மை யகப்பாட்டினும், உடைப்பொருட் பிறிதி னுரிமையுடைமைத் தன்மை புறப்பாட்டினும். உயர்பொருளடைச் சிறப்பிடப் பெயர் அவ் விருவயினும் பொருந்தநின்ற மண்டல மென்பதனோடு மருவும்வழி, மேல் வகுத்தவண்ணந் தன்னீறும் முதலுந் தொகுத்தலைப் பெற்றதென்க. அல்லதூஉம், முதலெஞ்சிநின்ற இப்பெயர் மண்டலத்தோ டணைந்த வழி விகுதி அன் எஞ்சி அம்முச்சாரியை பெற்று வருமொழி நோக்கி மகரமொழியத் தொண்ட மண்டலமென் றாயதெனினு மமையும். இதனை ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

அப்பெயர் மெய்கெடுத் தன்கெடு வழியு
நிற்றலு முரித்தே யம்மென் சாரியை
மக்கண் முறைதொகூஉ மருங்கி னான [1]

என்னுஞ் சூத்திர நோக்கத்தாற் காண்கவென்க.

ஆதொண்ட னென்பது தென்சொன்னோக்கு மண்டல மென்பது வடசொன்னோக்கு நம்முட் செறிவானெத்தவேனும் பாடையா னெவ்வாமைபெறலின் அங்ஙனம் பெருமை நோக்கியும், முன்னிலையாய அந் நிலைக்கும் பின்னிலையாய இந்நிலைக்கும் இலச்சினையாதல் நோக்கியும், விசேடண விசேடியச் செந்நிலைமரபு நோக்கியும் இங்ஙன முதலு மீறுந் தொகுத்தலைப் பெற்றதெனினும்; முதனிலை வண்ணவொற்றுமை, இசை யொற்றுமை, உருபொற்றுமை நோக்கியும், இறுதிநிலை சிறப்புநிலை இனவொற்றுமை நோக்கியுந் தொகுத்தலைப் பெற்றதெனினு மமையும்.

---

[1] தொல், எழுத்து, புள்ளிமயங்கியல், 55

இஃதின்னுங் கூறிற் பெருகும், ஆகலின் ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

> உணரக் கூறிய புணரியன் மருங்கிற்
> கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே [3]

என்னுஞ் சூத்திரக் கருத்தா னமைக வென்க.

அன்றி, ஆதிநாராயணன் புரம் - நாரணபுரம், ஆபூதன் மங்கலம்-பூதமங்கலம், பெரும்பற்றிநற் புலிப்பாதன் பூசித்தவூர் - பெரும்பற்றி நற் புலி பூசித்தவூர் - பெரும்பற்றப்புலியூர் - புலியூர் முதலிய பெயர்க் கோள்களையும்; புள்ளம் பூதன் குடி - பூதங்குடி, கொற்றன் குடி - கொற்றங்குடி, சாத்தன்குடி - சாத்தங்குடி, கொற்றன் மங்கலம்-கொற்ற மங்கலம், சாத்தன் மங்கலம் - சாத்தமங்கலம், வேடன் மங்கலம்-வேட்ட மங்கலம், வேடன் குடி - வேட்டங்குடி, சாத்தன் மங்கை - சாத்தமங்கை, விஜயன் மங்கை - விஜயமங்கை, கண்ணன் மங்கை - கண்ணமங்கை, கண்ணன் புரம் - கண்ணபுரம், கண்ணன் குடி - கண்ணங்குடி, சீராமன் விண்ணகரம் - சீராமவிண்ணகரம், வரகுணன் மங்கை - வரகுணமங்கை, ஐயைபுரம் - ஐயபுரம் முதலிய பெயர்க்கோள்களையும்; நந்தன் மண்டலம் - நந்தமண்டலம், சேரன் மண்டலம் - சேரமண்டலம், சோழன் மண்டலம் - சோழமண்டலம் முதலிய பெயர்க்கோள்களையும் பற்றாகக் கொண்டமைக வென்க. இதனைப் பிற்காலத்து மரூஉ வழக்கென்று கொள்வாரு முளராலோ வெனின், அங்ஙனம் கொள்வது மரபன்று; கொள்கினுங் கொள்க வென்க.

இத்தொண்டமண்டல மென்பது பல்வகைப் புணர்ச்சிக்கும் பல் வகை வழக்கியற்கும் இயற்பா டின்னோசை முதலியவற்றிற்கும் ஒத்த நிலை யென்க.

இங்ஙனமன்றி, தொண்டைமண்டல மென்பாரு முளராலோ வெனின்:—அங்ஙன மாறுபடக் கூறுவோர் நுண்ணிய அறிஞர் கண்ணிய நிலையும், மாற்றம் பொருளுறாஉ மாற்ற நிலையும், பல்வகைப் புணர்ப் பிற் செல்வகை நிலையுங், கடிபுகோ ணெறியின் முடிபுறாஉ நிலையும், இழுக்கறாஉம் பல்வகை வழக்கிய நிலையும், ஒருவாற்றானும் ஓர்ந் துணர்கிலராய்ப் போலியியனிலை கோலுநரென்க, என்னை? இலக்கண நுட்பங் கூர்ந்துய்த் துணர்தற்றன்மையுளரேல் அங்ஙனங் கூறற் கியை யாராகலின். அவர் சில வழூஉநெறி வழக்குப்பற்றிக் கூறுதன் மாத் திரைய ரன்றி விவகரிக்கக் கடவ ரல்லர்.

ஆயினும், அவர்க்கும், மற்றவர்க்கும் அவ்வழக்கு அழிவழக்கே யன்றி இழிவழக்குமாம் என்றுணர்ச்சி தோன்றற்கு யாமேஅ த்தலைத் கண் நின்று அவர்கூற்றாக விவகரித்து அதனை மறுக்கின்றாம் :—

[3] தொல், எழுத்து, புள்ளிமயங்கியல், 110

அவர் கூற்றுக விவகரித்தல் :— தொண்டைத் தழையானும் மலரானும் இயற்றிய மாலையணிந்தவன் ஆண்ட மண்டலமாகலின், தொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல் :— தொண்டைமண்டல மெனின், கொவ்வைத் தூற்றையுடைய மண்டலமென்றும் ஒருவாறு ஆதொண்டைத் தூற்றையுடைய மண்டலமென்றும் தெளிவின்றிக் கருதப்படுவதன்றித் தொண்டைத் தழையானும் மலரானும் இயற்றிய மாலையணிந்தவனு லாளப்பட்ட மண்டலமென்று கருதப்படுவதன்று.

அல்லதூஉம், சேரன் மண்டலம் - சேரமண்டலம், சோழன் மண்டலம் - சோழ மண்டலம் என்பனபோ லிம்மண்டலத்திற்கு, முன்னர் துண்டீரனு லாளப்பட்டமையின் துண்டீரன் மண்டலம் - துண்டீர மண்டலம், துண்டீரன் புரம் - துண்டீரபுரம் என்றும் ; பின்னர் தண்டகனு லாளப்பட்டமையின் தண்டகன் நாடு - தண்டகனாடு, தண்டகன் புரம் - தண்டகபுரம் என்றும் பெயர் வழங்கின. அவைபோல், அதன் பின்னர் ஆதொண்டனு லாளப்பட்டமையின், ஆதொண்டன் மண்டலம் - ஆதொண்டமண்டலம், தொண்டன் மண்டலம் - தொண்டமண்டல மென்றே மரபு வழுவாமை வழங்கல் வேண்டும். இதற்குப் பிரமாணம்

முக்கணனை் கண்ணா தர்க்கு முதன்மைத்துண் டீர னுண்டு
மிக்கதுண் டீரனாடாய்த் தண்டக வேந்தன் றுங்கித்
தக்கதண் டகனன் னடாய்த் தபனன்மா குலத்துச் சோழன்
றெக்கதார்த் தொண்ட மான்காத் தாயது தொண்ட னாடே.

இங்ஙனம் பல்காப்பியங்களினும் பலபிரபந்தங்களினும், பிரபல வித்துவான்களாக முன்னிருந்த ஔவையார் கம்பன் ஒட்டக்கூத்தன் முதலானோர்கள் பல்வகைக் காரணங் குறித்துச் செய்த பல்வகைச் செய்யுட்களினும், ஈண்டு முன்னும் பின்னும் வகுத்தமைக்குப் பிரமாணங்க ளிருக்கின்றன. அவைகளை விரிக்கிற் பெருகும். ஆகலின் அவற்றைத் தனித்தனி காண்டொறு மாங்காங் குணர்ந்தமைக.

அங்ஙனமன்றித் தொண்டைமண்டல மெனின், சான்றோர் வழித்தாய மரபுவழுவி மயங்குவதூஉமன்றிக் ''காஞ்சி விருக்க முடைமையான் அந்நகருடை வளாகத்திற்குக் காஞ்சிமண்டலமென்றுவழங்கிற்று; அங்ஙனமே, தொண்டைத்தூறுடைமை பற்றித் தொண்டைமண்டல மென்று வழங்கிற்று ; இஃதே துணிபு'' என்று திரிபு தோற்றும். அன்றித் தொண்டைத்தழையானும் மலரானும் இயற்றப்பட்ட தொங்கலணிந்த வோரரையனு லாளப்பட்ட மண்டலம் அவ்வரையனுக் குரிமை தோன்ற நிற்றலின்றிப் பரம்பரையானன்றி யிடைப்பாட்டாற் பெற்ற அத்தொண்டையை வேற்றுரிமையாகப் பெறற்கு எவ்வாற்றானும்

பொருத்தமின்று. இதனைக் கல்வியிற் சாதாரணத்தன்மையுடையோரும் "வாதராயண சம்பந்தத்தி னினம் போலும்!" என்று எள்குவர்; அன்றிக் "குமரியைக் கொண்டவனை விட்டுக் கூடவந்தவனோடு கூட்டி யனுப்பியது போலும்! என்றசதியாடுவர்; என்னின், கற்றுவல்லோர் முகப்பின் இஃதென்னும்? இதன்கண் உரிமைமலைவு, பொருண்மலைவு, மரபுமலைவு, வழக்குமலைவு, தகுதிமலைவு, உணர்ச்சிமலைவு, யூகமலைவு, நியாயமலைவு, கருத்துமலைவு முதலிய மலைவின் தொகையே புலப்படு கின்றன. ஆகலின், தொண்டைமண்டல மெனல் அமைவன்று; தொண்டமண்டல மெனல் வேண்டும்.

அவர் கூற்றுக விவகரித்தல்:—அஃதேல், அற்றன்று; பாண்டியன் மண்டலம் பாண்டிமண்டல மென்றாயதுபோல் தொண்டையன் மண்ட லம் என்பது விகுதி அன் கெட்டுத் தொண்டைமண்டலமென்றாயது; ஆகலின் தொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்:— பாண்டியன் மண்டலம் பாண்டிமண்டல மென்றாயது மரூஉவழக்கு. இஃதங்ஙனமன்று. மரூஉவழக்காயினும் பாண்டியென்பது குடிப்பெயர்க்கோளாய் அவ்வரையனையும் ஒற்றுமை யுரிமையால் அம்மண்டலத்தையு மன்றி வேறு குறித்தலின்றி நிற்றலின் அறிஞரா லமைத்துக் கொள்ளப்பட்டது. தொண்டைமண்டல மென்பதை மரூஉவழக்கி னமைத்துக் கொள்வோமெனின், இங்ஙனங் குறித்தலின்றிப் பல்வகையானும் வேறுகுறித்து வழூஉநிலையைப் பெறுகின்றது. என்னை? தொண்டைத் தழையானு மலரானுந் தொடுத்த தொங்க லணிந்தோனைத் தொண்டையன் எனின், பிற் காலத்தின் மக்கள் வரலாறுணராமையின் "பெருந்தொண்டையனைத் தொண்டையனென்று வழங்கினர் கொல்? அன்றிப் புழைக்கை யுடை மையாற் றும்பி முகத்தவன் கொல்?" என்றையுறுதற்கும், தொண்டு ஐயனென்று பிரித்து ஏற்றபெற்றி கோடற்கும், ஒருவாற்றாற் கேள்வி யுடையோருங் "கொவ்வைத் தழையிற்புனைந்த மாலை யுடையன்கொல்? ஆதொண்டைத் தழையிற் கிடத்தப்பட்டவன்கொல்?" என்றையுற்று மயங்குதற்கும் இடனாய்ச் சொல்வலி பொருள்வலி இன்னிசை வண்ண முதலிய சிதைவுற நின்று வழூஉநிலையைப் பெற்று மண்டலத்தோ டணைந்து ஐயம் மயக்கம் கவர்கோள் முதலிய இழுக்கினையேற்று வழுவினும் வழுவாய் நிற்றலானும்; இங்ஙனம் வழங்கல் அறிஞர் வழக்கன்றாகலானும் இதனை வழூஉநிலை யென்றாம். இஃது "உடற் றூய்மை கருதி நீராட்டுவந்து சென்று ஆண்டு அளற்றின் அழுந்திய தொக்கு" மென்று எள்குதற்கிடனன்றிச் சிறிது மமைத்துக்கோடற் கிடனன்று. ஆகலின், தொண்டைமண்டலமெனல் அமைவன்று; தொண்டமண்டல மெனல் வேண்டும்.

அவர் கூற்ருக விவகரித்தல் :— அற்றேல், தொண்டையென்பது ஆகுபெயராய் நின்று அரையனை யுணர்த்தி யுரிமைதோற்றி மண்டலத் தொடு புணர்ந்து தொண்டைமண்டல மென் ருயிற்று ; அதனல் தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல் :— இடைப்பாட்டி னியதி யியைபின்றி வந்த கடம்பூர் என்பது கடம்ப விருக்கத்தையுடைய ஊரென்று தன்னளவே புலப்படுத்துமன்றி ஆகுபெயராய்க் கடப்பமாலையைத் தரித்தவனூ ரென்று பிறிதளவு புலப்படுத்துவதின்று. என்னை? ஆகுபெயர் ஒன்றன்பெயரா னதற்கியை பிறிதைத் தொன்முறை யுரைப்ப தாகலின். அங்ஙனமே பரம்பரையானன்றி இடைப்பாட்டினியதி யியைபின்றிவந்த தொண்டைமண்டலத்தோடு புணர்ந்துழி தொண் டையையுடைய மண்டலமென்று தன்னளவுணர்த்து மன்றித் தொண்டையையுடையான் மண்டலமென்று பிறிதினள வுணர்த்தற் கோர்வகையானும் வலியின்று. இஃது '''யூகமின்றி ஒன்றுகுறித் தொன்றுவரைய வொன்றுபட்ட' தென்னு மூலக வழக்கி னினம் போலும்!'' என்றெள்குதற் கிடனும். ஆதலில் தொண்டைமண்டல மென லமைவன்று ; தொண்டமண்டல மெனல் வேண்டும்.

அவர் கூற்ருக விவகரித்தல் :— அற்றேல், தொண்டை யுடையனு லாளப்பட்டது தொண்டையென்று ஈறுகெட்டு ஐ விகுதி யேற்றுச் சிறப்புப் பெயராய் மண்டலத்தொடு புணர்ந்து அங்ஙனமாயிற்று. ஆகலில் தொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல் :— ஐயீற்றின் ஐகாரவிகுதி போந்து கெட்டுப் புணரிற் குறியீடின்மையிற் சிறப்பன்று ; இங்ஙனம் புணர்த்தல் இயற் பாடுமன்று ; அறிஞர் மரபுமன்று. அங்ஙனமாயினும் தொண்டையை யுடையதென் ருகுமன்றித் தொண்டை யுடையனு லாளப்பட்டதென் ெருருவாற்ருனு மாவதன்று. அன்றிச் சோழமண்டல முதலியவற்ருேடு முரணும். அங்ஙன மமைதியின்றிக் கூறினுஞ் சந்தியின்பத்தான் நாகை பட்டினம் நாகபட்டினமென் ருயதுபோல், தொண்டை மண்டலம் தொண்ட மண்டலமென் ருதலே வேண்டும். இதனை முன்னர் விலக்கியவற்றுட் காண்க. இஃது பலவகை யிழுக்கினுஞ் செல்வகைத்து. "இரும்பொற் பூண்டுரீ இச் சென்று கரும்பொற்றனை கை புகுத்தியதி னினம்!'' என்றெள்குதற் கிடனும். ஆகலில் தொண்டைமண்டல மெனல் அமைவன்று ; தொண்டமண்டல மெனல் வேண்டும்.

அல்லதூஉம், இங்ஙனம் தொண்டை யென்பது பல்வகைப் பொருட்கிடனுய பெயர்த் திரிசொல். ஆதொண்டை யென்பது தன்

னளவே யுணர்த்தும் பெயரியற்சொல். இங்ஙனம் திரிசொல்லாற் சிறப்புப் பெயர்க் காரணக் குறிசெய்தல் வழக்கறிந்தோர் மரபன்று. இயற்சொல்லாற் காரணக் குறிப்பெய ரமைத்தலே யவரது மரபு. இஃது ஆதொண்டச் சக்ரவர்த்தி யென்று வழங்கும் அறிஞர் வழக்கா லறியப்படும்.

அவர் கூற்ருக விவகரித்தல்:— அற்றேல், ஆதொண்டையன் என்பது மண்டலத்தோடு புணர்ந்துழி, முதலுமீறுங்கெட்டு அங்ஙன மாயிற்று; ஆகலின் தொண்டைமண்டல மெனல்வேண்டும்.

அதனை மறுத்தல்:—ஆதொண்டையன் எனின், தொகையின்பமும் இசையின்பமும் செறிவுகோளு மின்றிப் புல்லென்கையானும், சுருங் கியற் பேரின்பங் குறித்து முன்னும் பின்னும் தொங்கசெய்தமைத்த சான்ருேர் ஓரெழுத்தா னீட்டியற் பெயர்ப்பாற்படுத்தி முடிபுவழூஉச் செயற் கியையாராகலினும், இங்ஙனம் தொகுக்கப்படின் பொருளாட்சி முதலிய குன்றலின்றிச் செங்நெறியிற் பெரும்பயன்றரலானும், அங்ஙன மமைத்தல் வழூவேயாம். இஃது ஆதொண்டையன் சக்ரவர்த்தி ஆதொண்டயச் சக்ரவர்த்தி யென்னுது, ஆதொண்டன் சக்ரவர்த்தி ஆதொண்டச் சக்ரவர்த்தியென்று வழங்கும் அறிஞர் வழக்கா லறியப்படும்.

அவர் கூற்ருக விவகரித்தல்:— ஆண்டு ஆதொண்டைச் சக்ர வர்த்தி யெனின் வழூவென்னெனின்.

அதனை மறுத்தல்:— அங்ஙனம் பெறின், அவ்வரையற்கு ஆதொண்டையாற் காரணக் குறிப்பெய ரமைப்பான் கருதியவன்றே கருதியதாதல் வேண்டும். அங்ஙனமின்றிப் பின்னர் செங்கோன்மை ஆண்மை முதலிய வண்மையுடைமை பற்றி முகமனு வமைக்கப்பட்டது ஆகலின், வழூஉ இங்ஙனமென்க. ஈண்டு ஆதொண்டன் சக்ரவர்த்தி ஆதொண்டச் சக்ரவர்த்தி யென்பது 'புடைப்புள கன்னிப் பொற் குலேக்கண்ணே இடைப்பிள வியையா விரட்டைப்பழம்போன்' ருெரு பொருட் கிருவயி னெழூங் திடைப்பிளவறியாச் சிறப்பினப்பெயர். ஆதொண்டன் சோழன் ஆதொண்டச்சோழ னென்பதுமது. இதனை, தசரதன் சக்ரவர்த்தி - தசரதச்சக்ரவர்த்தி, நளன் சக்ரவர்த்தி - நளச்சக்ரவர்த்தி, புருரன் சக்ரவர்த்தி - புருரச்சக்ரவர்த்தி, சோழன் ராஜன் - சோழராஜன், சேரன் ராஜன் - சேரராஜன், பாண்டியன் ராஜன் - பாண்டியராஜன், சோழன் மஹாராஜன் - சோழமஹாராஜன் சைவன் சோழன் - சைவச்சோழன், குலோத்துங்கன் பாண்டியன் - குலோத்துங்கபாண்டியன், சோழன் மன்னன் - சோழமன்னன், சேரன் மன்னன் - சேரமன்னன் என வழங்கும் பல்வகை முடிபு வழக்குகளாற் றெளிந்தமையப்படும்; ஆகலின் ஆதொண்டனெனல் வேண்டும்;

ஆதொண்டையனெனல் இழுக்கு. இங்ஙனம் இழுக்காய ஆதொண் டையனென்பது முதலுமீறுங்கெட்டு மண்டலத்தொடு புணர்ந்து தொண்டைமண்டலமென் றுயிற் றெனினும், மேற்குறித்த பல்வகை வழூஉக்கட்கும் பேரிடனாகத் தக்கது. "'இடனறிந்து பிறண்டாத் தினவுண்ணி எரிவிற் புழுங்கிற்று' என்பதற்கும், 'கருத்தறியாமற் கலப்பான் புகுந்து அருத்த மிழுக்குமா' லென்பதற்கு மினம்!" என்று எள்குதற் கிடனாம். ஆகலில் தொண்டைமண்டல மெனல் வழூஉ; தொண்டமண்டல மெனல் வேண்டும்.

அவர் கூற்றாக விவகரித்தல் :— தொண்டைக்கா டுடைமையால் தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல் :— இங்ஙனம் தொண்ட மண்டல வரலாற்றை வகுக்குங் காப்பியத்திற் கண்டதேயன்று ; இவ்வாறுண்டென் றறிஞரா னிதுகாறியாங் கேட்டதூமின்று ; ஆகலின் வழூவாம். இஃது 'வழி யறியாக் கன்று குழிவழியாச் சென்' றென்பதற்கினம். இங்ஙனம் வழியறியாது மொழியினும், பொய்கூறினும் பொருந்தக்கூறுக வென்னு மிழிந்தோர் வழக்கின்கண்ணு மேற்புடைத்தன்று. என்னையெனின் காஞ்சி தில்லை என்னு மரப்பெயர்கள் ஒற்றுமை யுரிமை குறித்து காஞ்சியைக் கண்டு தில்லையை யடைந்தானென்று வழங்கப்படு கின்றன. அங்ஙனம் தொண்டையைக் கண்டு என்று எவ்வகை வழக் கினும் வழங்கப்பட்ட தின்றாகலி னென்க. இதனாலுந் தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

அவர் கூற்றாக விவகரித்தல் :— தொண்டைமான் என்னும் பெயருள் வேற்றரசரைய னிருந் ததிகரித்தமையின் தொண்டைமான் மண்டல மென்பது மான்கெட்டு அங்ஙனமாயிற்று ; ஆகலில் தொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல் :— இங்ஙனம் புணரினும், மேற்குறித்த வழூஉ நிலைகட்கிடனாம்.

அன்றித் தொண்டைமா னென்பதே வழூ. என்னை? தொண்டைமா னென்பது தனிமொழி தொடர்மொழி என்பவற்றுள் எம்மொழி? விடை :— தனிமொழி. வினா :— தனிமொழியாயின் இதற்கு முதனிலை இறுதிநிலை இடைநிலை என்னை? விடை :— தொண்டை - முதனிலை, ஆன் - கடைநிலை, மகரம் - இடைநிலையாம்.

அதனை மறுத்தல்:— என்னின் முதனிலைக்கும் இறுதிநிலைக்கும் இடைப்பாடொத்து நிற்பது இங்ஙனம் வரூஉம் பெயர்கட்கு இடை நிலை. ஈண்டு முதனிலையீற்று ஐகாரக் குறுக்கம் விலங்கிப் பொறுத்

திசைப்ப இடைப்பாடின்றி இறுதிநிலையோடு இணைந்து வேறு குறித் தலில் இடைநிலையி லமைவின்று. அன்னீறன்றி ஆனீறு ஆறிறந்தன்றி ஐந்திறந்தியையுந் தொடர்மொழிப் பெயர்க்கன்றி இங்ஙனம் உரித்தாவ தன்று, நயப்பாடின்மையின். ஆகலின் இறுதிநிலையியலும் அமைவின்று. விகாரத்தால் வேறு குறித்தலின் முதனிலையியலும் அமைவின்று.

அல்லதூஉம், இஃதிடைநிலையாயின், கோமான் என்பதற்கும் அங்ஙனம் இடைநிலையாகல் வேண்டும். அங்ஙனமாயின், கோ - ம் - ஆன் :— இவற்றுள், கோ - அரையன் என்னின், ஆன்விகுதி அதிகரிப் பின்றி மூங்கைபோலும் யானையுண்டகனி போலும் பெயர்ச்சியும் பயனு மின்றி வற்றன்மரனி னின்றது. ஆகலின் இஃது இங்ஙனமன்று; ஆகலின் அஃது அங்ஙனமன்று. இஃது 'கைபடலறியான் பொய்பட லொன்றோ' என்பதற்கினம். ஈண்டு, தொடர்மொழியாய்க் கோன்மன் - கோமான் என நிலைமொழி யீறு கெட்டு வருமொழி முதனீண்டது. இதனை வழுதிமன் என்னுங் காப்பிய வழக்கானுங் கண்டுணர்க. அன்றி, கோன் மஹான் - கோமான் என நிலைமொழி யீறு கெட்டு வருமொழி வடமொழியாதலின் விகாரம் பெற்றுக் கோமான் என்றாயது. அன்றி, கோன்மான் என நிலைமொழி யீறுகெட்டுக் கோமானென்றாயது. இங்ஙனமே தொண்டன்மன் - தொண்டன்மஹான் - தொண்டன்மான் என்பன தொண்டமானென் றாயது. மன் மஹான் மான் என்பவைக்குப் பெருமையுடையவ னென்பது பொருள். ஆகலின், தொண்டைமானெ னல் வழு ; தொண்டமா னெனல் வேண்டும். இங்ஙனமே சேரன்மான் - சேரமான், மலையன்மான் - மலையமான் முதலியவுங் காண்க. ஆக லின் மண்டலத்தோடு கூடிய வழி தொண்டமண்டல மெனல் வேண் டும். அன்றி, தொண்டனாடெனல் வேண்டும்; தொண்டை நாடெனல் வழூஉ. என்னை? சேரன் நாடு - சேரனாடு, சோழன் நாடு - சோழனாடு, பாண்டியன் நாடு - பாண்டியனாடு, மலையன் நாடு - மலையனாடு என்பது போல், தொண்டன் நாடு - தொண்டனாடு எனல் மரபு. ஆகலின், தொண்டனாடு எனில் அடியனென்ன முதல் வேறு குறிக்குமே யெனின், அங்ஙனங் குறிப்பதில் ஆற்றலுமின்று பயனுமின்று. என்னை? ஆவென் பது கரணவிடயமாக நின்று உரியானைக் குறிக்கின்ற தாகலின் ; அன்றி, உடையானையன்றி உடைமைகுறித்தலின்றாகலி னென்க.

இங்ஙனம் பல்வகையாற் சொல்வகை செய்தலென்? தொண்டை மண்டல மெனின் மேற்குறித்த வண்ணம் உரிமைமலைவு, பொருண் மலைவு, மரபுமலைவு, வழக்குமலைவு, தகுதிமலைவு, உணர்ச்சிமலைவு, யூகமலைவு, நியாயமலைவு, கருத்துமலைவு, ஐயம், கவர்கோள், மயக்கம், வேற்றுக்குறிப்பு, வேற்றுரிமைநிலைமை, நியதியின்மை, இயைபின்மை, சொல்வலிச்சிதைவு, பொருள்வலிச்சிதைவு, பொய்க்கோள், அனர்த்தம்,

இன்னிசைவண்ணச்சிதைவு, பிளவுபாடு முதலிய பல்வகை வழுக்கட் கிடனும்.

அன்றி, ஆதொண்டை என்பதன் ஈற்று ஐகாரக் குறுக்கம் குற்றலகே பெற்றது. தொண்டை என்பதன் ஈற்று ஐகாரக் குறுக்கம் குற்றலகோடு ஒற்றலகு பெற்றது. என்னை? ஆதொண்டை: ஆ - தொண் - டை: ஈரலகு - ஓரலகு - அரையலகு - முதலிடைப் பாடு இருகலை - நடுவிடைப்பாடு காற்கலை - கடையிடைப்பாடு முக் காற்கலை ஆகலின், ஆதொண்டைஈற்று ஐகாரக் குறுக்கம் குற்றலகே பெற்றது. தொண்டை: தொண் - டை: ஓரலகு - அரையலகு - முன்னிடைப்பாடு காற்கலை - பின்னிடைப்பாடு அரைக்கலை ஆகலின், தொண்டை ஈற்று ஐகாரக் குறுக்கம் குற்றலகோடு ஒற்றலகும் பெற்றது. இங்ஙனம் தொண்டை மண்டலத்தோடு புணருங்கால், மண் - ட - ல - ம்: ஓரலகு - அரையலகு - ஓரலகு - அரையலகு - நான்கிடைப் பாடு: கால் - கால் - அரை - அரை பெற்று வேற்றிசை விரவி நிற்றலின், புணர்ச்சியிடை ஐங்கலையைப் பெற்றுப் பிரிந்து வேறு குறிக்கின்றது ஆகலினும், தொண்டை மண்டலமெனல்வழு; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

இங்ஙனம் பெயர்க்கோள்கட்கு இயற்சொற்பெயர் முதலிய, சொல்விரிப்பெயர் முதலிய, செஞ்சொற்பெயர் முதலிய, சாதிக் கூற்றுப் பெயர் முதலிய, ஒருமொழிப்பெயர் முதலிய, உயர்திணைப் பெயர் முதலிய, பாற்பெயர் முதலிய, பொதுவிற்பொதுப்பெயர் முதலிய, தன்மைப்பெயர் முதலிய, வழக்குப்பெயர் முதலிய, வெளிப்படைப்பெயர் முதலிய, வரையியனடைப் பெயர் முதலிய, உயருரிமைப்பெயர் முதலிய, சிறப்புநிலைப்பெயர் முதலிய, சித்துப்பொருட்பெயர் முதலிய, இடுகுறிப்பெயர் முதலிய, மரபு நிலைப்பெயர் முதலிய, எழுத்துத் தொடர்ப்பெயர் முதலிய, பொருணிலைப்பகுபதப்பெயர் முதலிய, பெருஞ் சொல்லாட்சிப்பெயர் முதலிய, முதனூல்வாய்பாட்டுப்பெயர் முதலிய — இவைமுதற் பெயர்ப்பாகுபாடுகளின் இலக்கணங்களும்; எழுத்துப் புணர்ச்சி, பதப்புணர்ச்சி, தொடர்புப்புணர்ச்சி, பொருட்புணர்ச்சி, வண்ணப்புணர்ச்சி, அளபுப்புணர்ச்சி, இயைபுப்புணர்ச்சி, சமநிலைப் புணர்ச்சி, கலவைப்புணர்ச்சி, தெரிநிலைப்புணர்ச்சி, குறிப்புப்புணர்ச்சி, வேற்றுமைப்புணர்ச்சி, ஒற்றுமைப்புணர்ச்சி, சிறப்புடைப்புணர்ச்சி, பொதுவுடைப்புணர்ச்சி, இருமைப்புணர்ச்சி முதலிய புணர்ச்சி இலக்கணங்களும் கூர்ந்துணரார்க்குத் தொண்டமண்டல மென்பதின் இலக்கணமும் புலப்படுவதன்று.

இங்ஙனம் உணரமாட்டாதார், ஆதொண்டச் சக்ரவர்த்தி என் பவர் தாம் அரசு செய்யுங் காலத்தில் தம்மாற் கட்டுவித்த ஆலயங்களில்

தம் பெயரிலச்சினை சிலையின்கண் பொறிப்பித்தனர். ஆண்டும் ஆதொண்ட என்றே இலக்கண அமைதி பெற்றிருக்கின்றது. இதனை, திருவலிதாயம் திருமுல்லைவாயில் முதலிய சிவதலங்களிற் சென்றேனுங் கண்டு தெளியக் கடவர். இஃதின்னுங் கூறிற் பெருகும்.

தொண்டமண்டலமென்பதைத் தொண்டைமண்டலமென்று இச் சென்னை நகரிலிருக்கின்ற வித்துவான்களிற் சிலர் மாறாக வழங்க, அது குறித்துச் சில பிரபுக்களும் வித்துவான்களும் உபாத்தியாயர்களும் "இவ்விரண்டில் இலக்கணவமைதியும் உலகவழக்குமுள்ளதுயாது? அதனை யொருவாறு தெரிவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்ட படி, **சிதம்பரம் இராமலிங்கபிள்ளை யவர்களாற்** றெரிவிக்கப்பட்டது.

நூற்பெயர் இலக்கணம் முற்றிற்று

2 வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை

வழிபடு கடவுள் வணக்கம்

ஆசிரிய விருத்தம்

கொண்டலை நிகர்க்கும் வேளாண் குடியொடு தழீஇய தொண்ட
மண்டல சதகந் தன்னை வளமையான் வகுப்ப தற்குப்
புண்டர நுதலி ரண்டு புயமிசை யிருந்தி ரண்டு
குண்டல நிகரி ரண்டு குமரரை வணக்கஞ் செய்வாம்.

கொ ... ம்: இச் செய்யுள் — வியனுறுமெதிரதூஉம், வீழாக் கொடையும், பயனுறூஉந்தொழிலும், பழியாப்பண்பும், வாய்மையும், அறிவும், மாஅண்பும், ஆண்மையும், தூய்மையும், பொறையும், தோஒற்றமும், அன்பும், உளங்கொள் இரக்கமும், ஒழுக்கமும் முதலா விளங்கு விழுக்குடி வேளாண்குடியே இத் தொண்டமண்டலத் திற் பெரும்பாலும் இறைகொளப்பட்டுத் தம் வளமையான் ஈண்டு றூஉம் மற்றைக் குடிகட்கும் இம்மண்டலத்திற்கும் வளமை தோற்றிற்று அஃது நெறிப்பானுஞ் செறிப்பானுந் தோன்ற வழிபடுகடவுட் பராஅய்ப் புலப்படுத்துவ லென்று புகுந்தமை யுணர்த்துகின்றதென்க.

எங்ஙனமெனின், "கொண்டலை நிகர்க்கும் வேளாண் குடியொடு தழீஇய தொண்டமண்டல சதகந்தன்னை வளமையான் வகுப்பதற்குக் குமரரை வணங்குவாம்" என்றது உய்த்துணர்க வென்க. இஃது வற்புறுத்தற்கு வேளாண்குடியை அளவை முகத்தான் வெளிப்படை யின் விளங்கவைத்து மற்றைக்குடிகளை வேற்றுரு பொடுவிற் பரா முகத்தாற் குறிப்பின்கட் சார்த்தி வைத்ததே யமையுமென்க. விளங்கு

விழுக்குடி. வேளாண்குடி யென்றதனலன்றே அங்கையிற்கனிபோன் றிங்ஙனம்பெற்றும்.

அஃதீண்டு எற்ருற் பெறுதுமெனின், கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி என்றதனுற் பெறுது மென்க. எங்ஙன மெனின், கொண்டலை - பருவப்புயலை, நிகர்க்கும் - ஒக்கும், வேளாண்குடி - வேளாண்குடிப் பிறப்பினர் எனவே: வேளாண்குடிப் பிறப்பினர் கைம்மாறு கனவிலுங் கருதலின்றி வரையாது வழங்கும் வள்ளற்றன்மை யுடையாரென்றும்; எவ்வாற்ருன் உயர்ந்தோர்கட்குந் தம்மையன்றி உலகியல் நடத்தப்படாச் சிறப்புடைக் கருவியாந் தன்மை யுடைய ரென்றும்; இங்ஙனம் வையகத்தார்க் கன்றி வானகத்தார்க்குங் குன்ரு நன்றி குயிற்றுநரென்றும்; தம்மானே யன்றித் தங் கருவியானுங் கருமத்தானும் எவ்வெவ் வளாகத்து எவ்வெவ் வுயிர்கட்கும் இன்பந் தரூஉம் இயலினரென்றும்; ஆன்ற கல்வி, ஊன்றுகேள்வி, சான்ற வுணர்ச்சி, ஏன்ற ஒழுக்கம் முதலிய உயர்நெறிக் குன்றத் தும்பரிம்பர் பல்காற்பயிலுறும் பாங்கினரென்றும்; தொன்னெறி யரையர்க்குத் துணைவராகிப் பகைப் புல னடுங்கிய படர்ந்தெதிருறீஇ வாய்விட் டார்த்து வாள்புடை பெயர்த்து விற்புடைத்தழீஇப் பொறபொடு பெய்யு மாண்மைய ரென்றும்; தண்ணளி யுருக்கொடு தாங்கிச் செங்கோ னிலைபெறச் செய்யுந் தலைமைய ரென்றும்; எத்திறத்தவரும் எதிர்கொடு பராஅய்ப் பற்பலதிறப்படூஉம் பரிசிற்பழிச்ச உயரிடத் தோங்கிய பெயருளரென்றும்; கடவுளாணையிற் கடவாச்செறிவும், யாவரு மதிக்கும் ஏஎருடைமையும், புலவராற் புனையும் புகழின் ஈட்டமும், களக்கறும் ஒண்மையும், விளக்குறு பசுமையும், பொய்யா மாற்றமும், போக்கறு தோற்றமும், இன்சுவை நிறைவும், எத்திற நலனும் உடையரென்றும் உவமைக் குறிப்பாற் பெறப்படுதலின் இங்ஙனமென்க. ஈண்டு வகுத்தவை கொண்டலின்கண்ணும் உய்த் துணர்ந்துகொள்க. இஃது வகுத்ததன்றி விரிப்பிற் பெருகும்.

இனி, கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி என்பதற்குக் கொண்ட்ல் - கொண்டலை நடாத்தும், ஐ - தலைவனுகிய இந்திரனை, நிகர்க்கும் - ஒத்த, வேளாண்குடி - வேளாண்குடிப்பிறப்பினர் எனினுமமையும். இங்ஙனம் பெறுங்கால், வேளாண்குடிப் பிறப்பினர் தமது நல்லொழுக்கம் என்னும் ஆணையாற் கொண்டலை ஆங்காங்குப் பெய்வித்து நடத்தலும், ஐவகைத் திணையினும் உய்வகைத் திணையாய மருதத்திணையை வளம்படுத்துக் காத்தலும், வேளாண் வேள்விக்கு வேந்தராதலும், வீழாதுதரூஉம் வேளாண்மைக்குரிய கருவியை யுடையராதலும், யாவரானும் விரும்பப்படூஉம் இயற்கையராதலுங் கொள்க. ஈண்டு வகுத்தவை இந்திரன்மாட்டும் உய்த்துணர்க. இஃதும் விரிப்பிற் பெருகும்.

அன்றி, கொண்டல் என்பது இலக்கணையால் காவற் கடவுளாய விண்டுவாகக் கொண்டு அக்கடவுளை ஒத்த வேளாண்குடி யெனினும் அமையும். இங்ஙனங் கொள்ளுங்கால், வேளாண்குடிப் பிறப்பினர் நடுநின்று எவ்வெவ்வுயிர்க்கு நுகர்ச்சி வருவித்தலும், பகைப்புலன் முருக்கிப் பாதுகாத்தலும், திருவிற் பொலிந்த சிறப்புடைய ராதலும், இன்சுவை யமுதம் இரந்தோர்க் கீதலும், பூமகட்கு உரிமை பூண்டு நிற்றலும், சத்துவத் தனிக்குணத்தானே பயிறலும், ஊக்கமுஞ் செவ்வியும் உடையராதலுங் கொள்க. ஈண்டு வகுத்தவை விண்டுவின் மாட்டும் உய்த்துணர்க. இஃதும் விரிப்பிற் பெருகும்.

கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடியென விரியுவமையின்கண் உவமவுருபன்றி ஐயுருபும் விரித்தது இங்ஙனம் விரிப்பதற்குக் குறியுணர்த்த வென்க. உவமைக்கும் பொருட்கும் ஒரு நோக்கத்தானன்றிப் பலபட வகுத்த தெற்றாலெனின், உவமைப் பொருள் புகழ் பொருண் மிகை குறித்தழுக்கற்று முரணுதற் குறியா நிகர்க்குமென்னுந் தடுமாறுவமவுருபு விரித்தமையின் என்க. என்னை? ஆசிரியர் தொல்காப்பியர் உவமவுருபுகளை வகுத்து முடிபுசெய்யுமிடத்து, "கடுப்ப வேய்ப்ப"[4] வென்னுஞ் சூத்திரத்தா னிகர்ப்ப வென்பது மெய்யுவமவுருபென்று வகுத்த வண்ணம் அவ்வுருபு ஈண்டஃதேலாது தொழில் பயன் முதலிய வேற்றதாகலின். அஃதேல் இஃதுயாண்டும் வரைதலின்றோ வெனின் "தடுமா றுருபுக டாம்வரை யின்றே"[5] யென்பவாகலின் விரும்புமிடத் தின்றென்க. அன்றி இஃதழுக்கற்று முரணுதற் பெயர்ச்சிக்கட் போந்த வெச்சம் போறலின் அங்ஙனங் குறிக்க வைத்த தெனினு மமையுமென்க. இவ்வுவமை நோக்கைச் "சுட்டிக் கூறா"[6] வென்னுஞ் சூத்திர நோக்கத்தானுங் காண்க. உவமையும் பொருளு மொத்தல் வேண்டு மென்றவாறு ஒத்த வண்ணம் உய்த்துணர்க. அன்றி உவமப்போலி மறுக்கப்படா வாகலின் ஈண்டு அவற்றுள்ளும் ஏற்பன விருப்பினும் இழுக்கின் றென்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

---

[4] கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய
வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென்
றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்.
- தொல், பொருள், உவமஇயல், 15

[5] தடுமா றுவமங் கடிவரை யின்றே.
- தொல், பொருள், உவமஇயல், 35

[6] சுட்டிக் கூறா வுவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே.
- தொல், பொருள், உவமஇயல், 7

கொண்ட லென்பது விரவு மிகையொலிக் காப்பிய வழக்குத் தொடரியற் பால்பகாவஃறிணைப் பல்பொருள்குறித்த வொரு பெயர்த் திரிசொல். ஈண்டுச் சிறப்புய ருரிமைக்கருவி அவயவப் பொதுநிலைப் பூதப்பொருட்டாகிய மேகத்தை யுணர்த்திற்று.

வேளாண்குடி யென்பது உயர்நிலைக் காப்பிய வழக்குச் சொன்னடைச் சிறப்பு முன்னிலைக் காரணம் பின்னிலை யிடுகுறிச் சாதிக் கூற்றுத் தொடர்நிலை கருத்துப் பொருட்புறத் துயர்திணைக் காட்சிப் பொருட் பன்மைத் தோற்றத் தன்மொழித் தொகைச் சொற்றொடர். இதனை வேளாண்மைக்குரிய குடிப்பிறப்பினரென்று விரித்துக்கொள்க. வேளாண்மை நன்றி ஈகை வேளாண்டொழின்மை முதலிய பல்பொருள் குறித்த வொருசொல். அஃது வேளாண் டொழி லுடைமையா னன்றி ஈகை முதலிய நற்செய்கை யுடைமைக்கு முரியவோர் குடிப்பண்பா யிற்று. குடியென்பது குலம் ஊர் முதலிய குறித்தவோர்சொல். அஃதீண்டு குலத்தின் மேனின்றது. அன்றி மருதத்திணையூ ரென்பது மொன்று. வேளாண்டொழில் என்பதில் வேள் என்பது நன்னிலம், ஆண் என்பது உரிமைத்தலைமை, தொழில்என்பது முயன்றுமுடித்தல். இதனால் நன்னிலந் திருத்திச் செந்நெறி பொங்கப் பைங்கூழ் விளைக்கு முரிமைத் தலைமைத் தொழில் என்பது பெறப்பட்டது. அல்லதூஉம் வேள் என்பது விரும்பப்படுகை, ஆண்டொழில் - ஆண்மைத்தொழில். இதனால் அரையரால் விரும்பப்படூஉம் மந்திரித்தலைமை சேனைத் தலைமை யென்னும் ஆண்மைத் தொழிலுடையோ ரென்பதூஉம் அமையுமென்க. இதனையுடைய குடிப்பிறப்பினர் வேளாண்குடிப் பிறப்பினர் வேளாளரென்க. இவ்வேளாண்குடிப்பிறப்பினர் ஈகை முதலிய நற்செய்கைகளின் மிக்கா ரென்பதற்கு வேறு கூறவேண்டுவ தின்று. இவர் குடிப்பெயரே தக்க சான்றென்க. அன்றி அந்தணர் அரையர் வணிகர் முதலியோர் தத்தமக்குரிய ஒழுக்கங்களை நடத்தற்கு வேளாண்குடிப் பிறப்பினரது உதவி முற்றும் வேண்டுதலின், இவர் நெறி பெருநெறி யென்பதற்கு மஃதே சான்றென்க. இதனைத் தொல் காப்பியத்தில் "நாற்றமு"[7] மென்னுஞ் சூத்திரத்துள் "வேளாண் பெருநெறி" யென்றதனாற் காண்க. அன்றி யிவர்க் கித்தொழிலுரிமைச் சிறப்பென்பதூஉம் இவரது மேம்பாட்டுத் தன்மையையு மரபியலிற்[8] காண்க. இதனை விரிக்கிற் பெருகும்.

வழிபடு கடவுள் வணக்கப்பாட்டுரை முற்றிற்று.

---

[7] தொல், பொருள், களவியல் 23

[8] தொல், பொருள், மரபியல் 80 ; 81

வேளாண் மாந்தர்க் குழுதூணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப அவர்பெறும் பொருளே.

3. "உலகெலாம்" என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம்

1. மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் ஆமாறு

திருச்சிற்றம்பலம்

இஃது உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என்பது எங்ஙனமெனின் :— திருவருளின்பத்தை அங்கைக்கனியிற் பெற்ற பெரியரையும் அத் திருவருளையும் வாச்சிய லக்ஷியமாகக் கொண்ட பெரிய புராணத்தில் தெய்வத் தற்சிறப்புச் செந்தமிழ்ச் செய்யுட்கண் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் எடுத்துக் கொடுக்கப்பட்ட உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன் என்னும் மெய்ம்மொழியினது பொருள்விளக்க மாகலின் மெய்ம்மொழிப்பொருள் விளக்க மென்றாயிற்றென்க.

இதனை மெய்ம்மொழி என்றது என்னையெனின் :—உணர்ந்தோர், இழிகுண ஆங்கார மொழியாய மனிதர் மொழியினும் சமகுண ஆங்கார மொழியாய தேவர்மொழி மெய்ம்மொழி என்பர் ; அதனினும், உயர்குண ஆங்கார மொழியாய முனிவர்மொழி மெய்ம்மொழி என்பர்; அதனினும், இயல்புப் பிரகிருதி மொழியாய அரிபிரமாதியர் மொழி மெய்ம்மொழி என்பர் ; அதனினும், சுத்தாசுத்தமாயா மொழியாய உருத்திராதியர் மொழி மெய்ம்மொழி என்பர். இங்ஙனமன்றி, மொழித்திறன் தெரிந்து முடிபு முற்றுணர்ந்தோர் அபரவயிந்துவப் பிரணவமொழியாய சதாசிவாதியர் மொழியே மெய்ம்மொழி என்பர் என்னின் இவ்வபரவயிந்துவப் பிரணவமொழிக்கு உபாதான உபகரண அதிகரண வியாபக சித்தமாய் சுத்த வியோமாகாரமாய் விளங்குகின்ற திருவருட் பரவயிந்துவத் துரியத் திருவாக்கான் மொழிந்த உலகெலாம் என்னு மொழியை மெய்ம்மொழி யென்றல் இறும்பூதன்றென்க. வேறு இயைபியல் அடையொன்று வழக்கின்கண் இன்மையிற் கூறியதன்றி இஃதோ ரியைபியல் அடையுமன்றென்க.

இதனைத் திருவருட் பரவயிந்துவத் துரியமொழி என்றது எங்ஙனமெனின் :—சுத்தமுதலிய மாயாகாரிய ஆகாயங்களினன்றி, நாதாதீதமாய், சிதாகாசமென்று வேதாகமங்களால் மீக்கூறப்பட்ட சிற்சபைக்கண் தோன்றிய மொழியாகலின் அங்ஙனங் கூறியதென்க.

ஆயின் இவ்வடைமொழிப் பொருட்டுணிபு என்னையெனின் :— வாச்சியப் பொருளாங்கால் மெய்ம்மையை யுடைய மொழியென்று வேற்றுமை வழியான் விரித்து அபரவயிந்துவப் பிரணவமொழிக்கும்,

லக்ஷியப் பொருளாங்கால் மெய்ம்மையாகிய மொழியென்று அல்வழி யான் விரித்து திருவருட் பரவயிந்துவத் துரியமொழிக்கும் இயைபு கோடல் துணிபென்க.

இங்ஙனம் வாச்சிய லக்ஷியமொழி வரலாறென்னை யெனின்:— மனிதர், தேவர், முனிவர், அரிபிரமர், உருத்திராதியர் மொழியாய ஆங்காரமொழி, பிரகிருதிமொழி, மாயைமொழி என்பவை அசுத்த மும் சுத்தாசுத்தமுமாகிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரண வைகரியாதி நான்கு வாக்கின் காரியமொழி யாகலின் மெய்ம்மொழியன்றென்க. சதாசிவாதி மொழியாகிய பிரணவமொழி சுத்த சத்தார்த்தப் பிரபஞ்ச காரணமாகிய அபரவயிந்துவ காரியமொழி யாகலின் வாச்சிய மெய்ம்மொழி யாயிற்றென்க. பரசிவ மொழியாய திருவருள்துரிய மொழி, துரிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரணமாய்ச் சிற்சத்தி பரவிந் துவிற் பதிதலான் நாதமாத்திரத்தினுண்டாய மொழியாகலின், லக்ஷிய மெய்ம்மொழி யாயிற்றென்க.

இஃது மெய்ம்மொழி என்பதைப் பெரியபுராணத்துள்

அருளி னீர்மைத் திருத்தொண் டறிவருந்
தெருளி னீரிது செப்புதற் காமெனின்
மருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய
பொருளி னாகு மெனப்புகல் வாமன்றே

என்ற செய்யுளுள்ளுங் காண்கவென்க.

இஃது அபரவாக்கிய விவகாரமன்றாகலின் விசேட இலக்கணம் இயற்பட விரித்திலம் என்க.

இம் மெய்ம்மொழிப்பொருள் விளக்கத்தின் எல்லை எங்ஙன மெனின்:—யோகாந்த கலாந்த நாதாந்த போதாந்த வேதாந்த சித்தாந்த மென்னும் சடாந்தானுபவ சாத்தியர்களும் அவற்றைவிரும்பி அவ்வழிக்கண் நின்ற சாதகர்களும் அந்தரானுபவ திட்டாந்தமாக உபாசிக்க விளங்குகின்ற சிதம்பர ராசியத்தைக் குறிக்குஞ் சிற்சபைக் கண்ணே, சேக்கிழா ரென்னுந் தெய்வப் புலவர் பொருட்டு இறைவர் பரமாகாய வாக்கான் மொழியப்பட்டுச் சமரசானுபவ சாட்சாத்கார மாய் ஆநந்தத்தினு நடிக்கின்ற சிதம்பர நடனத் திருவருட் பதத்தை வாச்சிய லக்ஷியமாகக் கொள்ளப்பட்டதாகலின், சடாந்த சமரச லக்ஷியப் பொருளெல்லையை யுடையதென்க.

இனி உலகெலாம் என்பதன் மட்டன்றி, உணர்ந்தோதற் கரியவன் என்ற தொடர்காறும் அத்திருவருட் பரவயிந்துவத் துரியத் திருவாக் கின் எழுந்த மெய்ம்மொழி என்று ஐயமறக் கொள்க வென்க. எங்ஙன

மெனின் :—திருவருட்புலமைசான்ற சேக்கிழாரென்னும்பெரியர்செயற் கரிய என்று அரையன் பணித்தவாறு அடுத்த கருவிகள் முறைப்பட ஒன்றேனுமின்றி முடித்தற்கு எங்ஙனங் கூடுமென்று ஐயுற்று அழுங்கிய உள்ளத்தோடு அருட்பொதுவின்கண் போந்து பணிந்து பழிச்சித் திரு வருட் பெருமையைச் சிந்தித்து நிற்ப, ஆண்டு இறைவர் அவர் கருதிய பெருஞ்செயல் முடித்தற் பொருட்டு உளங்கொண்டு சிற்சபைக்கண் புறத்து உலகெலாம் என்றும் அவரகத்து அங்ஙிலைக்கண் உணர்ந்தோ தற்கரியவன் என்றும் மொழிந்தருளியவா றென்க.

அங்ஙனமொழிதற்கு இயைபு எங்ஙனமெனின் :—உலகெலாம் என்பது பல நோக்குடைப் பெருமொழி யாகலின் எந்நோக்கங் கருதி மொழிந்தனர் இறைவர் அந்நோக்கம் அவரறிந்தே முடித்தல் வேண்டும், மற்றையர் முடித்தற்கு அணுத்துணையுங் கூடா. அன்றித் திருவருள் துரியத் திருவாக்கில் எழுந்த பயனிலைமுற்றுக் குறைமொழியை மற்ற வாக்கான் முடித்தற்கு இயைபு எவ்வாற்ருனும் இறைத்தணையு மின்று. அன்றி, சிவசுதந்தரச் செயற் குறையைச் சீவ சுதந்தரத்தான் முடித்தலுங் கூடா. அன்றி இதுகாறும் இறைவர் அருள் வடிவாற் பக்குவர்கட்கு உபதேச முதலிய திருவாக்களித்தவற்றுள் இங்ஙனம் குறைமொழி யளித்ததின்று. அங்ஙனம் அளித்தல் அத்திருவருட்டுரியத் திரு வாக்கின் இயலுமன்று. ஆகலினென்க.

ஆயின் ஓரிடத்தே மொழியாது அகத்தும் புறத்தும் மொழிந்தது என்னையெனின் :—அக்காலை அருட்பொதுவின்கண் நின்ற அந்தணர் அறவோர் முதலிய பலரும் அவர்வழி மற்றையோரும் சேக்கிழாரென் னும் பேரிற் சிறந்த பேரறிவுடைய பெரியர் திருவருட்டுணையால் இப் பெருங் காப்பிய முடித்தனர். இஃது மாயைத் துணையால் தேவர் முனிவர் மனிதர் இயற்றிய மற்றைக் காப்பியங்கள் போல் எளிதன்று என்று அன்புகொண்டு அனுபவித்து உய்தற்பொருட்டும் அம் மெய்ம் மொழியைக் கேட்டுச் சேக்கிழாரது புறக்கரணங்கள் சுத்தியர்தற் பொருட்டும், புறத்தே உலகெலாம் என்றெழுந்து தத்துவ படலத்தால் மயங்கிய அவரது ஆன்மதிருட்டியைப் படல நீக்கி அறிவு விளக்கிச் சுத்தி செய்தற் பொருட்டு அகத்தே உணர்ந்தோதற் கரியவன் என்று முடிந்த தென்க.

ஆயின் அகத்தும் புறத்தும் மொழிதற்கு அளவை எங்ஙன மெனின் :—திருவருட் பரவயிந்துவத் துரியமொழி புறத்தே எழுந்து அகத்தேநிறைந்தது சுத்திசெய்தற் கருணையான் வாயுப்போல என்னுஞ் சுதன்மியமாகிய இக்கருதல் வியாத்தியால் அறிகவென்க. என்னை யெனின் :—பொருட்புலப்பாட்டின்கண் சிற்சத்தியானது பரவிந்து விற் பதிதலும் அதனல் அதன்கண் நாத முண்டாதலும் உண்மை

யாதலின் பக்கமும் பக்கத் தன்மையும் பெறப்பட்டன. வரலாற்றுப் புலப்பாட்டின்கண் அகத்தும் புறத்தும் சுத்திசெய்தற் கருணையானன்றி அம்மொழி தோன்றுதாகலின் சிதைக்கப்படா அளவைத்திறன் பெறப் பட்டது. உறழ்ச்சிப் புலப்பாட்டின்கண் நேர்ச்சிப்பொருள் வான் புறத்தெழுந்து அகத்து நிரம்புதல் எங்ஙனம் அங்ஙனந் திருவருட் பர வயிந்துவப் புறத்தெழுந்து வாக் ககத்து நிரம்புதல் கூடுமாகலின் அளக்கப்படுகை மாறுபடாமை பெறப்பட்டது. ஆகலில் அசம்பவம் அவ்வியாத்தி அதிவியாத்திகளு மின்று. இதனல் வியாத்திமுறை காண்கவென்க.

இனி இம்மெய்ம்மொழிக்குப் பொருள் விளக்கஞ் செய்யுமிடத்துக் சாட்சியும் கருதலும் இன்றியும் உரையளவையும் வேண்டுங்கால் வேதா கம முதலிய குறித்தல் வேண்டுமாலெனின், குறித்தல் வேண்டா. என்னை யெனின் :—

இங்ஙனம் வருணசிரம மானத்தாற் பந்தப்பட்டு எகதேசத்தான் வழங்குகின்ற வேதம், வருணசிரம மானத்தாற் பந்தப்படாது யாண்டும் பூரணத்தான் வழங்கும் மெய்ம்மொழிக்குப் பிரமாணமாகா வென்க. அன்றியும், வேதங்கள் ஓர் காலத்தில் உருத்திரனலும், வேறோர் காலத்தில் விண்டுவாலும், பிறிதோர் காலத்தில் பிரமனலும், மற்றோர் காலத்தில் பராசரன் வியாசன் முதலிய முனிவராலும் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பலவாறு விகாரப்படுகின்றனவாய்; தாதுக்கள், பிரத்தியயங்கள், பிராதி பத்தியங்கள் முதலிய இயலுறுப்பும், வர்ன்னம், பதம், ஜடை முதலிய இயல் விசேடவுறுப்பும், உதாத்தம், அநுதாத்தம், சுரிதக முதலிய இசையுறுப்பும், சிக்ஷை, கற்பம், வியா கரணம், நிருத்தம், சோதிடம், சத்தம் முதலிய அங்கவுறுப்பும் ஆயுள் நூல், தநுநூல், காந்தருவ நூல் முதலிய உபவுறுப்பும் உடையன வாய்; பஞ்சப்பிரம்ம மந்திரம், தத்துவத்திரய மந்திரம் முதலிய மந்திர சாமானிய விசேடங்களும், ஸ்நாநம், சந்தி, ஜெபம், ஓமம், தர்ப்பணம், வைசுவதேவம், இட்டி, அக்கினிட்டோமம், பசுபந்தம், திரையாக்கி நியம் முதலிய நித்திய கன்மங்களும், வருடகன்மவிசேடம், அயன கன்மவிசேடம், மாதகன்ம விசேடம், பருவகன்மவிசேடம் முதலிய நைமித்திக கன்மங்களும், அசுவ மேதம், ராஜசூயம், பௌண்டரீகம் முதலிய காமிய கன்மங்களும், சுராபானம், பரதாரகமனம், அசத்திய வாசகம் முதலிய நிஷேத கன்மங்களும், அநசநம், சாந்திராயணம், கிருச்சிரம் முதலிய பிராயச் சித்த கன்மங்களும், சூரிய உபாசனை, பிரமஉபாசனை, விண்டுஉபாசனை, ருத்திரஉபாசனை, பிரணவ உபா சனை முதலிய உபாசன கன்மங்களுமாகிய கன்ம சாமானிய விசேஷங் களும், சமயத்தார் சாதியார் பலர்க்கும் ஒத்த வண்ணம் வரைதற் கும் ஓதற்கும் உணர்தற்கும் இடங்கொடாமையும், பலவாறு விகற்

பித்துக் கூறும் மயக்கமும் உடையனவாய்; தாம் திருவருட் பரவயிந்துவ சத்தியான அபரவிந்துவின்கண் உற்பத்தியாய் அதனிடத்தே லயமாதலில் ஆதியும் அந்தமும் உடைத்தாயிருந்தும், அங்ஙனங் கோடலின்றி உற்பத்தியின்மையும் லயமின்மையு மாகிய அநாதியென்றும் நித்தியமென்றும் தம்மைத் தாமே விபரீதத்தான் மீக்கூறுகின்ற மதமும் அகங்காரமும் பெற்றிருத்தலு மன்றியும்; கருமை, கடினம், எளிதின் உருகாமை, புலால் நாற்ற முடைமை முதலிய வன்மைக் குணங்களான் வெளிப்பட்டு மண்வெட்டி, கோடரி, அரிவாள் முதலிய அற்பக் கருவியை விரும்பினோர் எளிதிற் பெறத் தான் பரிணமித்தலேயன்றி, மகுடம் குண்டலம் முதலிய விசேடக் கருவிகளை விரும்பினோர்க்குத் தன்னுண்மைக் குணமாய சுவர்ணத் தன்மையை நெடுஞ் சேய்மைக்கண் மறைத்து அரிதிற் பெறவிருந்த அயலோக நியாயம்போல், மாயாசத்தார்த்தப் பிரபஞ்ச காரிய சித்தவிருத்தியாகிய வன்மைக் குணங்களான் வெளிப்பட்டு, பூலோகபோகம் சுவர்க்கலோகபோகம் முதலிய அநித்திய போகங்களை விரும்பினோர் எளிதிற் பெறத் தாம் மந்திர தந்திரங்களாற் பரிணமித்தலேயன்றி, அருட்போகம் ஆனந்தபோகம் சிவபோகம் முதலிய நித்திய போகங்களை விரும்பினோர்க்குத் தமதுண்மைக் குணமாகிய உபதேச லக்ஷியத் தன்மையை நெடுஞ்சேய்மைக்கண் மறைத்து அரிதிற்பெற விருத்தலானும்; தன் பலத்தை விரும்பினோர்க்கு நின்று கர நீட்டித்தலினானும் வேற்றுக்கருவி முதலியவற்றானுங் கைகூடுதலின்றி, மேலிவர்ந்தரிதிற்றலைக்க நின்று தன் காய்களைக் கவர்ந்தும் அந்நிலைக்கண் அனுபவித்தற்கும் வேறோர் கருவி வேண்ட நின்ற இலாங்கலி விருக்ஷ * நியாயம் போல், உபதேச லக்ஷியத் தன்மையைப் பெறத் தொடங்கிய சாதகர்க்குத் தத்தம் பருவத்திற் கடுத்த உணர்வானும் பல்வகைச் சாதகத்தானுங் கைகூடுதலின்றித் தெய்வகதியான் முடிபுநோக்கி அத்தலைக்கண் அமைந்த பொருளைக் கவர்ந்தும் அந்நிலைக்கண் அனுபவித்தற்கும் வேதாந்தவிசார முதலிய வேறோர் கருவி வேண்ட விருத்தலானும், மனிதர்மொழி, தேவர்மொழி, முனிவர்மொழி, அரிபிரமாதியர்மொழி, உருத்திராதியர்மொழி என்பவைக்குப் பெரும்பாலும் பிரமாணமாகி நிற்பனவன்றித் திருவருட் பரவயிந்துவத் துரியமொழிக்கு ஒருவாற்றானும் பிரமாணமாகா வென்க.

ஆகமங்களுள் சில ருக்குவேதம் போல் மந்திரகலையைக் குறித்தும், சில தயித்திரீய வேதம் போல் தந்திரகலையைக் குறித்தும், சில சாம வேதம் போல் உபயமுங் குறித்தும், சில அதர்வண வேதம் போல் உலகியலைக் குறித்தும் வருதலின் வேத சம்மதமாகியும், சில ஏகான்ம விரோதஞ் சாதித்தலின் வேத விரோதமாகியும், உபய மாயா காரியங்

---

* இலாங்கலி விருக்ஷம் - தென்னை மரம்.

களைப் பெரும்பாலும் விரித்து விளக்கலான் மயேசுர சதாசிவாதி மொழிக்குப் பெரும்பாலும் பிரமாணமாமன்றி இத்துரிய மொழிக்குப் பிரமாணமாகா வென்க.

இதனல், வேதாகமங்கள் சகளத்திற் சகுணமாகத் தோன்றிய ஈசுர வாக்கியங்கள் என்பதும் ''உலகெலாம்'' என்பது பூரண நிஷ்களத்தில் நிர்க்குணமாகத் தோன்றிய பரசிவ வாக்கியம் என்பதும் ''உணர்ந் தோதற் கரியவன்'' என்பது ஏகதேச நிஷ்களத்தில் நிர்க்குணமாகத் தோன்றிய பரசிவ வாக்கியம் என்பதும் அறிகவென்க.

ஆயின் இம்மெய்ம்மொழிக்கு உரைப்பிரமாணம் வேறின்ருலோ எனின் :— தற்சுதந்தரத்தானும் தற்புகழ்ச்சியானும் தன் மேம்பாடு வெளிப்படுத்து நிமித்தத்தானும் ஈசுராதிகளால் உபசரித்து உரைக்கப் பட்ட வேதாகமாதிகள் இங்ஙனம் மெய்ம்மொழிப் பிரமாணமாகா என்றதன்றி, சிவசுதந்தரத்தானும் நிரகங்காரத்தானும் சிற்சத்தி ஆனந்த சத்தித் துவாரமாக நாதாந்தத்திருந்து சிவஞானிகள் மோனந்ததும்ப மொழிந்தருளிய திருவருட்டுரியமொழிகளைப் பிரமாணமாகா என்கிலம். ஆகலின் உரையளவை வேண்டுங்கால் அச்சிவஞானிகளது திருவருட்டுரிய மொழிகளுட் குறிக்க வேண்டுவன குறிக்குது மென்க.

இம் மெய்ம்மொழி நிர்க்குணலக்ஷிய முடையதாகலின்,

அறிவுரு வுடையார் குறிகுணங் குறியா
ரென்பது கருதி யன்பத னலே
வெருவா திதன்பொருள் விளக்க மென்னப்
பெருவாய் மையர்போற் பிதற்றின னன்றி
விளக்கும் வன்மையான் விளக்கவந் தனனன்
றளக்கு நுண்ணிய வறிவி லேனே.

திருச்சிற்றம்பலம்

மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் ஆமாறு முற்றிற்று.

2. மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் வருமாறு

இனி இம்மெய்ம்மொழிக்குப் பொருள்விளக்கங் கூறுதும்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இதனுட் கலிவிருத்த வியலின் நாற்சீரோரடியான் முடிந்த உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன் என்னும் திருவருட் பரவயிந்து வத்துரிய மெய்ம்மொழித் தொடர்க்கண் உலகெலாம் என்னும் முதன் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் வருமாறு :—

உலகெலாம் என்பது

(1. தத்துவ உலகங்கள்)

1. சூக்கும ஸ்தூல அந்தரங்க பகிரங்க சாதாரண அசாதாரண் பவுதிகப் பிரத்தியக்ஷ வியக்திருப சமவாய காரண மூலமாயாந்தராந்த ராங்கார ஏகதேசோத்பவ தன்மாத்திரை காரிய பூத தத்துவ உலகு.

1. சூக்குமாந்தர சினேகாணுத்வ சவிகற்ப சாத்திய விசித்திர பூத ரூபசத்தி உலகு.
2. ஸ்தூல வாகிய சினேகாணுத்துவ சவிகற்ப சாத்திய விசித்திர பூத சொரூபசத்தி உலகு.
3. சூக்கும ஸ்தூல வாகியாந்தர கிரியா சினேகாணுத்துவ சவிகற்ப கன்ம சாத்திய சாதக விசித்திர பூத சுபாவ சத்தி உலகு.
4. காரணணுக் காரியபரியந்த சாத்தியத்துவ பூத சாதி சாமானியு வியாத்திசத்தி உலகு.
5. காரியாணுக் காரணபரியந்த சாத்தியத்துவ பூத உபாதி சாமானிய வியாபகசத்தி உலகு.
6. விவித ரூப சாத்திய பூத விசேடசத்தி உலகு.
7. விவிதாணு வியாபாரத்துவ பூத குணசத்தி உலகு.
8. பாகியேந்திரிய சூக்கும விகற்ப விஷய சாத்தியத்துவ பூத வர்ணசத்தி உலகு.
9. விசேஷாணுத்துவ சாத்திய பூத பரத்துவ சத்தி உலகு.
10. சாமானியாணுத்துவ சாத்திய பூத அபரத்துவ சத்தி உலகு.
11. அநேகாணுத்துவ விசித்திர சாமானிய சமவாய சாத்திய பூத பாவ சத்தி உலகு.
12. அதிட்டான மாத்திர பூத நிமித்த சத்தி உலகு.

13. அதிட்டான விசேடமாத்திர பூத நிமித்தவிசேட சத்தி உலகு

அன்றி

1. சூக்கும ஸ்தூல சிநேகாணுத்துவ சம்பந்த ரூப வியத்தியாதி சாதக சாத்திய பூத உற்பவசத்தி உலகு.
2. பூதஉற்பவ அதிகரணசத்தி உலகு.
3. பூதஉற்பவ கரணசத்தி உலகு.
4. பூதஉற்பவ பருவசத்தி உலகு.
5. பூதஉற்பவ கன்மசத்தி உலகு.
6. பூதஉற்பவ உபகாரசத்தி உலகு.
7. பூதஉற்பவ உபகாரப் பிரேரகசத்தி உலகு.
8. பூதஅதிகாரசத்தி உலகு.
9. பூதஅதிகார அதிகரணசத்தி உலகு.
10. பூதஅதிகார கரணசத்தி உலகு.
11. பூதஅதிகார பருவசத்தி உலகு.
12. பூதஅதிகார கன்மசத்தி உலகு.
13. பூதஅதிகார உபகாரசத்தி உலகு.
14. பூதஅதிகார உபகாரப்பிரேரகசத்தி உலகு.
15. பூதலய சத்தி உலகு.
16. பூதலய அதிகரணசத்தி உலகு.
17. பூதலய கரணசத்தி உலகு.
18. பூதலய பருவசத்தி உலகு.
19. பூதலய கன்மசத்தி உலகு.
20. பூதலய உபகார சத்தி உலகு.
21. பூதலய உபகாரப் பிரேரக சத்தி உலகு.

இங்ஙனம்

1. கடின குருத்துவாதி பிருதிவி ரூபசத்தி உலகு.
2. சீதத் திரவத்வாதி அப்பு ரூபசத்தி உலகு.
3. உஷ்ண லகுத்வாதி தேயு ரூபசத்தி உலகு.
4. சலனத்தி அதிலகுத்துவ வாயு ரூபசத்தி உலகு.
5. நிரந்தர அதிகரண பரமாத்தி அதிலகுத்வ ஆகாய ரூபசத்தி உலகு.
6. சதுட்கோண பிருதிவி சொரூப சத்தி உலகு.
7. துவிகோண அப்பு சொரூபசத்தி உலகு.
8. திரிகோண தேயு சொரூபசத்தி உலகு
9. ஷட்கோண வாயு சொரூபசத்தி உலகு.
10. குண்டலாகார ஆகாய சொரூபசத்தி உலகு.
11. குருத்வ சிநேகாணுத்துவ சாதநாசாதாரண சூக்கும ஸ்தாபன

கன்மத்துவ பிருதிவி சுபாவசத்தி உலகு.

12. திரவத்துவ சினேகாணுத்துவ சாதநாத் பிரசாரண கன்மத்துவ அப்பு சுபாவ சத்தி உலகு
13. உஷ்ண சினேகாணுத்வ அதிலகுத்துவ சாதநோர்த்தப் பிரசாரண கன்மத்துவ தேயு சுபாவ சத்தி உலகு.
14. ஆலம்ப சினேகாணுத்துவாத்தி அதிலகுத்துவ சாதன வியாப கோபாநுப் பிரசாரண கன்மத்துவ வாயு சுபாவ சத்தி உலகு.
15. நிராகார சினேகாணுத்துவ பரமாத்தி அதிலகுத்துவ சூக்கும சாதநானுசூத காரண கன்மத்துவ ஆகாய சுபாவ சத்தி உலகு.
16. விவித விசித்திர ரூப சாத்திய பிருதிவி விசேடசத்தி உலகு.
17. அப்பு விசேடசத்தி உலகு.
18. தேயு விசேடசத்தி உலகு.
19. வாயு விசேடசத்தி உலகு.
20. ஆகாய விசேடசத்தி உலகு.
21. பிண்டாண்ட பரியந்த சாதிசாமானிய சாத்தியப் பிருதிவி வியாத்திசத்தி உலகு.
22. அப்பு வியாத்திசத்தி உலகு.
23. தேயு வியாத்திசத்தி உலகு.
24. வாயு வியாத்திசத்தி உலகு.
25. ஆகாய வியாத்திசத்தி உலகு.
26. மாயாபரியந்த உபாதி சாமானிய சாத்தியப் பிருதிவி வியாபகசத்தி உலகு.
27. அப்பு வியாபகசத்தி உலகு.
28. தேயு வியாபகசத்தி உலகு.
29. வாயு வியாபகசத்தி உலகு.
30. ஆகாய வியாபகசத்தி உலகு.
31. விவிதோத்பவ அணுத்துவ விசித்திரப் பிருதிவி குணசத்தி உலகு.
32. அப்பு குண சத்தி உலகு.
33. தேயு குண சத்தி உலகு.
34. வாயு குண சத்தி உலகு.
35. ஆகாய குண சத்தி உலகு.
36. பிருதிவி வர்னசத்தி உலகு.
37. அப்பு வர்னசத்தி உலகு.
38. தேயு வர்னசத்தி உலகு.
39. வாயு வர்னசத்தி உலகு.
40. ஆகாய வர்னசத்தி உலகு.

41. பிருதிவி பாவசத்தி உலகு.
42. அப்பு பாவசத்தி உலகு.
43. தேயு பாவசத்தி உலகு.
44. வாயு பாவசத்தி உலகு.
45. ஆகாய பாவசத்தி உலகு.

46. பிருதிவி பரத்துவசத்தி உலகு.
47. அப்பு பரத்துவசத்தி உலகு.
48. தேயு பரத்துவசத்தி உலகு.
49. வாயு பரத்துவசத்தி உலகு.
50. ஆகாய பரத்துவசத்தி உலகு.

51. பிருதிவி அபரத்துவசத்தி உலகு
52. அப்பு அபரத்துவசத்தி உலகு.
53. தேயு அபரத்துவசத்தி உலகு.
54. வாயு அபரத்துவசத்தி உலகு.
55. ஆகாய அபரத்துவசத்தி உலகு.

56. பிருதிவி உற்பவ சத்தி உலகு.
57. பிருதிவி உற்பவ அதிகரணசத்தி உலகு.
58. பிருதிவி உற்பவ கரணசத்தி உலகு.
59. பிருதிவி உற்பவ பருவசத்தி உலகு.
60. பிருதிவி உற்பவ கன்மசத்தி உலகு.
61. பிருதிவி உற்பவ உபகாரசத்தி உலகு.
62. பிருதிவி உற்பவ உபகாரப் பிரேரகசத்தி உலகு.

63. பிருதிவி அதிகார சத்தி உலகு.
64. பிருதிவி அதிகார அதிகரணசத்தி உலகு.
65. பிருதிவி அதிகார கரணசத்தி உலகு.
66. பிருதிவி அதிகார பருவசத்தி உலகு.
67. பிருதிவி அதிகார கன்மசத்தி உலகு.
68. பிருதிவி அதிகார நிமித்தசத்தி உலகு.
69. பிருதிவி அதிகார நிமித்த விசேடசத்தி உலகு.

70. பிருதிவி லயசத்தி உலகு.
71. பிருதிவி லய அதிகரணசத்தி உலகு.
72. பிருதிவி லய கரணசத்தி உலகு.
73. பிருதிவி லய பருவசத்தி உலகு.
74. பிருதிவி லய கன்மசத்தி உலகு.
75. பிருதிவி லய உபகாரசத்தி உலகு.
76. பிருதிவி லய உபகாரப் பிரேரகசத்தி உலகு.
77. அப்பு உற்பவசத்தி உலகு.

78. அப்பு உற்பவ அதிகரணசத்தி உலகு.
79. அப்பு உற்பவ கரணசத்தி உலகு.
80. அப்பு உற்பவ பருவசத்தி உலகு.
81. அப்பு உற்பவ கன்மசத்தி உலகு.
82. அப்பு உற்பவ உபகார சத்தி உலகு.
83. அப்பு உற்பவ உபகாரப் பிரேரகசத்தி உலகு.

84. அப்பு **அதிகார**சத்தி உலகு.
85. அப்பு அதிகார அதிகரணசத்தி உலகு.
86. அப்பு அதிகார கரணசத்தி உலகு.
87. அப்பு அதிகார பருவசத்தி உலகு.
88. அப்பு அதிகார கன்மசத்தி உலகு.
89. அப்பு அதிகார உபகாரசத்தி உலகு.
90. அப்பு அதிகார உபகாரப் பிரேரகசத்தி உலகு,

91. அப்பு **லய**சத்தி உலகு.
92. அப்பு லய அதிகரணசத்தி உலகு.
93. அப்பு லய கரணசத்தி உலகு.
94. அப்பு லய பருவசத்தி உலகு.
95. அப்பு லய கன்மசத்தி உலகு.
96. அப்பு லய உபகாரசத்தி உலகு.
97. அப்பு லய உபகாரப் பிரேரகசத்தி உலகு.

98. **தேயு உற்பவ**சத்தி உலகு.
99. தேயு உற்பவ அதிகரண சத்தி உலகு.
100. தேயு உற்பவ கரணசத்தி உலகு.
101. தேயு உற்பவ பருவசத்தி உலகு.
102. தேயு உற்பவ கன்மசத்தி உலகு.
103. தேயு உற்பவ உபகாரசத்தி உலகு.
104. தேயு உற்பவ உபகாரப் பிரேரகசத்தி உலகு.

105. தேயு **அதிகார**சத்தி உலகு.
106. தேயு அதிகார அதிகரணசத்தி உலகு.
107. தேயு அதிகார கரணசத்தி உலகு.
108. தேயு அதிகார பருவசத்தி உலகு.
109. தேயு அதிகார கன்மசத்தி உலகு.
110. தேயு அதிகார உபகாரசத்தி உலகு.
111. தேயு அதிகார உபகாரப் பிரேரகசத்தி உலகு.

112. தேயு **லய**சத்தி உலகு.
113. தேயு லய அதிகரணசத்தி உலகு.
114. தேயு லய கரணசத்தி உலகு.

115. தேயு லய பருவசத்தி உலகு.
116. தேயு லய கன்மசத்தி உலகு.
117. தேயு லய உபகாரசத்தி உலகு
118. தேயு லய உபகாரப் பிரேரகசத்தி உலகு.

119. வாயு உற்பவசத்தி உலகு.
120. வாயு உற்பவ அதிகரண சத்தி உலகு.
121. வாயு உற்பவ கரணசத்தி உலகு.
122. வாயு உற்பவ பருவசத்தி உலத.
123. வாயு உற்பவ கன்மசத்தி உலகு.
124. வாயு உற்பவ உபகாரசத்தி உலகு.
125. வாயு உற்பவ உபகாரப் பிரேரகசத்தி உலகு.

126. வாயு அதிகாரசத்தி உலகு.
127. வாயு அதிகார அதிகரணசத்தி உலகு.
128. வாயு அதிகார கரணசத்தி உலகு.
129. வாயு அதிகார பருவசத்தி உலகு.
130. வாயு அதிகார கன்மசத்தி உலகு.
131. வாயு அதிகார உபகாரசத்தி உலகு.
132. வாயு அதிகார உபகாரப் பிரேரகசத்தி உலகு.

133. வாயு லயசத்தி உலகு.
134. வாயு லயஅதிகரணசத்தி உலகு.
135. வாயு லய கரணசத்தி உலகு.
136. வாயு லய பருவசத்தி உலத.
137. வாயு லய கன்மசத்தி உலகு.
138. வாயு லயஉபகாரசத்தி உலகு.
139. வாயு லயஉபகாரப் பிரேரகசத்தி உலகு.

140. ஆகாய உற்பவசத்தி உலகு.
141. ஆகாய உற்பவ அதிகரணசத்தி உலகு.
142. ஆகாய உற்பவ கரணசத்தி உலகு.
143. ஆகாய உற்பவ பருவசத்தி உலகு.
144. ஆகாய உற்பவ கன்மசத்தி உலகு.
145. ஆகாய உற்பவ உபகாரசத்தி உலகு.
146. ஆகாய உற்பவ உபகாரப் பிரேரகசத்தி உலகு.

147. ஆகாய அதிகாரசத்தி உலகு.
148. ஆகாய அதிகார அதிகரணசத்தி உலகு.
149. ஆகாய அதிகார கரணசத்தி உலகு.
150. ஆகாய அதிகார பருவசத்தி உலகு.
151. ஆகாய அதிகார கன்மசத்தி உலகு.

152. ஆகாய அதிகார உபகாரசத்தி உலகு.
153. ஆகாய அதிகார உபகாரப் பிரேரகசத்தி உலகு.

154. ஆகாய லயசத்தி உலகு.
155. ஆகாய லய அதிகரணசத்தி உலகு.
156. ஆகாய லய கரணசத்தி உலகு.
157. ஆகாய லய பருவசத்தி உலகு.
158. ஆகாய லய கன்மசத்தி உலகு.
159. ஆகாய லய உபகாரசத்தி உலகு.
160. ஆகாய லய உபகாரப் பிரேரகசத்தி உலகு.

161. பிருதிவிப் பிருதிவி பூத சத்தி உலகு.
162. பிருதிவி அப்பு பூத சத்தி உலகு.
163. பிருதிவித் தேயு பூத சத்தி உலகு.
164. பிருதிவி வாயு பூத சத்தி உலகு.
165. பிருதிவி ஆகாய பூத சத்தி உலகு.

166. அப்புப் பிருதிவி பூத சத்தி உலகு.
167. அப்பு அப்பு பூத சத்தி உலகு.
168. அப்புத் தேயு பூத சத்தி உலகு.
169. அப்பு வாயு பூத சத்தி உலகு.
170. அப்பு ஆகாய பூத சத்தி உலகு.

171. தேயுப் பிருதிவி பூத சத்தி உலகு.
172. தேயு அப்பு பூத சத்தி உலகு.
173. தேயுத் தேயு பூத சத்தி உலகு.
174. தேயு வாயு பூத சத்தி உலகு.
175. தேயு ஆகாய பூத சத்தி உலகு.

176. வாயுப் பிருதிவி பூத சத்தி உலகு.
177. வாயு அப்பு பூத சத்தி உலகு.
178. வாயுத் தேயு பூத சத்தி உலகு.
179. வாயு வாயு பூத சத்தி உலகு.
180. வாயு ஆகாய பூத சத்தி உலகு.

181. ஆகாயப் பிருதிவி பூத சத்தி உலகு.
182. ஆகாய அப்பு பூத சத்தி உலகு.
183. ஆகாயத் தேயு பூத சத்தி உலகு.
184. ஆகாய வாயு பூத சத்தி உலகு.
185. ஆகாய ஆகாய பூதசத்தி உலகு.

1. சரபேத பௌதிகசத்தி உலகு.

2. அசரபேத பௌதிகசத்தி உலகு முதலியவுங் கொள்க.

2. சாதாரண அசாதாரண சூக்கும ஸ்தூல பூதஅணுப்பிரத்தியக்ஷப் பிரகிருதி வியக்தி சமவாய மூலமாயாந்தராங்கார ஏகதேச காரிய **தன்மாத்திரைத் தத்துவ உலகு.**

1. பூத சமவாயமாத்திர தன்மாத்திரை **ரூபசத்தி** உலகு.
2. பூத சமவாய சாமானியமாத்திர தன்மாத்திரை **சொரூப சத்தி**உலகு.
3. உற்பவ உத்தியோகத்துவ தன்மாத்திரை **சுபாவசத்தி** உலகு.
4. பூதபௌதிக பரியந்த தன்மாத்திரை **வியாத்திசத்தி** உலகு.
5. மாயாபரியந்த தன்மாத்திரை **வியாபகசத்தி** உலகு.
6. சூக்கும வியாபார மாத்திர தன்மாத்திரை **விசேடசத்தி** உலகு.
7. பூதான்மிய மாத்திர தன்மாத்திரை **குணசத்தி** உலகு.

அன்றி

8. தன்மாத்திரை **வர்னசத்தி** உலகு.
9. தன்மாத்திரை **பாவசத்தி** உலகு.
10. தன்மாத்திரை **பரத்துவசத்தி** உலகு.
11. தன்மாத்திரை **அபரத்துவசத்தி** உலகு.

இங்ஙனம்

1. சூக்கும விசேஷாணுத்வ சம்பந்த ரூப வியக்தியாதி சாதக சாத்திய தன்மாத்திரை **உற்பவசத்தி** உலகு.
2. தன்மாத்திரை உற்பவ அதிகரணசத்தி உலகு.
3. தன்மாத்திரை உற்பவ கரணசத்தி உலகு.
4. தன்மாத்திரை உற்பவ பருவசத்தி உலகு.
5. தன்மாத்திரை உற்பவ கன்மசத்தி உலகு.
6. தன்மாத்திரை உற்பவ உபகாரசத்தி உலகு.
7. தன்மாத்திரை உற்பவ உபகாரப் பிரேரகசத்தி உலகு.
8. தன்மாத்திரை **அதிகாரசத்தி** உலகு.
9. தன்மாத்திரை அதிகார அதிகரணசத்தி உலகு.
10. தன்மாத்திரை அதிகார கரணசத்தி உலகு.
11. தன்மாத்திரை அதிகார பருவசத்தி உலகு.
12. தன்மாத்திரை அதிகார கன்மசத்தி உலகு.
13. தன்மாத்திரை அதிகார உபகாரசத்தி உலகு.
14. தன்மாத்திரை அதிகார உபகாரப் பிரேரகசத்தி உலகு.
15. தன்மாத்திரை **லயசத்தி** உலகு.
16. தன்மாத்திரை லய அதிகரண சத்தி உலகு.
17. தன்மாத்திரை லய கரணசத்தி உலகு.
18. தன்மாத்திரை லய பருவசத்தி உலகு.
19. தன்மாத்திரை லய கன்மசத்தி உலகு.
20. தன்மாத்திரை லய உபகாரசத்தி உலகு.

21. தன்மாத்திரை லய உபகாரப் பிரேரக சத்தி உலகு.

முதலியவுங் கொள்க.

1. தன்மாத்திரை நிமித்தசத்தி உலகு.
2. தன்மாத்திரை நிமித்த விசேடசத்தி உலகுங் கொள்க.

3. மூல மாயாந்தராங்கார பாகிய விகற்ப ஞான லேச ஏகதேச காரிய பவுதிக பாகியத்துவார ஞான வியக்தி விகற்ப மாத்திர **ஞானேந்திரிய தத்துவ உலகு.**

1. பூதசம்பந்த பிரஞ்ஞா விஷயாணுத்துவ சாத்திய ஞானேந்திரிய **ரூபசத்தி** உலகு.
2. பௌதிகத்துவார ஞானணுத்துவ சாத்திய ஞானேந்திரிய **சொரூபசத்தி** உலகு.
3. பிரஞ்ஞா விகற்ப கன்ம ஏகாணுத்துவ சாத்திய ஞானேந்திரிய **சுபாவசத்தி** உலகு.
4. தன்மாத்திரை பரியந்த சாதி சாமானிய ஞானேந்திரிய **வியாத்தி** சத்தி உலகு.
5. விஷயப் பிரஞ்ஞா பரியந்த உபாதி சாமானிய ஞானேந்திரிய **வியாபகசத்தி** உலகு.
6. விஷய விசித்திரப் பிரஞ்ஞா வியாபார ஞானேந்திரிய **விசேட** சத்தி உலகு.
7. இச்சாரம்பத்துவ ஞானேந்திரிய **குணசத்தி** உலகு.
8. அந்தரேந்திரிய சூக்கும விஷய சாத்திய ஞானேந்திரிய **வர்ன** சத்தி உலகு.
9. விசேஷப் பிரஞ்ஞாணுத்துவ ஞானேந்திரிய **பரத்துவசத்தி** உலகு
10. சாமானியப் பிரஞ்ஞாணுத்துவ ஞானேந்திரிய **அபரத்துவ** சத்தி உலகு.
11. பகுவணுத்துவ சமவாய சாத்திய ஞானேந்திரிய **பாவசத்தி**உலகு

இங்ஙனம்

1. சூக்கும சினேக ஞானணுத்துவ சம்பந்த விசித்திர ரூப வியத்தியாதி சாதக சாத்திய ஞானேந்திரிய **உற்பவசத்தி** உலகு.
2. ஞானேந்திரிய உற்பவ அதிகரணசத்தி உலகு.
3. ஞானேந்திரிய உற்பவ கரணசத்தி உலகு.
4. ஞானேந்திரிய உற்பவ பருவசத்தி உலகு.
5. ஞானேந்திரிய உற்பவ கன்மசத்தி உலகு.
6. ஞானேந்திரிய உற்பவ உபகாரசத்தி உலகு.
7. ஞானேந்திரிய உற்பவ உபகாரப் பிரேரகசத்தி உலகு.

8. ஞானேந்திரிய அதிகாரசத்தி உலகு.
9. ஞானேந்திரிய அதிகார அதிகரணசத்தி உலகு.
10. ஞானேந்திரிய அதிகார கரணசத்தி உலகு.
11. ஞானேந்திரிய அதிகார பருவசத்தி உலகு.
12. ஞானேந்திரிய அதிகார கன்மசத்தி உலகு.
13. ஞானேந்திரிய அதிகார உபகாரசத்தி உலகு.
14. ஞானேந்திரிய அதிகார உபகாரப் பிரேரகசத்தி உல்கு.
15. ஞானேந்திரிய லயசத்தி உலகு.
16. ஞானேந்திரிய லய அதிகரண சத்தி உலகு.
17. ஞானேந்திரிய லய கரண சத்தி உலகு.
18. ஞானேந்திரிய லய பருவசத்தி உலகு.
19. ஞானேந்திரிய லய கன்மசத்தி உலகு.
20. ஞானேந்திரிய லயஉபகாரசத்தி உலகு.
21. ஞானேந்திரிய லயஉபகாரப் பிரேரகசத்தி உலகு.

1. ஆகாயசம்பந்த சத்தவிஷயாணுத்துவ சாத்திய சுரோத்திரேந்திரிய ரூபசத்தி உலகு.
2. வாயுசம்பந்த பரிசவிஷயாணுத்துவ சாத்திய தொக்கேந்திரிய ரூபசத்தி உலகு.
3. தேயுசம்பந்த ரூபவிஷயாணுத்துவ சாத்திய நேத்திரேந்திரிய ரூபசத்தி உலகு.
4. அப்புசம்பந்த ரசவிஷயாணுத்துவ சாத்திய சிங்குவேந்திரிய ரூபசத்தி உலகு.
5. பிருதிவிசம்பந்த கந்தவிஷயாணுத்துவ சாத்திய கிராணேந்திரிய ரூபசத்தி உலகு.
6. சத்தத்துவார ஞானாணுத்துவ சாத்திய சுரோத்திரேந்திரிய சொரூபசத்தி உலகு.
7. பரிசத்துவார ஞானாணுத்துவ சாத்திய தொக்கேந்திரிய. சொரூபசத்தி உலகு.
8. ரூபத்துவார ஞானாணுத்துவ சாத்திய நேத்திரேந்திரிய சொரூபசத்தி உலகு.
9. ரசத்துவார ஞானாணுத்துவ சாத்திய சிகுவேந்திரிய சொரூபசத்தி உலகு.
10. கந்தத்துவார ஞானாணுத்துவ சாத்தியக் கிராணேந்திரிய சொரூபசத்தி உலகு.
11. சத்தகன்ம ஏகாணுத்துவ சாத்திய சுரோத்திரேந்திரிய சுபாவ சத்தி உலகு.

12. பரிசகன்ம ஏகானுத்துவ சாத்திய தொக்கேந்திரிய சுபாவசத்தி உலகு.
13. திருஷ்டிகன்ம ஏகானுத்துவ சாத்திய நேத்திரேந்திரிய சுபாவசத்தி உலகு.
14. ரசகன்ம ஏகானுத்துவ சாத்திய சிகுவேந்திரிய சுபாவசத்தி உலகு.
15. கந்தகன்ம ஏகானுத்துவ சாத்திய கிராணேந்திரிய சுபாவசத்தி உலகு.
16. சத்ததன்மாத்திரை பரியந்த சுரோத்திரேந்திரிய வியாத்திசத்தி உலகு.
17. பரிசதன்மாத்திரை பரியந்த தொக்கேந்திரிய வியாத்திசத்தி உலகு.
18. ரூபதன்மாத்திரை பரியந்த நேத்திரேந்திரிய வியாத்திசத்தி உலகு.
19. ரசதன்மாத்திரை பரியந்த சிகுவேந்திரிய வியாத்திசத்தி உலகு.
20. கந்ததன்மாத்திரை பரியந்த கிராணேந்திரிய வியாத்திசத்தி உலகு.
21. சத்தப்பிரஞ்ஞை சாத்திய சுரோத்திரேந்திரிய வியாபகசத்தி உலகு.
22. பரிசப்பிரஞ்ஞை சாத்திய தொக்கேந்திரிய வியாபகசத்தி உலகு.
23. ரூபப்பிரஞ்ஞை சாத்திய நேத்திரேந்திரிய வியாபகசத்தி உலகு.
239. ஷி பால் – ரண மாற்றி
240. வலம்புரி – குளிதோஷம் போம்
241. மருக்காரை – நசியத்துக்காம்
242. பாற்பை – சவ்வீரங் கட்டும்
243. இருள் – குடாரம் போக்கி
244. பாலிருள் – சூத பந்தனம்
245. இருள்வீடு – காந்த சத்து
246. களாவிழுது – வெடியுப்பு கட்டு
247. மராமரம் – சூடங் கட்டு
248. குமுகு – பற்குறுதி
249. தழுதாழை – வாதம் போக்கி
250. தெற்கை – கிரிச்சம் போக்கி, சுளுக்கு போக்கி
251. ஆதண்டை – பீனிசம் போக்கி, சிரநீர் போக்கி
252. குழலாதண்டை – சரக்கெல்லாம் கட்டும்
253. செவ்வாதண்டை – சூதவங்கி
254. நாணல் – துன் மாங்கிஷம் போக்கி
255. திமிசு – சாரங் கட்டு
256. பூசபத்திரி – வசீகரி
257. விடத்தேற்கு – சூகபற்பி
258. நெட்டி – நீரைக் கட்டும்
259. நளந்துவயம் – நாக செந்தூரி
260. பெருவாழை – ஈய செந்தூரி
261. உத்தாமணி – மாந்தம் போக்கி, பவள பற்பி, அயசிந்தூரி
262. பிராமூட்டி – சாரஞ் சாம்
263. குறிஞ்சி – மயிலிறகு சத்தாம்
264. தந்தசகுரி – இரும்புருக்கி

265. செப்பு நெருஞ்சில் – சிறுநீர் உஷ்ணம் போகும்
266. கணம்பு – சிலைமெழுகாம்
267. கல்புகு வெள்ளி – காயசித்தி
268. முளிகாக்கு – கல்லுப்புக் கட்டு
269. அசோகுக்கு – குன்மம் போகும்
270. வாலுகம் – கடிகள் போகும்
271. முத்தக்காசு – சுரதோஷம் போம்
272. அதிங்கு – கை கால் நோய் நீக்கம்
273. வெள்ள நாகணத்தி – விரோசனி
274. நேர்வாளம் – பேதி, பரநாசி
275. குறட்டை – கோழை பீனிஸம் போம்
276. கஞ்சாங்கோரை – குளிர் போம்
277. மருவகம் – தாகம் போம்
278. இங்குணம் – லிங்க மிறுகும்
279. இடுகாட்டுத் துளசி – இரைப்பு நீக்கி
280. திப்பிலி – தாது விருத்தி
281. சாசி – பாம்பு பக்ஷி கடி போக்கி
282. அனிச்சை – சொறி போக்கி
283. தாழை – சூத சுத்தி
284. குப்பைமேனி – உப்புக் கட்டு
285. செருப்படி – சிலேட்டுமம் போம், மேகம் போம்
286. ஆடுதின்னாப்பாளை – நாக பந்தனம், புழுக்கொல்லி
287. வெற்றிலை – நாகநீற்றி, ஜீர்ண காரி, சூத சுத்தி
288. ஆகாசகருடன் – சூத பந்தனம், அண்டவெண்கரு
289. ரத்தமண்டலி – இரும்புருக்கி, பூரங் கட்டி
290. காட்டாமணக்கு – அயலோக வங்கி
291. மருதணி – அயச்செம்பி, கெந்தி கட்டி
292. கஞ்சா – யோகி
293. நிலவாகை – புழுக்கள் போக்கி
294. கட்டுக்கொடி – உப்புக்கட்டு, சூதவெண்ணெய்க் கட்டு
295. புரண்டை – வைரநீற்றி, சூதவெண்ணெய் பந்தனி
296. வல்லாரை – உடலந்தேற்றி, காமநாசி
297. மயூரசிகை – நாக பந்தனம்
298. தாம்பரசிகை – சூத பந்தனம்
299. கானல்மா – பித்தளை நீறும்
300. தில்லை – பாஷாணஞ் சாம்
301. மலைமா – குடவ நீறும்
302. கப்பட்டி – குதிரைப்பல் மெழுகு

303. புளிச்ச சிறுக்கீரை – சூத பந்தனம், தாம்பர சிந்தூரி
304. நீரரளி – அயச் செம்பி
305. செவ்வறளி – தங்கச் செம்பி
306. சத்திச்சாரணை – காரீய பற்பி, வாத நாசி
307. தும்பை – சுரங்கள் போக்கி, சில் விஷம் போக்கி, சிரோரோகம் போக்கி
308. பேய்த்தும்பை – தோஷம் போக்கி
309. பேய்க்கொள்ளு – சகல சத்துமாம்
310. பேய்க்கடலை – கெந்தி தைலம்
311. பேய்த்துவரை – தாளக தைலம்
312. அழுகண்ணி – சூத பந்தனம்
313. தொழுகண்ணி - துணித்த சதை கூடும்
314. முடவாட்டுக்கால் - சவ்வீரங் கட்டும்
315. நாகசிங்கி - நாக பந்தனம்
316. இருப்பவல் - மாகட்டி
317. பொன்மத்தை - சூத பந்தனம்
318. கருமத்தை - கெந்தி பந்தனம்
319. நச்சுப் பூலா - செந்தூர குருவாம்
320. நான்முகப்புல் - ஈய பற்பி
321. காவட்டம்புல் - மந்தம் போக்கி
322. சுணைமரம் - சூத பந்தனம்
323. எருமைக்கனைச்சான் - தேகசித்தி
324. ரோமவிருட்சி - சகலசித்தி
325. செந்தாடுபாவை – தங்கச் செம்பு
326. முண்டிளி – சித்து
327. சாயாமரம் – மாவேதை
328. கருநெல்லி – சகலசித்தி
329. கல்லாரை – சூதங் கல்லாம்
330. கல்செம்பு – சூத குரு
331. கல்லறளி – தங்கச் செம்பு
332. முவிலைக்குருத்து – சூத மணி
333. முத்துருக்கன்செவி – சூத பந்தனி
334. செந்திராய் - சூதச் செம்பு
335. செம்பல்லி – சூதங் கட்டும்
336. செவ்வகத்தி – சாதிலிங்க மைனி
337. நிலச்சோதிக்கு – கண்டர் வெளுப்பு
338. நிலக்கடம்பு – அப்பிரகஞ் சத்து
339. பிறங்கைநாரிக்கு – கெவுரிக் கட்டு

340. பூதணக்கு – மால்தேவிக் கட்டு
341. செருந்தி – பாஷாணங் கட்டும்
342. கொத்தான் – பித்தம் போக்கி
343. வறச்சுண்டி – நீரைக் கட்டும்
344. ஆமிரம் – வெடியுப்புக் கட்டும்
345. கட்டுமா – தாபம் போக்கும்
346. அம்பளங்காய் – கல்லுப்புக் கட்டு
347. புனம்பிளி – சாரங் கட்டும்
348. இதளை – சூலை போம்
349. தும்பி – சூத பற்பி
350. சிறுதும்பி - சோகம் தீர்க்கும்
351. சோனகப்பூ – பாதரஸமாம்
352. திராய் – சன்னி போக்கும்
353. பேய்த்துமிட்டி – பாஷாணங் கட்டும்
354. பெருங்கம்பி – வெள்ளீய பற்பி
355. மரிதுடாரி – மால்தேவி பற்பி
356. (மறிதொடரி – மால்தேவி பற்பி)
357. தேவதாளி – சூத பற்பி
358. தாளி – இரைப்பு இருமல் மூர்ச்சை போக்கும்
359. நறுந்தாளி – சிலேட்டுமம் போம்
360. நாகதாளி – நாகங் கட்டும்
361. பேய்ச்சுரை – விஷம் போம்
362. பேய்ப்பீர்க்கு – கெந்தி தயிலம்
363. சற்பாக்ஷி – பாம்பு விஷம் போம்
364. பைசாசப் பீர்க்கு – விஷம் போம், பேதி
365. சுவசற் பாக்ஷி – இங்குலிகங் கட்டும்
366. விட்டுணு காந்தி - சுரங்கள் போம்
367. நாகபாலை – தாம்பர செந்தூரம்
368. நீர்க்கடம்பு – ஈயச் செந்தூரம்
369. ஈகை – தாளக செந்தூரம்
370. நறுவெளி – நாக்குப்புண் ணுறும்
371. புளிவஞ்சி – நாக ரஸம்
372. சிறுகல்லு – கல்லுப்பு கட்டு
373. வெட்புலா – உஷ்ணம் போம்
374. நீர்ப்புலா – போகமிக்காம்
375. தலைச்சுடு வள்ளி – ரசங் கட்டும்
376. பிரமதண்டி – சூதங் கட்டும்
377. பொடுதலை – வயிறுகடுப்புப் போம், வெட்டை போம்,
நீரொழுக்குப் போம்

378. கோடகசாலை – வயிறு புழுப்போம்
379. இடுகொள்ளு – சத்துஆம்
380. காட்டுக்கொள்ளு – காரங் கட்டும்
381. நாட்டுக்கொள்ளு – சாரங் கட்டும்
382. கரும்பு – பசாசு போம்
383. தின்பு – சிலை கட்டு
384. துரும்பு – சூத பற்பி
385. முட்பலா – ஆண்மை
386. வன்மறை – அரிதார வெள்ளை
387. வெள்வேல் – விரணம் போக்கி
388. கருவேல் – பல்லிறுக்கி
389. காஞ்சிரம் – காயசித்தி
390. மலையத்தி – பேதி கட்டும்
391. சடைச்சி – விரியன் விஷம் போம்
392. கப்புச்சடைச்சி – கண்டர் வெள்ளை
393. தமனகம் – தம்பனை
394. சத்துகம் – உப்புக் கட்டு
395. மாஞ்சரோணி – கண் புகைச்சல் தீரும்
396. மூங்கி லரிசி – தோஷம் போம்
397. மூங்கில் குருத்து – ரத்தம் போம், வங்க வட்டை, வங்க பற்பி
398. செவ்விறகு – அயச் செம்பு
399. செம்மரம் – தங்கச் செம்பு
400. ஒருகொம்பு – ரஜிதச் செம்பு
401. நீர்விளா – பைத்தியம் போகும்
402. கமுதை மான் புள்ளி – வெள்ளீயங் கட்டும்
403. நெய்ம்மரம் – அரிதாரங் கட்டும்
404. பொன்வண்ணச்சாலி – தங்கமாம்
405. செழுமலர்க்கொன்றை – புழு நீக்கும்
406. பெருமலர்க்கொன்றை – கிருமி போக்கும்
407. ஓமை – தினவு போக்கும்
408. சிறுகிலக்கு – நரைகள் போம்
409. குறிதிமாறிக்கு – துரிசுச் செம்பு
410. புளிநறளை – திமிர் போக்கி
411. பேய்க்கும்மட்டி – லிங்கங் கட்டும்
412. சுண்டைக்காய் – சுரங்கள் போம்
413. காரெள்ளு – திலகமாம்
414. பித்தரோகணி – கண்டுறந்தி
415. நெல்லி – கெந்திச் செம்பு

416. சின்னக்கை – தைலத்தாதி
417. ஆவாரை – ஈயச் செந்தூரி
418. காட்டுக்கருணை – கெந்தி வெள்ளை
419. ருதந்தி – சிலை தைலம்
420. ஆதனைக் காய் – சூதஞ் சாம்
421. நரிமுருக்கு – க்ஷயம் போம்
422. கிளிமுருக்கு – அயச் செந்தூரம்
423. கெபத்திகை – காய சித்தி
424. மஞ்சிபத்திரம் – காந்தச் செம்பு
425. நாய்வேளை – மலங் கட்டும்
426. பச்சைநாவி – சூதங் கட்டும்
427. மாகாளி – மயக்கம் போம்
428. தாளிப்பனை – சலங்கள் போம்
429. விறுத்தி – சவுக்கார சுண்ணம்
430. ஓரிலைத்தாமரை – அழத்தி போம்
431. நீர்முள்ளி – வீக்கம் போம்
432. வெள்ளை நீர்முள்ளி – செம்பு குருவாகும்
433. நல்லாரை – சூதவெண்ணெ யிறுகும்
434. கசப்புப் பசளை – சூதங் கட்டும்
435. இருவேலி – தாபத்தைப் போக்கும்
436. பருத்தி – பெரும்பாடு போக்கும்
437. செம்பருத்தி – பித்தம் போம்
438. அகத்தி – வேக்காடு போம்
439. அரைக்கீரை – சுரம் போக்கும், கருவங்க பற்பி
440. கொடிதும்பை – சூதங் கட்டும்
441. வனமிட்டி – சாரங் கட்டும்
442. பூசனி – ஊறல் போக்கும், வசீகரி
443. கக்கரி – நீர் பெருக்கும்
444. கொம்மட்டி – வாதமாற்றும்
445. இரும்பிலி – கெந்தி தைலம்
446. முளகரணை – கிரந்தி போம்
447. அவிரிக்கு – லிங்கங் கட்டும், சகல விஷம் போம்
448 களவு தும்பை – மூலம் போக்கும்
449. பிறங்குநாரி – வெடியுப்புக் கட்டும், பொட்டிலுப்பு கட்டும்
450. செங்கத்தாரி – அயச் செம்பி
451. காட்டுத்தி – கண்டர் வெளுப்பாம்
452. புல்லூரி – கருங்குட்டம் போம்
453. திலகம் – தொட்டிச் சிந்தூரம்

454. உச்சிச்சில் – குதிரைப்பல் கட்டும்
455. பாவட்டை – வாதம் போக்கும்
456. கொடிக்கொத்தான் – பாஷாணங் கட்டும்
457. ஓடமெட்டி - காயமுறுதி
458. செம்பரத்தை – சாதிலிங்க மைனம்
459. கொடிக்கள்ளி – பாஷாணக் கட்டு, நாகமணல், நாகபஸ்பம்
460. இலைக்கள்ளி – பாஷாணஞ் சாம்
461. திருகுகள்ளி – கெவுரி கட்டும்
462. மான்செவிக்கள்ளி – நாக பற்பி, தாளகந்தனை மெழுகு
463. மலை பொன்னுவாரை – வீர மெழுகு.
464. பொன்னுவாரை – ஈய செந்தூரி
465. ஓதி – விரண மாற்றும்
466. புன்னை – விரண மாற்றும்
467. சுரபுன்னை – அரிதாரங் கட்டும்
468. நறும்பிசின் – நாகங் கட்டும்
469. சன்னை – சிலை கட்டும்
470. உகாய் – அப்பிரகஞ் சத்து
471. சிவப்புநெல்லி - காயமுத்தும்
472. காட்டுவெந்தியம் – தாம்பர தங்க பற்பி
473. தூதுளை - கபநாசி, அறிவு விருத்தி
474. மஞ்சணுத்தி - உப்புக் கட்டி
475. கற்ருழை – வங்க சிந்தூரி
476. செங்கற்ருழை – சிந்தூரத் தாதி
477. கருங்காந்தள் – அறுத்த துண்ட மொன்றும்
478. முத்துப்பூடு – மிர்தபட்சி சீவிக்கும்
479. குளுந்தகொள்ளி – குக்குடாண்ட ஜனிதி
480. கருநாயுருவி – கர்ப்பார்த்த பிரஸவம்
481. கொடிவேலி சீதபேதி கட்டும்
482. ஷை மூல தைலம் – லிங்கங் கட்டும்
483. செங் கொடிவேலி – செந்தூராதி
484. நாகக்கொட்டைத் தைலம் - நாகங் கட்டும்
485. துளசி – ஷை நாகத்தைச் சுன்னிக்கும்

மூலிகை குண அட்டவனை முற்றிற்று.

சஞ்சீவி மூலிகைகள்

1. கறுப்பு நாயுருவி

கறுப்பு நாயுருவிக் கஷாயத்தை ஐந்து மதிக் கர்ப்பிணிக்கு அடிக்கடி மூன்றுதர மீந்தால்—தசமதியாய்—அஞ்சு கடிகைக்குள் தத்துவ பூர்த்தியாய்ச் சுகப் பிரசவமாம்.

[வேறுகுறிப்பு]

கறுப்பு நாயுருவிக் கஷாயம் 5 மாதத்துக் கர்ப்பிணிக்குக் கொடுக்க, கொடுத்த ஐந்து நாழிகைக்குள் 10 மாதத்துப் பூர்ண கர்ப்பம் உண்டாய்ப் பிரசவமாகும்.

2. குளிர்ந்த கொள்ளி

குளுந்தகொள்ளி யென்பதைக் கசக்கிக் குக்குடாண்டத்திற்குக் கவசித்து இரண்டரைக் கடிகை மூடிவைத்தால், நவீனமான பார்ப்பு ஜனிக்கும்.

[வேறுகுறிப்பு]

குளிர்ந்தகொள்ளி என்னும் பச்சிலையைக் கசக்கிக் குக்குட அண்டத்தின் கீழும் மேலும் வைத்து மூடிய இரண்டரை நாழிகைக்குள் கருமுற்றிக் குஞ்சு பொரிக்கும்.

3. தீப்பூடு

தீப்பூடு நசுக்கி இறந்த கிளி முதலிய பறவைகளின் வலது காதில் வைக்க அவை பிழைக்கும்.

[வேறுகுறிப்பு]

தீப்பூடு பிடுங்கி நசுக்கி இறந்தவனுடைய வலது காதில் வைத்தால் பிழைப்பான்.

4. முத்துப்பூண்டு

முத்துப்பூண்டுச் சாற்றை எல்லாப் பக்ஷிகளின் காதிலும் சிறுகச் சிறுக இரண்டரை நாழிகை பிழிய சீவிக்கும்.

[வேறுகுறிப்பு]

முத்துப்பூண்டுச் சாற்றை இறந்துபோன பக்ஷி எது ஆனாலும் அதன்மேல் சிறுகச் சிறுக இரண்டரை நாழிகை பிழிந்தால் பிழைக்கும்.

5. கருங்காந்தள்

கருங்காந்த ளிலையைக் கசக்கி வெட்டுண்ட கைத்துண்டைச் சேர்த்து ஷ மூலிகையை யப்பிக் கட்டக் சை கூடும்.

[வேறுகுறிப்பு]

கருங்காந்தள் இலையைக் கசக்கி, வெட்டுப்பட்ட துண்டுகளைச் சேர்த்து, அவற்றோடு சேர்த்துக் கட்டி இரண்டரை நாழிகை வைத்திருந்தால், துண்டுகள் ஒன்றாய்ச் சேர்ந்து போகும்.

மருத்துவக் குறிப்புகள்

1. இருமலுக்கு

முசுமுசுக்கை சமூலங் கொண்டு வந்து பசும்பாலில் ஊறவைத்து உலர்த்தி இடித்துச் சூரணமாக வைத்துக்கொண்டு கியாழமாக்கிப் பாலொடு கொள்க. ஷை சூரணத்தில் மிளகு சர்க்கரை சிறுக சமன் சேர்த்துங் கொள்க. இவ்வாறு கரிசாலையுங் கொள்க. பின்பு பனை யோலை சுட்ட சாம்பலைப் பால்விட்டு அரைத்துப் புடஞ்செய்து நெய் சர்க்கரை வெண்ணெய் தேனிலுங் கொள்க. இது போல் ஷை பூ காய்ந்ததை பஸ்பஞ் செய்து கொள்ளத் தீரும்.

2. தேகமெலிவு, ஈளை, சுக்கிலக்கெடுதிக்கு

பொன்னாங்கண்ணி ஒருபங்கு கரிசலாங்கண்ணி முக்கால்பங்கு இவை ஒருமுறை வேகவைத்து, தண்ணீர் வடித்து, பின்பு வேகவைக்கும் போது மிளகு பொடி போட்டு, நெய் விட்டு, சீரகத்தால் தாளித்துப் புரட்டிச் சாப்பிடவும்.

3. நீர்க்கோவை, வாதபித்த ஆபாசக்கெடுதி, மலபந்தம், சூலை இவற்றிற்கு

சுக்கு பலம் 12-க்கு சுண்ணாம்பில் 4 பலம் கவசித்து, மஞ்சளில் 4 பலம் கவசித்து, எருமைச் சாணத்தில் 4 பலம் கவசித்து, கவசங் கருகச் சுட்டு எடுத்துச் சீவி வைத்துக்கொண்டு, மூன்று தினுசிலும் 3 வராக னெடை எடுத்து நசுக்கி அரைப்படி சலத்தில் போட்டுக் காய்ச்சி வீசம்படியாகச் சுண்டின பின்பு, பனங்கற்கண்டு நெய் இவைகளைக் கலந்து இளஞ்சூடாகச் சாப்பிட்டு வரவேண்டும்.

4. தேகவலிவு, சரீர திடத்திற்கு

கெட்டிமிளகு பலம் 20 – இதைப் பேயன்வாழைக்கிழங்குச் சாற்றில் 3 நாள், இளநீரில் 3 நாள், கரிசாலைச் சாற்றில் 3 நாள், பொன்னாங் கண்ணிச் சாற்றில் 3 நாள், பசுங்கோமயத்தில் 3 நாள், பசும்பாலில் 3 நாள், தனித்தனியாக இரவில் ஊறவைத்து, பகலில் நிழலில் காய வைத்து, தேய்த்துப்புடைத்துமுன் போலவே எல்லாவற்றிலும் நனைத்து உலர்த்தித் தேய்த்துப் புடைத்து எடுத்து வைத்துக்கொண்டு, சுமார்

5 மிளகு அவ்வளவு கற்கண்டும் சேர்த்துச் சாப்பிட்டு வரவும். கற்கண்டு இல்லாமலும் கொள்ளலாம். சூடு கொண்டால் அறுகம் வேர் கஷாயத்தில் பசுவெண்ணெய் சேர்த்துச் சாப்பிடலாம். இவ்விதம் சிலதில் ஊறவைத்துக் கடுக்காயும் கொள்ளலாம்.

5. பஞ்ச கற்பம்

கஸ்தூரி மஞ்சள், வேப்பம் பருப்பு, வெள்ளை மிளகு, கடுக்காய்த் தோல், நெல்லிவற்றல் இவைகளை அரைத்துப் பாலில் காய்ச்சி நறுமணத்துடன் இறக்கித் தேய்த்துக் கொள்ளவும்.

[வேறுவகை]

கசகசா. பாதம்பருப்பு, கொப்பரைத்தேங்காய், மிளகு, சீரகம் இவற்றைப் பாலில் அரைத்துக் காய்ச்சி, நறுமணத்துடன் இறக்கித் தேய்த்துக் கொள்ளவும்.

6. நீலகண்ட மணி மாத்திரை

மாந்தாளிக்கள்ளி, சதுரக்கள்ளி, வெள்ளெருக்கு வேர்ப்பட்டை, இவைகளைச் சமன் எடையால் நிழலில் உலர்த்திக் கொண்டு ஐந்து பலம் குழித்தைலம் வாங்கிக் கொண்டு, சுரைக் குடுக்கையில் வைத்துக் கொண்டு, பெருங்காயம், லிங்கம், அபினி, இந்த மூன்றும் ஒவ்வொரு பலம் கல்வத்திற் போட்டுப் பொடித்துக் கொண்டு, குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை, பச்சைக்கற்பூரம், கூகைநீறு இந்த ஐந்தும் வகைக்கு ஒன்றேகால் வராகனெடை சேர்த்து, தைலத்தை விட்டு எட்டு ஜாமம் அரைத்து, குன்றிமணிப் பிரமாணம் மாத்திரை செய்து மூங்கில் குழாயில் அடைத்து மண்குடத்தில் வைத்து, பூமிக்குள் நாற்பது நாள் வைத்துப் பின்பு எடுத்து, விஷ்ணுவுக்குப் பூசை செய்து, தங்க டப்பியில் வைத்துக் கொண்டு, வாந்தி பேதி கண்டவர்களுக்கு மணிக்கு மூன்று மாத்திரை விதம் தேனில் கொடுத்தால் வாந்தி பேதி நிற்கும். ஜன்னி வகைகளுக்கும் பிரயோகிக்கலாம், நல்லபாம்பு முதலிய விஷ திருஷ்டிகளுக்கும், தகுந்த அனுபானங்களில் பிரயோகிக்கலாம். இந்த மாத்திரைக்கு விஷ்ணு வைத்த பெயர் பிரளய காலருத்திர மணி மாத்திரை. சிவனிட்டபெயர் நீலகண்ட மணி மாத்திரை. இது நாடியில் சொல்லியது.

மருத்துவக் குறிப்புகள் முற்றிற்று.

உபதேசங்கள்

1. நித்திய கருமவிதி
2. உபதேசக் குறிப்புகள்
3. சுப்பிரமணியம்
4. அருள் நெறி
5. திருவருண் மெய்ம்மொழி
6. பேருபதேசம்

1. நித்திய கரும விதி

1. சாதாரண விதி

திருச்சிற்றம்பலம்

சூரியோதயத்திற்கு முன் நித்திரை நீங்கி எழுந்து, [1] விபூதி தரித்து சிறிது நேரம் உட்கார்ந்து, கடவுளைத் தியானஞ் செய்தல் வேண்டும்.

பின்பு களிப்பாக்கு மிகுதியாகவும் வெற்றிலை சுண்ணம்பு குறைவாகவும் போட்டுக் கொண்டு, முன் ஊறுகிற ஜலத்தை உமிழ்ந்து, பின்வரும் ஜலத்தையெல்லாம் உட்கொள்ளல் வேண்டும் [2]. பின்பு எழுந்து உள்ளே சற்றே உலாவுதல் வேண்டும். பின் மலஜல உபாதி

---

1 வைகறைத் துயிலெழு – ஆத்திசூடி

வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. – ஆசாரக்கோவை 4

புத்தி அதற்குப் பொருந்தும் தெளிவளிக்கும்
சுத்த நரம்பினறற் றூய்மையுறும் – பித்தொழியும்
தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னுமதி
காலை விழிப்பின் குணம். – பதார்த்தகுண சிந்தாமணி

அதிகாலையில் விழிப்பதால் புத்தி மனத்துடன் பொருந்தும்; தெளிவு உண்டாகும்; நரம்புகள் எல்லாம் சரியான நிலையை அடைந்து தூய்மையை அடையும்; வாதபித்த சிலேத்துமங்கள் தத்தம் நிலையில் சேரும்.

2 இஃது இல்லறத்தார்க்கு மட்டுமே விதித்தது. துறவறத்தார்க்குத் தாம்பூலம் தரித்தல் விலக்கு.

மேற்றலையும் கீழ்க்காம்பும் வெந்நரம்பும் வெண்பல்லைத்
தீத்தாமல் வெற்றிலையைத் தின்றக்கால் – மாற்றலரை
வெல்லப்போர் செய்யும் விறல்நெடுமா லாயிடினும்
செல்லப்போய் நிற்கும் திரு.

காலை பிளவதிகம் கட்டுச்சி நீறதிகம்
மாலை இலையதிகம் வாணுதலே – சாலவே
ஆம்போது நீரிறக்க லாகாது சொன்னேன்கேள்
தாம்பூலங் கொள்வார் தமக்கு.

வெற்றிலைக்கு முன்னே வெறும்பிளவை நாவிலிட
நற்றிருவா மங்கை நடப்பளே – வெற்றிலையை
முன்னிட்டுப் பின்பிளவை வேய்வரே யாமாயின்
மன்னரைப் போலாவார் மகிழ்ந்து.

களைக் கழித்தல் வேண்டும். மலங்கழிக்கின்றபோது, வலது கையால் இடது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். ஜலம் கழிக்கும்போது, இடது கையால் வலது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். மலமாவது ஜலமாவது பற்றறக் கழியும் வரையில், வேறு விஷயங்களைச் சிறிதும் நினையாமல், மலஜல சங்கற்பத்தோடு இருக்கவேண்டும். மலம் பின்னுந் தடைபடுமானால், இடது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராணவாயுவை வலத்தே வரும்படி செய்து கொண்டு, மலசங்கற்பத்தோடு மலவுபாதி கழித்தல் வேண்டும். ஜலம் தடை பட்டால், வலது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராணவாயுவை இடது பக்கம் வரும்படி செய்து கொண்டு, ஜல சங்கற்பத்தோடு ஜல வுபாதி கழித்தல் வேண்டும்.

மலஜல வுபாதி கழிந்த பின், செவிகள், கண்கள், நாசி, வாய் தொப்புள் - இவைகளில் அழுக்கு, பீளை, சளி, ஊத்தை என்கின்ற அசுத்தங்களையும், கைகால் முதலிய உறுப்புக்களிலுள்ள அழுக்குகளையும் வெந்நீரால் பற்றறத் துடைத்தல் வேண்டும். பின் வேலங்குச்சி ஆலம்விழுது—இவைகளைக் கொண்டு பல்லழுக்கெடுத்து,[3] அதன்பின் கரிசலாங்கண்ணித்தூள் கொண்டு உள்ளே சிறிது சாரம் போகும்படி

வெற்றிலையின் நுனியையும் காம்பையும் கிள்ளி எறிய வேண்டும். முதுகு நரம்பை நகத்தால் எடுத்துவிட வேண்டும். பல் துலக்கு முன் தாம்பூலந் தரிக்கலாகாது.

காலையில் பாக்கு மிகுதியாகவும், உச்சியில் சுண்ணம்பு மிகுதியாகவும், மாலையில் வெற்றிலை மிகுதியாகவும் கொள்ள வேண்டும். வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டு மென்றவுடனே முதல் இரண்டு முறை ஊறும் நீரை விழுங்கலாகாது; உமிழ்ந்து விடவேண்டும்.

தாம்பூலந் தரிக்கத் தொடங்கும்போது முதலில் பாக்கைப் போட்டுக் கொள்ள லாகாது. வெறும் வெற்றிலையை வாயில் போட்டுக் கொண்டு, பின்னரே பாக்கைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

3 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்பது பழமொழி. பல் துலக்குவதற்குரிய கொம்புகள் இல்வாழ்வார்க்கு வேறாகவும் துறவிக்கு வேறாகவும் விதிக்கப்பட்டுள்ளன. தாது புஷ்டியைத் தரக்கூடியவை இல்வாழ்வார்க்கும், போகத்தில் இச்சையைக் குறைக்கக் கூடியவை துறவிக்கும் விதிக்கப்பட்டுள்ளன.

இல்வாழ்வார்க்கு வேம்பு, வேல், பூல், ஆல், மா, அத்தி, தேக்கு, நாவல், ஆத்தி, கடம்பு, விளா, அசோகு, குருக்கத்தி, சண்பகம் முதலியன.

வேலுக்குப் பல்லிறுகு வேம்புக்குப் பல்லொளிவு
பூலுக்குப் போகம் பொழியுமே - ஆலுக்குப்
பல்வலியும் நீங்கும் பகருமகிழ் நாயுருவி
இல்வாழ் வோர்க்கில்லை இசை.

பல்லில் தேய்த்து வாயலம்பின பின்பு, பொற்றலைக்கையாந்தகரை இலை அல்லது கரிசலாங்கண்ணி இலை ஒரு பங்கு, தூதுளையிலை [4] முசுமுசுக்கை யிலை கால் பங்கு, சீரகம் கால் பங்கு—இவைகளை ஒன்றாகச் சேர்த்துச் சூரணமாகச் செய்துகொண்டு, அதில் ஒரு வராகனெடை ஒரு சேர் நல்ல ஜலத்திற் போட்டு, அதனுடன் ஒரு சேர் பசுவின்பால் விட்டுக் கலந்து, அதிலுள்ள ஒரு சேர் ஜலமுஞ் சுண்டக் காய்ச்சி அந்தப் பாலில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிடல் வேண்டும்.

காலையில் இளம்வெய்யில் தேகத்திற் படாதபடி, பொழுது விடிந்து 5 நாழிகை பரியந்தம் உடம்பைப் போர்வையோடு காத்தல் வேண்டும். பின்பு வெய்யிலில் நெடுநேரம் தேகமெலிவு வரத்தக்க உழைப்பை யெடுத்துக் கொள்ளாமல், இலேசான முயற்சியில் சிறிது வருத்தந் தோன்ற முயலுதல் வேண்டும். பின் இளம் வெந்நீரில் குளித்தல் வேண்டும். விபூதி தரித்துச் சிவசிந்தனையோடு சிறிது நேரம் இருத்தல் வேண்டும்.

பசி கண்டவுடன் தடை செய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும். ஆகாரங் கொடுக்கும்போது, மிகுந்த ஆலசியமுமாகாது மிகுந்த தீவிரமுமாகாது. [5] முதற்புஷ்ம் சீரகச்சம்பா அரிசி அன்றிப் புன்செய் விளைவும் காரரிசியுந் தவிர நேரிட்ட அரிசியின் வகைகள்—ஆகும். அது சாதமாகும்போது, அதிக நெகிழ்ச்சியு மாகாது, அதிக கடினமும் ஆகாது. நடுத்தரமாகிய சோற்றை அக்கினி அளவுக்கு அதிகப்படாமலும் குறைவு படாமலும் அறிந்துண்ணுதல் வேண்டும்.

துறவிக்குப் பெருவாகை, நொச்சி, மருது, மகிழ், பெருங்குமிழ், புங்கு, நாயுருவி, கருங்காலி, கையாந்தகரை, காட்டா மணக்கு முதலியன.

பெருவாகை நொச்சி பெருங்குமிழே புங்கு
கருங்காலி நாயுருவி காயா – மருதுமகிழ்
கையாந்த கரையுடன் காட்டா மணக்காகும்
மெய்யார் துறவி தனக்கு.

பட்ட மரம், பாளை, கைவிரல்கள், செங்கல், மண், மணல், சாம்பல், கரி ஆகிய எட்டும் பல் துலக்குதற்கு ஆகாதனவாம்.

பட்டமரம் பாளை பகருமணல் மண்சாம்பல்
சுட்டமரம் செங்கல் தொடுவிரல்கள்-எட்டுவிதம்
பற்றுலக்க வீழும்பல் பல்லெல்லாம் நோய்கொள்ளும்
கற்றறிந்தார் கண்டதிது காண்.

4 கையாந்தகரையும் தூதுளையும் ஞானப் பச்சிலைகள். இவற்றை அடிகள் அடிக்கடி வற்புறுத்தி யருளுவர்.

5 ஆலசியம் – தாமதம். தீவிரம் – விரைவு.

ஆயினும் ஒரு பிடி குறைந்த பக்ஷமே நன்மை. போஜனஞ் செய்த பின்னர் நல்ல நீர் குடித்தல் வேண்டும். அந்த நல்ல நீரும் வெந்நீ ராதல் வேண்டும். அதுவும் அதிகமாகக் குடியாதிருத்தல் வேண்டும்.

கிழங்கு வகைகள் உண்ணுமல் இருக்க வேண்டும். அவற்றில் கருணைக்கிழங்கு மாத்திரம் கொள்ளுதல் கூடும்.[6] பழ வகைகள் உண்ணு திருத்தல் வேண்டும். அவற்றில் பேயன் வாழைப்பழம் ரஸ்தாளி வாழைப்பழம்—இவை நேர்ந்தால் சிறிது கொள்ளுதல் கூடும். பழைய கறிகளைக் கொள்ளாதிருத்தல் வேண்டும். பதார்த்தங்களில் **புளி மிளகாய்** சிறிதே சேர்க்கவேண்டும். **மிளகு சீரகம்** அதிகமாகச் சேர்த்தல் வேண்டும். **கடுகு** சேர்ப்பது அவசியமல்ல. **உப்பு** குறை வாகவே சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.[7] அன்றி, எந்த வகையிலும் உப்பு மிகுதியாகக் கொள்ளாமல் உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாம். தாளிப்பில் பசு வெண்ணெய் நேரிட்டால் தாளிக்க வேண்டும். நேராத பக்ஷத்தில் நல்லெண்ணெய் சிறிது சேர்க் கவுங் கூடும். வெங்காயம் வெள்ளைப்பூண்டு சிறிதே சேர்க்க வேண்டும். கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங் காய், கலியாணப்பூசுணைக்காய், புடலங்காய், தூதுளங்காய், கொத்த வரைக்காய்—இவைகள் பதார்த்தஞ் செய்தல் கூடும். இவற்றினுள் முருங்கை, கத்தரி, தூதுளை, பேயன் வாழைக்காய் - இவைகளை அடுத்தடுத்துக் கறி செய்து கொள்ளலாம். மற்றவைகளை ஏகதேசத் தில் செய்து கொள்ளலாம். வடை, அதிரசம், தோசை, மோதகம் முதலிய அப்பவர்க்கங்கள் கொள்ளப்படாது; ஏகதேசத்தில் சிறிது கொள்ளவுங்கூடும். சர்க்கரைப் பொங்கல், ததியோதனம், புளிச் சாதம் முதலிய சித்திரான்னங்கள் கொள்ளப்படாது; ஏகதேசத்தில் சிறிது கொள்ளலாம். புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கி லும் மிகவும் நன்று. கரிசலாங்கண்ணிக்கீரை, தூதுளைக்கீரை, முன்னைக்கீரை, பசலைக்கீரை, முருங்கைக்கீரை - இவைகளைப் பருப் போடு சேர்த்தும், மிளகோடு சேர்த்தும், புளியிட்டும், தனித்தும், கறி செய்து கொள்ளக் கூடும். மற்றைக் கீரைகள் ஏகதேசத்தில் நேரில் சிறிது சேர்த்துக் கொள்ளவுங் கூடும். புளித்த தயிர் சேர்த்தல் கூடும். பருப்பு வகைகளில் முளைகட்டாத துவரம்பருப்பு அல்லது முளைகட்டின

6 'மன்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்' – பதார்த்த குண சிந்தாமணி

7 உப்பு, புளி, மிளகாய் இம்மூன்றும் உடலுக்குக் கேடு பயப்பவை. இவற்றை எவ்வளவுக் கெவ்வளவு குறைக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. புளிக்குப் பதிலாக எலுமிச்சையையும் மிளகாய்க் குப் பதிலாக மிளகையும் சேர்த்துக் கொள்ளலாம்.

துவரம்பருப்பு மிளகு சேர்த்துக் கடைதல், துவட்டல், துவையல் செய்தல், குழம்பிடல், வேறொன்றில் கூட்டல் முதலியவாகச் செய்து, நெய் சேர்த்துக் கொள்ளுதல் கூடும். அந்த நெய்யை மிகவுஞ் சேர்க்கப் படாது. மற்றப் பருப்பு வகைகள் அவசியமல்ல. ஏகதேசத்தில் நேர்ந்தால் கொள்ளவுங் கூடும். சுக்கைச் சுண்ணும்பு தடவிச் சுட்டு, மேலழுக்கைச் சுரண்டிப் போட்டுச் சூரணமாக்கி வைத்துக்கொண்டு, நல்ல ஜலத்திற் கொஞ்சம் போட்டு, 5 பங்கில் 3 பங்கு நீர் சுண்ட 2 பங்கு நீர் நிற்கக் காய்ச்சி, அதைத் தாகங்கொள்ளுதல் வேண்டும். நேராத பக்ஷத்தில் வெந்நீராவது கொள்ளுதல் வேண்டுமே யன்றிக் குளிர்ந்த ஜலங் கொள்ளப்படாது. எந்தப் போஜனத்திலும் புலால் **எந்த வகையினும் புசிக்கப்படாது.** எப்படிப்பட்ட போஜனமாயினும் சிறிது குறையவே புசித்தல் வேண்டும். எந்தக் காலத்திலும் பசித்தா லல்லது எந்த வகையிலும் போஜனஞ் செய்யப்படாது. வாத பித்த சிலேத்துமங்கள் அதிகரிக்கத்தக்க போஜனங்களை அறிந்து விடல் வேண்டும்.

பகலில் போஜனஞ் செய்தவுடன் சற்றே படுத் தெழுந் தல்லது வேறு காரியங்களிற் பிரவேசிக்கப்படாது. ஆயினும் நித்திரை வரும் படி படுக்கப்படாது. **பகலில் எந்த வகையிலும் நித்திரை யாகாது.**[8] சிறிது படுத்து எழுந்த பின் பாக்கும் வெற்றிலையும் குறைவாகவும் சுண்ணும்பு சிறிது அதிகமாகவும்[9] தாம்பூலம் பஞ்சவாசங்களோடு தரித்து முதலில் ஊறிய ஜலத்தைப் புறத்தில் உமிழ்ந்து விட்டுப் பின்பு ஊறுஞ் ஜலத்தை உட்கொள்ளல் வேண்டும். பகற் போஜனஞ் செய்த சுமார் பதினேழரை நாழிகைக்குப் பின்பு, பேயன் வாழைப்பழம் ரஸ்தாளி வாழைப்பழம் பங்காள வாழைப்பழம் சிறிது சர்க்கரை சேர்த்து நேர்ந்தால் சாப்பிடக்கூடும். காலையில் பால் சாப்பிடும்போது பசி அதிகரித்திருந்தால், இந்தப் பழங்களில் நெய், சர்க்கரை கலந்து சிறிது சாப்பிடக்கூடும். பகலில் பெண்கள் தேகசம்பந்தங் கூடாது. பகற்

---

8 பகல் உணவுக்குப்பின் சற்றுத் துயிலவேண்டும்
இரவு உணவுக்குப்பின் சற்று உலாவவேண்டும்

Sleep a while after dinner
Walk a while after supper

என்பது பழமொழி. பகல் உணவுக்குப்பின் கொள்ளும் துயில் ஆழ்ந்த துயிலாக இருத்தலாகாது. அறிதுயிலாக, அரைத்தூக்கமாக இருத்தல் வேண்டும். இதனுற்றான் அடிகள் படுத்து எழ வேண்டும் என்றனர். 'பகலுறக்கஞ் செய்யோம்' என்பது பதார்த்த குண சிந்தாமணி.

9 'கட்டுச்சி நீறதிகம்' – அடிக்குறிப்பு 2 பார்க்க.

போஜனஞ் செய்த பின், சற்று நேரங் கடவுளைத் தியானித்திருக்க வேண்டும். அதன்பின் எந்த வேலை செய்யினுந் தேக கரணங்களுக்கு மெலிவு உண்டு பண்ணுகிற வேலைகளாகச் செய்யப்படாது. செய்யினும் சிறிது சிறிதாகச் செய்தல் வேண்டும்.

சாயங்கால வெய்யில் தேகத்திற் படும்படி சிறிது உலாவுதல் வேண்டும். காற்று மிகுந்தடிக்கில் அப்போது உலாவப்படாது. அன்றி கடின வெய்யில், பனி, மழை - இவைகள் தேகத்திற்பட உலாவப் படாது.

இராத்திரி முன் பங்கில் தேகசுத்தி செய்து, விபூதி தரித்துச் சிவத் தியானஞ் செய்தல், தோத்திரஞ் செய்தல், சாத்திரம் வாசித்தல், உலகியல் விவகாரஞ் செய்தல் - இவை முதலியவை கூடும். பின் போஜனஞ் செய்தல் வேண்டும். இராப் போஜனம் பகற் போஜனத்தைப் பார்க்கிலும் அற்பமாகப் புசித்தல் வேண்டும்.[10] இரவில் தயிர்[11] கீரை வாயுவான பதார்த்தம் குளிர்ச்சியான பதார்த்தம் சேர்க்கப் படாது. சூடான பதார்த்தங்களையே அறிந்து சேர்க்க வேண்டும். அவை சிறுகத்தரி முருங்கை அவரைவற்றல் முதலியவையாம். இரவில் போஜனஞ் செய்தபின், சிறிது உள்ளே உலாவுதல் வேண்டும். பின்பு சிவத்தியானம் முதலியவை செய்தல் வேண்டும். சுமார் 12 நாழிகைக்கு மேல் காலைக்குச் சொல்லியபடியாவது தனித்தாவது பசுவின் பாலை நன்றாகக் காய்ச்சிப் புசித்தல் வேண்டும். பின் சில நேரஞ் சென்று சுமார் 15 நாழிகையில் பாக்கும் சுண்ணம்பும் மிகவுங் குறைய வெற்றிலை மிகவும் அதிகப்படக்[12] கலந்து பஞ்சவாசத்தோடும் போட்டுக் கொண்டு முதல் ஜலத்தையுமிழ்ந்து பின்வருஞ் ஜலத்தை யுட்கொண்டு, திப்பியை யுமிழ வேண்டும். மற்ற வேளையும் தாம்பூலத்தின் திப்பியை உமிழுதல் அவசியம்.

---

10 பகலுணவிற் பாதியளவே இரவுணவு கொள்ளவேண்டும்.
3 சிறப்புவிதி 17 பார்க்க.

11 காலை மாலை யுறங்குவர் காரிகை
கோல மேனி குலைந்தபின் கூடுவர்
சாலி ராத்தயிர் சாதமொ டுண்பவர்
மாலை நேரினும் மாது பிரிவளே. – தனிப்பாடல் திரட்டு

காலை மாலை உறங்குவோரும், விதவைகளையும் தம்மின் மூத்த பெண்களையும் சேர்வோரும், இரவு உணவில் தயிர் சேர்த்துக் கொள்வோரும் திருமாலைப் போன்ற செல்வமுடையராயினும் திருமகள் அவர்களை விட்டு நீங்குவாள்.

12 'மாலை இலையதிகம்' – அடிக்குறிப்பு 2 காண்க.

பெண்களுடன் தேகசம்பந்தம் செய்ய வேண்டில், முன் ஒரு நாழிகை பரியந்தம் மனத்தைத் தேகசம்பந்தத்தில் வையாது வேறிடத்தில் வைத்துப் பின் சம்பந்தஞ் செய்தற்குத் தொடங்கல் வேண்டும். தொடங்கிய போது அறிவு விகற்பியாமல் - என்றால், வேறுபடாமல் - மன முதலிய கரண சுதந்தரத்தோடு, தேகத்திலும் கரணங்களிலுஞ் சூடு தோன்றாமல், இடது புறச் சாய்வாகத் தேகசம்பந்தம் செய்தல் வேண்டும். புத்திரனைக் குறித்த காலத்தன்றி மற்றக் காலங்களில் சுக்கிலம் வெளிப்படாமலிருக்கத்தக்க உபாயத்தோடு தேகசம்பந்தஞ் செய்தல் வேண்டும். அவ்வுபாயமாவது பிராணவாயுவை உள்ளேயும் அடக்காமல் வெளியேயும் விடாமல் நடுவே யுலாவச் செய்து கொள்ளுதலாம். ஒரு முறையன்றியதன் மேலுஞ் செய்யப்படாது. தேகசம்பந்தஞ் செய்த பின், தேகசுத்தி செய்து திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்து பின்பு படுக்க வேண்டும். படுக்கும்போது, இடதுகைப்பக்கமாகவே படுத்தல் வேண்டும். எந்தக் காலத்தில் எது குறித்துப் படுத்தபோதிலும், இடதுகைப் பக்கமாகவே படுத்தல் வேண்டும்.[13] பின்பு ஏழரை அல்லது பத்து நாழிகை யளவு நித்திரை செய்தல் வேண்டும்.[14] அதன் பின் விழித்துக் கொண்டு நல்ல சிந்திப்புடனிருத்தல் வேண்டும். இரவில் தேகசம்பந்தம் 4 தினத்திற் கொருவிசை செய்தல் அதம பக்ஷம். 8 தினத்திற் கொருவிசை செய்தல் மத்திம பக்ஷம். 15 தினத்திற் கொருவிசை செய்தல் உத்தம பக்ஷம். அதன் மேற்படில் சுக்கிலம் ஆபாசப்பட்டுத் தானே கழியும். 4 தினத்திற் கொரு விசை செய்யில் சுக்கிலம் நெகிழ்ச்சிப்பட்டுச் சந்ததி விருத்தியைக் கெடுக்கும், ஆதலில், அதம பக்ஷமாயிற்று. இரவில் சொப்பனம் வாராது மிருதுவாகவே நித்திரை செய்து விழித்துக் கொள்ளல் வேண்டும்.

எப்போதும் பயத்தோடிருக்கப்படாது. பரிச்சேதம் பயமில்லாமலும் இருக்கப்படாது. **எப்போதும் மனவுற்சாகத்தோடிருக்க வேண்டும்.** கொலை, கோபம், சோம்பல், பொய்மை, பொறாமை, கடுஞ்சொல் முதலிய தீமைகள் ஆகா. உரத்துப் பேசல், வேகமாக நடத்தல், ஓடி நடத்தல், வழக்கிடல், சண்டையிடல் கூடா. எந்த விதத்திலும் பிராணவாயு அதிகமாகச் செலவாகாமற்படி ஜாக்கிரதையோடு பழகுதல் வேண்டும்.

பொற்றலைக்கையாந்தகரையை உலர்த்தித் தூள் செய்து வைத்துக்கொண்டு, அதை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலைக்கிட்டு 4 நாளைக்கு ஒருவிசை வெந்நீரில் முழுக வேண்டும். அன்றி வாரத்திற்கு ஒருவிசையாவது முழுகுதல் வேண்டும். தூளில்லாத

13 'இடதுகையிற் படுப்போம்' —பதார்த்த குண சிந்தாமணி.

14 7½ நாழிகை = 3 மணி. 10 நாழிகை = 4 மணி.

பகுத்தில் நல்லெண்ணெயைக் காய்ச்சியே முழுகுதல் வேண்டும். புகைக்குடி, கஞ்சாக்குடி, கட்குடி, சாராயக்குடி முதலிய மயக்கக்குடி களாகா. மலஜலத்தைச் சிறிதும் அடக்கப்படாது.[15] சுக்கிலத்தைச் சிறிதும் வீணில் விடப்படாது. துன்மார்க்கப் பழக்கஞ் செய்யக்கூடாது. **எந்த வேலை செய்யினும், எந்த விவகாரஞ் செய்யினும், சிவசிந்தனையோடு செய்து பழகுதல் வேண்டும்.**

இந்தத் தேகத்தில் புருவமத்தியில், நமது ஆன்ம அறிவென்கிற கற்பூரத்தில், கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவதாகப்பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும், ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருணியத்தையும் இடைவிடாமல் வைத்து, ஓங்காரபஞ்சாக்ஷர ஞாபகஞ்செய்தல் வேண்டும்; சிவபஞ்சாக்ஷர ஞாபகஞ் செய்தல் வேண்டும்; அவசியம்.

2. பொது விதி

1. ஆறு மாதம் அல்லது மூன்று மாதத்திற் கொருதரம், வெள்ளைக் காக்கட்டான் முதலானவைகளால் விரேசனம்[16] வாங்கிக் கொள்ளுதல்.

2. நாலு மாதத்திற்கு ஒருதரம், மருக்காரை முதலியவைகளால் வமனத்திற்கு[17] வாங்கிக் கொள்ளல்.

3. ஒரு வருடத்திற்கு ஒருதரம், முள்ளி முதலானவைகளால் நசியஞ்[18] செய்து கொள்ளல்.

4. நாலு நாளைக்கு ஒருதரம், அத்தி முதலிய வஸ்துக்களால் செய் வகைப்படி செய்த மைகளால் கண்ணுக்கு அஞ்சனந் தீட்டல்.

5. ஒரு பக்ஷம் அல்லது ஒரு வார வட்டத்திற்கு ஒருதரம், சாவதானமாக நல்ல நினைப்போடு தன் வசத்திலிருந்து, மூச்சு அதிர்ந்து மேலிடாது, மெல்லெனப் பெண்போகம் செய்தல். இது விருத்தர்களுக்கு விதித்ததல்ல.

6. வாரவட்டம் அல்லது நாலு தினத்திற் கொருதரம், முலைப்பால், பொன்னுங்கண்ணி முதலிய தயில மிட்டுக் கொண்டு, செம்பாகமான வெந்நீரில், மெல்லென முழுகல்.

---

15 ‘இரண்டடக்கல் செய்யோம்’ – பதார்த்த குண சிந்தாமணி.

16 விரேசனம் – பேதி

17 வமனம் – வாந்தி

18 நசியம் – மூக்கில் இடுதல், உறிஞ்சல்,

7. இளவெயில், கடுவெயில், மழை, குளிர்காற்று, பனி-இவைகளால் உடம்பை வருத்தாமற் காத்துக் கொள்ளுதல்.

8. கடுநடை, ஓட்டம், பெருஞ்சொல், பேரோசை, இசைபாடுதல், வழக்காடுதல், பெருநினைப்பு, பெருஞ்சிரிப்பு, பெருந்துயர், மிகு பார்வை, ஊன்றிக்கேட்டல், துர்க்கந்த நற்கந்த முகர்தல், சுவை விரும்பல், பேருண்டி, பெருந்தூக்கம், வீண்செயல், பெருமுயற்சி, விளையாட்டு, மலமடக்கல், சலமடக்கல், தாகமடக்கல், பெருநீர் குடித்தல், சயனஉணர்ச்சி, பயம், அகங்காரம், இடம்பம், பேராசை, உலோபம், கோபம், மோகம், மதம் - இவை முதலிய தேகேந்திரிய கரண குற்றங்க ளடையா திருத்தல்.

9. பழஞ்சோறு, பழங்கறி, எருமைப்பால், எருமைத்தயிர், மோர், நெய், செம்மறிப்பால், தயிர், மோர், நெய், கேழ்வரகு, வரகு, தினை, சாமை, பருப்புவகை, அதிரசம், அப்பம், சுகியம் முதலிய சிற்றுண்டி, தயிர்ச்சோறு, புளிச்சோறு முதலிய சித்திரான்னம் காரரிசிச்சோறு, முளைக்கீரை, அகத்திக்கீரை, முன்னை முதலான இலைக்கறி, சுரை, பூசுணை, பறங்கி, பீர்க்கு, புடல், பாகல், கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை, கள், சாராயம், கஞ்சா, புலால், மாமிசம் முதலிய விலக்குகளை நீக்கி, விதித்தவைகளை யனு சரித்தல்.

3. சிறப்பு விதி

1. நித்தியம் சூரியோதயமாக 5 நாழிகைக்கு [19] முன்னே நித்திரை நீங்கி எழுந்திருத்தல்.

2. எழுந்தவுடன் விபூதி தரித்துச் சற்றுநேரம் செவ்வையாக உட் கார்ந்து, கடவுளை ஊன்றி நினைத்து எழுதல்.

3. அங்ஙனம் எழுந்து, சிறிதுந் தாமதியாமல், மௌனமாகச் சிறிது தூரம் நடந்து, எவ்விடத்தில் மலசலவுபாதி நேரிடுகிறதோ, அவ் விடத்தில் அப்பொழுதே ஒன்றுஞ் சேஷ்டையில்லாமல் விரை வில்லாமல் இருந்து அறவிடுதல்.

4. பொற்றலைக்கையாந்தகரை, கரிசலாங்கண்ணி-இவைகளில் ஒன்று கொண்டு உள்ளே சிறிது சாரம் போகவும் கபநீர் பித்தநீர் வெளி யாகவும் தந்தசுத்தி செய்தல்.

---

19 சீர்பெறும் அநாதி சிவாகமப் படியே
நேர்பெறு நித்திய நியமம் புரிவோர்
கதிரவன் எழுமுன் கடிகை ஐந்தென
மதிபெற எழுந்து மகேசனை நினைந்தே - நியம அகவல்

கடிகை – நாழிகை.

5. பின்பு திருநீறு தரித்துக்கொண்டு, ஏகாந்தமாக ஓரிடம் பற்றி யிருந்து, சூரியனுதயமாகிற வரையில் கடவுளைத் தியானஞ் செய்துகொண்டிருத்தல்.

6. உதயந் தொடங்கிச் சுமார் சாம பரியந்தம் தக்க முயற்சியோடு பழகுதல்.

7. காலையில் உண்ணாமல் சுமார் பதினைந்து நாழிகைக்கு உண்ணுதல்.

8. காலையில் சூரியோதய மானவுடன் தூதுளை, பொன்னாங்கண்ணி, வில்வம், சீந்தில், பொற்றலைக்கையாந்தகரை, புளியாரை, வல்லாரை, நன்னாரி, கடுக்காய், மிளகு, அறுகம்வேர் - இவைகளில் யாதாயினும் ஒன்றைப் பசும்பாலிற் சுத்திசெய்து சூரணமாக்கிக் கொண்டு சர்க்கரையிற் கலந்தாவது அல்லது சூரணமாகவாவது பசும்பாலில் அனுபானித்தாவது சிறிது சிறிதாக உண்ணுதல்.

9. சுமார் 15 நாழிகைக்கு உண்ணத் தொடங்கும்போது, முன்புசித்த போசன முழுதுஞ் ஜீரணித்ததை நன்றாயுன்றி யறிந்து, பின்பு ஜீரணித்த அக்கணமே விருப்பால் ஏறாமலும் வெறுப்பால் குறை யாமலும் தராசு முனைபோல் அளவறிந்து, அந்த அளவின்படி, அதிக விரைவும் அதிக தாமதமுமில்லாதபடி சமமாகப் புசித்தல்.

10. புசிப்பில் பச்சரிசிச்சாதம், பசும்பால், பசுநெய், முருங்கை, கத்தரி, முள்ளி, தூதுளை முதலிய இளங்காய், பொன்னாங்கண்ணி, தூதுளை முதலிய இளங்கீரை—இவைகளில் மிளகு ஒரு பங்கு, சீரகம் காலே அரைக்காற் பங்கு, வெந்தயம் காற்பங்கு, புளி வீசம் பங்கு, உப்பு வீசம் பங்கு, மிளகாய் வீசம் பங்கு சேர்க்கப்பட்ட கறியமுது குழம்பு ரசம் முதலானவைகளைக்கொண்டு, பெருங்காயம் வெங் காயம் வெள்ளைப்பூண்டு முதலானவைகளைத் தள்ளிப் புசித்தல்.

11. புசித்தபின்பு, மத்தியானந் தொடங்கி 25 நாழிகை பரியந்தம் சத்துவமான விவகாரங்களை மெல்லென இருந்தபடி நடத்தல், பிறர்க்கு விசேஷங் கேளாவகை படித்தல், மெல்லெனப் பேசல்- இவையன்றி நல்ல நினைப்போடிருத்தல்.

12. காலை, மத்தியானம், சாயங்காலம் - இப்பொழுதுகளிலும் மத்தியி லும் நித்திரை செய்யாதிருத்தல்.

13. மத்தியான போஜனம் செய்கிறபொழுது, அடிக்கடி தாகநீர் குடி யாமல், போஜனஞ் செய்த பின்பு, ஒரு தரமாக இளஞ்சூடுள்ள வெந்நீரைக் கிரமமாகத் தாகத்துக்குக் கொண்டு, குளிர்ந்த ஜலம் சிறிதுங் கொள்ளாது தள்ளுதல்.

14. மத்தியானத்தில் சுமார் 5 நாழிகை பரியந்தஞ் செவ்வையாக ஓரிடத்திலிருந்து, மனத்தை ஒருவழிப்படுத்தித் தெய்வ சிந்தனை யோடிருத்தல்.

15. காலைப்புணர்ச்சி, பகற்புணர்ச்சி, அந்திப்புணர்ச்சி, இரவு முன் பங்குப்புணர்ச்சி, காலைப்போஜனம், அந்திப்போஜனம் முதலான வை யில்லாதிருத்தல்.

16. சாயங்காலத்திலும் 5 நாழிகை யாதொரு முயற்சியும் இல்லாமல், ஓரிடத்திலசையாதிருந்து தியானித்தல்.

17. இரவில் 10 நாழிகைக்குள் மத்தியான போஜனத்துக்கு அரைத் தரமாகப் புசித்தல்.

18. அதற்குமேல் இராத்திரி 15 நாழிகை பரியந்தம் மனத்தையடக் கித் தியானித்திருத்தல்.

19. 15 நாழிகை தொட்டு இருபத்திரண்டரை நாழிகை[20] பரியந்தம் மெல்லெனத் தூங்கல்.

20. படுத்து விழிக்கிற பரியந்தம் இடக்கை கீழிருக்கச் செய்தல்.

21. ஆகாரம் அரை, நித்திரை அரைக்கால், மைதுனம் வீசம், பயம் பூச்சியம் ஆகப் பெறுதல்.

திருச்சிற்றம்பலம்

நித்திய கரும விதி முற்றிற்று.

---

20 15 நாழிகை முதல் 22½ நாழிகை வரை = 12 மணி முதல் 3 மணி வரை

2. உபதேசக் குறிப்புகள்

திருச்சிற்றம்பலம்

1. அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்கின்ற நாலிடத்திலும் கடவுட் பிரகாச முள்ளது. அதனில் காரியத்தாலுள்ள விபரம் :— **பிண்டத்தில் அகம் ஆன்மா**, ஒரு பொருளினது உண்மையை அறிதல் ஆன்மஅறிவு. பிண்டத்தில் **அகப்புறம் ஜீவன்**, ஒரு வஸ்துவின் பிரயோஜனத்தை யறிந்த அறிவே ஜீவஅறிவு. பிண்டத்தில் **புறம் கரணம்**, ஒரு வஸ்துவின் நாமருபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் கரணமாகிய மனஅறிவு. பிண்டத்தில் **புறப்புறம் கண் முதலிய இந்திரியங்கள்**, ஒரு பொருளினது நாமருப குணகுற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக்காட்சி, இந்திரிய அறிவு. இதுபோலவே கரணக்காட்சி, ஜீவக்காட்சி, ஆன்மக்காட்சியு முண்டு. இதுபோல், **அண்டத்தில் அகம் அக்கினி**, அண்டத்தில் **அகப்புறம் சூரியன்**, அண்டத்தில் **புறம் சந்திரன்**, அண்டத்தில் **புறப்புறம் நக்ஷத்திரங்கள்.** ஆகவே பிண்டத்தில் நாலிடம் அண்டத்தில் நாலிடம் — ஆக எட்டிடத்திலும் கடவுட் பிரகாசம் காரியத்தாலுள்ளது. காரணத்தாலுள்ள இடம் :— **பிண்டத்தில் புருவமத்தி, அண்டத்தில் பரமாகாசம்.** காரியகாரணமாயுள்ள இடம் நான்கு :— **பிண்டத்தில் விந்து, நாதம். அண்டத்தில் மின்னல், இடி.** சர்வ யோனியிடத்தும், விந்து விளக்கமாகிய மின்னலிடத்தும், நாத விளக்கமாகிய இடியிடத்தும்; இதல்லாது பாரொடு விண்ணாய்ப் பரந்ததோர் ஜோதி என்றும், ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாயும் … … மேற் குறித்த அகமாகிய **ஆன்மப்பிரகாசமே ஞானசபை**, அந்தப் பிரகாசத்துக் குள்ளிருக்கும் பிரகாசம் கடவுள், அந்த உள்ளொளியின் அசைவு நடம் — இதுதான் ஞானகாசநடன மென்றும் அசைவுற்றதே நடராஜரென்றும் ஆனந்தநடன மென்றும் சொல்லுகின்றது. ஆதலால் ஏமம், கனகம், ரஜிதம், ரௌப்பியம் முதலாகச் சொல்வதில் சூரியனிடத்தில் கனகமும் சசியிடத்தில் ரஜிதமும்...... இதுபோல் பிண்டத்தில் **ஆன்மாகாசம்** பொற்சபை யென்றும், **ஜீவாகாசம் ரஜிதசபை** யென்றும் சொல்லுவது. ஆதலால் மேற்குறித்த இடங்கள் யாவற்றிலும் கடவுள் பூரண வியற்கை விளக்கம் காரியமாயும் காரணமாயும் காரிய காரணமாயும் இருக்கின்றது. முக்கிய இடங்களாகிய பிண்டத்தில் நாலும் அண்டத்தில் ஐந்தும் ஆகிய 9 இடத்திலும் கடவுள் விளக்கம் விசேஷ முள்ளது. ஆதலால் நாம் தினம் ஆறு காலத்திலும் மேற் குறித்த பிரகாசமே சபையாகவும் அதன் உள்ளொளியே பதியாகவும்

வணங்க வேண்டும். **எக்காலத்திலும் புருவமத்தியின்கண்ணே நம்முடைய கரணத்தைச் செலுத்த வேண்டும்.** மேற்குறித்த காலங்கள் சூரியஉதயம், உச்சிப்போது, சாயரக்ஷை, மாலை, யாமம், வைகறை — ஆகிய காலங்களில் எல்லாம் வல்ல தலைவனை வணங்குதல் வேண்டும்.

கடவுட் பிரகாசம்

அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்கிற நான்கிடத்திலும் கடவுள் பிரகாசம் காரியத்தாலுள்ள விவரம் :— பிண்டத்தில் அகம் ஆன்மா, அகப்புறம் - ஜீவன், புறம் - மனம் முதலிய கரணம், புறப் புறம் - கண் முதலிய இந்திரியங்கள். அண்டத்தில் அகம் - அக்கினி, அகப்புறம் - சூரியன், புறம் - சந்திரன், புறப்புறம் - நக்ஷத்திரங்கள். ஆகவே பிண்டத்தில் 4, அண்டத்தில் 4, ஆக 8 இடத்திலும் கடவுள் பிரகாசம் காரியத்தா லுள்ளது.

ஞானசபையும் நடராஜரும்

ஒரு பொருளினது நாம ரூப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக்காட்சி, இந்திரியஅறிவு. அதன் நாம ரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் மன அறிவு. அதன் பிரயோஜனத்தை யறிதல் ஜீவ அறிவு. அந்தப் பொருளினது உண்மையை அறிதல் ஆன்மஅறிவு. ஞானசபை யென்பது ஆன்மப்பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற் றைத்தான் சித்சபை அல்லது ஞானசபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகிறது.

சூரியன்

ஏமம் கனகம் என்பன சூரியனைக் குறிக்கின்றன. சூரியனிடத்தில் பொன்னிருக்கின்றது.

2. பிண்ட ஒளியும் அண்ட ஒளியும்

பிண்ட ஒளி		அண்ட ஒளி
ஆன்ம ஒளி	-	அக்கினி ஒளி
ஜீவ ஒளி	-	சூரிய ஒளி
மன ஒளி	-	சந்திர ஒளி
கண்ணொளி	-	நட்சத்திர ஒளி

3. பிண்டாண்ட கிரகண சித்தாந்தம்

இவ்வுலகமும் இவ்வுலகத்திலுள்ள சராசர பேதங்களில் முக்கிய மாயுள்ள சரமாகிய ஜீவராசிகளும் கர்ப்பபேதமும் தோன்றி உய்யும் பொருட்டு, அநேகவித வாயுபேதங்கள் அநாதியில் கடவுளால் உண்டு

பண்ணப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை அமுதக்காற்றும் விஷக்காற்றும். அவை விசேஷ வியாபகமா யிருந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் அமுதக்காற்று பிரமாண்ட பகிரண்ட கடாகத்தில் விசேஷ வியாபகமாயும், இம்மகா அண்டத்திலும் பிண்ட ஜீவரிடத்திலும் ஏகதேச வியாபகமாயும் இருக்கின்றது. விஷக்காற்று மேற்படி பிரமாண்டாதி கடாகத்தில் – ஏகதேசம் நிமிஷகாலம் அல்லது முகூர்த்தம், அசாதாரணத்தில் ஜாமம் வரையில் - வியாபகமாயும், இம்மகா அண்டாதி ஜீவராசிகளிடத்தில் விசேஷ வியாபகமாயும் இருந்து கொண்டிருக்கிறது.

பிரமாண்டாதிகளில் அமுதக்காற்று விசேஷ வியாபகமாயுள்ளதால், அவ்வண்டங்களி லுள்ள சூரிய சந்திர உடுக்கள் முதலியவைகளும் சொற்பகாலத்தில் அழிவடைதலின்றி இருக்கின்றன. விஷக்காற்று ஏகதேச வியாபகமாதலால், கற்பகாலத்தில் வியாப்பியமாயும் வியாபகமாயும் இருத்தலால், அந்தக்காலங்களில் அவை நஷ்டப்படுகின்றன.

மேற்படி விஷக்காற்று கருமை வண்ணமாயும் செம்மை வண்ணமாயும் இரண்டு பாகமாய்ப் பிரியும். இவைகளை இராகு கேதுக்களென வழங்குகின்றனர். இது ஒரு முகூர்த்தம் ஒரு ஜாமம்... அதற்குமேல் இவ்வண்ணமாய், இவ்வண்டகணிதப்படி, அவ்வண்டங்களிற் கணித காலத்தில் வியாபகமா யிருப்பதுதான் சந்திரார்த்த கிரஹண தோஷ காலம். தோஷகாலமென்பது பிரகாசமின்றி இருள்வண்ணமாய்ச் சில காலத்தில் முற்றும் மறைந்தும் சிலகாலத்தில் ஏகதேசம் மறைந்தும் இருப்பதால், இவ்வண்ட புருஷனுக்குக் கரணஸ்தானமாகிய சந்திரனும் ஜீவஸ்தானமாகிய சூரியனும் பிரகாசம் மழுங்குகின்றபடியால் தோஷமெனப் பெயர். மேலும் தோஷம் என்பது இருள், அறியாமை, அஞ்ஞானம். விஷக்காற்று வியாபகமாயுள்ளது இவ்வண்டத்திலும் ஜீவர்களிடத்திலும் ஆதலால், ஜீவகோடிராசிகள் சொற்பத்தில் அடிக்கடி நஷ்டப்பட்டுக்கொண் டிருக்கின்றன.

அமுதக்காற்று இவ்வண்டத்தில் இரவில் அருணோதயந்தொடங்கி உதயபரியந்தம் வியாபகமாய் இருக்கின்றது. அக்காலத்தில் ஜீவர்கள் நன்முயற்சியி லிருப்பது விசேஷநலம். தேகாதி பிண்டத்தில் மேற்படி அமுதக்காற்று வியாப்பியமாயிருக்கும். ஒருகால் ஒரு க்ஷண நேரம் அந்தக் காற்று வியாபகமாயிருக்குங்கால், ஜீவர்களுக்கு இது வரையில் தாங்களறியாததான கடவுள்விளக்கம் உண்டாகும். மேற்படி காற்று வியாபகம் ஏகதேசமு மில்லாவிடில் ஜீவர்கள் விஷக்காற்றினால் சதா வியாபகமடைதலில், இந்தச் சொற்ப ஜீவிப்பும் விருத்திக்கு வர மாட்டாது. அமுதக்காற்று வியாப்பியமன்றி வியாபகமாயிருக்குங்

காலத்தில், ஜீவர்களுக்கு அறிவுவிளக்கம், மனநெகிழ்ச்சி, இந்திரிய அடக்கம், ஈசுரபத்தி முதலியவும் விளங்கும். அக்காலத்தை அமுதக் காற்றின் வியாபக காலமென்று அறியவேண்டும். இதன்றி இருண் மயமாய் முன்பின் தோன்ருது அறிவின்றி யிருக்குங்காலம் விஷக்காற்று வியாபகமாயிருக்குங் காலமென் றறியவேண்டும்.

அண்டத்தில் சந்திராதித்த கிரஹண தோஷம்போல் இப்பிண் டத்தில் கிரஹண தோஷம் யாதெனில்:—பிண்டபுருஷனுக்குப் புற மாகிய கரணமென்னும் சந்திரனுகிய தோற்றும்அறிவு, இரும்பில் துரிசு ஏறுவதுபோல், விஷயவாசனையி லழுந்தி ஏகதேசப் பிரகாச விளக்கமுடையதுதான் சந்திரகிரஹணம். இஃதறியாமை. சூரிய கிரஹணமென்பது: அகப்புறமாகிய ஜீவனென்னும் சூரியனுகிய தோற்றுவிக்கும்அறிவு, செம்பிற் களிம்பேறுவதுபோல், விஷயவாசனை மயமாய் யாதுந் தோன்ருது அறிவின்றி நிற்குங்காலம் சூரியகிரஹணம். இஃது மாயாசிருட்டிக்கு இயற்கையானுலும், இரும்பையும் தாமிரத் தையும் பரிசனுதி வேதிகளால் ரவுப்பியாதி ஏமங்கள் செய்வது போல், நன்முயற்சியாகிய ஜீவகாருண்ய மயமாய்ப் பரிச்சியஞ் செய்தால் மேற்படி துரிசு நீங்கும். மேலும் ஆசாரியர் அனுக்கிரகத்தாலும் நீங்கும். இது பிண்டாண்ட கிரஹண சித்தாந்தம்.

4. அண்ட பிண்ட திசைகள்

1. வடக்குப் பாகம், நக்ஷத்திரப் பிரகாசம்.
2. கிழக்குப் பாகம், சந்திரப் பிரகாசம்.
3. மேற்குப் பாகம், சூரியப் பிரகாசம்.
4. தெற்குப் பாகம், அக்கினிப் பிரகாசம்.

கிழக்குத் திக்கை நோக்கித் தியானம் செய்கிறது போகசித்தியைப் பெறுகிறதற்கு.

மேற்கு - சொர்ண சித்தியைப் பெறுகிறதற்கு.

தெற்கு - சாகாக்கலையை (நித்திய தேகத்தையும் ஞானசித்தியையும்) பெறுகிறதற்கு.

வடக்கு - சித்தசுத்தியைப் பெறுகிறதற்கு.

வடக்கு காற்புறம், தெற்கு தலைப்பாகம்.

இதனுல்தான் தெற்கு ஞானத்தில் சிறந்தது; வடக்கு அஞ்ஞானத்தில் அழுந்தியது.

தலை கீழ், கால் மேல் என்பதற்கு நியாயம்:-

அடி கீழ், முடி மேல்.

அடி தலை, முடி கால்.

தலை கிழக்கு, கால் மேற்கு.

கிழக்கு தாழ்ந்தது, மேல் திக்கு உயர்ந்தது.

மேலும் இவற்றை அனுபவத்தால் அறிக.

பிண்ட திசை

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்பவற்றில்
தலை தெற்கு.
கால் வடக்கு.
நெற்றி கிழக்கு.
முதுகு மேற்கு.

5. அண்ட பிண்ட அமுதங்கள்

அண்ட அமுதம் 4	பிண்ட அமுதம் 4
அக அமுதம்	அக அமுதம்
அகப்புற அமுதம்	அகப்புற அமுதம்
புற அமுதம்	புற அமுதம்
புறப்புற அமுதம் - மழை.	புறப்புற அமுதம் - வியர்வை

அண்ட அமுதம் மழை முதலாக 4
பிண்ட அமுதம் வியர்வை முதலாக 4

6. மழை

புகையின் மூன்றுவது கலையின் சீதளசக்தியினல் மழையுண்டாகின்றது. இதுபோல் சூரியகிரண உஷ்ணஆவியாகிய புகை ஓஷதிகளிலும் நீரிலும் பாரிலும் பொருப்பிலுமுள்ள திரவசக்தியைக் கிரகித்து, வாயுமண்டலத்தில் சேர்த்து, மேலுங்கீழும் உஷ்ணம் நிரம்ப, மத்தியிலுள்ள திரவஅணுக்கள் புழுங்கி நீராய், காலபேத வண்ணம் வாயுவால் பிரேரிக்கப்பட்டு அசைக்கும்போது, கீழுமேலுமுள்ள உஷ்ணவாயு தடிப்பு விலகும்போது, மின்னலாகிய பிரகாசமும், நெருங்கி யொன்றுபடும்போது சத்தமாகிய இடியும், அத்தொனியால் படலம்போல மூடியிருந்த காராகிய மேகம் விலகி வாயுவால் கலங்கிய போது மழையும் உண்டாகும். இதன்றி, மேகம் கடல் ஜலத்தை உண்டு மழைபெய்வ தென்பது பொய்.

7. முச்சுடர்

(சூரியன் சந்திரன் அக்கினி)

சூரியன் ஆணகவும் சந்திரன் பெண்ணகவும், வலம் இடம் சத்தி சிவமுமாக வுடையது மருட்டேகம். வலம் சந்திரனகிய சத்தியாயும் இடம் சூரியனகிய சிவமாயு மிருப்பது அனுபவம். திரிசிய அனுபவத்திலுள்ள இடம் வலமாகவும் வலம் இடமாகவும் அனுபவந் தோன்றும்.

மேலும், சூரியன் அக்கினியோடு கூடினல் திங்களும், சந்திரன் அக்கினியோடு கூடியபோது பானுவும், சூரியன் மதியோடு கூடியபோது பௌமனும், சந்திரன் பானுவோடு கூடியபோது சௌமியனும்,

சூரியன் சௌமியனோடு கூடியபோது குருவும், சந்திரன் பௌமனோடு கூடியபோது பிருகுவும், சூரிய சந்திரர்கள் அக்கினியோடு கூடிய போது மந்தனும் தோன்றும். ஆக 7.

மேற்படி சூரியனுக்குக் கலை 16. மேற்படி கலை 16-ல் சந்திரனுக்குக் கலை 4 போக, இருப்பு கலை 12. சூரியன் காரியவுருவன். சந்திரனுக் குக் கலை 16. மேற்படி கலை 16-ல் தாரகைகளுக்குக் கலை 4 போக, சூரியனால் கொடுத்த 4 கலையுஞ்சேர்த்து சந்திரனுக்குக் கலை 16. சந்திரன் காரியகாரண உருவன். சகலன் சூரியன், கேவலன் சந்திரன். அனுபவத்தில் இடம் வலம் போல் மாறும். பிரமத்துவம் சூரியனிடத் திலும், விஷ்ணுத்துவம் சந்திரனிடத்தினும் உள்ளன. அக்கினிக்குக் கலை 64. இப்போது எட்டுக் கலையோடு காரண உருவனாய் மற்றைக் கலைகளை உள்ளடக்கி நீருறு தீப்போல் எங்குமுடையவன். ஆகக் கலை 96. மேற்படி 96 கலையே 96 தத்துவமாய்ப் பிண்ட வடிவாயிற்று.

அக்கினிகலை 64-ன் குணங்கள் சைவத்தில் 64 திருவிளையாடல்கள் ஆகவும், உண்மை அடியார்கள் 63 அதீதம் ஒன்று ஆகவும் வழங்கு கின்றன. சந்திரகலை 12-மே வைஷ்ணவ பரத்தில் துவாதச ஆழ்வார் களாக வழங்குகின்றன. மற்ற 20 கலையும் கௌமாரம், பாசுபதம், மஹாவிரதம், சாத்தேயம், காணாபத்தியம், காபாலம், சௌரம், மகம் மதீயம், பௌத்தம், கிறிஸ்துவம் முதலிய சமயங்களில் வழங்குகின்றன. இவற்றின் அனுபவங்களைக் குரு முகத்தில் அறிக.

மேற்குறித்த சோம சூரியர்கள் ஒன்றுபடுவது அமாவாசை. ஒன்றுபட்ட சோமன் ஒவ்வொரு கலையாகச் சூரியனிடத்திலிருந்து விடுபட்டு மேலேறிப் பகிரண்டத்தில் செல்லும்போது 16 கலையும் பூர்த்தியாய்ப் பிரகாசிப்பது **பௌர்ணமி**. பகிரண்டத்திலிருந்து பிரமாண்டத்திற்கு வியாபகமாகும்போது, சூரியஉஷ்ணம் சோம கலையை ஒவ்வொன்றாகக் கிரகிக்க ஒருகலையோடு பானுவுடன் சேர்தல் **அமாவாசை**. மேற்படி சோமகலையைப் பானு கிரகிக்காவிட்டால் இவ்வுலகம் ஜீவிக்காது. சூரியன் பிரமாண்ட பகிரண்ட வியாபகி, சந்திரன் பகிரண்ட பிரமாண்ட வியாபகி. சூரியவியாபகம் தோன்றாது, சந்திரவியாபகந் தோன்றும்.

அனுபவத்தில் சத்தி சிவம்

சூரியன் அக்கினியோடு கூடியபோது சந்திரனாம். சந்திரன் அக்கினியோடு கூடியபோது சூரியனாகும். சூரியன் ஆணாகவும் சந்திரன் பெண்ணாகவும், வலது பாகம் சிவமாகவும் இடது பாகம் சத்தி யாகவும் வழங்கி வருவது மருட்டேக நியாயம். வலதுபாகம் சத்தியாக வும் இடது பாகம் சிவமாகவு மிருப்பது அனுபவம்.

சந்திரன்	சூரியன்	அக்கினி
ரூபாரூபி	ரூபி	அரூபி
காரியகாரணன்	காரியன்	காரணன்
சோபாமாத்திரன்	ஒளிமாத்திரன்	பிரகாசமாத்திரன்
சுடாத தன்மை	சுட்டுஞ்சுடாத தன்மை	சுடுந்தன்மை
கலை 12, தாரகை கலை 4 —அர்த்தவடிவன்	கலை 16 வட்டவடிவன்	கலை 64 பூர்ணவடிவன்
பிரமாண்ட பகிரண்ட வியாபகன்	பிரமாண்ட வியாபகி	எங்கும் வியாபகி
பச்சை வெண்மை கலந்தமேனி	பஞ்சவர்ணம் *	சுவர்ணம்
மனஅறிவு சபை	ஜீவஅறிவு சபை	ஆன்மஅறிவு சபை
மனஒளியே பதி	ஜீவஒளியே பதி	ஆன்மஒளியே பதி

* பஞ்சவர்ணங்களாவன :—

வெண்மை	ஆதிசத்தி	அனுக்கிரகம்
பச்சை	பராசத்தி	திரோபவம்
செம்மை	இச்சாசத்தி	சம்மாரம்
கருமை	கிரியாசத்தி	ஸ்திதி
பொன்மை	ஞானசத்தி	சிருஷ்டி

8. சிருட்டி நியாயம்

ஆகாசம் அநாதி. அதுபோல் அதற்குக் காரணமான பரமாகாச சொரூபராகிய கடவுள் அநாதி. அநாதியாகிய ஆகாசத்தில் காற்றும் அநாதி. அநாதியான வெளியில் காற்று எப்படி அநாதியோ, அப்படிக் கடவுளிடத்தில் அருட்சத்தி அநாதியாய் இருக்கின்றது. ஆகாயத்தில் அணுக்கள் நீக்கமற நிரம்பியிருக்கின்றன. இது போல் கடவுள் சமுகத்தில் — ஆன்மாகாசத்தில் — அணுக்கள் சந்தானமயமாய் நிரம்பி யிருக்கின்றன. அந்த அணுக்களுக்கு ஆன்மா என்றே பெயர்.

பூதாகாயத்தி லிருக்கும் சாதாரண அசாதாரண அணுக்கள் எழுவகையாய்ப் பிரியும். அவையாவன : வாலணு, திரவவணு, குருவணு, லகுவணு, அணு, பரமாணு, விபுவணு. மேற்படி அணுக்கள் அனந்தவண்ண பேதமாய் இருக்கும். இவற்றில் காரியவணு, காரிய காரணவணு, காரணவணு என மூன்றுவகையாய், பக்குவ, அபக்குவ, பக்குவாபக்குவ மென நிற்கும். இவைபோல் ஆன்மாகாயமான கடவுள் சமுகத்தில் ஆன்மாக்களும் மூவகையாய் நிற்கும். யாவையெனில் பக்குவ ஆன்மா, அபக்குவ ஆன்மா, பக்குவாபக்குவ ஆன்மா என மூவகைப்படும். ஆகாயத்திலிருக்கும் அணுக்கள் மூன்று விதமான

தற்குக் காரணம் அங்குள்ள காற்றேயாம். அதுபோல் ஆன்மாக்கள் மூவிதமானதற்குக் காரணம் கடவுள் சமுகத்திலுள்ள அருட்சத்தியே யாம்.

அப்படி மூவகையான ஆன்மாக்களுக்கு — அருட்சத்தியின் சமுகத்தில் தோன்றிய இச்சை ஞானங் கிரியை யென்னும் பேதத்தால் ஆன்மாக்களுக்குத் தேகம் மூன்றுள. யாவையெனில்: கர்ம தேகம், பிரணவதேகம், ஞானதேகம் என மூன்று விதம். அப்படி மூன்று தேகம் உண்டானதற்குக் காரணம்: பூத ஆகாயத்தி லுண்டான வாயு பேதத்தினல் சோமசூரியாக்கினி யென மூன்று வகை நிற்பன போலுணர்க. அந்த ஆகாயத்தை விரிக்கில் அனந்த பேதமாம். வாயுவின்பேதம் அதுபோலனந்தம். ஒருவாறு அறுபத்து நான்குகோடி பேதம். இவற்றில் அமுதபாகம், விஷபாகம், பூதபாகம், உஷ்ணபாகம் எனப் பலபேதப்படும்.

மேற்படி அணுக்கள் அனந்த வண்ண மாதலால், அனந்த அணுக்கள் சேர்ந்து ஒரு வித்தாய், இவ்வித்து திரவஅணு சம்பந்தமாய் குரு அணுவோடு சேரும்போது, பூதகாரிய அணுவாகிய கிரண உஷ்ணத்தால் ஜீவிக்கும். ஜீவித்த ஓஷதி முதலியன இந்த நியாயத்தால் வர்ணம் ருசி முதலிய பேதப்படுகின்றன. இவ்வண்ணமே பௌதிக பிண்ட அணுக்கள் காரண சூரிய உஷ்ணமாகிய ஜீவ உஷ்ணத்தால் வடிவமாய், பரமகாரணதயையால் ஜீவிக்கின்றன. சிலகாலத்தில் வித்துக்களாதியாம். சிலகாலத்தில் விருக்ஷமாதியாம். எல்லாவற்றிற்கும் ஆதியாயுள்ளது பூதகாரிய அணுவாகிய சூரிய கிரணமே யாம்.

இவ்வண்ணமே, ஒரு காலத்தில் கடவுள் பிரேரகத்தால் அருட்சத்தி ஆன்மாகாசத்தில் விசிரிம்பிக்க, ஆன்மாக்கள் வெளிப்பட்டுப் பஞ்சகிருத்தியத் தொழிற்படும். மேற்படி ஆன்மாக்கள் வெளிப்பட்ட அக்கணமே, மேற்படி ஆகாயம் சந்தானமாதலால், ஆன்மாக்கள் நிரம்பி நிற்கும். ஆதலால் **பஞ்சகிருத்தியம் எக்காலத்தும் தடையுறுது.** ஆன்மாக்கள் தாழ்ந்த கதியடைவது அனதியியற்கை யல்ல; ஆதி செயற்கையே யாம். ஆணவம் அனதி யியற்கையே யாம். இதன் ரஹஸ்யம் குருமுகமாயறிக.

9. பக்ஷபேதமும் சிருஷ்டியும்

சிருஷ்டிகள் பக்ஷபேதத்தால் அனந்தவகை. பக்ஷமாவன அணுபக்ஷம், பரமாணுபக்ஷம், சம்புபக்ஷம், விபுபக்ஷம், பிரகிருதிபக்ஷம் — ஆக 5. இவற்றில் சம்பு, விபு — இவ்விரண்டிற்கும் அபக்குவமில்லை. மற்ற மூன்றிற்கும் பக்குவ அபக்குவ முள. இதற்குப் பிரமாணம். ''அடர்மலத்தடையால் தடையுறும்'', ''தடையுறுப்பிரமன்'' என்னும்

திருப்பாசுரங்களின் * உள்ளக்கிடையா லுணர்க. மேற்படி பக்ஷ சிருஷ்டி விசித்திரங்களாவன: அணுபக்ஷ அபக்குவ சிருஷ்டி ஓஷதிகளாலும் பௌதிகங்களாலும் ஆகார மூலமாய் ஸ்திரீ புருஷ சம்பந்தத்தோடு உண்டாக்குவது. மேற்படி பக்குவ சிருஷ்டியாவது புருஷன் ஸ்திரீயைப் பார்ப்பதுபோல் தன் அஸ்தத்தால் ஸ்திரீயைத் தடவி ஊன்றி நோக்கிப் புருஷனோடு தேகசம்பந்தஞ் செய்வித்து உண்டாக்குவது. பரமாணுபக்ஷ அபக்குவ சிருஷ்டி தேகத்தைக் கரத்தால் பரிசித்து ஊன்றிப் பார்த்த உடன் கருத்தரித்தல். மேற்படி பக்ஷத்தில் பக்குவம் கண்ணால் பார்த்த உடனே புணர்ச்சியன்றிக் கருத்தரித்தல். சம்புபக்ஷம் வாக்கினால் சொன்னவுடன் கருத்தரித்தல். பிரகிருதி பக்ஷத்தார் சங்கற்பித்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் பிண்டம் கீழ்த்தோன்றுதல். விபுபக்ஷ சிருஷ்டி பார்த்தவுடன் திரண முதலானவற்றையும் நரனாகச் செய்வித்து அநேக விசித்திரங்கள் உண்டுபண்ணுவது. மேற்படி சிருஷ்டிகள் பல; வேதாகமங்களிலேயும் பலபட விரிந்தன.

இந்து வேதத்தின் முக்கியாமிசத்தை ... கிறிஸ்தவர்கள் 7 நாளில் இந்த உலகத்தைப் படைத்ததாகச் சொல்லுவதின் உண்மை — அது வல்ல — யாதெனில்: சில அனுபவ விஷயங்களை அது விரிக்கின்றது. கைந்நொடிப்பொழுதில் 60-ல் 7 பாகம் ஆகிய 7 கலையில் முடிந்தது. மேற்படி கலைகளாவன பெண்பாகத்தில் 4, ஆண்பாகத்தில் 3 — ஆக 7. ஒவ்வொரு கலையில் தாது அணுவாய்ச் சேர்ந்து, 7-வது கலையில் கரு சம்பூர்ணமாய்ச் சப்த தாதுவுங் கூடிய பிண்டமாகும்.

கலை

பெண்பாகத்தில் கலை 4, ஆண்பாகத்தில் கலை 3, ஆகக் கலை 7. ஒவ்வொரு கலையில் ஒவ்வொரு தாது அணுவாய்ச் சேர்ந்து 7-வது கலையில் கரு சம்பூரணமாய்ச் சப்த தாதுக்களும் கூடியபின் பிண்டமாகும்.

சிருஷ்டி வகை

சிருஷ்டிவகை 5: அணுபக்ஷம், பரமாணுபக்ஷம், சம்புபக்ஷம், விபுபக்ஷம், பிரகிருதிபக்ஷம். இவற்றில் சம்பு விபு தவிர மற்றவைகளுக்கு பக்குவம் அபக்குவம் உண்டு. அணுபக்ஷத்தில் அபக்குவ சிருஷ்டியாவது ஓஷதிகளையும் பவுதிகங்களையும் உள்ளுக்குக் கொடுத்து, ஸ்திரீ புருஷ சம்பந்தத்தோடு பிரஜோத்பத்தி செய்வது; பக்குவ சிருஷ்டி புருஷன் ஸ்திரீயைப் பார்ப்பதுபோல் அஸ்தத்தால் தடவி ஊன்றிப் பார்த்து, தேக சம்பந்தம் செய்து ஸந்தானத்தை உண்டாக்குவது: பரமாணுபக்ஷ அபக்குவ சிருஷ்டியாவது புருஷன் தேகத்தைத் தடவிப்

* திருஅருட்பா 3926, 3925

பார்த்த உடனே கருத்தரித்தல்; பரமாணுபக்ஷ பக்குவ சிருஷ்டியாவது கண்ணால் பார்த்தவுடன் கருத்தரித்தல். சம்புபக்ஷ அபக்குவ சிருஷ்டி வாக்கினால் சொன்னவுடன் கருத்தரித்தல். சம்புபக்ஷ * பக்குவ சிருஷ்டி யாவது சங்கற்பித்த மூன்றே முக்கால் நாழிகைக்குள் கருத்தரித்துக் கீழே பிண்டம் வெளிப்படல். விபுபக்ஷமாவது பார்த்தவுடன் திருண முதலானவற்றை மனுஷியனாகச் செய்து, அதில் அனேக விசித்தி ரங்கள் செய்தல்.

10. மும்மலபேதமும் சிருட்டியும்

ஆணவம் மாயை கன்மம் என மலம் மூன்று. இதில் பக்குவம் 3, அபக்குவம் 3 — ஆக 6. இவை ஒவ்வொன்றும் மும்மூன்றாக விரிதலின் 18 ஆம். இந்தக் கன்ம பேதத்தால் அருட்சத்தியின் சமுகத்தில் எழு வகைத் தோற்ற முண்டானது. மேற்படி கன்ம மலத்தால் சிருட்டி உண்டாகும் விவரம் ஒருவாறு :—பக்குவ ஆணவம், பக்குவமாயை — இவ் இரண்டினாலும் விஞ்ஞானகலாபேதம். அபக்குவமாயை, அபக்குவ கன்மம், அபக்குவ ஆணவம் கூடியது தேவ நரக பைசாசங்கள். பக்குவ மாயை, அபக்குவ கன்மம் கூடியது ஜீவர்கள். அபக்குவகன்மம், அபக்குவகன்ம ஆணவம், அபக்குவகன்ம மாயை - இவை கூடியது தாவர உயிர்கள். இதை விரிக்கில் பெருகும்.

ஆணவம் மாயை கன்மம்

ஆணவம், மாயை, கன்மம் — இம்மூன்றில் பக்குவம் 3, அபக்கு வம் 3 ஆக 6-ல் ஒவ்வொன்றில் மும்மூன்றாக விரிந்தவை 18. பக்குவ ஆணவம் பக்குவமாயை யிவ்விரண்டும் தனித்து நிற்பது விஞ்ஞானகலர். சுர நரக பைசாசங்கள் அபக்குவமாயை அபக்குவ கன்மம் அபக்குவ ஆணவம் கூடித் தடித்தது. ஜீவர்கள் பக்குவமாயை அபக்குவகன்மம். தாவரங்கள் அபக்குவகன்மம் அபக்குவமாயை அபக்குவஆணவம் — இந்த மயமாக நிற்றல்.

11. எழுவகைப் பிறப்பு

இந்தத் தேகத்திற்குப் பிறப்பு 7 உண்டு. அது போல் எழுவகைப் பிறப்பிலும் ஒவ்வொரு பிறப்பிற்கு எவ்வேழு பிறப்புண்டு. அந்த எவ்வேழு பிறப்பும் ஒவ்வொன்றில் அனந்தமாய் விரிந்த யோனி பேதங்களின் விரிவெல்லாம் தோன்றி மேலேறி மறுபிறவி உண்டாம். ஒவ்வொரு பிறவியும் எந்தக் கற்பத்தில் நஷ்டமடைகின்றதோ அந்தக் கற்பகாலம் வரையில் தோற்ற மில்லாமல் மண்ணில் மறைந்திருந்து, மறுகற்பத்தில் தோன்றி, இவ்விதமாகவே மற்ற யோனிகளிடத்திலும் பிறந்து, முடிவில் இத்தேகங் கிடைத்தது. ‘ இத்தேகத்திற்கும் ஏழு

* பிரகிருதி பக்ஷம்?

பிறவி யுண்டு. யாதெனில்:—கர்ப்பத்தில் ஐந்து மாதம் வரையில் குழவியாயிருப்பது ஒன்று, அவயவாதி உற்பத்திக் காலம் ஒன்று, பிண்டம் வெளிப்பட்ட காலம் ஒன்று, குழந்தைப் பருவம் ஒன்று, பாலப்பருவம் ஒன்று, குமாரப்பருவம் ஒன்று, விருத்தப்பருவம் ஒன்று ஆகப் பிறவி 7. இவ்வாறே தாவர முதலியவற்றிற்கு முள. மேலும், ஸ்தூலப் பிறப்பு 7, சூட்சுமப் பிறப்பு 7, காரணப்பிறப்பு 7. ஆதலால், மேற்குறித்த ஸ்தூலப்பிறப்பு, சூட்சுமப்பிறப்பு யாதெனில்: ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, ஜாக்கிரத்தில் சொப்பனம், ஜாக்கிரத்தில் சுழுத்தி, சொப்பனத்தில் சொப்பனம், சொப்பனத்தில் சுழுத்தி - ஆக பிறப்பு 7. காரணப்பிறப்பு - மனோ சங்கற்பங்களெல்லாம் பிறவி. ஆதலால் மேற்குறித்த பிறவிக்குக் காரணம் நினைப்பு மறைப்பு. அது அற்றால் பிறவியில்லை. எப்படி அறுமெனில்: **பரோபகாரம் சத்விசாரம் - இவ்விரண்டாலும்** மேற்குறித்தது நீங்கிச் **சிவானுபவம் பெறலாம்.**

பிறப்பு

பிறப்பு 7 என்பது ஒவ்வொரு தேகத்திலும் ஏழு பிறப்பு. அதாவது கர்ப்பத்தில் 5 மாதம் வரையில் குழவியாக விருப்பது 1, அவயவாதி உற்பத்திக்காலம் 1, பிண்டம் வெளிப்பட்ட காலம் 1, குழந்தைப் பருவம் 1, பாலப் பருவம் 1, குமாரப் பருவம் 1, விருத்தாப்பியப்பருவம் 1 ஆகப் பிறவி 7. தாவர முதலிய எழுவகைத் தோற்றத்திலும் ஒவ்வொன்றில் ஏழு பிறவி யுண்டு. ஒரு பிறப்பில் இறந்தால், ஒரு கற்ப காலம் வரையில் தோற்றமில்லாமல் மண்ணில் மறைந்திருக்கும். மறு கற்பத்தில்தான் மறுபடியுந் தோன்றவேண்டும். காரணப் பிறப்பு 7, சூட்சுமப்பிறப்பு 7, தூலப்பிறப்பு 7, அன்றியும், சாக்கிரப்பிறப்பு 1, சொப்பனப்பிறப்பு 1, சுழுத்திப் பிறப்பு 1, சாக்கிரத்தில் சொப்பனப் பிறப்பு 1, சாக்கிரத்தில் சுழுத்திப் பிறப்பு 1, சொப்பனத்தில் சொப்பனப் பிறப்பு 1, சொப்பனத்தில் சுழுத்திப் பிறப்பு 1, ஆக 7. இதன்றி மனோ சங்கற்பமெல்லாம் பிறப்புக்களாம்.

ஜென்மம்

பூர்வஜென்மம் என்பது கர்ப்பகோளவாசம். உத்தரஜென்மம் என்பது ஜனனகாலம்.

12. ஆண்பெண் - பெண்ணாண்

ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும் இருக்கும்விதம் எவ்வாறெனில் :— பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், பிரகிருதி, ஆன்மா வென்னும் 7-ம் கூடி, சுக்கில சுரோணித சம்பந்த சப்த தாதுவாய், சிருஷ்டிக்குக் காரணமாயின. ஆதலால் ஆண்பாகம் சேராது பெண்ணுருவப்படாது. பெண்பாகஞ் சேராது ஆணுருவப்படாது.

மேலும் ரூப பேதத்தைப் பெண் ஆண் என்பது அறியாமை. மேலும் அறிவினுயர்ச்சி தாழ்ச்சியாலும், சிருஷ்டிக்குக் காரணமான வித்து தங்குவதற்கு க்ஷேத்திரமானதாலும் ஒருவாறு உருவத்தால் கொள்ளலாம் ; அனுபவத்தால் கொள்ளப்படாது. அறிவினுயர்ச்சி தாழ்ச்சியென்பது ஜீவஅறிவாகிய மனஅறிவு பெண்ணிடத்தும் ஆன்ம அறிவாகிய அறிவு ஆணிடத்தும் உள்ளது. மேலும் மன அறிவு புத்தி அறிவு என்றும் சொல்லக்கூடும். ஆதலால் உருவம் குறிப்பது அவசியமல்ல. மேலும் ஆகாசத்தில் பிருதிவி தோன்றுவது போல் ஸ்திரீ பாகமாகிய பிருதிவியில் ஆகாசமுந் தோன்றும். ஆனதால் அனுபவத்தில் தெரியும்.

ஆண்பெண் பெண்ணாண்

ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணுமென்பது எவ்வாறென்றால் :— பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், பிரகிருதி, ஆன்மா என்னும் 7-ம் கூடிச் சுக்கில சுரோணிதமாய் ஸப்ததாதுவாகி, சிருஷ்டிக்குக் காரணமாயிருப்பனவாதலால், ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணுமிருப்ப துண்மை. ரூப பேதத்தால் பெண் ஆண் என்பது பொய். பெண் ஆண் என்னும் நாம பேதம் வருவானேன்? அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் என்க. ஆன்மஅறிவு ஆண், ஜீவஅறிவு பெண். ஆன்மஅறிவென்பதும் ஜீவஅறிவென்பதும் புத்திஅறிவும் மன அறிவுமாம். பிரத்தியக்ஷானுபவம் யாதெனில் :— புருஷபாகம் 3-ல் ஆகாசத்தில் பிருதிவியும், பெண்பாகம் 4-ல் பிருதிவியினிடத்தில் ஆகாசமும் தோன்றி அடங்குவதுபோல், பெண் ஆணாகவும் ஆண் பெண்ணாகவும் நியாயம் உண்டாயிற்று.

13. ஆண் பெண் பருவம்

ஆண் பிள்ளைப்பருவம் 5	பெண் பிள்ளைப்பருவம் 8
சைசவம் 5 வரையில்	பேதை 7 வரையில்
வாலிபம் 15 வரையில்	பெதும்பை 9 வரையில்
கௌமாரம் 30 வரையில்	மங்கை 12 வரையில்
யௌவனம் 40 வரையில்	மடந்தை 16 வரையில்
வார்த்திகம் 40-க்கு மேல்	அரிவை 25 வரையில்
	தெரிவை 30 வரையில்
	பேரிளம்பெண் 40 வரையில்
	விருத்தை 40-க்கு மேல்

14. கரு உற்பத்தி

கருத்தோன்றும் சுக்கில நியாயம் யாதெனில் : சுக்கிலம் இரண்டரை வராகனெடை யளவா யிருக்கும். அதில் விஷபாகமாகிய சத்தி 1 ; சாதாரண மென்னும் பூதமாகிய அறிவு 1 ; அசாதாரண அமுத மாகிய

விந்து அரை - ஆக - இரண்டரை. இதுபோல் பெண்பாலிடத்தும் சுரோணிதமுளது. மேற்கண்ட சுக்கில சுரோணித மிரண்டினும் கடவுள் ஆவியுள்ளது. கோசத்தின் முன் விஷம், அதை அடுத்து பூதம், அதற்கு மேல் அமுதம் உண்டு. இவ்வாறு பெண்பாலிடத்து முண்டு. முன்னுள்ள விஷபாகம் புணர்ச்சிக் காலையில் வெளிப்பட்டால் தேகநஷ்டம்; பூதம் வெளிப்பட்டால் வியாதி; அமுதம் வெளிப்பட்டால் சந்ததி விருத்தி. கடவுளருளால் காலச்சக்கரம்போல் ஏகதேசத்தில் கோச உபஸ்தங்களின் அமுதபாக நாடியை முன்னே தள்ளி, விஷாதிகளைப் பின்னே சேர்த்துக் கருத்தரிக்கச் செய்விப்பார். இந்த நியாயத்தால் இடைவிடாது புணருகிறவர்களுக்குக் கர்ப்பமில்லை. மேலும், விந்து வளம், இடவளம், வன்னி, கிருமி, மோக விசேடம் — இவற்றாலுங் கர்ப்ப மில்லை.

சுக்கிலம் உண்டாவதற்குக் காரணம்: தினம் ஆகாரங்கொண்டால் அவ்வாகாரம் மார்பிடத்தில் ஓர் தட்டில் தங்கும். அந்தத் தட்டின் மேல் கடவுள் கடவுளி என் றிரண்டாகி யிருக்கிறது. உண்ட அன்னத்தை இரண்டரை நாழிகையில் — அந்த அன்னத்திலுள்ள அமுதைப் பிரித்து, ஊட்டவேண்டிய தத்துவத்திற்கு ஊட்டுகின்றது. மறுபடியும் ஐந்து நாழிகைக்குள் மேற்படி அன்னத்தினது மத்திய தரமாகிய நெகிழ்ச்சியைக் குறித்துச் சுக்கிலமாக்கி, இரண்டரை வராகனெடையில் கோசநுனியில் ஒன்றும் நாபியில் ஒன்றும் **பிரமரந்திரத்தில்** அரையுஞ் சேர்த்து, மற்றவைகளைக் கொண்டு அங்கங்கு விளக்கத்தை யுண்டு பண்ணி ஈளை குரும்பை நகத்தூசு தொப்புளழுக்கு கண்பீளை முதலான அழுக்கை வெளிப்படுத்துகின்றது. மேற்படி அன்னத்தை ஏழரை நாழிகைக்குள் — அதிலுள்ள திரவாம்சத்தைப் பிரித்து, உதிரமாக்கி யூட்டுகின்றது. ஏழரைக்குமேல் மேற்படி சக்கையை மலபாகத்தில் தள்ளி விடுகின்றது. இதுபோல் எந்த வஸ்துக்களையும் பிரிக்கின்றது. ஆதலால், ஆகாரங்கொண்ட ஏழரை நாழிகைக்கு மேல் ஆகாரங் கொள்ளவேண்டும்.

சுக்கில வகை

சுக்கிலம் 3 வகை. அது 2½ வராகனெடை யிருக்கும். விஷம் 1, சாதாரண பாகம் 1, அமுதபாகம் ½, ஆக பாகம் 2½. இதுபோலவே ஸ்திரீகளுக்குச் சுரோணித மிருக்கும். சுக்கில சுரோணிதத்தின் மேல் கடவுள் ஆவியுருவா யிருப்பர். தேகசம்பந்த காலத்தில் விஷபாகம் வெளிப்பட்டால் தேகநஷ்டம், சாதாரண பாகம் வெளிப்பட்டால் வியாதி. அமுதபாகம் வெளிப்பட்டால் சந்தான விருத்தி. இந்த நியாயத்தால் சதா தேகசம்பந்தம் செய்தாலும், சந்தான விருத்தி ஏகதேசம்.

சுக்கில சுரோணிதம்

சுரோணிதப் பையிடத்தில் மூன்று மணி சேர்ந்த கொத்து 1 வலது புறத்திலும், நான்கு மணி சேர்ந்த கொத்து 1 இடது புறத்திலும் இருக்கின்றன. சுரோணித சுக்கிலம் கலந்து கர்ப்பந் தரிக்கிற காலத்தில், மூன்று சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் ஆண் குழந்தையும் நான்கு சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண் குழந்தையும் பிறக்கும். புணர்ச்சிக் காலத்தில் வலது புறம் சாய்வாகப் புணர்ந்தால் ஆணும், இடதுபுறம் சாய்வாகப் புணர்ந்தால் பெண் குழந்தையும் பிறக்கும்.

15. சப்த தாதுக்கள்

ஆணில் 3, பெண்ணில் 4. ஆணில் மூன்றுவன :— ஆகாசம், பிரகிருதி, ஆன்மவுணர்ச்சி — இவைகள் ஒருமித்துச் சுக்கிலமாகத் தடித்துக் கோசத்தடியில் செம்பரத்தம்பூவிதழ் மூன்று மொன்ரு யடுக்கியது போலிருக்கும். பெண்ணிடத்தில் நான்காவன :— பிருதிவி, அப்பு, தேயு, இயமானன் என்னும் வாயு — ஆகநான்கும் ஒருமித்துப் பல்லிமுட்டைபோல் 4 ப்பாகமாகப் பிரிந்து ஒரே வண்ணமாய் யோனிக்குள் இருக்கும். ஆக 7-ம் கூடி ஒருமித்துச் சுக்கில சுரோணித சம்பந்தப்பட்டுப் பிண்டமாம். இது சப்த தாது. மேற்படி தாதுக்களின் பெயர் தோல், அஸ்தி, தசை, மூளை, சுக்கிலம், இரத்தம், இரசம்—ஆக ஏழு. மேற்படி சத்துக்கள் ஆணிடத்துள்ள இடங்கள் மூளை, தொப்புள், லிங்கத்தடி; பெண்ணுக்குள்ள இடங்கள் மூளை, தொப்புள், உபஸ்தத்தடி, ஸ்தனத்தின் கீழ். புணர்ச்சிக் காலத்தில் இந்தச் சத்துச் சேர்ந்து வெளிப்பட்டால் கர்ப்பமுண்டாம்.

தேக சத்து

ஆண் பிள்ளையின் தேகத்தில் 3 இடங்களில் சத்துண்டு. அவை, 1. மண்டையின் மூளை, 2. கொப்பூழ், 3. இலிங்கத்தின் கீழ்புறம் ஆம். பெண் பிள்ளைக்குத் தேகத்தில் சத்து 4 இடங்களில் உண்டு. அவை, 1. மண்டையின் மூளை, 2. ஸ்தனங்களின்கிழ், 3. கொப்பூழ், 4. குய்யம். தேகத்தைத் திறந்து வைத்திருத்தல் ஆகாது; சத்துக் காய்ந்துபோம்.

சப்த தாதுக்கள்

ஆணிடத்தில் 3, பெண்ணிடத்தில் 4 என்பது: ஆணிடத்தில் ஆகாசம், பிரகிருதி, ஆன்மவுணர்ச்சி — இம்மூன்றும் ஒருமித்துச் சுக்கிலமாய், அறிவு சத்தி வித்து என்னும் பாகத்தோடு தடித்து ஓர் மணியாம். பெண்ணிடத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் சூரியன், சந்திரன், அக்கினி, இயமானன் என்னும் உயிர் ஆக நான்கும் சேர்ந்து சுரோணித மாயிற்று. ஆக ஏழுங்கூடிச் சப்த தாதுக்களாயின்,

16. பிண்ட இலக்கணம்

தலை அண்டம், மார்பு முதலானவை பிண்டம். அண்டத்தில் பிண்டம் புருவமத்தி, அண்டத்தி லண்டம் பிரமரந்திரம். இதில் சோம சூரி யாக்கினி பிரம விஷ்ணுக்கள் இருக்குமிடம் : நேத்திரம் புருவமத்தி, அண்ணு, பிரமரந்திரம். இதில் பிரகாசமாயும் அறிவாயும் பிராணவாயு வாயும்......இருக்கின்றது. பிண்டத்தில் பிண்டம் இடுப்புக்குங்கீழ் பாதபரியந்தம். பிண்டத்தி லண்டம் பீசம். பிண்டம் வயிறு ......மேற்படி பிண்ட ஸ்தானத்தில் கர்த்தாக்களிருக்கு மிடம் கோசம், தொப்புள், மார்பு ; இவர்கள் வண்ணம், நாடி, உஷ்ணம், காற்று, குறி முதலிய பேதங்களாம். ஆதலால், பிரம விஷ்ணு ருத்திர பேதங்கள் அனந்த கோடி. அண்டத்தைப் பார்க்கிலும் பிண்டம் விசாலமுள்ளது. இது போலவே பிரமாண்ட நியாயம்.

இந்தத் தேகத்தில் ஜீவன் இருக்கின்ற ஸ்தானம் 5. அதில் முக்கிய ஸ்தானம் 2. அவை யாவை? கண்டம், சிரம் சிரத்திலுள்ளது பரமாத்மா என்னும் சாமானியஜீவன் ; இது இறக்காது. கண்டத்தி லுள்ளது ஜீவாத்மா என்னும் விசேஷஜீவன் ; இது இறந்துவிடும். மேற்படி தேகத்தில் பிரமபேதம் கீழும் மேலு மிருப்பதால், நாமடைய வேண்டிய பதஸ்தானங்கள் எவை என்ருல் ; அவை கண்டமுதல் உச்சி வரையில் அடங்கியிருக்கின்றன. மேற்படி பதங்களாவன சொர்க்க பூர்வமாக சதாசிவபத மீருக வுள்ளன. இதற்கு மேல் நாதாதி சுத்த மீருக வுள்ளன. கைலாசாதி பதங்கள் உந்திக்கு மேல் கண்ட மீருக வுள்ளன ; இது சாதாரணபாகம். நரக இடமாவன உந்தி முதல் குத பரியந்தம். கர்ம ஸ்தானம் குத முதல் பாத மீருக வுள்ளது. இவைகளில் பிரமாதிப் பிரகாச முள்ளது. அனுபவிப்பது கண்டத்தில். இந்தத் தேகத்தில் எமனிருக்குமிடம் குதமாகிய நரகஸ்தானத்துக்கு இடது பாகம். மேற்படி தேகத்தில் ஆன்மா தனித்திருக்கும் ; ஜீவன் மனமுதலிய அந்தக்கரணக் கூட்டத்தின் மத்தியிலிருக்கும்.

பிண்டத்தில் பூர்வமென்பது தலை, உத்தரமென்பது கால். பூர்வமென்பது பூர்வசம்பந்தத்தால் வந்த பெயர். பூர்வஞான மென்பது நெற்றிக் கண்ணால் பார்த்தல். பிண்டத்திற்குக் கிழக்கு முகம், மேற்கு கால், வடக்கு வலதுகை, தெற்கு இடதுகை ; கொடிமரம் தொப்புளடி, மேற்படி மரத்தின் அளவு உண்ணாக்கு, கொடி புருவ மத்திக்குள்ளிருக்கும் வபை, பலிபீடம் தொப்புள், நந்தி என்பது பசு ஆணவமலம், மூலாதாரத்தினது உள்ளங்கமே சிவலிங்கம், வாய் வாசல், புருவமத்தி சபை, அறிவே பதி ; ஆதி கால், அநாதி தலை ; கீழ் தலை, மேல் கால். ஆதலால், பூர்வம், பூர்வபூர்வம், உத்தரம், உத்தரோத்தரம் என நான்கு. இதில் பூர்வமென்பது புறப்புறமாகிய நக்ஷத்திரம் போன்ற இந்திரியக்

காட்சி. பூர்வபூர்வம் புறமாகிய சசிபோன்ற கரணக்காட்சி. உத்தரம் அகப்புறமாகிய பரிதி போன்ற ஜீவக்காட்சி. உத்தரோத்தரம் அக மாகிய அக்கினி போன்ற ஆன்மக்காட்சி. ஆதலால் அகம், அகப்புறம் புறம், புறப்புறம் என்னும் நான்குமே மேற்குறித்த பூர்வாதி உத்த ரோத்தரமென வழங்குவது.

பிண்ட நியாயம்

பிண்ட நியாயம். அண்டமென்பது கழுத்துக்கு மேல் சிரம். பிண்டமென்பது கழுத்துக்குக் கீழ் பாதம் வரையில். அண்டத்தில் சோமன் சூரியன் அக்கினி பிரமா விஷ்ணு ருத்திரன் இருக்குமிடம் நெற்றி. பிண்டத்தில் பிரமா, விஷ்ணு, ருத்திரன் இருக்குமிடம் பிரஜாபதி, தொப்புள், மார்பு. இவர்கள் வாயு வடிவம். இதிற் பிரம பேத மனந்தம். விஷ்ணு ருத்திர பேத மனந்தம். அண்டத்தைப் பார்க்கிலும் பிண்டம் விசாலமுள்ளது. இதுபோலவே பிரமாண்ட நியாயம்.

ஜீவஸ்தானம்

ஜீவ னிருக்கிற ஸ்தானம் 5-ல் முக்கிய ஸ்தானம் 2. அவை சிரசு, கண்டம். சிரத்திலிருக்கிற ஜீவன் இறக்கிற தில்லை, கண்டத்தி லிருக்கிற ஜீவன் இறக்கும்.

சுவர்க்க நரகம்

மனித தேகமே சுவர்க்கம் நரகம் இருக்கிற இடம். பிரமபதம் விட்டுணுபதம் ருத்திரபதம் மயேசுரபதம் சதாசிவபத முதலிய பதங் களின் இடம் இந்த மனிததேகத்தில் கண்டம் முதல் உச்சி வரையில். இந்தப் பதங்களுக்குச் சுவர்க்கம் என்று பெயர். நரகம் நரகாதிகளுக் கிடம் உந்தி முதல் குத பரியந்தம். இயமனிருக்குமிடம் குதத்திற்கு இடது பாகம்.

ஆன்மாவும் ஜீவனும்

ஆன்மா தனித்தே யிருக்கும். ஜீவன் மன முதலாகிய அந்தக் கரணக் கூட்டத்தின் மத்தியி லிருக்கும்.

பூர்வோத்தரம்

பூர்வம் என்பது தலை, உத்தரம் என்பது கால். பூர்வம் என்பது பூர்வ சம்பந்தத்தால் வந்த பெயர்.

பெருங்கோயில்

கிழக்கு முகம், மேற்கு கால், வடக்கு வலதுகை, தெற்கு இடது கை, கொடிமரம் தொப்புள், கொடி மரத்தின் அளவு உள்நாக்கு, பலி பீடம் வயிற்றின் மேடு, நந்தி ஆணவம் முதலிய மலங்கள் உள்ள பசு, சிவலிங்கமே மூலாதாரத்தின் உள்ளங்கம்.

ஆதி அநாதி

ஆதி அநாதி, கீழ் மேல் என்பவை கால் - தலை.

காட்சி

பூர்வம் - புறப்புறம், இந்திரியக் காட்சி. பூர்வ பூர்வம் - புறம், கரணக் காட்சி. உத்தரம் - அகப்புறம், ஜீவக் காட்சி. உத்தரோத்தரம் - அகம், ஆன்மக் காட்சி.

17. பிண்டானுபவ இலக்கணம்

மனித தேகத்தில் கோசத்திற்கு இரண்டரை அங்குலத்திற்குமேல் நாற்சதுரமான ஒரு பையுண்டு. அதில் 16 வயதளவும் உண்டாகும் இந்திரியம் ஜலமாகச் சேருகின்றது. அதைத்தான் மானசதடாகமென்று சொல்லுகின்றது. 16 – க்கு மேல் சேரும் இந்திரியம் உறைந்த அந்த ஜலத்திற்கு மத்தியில் சேருகிறது. அப்படியாகச் சேர்ந்து கொண்டு வரும் இந்திரியம் பொன்வர்ணமாக இருக்கும். அது தாமரைப்பூவென்று சொல்லப்படும். அதன் மத்தியில் ஒரு ஆவி சாதாரண காற்றுக்கு நூற்றிலொரு பங்காக வெகு நேர்மையாக இருக்கும். அதன் வண்ணம் பொன்மயமாயிருக்கும். அதற்கு அதிஷ்டான தெய்வம் பிரமனென்று சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகுங் காலம் அவருக்குச் சகலகாலம் என்றும் அடங்குங் காலம் கேவலகாலம் என்றும் சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகுங் காலத்தில் செயற்கையானல் கருத்தரிக்கும். அது சிருட்டியென்று சொல்லப்படும்.

அதில் ஆவியுண்டாகத் தொப்புளிலிருந்து ஒரு நாடி தோன்றி அதன் மத்தியில் முகந்துகொண்டிருக்கிறது. அதன் மூலமாய் அக்கினியிருக்கின்றது. அது மூலாக்னி என்று சொல்லப்படும். அது தொப்புளிலிருந்து உண்டாவதால் விஷ்ணு தொப்புளிலிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதன் மேல் இரண்டரை அங்குலத்தில் உந்திக்கு நேராக உட்பாகத்தில் சதுரமாய் ஒரு பையுண்டு. புசித்த அன்னத்தை ஐந்து நாழிகையில் பால்போன்ற ஜலமயமாய் ருத்திர பாகத்திலுள்ள ஆவி பிரித்து அந்தப் பையில் சேர்க்கின்றது. அதை க்ஷீராப்தி என்று சொல்லுகிறது. அந்தப் பையிலிருக்கும் பால் போன்ற ஜலத்தின் மேல் ஆலிலை வடிவையுடைய வயிற்றி னுட்பாகம் படிவதனல் அதே வண்ணமாக ஓராடை கட்டியிருக்கும். அதை ஆலிலையென்று சொல்கின்றது. அந்த ஆடையின் மேல் ஒரு நரம்பு வட்டமாய்த் தலைதூக்கியிருக்கின்றது. அதைச் சேஷனென்று சொல்லுகின்றது. அந்தக் குண்டலி வட்ட சேஷனென்னும் நாடி மத்தியில் செம்பினது களிம்பு போன்ற பச்சை மேனியா யொரு சத்தியுண்டு. அதை விஷ்ணுவென்றும், அச்சத்தியில் முன் பின் நடுவென்னும் இடத்தில் அதன் காரணச் சத்து பொன்வண்ணமாயும் அரித்திராவண்ணமாயும் குங்குமவண்ண

மாயும் மூன்று உள்ளன. அவற்றைச் சீதேவி, பூதேவி, நீளாதேவி யெனச் சொல்லுகின்றது. மத்தியில் ஒரு சத்தியிருப்பதால் விஷ்ணு மார்பில் லக்ஷ்மியை வைத்தாரென்பது.

குண்டலிவட்டமான நாடி மத்தியிலுள்ள பச்சை வண்ணமான சத்தியிலிருந்து ஒரு நாடி உண்டாய் இரண்டு தலையாய் விரிந்து ஒரு தலை மேலும் ஒரு தலை கீழும் செல்லுகின்றது. இந்த நாடிகளின் மூல மாய் அந்தச்சத்து மேலே செல்லும்போது பசுமைவண்ணமாகவும் கீழ்ச் செல்லும்போது பீதவண்ணமாகவும் செல்லுகின்றது. மேலே செல்லு வதினால் ஜீவர்களுக்கு ஜீவிப்பும் அதின் சாரம் கெட்டுக் கீழே செல்வ தினால் ஜீவிப்பின்மையும் உண்டாகின்றது. மேலே செல்வதில் ஜீவிப் புண்டாகுவதால் காத்தல் தொழிலை உணர்த்துகின்றது. மேலும் மேலே செல்லுகின்றதை விஷ்ணு வைகுந்தம் போகின்றாரென்றும் கீழே செல்கின்றபோது க்ஷீராப்தியில் இருக்கின்றாரென்றும் சொல்லு கின்றது. கீழே செல்லும் நாடி முன் சொன்ன தொப்புள் நாடியுடன் கலப்புண்டாய் பிரமனுக்கு உஷ்ணத்தைத் தருகின்றது.

அன்றியும் இந்தச் சதுரமான பையின் வலப் பாகத்தில் ஒரு பையுண்டு. அந்தப் பையில் அக்கினி நிரம்பிக் காரணமாயிருக்கின்றது. அது புசித்த வஸ்துக்களின் சத்தைக் கிரகித்துக்கொண்டு அசத்தை மலமாக இடது பாகத்தில் சேர்த்து விடுகின்றது. கிரகித்த சத்தை முன்சொன்ன க்ஷீராப்திப் பையில் சேர்க்கின்றது. இதை வடவாக்கினி என்று சொல்லுகின்றது. மேலும் இந்த வெள்ளை ஜலத்தை அக்கிரம மின்றிச் சமப்படுத்திப் பிரளயம் வாராது காத்துக் கொண்டிருக் கின்றது. இந்த உதராக்கினி குறைவுபட்டு க்ஷீராப்தியின் ஜலத்தின் தரங்கெடுமானால் நோயுண்டு.

இந்தப் பையாகிய ஸ்தானத்திற்குமேல் இரண்டரை அங்குலத் தில் இருதயத்தில் மலர்ந்த வாழைப்பூப் போல் ஒரு பையுண்டு. அது வெண்மையாயிருக்கும். இதைக் கைலாய மென்று சொல்லுகின்றது. இந்தப் பையுள் முன் சொன்ன காற்றில் பதினாயிரங் கோடி பங்கி லொரு பங்காக வெகு நேர்மையாய் அக்கினி மயமாய் ஒரு ஆவி யிருக் கும். இதற்குக் காரணாக்கினி யென்று பெயர். இவ்வக்கினியைக் காலசந்திரருத்திரமூர்த்தி யென்பர். இப் பையின் அருகில் இடப் புறத்தில் மலர்ந்த தாமரைப் பூப்போல் ஒரு பையுண்டு. அந்தப் பை பசுமை வண்ணமா யிருக்கும். அதற்கும் முன் சொன்ன வெண்மைப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய்க் காரணாக்கினி அதிகப் படுத்தாமலும் குறைவுபடுத்தாமலும் சமப்படுத்தி வைக்கும். இந்த மலர்ந்த பைக்கும் கீழிருக்கும் க்ஷீராப்திப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய் அதற்கு உஷ்ணங் கொடுத்து நிலையில் வைக்கும்.

இதனால் ருத்திரனிடத்தில் விஷ்ணு பிறந்ததாய்ச் சொல்லுகின்றது. இந்த நாடி மூலமாக விஷ்ணு இடமாகிய ஜலத்திலும் பிரமனிடமாகிய இந்திரியத்திலும் உள்ள குற்றங்களைக் கண்டிப்பதால் ருத்திரனைச் சம்ஹார கர்த்தா வென்று சொல்வது.

இந்த அக்கினிப் பையில் குண்டலி வட்ட நரம்பு ஒன்று உண்டு. அதில் மூன்றாகப் பிரியும் கிளையுண்டு. அது மூல முதல் பிரமரந்திரம் வரையில் இடம் வலம் நடு வென்று கத்தரிமாறலாய்ப் பிராணபான னுக்கு இடங்கொடுத்து ஊடுருவி நிற்கும். இந் நரம்புகளுக்குச் சோம சூரி யாக்கினி யென்று பெயர்.

இஃதன்றி இக் குண்டலி வட்ட நரம்பினடியில் நின்று இரண்டு நரம்பு, வலத்தில் அஞ்சு கவருடைய தலையாயும் இடத்தில் ஆறு தலை யுடைய கவராயும் நிற்கின்றன. வலத்திலுள்ளது கணபதி யென்றும், இடத்திலுள்ளது சுப்பிரமணிய ரென்றும் பெயர் சொல்லுவது. மேற்படி ஐந்து கவருடைய நரம்பிற்கு அடியில் தலையெடுப்பான நரம்பு கீழ் நோக்கி கிருஷ்ணவர்ணமா யிருக்கும். இந்த நரம்பு இடைவிடாது அசைந்து கொண்டிருக்கும். இந்த அசைவால் அக்கினிப் பைக்கு ஆதாரம் உண்டாவதால் இதற்குக் கணபதியென்று பெயர். மேற்படி ஐந்து கவருடைய நாடிக்கு இடம் வலம் இரண்டிலும் சித்திதத்துவம் புத்திதத்துவம் உண்டு. இடத்திலுள்ள ஆறு கவருடைய நாடிக்குக் கீழ் அனந்த வண்ணமான நாடி ஒன்றுண்டு. இதற்கு மயூரமென்று பெயர். இந்த நாடியின் அசைவால் எழுபத்தீராயிரம் (72,000) நாடியும் அக்கிரமமின்றி நிலைபெறுகின்ற படியால், இதற்குச் சேனாதி பதி யென்றும் பெயர். மேலும் வலதுபுறத்து நாடிக்கு அறுபத்திரண்டு மாத்திரையும் இடதுபுறத்து நாடிக்கு நாற்பது மாத்திரையும் அளவு வித்தியாசமிருப்பதால், இவர்களைச் சோதரர்களாகச் சொல்வதுமன்றி, மேற்படி ருத்திராம்சமாகவே சொல்லுகின்றது.

இருதயத்திற்குமேல் இரண்டரை அங்குல இடமான கண்டத்தில் மகேசுவரனும், அதற்குமேல் இரண்டரை அங்குல அண்ணாக்கில் சதா சிவமும், அதற்குமேல் இரண்டரை அங்குல உயரத்தில் புருவமத்தியில் விந்துவும், அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் நாதமும், அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் பரவிந்துவும், அதற்குமேல் இரண் டரை அங்குலத்தில் பரநாதமும், அதற்குமேல் இரண்டரை அங்குலத் தில் திக்கிராந்தம் அதிக்கிராந்தம் துவாதசாந்தம் முதலானவைகளும், அதீதத்தில் சுத்தசிவமு முள. மகேசுவர ஸ்தானம் முதல் விந்துஸ் தானம் வரையிலும் முன்போல் இடம் நாடி தொழில் வண்ணம் முதலியவு முள்ளன. நாதஸ்தானந் தொட்டுத் துவாதசாந்தம் வரை யில் அனுபவவெளியாகிய ஆகாச பேதமயமா யிருக்கும். அதற்குமேல் அதிகாரண மாத்திரமாய் ஆன்மானுபவத்தில் விளங்கும்.

மேலும் பிரமஸ்தானந் தொடங்கிச் சுத்தசிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம், இருதயம் வரையில் வாயுநாடி வண்ணமாயும் அதற்கு மேல் அக்கினி வண்ணமாயும் இருக்கும். இது அடியிற் பருத்து வர வர நேர்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அணுவுக் கணுவாய், ஜீவனுக்கும் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக்காட்சி யில் அருகித் தோன்றுவதாய், இரண்டற நிற்கும். இதற்குச் **சிவா கார பூரண ஸ்தம்பம்** என்று பெயர்.

முன் சொன்ன இருதயாக்கினிப் பை அக்கிரமமாய் விரிந்து, விசேஷ அக்கினி ஜ்வாலை விசிரிம்பித்துக் கீழிருக்கும் க்ஷீராப்திப் பையி லிருக்கும் ஜலத்தைச் சுருட்டிக்கொள்ள, ஜீவனுக்கு மரண காலம் நேரிடும். மேற்படி பை விரிவதற்கு ஆதாரம் **அருந்தல் பொருந்தல். இவை சமமானால் மிருத்தியு வராது.**

18. மனித தேகத்தில் கடவுள் காரியப்படுவது

இந்த மனிததேகத்தில் புருவ முதலாகிய இடங்களில் உரோமம் தோன்றி நெற்றி முதலாகிய இடங்களில் உரோமம் தோன்றா திருப் பதற்கு நியாயம் யாதெனில்: இத்தேகம் பாதாதி பிரமரந்திர பரியந்தம் வாயுவாலாகிய தேகம். மேற்படி வாயுவினுடைய பிருதிவி காரியமே தேக வடிவம். ஆதலால், வாயுவின் வர்ணம் செம்மை, கருமை நிற உரோமம் பிருதிவியின் கூறு. தேகத்தில் பிருதிவி வாயு இரண்டும் முக்கிய காரணமானதால், செம்மையும் கருமையுமாகிய உரோமம் உண்டாயிற்று. இது நிற்க. **நரை உண்டாவது தத்துவக் கெடுதி யால்.** இத்தேகத்தில் 27 இடங்களில் வாயுவில் பிருதிவி தங்கும். அவசியம் மேற்படி இடங்களில் ஆண்பாலுக்கு உரோமம் தோன்றும். மேற்படி இடங்கள் எவை எனில் :— கபாலம் 1, புருவம் 2, கண் கீழ் இமை 2, மேலிமை 2, நாசிக்கு உட்புறம் 2, மீசை 1, மோவாய் கன்னம் 2, காதுக்குட்புறம் 1, இருதயம் 1, கைம்மூலம் 2, உந்தியின்மேல் ரேகை 1, அடிவயிறு 1, லிங்கத்தடி 1, புட்டத்தின் கீழ்ப்புறம் 1, தொடை 2, முழந்தாள் 1, பாதத்தின் மேலிடம் ஒன்று, மேற்படி விரலின் மேலிடம் பலவும் 1, முதுகு 2, விலாப்புறம் 2, முழங்கைக்குங் கீழ் 2, கைவிரலின் மேற்புறம் 1 ஆக 27. இவை அல்லாது மற்ற இடங் களில் தோன்றுவது தத்துவக் கெடுதி. தத்துவங்களின் உட்புற மலங்களே வாயுவின் பிருதிவி. ஆதலால், மேற்கூறித்த இடங்களில் அக்கினியின் காரிய மில்லாததினால் உரோமம் உண்டாகின்றது. அக்கினி காரியப்பட்ட இடங்களில் தோன்றியும் தோன்றாமல் அருகி யிருக்கின்றது.

நெற்றியில் தோன்றா திருப்பது மேற்படி இடத்தில் **ஆன்ம விளக்கம் விசேஷ முள்ளது.** அதைப் பற்றி மேற்படி இடத்திற்கு

விந்துஸ்தானம் என்றும், **அறிவிடம்** என்றும், **லலாடம்** என்றும், **முச்சுடரிடம்** என்றும், **முச்சந்திமூலம்** என்றும், **நெற்றிக்கண்** என்றும், **மஹாமேரு** என்றும், **புருவமத்தி** என்றும், **சித்சபா அங்கம்** என்றும் பெயர். ஆதலால், விந்து என்பதே ஆன்மா. விந்துவின் பீடம் அக்கினி. இந்த இரண்டினது காரியமே பிரகாசமாகிய அறிவின் விளக்கம் ஆதலால், உரோமம் அருகி யிருக்கின்றது. பூர்வத்தில் விந்துவும், உத்தரத்தில் நாதமும் இருக்கின்றன. விந்து ஆன்மா, நாதம் பரமான்மா. நாதத்தோடு விந்து சேர்தலால், விந்து சத்தியும், நாதம் சிவமும் ஆகின்றன. விந்துவுக்கு உத்தரநியாயம் பூர்வநியாயமாவது எல்லாத் தத்துவங்களுக்கும் புறத்தும் அகத்தும் மற்றும் விளங்கி, தத்துவங்களைத் தன்வசப்படுத்தியும் தொழில்களைச் செய்வித்தும் தனித்து நின்றும் தன்னோடு தத்துவங்களைச் சேர்க்கின்ற படியால், விந்து சத்தனும் தத்துவங்கள் சத்தியாயும் இருக்கும். மேலும் **ஆன்மாவுக்குச் சகல விளக்கமாகிய சாக்கிர ஸ்தானம் லலாடம். ஆதலால், விசேடம் சிறந்தது லலாடத்தில் மூக்குநுனியாகிய புருவமத்தி. இதற்கு அனுபவ சித்திகள் திரயோதசாந்தம் வரையிலு முண்டு.**

திரயோதசாந்தமாவது யாதெனில்: ஜீவசாக்கிரம், மேற்படி சொப்பனம், மேற்படி சுழுத்தி ஆக 3. நிர்மலசாக்கிரம், மேற்படி சொப்பனம், மேற்படி சுழுத்தி ஆக 3. பரசாக்கிரம், மேற்படி சொப்பனம், மேற்படி சுழுத்தி ஆக 3. குருசாக்கிரம், குருசொப்பனம், குருசுழுத்தி, குருதுரியம், குருதுரியாதீதம் ஆக 5, ஆக மொத்தம் 14. இதற்கு மேலுமுள சுத்தசிவசாக்கிரம், மேற்படி சொப்பனம், மேற்படி, சுழுத்தி, மேற்படி துரியம், துரியாதீதம் - இவை சேருங்கால் ஜீவ சாக்கிராதி நீக்கப்படும். இவ்வள வனுபவமும் பூர்வத்திலுள்ள அனுபவிகளால் குறிக்கப்பட்ட நிலைகளில் இல்லை. ஒருவாறு குருதுரிய பரியந்தம் வேதாகமங்களாலும் **தத்துவராயர்** முதலிய மகான்க ளனுபவத்தாலும் குறிக்கப்படும். அதற்கு மேற்பட்ட அனுபவம் சுத்த சன்மார்க்க சாத்தியம்.

மேலும் பெண்களுக்கு உரோமம் தோன்றாதிருப்பதற்குக் காரணம் ஆணிடத்தில் 3 - ம் பெண்ணிடத்தில் 4 - ம் ஆக இருப்பதால், மேற்படி பெண்களுக்குத் தலை, புருவம், இமைக்கீழ் மேல், மூக்கினுட்புறம், கைம்மூலம், லிங்கத்தடி—இவைகள் தவிர மற்ற இடங்களில் உரோமம் தோன்றாது அருகியிருக்கும். உரோமம் விசேஷம் மற்ற இடங்களில் உண்டாவது தத்துவக் கெடுதி. மேலும் உரோமம் தோன்றாதிருக்கிற இடங்க ளெல்லாம் விந்துவாகிய பிரகாசம் ஜாஸ்தியா யிருக்கும். மேற்படி விந்துக்கள் மோவாய், மார்பு, ஸ்தனத்தின் கீழ்ப்புறம் — இவை களில் நிரம்பி யிருக்கின்றன. அதனால் பெண்பாகம் உரோமம் இல்லை.

பரமாத்மா ஜீவாத்மா வென்னும் இரண்டின் நித்தியாநித்தியங்களையும் பிண்டபேதத்தில் உயர்வுதாழ்வையும் காரியகாரண சம்பந்தங்களையும் தெரிவித்தல் யாதெனில்: சாமானியம் விசேடமென்று ஜீவன் இரண்டு. இவற்றில் சிறந்தது சாமானியம், தாழ்ந்தது விசேடம். ஜீவன் இரண்டென்ப தெவ்வாறெனில்: ஆன்மகாரணம் சாமானியம், ஆன்மகாரியம் விசேஷம். சாமானிய மென்பது ஆன்மஅறிவு, விசேட மென்பது மனஅறிவு. இவை பூர்வோத்தரமா யிருக்கின்றன. பூர்வ மென்பது லிங்கஸ்தானம். உத்தரமென்பது பிந்துஸ்தானம். ஆதலால் சிருட்டிக்குக் காரணம் லிங்கம். ஆதலால், சாமானிய ஜீவன் காரணப்பட, விசேஷ ஜீவன் காரியப்படும். விசேஷ ஜீவ சம்பந்தமில்லாத பக்ஷத்தில் சிருஷ்டி காரியப்படாது. இது சாதாரண பாகம். அசாதாரண சம்புபக்ஷ சிருஷ்டியில் சாமானியத்தைக் கொண்டே விசேடத்தை வெளிப்படுத்திக் கொள்ளலாம். சாமானியம் சந்தானம், விசேட மதற்குள் ளடங்கியிருக்கும். பிரமாணம் யாதெனில்: அங்குலிகளில் நகத்திற்கு அடி சந்தானமும், வளர்ச்சி விசேடமும் போல.

மேலும், நெற்றியில் உரோமம் உண்டாகாத வஸ்துக்களெல்லாம் ஆன்மகாரணஅறிவு காரியப்பட்டது. மிருகாதிகளுக்கு உரோமம் உண்டான படியால் ஆன்மகாரணஅறிவு காரணகாரணமாய் அருகியிருக்கின்றது. எப்படிஎனில்: சர்வேசுரனென்னும் நாமத்தின் பிரத்தியேக ஆத்ம சைதந்நியமாகிய வஸ்து எங்கும் பூரணமாய் இருப்பது இயற்கையுண்மை ஏகதேசம் ... ஆதலால், கடவுளை — அறிவதற்கு — ஆன்ம அறிவைக் கொண்டே அறிய வேண்டும். மேற்படி அறிவு ஆன்மவியாபகஆலயமாகிய மனிதர் தேகத்தில் கடவுள் காரியப்படுவது உத்தமம்.

இதன்றி, சமய மத ஏற்பாட்டில் மகான்கள் குழுக்குறி — அடையாளங் — களாகப் பெயரிட்ட விக்கிரக பேதமாகிய சிலா, லோக, தாரு, தந்த, இஷ்டி முதலியவைகளில் கடவுள் காரியப்படுவது சரியை கிரியாதி பேதம் எட்டில் சரியையில்சரியை கிரியையில் சரியை — இவ்விரண்டையும் செய்கின்ற மந்தர்களினது நியாயம். மேலும் அதில் தோன்றி அனுக்கிரகிப்பதுஞ் சாலம். அருளுருவமான அறிவே உருவங் கொண்ட சிவத்தை அறிவாலே அறிவது உண்மை. மேலும் அனலுக்குச் சரியான கர்ப்பூரம், பஞ்சு, கரி, கட்டை முதலிய வஸ்துக்களில் அக்கினி சீக்கிரம் காரியப்படும். கதலி முதலிய வஸ்துக்களில் காரியப்படுவது தாமசம். அதுபோல், பக்குவான்மாக்க ளிடத்தில் கடவுளருள் வெளிப்பட்டால் சுத்தமாதி மூன்று தேகமும் அத்தருணமே வரும். பக்குவமில்லாதவர்களுக்கு அருள் செய்தால் வாழையினிடத்தில் அக்கினி காரியப்படுவது போலாம். ஆதலால், கடவுளருள் வெளிப்படு

வதற்கு அபக்குவிகள் தங்கள் செயற்கைக் குணங்களாகிய ராகத் துவேஷாதிகளை நீக்கல்வேண்டும். சினம் வெகுளி முதலியவற்றையும் நீக்கல் வேண்டும்.

சினமென்பது யாது? உள்வேக்காடு, புடநியாயம்போல். இது தேகத்தைச் சீக்கிரம் நஷ்டம் பண்ணும். வெகுளி யென்பது மீசை துடித்தல், கண்சிவத்தல், கைமுதலிய உறுப்புகள் துடித்தல், வாய் குழறி மேல்விழுந்து கூவுதல் — இஃது ஆயுளை நஷ்டம் பண்ணும். ஆகையால், எவ்வகையிலும் கோபத்தின் பூர்வோத்தரமாகிய சினம் வெகுளி என்னும் கூற்றை ஒழித்தல் அவசியம்.

இதுபோல் மற்றக் கெடுதியாகிய காமக் குரோதாதி சம்பந்தங்களையும் நீக்கல்வேண்டும். காரணமென்பது கரண சம்பந்த முடையது. கரணமென்பது ஒற்றுமை வேற்றுமைத்தொழிற் றன்மை உடையது, மட்குடத்தைப்போல். மேலும், இலக்ஷணம் அடையாளம், இலக்ஷியம் அடையாளத்தை யுடையது, அங்கம் இலக்ஷணம். ஆதலால், இலக்ஷணம் இலக்ஷியம் அங்கம் காரணம் கரணம் முதலிய சம்பந்தங்களுமொன்று மில்லாது, கெடுதியாகிய தத்துவங்களை அடக்கல்வேண்டும்.

உரோமதத்துவமும் பிந்துஸ்தானமும்

மனித தேகத்தில் புருவ முதலாகிய இடங்களில் உரோமம் தோன்றியும், நெற்றி முதலாகிய இடங்களில் தோன்றாமலுமிருப்பதற்கு நியாயம்: இந்தத் தேகம் பாதாதி பிரமரந்திர பரியந்தம் வாயுவாலாகிய தேகம். ஆதலால் அதனுடைய பிருதிவி காரியமே தேகவடிவம். ஆதலால் வாயுவின் கூறு செம்மை. கருமயிர் பிருதிவியின் கூறு. இந்த நியாயத்தால் தேகத்தில் செம்மையும் கருமையும் கூடிய உரோமம் உண்டாயிற்று. நரை தத்துவக் கெடுதியால் நேரிட்ட ஆபாசம்.

இந்தத் தேகத்தில் 27 இடங்களில் வாயுவில் பிருதிவி தங்குகின்ற இட மாதலால் அவசியம் உரோமம் இருக்கும், மேற்படி இடங்களின் விவரம்: கபாலம் 1, புருவம் 2, கண்கீழ் இமை 3, மேல் இமை 4, நாசிக்குட்புறம் 5, மீசை 6, கன்னம் 7, காதுக்குட்புறம் 8, இருதயம் 9, கைம் மூலம் 10, உந்தியின் மேல்ரேகை 11, அடி வயிறு 12, லிங்கத்தடி 13, புட்டத்தின் கீழ்ப்புறம் 14, தொடை 15, முழந்தாள் 16, பாதத்தின் மேலிடம் 17, அடி விரலின் மேலிடம் 18, முதுகு 19, 20, 21, விலாப்புறம் 22, 23, முழங்கையின் கீழ் 24, கணுக்கைக்கு மேல் 25, கைவிரலின் மேற்புறம் 26, இந்த இடங்களில் தவிர மற்ற இடங்களில் உரோமம் தோன்றுவது தத்துவ ஆபாசம். தத்துவங்களினது உட்புற மலங்களே வாயுவின் பிருதிவியாதலாலும், மேற்குறித்த இடங்களில் அக்கினியின் காரியமில்லாததினாலும் உரோமம் தோன்றுகிறது.

அக்கினி காரியப்பட்ட இடங்களில் உரோமம் தோன்றியும் தோன்றாமல் அருகியிருக்கும் **நெற்றியில் ஆன்ம விளக்கம் உள்ளது.** அதனாலதற்குப் **பிந்துஸ்தான** மென்றும், **அறி**வென்றும், **பால**மென்றும், **முச்சுடரென்**றும், **முச்சந்தி** யென்றும், **முப்பாழென்**றும், **நெற்றிக்கண்** என்றும், **கபாடஸ்தான** மென்றும், **சபாத்துவார** மென்றும், **மகம்மேரு** வென்றும், **புருவமத்திய மூல**மென்றும், **சிற்சபை** யென்றும் பெயராம். ஆதலால் பிந்துவென்பதே ஆன்மா. பிந்துவின் பீடம் அக்கினி. இந்த இரண்டினது காரியமே பிரகாசமாகிய அறிவின் விளக்கம். ஆதலால் உரோமம் அருகியிருக்கிறது.

பிந்து நாதங்கள்

பூர்வத்தில் பிந்துவும் உத்தரத்தில் நாதமுமிருக்கின்றன. பிந்து ஆன்மா ; நாதம் பரமான்மா. நாதத்தோடு பிந்து சேர்ந்தால் பிந்து சத்தியும், நாதம் சிவமும் ஆகின்றன. பிந்துவுக்கு இது உத்தரநியாயம். பூர்வ நியாயமாவது எல்லாத் தத்துவங்களுக்கும் புறத்தும் அகத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் விளங்கித் தத்துவங்களைத் தன்வசப் படுத்தியும், தொழில்களைச் செய்வித்தும், தனித்தும், தன்னோடு தத்துவங்களைச் சேர்க்கிறபடியால், பிந்து சத்தனும் தத்துவங்கள் சத்தியாயும் இருக்கும்.

பாலஸ்தானம்

நாம் இருப்பது பாலஸ்தான மாதலால், பாலம் சிறந்தது. இதற்கு அனுபவ சித்திகள் திரயோதசாந்தம் வரையில் உண்டு.

பெண் பிறவியும் பிந்து விளக்கமும்

ஆணிடத்தில் பிந்து விளக்கம் மூன்று பங்கும், பெண்ணிடத்தில் பிந்து விளக்கம் நான்கு பங்கும் இருப்பதால், பெண்களுக்குத் தலை, புருவம், இமைக் கீழ் மேல், மூக்கு உட்புறம், கைம்மூலம், லிங்கஸ்தானம் – இவை 7 ஸ்தானங்கள் தவிர மற்ற இடங்களில் உரோமம் தோன்றாது அருகியிருக்கும். பெண்களுக்கு உரோமம் தோன்றாமல் இருக்கிற இடங்களெல்லாம் பிந்து விளக்கமாகிய பிரகாசம் ஜாஸ்தியாக இருக்கும். பெண்களுக்குப் பிந்து இருக்கிற ஸ்தானம் மூன்று : வாய், மார்பு, ஸ்தனத்தின் கீழ். உரோமம் விசேஷம் தோன்றுவது தத்துவ ஆபாசம்.

சாமானிய ஜீவன் விசேஷ ஜீவன்

சாமானிய ஜீவன் விசேஷ ஜீவன் ஆக 2. இவற்றில் சிறந்தது சாமானியம் ; தாழ்ந்தது விசேஷம். ஜீவன் இரண்டென்பதற்கு விவரம் : ஆன்மகாரணம் சாமானியம் ; ஆன்மகாரியம் விசேஷம். சாமானிய மென்பது ஆன்மஅறிவு, விசேஷ மென்பது மனஅறிவு. இது பூர்வோத்தரமாய் இருக்கின்றது. பூர்வமென்பது லிங்க ஸ்தானம்,

உத்தரமென்பது விந்து ஸ்தானம். சிருட்டி முதலியவைகளுக்குக் காரணம் லிங்க ஸ்தானம். ஆகையால், சாமானிய ஜீவனே காரணப்பட்டு, விசேஷ ஜீவன் காரியப்படும். விசேஷ ஜீவ சம்பந்த மில்லாத பக்ஷத்தில் சிருட்டி நடவாது ; இது சாதாரணம். அசாதாரணத்தில், சம்புபக்ஷ சிருட்டியில் சாமானிய ஜீவனைக் கொண்டே விசேடத்தை வெளிப்படுத்திக் கொள்வது. சாமானியம் சந்தான மாதலால் விசேடம் உள்ளடங்கி யிருக்கின்றது. நகத்துக்குச் சந்தானம் அடியும் விசேஷம் வளர்ச்சியும் போலவாம். மிருகாதிகளுக்குச் சாமானியம் காரியப்படாததனால் சாமானியம் இல்லை யென்று சொல்லப்பட்டது.

கடவுள் காரியப்படுவது

கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனித தேகத்தில் காரியப்படுவது உத்தமமாக இருக்க, சிலாவிக்கிரக பூத தாரு முதலியவைகளில் வெளிப்படுத்திக்கொள்வது மந்த நியாயம். அதில் தோன்றி அனுக்கிரகிப்பதாகச் சொல்லுவது ஜாலம். காய்ந்த கட்டையினிடத்தில் அக்கினி அதி சீக்கிரம் பற்றுதல்போல், பக்குவர்களாகிய ஜீவர்களிடத்தில் கடவுள் அருள் வெளிப்பட்டால், சுத்தமாதி மூன்று தேகசித்தியும் அத்தருணமே வரும். பக்குவ மில்லாதவர்க்கு அருள் செய்தாலும், வாழையினிடத்தில் அக்கினி செல்வது போலவாம். ஆதலால், கடவுள் அருள் வெளிப்படுவதற்குமுன் அபக்குவர்கள் தங்கள் செயற்கையாகிய ராகத்துவேஷாதி அசுத்தங்களைப் போக்கிக்கொள்வது உத்தமம்.

கோபம்

சினம் வெகுளி யென்பவற்றின் பொருள்: சினம் உள்வேக்காடு, புடநியாயம் போல். இது தேகத்தைச் சீக்கிரம் நஷ்டஞ் செய்யும். வெகுளி மீசை துடித்தல், கண் சிவத்தல், கை கால் உடம்பு துடித்தல் முதலாகியவற்றை வெளிப்படையாகக் காட்டுதல். இதுவும் ஆயுளை நஷ்டம் செய்யும். ஆகையால் எந்த வகையிலுங் கோபங் கூடாது. அதை அவசியம் ஒழிக்க வேண்டியது.

காமக் குரோதங்கள்

காமக் குரோதாதிகள் முதலிய பெருங் குறைகளை அவசியம் நீக்க வேண்டியது.

காரணம்

காரணமென்பது கரண சம்பந்தமுடையது. கரணமென்பது ஒற்றுமை வேற்றுமைத் தொழில் தன்மை யுடையது, மட்குடத்தைப் போல்.

இலக்ஷணம்

இலக்ஷணம் அடையாளம் ; இலக்ஷியம் அடையாளத்தை உடையது ; அங்கம் இலக்ஷணம்.

19. சமய நூல்களின் உண்மை

பெரியபுராணத்தில் குறித்த 63 நாயன்மார்களும் மற்ற நாயன்மார்களும் தத்துவங்களே யொழிய வேறில்லை. அதை அதை விசாரித்து அனுஷ்டித்தால், அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும். இதுபோல சைவத்தில் சொல்லுகின்ற சௌராதி சண்டை பரியந்தமும் * தத்துவமே யாம். சைவ புராணம் விஷ்ணு புராணம் முதலிய யாவற்றின் உண்மையும் தத்துவ சம்மாரங்கள். சூரபத்மன் யுத்தம் முதலிய யுத்தங்களும் தத்துவ சம்மாரங்களே. இதுபோல் மாணிக்க வாசக சுவாமிகள் முதலிய மகான்களின் சரித்திரமும் தத்துவசித்தியே. மேற்குறித்தவர்கள் பேரால் ஒவ்வொரு மஹான்கள் சாஸ்திரங்களையும் தேவாரம் திருவாசகங்கள் முதலியவைகளையும் அமைத்து, இவற்றிற்கு இடமாக ஆலயங்கள் அமைத்து, மேற்படி சித்திக்கு உரிய தத்துவ தத்துவிகளின் பெயரைக் கர்த்தாவாக்கி, அந்தச் சித்தி முடிக்குங் காலம் தினம் கருவி முதலியவைகளை மேற்படி ஆலயங்களுக்கு விசேஷ காலமாக்கி, வழக்கத்தில் வருவித்தார்கள். மேற்குறித்த நாயன்மார் முதலியவர்களின் உண்மையனுபவ தாத்பரியமுடைய சித்திகள் முன்னும் பின்னும் இனியுமுள. நாம் மேற்படி தத்துவங்களை அனுஷ்டித்தால் அவ்விதமாக ஆகக் கூடும். இது போலவே திருவிளையாடல் பாரத பாகவதங்களு மமைத்துக் கொள்க. ஒருவாறு.

புராண ஹிருதயம்

பெரியபுராணத்திற் குறித்த 63 நாயன்மார்களும் தத்துவங்களே ஒழிய வேறல்ல. அதைஅதை விசாரித்து அனுஷ்டித்தால், அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும். கணபதி சுப்பிரமணிய சுவாமிகளும் தத்துவங்களே தவிர வேறல்ல. புராணங்களி னிருதயமெல்லாம் தத்துவ சம்மாரமே. இதன் உண்மை சுத்த சன்மார்க்கத்தில் விவரமாய் வெளியாகும்.

சமய நூல் உண்மை

மாணிக்கவாசக சுவாமிகளும் 63 நாயன்மார்களும் மனிதரல்லர், தத்துவங்கள். தேவாரம் திருவாசகம் முதலியவைகள் மேற் குறித்தவர்கள் பாடியனவல்ல, சித்தர்கள் சில சித்திகளைக் குறித்துக் கற்பனையாய்ச் செய்த சரித்திரம்; அதற்கு மேற்கோள் வேண்டுவதின் பொருட்டுச் சில பாடலுஞ் செய்து, புராணத்தில் மேற்குறித்தபடி பெயரிட்டு, அவர்கள் செய்ததாகப் பரிச்சயஞ் செய்ததே தவிர, உண்மையல்ல. இவற்றிற்குரிய தாத்பரியங்களும் உண்மைகளும் சுத்த சன்மார்க்கத்தில் பகிரங்கமாய் இனி வெளிப்படும்.

---

* சௌராதி சண்டை பரியந்தம் - சூரிய பூசை முதல் சண்டேசுவர பூசை முடிய.

[வேறொரு குறிப்பு]

சூரபத்மனுடைய யுத்தம் முழுமையும் தத்துவ சம்மாரமே. சுப்பிரமணியர் விநாயகர் மயிலின் மேலும் பெருச்சாளியின் மேலும் ஏறினார்க ளென்கிற தாத்பர்யம் வேறு. அது தெரியாம லந்தச் சுவாமிகளைத் திருவிழாக் காலத்தில் வாகனங்களின் மேல் ஏற்றுதல் தெரியாமை.

20. சமய நூல்களில் பிழை

சமயமத சாத்திரங்களில் அனேக இடத்தில் பிழைக ளிருக்கின்றன. அதற்குக் காரணம் அவற்றை இயற்றியவர்கள் மாயையின் சம்பந்தத்தை அடைந்திருந்தவர்கள். ஆகையால் முன்னுக்குப் பின் மறைப்புண்டு தப்புகள் நேரிட்டிருக்கின்றன. மாயையை வென்ற சுத்த ஞானிகளுக்கல்லது மற்றவர்களுக்குப் பிழையற இயற்ற முடியாது. அந்தப் பிழைகள் சுத்தசன்மார்க்கம் விளங்குகின்ற காலத்தில் வெளிப்படும்.

21. கற்பமும் பிரளயமும்

மகா கற்பம் – மூலப்பிரகிருதியினின்று உண்டாம் சிருஷ்டி முதல் பிரமாவின் ஆயுள்வரையில் ஏற்பட்டுள்ள காலம்.

அவாந்தர கற்பம் – சதுர்முகப் பிரமனுடைய ஒரு நாட்குரிய காலம்.

இந்த இரண்டு கற்பத்தின் நடுவே ஒவ்வொரு ஒடுக்கமுண்டாகிறது. அது 1. நித்தியம், 2. நைமித்திகம், 3. பிராகிருதிகம், 4. ஆதியந்தகம் என நால்வகைத்தாம்.

நித்தியப் பிரளயம் – மரணமே நித்தியப் பிரளயம்.

நைமித்திகப் பிரளயம் – பிரமனுடைய கற்பமுடிவி லுண்டாகின்ற ஒடுக்கம்.

பிராகிருதிகப் பிரளயம் – மகத்துவ முதல் விசேட பரியந்தம் ஒடுக்கத்தை யடைவது.

ஆதியந்திகப் பிரளயம் - தத்துவஞானத்தால் யோகிக்கு உண்டாகும் ஒடுக்கம்.

22. கற்பபேதம்

கற்பபேத மென்பது கடவுள் இடபவாகனா ரூடராய் உலகத்தி லெழுந்தருளிக் காட்சி கொடுத்தருளுங் காலம். இடப மென்பதற்குப் பொருள் தர்மசுவரூபம். தர்மமென்பது காருண்யம், தயவு, அருள். ஆதலால், அருள் வடிவமான ஆன்மாலய உலகமான தேகத்தின் அநுபவ ஞானம் தோன்றுதல்.

கற்பபேதம்

கற்பபேதமென்பது கடவுள் ரிஷப வாகன ஆருடராய் உலகத்தி லெழுந்தருளிக் காட்சி கொடுத்து அருளுங் காலம். ரிஷப மென்கிற தற்குப் பொருள் தரும சொரூபம், காருண்ணியம், தயை.

23. கலியுகம்

கலியுகத்தின் தாத்பர்யம்:—முதல் யுகத்துக்கு நாள் 8, இரண்டாவது யுகத்துக்கு நாள் 6, மூன்றாவது யுகத்துக்கு நாள் 4, நாலாவது யுகத்துக்கு நாள் 2. ஒரு தினத்திற்கு நாழிகை 60, நிமிஷம் 2,16,000. இரண்டு நாளைக்கு 4,32,000 நிமிஷம். இவ்வண்ணமே 4, 6, 8, முதலியவற்றிற்கும் கொள்க. ஆக நாள் 20-க்கு நிமிஷம் 43,20,000. இதைக் குழுக்குறியில் வருஷமாகச் சொன்னது. முதல் யுகம் களங்க மார்க்கம்; இரண்டாவது யுகம் திராவக மார்க்கம்; மூன்றாவது யுகம் நவநீத மார்க்கம்; நாலாவது யுகம் பஸ்ம மார்க்கம். ஆதலால், மேற் குறித்த பஸ்மத்தை மேற் குறித்த வருஷத்தில் முடித்து உட்கொண்ட புருஷனாகிய சித்தனுக்குக் கலிபுருஷனென்னு நாமம் வந்தது. மேற்படி பஸ்மத்தை இரண்டு தினத்தில் முடித்து கற்பங்கொண்டு தேகசித்தியைப்பெற்றுத் திரிசியப்படாமல், மேற்படி புருஷன் தனது சங்கல்ப விகல்பங்களால் இவ்வுலகத்தைத் தோன்றலாதி அசைவுகள் செய்வித்து ஆடுகின்றான். இந்தவுலகம் முடிவதற்கு இன்னும் 27௵ இருக்கின்றது: இதற்குமேல் மேற்படி புருஷன் செயல் நடவாது; ஞான சித்தன் செயல் உண்டாம். ஆங்கிரச ௵ புரட்டாசி மீ ௨௨

கலியுக முடிவு

முதல் யுகத்திற்கு நாள் 8. 2-வது யுகத்திற்கு நாள் 6. 3-வது யுகத்திற்கு நாள் 4. 4-வது யுகத்திற்கு நாள் 2. ஆகக் கூடிய நாள் 20-ம் கற்பம் முடிக்கக் கூடும் நாட்கள். $60 \times 60 \times 60 = 2,16,000$ நொடி ஒரு நாள். அதாவது, நாள் ஒன்றுக்கு நாழிகை 60, நாழிகை ஒன்றுக்கு விநாடி 60, விநாடி ஒன்றுக்கு நொடி 60 என்றபடி. நாளிரண்டிற்கு 4,32,000 நொடி. இந்த 4,32,000 நொடியும் அத்தனை வருடமாகக் கலியுகத்திற்குச் சொல்லியிருக்கிறது. ஆனால் இந்தக் கலியுகத்திற்கு வருடம் ஐயாயிரந்தான். இந்தக் கலியுகம் முடிவதற்கு இன்னும் இருபத்தேழு வருடமிருக்கிறது. இந்த ஐயாயிர வருஷமும் ஜீவித்திருக்கும்படி, கலியுகத்திற்குக் குறித்த நாளிரண்டில் கல்பஞ் செய்து தேகசித்தியைப் பெற்றுக்கொண்டு, நம்முடைய கண்ணுக்குத் தோற்றாமல் வேறு வடிவத்தோடு இருக்கிறவன் கலியுக புருஷன். இவனுடைய சங்கல்ப விகற்பங்களால் இந்த உலகம் இப்போ தசைவு பெற்றிருக்கின்றது. இந்த உலகம் சன்மார்க்க உலகமாக மாறுவதற் கின்னும் பன்னிரண்டு மாத மிருக்கிறது. ஆங்கீரச ௵ புரட்டாசி மீ ௨௨.

24. கால சங்காரம்

மார்க்கண்டர்க்காக ருத்திரமூர்த்தி இடது காலால் எமனை உதைத்ததற்கு நியாயம்:— மார்க்கண்ட ரென்பது மயக்கமாகிய மறைப்பென்னும் மரணத்தைத் தவிர்த்தது. ருத்திர னென்பது தனித்த ஆன்ம அறிவு. எமனென்பது மயக்கத்தைத் தரத்தக்க வெகுளி சினம் முதலிய. இடது காலால் எமனை யுதைத்த தென்பது: இடது என்பது சந்திரகலை, காலென்பது பிராணவாயு; ஜனன மரணத்தை உண்டு பண்ணுவது சந்திரசூரியகதி. ஆதலால், அஞ்ஞான பாசத்தால் சினமாகிற கூற்றுவன் கட்ட, விவேகியென்னும் மார்க்கண்டன் ருத்திரனென்னும் ஆன்மஅறிவோடு கூடவே, ஷை ருத்திரன் பிண்டநஷ்டஞ் செய்கின்ற இடகலையை மேலேற்றி, குணங்களாகிய சூலத்தால் கூற்றையொழித்து, அருளாகிய சத்துவ மயமாய் நீடிக்கச்செய்வது — எமசம்மாரம்.

இடது கால்

இடதுகாலால் இயமனை உதைத்தாரென்பது இடையாகிய சத்தி என்னும் அருளாகிய ஆன்மஇயற்கையால் தேகத்தை நீடித்துக் கொண்டது.

25. சுரர் அசுரர்

சுரர் அசுரர் என்பதற்குப் பொருள் :— சுரர் என்பது அறிவுடைய ஜீவர்கள் முதல் வாசனாதி வஸ்துக்களெல்லாம் சுரர். அகங்காரி முதல் துர்க்கந்த வஸ்துக்களெல்லாம் — பூமிக்குள் தோன்றுங் கந்தமூலம் — அழுக்குடைய வஸ்து — இவைகள் அசுரர். மேலும் அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் தேவரென்றும் மனிதரென்றும் சொல்லப்பட்டதே தவிர, வேறு எந்தக் காரணத்தாலுமல்ல. ஆனால் தயை விசேஷமிருக்க வேண்டு மென்பது அறிவு உயர்ச்சியில் அடங்கிவிட்டது. தேவர்களுக்கு நான்கு கை என்பது தயையின் விசேஷத்தைக் குறித்துச் சொன்னதே தவிர வேறில்லை. தயையே வடிவமாக இருக்கின்ற புண்ணிய தேகிகளே தேவர்கள்...

மனிதரும் தேவரும்

அறிவினது உயர்ச்சியினாலும் தாழ்ச்சியினாலும் தேவரென்றும் மனிதரென்றும் சொல்லப்பட்டதே தவிர வேறே யெந்தக் காரணத்தினாலும் அல்ல. ஆனால் தயை விசேஷ மிருக்க வேண்டிய தென்பது அறிவு உயர்ச்சியி லடங்கி விட்டது. தேவர்களுக்கு 4 கையென்பது ஈகைபற்றிய தயை விசேஷத்தைக் குறித்துச் சொன்னதே தவிர வேறல்ல. ஆகையால் தயவே வடிவமாக இருக்கிறவர்களே புண்ணிய தேகிகள். அவர்களே தேவர்களு மாவர்.

சுரர் அசுரர்

சுரர் அசுரர் என்பதற்குப் பொருள் :— சுரர் என்பது திராவகம், வாசனை, மேலேறிய அறிவுடைய ஜீவர்களாம். அசுரர் என்பது குழித்தைலம், அழுக்குடைய வஸ்து, கிழங்கு, துர்வாசனை, துர்வாசனை யுடையவர்கள், துர்க்குண மனுஷியர்கள்.

26. அடி முடி தேடல்

பிரமா அன்னமாகவும் விஷ்ணு வராகமாகவும் உருவங்கொண்டார் என்பதன் பொருள் :—பாசஅறிவும் பசுஅறிவும் ஆம். ஒரு பொருளைக் காணுந் தன்மையுடையது பாசஅறிவு. பசுஅறிவாவது—பொறி புலன் களாலே அறியப்பட்டது ஜீவஅறிவு. மலத்தில் அழுந்துவது பாசம். பகுத்தறிவது பசு. மேலுங் கீழுஞ் செல்லுதலால், பாதாளத்திலும் ஆகாசத்திலும் தேடினரெனச் சொன்னது. மேலும், ஒவ்வொரு வஸ்து விலும் பதி பசு பாச லக்ஷணம் உண்டு.

27. பிரம தண்டனை

பிரம தேவனுக்கு ஐந்து முகமாவன :, ஆணவம், காமியம், மாயை திரோதை, மாமாயை. இவைகளில் ஆணவம் என்னும் ஒரு தலை மாத்திரம் பரமசிவத்தினல் அரியப்பட்டது. பிரமதேவனது ஒரு சிரசை வெட்டும்பொருட்டுத் தோன்றின ருத்திரனுக்கு ஐந்து தலை யாவன : இச்சை, ஞானம், கிரியை, ஆதி, பரை என்னும் ஐந்துமாம்.

இதுபோல் இராவணனது பத்துத்தலையும் அகங்காராதிகள் என அறியவும்.

28. சரஸ்வதியை மூக்கறுத்தது

பிரமதேவன் பத்தினியாகிய சரஸ்வதியை மூக்கறுத்தது யாதெனில் பிரமதேவனது சிரசில் ஒரு முகமாகிய அகங்கார தத்துவத்திற்கு உபகருவியாவ‹ அவரது பத்தினியாகிய சரஸ்வதி. ஷை கல்வியின் முகப்பை அல்லது முகத்தலையாகிய மூக்கை அறுத்தது என்பது அடக்கியது. இல்லாவிட்டால், அபரஞானமே ஒழியப் பரஞானம் வராது.

29. சந்திர சாபம்

சந்திரனுக்கு இரண்டு தண்டனை என்பது யாதெனில்: கணபதி யாகிய அவாவை உல்லங்கனம் பண்ணினதால் சண்டாளத்துவம் நேரிட்டது. சந்திரனுக்குக் கலைகுறைந்ததும் சிவன் சிரசில் தரித்துக் கொண்டதும் யாதெனில் : தக்கனகிய ஜீவபோதத்திற்குப் பெண்கள் என்னும் உபகரணங்கள் 27. இவற்றை மனமாகிய சந்திரனுக்குக் கல்யாணம் என்னும் செயற்கையைச் செய்து, சமமாகப் பார்க்கும்

படித் தக்கன் சொன்னதைத் தடுத்து, கிருத்திகை உரோகிணியாகிய ஆசை மோகம் இரண்டையும் பாராட்டி, மற்றப் பெண்களைச் சந்திரன் அலக்ஷியம் செய்தான். செய்யவே, தக்கனது சாபத்தால் பதினாறு கலையின் கண்ணியங்கெட்டு ஒவ்வொன்றாய்க் குறைய பயங் கொண்டு பிரமாவாகிய பாச அறிவினிடத்துச் சொன்னான். பிரமன் தக்கனது பலத்தை எண்ணித் தன்னால் முடியாது என்று பதியாகிய சுத்த அறிவினிடத்தில் சொல்லும்படி செய்தான். அங்ஙனம் சொல்லலும், சிவமானது சந்திரனாகிய மனத்தின் வியாபார கலைகளை ஒடுக்கி, ஒரு கலையான சுத்த மனத்தைத் தானாகிய அறிவின் சிரம் என்னும் பிரஞ்ஞையில் தரித்து, சாபம் வீண் போகாமல் ஏறியும் குறைந்தும் இருக்கும்படி செய்தது. இப்படிச் செய்யாவிட்டால் அனுபவம் வராது.

30. தக்ஷ யாகம்

தக்கன் என்பது யான் எனது என்று அகங்கரிக்கும் ஜீவபோதம். தக்கன் யாகத்தை அழித்தது என்பது ஜீவபோதத்தை அழித்தது.

31 சூரபத்ம சம்ஹாரம்

பதுமாசுரன் என்பது : பதுமம் - நாபி, அ - அவா, சுரன் - சுழித்து எழுதல். நாபியினிடமாய் அடங்காமல் எழும்பும் குணத்தை அடக்கியும் தடைபடாதது பத்மாசுரனாகிய அவா. கஜமுகம் என்பது மதம். சிங்கமுகம் என்பது மோகம். இவைகளை வெல்வது ஐந்தறிவாலும் உபசத்தியான பஞ்ச சத்தியாலுங் கூடாது. ஆதலால் சிவத்தால் தடைப்பட்டது. சுப்பிரமணியம் என்னும் ஷண்முகரால் சம்மரிக்க வேண்டியது எப்படி எனில் : பஞ்ச சத்தியோடு அனன்னியமாகிய சம்வேதனை என்னும் அருட்சத்தியையுங் கூட்டிச் சுத்த அறிவே வடிவாகிய ஆறறி வென்னும் முகங்களோடு, சுத்தஞானம் சுத்தக்கிரியை என்னும் சத்தியுடன், கூர்மை பொருந்திய வேல் என்னும் விவேகத்தால், தயாவடிவாய் அவா மோக மதங்களை நாசஞ் செய்வது சூரசம்மாரம். மயில் என்பது மேற்படி தத்துவங்கள் நஷ்டமானாலும் அவற்றின் அக்கிரமம் அதிக்கிரமம் கெட்டுக் கிரமம் மாத்திரம் இருப்பது. பூர்வ வாசனாதிகள் பல வண்ணமாய் விரிந்து ஆடுவது இயல்பாதலால், அவற்றை அசைய வொட்டாது மத்தியில் ஏறி இருப்பதாகிய சுத்த அறிவே ஷண்முகம். விகல்ப ஜாலமே மயில். இவ்வண்ணமே அண்டத்திலும் உண்டு. மேலும், நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் மணிபோல் ஓர் ஜோதி யிருக்கிறது. அந்த ஜோதியே ஷண்முகம்.

32. குண்டோதரனுக்கு அன்னமிட்டது

குண்டோதரனுக்கு அன்னமிட்டார் என்பதற்குப் பொருள் : குண்டோதரம் என்பது துத்சாகக் குடாக்கு, ஓதனமென்பது அன்னம்,

தரன் என்பது பசியில்லாதவன். மேற்படி நாகத்தைச் சுண்ணஞ் செய்து பசியில்லாதவனுக் களிக்க விசேஷ பசி உண்டாகும். எப் படியெனில்: நாகக்கொட்டையை மைபோலாட்டி, நாகத்திற்குப் பிடிப்பித்துச் சிறுபுடமாய்ப் பத்திட்டு எடுத்து, நாலிலொன்று சூதஞ் சேர்த்து, வட்டாக்கிக் கருந்துளசியால் கவசித்துச் சீலைமண்செய்து, புடமிடச் சுண்ணமாம். இதுபோல் மற்ற விளையாடல் முழுமையும் ஒருவாறு.

கல்ப நியாயம்

நாகக்கொட்டையை அரைத்து நாகத்துக்குக் கவசம் செய்து, சிறுபுடம் 10 போட்டுச் சுருக்கிட்டு, அதற்கு நாலிலொன்று சூதம் தொந்தித்து, துளசியிலை அரைத்துக் கவசம் செய்து புடம் போட்டால் சுண்ணமாகும். அதை எடுத்துப் பசியில்லாதவனுக்கு நவநீதத்தில் கொடுக்க இரண்டரை நாழிகையில் பசி உண்டாகும். இதுதான் குண்டோதரனுக் கன்னமிட்ட தென்பது. கல்ப நியாயம்.

33. பாற்கடல் கடைந்தது

திருப்பாற்கடல் கடைந்து அமுதபானம் தேவர்கள் செய்யும் பொருட்டு விஷத்தை ருத்திரர் உட்கொண்டா ரென்பதற்குப் பொருள்;—திருப்பாற்கட லென்பது தேங்காய். அமுதமென்பது அதன் ஜலம். தேங்காயின் பாலிலுள்ள எண்ணெயே விஷம். ஷை எண்ணெ யாகிய விஷத்தைப் போக்குவது முப்பூவாகிய ருத்திரன். ஆதலால், தேங்காய்ப் பாலிலுள்ள விஷமாகிய எண்ணெயை முப்பூவால் போக்கு வது ருத்திரன் விஷம் சாப்பிட்டது. மற்றக் கடல்கள் யாவும் இட்சு மது முதலிய வஸ்துக்களே. இவ்வாறு, அண்டத்தினும் பிண்டத்தி னும் பௌதிகத்தினும் தாதுக்களினும் ஓஷதியினும் கடல்கள் உள.

திருப்பாற்கடல்

திருப்பாற்கட லென்பது தேங்காய். அமுத மென்பது ஜலம். தேங் காய்ப் பாலைப் பிழிந்து முப்பூவைப் போட அமுதமாம். விஷமுண்டா ரென்பது தேங்காயிலுள்ள எண்ணெயை முப்பூவால் போக்குவதே விஷஞ் சாப்பிடுவ தென்பதற்குப் பொருளாம். கருப்பஞ்சாற்றுக்கட லென்பது கரும்பு, மதுக்கட லென்பது தேன்.

34. பாற்கடலில் பள்ளிகொண்டது

ஆகாரம் உண்டவுடனே ஜீரணமாய்ப் பால்வண்ணமாக ஆகாரப் பையில் வெண்மை நிறமாக இருப்பது திருப்பாற்கடல் என்றும், அத னடியில் உண்டாம் பசி — தீவிர சத்தியாகிய உஷ்ணம் — வடவா முகாக்கினி என்றும், இரண்டிற்கும் மத்தியில் உண்டாகிய சீதளம் விஷ்ணு பள்ளிகொண்டது என்றும் சொல்லுவது. திருப்பாற்கடலில் விஷ்ணு பள்ளிகொண்டது இது தான்.

35. நாராயணன்

நாராயணன் என்பதன் பொருள்: அப்பு தத்துவத்தின் அதிஷ்டான கர்த்தாவென்றும், அப்பு தத்துவத்தில் தோன்றினவன் என்றும், நர விசேஷணப் பிறப்பை உடையோன் என்றும், நரனில் தோன்றினோன் என்றும், மாயாகோஷத்தை அல்லது நடப்பை உயிர்க்கு உண்டு பண்ணுவோன் என்றும், பகுதியின் சேட்டிப்பை உயிர்க்கு உண்டு பண்ணுவோன் என்றும், இன்ப சத்தியை உயிர்க்கு ஊட்டுவோன் என்றும் கொள்ளலாம். இன்னும் பலவேறு வகையிலும் கொள்ளலாம். நாரம் ஜலத்தில், அணன் உற்பத்தியானவன், ந மாயையினுடைய, ர கோஷம் — நடப்பு — வியாபாரத்தை, ய உயிர்களுக்கு, ண உண்டு பண்ணுகிறவன். ந பிரகிருதியினுடைய, ர சேட்டிப்பை, ந ஆதிசத்தியினுடைய, ர இன்பத்தை ...

36. கருடன்

கருடன்மீது விஷ்ணு ஏறியது என்பது: க ஜலம், ரு கருமை ட வெண்மை. ஆதலால் விளங்கா வெண்மையாகிய ஜலத்தின் பின் தோன்றும் செம்மைக்கு இடையில் கருமையாகிய நீராவியே விஷ்ணு. ஆதலால், சீத வஸ்துக்களெல்லாம் விஷ்ணு; அணுத்துவ மெல்லாம் பிரமா; உஷ்ணத்துவ மெல்லாம் ருத்திரன். இது போல் மற்றத் தத்துவங்களையும் அறியவும்.

37. அயக்கிரீவம்

அயக்கிரீவ மென்பதற்குப் பொருள்: அயம் பிராணவாயு, கிரீவ மென்பது கழுத்து. ஆகவே அயக்கிரீவ மென்பது பிராணவாயுவையே கழுத்தாகக் கொண்டது.

அயக்கிரீவம்

மாலின் 10-வது அவதாரம் அயக்கிரீவ அவதாரம், அயம் என்பதற்குப் பொருள் பிராணவாயு, கிரீவம் என்பது கழுத்து, ஆகவே அயக்கிரீவம் என்பது பிராணவாயுவையே கழுத்தாகக் கொண்டது. இப்படியே மற்ற அவதாரங்கள் என்பவற்றிற்கு வெவ்வேறு பொருள் உண்டு.

38. வாமனவதாரம்

காசிபர் என்பது மனம். இவரது பிள்ளையாகிய மாபலிச் சக்கரவர்த்தியாவது மனதின் மந்தம். அதில் உண்டாகிய சீதம் சாக்கிரத்திலும் சுழுத்தியிலும் நிறைந்து நின்றது உலகளந்த பெருமாள் ஒருகால் மேலும் ஒருகால் கீழும் அளந்து ஓர் அடிக்கு இடமில்லா திருந்தது.

39. வடுகநாதர்

வடுகநாதர் விஷ்ணுவினுடைய தோலை உரித்துப் போர்த்துக் கொண்டது யாதெனில்: மனத்தில் உண்டான மந்தத்தில் தோன்றின சீதமான விஷ்ணு அகம் புறம் எங்கும் இருப்பதை, அப்படி எங்கும் பரவவொட்டாது, உஷ்ண சத்தி விளங்கிச் சீதபாகத்துக்குக் கவசம் போல் உட்பக்கம் இல்லாமல் மேற்புறமாகப் பரவியிருப்பது ருத்திரனை வடுகநாதர் என்பது.

40. பைரவர் வீரபத்திரர்

வடக்கே பைரவர் இருப்பார் என்பது யாதெனில்: நமது பாதத்தின்கண் உஷ்ணசத்தி விளங்குவதுதான். சிரசிலே வீரபத்திரராவது* இச்சாசத்தி. இதைத் தென்திசையில் வீரபத்திரர் இருப்பதாகச் சொல்லுவது.

41. வேதாரண்யம்

வேதாரணியத்தில் கதவு திறக்கப்பட்டதும் மூடப்பட்டதும் யாதெனில்: வேதப்பொருளை மறைத்ததுந் திறந்ததும் எனக் கொள்க. உண்மையை விளக்கியது திறந்தது, மறைத்தது மூடியது.

42. வேதம்

அப்பு தத்துவத்தின் குணம் நான்கில் இருந் துண்டானவையே நான்கு வேதமும்.

43. வேதம் ஆகமம் முதலிய நூல்கள்

வேதம் பதி லக்ஷணத்தை விளக்கும். ஆகமம் பசு லக்ஷணத்தை விளக்கும். புராணம் பாச லக்ஷணத்தை விளக்கும். இதிகாசம் பத்தியை விளக்கும். ஸ்மிருதி கர்மத்தை விளக்கும். மேலும் வேதம் பதி பசு பாசத்தைச் சொல்லும். அதுபோல் ஆகமமும் சொல்லும். வேதம் என்பது நான்கு மகாவாக்கியந்தான். மற்றவை அங்க உபாங்க சாங்கப் பிரத்தியாங்கங்கள். இவைகள் யாவும் மனமடங்கும் துவாரமாம்.

44. வேதாகம வழிகள்

ஒருவன் ஆன்ம லாபம் பெறுவதற்கு இரண்டு மார்க்கம் உண்டு. ஒரு மார்க்கம் படியுள்ளது; ஒரு மார்க்கம் படியில்லாதது. எப்படி எனில்: மெத்தை ஏற வழியிருப்பதுபோல். ஏறிவிட்டால் மேலிடமாகிய அரமியம் ஒன்றே. அவ்வழி, ஆகமவழி சோபான முடையது. வேதவழி சோபானம் இல்லாதது. ஒருவன் ஆகமவழி செல்லாது வேத

---

* அண்ட முகட்டில் உள்ளது வீரபத்திரபுவனம்

வழி போகக்கூடாது. ஏனெனில் ஜீவன் உபாசன துவாரமாய் ஜீவத்துவங் கெட்ட இடத்தில், இரண்டற்று ஒன்றாகிய வேதவழி என்னும் அத்துவைதம் நிலைக்கும். வேதவழியான அத்துவைதம் அனுபவம்; ஆகமவழியான துவைதம் விவகாரம். ஒன்றென விவகரிப் பவரிடத்தில் அனுபவமில்லை. உபதேசரீதியில் சொல்லாது ஒன்றெனப் படவேண்டும்.

45. தேவாரம்

தேவாரம் என்பது: தேவ் - தயவு, ஆரம் - ஒழுங்கு; தயா ஒழுங்கே தேவாரம்.

46. திருவாசகம்

திருவாசகம் என்பது: மெய்ப்பொருள் நிரம்பிய வார்த்தை, மெய்ப்பொருளைத் தரும் வார்த்தை.

47. திருமந்திரம்

இந்த மார்க்க உண்மை தெரிய வேண்டுமாகில் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும்.

48. திருமந்திரமும் திருவாசகமும்

சாத்திரங்களிற் சிறந்தது திருமூலர் திருமந்திரம். இஃது மொத்தம் எண்ணாயிரம்; தோத்திரங்களிற் சிறந்தது திருவாசகம். இவற்றை ஊன்றிப் பார்க்கவும்.

49. சிவம் என்பதன் பொருள்

சிவம்

சிவம் என்பதற்குப் பொருள் சச்சிதானந்தம். சச்சிதானந்தமென் பது சத்து, சித்து, ஆனந்தம். இதில் சிகரம் சத்து, வகரம் சித்து, மகரம் ஆனந்தம்; சிகரம் எல்லா முள்ளதாய் விளங்குவது, வகரம் எல்லாம் விளங்குவதா யுள்ளது, மகரம் இரண்டினாலும் நிரம்பிய வின் பம்.

சிவம்

சிவம் என்பதற்குப் பொருள் ஸச்சிதானந்தம். ஸச்சிதானந்த மென்பது ஸத்து சித்து ஆனந்தம். சி சத்து, வ சித்து, ம் ஆனந்தம். சி எல்லாம் உள்ளதாய் விளங்குவது, வ எல்லாம் விளங்குவதாயுள் ளது, ம் இந்த இரண்டினாலும் நிரம்பிய இன்பம்.

சிவ

சிவ என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாத சர்வ வல் லமை யுடையது. சி என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாதது; வ என்பதற்குப் பொருள் சர்வவல்லமை யுடையது.

சிவ

சிவ என்பதன் பொருள் அனாதியாய் மலமில்லாத சர்வ வல்லப முடையது. சி என்பது அனாதியாய் மலமில்லாதது, வ என்பது சர்வ வல்லப முடையது.

சி

மேலும் சி என்னு மெழுத்துக்குப் பொருள் ஒருவாறு: இதி லடங்கிய பீஜம் 5. அவையாவன: தோன்றி அசைதலாகிய விந்து ஒன்று, அதன் புடைபெயர்ச்சி ஒலியாகிய நாதம் 2, அதன் வண்ண வடிவமாகிய் வரி அக்கரத்தின் சகரமெய் யென்னும் ச் 3, அதனது குணங்களை வெளிப்படுத்தும் ஆதி அக்கரமாகிய பிரணவ மூல அகரம் 4, இதைத் தன்வண்ணச் சுபாவத்தோடு வெளியில் தோன்றச் செய் வித்து விளக்கும் அருட்பிரணவமாகிய இகரம் 5, ஆகக் கூடிய விந் துக்களைந்தும் ஓருருவமாய்ச் சிகரமாயிற்று. இதன் இலக்கணம் விரிக் கிற் பெருகும். அனுபவத்தா லறிக.

சி

சி என்னு மெழுத்துக்குப் பொருள்: இதன் பீஜாக்ஷரம் 5. அவையாவன: பிந்து, நாதம். சகரஒற்று, அகரம், இகரம். இவை கூடியது சிகரமாகிய ஓர் உருவம் இதற்குப் பொருள் சுத்த சன்மார்க்க காலத்தில் வெளிப்படும்,

50. சிவகுணமும் ஜீவகுணமும்

சிவகுணம் 8	ஜீவகுணம் 8
தன் வயத்தனாதல்	பராதீனன்
தூய உடம்பினனாதல்	துக்கதேகி
இயற்கை யுணர்வினனாதல்	செயற்கை உணர்வினன்
முற்றும் உணர்தல்	சிற்றுணர்வினன்
இயல்பாகவே பாசங்களினீங்குதல்	பந்தன்
பேரருளுடைமை	காடின்னியன்
முடிவிலாற்ற லுடைமை	நிர்பவன்
வரம்பிலின்ப முடைமை	மலதேகி

51. சிவமாதல்

பசுவென்பது முற்றும் மலமுள்ளது.
ஜீவனென்பது மூன்று பங்கு மலமுள்ளது.
ஆன்மாவென்பது ஒரு பங்கு மலமுள்ளது.
சிவம் முற்றும் மலம் நீங்கியது.
ஆதலால் மலம் முற்றும் நீங்கித் தயா வடிவமாவதே **சிவமாதல்.**

52. பஞ்சாக்கரம்

சமய சூக்கும பஞ்சாக்கரத்தின் தாத்பரியம் நான்கு, ஷடி அக்ஷரம் 5 : சிவாயநம — இதற்குத் தாத்பரியம் நான்காவன. பூர்வம், பூர்வபூர்வம், உத்தரம், உத்தரோத்தரம் ஆக 4. இதில் பூர்வத்திற்கு அர்த்தம்: சிவனை நமஸ்கரிக்கின்றேன். பூர்வபூர்வத்திற்குத் தாத்பரியம்: அநாதியில் மலமில்லாது எல்லாமுடைய சிவத்திற்கு என்னுடைய கரண உள்ளங்களைச் சமர்ப்பிக்கின்றேன். மற்ற இரண்டிற்கும் அர்த்தம் அனுபவத்தால் தெரியலாம். இதுபோல் மத சன்மார்க்கத்திற்கும் ஷடி அக்ஷரமே. அதற்கும் முன்போலவே நான்கு தாத்பரிய முள்ளது. அதில் பூர்வத்திற்குத் தாத்பரியம்: சி என்பது பதி, வா என்பது சத்தி, ய வென்பது ஜீவன், ந வென்பது திரோதை, ம வென்பது மாமாயை; ஆதலால், மாமாயை திரோதை நீங்கி, ஜீவபோத மற்று, அருள் வடிவாய்ச் சிவமாவது. பூர்வபூர்வத்தின் தாத்பரியம்: சி என்பது எல்லாமுடையது, வா என்பது அபிந்நமாகிய அருள், ய வென்பது ஆன்ம சிற்சபை, ந வென்பது சீவன், ம வென்பது பசு; ஆதலால் பசுத்தன்மை கெட்டு, ஜீவபோதம் போய், ஆன்ம வியற்கை வடிவாய்ச் சத்துவமயமாய் எல்லாமுடையதுவாய்ப் பூரணமாய் நிற்றல்; ஒருவாறு. அனுபவத்தில், பரவிந்து பரநாதம் பரத்திலும், அபரவிந்து அபரநாதம் பூர்வத்திலும் வழங்கும். இவ்வளவும் செபமூலமாய்க் கரணசுத்தி வந்து, அக்ஷர முன்னுதலை விட்டு, அறிவாகிருதியாய், கருணையும் சிவமுமே பொருளெனும்படி நிற்றற்கு முதற்றுவாரமாம். மற்ற உத்தரத்தில் ஏமசித்தியும் உத்தரோத்தரத்தில் **தேகசித்தியும்** சொல்லும். இஃது மத சன்மார்க்க அனுஷ்டானம். இதுபோல் சமயத்திலும் தேகசித்தியும் ஏமசித்தியு முள. மேற்குறித்த சமய மதங்களின் விரிவு அனந்தகோடி. அந்த சித்திகள் யாவும் அவ்வச்சமய மதங்களின் கர்த்தா மூர்த்தி தலைவன் தலைவி முதலியவர்கள் பதப்பிராப்தி வரையிலும் நிற்கும். ஆதலால் மேற்குறித்த இரண்டு சித்தியும் எக்காலத்தும் அழிவுறா திருப்பதாகச் சொல்லுவது சுத்த சன்மார்க்க பூர்வோத்தரம். ஏமசித்தி[1] தேகசித்தி ஆகிய இவற்றை மேற்குறித்த சூக்கும பஞ்சாக்கரத்தில் சொல்லுவதற்குப் பிரமாணம்:- "சிவாயநம வெனச் செம்பு பொன்னாயிடும்"[2] "சிவாயநமவெனச் சிந்தித்திருப்பார்க்கு அபாய மொருநாளு மில்லை."[3] ஆதலால், மேற்குறித்த அக்கரத்தை மகான்கள் குழூக்குறியாக - வரிவடிவாய் - சுட்டினார்கள். இதை அக அனுபவிகள் தத்துவங்களை அறிந்து, அனுசந்தானஞ் செய்வார்கள். சாதகிகளுக்கு நாவினாலுன்னிக் கரண

1. ஏமசித்தி – பொன் செய்யும் வல்லபம்.
2. திருமந்திரம் 903.
3. நல்வழி 15 (ஔவையார்)

மோய்ந்தால், தத்துவானுசந்தானஞ் செய்யக்கூடும். உலகிகள் நாவினு லுன்னத் தங்கள் மனோரதம் சித்திக்கும். **வகர வித்தை** [4] யுடையவர்கள் மேற்படி அக்கரத்தின் உண்மையைப் பவுதிகம், லோகம், ஓஷதி, லவணம், முதலியவற்றிற் சேர்த்து வகரத்தை முடிப்பார்கள். **தகர வித்தை** [5] யுடையவர்கள் அதுபோலவே அமைத்துக்கொண்டு தேகத்தை நீடிக்கச் செய்வார்கள். ஆதலால் மேற்குறித்த அக்கரங்கள் பரிபாஷை. இதனது உண்மை யாவும் சுத்த சன்மார்க்க சகஜ சாத்திய ஞானனுபவிக்கு விளங்கும்.

சிவாய நம

சமயத்தில் சிவாயநம வென்னும் வாக்கியத்திற்குத் தாத்பரியம் 4 வகைப்படும்: பூர்வம், பூர்வ பூர்வம், உத்தரம், உத்தரோத்தரம். பூர்வம்: சிவனை நமஸ்கரிக்கின்றேன் என்பது. பூர்வ பூர்வம்: அனாதியில் மல மில்லாததாயும் எல்லாமுடையதாயும் உள்ள சிவத்திற்கு என்னுடைய கரண உள்ளங்களைச் சமர்ப்பிக்கிறேன் என்பது. உத்தரம் உத்தரோத்தர மென்னும் பொருளுக்கு விவரம் இனிச் சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்படும்.

பஞ்சாக்ஷரமும் சித்தியும்

சிவாயநம வென்னும் மந்திரத்துக்குப் பொருள் முன்போல் 4 வகை. அதில் பூர்வமாவது: சி என்பது பதி, வா சத்தி, ய ஜீவன், ந திரோதை, ம மாயை. பூர்வ பூர்வமாவது: சி யென்பது எல்லா முடையது, வ என்பது அபின்னமாகிய அருள், ய ஆன்மாவாகிய சபை, ந ஜீவன், ம பசு, உத்தரத்தின் பொருள்: பரவிந்து பரநாதம் பரத்திலும், அபரவிந்து அபரநாதம் பூர்வத்திலும் வழங்கும். இவ்வளவும் சிவத் தியானமல்ல, தத்துவ அனுசந்தானமே. உத்தரத்தில் ஏமசித்தியும் உத்தரோத்தரத்தில் தேகசித்தியும் சொல்லுவது மத சன்மார்க்க அனுஷ்டானமாம். பஞ்சாக்ஷரத்தில் ஏமசித்தியும் தேகசித்தியும் சொல்வதற்குப் பிரமாணம்: "சிவாயநம வெனச் செம்பு பொன்னாயிடும்." "சிவாயநம வெனச் சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை." ஆதலால் பரிபாஷையால் மறுத்தது. மேற்குறித்த ஏம சித்தியும் தேகசித்தியும் எக்காலத்தும் இருக்கும்படியாகச் சொல்வது சுத்த சன்மார்க்கப் பூர்வோத்தரம்.

சிவ சிந்தனை

ஓம் சிவாயநம என்று சதா சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுலகம் அருட்சத்தி, பொருட்சத்தி, கிரியாசத்தி, யோக சத்தி, ஞானசத்தி மயமாக இருப்பதாகப் பார்த்துக்கொண்டிருத்தல்

---

4. வகரவித்தை - பொன் செய்தல்.
5. தகரவித்தை - தேகசித்தி செய்துகொள்ளல்.

வேண்டும். யோகம் செய்தல் வேண்டுவதில்லை. அதில் அழுந்தி விட்டால் மீளுவது கஷ்டம். சதா சிவக்கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை. மூடம் உண்டாகும். உண்மை.

53. பிரணவம்

ஓம் என்னும் எழுத்து பிரணவம் என்று சொல்லப்படும். படைத்தளித் தழிக்க வல்ல தலைவன் என்பதே அந்த ஓங்காரத்தின் பொருள்.

பிரணவம்

பிரணவத்தின் ஐந்து பாகம் யாவெனில்: அகரம், உகரம், மகரம், விந்து, நாதம். பஞ்சமி என்னும் வாக்கு பிரணவத்தின்கண் இருந்து தோன்றியது. அதற்கு ஸ்தானம் மூலாதாரம். அதிலிருந்து தோன்றிய மற்ற நான்கும் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி. இவற்றிற்கு இடம் நாபி, இருதயம், கண்டம், லலாடம்.

54. அகரம்


மூலாங்கப் பிரணவமாகிய அகர லக்ஷணம் ஒருவாறு:—
ஊன்றல் வாமை.
சுழித்தல் ஜேஷ்டை.
விசிரிம்பித்தல் ரௌத்திரி.
மடித்து மேலேறல் காளி.
அங்கிருந்து கீழ்வரல் கலவிகரணி.
மேல் புடைபெயர்த்தல் பலவிகரணி.
கீழ்த்தாழல் பலப்பிரமதனி.
கீழ் ஊன்றி நிற்றல் சர்வபூததமனி.
வரிவடிவாதல் மனோன்மனி.

இதில் விந்து நாதம் முதலிய நவநிலைகளுமுள.

அகரம்

அகரமாகிய முதல் எழுத்து உற்பத்தி விவரம்:—

1. விந்து - பெரியவெளிச்சம், சூரியவெளிச்சம்.
2. நாதம் - பெரியநாதம்.
3. பரவிந்து - அதில் பாதி வெளிச்சம், சந்திரவெளிச்சம்.
4. பரநாதம் - நாதம்.
5. அபரவிந்து - வெளிச்சம், நக்ஷத்திர ஒளி.
6. அபரநாதம் - நாதம்.
7. திக்கிராந்தம் - அருகியவெளிச்சம், மின்னல் ஒளி.
8. அதிக்கிராந்தம் - சப்தம்.
9. வாமசத்தி.



10. ஜேஷ்ட சத்தி.
11. ரௌத்திரி சத்தி.
12. காளி சத்தி.

55. காயத்ரி

காயத்ரி: கா-ய-த்ரி. க ஜலதத்துவமாகிய ஸ்தூலதேகம், பிரமஸ்வரூபம். ய வாயுதத்துவமாகிய சூக்ஷ்மதேகம், விஷ்ணு ஸ்வரூபம். ஆ அக்னிதத்துவமாகிய காரணதேகம், ருத்ரஸ்வரூபம். த்ரி மூன்று. அதாவது, மேற்குறித்த மூன்று தேகங்களின் ஸ்வரூப ரூப சுபாவ குணங்களை ஐயம் திரிபு மயக்க மின்றிக் கடந்தால், ஜனன மரண சாகரம் நீங்கி நித்தியர் ஆவோம். எப்படியெனில்: காயத்திரி மந்திரத்திற்குப் பாதம் மூன்று. பாதம் ஒன்றிற்கு வர்ணம் எட்டு. ஆக மூன்று பாதத்திற்கும் வர்ணம் இருபத்து நான்கு. பாதம் மூன்றென் பதன் குறிப்பு: ஜீவர்களுக்கு மலம் மூன்று. வருணம் இருபத்து நான்கு என்பதன் குறிப்பு: இரு-இரண்டு, ஜீவகாருண்யம் தத்துவவிசாரம் ஆகிய இரண்டையும்; பத்து (பற்று) - பிடி, பற்றினால்; நான்கு - நாலாகிய ஜீவகாருண்யம், ஈசுரபக்தி, பாச வைராக்கியம், பிரம ஞானம் ஆகிய இவற்றை அடையலாம். அடைந்து, காயத்ரிமந்திரம் திரிமூர்த்தி ஸ்வரூபமாதலால், இதற்கு அதீதமான பிரமானுபவத்தைப் பெறலாம்.

மேலும், தத்துவ த்ரேயங்களான மூன்று தேகங்களுக்கும் தத்து வம் யாதெனில்:— வர்ணம் இருபத்துநான்கு. ஆதலால், ஸ்தூல தத்துவம் இருபத்துநான்கு. பாதம் மூன்று, காயத்ரி திரிமூர்த்தி ஸ்வ

ரூபம், இவற்றுள் ஒன்றில் ஒன்றைக் கொடுக்கவந்தது ஒன்று :- 3, 3, 1 ஆகிய இவற்றைச் சேர்க்க ஏழு ஆகிறது. ஆதலால், சூட்சும தத்துவம் ஏழு. இதற்குச் சத்தி மூன்று. அநுப்பவசத்தி ஒன்று, சமத்துவம் ஒன்று. ஆக ஐந்து. ஆதலால். காரணதேக தத்துவம் ஐந்து. மேற் குறித்த முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்தால், அனுபவம் விளங் கும். எப்படியெனில் :— ஓதயாத் : ஓ ஆன்மஅறிவின்கண், த சத்துவ குணமயமாய், த் அருளனுபவம் பெற்று, யா பிரமமாதல். ஆதலால், மேற்குறித்த காயத்திரியின் ஸ்வருபானுபவத்தைப் பெறுதலாம்.

56. தத்துவம்

தத்துவமென்பது : தத் + த்வம் = தத்துவம். தத் - அது. அது வென்பது சிவம். த்வம் – அதன் தன்மை. ஆதலால், தத்துவம் என்பது சிவத்தின் தன்மை.

57. குடிலை

குடிலை என்பது மூலப் பிரகிருதி.

58. பூதம்

பூதம் என்பது : பூ - த - ம். பூ அலர்ந்தது, த தடித்தது, ம் கலத்தல், ஆதலால், எங்கும் நிறைந்து அணுவாய்க் கலத்தல் பூதம்.

பூதம் என்பதன் சப்தார்த்தம்

பூதமென்பது யாது? அதனது சொரூப ரூப சுபாவங்களென்ன? பூதம் என்பதற்குச் சப்தார்த்தம் : பூ மலர்ந்தது, பிரகாசம்; த தடித் தது, காரியம்; ம் ஊன்றியது, நிலை. இதற்குத் தாத்பரியம் : நிலை பெற்ற காரியம் பிரகாசம். பூத அக்கினித் தோற்றமென்றும் பெயர். பூதகாரிய அக்கினி என்றும் பெயர். பூ என்பதில் உகர உயிரும் தம் என்பதில் அகர உயிரும் எண்ணில் அ - ம், உ - ம் ஆயின, ஆக தொகை ய. இந்தப் பத்து இடத்திலும் பூதகாரிய அக்கினித் தோற் றம் உண்டு. கல்லுக்குள்ளிருக்கிற நெருப்பு பஞ்சில் காரியப்படுவது போலாம். பத்துப் பொது ஸ்தானங்களாவன : மண், ஜலம், அக்கினி, காற்று, வெளி, பிரகிருதி, மாயை, சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் ஆக இடம் ய.

59. பௌதிகம்

பௌதிக மென்பது லிங்கமாதி உபரசம் நூற்றிருபதிற்கும், பாஷாணமாதி 64 பாஷாணங்கட்கும், சுக்காதி ஒஷதி மூல பத்திர பீசங்கட்கும் பெயர். இஃது ஒருவாறு பூதகாரிய தேகமாதி தத்துவங் கட்கும் பெயர். பௌ + தீ + அகம் = பௌதீகம். பௌ - மூடல், அகம்- உள், தீ - அக்கினி, ஆதலால் தீயை உள்ளடக்கியது பௌதீகம். தீ என்பது காரண உஷ்ணம்.

பௌதிகங்கள்

பௌதிகங்களென்பவை வீரம் பூரம் முதலிய 64 சரக்குகள்.

60 நினைப்பு மறைப்பு

நினைப்பு மறைப்பு உண்டாவதற்குக் காரணம்: சந்திரன் அக்கினியோடுகூடி, சூரியபாகத்திலுண்டாகும் காற்றினால் அசைக்கப்படும்போது, உண்டாகும் நினைப்பு; சூரியன் அக்கினியோடுகூடி, சந்திரபாகத்தில் உண்டாகுங் காற்றினால் அசைக்கப்படும்போது உண்டாகின்றது மறைப்பு. நினைப்பு மறைப்பு என்பதற்குப் பொருள்: நினைப்பென்பது யாது? ஜனனம், மன அசைவு, ஒன்றை நினைத்தல், சகலகாலம், மேற்படி தத்துவம் வேறொன்றில் பற்றல், தத்துவத்தின் அசைவாகிய ஆவி மேலேறுதல், ஷ ஆவி ஏறின இடத்தில் நில்லாது அக்கிரமித்தல். மறைப்பென்பது யாது? மரணம், தூக்கம், மனம் ஒன்றைப்பற்றி உடனே மறைதல், கேவலகாலம், ஷ தத்துவத்தின் கூர்மை கீழ்ச்செல்லுதல், பிரக்ஞை இல்லாதிருத்தல், மேற்படி ஆவி அக்கிரமித்தல், மனம் ஆபாசப்பட்டுச்•சூனியமாதல். மேற்குறித்த நினைப்பு மறைப் பற்று நிரதிசயானந்தமாய் அருள்வடிவாவதே சுத்த சன்மார்க்க சாதனம்.

நினைப்பு மறைப்பு

இந்த ஜீவன் அக்கினியின் சூரியபாகத்தி லுண்டாகும் காற்றினால் அசைக்கப்படும்போது நினைப்பும், அக்கினியின் சந்திரபாகத்தில் உண்டாகுங் காற்றினால் அசைக்கப்படும்போது மறைப்பும் உண்டாகின்றன. இதுதான் நினைப்பு மறைப்பு உண்டாவதற்குக் காரணம்.

நினைப்பு மறைப்பு

நினைப்பு மறைப்பு என்பதற்குப் பொருள்: நினைப்பென்பது ஜனனம், மனம் நினைத்தல், சகலம், தத்துவத்தினது கூறுபாடு வேறொன்றில் பற்றல் மேலேறுதல், தத்துவத்தின் ஆவி அதிக்கிரமிக்கிறது. மறைப்பென்பதற்குப் பொருள்: மரணம், கேவலம், தூக்கம், தத்துவத்தின் கூறுபாடு கீழ்ச்செல்லுதல், பிரக்ஞை யில்லாதிருத்தல், அதனது உஷ்ணம் அதிக்கிரமிக்கிறது, மனம் ஆபாசப்பட்டுக் கீழ்ச்செல்லுதல். ஆதலால், நினைப்பு மறைப்பு அற்று, நிரதிசயானந்தமாய் அருள்வடிவமாவதே சுத்தசன்மார்க்க சாதனம் இது ஒருவாறு.

61. விருப்பு வெறுப்பு

விருப்பு வெறுப்பு என்பதற்குப் பொருள்: விருப்பென்பது யாது? ஒன்றை வேண்டிப் பந்தப்பட்டு, பூரண லக்ஷியத்தை விட்டு, அதிசயமாகப் பார்த்து நிற்றல். இந்த விருப்பால் தானுங் கெட்டு, இதர வஸ்துவுங் கெட்டு, சாதனமுந் தடைப்பட்டுவிடும். எவ்வகையிலும்

விருப்பென்பது கூடாது. வெறுப்பென்பது யாது? வேண்டாமை, துவேஷம், இதர வஸ்துவைப் பற்றாதிருத்தல். இந்த வெறுப்பால் இதரவஸ்துவிடத்தில் துவேஷந் தோன்றி ஜீவோபகாரத்தைத் தடை செய்யும். ஆகையால் வெறுப்புங் கூடாது. மேற்குறித்த இரண்டு மற்று, சத்துவமயமாய் நிற்றல்வேண்டும்.

விருப்பு வெறுப்பு

விருப்பு வெறுப்பு என்பதற்குப் பொருள்: விருப்பென்பது வேண்டுதல், பந்தம். பூர்ணபாவனையை விட்டு அதிசயமாகப் பார்த்து விரும்புதலால் பூர்ணபாவனை தடைப்பட்டுத் தான் கெடுவன். ஆதலால் விருப்பென்பது எவ்வளவும் கூடாது. வெறுப்பென்பது வேண்டாமை, துவேஷம், எதிர்கண்ட வஸ்துவைப் பற்றாதிருத்தல். இதரவஸ்துவைக் கெடுதலென்று நினைப்பதால் வெறுப்பென்பதும் கூடாது. விருப்பு வெறுப்பு அற்று அருள்வடிவாவதே சுத்த சன்மார்க்கம்.

62. சங்கல்பம்

சங்கல்பத்தின் பொருளும் விரிவும் யாதெனில்:— விரிவாவது ஐந்து: நிர்விகல்பம், சவிகல்பம், சங்கல்பம், விகல்பம், கல்பம். இவற்றுள் நிர்விகல்பமாவது கடவுளறிவு. ஷை அறிவின் வியாபகமே சவிகல்பம். சங்கல்பமென்பது கரணம் யாதொன்றிலும் பற்றாமல் சுத்தமாயிருந்த காலத்தில் தோன்றிய அசைவே சங்கல்பம்; ஒன்றிலும் பற்றாது அசைந்த மேலசைவென்னும் புடைபெயர்ச்சியே சங்கல்பம். நாம் நஷ்டமடையோம் என்று உள்ளழுந்திய பிரக்ஞையே சங்கல்பம். விகல்பமென்பது பிரம சதாசிவ கால அளவைக் குறித்தது. இதில் பலவாக விரிந்த அனுசந்தானங்கள் கல்பம். உள்ளழுந்தல், அதைச் சிந்தித்தல் சிந்தித்தலை விசாரித்தல் இம்மூன்றுமே சங்கல்ப விகல்ப கல்பம்.

மேற்குறித்த சங்கல்ப மயமா யிருந்தால் சிவானுபவம் பெறலாம். "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றி னதுதான் வந்துமுற்றும்"* என்றபடி.

சங்கல்பம்

சங்கல்ப மென்பது 5 வகை. அதாவது நிர்விகல்பம் 1, சவிகல்பம் 2, சங்கல்பம் 3, விகல்பம் 4, கல்பம் 5. நிர்விகல்பமென்பது கடவுளறிவு. சவிகல்பமென்பது அதினது வியாபகம். சங்கல்பமென்பது யாதொன்றிலும் பற்றாமல் சுத்தமாயிருந்த காலத்தில் தோன்றிய அசைவாகிய நினைப்பே, முன் அசைவின்றி அசைந்த அசைவாகிய மேலசைவென்னும் புடைபெயர்ச்சியே, எக்காலத்தும் மரணமடைய மாட்டோமென்கிற பிரக்ஞையே. விகல்பம் என்பது பிரம சதாசிவ கால அள

* தாயுமானவர் பாடல், கருணாகரக்கடவுள், 7

வைக் குறித்தது. கல்பம் என்பது மேற் குறித்தவைகளுக்கு அனுசந்தானங்கள். சங்கல்ப விகல்ப கல்பமென்பவை 3 வகை: உள் அழுந்தல் ஆன்ம திருஷ்டி, அதைச் சிந்தித்தல் ஜீவ திருஷ்டி, அதை விசாரித்தல் மனதிருஷ்டி. இந்த மூன்றுமே சங்கல்ப விகல்ப கல்பம். ஆதலால், மனத்தில் யாதொன்றும் இல்லாமல் சுத்த மனமாக, நாம் நஷ்டமடைய மாட்டோ மென்று உள்ளழுந்தி நிச்சயித்தலே சங்கல்பம்.

பற்று

மனத்தின் கூறுபாடு 4 வகை: அதாவது ஜீவப்பற்று, பந்துப் பற்று, களத்திரப்பற்று, தேகப்பற்று. தேகப்பற்ருகிய அகப்பற்றுப் போயிருத்தல் சங்கல்பம்.

சங்கல்பம்

சங்கல்பமாவது: சம் - முடிவு; கல்பம் - காலபேதம்; கால முடிவு.

63. தன்னையறிதல்

தன்னையும் தனக் காதாரமான தலைவனையும் கூடஸ்தனையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

64. கூடஸ்த பிரம ஐக்கியம்

கேவல வேதாந்தத்தில் கூடஸ்த பிரம ஐக்கியத்தின் பொருள். ஜீவசைதன்யம், ஈசுரசைதன்யம், பிரமசைதன்யம், கூடஸ்தசைதன்யம், சர்வசாக்ஷி. இவற்றிற்குப் பிரதிநாமம் மேகாகாசம், ஜலாகாசம், கடாகாசம், தத்துவாகாசம், மஹாகாசம் ஆக ஐந்து. தம்பப்பூச்சி முதல் மனுஷர்களில் மூடர் பரியந்தம் பரதந்திரர்கள், ஜீவசைதன்யம். சுராசுரர் அறிவுடைய ஜீவர்கள் சுதந்திரர்கள், இவர்கள் ஈசுரசைதன்யம். காரியம் ரூபம் முதலியவற்ருேடு கூடிய **சுத்ததேகி** பிரமசைதன்யம். காரணகாரியம் ரூபாரூபம் முதலியவற்றுடனின்ற **பிரணவதேகி** கூடஸ்தசைதன்யம். காரணம் அரூபம் முதலியவாகநின்ற **ஞானதேகி** சர்வசாக்ஷியெனக் கொள்க.

சைதன்னியம்

ஜீவ சைதன்னியம் – மேகாகாசம்
ஈசுர சைதன்னியம் – ஜலாகாசம்
பிரம சைதன்னியம் – கடாகாசம்
கூடஸ்த சைதன்னியம் – தத்துவாகாசம்
சர்வசாக்ஷி – மகாகாசம்
ஜீவ சைதன்னியம் – தம்பப்பூச்சி முதல் மனிதரில் மூடர் பரியந்தம், பரதந்திரர்கள்
ஈசுர சைதன்னியம் – அசுரர் ராக்ஷசர் உயரறிவுடைய ஜீவர்கள், சுதந்திரர்கள்

பிரம சைதன்னியம் காரிய ரூபத்தோடு கூடிய **சுத்ததேகி**

கூடஸ்த சைதன்னியம் – காரிய காரண அருபத்தோடு கூடிய **பிரணவதேகி**

சர்வசாக்ஷி – காரண அருபத்தோடு கூடிய **ஞானதேகி**

65. கடவுள் ஏகம் அனேகம்

கடவுள் ஏகம் அனேகம் என்பதற்குப் பொருள்: சமயத்தில் சிவம் ஏகம், பிரமாதிக ளனேகம்; மதத்தில் பிரமம் ஏகம், ஜீவர்கள் அனேகம்; சாதாரணத்தில் கடவுள் ஏகம், பசுக்கள் அனேகம்; சுத்த சன்மார்க்கத்தில் தனிக்கடவுள் ஏகம், அவ்வருளால் சுத்தமாதி ஞான தேகம் வேறுகப் பெற்ற ஞானிகள் அனேகம் எனக் கொள்க.

கடவுள் ஏகம் அனேகம்

கடவுள் ஏகம் அனேகமென்பதற்குத் தாத்பரியம்: சமயத்தில் சிவம் ஏகம், பிரமாதிக ளனேகம். மதத்தில் பிரமம் ஏகம், பரவிந்து பரநாதம் முதலியவை அனேகம். சமயாதீதத்தில் சொல்லிய பிரமம் முதல் சுத்தப் பிரமம் வரையிலும் ஏகம், அதைப் பெற்றவர்க ளனேகம். சாதாரண பாகத்தில் கடவுள் ஏகம், ஜீவர்கள் அனேகம். சுத்த சன் மார்க்கத்தில் கடவுள் ஏகம், கடவுளருளால் சுத்தமாதி மூன்று தேகங் களைப் பெற்ற ஞானிக ளனேகம்.

66. கடவுள் ஒன்றும் இரண்டும் ஆதல்

கடவுள் ஒன்றல இரண்டல ஒன்றுமிரண்டுமானர் என்பதற்குத் தாத்பரியம்: ஒன்றல – கடவுளானவர் ஒன்ருகிய ஞானதேகியும் அல்ல. இரண்டல – சுத்தப் பிரணவதேகியும் அல்ல. ஒன்றுமிரண்டுமானர் – கடவுளானவர் தன்னருளைப் பெற்ற சுத்த ஞானிக்கு ஞானதேகத்தை யும் சுத்தப் பிரணவதேகத்தையுங் கொடுக்க முதற் கருவியாக இருக் கின்ருர். இதை அனுபவத்தால் குருமுகத்தில் உணர்க.

67. மூவகை உயிர்கள்

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆக 3. சகலர் இயற்கை யாகிய ஆணவம், இயற்கையில் செயற்கையாகிய மாயை, செயற்கை யாகிய காமியம் அல்லது கர்மம் இம்மூன்று முள்ளவர். பிரளயாகல இயற்கையாகிய ஆணவம், இயற்கையில் செயற்கையாகிய மாயை இவ்விரண்டு முள்ளவர். விஞ்ஞானகலர் இயற்கையாகிய ஆணவம் மாத்திரம் உள்ளவர். சகலர் ஜீவர்கள். பிரளயாகலர் கல்ப தேகிகள். விஞ்ஞானகலர் காலாதீதர்கள். சுத்தம் 9, அசுத்தம் 9, ஆக 18.

68. முக்குணம்

தானுக நிற்றல் சத்துவகுணம், ராகத் துவேஷ சம்பந்தமுடையது ராஜசம், சோம்பலாதி ஜீவ இம்சைக் கிடனுவது தாமசம். ஆன்மா

வின் செயற்கை ரஜோதமங்கள், இயற்கை சத்துவம். ஜனன மரண ஏது செயற்கையாலுண்டாம்; இயற்கையால் சிவானுபவம் பெறலாம். இதை விரிக்கில், ஒவ்வொன்றும் மும்மூன்ருகும், அனந்தமுமாம்.

சத்துவம் ராஜசம் தாமசம்

தானாக நிற்றல் சத்துவம். இராகத் துவேஷாதிகளோடு கூடியது இராஜசம். ஜீவஹிம்சை செய்தல், சோம்பல், நித்திரை முதலியன தாமசம். ஆகையா லியற்கையாகிய சத்துவத்தோடு கூடிச் செயற்கையாகிய ராஜச தாமசத்தைச் சிறுகச் சிறுக நீக்க வேண்டியதில் சதா ஞாபகம் செய்யவேண்டியது.

குணவகை

சத்துவம், ராஜஸம், தாமசம் என்று குணங்கள் 3. ஒவ்வொன்றிலும் 3 சேர்ந்து 9 ஆயின. இந்த 9-ம் சுத்தம் அசுத்தம் என்னும் பேதத்தால் 18 ஆயின.

69. மூன்ருசை

சுத்த சன்மார்க்க லக்ஷிய அனுபவ விருப்ப முடையவர்களுக்கு நனவினும் மண்ணாசை, கனவினும் பெண்ணாசை, சுழுத்தியினும் பொன்னாசை முதலிய மூன்றுங் கூடாவாம்.

70. மூன்று அவஸ்தை

அவஸ்தை மூன்று: ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி. இவற்றில் உள்ளம் பித்த உஷ்ணத்தோடு கூடி லலாட ஸ்தானத்தில் நிற்பது ஜாக்கிரம்; சொப்பனமாவது உள்ளம் வாத நாடியோடு கூடிக் கண்ட ஸ்தானத்தில் இருப்பது; சுழுத்தியாவது உள்ளம் சிலேத்தும நாடியோடு கூடி மார்பு ஸ்தானத்தில் நிற்பது.

71. மூவகை ஞானம்

ஞானமென்பது மூன்று வகைப்படும். அவை உபாயஞானம், உண்மைஞானம், அனுபவஞானம். இவற்றின் தாத்பர்யம்: நக்ஷத்திரப்பிரகாசம் போல் தோன்றிய ஜீவஅறிவே உபாயஞானம்; சந்திரப் பிரகாசம் போல் தோன்றி அறியும் ஆன்மஅறிவே உண்மைஞானம்; எல்லா வஸ்துக்களையும் தெரிந்து அனுபவிக்கச் செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற கடவுளறிவே அனுபவஞானம். ஒரு வஸ்துவை அதன் நாமருபமின்றிக் காண்பது இந்திரியக்காட்சி, இந்திரியஅறிவு; கூடமாக அறிதல் கரணக்காட்சி, கரண அறிவு; இன்னதென்று தெரிதல் ஜீவக்காட்சி, ஜீவஅறிவு; எதையுந் தானாக அறிதல் ஆன்மக்காட்சி, ஆன்மஅறிவு; இதற்குத் தோன்றுமறிவு 1, தோற்றுமறிவு 1, தோற்றுவிக்குமறிவு 1, பதியறிவு 1. ஆதலால், ஒரு வஸ்துவினிடத்தில் பற்று

தல் அவா ; அதை அனுபவிக்க வேண்டுமென எழுந்தது ஆசை ; அதன் மயமாதல் காமம்; அதைத் தன்வசப்படுத்த எழுவது மோகம்; எந்த வஸ்துவிடத்திலும் மோகமாதிக ளின்றி அவாமயமாய் நிற்றல் வேண்டும்.

அவாமாத்திரம்

இந்திரியக்காட்சி என்பது ஒரு வஸ்துவின் நாமரூபமின்றிக் காணுதல் ; கரணக்காட்சி என்பது அந்த வஸ்துவைப் பற்றல் ; அதை அனுபவிக்கவேண்டு மென்கிற சித்தவிருத்தி உண்டாகிறது ஆசை என்னும் காமம் ; அதைத் தன் வசப்படுத்த எழுவது மோகம். ஆதலால் எந்த வஸ்துவினிடத்திலும் மோகம் காமம் முதலியவை யின்றி அவா மாத்திரமா யிருத்தல் வேண்டும். சன்மார்க்கத்தில் அவாவும் ஏக தேசத்திலும் கூடாது.

ஞான வகை

உபாய ஞானம் - ஜீவஅறிவு, நக்ஷத்திரப் பிரகாசம்.
உண்மை ஞானம் - ஆன்மஅறிவு, சந்திரப் பிரகாசம்.
அனுபவ ஞானம் - கடவுளறிவு, சூரியப் பிரகாசம்.

உபாய ஞான மென்பது நக்ஷத்திரப் பிரகாசம்போல் தோன்றிய ஜீவஅறிவு. உண்மை ஞான மென்பது சந்திரப் பிரகாசம் போல் தோன்றிய ஆன்மஅறிவு. அனுபவ ஞான மென்பது எல்லா வஸ்துக் களையும் தெரிந்து அனுபவிக்கச் செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற கடவுள்அறிவு. ஆகையால் கடவுளை ஆன்மஅறிவைக் கொண்டு அறிய வேண்டும்.

72. பர அபர ஞானங்கள்

ஞானம் பரஞானம் அபரஞானமென இரண்டு. பரஞான மென் பது முன், சாத்திரஞானம் அல்லது விசாரஞானம், வாசா கயிங்கரியம், சாதனம், வாச்சியார்த்தம். அபரஞானமென்பது பின், அனுபவ ஞானம், சாத்தியம், லக்ஷியார்த்தம். மேலும் பரம் முன், அபரம் பின்; சாத்திரம் முன், அனுபவம் பின் ; சாதனம் முன், சாத்தியம் பின். ஆதி - முதல், அந்தம் - கடை, அநாதி - ஆதி அந்த மில்லாதது.

73. மூவிடம்

(தன்மை முன்னிலை படர்க்கை)

தமிழில் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவை யாவை? அவற் றின் கருத்து யாது? தன்மை, பண்புச்சொல். சார்புமயமாய் இருத் தலைப்பற்றி - தனக்கு மேல் ஒன்றினைச் சார்ந்திருப்பதனால் - பண்புச் சொல் ஆகிறது. முன்னிலை என்பது முன்-நிலை, முன் இடங் கூறி னது. ஆனால் மூன்றும் இடத்திற்குப் படர்க்கை என்பது என்னெ

னில்: படர் – படரும்படியான, கை – இடம். நிலை – அகண்ட இடம். கை என்பது குறுகிய இடம். ஆதலால் பேதாபேதம் குறிக்கும் நிமித்தம் இரண்டாம் இடத்துக்கு முன்னிலை என்றும், மூன்றும் இடத்திற்குப் படர்க்கை என்றும் பெயர்கள் வந்தன என அறியவும்.

74. பஞ்ச மகா பாதகங்கள்

கள், காமம், கொலை, களவு, பொய் — இவ்வைந்தும் கொடிய துக்கத்தை உண்டுபண்ணும். இவ்வைந்திலும் கொலை விசேஷ பாவம். எனினும், கள்ளுண்டவனுக்குக் காமம் உண்டாகாமலிருக்காது, கொலை செய்யத் துணிவு வாராமலிராது, களவு செய்யாமலிரான், பொய் பேச அஞ்சான். ஆகையால், இந்த ஐந்தையும் ஒழிக்க வேண்டியது அவசியம். இதில் ஒன்றை அடைந்தவனானாலும் அவனை மற்றவை தொடராமலிரா.

75. பர அபர வாக்குகள்

வாக்கு நான்கு என்பது யாதெனில்:
அபரவாக்கு, பரவாக்கு, துரியவாக்கு, அனுபவ வாக்கு.
இவற்றில் அபரம் ஸ்தூலவாக்கு
பரம் அசரீரிவாக்கு
துரியம் அறிவில் விளங்குவது
அனுபவம் யாவுமாய் விளங்கித் தோன்றுவது.

76. பிபீலிக விகங்க* நியாயங்கள்

ஆன்ம லாபம் அடைவதற்கு நியாயம் இரண்டு. என்னெனில்: பிபீலிகா நியாயம்; விகங்க நியாயம். இவற்றுள் சிறந்தது விகங்கம், பலவகை இம்சையால் போகத் தடைப்பட்டுப் போவது பிபீலிகா மார்க்கம்.

77. சித்தாந்த வேதாந்தம்

சிஷ்யன் ஆசாரியனைத் தேடிப் பிடிப்பதான மர்க்கட* நியாயம் போற் காட்டப்பட்ட கோன்கண்ட குடியாகியது சித்தாந்தம். இவ்வழி நின்று ஜீவபோதம் கெட்டவிடத்தில், ஆசாரியனே சிஷ்யனைப் பற்றி இழுப்பதான மார்ச்சால* நியாயம்போல் ஊட்டப்பட்ட கோன் கொண்ட குடியாகியது வேதாந்தமாகிய அத்வைதம்.

78. ஜீவன்முத்தனும் ஞானசித்தனும்

ஜீவன்முத்தன் மனோசாக்ஷி. ஞானசித்தன் ரோமத்துக்கு ரோமம் சாக்ஷி. இவர் தொழில் எங்கும் சுற்றுதல், யாவுமாய் நிற்றலே.

---

* பிபீலிகம் – எறும்பு, விகங்கம் – பறவை, அன்னம்
* மர்க்கடம் – குரங்கு, மார்ச்சாலம் – பூனை

79. புருஷன்

ஜீவனுக்குப் புருஷன் எனப் பெயர் வருவானேன்? வித்தியா தத்துவத்தில் புருஷன் என்பது விஷயத்தில் அழுந்தி யிருக்கும் எட்டுக் குணங்களைக் குறிப்பிக்கின்றபடியால், தத்புருஷன், மத்தியபுருஷன், புருஷன் என்று வழங்கியது. மேலும் சிவம் என்பது ஒன்றே.

80. சூரியகலை

சாதாரண ஜீவர்கள் சந்திரகலையில் இறப்பதும் பிறப்பதும் இயற்கை. பக்குவர்கள் சூரியகலையில் பிறப்பதும் இறப்பதும் இயற்கை. சூரியகலை அனுபவம் கிடைப்பது கஷ்டம். தினம் சூரிய கலையில் செல்லும்படி மனதை அந்தக் கண்களில் செலுத்தல்வேண்டும்.

சூரியகலை

ஆலமரத்தடியில் சூரியனை வணங்கவேண்டியஃது என்பது என் னெனில்: சூரியகலையில் தியானம் முதலிய செயல்கள் எல்லாம் செய்ய வேண்டியது பற்றிச் சொன்னது.

81. தியானம்

தியானஞ் செய்யவேண்டுமானால், ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்கவேண்டும். நிஷ்களமா யிருக்கப்படாது. உருவமாக இருக்க வேண்டும். அருவமாகத் தியானிக்கப்படாது. பின், உருவங் கரைந்து அருவமாகும். துவைதமாக இருந்தால், அத்துவ்வதம் தானே ஆகும். எப்படி எனில், பார்க்கும் தான் கெடுவது அத்வைதம். பார்க்கப் படும் பொருளும் கெடுவது அதீதம். சத்தியம்.

82. தீக்ஷை

தீக்ஷை என்பது யாதெனில்: தீ – மலம், க்ஷை - ஒழிவு; தீக்ஷை – மல ஒழிவு.

83. நித்தியத் துறவு

நித்தியத் துறவென்பது: அறம் பொருள் இன்பம் வீடு - இந்த நான்கையும் நித்தியம் 4 காலங்களிலும் செய்து அனுபவித்துப் பற் றற்று இருப்பதே நித்தியத்தை அடைவதற்கு ஏதுவாக இருக்கின்றது.

84. உடம்பின் அருமை

இந்த உடம்பை அலக்ஷியம் பண்ணமல் பொன்னைப்போல் பார்க்க வேண்டும்.

85. ஆண்டவர் சோதனை

ஆண்டவர் சோதிக்கின்றார் என்பது பிணி, மூப்பு, பயம், பசி முதலியவற்றால் வருந்தச் செய்விப்பதல்ல. மரணமடையச் செய்விப்பது தான் சோதனை.

86. ஞான சிருஷ்டி

இறந்தவர்கள் உயிர்பெற்று வரும்போது அது ஞானசிருஷ்டி ஆதலால், ஞானத்தோடு வருவார்களா முன்னிருந்த அறிவோடுதான் வருவார்களா என்றால்? இந்த மானிடதேகம் ஆண்டவரது சிருஷ்டி அன்று, மாயா சிருஷ்டி. முன்னிருந்த ஞான அஞ்ஞானத்தோடுதான் வருவார்கள். ஆனால் கிஞ்சித்து ஞான விசேஷம் உண்டாயிருக்கும். ஆதலால், மீள தரிசன விசேஷத்தால் மந்தம் நீங்கி ஞானம் விளங்கும்.

87. ஆணவ மல நிவர்த்தி

மனுஷ்ய வல்லபத்தால் தனக்கிருக்கிற அசுத்தங்களை நிவர்த்தி செய்துகொள்ளக் கூடுமாவென்றால்: இது நல்லது இது கெட்டது என்று பகுத்தறியும் ஞானத்தால் விஷய வாசனையில் கரணங்களைச் செல்லவொட்டாமல் தடுக்கக்கூடுமே ஒழிய, நிவர்த்திக்கக் கூடாது. அது ஆண்டவரருளால் சுத்ததேகம் பெற்றவர்களால்தான் முடியும். அது அருளொளி கிடைத்தால் அத்தருணமே சுத்தக்கரணமாய் நிற்கும். அசுத்தம் வருவதற்குக் காரணம் யாதெனில் செம்பிற் களிம்பு இயற்கை. அதுபோல் ஆன்மாவிற்கு ஆணவம் இயற்கை. செம்பிலே களிம்பு இயற்கையா யுள்ளதைப் பரிசனவேதியினால் நிவர்த்தித்து ஏமமாக்குவது போல், மாயாகாரியமான இந்தத் தேகத்தின்கண் உள்ள ஆன்மஇயற்கையாகிய ஆணவமலம் ஆண்டவரருளினால் நீங்கப் பெற்றுச் சுத்தஉடம்பாக்கிக் கொள்ளலாம். ஆண்டவர் அருள் அடைவதற்கு, நாம் இடைவிடாது நன்முயற்சியின்கண் பழகுதல் வேண்டும். இதற்குப் பிரமாணம்:

> "ஓடாது மாயைநீ ஊடாது நன்னெறி
> வீடா தெனச்சொன்னீர் வாரீர்
> வாடா திருவென்றீர் வாரீர் *

88. அன்புருவம்

கடவுளைக் காண உண்மையாய் விரும்பினால், அழுத கண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா?

89. அகங்கார ஒழிவு

தன்னைக் காட்டாது ஒழிக்க வேண்டும்.

---

* திருஅருட்டா 4449

90. இகபர காமங்கள்

இகபர காமங்களை விரும்பாமலிருத்தல் வேண்டும்.

91. அபேதம்

தங்களைப் பார்க்கவேண்டு மானால், என்னைப் பாருங்கள், என்னைப் பார்க்கவேண்டு மானால் தங்களைப் பாருங்கள், தங்களைப் பார்த்தால், என்னைப் பார்ப்பீர்கள், என்னைப் பார்த்தால், தங்களைப் பார்ப்பீர்கள்.

92. கவலை.

கவலை கூடாது. உள்ளும் புறமும் ஓர் துணையாக வள்ளல் இருப்பதால், வாட்ட மடைவதற்குக் காரணமே இல்லை.

93. கலைஅறிவும் அருள்அறிவும்

பத்து ஆள்சுமை ஒரு வண்டிப் பாரம். நானூறு வண்டிச் சுமை ஒரு சூல்வண்டிப் பாரம். சூல்வண்டி ஆயிரங்கொண்ட நூல்களை ஒரு ஜென்மத்தில் ஒருவன் அதிதீவிர ஜீவமுயற்சியால் படிக்கச் சிறிய உபாசனைச் சகாயத்தால் முடியும். அப்படிப்பட்டவன் ஆயிரம் ஜென்மம் எடுத்துப் படிக்கும் கலைஅறிவை, ஒருவன் அருள்முன்னிடமாகச் சுத்த சிவ நோக்கத்தால் அறியத் தொடங்கினால், ஒரு கணத்தில் படித்துக் கொள்ளலாம். இது சத்தியம்.

94. ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்

சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மேற்படி மார்க்கம் நான்காவன: **தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம்** என நான்கு.

ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது? **வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம்** ஆக ஆறு. மேற்படி அந்தங்களின் அனுபவம் காலம் இடம் முதலிய வேறுபாடுகளால் ஏறிக் குறையும். ஆதலால், ஷடாந்தமும் வியாபகமில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமா யிருக்கின்றன. மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விவரம்: **வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும்** அடங்கி யிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது அனுபவத்தில் சுத்த வேதாந்த சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.

இவற்றிற்கு அதீதம் ஆகிய சுத்த வேதாந்த சித்தாந்த அந்தாந்தமாகிய சமரச சுத்த சன்மார்க்கமே நித்திய மார்க்கம். மேற்குறித்த மார்க்கத்திற்குச் சமய மதங்களாகிய சன்மார்க்கங்கள் அநந்நியமாய் விளங்கும்; அந்நியமல்ல. மேற்படி சமயமத மார்க்கங்கள் எவை எனில்: சமய சன்மார்க்கம் மத சன்மார்க்கம் என இரண்டு. இவற்றுள் அடங்கிய சன்மார்க்கம் அனந்தம் அதில் சமய சன்மார்க்கத்தின் வகை ஆறு, தொகை முப்பத்தாறு, விரிவு அறுகோடி. இதுபோல் மதத்திலும் வகை தொகை விரிவு உள்ளன. மேற் குறித்த சமய மத சன்மார்க்கங்களில் **வகரவித்தை தகரவித்தை** யுள. அவை அவ்வச் சமயமத சன்மார்க்கங்களின் தலைமையாகிய கர்த்தா மூர்த்தி ஈசுரன் பிரமம் சிவம் முதலிய தத்துவங்களின் காலப் பிரமான பரியந்த மிருக்கும்; அதற்குமேவிரா.

மேற்படி சமயமத சன்மார்க்கங்களில் ஷடாந்த சமரச முளதோவெனில்: உளது. யாதெனில்: வேதாந்த சித்தாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம், இதற்கு அதீதம் சுத்த சமரசம் ஆதலால், சுத்த சமரசத்தில் சன்மார்ககத்தைச் சேர்க்க சுத்த சமரச சன்மார்க்கமாம். இது பூர்வோத்தர நியாயப்படி, கடைதலைப்பூட்டாகச் சமரச சுத்த சன்மார்க்கமென மருவியது.

இதன் தாத்பரியம் யாதெனில்: சமரசம் என்பதற்குப் பொருள் — எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வமாக்கித் தான் உத்தரத்தி னின்று மருவியது சமரசம். இதற்கு அனுபவம் **குருதுரிய ஸ்தானம்.** சுத்த சமரச மென்பதற்கு நியாயம்: விந்து பரவிந்து இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந்தது போலும், சிவம் பரசிவம் இரண்டையும் மறுத்தது சுத்தசிவம் போலும், சன்மார்க்கம் சிவசன்மார்க்கம் இரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம். பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம். இதன் பொருட்டு ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க மென்றே மருவியது. ஒருவாறு, ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த சன்மார்க்கம் ஒன்று, இதன் பூர்வத்தில் சமரச சன்மார்க்கம் ஒன்று, இதன் உத்தரத்தில் சுத்த சன்மார்க்கம் ஒன்று; ஆதலால் ஷடாந்த சமரசம். ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோல் சுத்த சன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம்.

சன்மார்க்கம் என்பதில் வகை தொகை விரிவு அனந்தம். இதன் தாத்பரியம் யாதெனில்: சமய சன்மார்க்கத்தின் பொருள் குணத்தினது லக்ஷியத்தை அனுசந்தானஞ் செய்வது. குணமென்பது யாது? சத்துவகுணம். இயற்கை உண்மை ஏகதேசமான சத்துவ குணத்தின்

சம்பந்தமுடைய மார்க்கமே சமய சன்மார்க்கம். சத்துவ சம்பந்த முடைய மார்க்கம் யாதெனில்: சத்போதம், சத்கர்மம், சத்சங்கம், சத் காலம், சத்விசாரம், சத்பாத்திரம், சற்சலம், சற்செய்கை முதலியன வும் சத்துவ சம்பந்தம் உடையன. இதனியல்பாவன: கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரியநிக்கிரகம், ஆன்ம இயற்கைக் குணமாகிய ஜீவகாருண்யம். இது சத்துவ குணத்தின் வாச்சியார்த் தம். இவ்வண்ணம் வாச்சியானுபவம் பெற்றுச் சொரூபானுபவமாகிய சாதனமே சமய சன்மார்க்கம்.

சமயாதீத மாவது மதம். மத சன்மார்க்கத்தின் பொருள் நிர்க் குண லக்ஷியஞ் செய்வது. நிர்க்குணமாவது பூர்வகுண மாகிய சத்து வத்தின் வாச்சியானுபவம் பெற்று லட்சியானுபவம் பெறுதல். யாதெனில்: சோகம், சிவோகம், தத்வமசி, சிவத்துவமசி என்னும் வாக்கியத்தின் முக்கியானுபவம். அனுபவம் என்பது யாது? .... சத்துவகுண நிர்க்குண லட்சியத்திற்கு மார்க்கம் நான்கு: எவை எனில் சத்துவ குணத்தின் **முதல் விளைவு தன்னடிமையாகப் பலரையும் பாவித்தல், இரண்டாவது புத்திரனாகப் பாவித்தல், மூன்றாவது சிநேகிதனைப் போலப் பாவித்தல், நான்காவது தன்னைப்போலப் பாவித்தல். இது ஜீவ நியாயம்.** இவ்வாறே தான் கடவுளுக்கு அடிமையாதல், புத்திரனாதல், சிநேகனாதல், கடவுளே தானாதல். இது சத்துவகுண லட்சியார்த்த மாகிய மத சன்மார்க்க முடிவு.

சத்துவகுண விளைவு என்பதற்குப் பொருள் சத்துவகுணத்தின் முக்கிய லட்சியமாகிய எல்லாம் வல்ல சர்வ சித்தியோடு ஞானசித்தி யைப் பெறுதல். நெல்லை விளைத்தான் என்பதன் பொருள் உழுதல் தொடங்கிக் கிருகத்தில் சேர்த்து அனுபவிக்கிற பரியந்தம் அடங்கி யிருப்பதுபோல் சன்மார்க்கம் என்பது சாதாரணம் முதல் அசாதாரணம் ஈறாக அடங்கிய பொருளெனக் கொள்க. குண நிர்க்குண வாச்சிய லட்சியார்த்தமாகிய சமய மதத்தின் அனுபவ மல்லாதது சுத்த சன் மார்க்கம். இம் மார்க்கத்திற்கு மேற்குறித்த மார்க்கங்கள் அல்லா தனவே யன்றி இல்லாதன வல்ல.

சுத்த சன்மார்க்கந்தான் யாதெனில்: சுத்தம் என்பது ஒன்று மல்லாதது. சுத்தம் என்பது சன்மார்க்க மென்னுஞ் சொல்லுக்குப் பூர்வம் வந்ததால், மேற்குறித்த சமய மதானுபவங்களைக் கடந்தது. சத்மார்க்கம் என்னும் பொருட்கு அர்த்தம் நான்கு வகை: அஃது பூர்வாதி உத்தரோத்தர பரியந்தம். இதன் முக்கிய லட்சியம் **சுத்த சன்மார்க்க அனுபவ ஸ்தானமாகிய சுத்த சிவ துரியாதீத நிலை** பெறில் விளங்கும். ஏகதேசத்தில் ஒருவாறு பூர்வம் என்பதற்குப் பொருள்: சிருஷ்டியாதி அனுக்கிரக மீறாகச் செய்யும் பிரமாதி சதா சிவ மீறாகவுள்ள பஞ்ச கிருத்திய கர்த்தர்களி லொவ்வொரு கிருத்தியத்

தின் விரிவு ஐந்தாக விரிந்த கர்த்தர் பேதம் இருபத்தைந்தாக விரிந்த மஹாசதாசிவாந்த அனுபவ காலத்தை அறுபத்து நாலாயிரத்தில் பெருக்கிய கால அளவு எவ்வளவோ அக்கால அளவு சுத்த மகா சதா சிவானுபவத்தைப் பெற்றுச் சுத்த தேகியா யிருப்பது. சத்தென்பது பரிபாஷை. அது அனந்த தாத்பர்யங்களைக்கொண்டு ஓர் வாக்கிய பதமாய் நின்றது. மார்க்கம் என்பது யாதெனின் : துவாரம், வழி. வழி யென்பது சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கிற மார்க்கம். ஆதலால், எவ்வகையிலும் உயர்வுடையது பாவனாதீத அதீதம், குணாதீதஅதீதம், லட்சியாதீதஅதீதம், வாச்சியாதீதஅதீதம் ஆகிய சுத்த சன்மார்க்கம்.

மேற்படி மார்க்கத்தின் ஏகதேசம் அடியிற் குறிக்கும் அனுபவங் கள் : எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வகைத் தடை யும் வாராத **சுத்தமாதி ஞானதேக சித்தியும்**, அண்ட பிண்ட தத்து வங்களைச் சுதந்தரத்தில் நடத்தும் தனிப்பெரும் வல்லமையும், ஏமரவுப் பிய பிரேதஜீவிதாதி சித்தியும், வஸ்துப் பிரத்யக்ஷானுபவ சித்தியும் ஆகிய இவற்றை ஒருங்கே அடைவது **மேற்குறித்த மார்க்கத்தின் முடிபு**. ஒருவாறு.

சத் என்னும் சொல் பரிபாஷை என்பதற்குக் குழூஉக் குறியாக இதன் கீழ்வரும் சில மந்திர வாசக பதவர்ணாதிகளை உணர்க. காரண மாத்திரமாய் விளங்கா நின்ற விந்து நாத முதலியனவும், காரிய காரண மாத்திரமாய் விளங்கா நின்ற அம், அங், சிங், வங், மங், சிவா, வசி, ஓம் முதலியவும், காரிய மாத்திரமாய் விளங்கா நின்ற ஹரி, சச்சி தானந்தம், பரிபூரணம், ஜோதியுட் ஜோத், சிவயவசி, சிவயநம, நம சிவய, நாராயணாயநம, சரவணபவாயநம முதலியவும் இவ்வண்ணம் குறித்த பரிபாஷைகளின் உண்மை ஆன்ம அனுபவத்திலும் வகர தகர வித்தையிலும் விளங்கும்.

மேலும், மேற்குறித்த வண்ணம் தத்துவங்களை உபாசித்தும், அர்ச்சித்தும், தத்துவாதீதாதீதத்தைத் தியானித்தும், இடையில் ஜபித்தும், கரணலயமாகச் சமாதிசெய்தும், தத்துவச் சேட்டைகளை அடக்காநின்ற விரதமிருந்தும், சாதாரண யோகபாகத்தில் மூச்சடக்கி யும் சாதகர்கள் மேற்குறித்த வண்ணம் செய்வார்கள். சாத்தியர்கட்கே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டைகூடல் என்னும் நான்கும் கடந்து அவர்கள் ஆரூடராக நிற்பதால் சாதனமொன்றும் வேண்டுவ தில்லை. மேற்படி சாத்தியர்களே சுத்ததேகிகள். அவர்கள் அனுப வத்தை விரிக்கில் பெருகும்.

சன்மார்க்க சங்கம்

சமரச வேத சன்மார்க்க சங்க மென்பதற்குப் பொருள் : எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூலின் முடிவான நான்காவது

மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மார்க்கம் நான்காவன : தாச மார்க்கம், சத்புத்திர மார்க்கம், மித்திர மார்க்கம், சன் மார்க்கம்.

சத்திய மார்க்கம்

ஷடாந்தங்களினது அனுபவம் ஒன்றுனாலும் காலம் இடம் முதலியவற்றால் அவை வேறுபடும். ஆதலால் ஷடாந்தங்களு மிப்போது வெளிக்கு வியாபகமில்லாம லிருக்கின்றன. வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இந்த 2-ல் வேதாந்தத்தில் போதாந்தமும் யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்தமும் கலாந்தமும் அடங்கியிருக்கின்றன. ஆதலால் வேதாந்த சித்தாந்தமே சிறந்தது. வேதாந்த அந்தாதீத சித்தாந்த அந்தாதீத சுத்த சன்மார்க்கமே நீடுழி அழியாத சத்திய மார்க்கம்.

சமரசம்

சமரசமென்பது யாது? எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வமாக்கித் தான் உத்தரத்தில் நின்று மருவியதால் சமரசமாயிற்று. இதற்கு நியாயம் : விந்து பரவிந்து இவ்விரண்டையும் மறுக்கச் சுத்த விந்துவானது போலும் ; சிவம் பரசிவம் இவ்விரண்டையும் மறுக்கச் சுத்த சிவமானது போலும் ; சன்மார்க்கம் சிவசன்மார்க்கம் இவ்விரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம். ஆகவே ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க மென்று மருவியது.

சத்துவகுண லக்ஷியம்

சன்மார்க்க மென்பது யாது? அது 3 வகைப்படும். சமய சன் மார்க்கம், மத சன்மார்க்கம், சுத்த சன்மார்க்கம்.

சமய சன்மார்க்கமாவது சத்துவகுண லட்சியானு சந்தானம். சத்துவகுண சம்பந்தமுடைய மார்க்கமே சமய சன்மார்க்கம். சத்துவ சம்பந்தமுடைய சேர்க்கை யெல்லாம் சன்மார்க்கம். அதாவது சத்போதம், சத்கர்மம், சத்ஸங்கம், சத்காலம், சத்விசாரம், சத்பாத்திரம், சத்ஜனம், சத்செய்கை முதலியவை சத்துவகுண சம்பந்தமானவையாம். சத்துவகுண இயல்பாவது கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம் இந்திரிய நிக்கிரகம், ஜீவகாருண்ணியம். இது சத்துவ குணத்தின் வாச்சியார்த்தம். இந்த உண்மையைக்கொண்டு சத்துவ குணத்தின் வாச்சியத்தை லட்சியம் செய்வதே சமய சன்மார்க்கம்.

சமயாதீத மத சன்மார்க்கம்—நிர்க்குண லட்சியமாகிய சத்துவ குணத்தின் லட்சியார்த்தத்தைக் கொள்வது மத சன்மார்க்கம். அதாவது, சோகம், சிவோகம், அவன், அவள், நான் என்னும் அனுபவம். அதாவது சத்துவகுணத்திற்கு மார்க்கம் 4. சத்துவகுணத்தின் முதல் வினவு தன்னடிமையாகப் பலரையும் பாவித்தல், 2-வது.

புத்திரனைப்போல் பாவித்தல், 3-வது சிநேகிதனைப்போல் பாவித்தல், 4-வது தன்னைப்போல் பாவித்தல். இது ஜீவ நியாயம். இவ்வாறே தான் கடவுளுக்கு அடிமையாகுதல், புத்திரனாகுதல், சிநேகிதனாகுதல், கடவுளே தானாகுதல். இது சத்துவ குண லட்சியார்த்தமாகியமத சன்மார்க்கத்தின் முடிபு. சத்துவ குணத்தின் விளைவென்று சொன்னதற்குப் பொருள் சத்துவ குணத்தின் முக்கிய லட்சியமாகிய எல்லாம் வல்ல சர்வசித்தியோடு ஞானதேகம் பெறுகிறவரையில் உள்ள அனுபவம். நெல் விளைத்தானென்பதன் பொருள் உழுதல் தொடங்கிக் கிருகத்தில் சேர்க்கிறவரையில் அதன் தாத்பரிய மடங்கி யிருப்பது போல்.

சுத்தம்

சுத்த சன்மார்க்கமாவது குணநிர்க்குண வாச்சிய லட்சியார்த்தமாகிய சமய மதங்களினது அனுபவமன்று. சுத்த சன்மார்க்கமென்பது சத் சன்மார்க்கமேயாம். சுத்தமென்பது ஒன்றுமில்லாதது. ஆதலால், சுத்தமென்பது சன்மார்க்கம் என்னும் சொல்லுக்கு முன் வந்தமையால், முன் சொன்ன சமயமதங்களைத் தாண்டினது, அதன் அனுபவங்களையும் கடந்தது.

சத்மார்க்கம்

சத்மார்க்கம் என்பதற்குப் பொருள் 4 வகை: பூர்வம், பூர்வ பூர்வம், உத்தரம், உத்தரோத்தரம். ஆதலால் இதன் முக்கிய லக்ஷ்யம் இனிச் சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்படும். பூர்வம் என்பதற்குத் தாத்பரியம் ஒருவாறு: சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரஹம் எனும் பஞ்சகிருத்திய தத்துவங்களைக் கர்த்தாவாக வழங்கி வருகிற பிரமா விஷ்ணு ருத்திரன் மயேசுரன் சதாசிவமென்னும் தத்துவங்களில், சிருஷ்டியில் சிருஷ்டி, ஷை ஸ்திதி, ஷை சம்மாரம், சிருஷ்டியில் திரோபவம், ஷை அனுக்கிரஹம் இதுபோல் 5 ஆக விரிந்த தத்துவங்கள் 25. இந்த இருபத்தைந்தையும் அறுபத்து நாலாயிரத்தில் பெருக்கிய காலம் எவ்வளவோ அவ்வளவு கால பரியந்தம் மகாசதாசிவ அனுபவத்தைப் பெற்று, சுத்ததேகியாக இருப்பது. வருஷம் தொகை மொத்தம் ஒரு கோடி அறுபது லக்ஷம்.

சத்தென்பது பரிபாஷை, குழூஉக்குறிப் பெயர்; அனந்த தாத்பரியத்தைக் கொண்டு ஓர் மொழியானது. மார்க்கமென்பது வழி. வழியென்பது சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கின்ற மார்க்கம். ஆகையால் எவ்வகையிலும் உயர்வுடையது சுத்த சன்மார்க்கம்.

சன்மார்க்கத்தின் ஏகதேசமென்பது எந்தக் காலத்தும் எவ்வகைத் தடைகளும் இன்றி அழியாத சுத்தப் பிரணவ ஞானதேகமென்கின்ற தேகசித்தியும் எல்லாம் வல்ல சர்வசித்தியும் பெற்றுக்கொள்வது.

சர்வ சித்தி

சமய சன்மார்க்கம் மத சன்மார்க்கம் ஆகிய இவற்றிற்குள் அடங்கிய சன்மார்க்கம் அனந்தம். அதில் சமய சன்மார்க்கம் 36. அதை விரிக்க ஆறுகோடியாம் இதுபோலவே மதத்திலும் 36. மேற்குறித்த சமயம் மதங்களிலும் ஏமசித்தி தேகசித்தி முதலியவை யுண்டு. அவை சமய மதங்களில் சொல்லுகிற கர்த்தா மூர்த்திகள் ஈசுவரன் பிரமம் சிவம் முதலிய தத்துவங்களின் காலப் பிரமாண பரியந்தம் இருப்ப தொழிய, அதற்குமேல் இரா.

சமய மதங்களினும் சமரசம் உண்டு. வேதாந்த சித்தாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால் சுத்த சமரசத்தில் சன் மார்க்கத்தைச் சேர்க்கச் சுத்த சமரச சன்மார்க்கமாம். இவை பூர் வோத்தர நியாயப்படி, கடைநிலைப் பூட்டாக, சமரச சுத்த சன்மார்க்க மென மருவின. இதற்குச் சாதனம் ஒருவாறு ஷடாந்த சமரசம்.

ஆன்மாவுக்கு அனன்னிய அருள் எப்படியோ, அதைப்போல் சுத்த சன்மார்க்கத்துக்கு அனன்னியமாக இருப்பது சர்வ சித்தியாம். சுத்த சன்மார்க்கத்துக்குப் படி மூன்று. ஷடாந்தங்களின் பொது வாகிய ஷடாந்த சன்மார்க்கம் 1, சமரச சன்மார்க்கம் 1, சுத்த சன்மார்க்கம் 1, ஆக 3. ஆதலால் சுத்த சன்மார்க்கத்திற்குப் படிகள் 3 : சிற்சபை 1, பொற்சபை 1, சுத்த ஞானசபை 1, ஆக 3. இவைகள் மூன்றுந்தான் படிகளாக இருக்கும்.

சுத்த தேகத்தினுடைய அனுபவத்தை விரித்தால் விசேஷமாம். சுத்த சன்மார்க்கம் விளங்குங் காலத்தில் எல்லாம் ஆண்டவர் வெளிப் படையாய்த் தெரிவிப்பார்.

பரிபாஷையும் சுத்த சன்மார்க்கமும்

பரிபாஷை — அங், சிங், வங், பங், அம், விந்து, நாதம், சிவ, வசி, ஓம், அரி, அர, சத்து, சித்து, ஆனந்தம், பரிபூரணம், ஜோதி, சிவயவசி, சிவாயநம, நமசிவாய, ஆ, ஈ, ஊ, ஐ, நாராயணாயநம, சிவோகம், சோகம் முதலியவாகச் சமயமதங்களில் குறிக்கப்பட்ட மந்திர தந்திர ரகசிய வாசக வாச்சிய வசன அக்ஷர தத்துவ பவுதிக முதலியவையும் பரிபாஷையாம். மேற்குறித்த வண்ணம் ஜபித்தும், தியானித்தும், அர்ச்சித்தும், உபாசித்தும், சமாதிசெய்தும், சுவாசத்தை அடக்கியும், விரதமிருந்தும், இவை போன்ற வேறு வகைத் தொழிற்பட்டும் பிரயாசை யெடுப்பது வியர்த்தம். சுத்த சன்மார்க்கமே சிறந்தது.

பாவனுதீதாதீதம், குணுதீதாதீதம், வாச்சியாதீதாதீதம், லட்சியாதீதாதீதம் ஆகிய சுத்த சன்மார்க்கப் பொருளாகிய அருட் பெருஞ்சோதி ஆண்டவரால் இதனது உண்மைகள் இனி வெளிப்படும்.

சாத்திய நிலே

சமய மத சன்மார்க்கிகளில் தாயுமான சுவாமிகளும் இன்னும் அனேக பெரியோர்களும் சுத்தப் பரப் பிரமத்தினிடத்தில் இரண்டறக் கலந்துவிட்டதாக முறையிடுவது வாஸ்தவமா அவாஸ்தவமாவென்ருல், அவாஸ்தவம். சுத்த சன்மார்க்கம் ஒன்றுக்கே சாத்தியம் கைகூடும்; என்றும் சாகாத நிலேயைப் பெற்றுச் சர்வ சித்தி வல்லபமும் பெறக் கூடும். மற்றச் சமய மத மார்க்கங்களெல்லாம் சுத்த சன்மார்க்கத்துக்குச் செல்லக் கீழ்ப்படிகளாதலால், அவற்றில் ஐக்கிய மென்பதே யில்லே. தாயுமானவர் முதலானவர்கள் சுத்த சன்மார்க்கிகள் அல்லர்; மத சன்மார்க்கிகள் என்று ஒருவாறு சொல்லலாம். இதில் நித்தியதேகம் கிடையாது. இது சாதக மார்க்கமே அன்றிச் சாத்தியமல்ல. நாளேச் சுத்த சன்மார்க்கம் வழங்கும்போது இவர்கள் யாவரும் உயிர்பெற்று மீள வருவார்கள். முன்னிருந்த அளவைக் காட்டிலும் விசேஷ ஞானத்தோடு சுத்த சன்மார்க்கத்துக் குரியவர்களாய் வருவார்கள்; சாத்தியர்களாய் இரண்டறக் கலப்பார்கள்.

95. சுத்த சன்மார்க்கக் கொள்கை

சர்வசித்தியையுடைய தனித்தலேமைப் பதியாகிய ஆண்டவரை நோக்கி - அணுக்கள் - தபசு செய்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களேயும் பெற்றுக்கொண்ட மூர்த்திகளாகியவர் ஒரு தொழிலுடைய பிரமாவும், இரண்டு சித்தியுடைய விஷ்ணுவும், மூன்று சித்தியுடைய ருத்திரனும் - இதுபோன்ற மற்றையர்களும். மேற்குறித்த மூவரால் ஏற்படுத்திய தத்துவசித்திக் கற்பனேகளாகிய சமய மத மார்க்கங்களே அனுஷ்டித்து, அவர்களேயே கர்த்தாக்களாக வணங்கி வழிபாடு செய்துவருகிற இது வரையிலுமுள்ள அணுக்கள் மேற்குறித்தவர்களது பதப்பிராப்தியை – ஷை அணுக்கள் – லேசம் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் இவர்களே அசைப்பித்து அனுக்கிரகிக்கும் சர்வ சித்தியை யுடைய தனித்தலேமைக் கடவுளின் சித்தியின் லேசங்கள் இவர்களுக்குள. ஆதலால் இவர்கள் அந்தச் சர்வ சித்தியை யுடைய கடவுளுக்குக் கோடி கோடிப்பங்கு தாழ்ந்த தரத்திலிருக்கின்ருர்கள். ஆகவே சமயத் தேவர்களே வழிபாடு செய்வது அவசியமல்ல. மேற்குறித்தவர்கள் அற்ப சித்தியைப் பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து, மேல் படிகள் ஏறவேண்டியவைகளே ஏறிப் பூரண சித்தியை யடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல், இங்கு மற்றவைகளே உன்னி அவலமடைந்து நில்லாமல், சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவருண்டென்று,

அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை. மேலும், தனித்தலைவன் லக்ஷியர் தவிர அநித்திய சடதுக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கை யல்ல. உபாசனை முதலிய வற்றால் வழிபடுதலும் மேற் குறித்த தலைவனைக் குறித்ததே தவிர வேறில்லை.

இதற்குப் பிரமாணம்: "சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன்" என்னும் திருஅருட்பாசுரத் திருஉள்ளக்கிடையானும், "அறங் குலவு தோழி இங்கே"* என்னும் அருட்பாசுர உள்ளக் கிடையானும் பெரும்பதி தெரிவித்தார். இதன்றி, திருக்கதவந்திருக்காப் பிடுவதற்கு முந்தின இரவில் "இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சன்மார்க்க ஒழுக்கம் இன்ன தென்று தெரிந்து கொள்ளவில்லை. யாதெனில்: இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்" என்ற திருவார்த்தை யதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக வுடையது கடமை.

சன்மார்க்கக் கொள்கை

சர்வசித்தியையுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை வேண்டித் தபசுசெய்து சிருட்டிக்குஞ் சித்தியைப் பெற்றுக்கொண்டவன் பிரமன்; சிருட்டி, திதி, ஆகிய சித்தியைப் பெற்றுக்கொண்டவன் விஷ்ணு; சிருட்டி, திதி, சங்காரம் ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் ருத்திரன். இவர்கள் ஏற்படுத்திய சமய மார்க்கங்களை அனுட்டிக்கின்றவர்கள் இவர்களை அந்தந்தச் சமயங்களுக்குத் தெய்வங்களாக வணங்கி வழிபாடு செய்துவந்தார்கள். இம் மூர்த்திகளுடைய சித்திகள் சர்வசித்தியையுடைய கடவுள் சித்தியின் இலேசங்கள்; அதில் ஏகதேசம்கூட அல்ல. ஆகையால், இவர்கள் அந்தச் சர்வசித்தியை யுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள்; கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தில் இருக்கின்றார்கள். ஆகையால், சமயத்தெய்வங்களை வழிபாடு செய்து, அந்தச் சமயத் தெய்வங்கள் பெற்றுக்கொண்ட அற்ப சித்தியில் அவர்கள் மயங்கி மகிழ்ந்து அகங்கரித்து மேலேறவேண்டிய படிகளெல்லாம் ஏறிப் பூரண சித்தியை யடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல நில்லாமல், சர்வசித்தியையுடைய கடவுளொருவர் உண்டென்றும், அவரை உண்மையன்பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெறவேண்டுமென்றும் கொள்ளவேண்டுவது சன்மார்க்க சங்கத்தவர்களுடைய கொள்கை. இதை யாண்டவர் தெரிவித்தார்.

---

* திருஅருட்பா 5452, 5695

ஆங்கீரச ஹூ ஆவணி மீ உகூஉ. இதற்குப் பிரமாணம்: அருட்பிரகாச வள்ளலார் அருட்பாவில் "சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன்" "அறங்குலவு தோழியிங்கே நீயுரைத்த வார்த்தை" என்னும் இரண்டு திருப்பாசுரங்களின் தாத்பர்யத்தால் காண்க.

96. சுத்த சன்மார்க்க முடிபு

சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதேயன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். **சாகாதவனே சன்மார்க்கி.**

97. சாகாத கல்வி

வேதங்கள் முக்கியம் சாகாதகல்வியைச் சொல்லியிருக்கின்றன. **தேவர் குறளில்** முதல் அதிகாரத்தில் சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. அதைத் தக்க ஆசிரியர் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

98. சாகாக்கல்விக்கு ஏது

தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு **இரண்டரை நாழிகை** தூங்கப் பழக்கஞ் செய்வானானால், அவன் ஆயிரம் வருடஞ் சீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ் செய்துகொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாம்.

[வேறு குறிப்பு]

ஒருவன் இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானானால், அவன் ஆயிரம் வருஷம் ஜீவித்திருப்பான். எப்போதுஞ் சலிப்பில்லாமல் சுத்தக் கரணமாய் அருள் வடிவாய்த் தானாக நிற்றலே சாகாக் கல்விக்கு ஏது.

99. சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகள்

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய தடையாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள். மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் — இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள். அதாவது, செயற்கையாகிய குணங்களை நன்முயற்சியால் தடுத்துக் கொள்பவர்களுக்குக் கேவலாதிசார மரணம் நீங்கும்.

அப்படி இல்லாது இவ்விடம்* காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக்கொள்ள மாட்டார்கள். அருள் விளங்குங் காலத்தில் அவரவர்கள் பரிபாகத்துக்குத் தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அனுபவிக்கக்கூடும்; பரலோக போகமாகிய ஞானசித்திகளைப் பெற மாட்டார்கள்.

100. சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்

புருஷார்த்தம்

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு. அவையாவன:
ஏமசித்தி.
சாகாக்கல்வி.
கடவுணிலை யறிந்து அம்மயமாதல்.
தத்துவநிக்கிரகம் ஆக 4.

ஒழுக்கம்

இவை பெறுவதற்கு ஒழுக்கம் யாதெனில்: நான்கு வகைப்படும்.

1. இந்திரிய ஒழுக்கம்.
2. கரண ஒழுக்கம்.
3. ஜீவ ஒழுக்கம்.
4. ஆன்ம ஒழுக்கம்.

1. இந்திரிய ஒழுக்கம்

இவற்றில் இந்திரிய ஒழுக்கம், கன்மேந்திரிய ஒழுக்கம் ஞானேந்திரிய ஒழுக்கமென இருவகைப்பட்டது. கொடிய சொல் செவிபுகாது நாத முதலிய ஸ்தோத்திரங்களைக் கேட்டல்; அசுத்த பரிசமில்லாது தயாவணமாகப் பரிசித்தல்; குரூரமாகப் பாராதிருத்தல்; உருசி விரும்பாதிருத்தல்; சுகந்தம் விரும்பாதிருத்தல்; இன்சொல்லாடல்; பொய் சொல்லாதிருத்தல்; ஜீவஹிம்சை நேரிடுங் காலத்தில் எவ்விதத் தந்திரத்தினாலாவது தடை செய்தல்; பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்; ஜீவோபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும் வேறு இடங்களிலும் சஞ்சரித்தல்; நன்முயற்சியிற் கொடுத்தலெடுத்தலாதி செய்தல்; மலஜல உபாதிகளை அக்கிர மாதிக்கிரம மின்றி கிரமத்தில் நிற்கச் செய்வித்தல், எவ்விதமெனில், மிதஆகாரத்தாலும் மித போகத்தாலும் செய்வித்தல், கால பேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடை நேர்ந்தால், ஓஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும் சரபேத அஸ்தபரிச தந்திரத்தாலும் மூலாங்கப் பிரணவ த்யான சங்கற்பத்தாலும் செய்வித்தல்,

* இவ்விடம் என்பது மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தைக் குறிக்கும். அடிகள் அங்கிருந்த காலத்திற் செய்த உபதேசம்.

சுக்கிலத்தை அக்கிரம அதிக்கிரமத்தில் விடாது நிற்றல்—மந்ததரம், தீவிரதரம்—எவ்வகையிலுஞ் சுக்கிலம் வெளிப்படாமல் செய்வித்தல்; இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல், இதுபோல் உச்சி மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்; சஞ்சரிக்குங் காலத்தில் காலிற் கவசந்தரித்தல்; அழுக்காடை உடுத்தாதிருத்தல் முதலியன இந்திரிய ஒழுக்கமாம்.

2. கரண ஒழுக்கம்

கரண ஒழுக்கமாவது: மனத்தைச் சிற்சபை என்னும் அறிவாகிருதி ஆக்கல்; இதன் பூர்வத்தில் புருவமத்தியில் நிற்கச்செய்தல்; இதன்றி, துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்; சீவதோஷம் விசாரியாதிருத்தல்; தன்மதிப்பில்லாதிருத்தல்; இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல், தனது தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல்.

3. ஜீவ ஒழுக்கம்

ஜீவ ஒழுக்கமாவது: ஆண்மக்கள் பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திரசம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர் தாழ்ந்தோரென்னும் பேதம் நீங்கி, எல்லவரும் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுவது.

4. ஆன்ம ஒழுக்கம்

ஆன்ம ஒழுக்கமாவது: யானை முதல் எறும்பீறாகத் தோன்றிய ஜீவர்களினது சூக்குமம் தனித் தலைவன் ஆதலால் - அவ்வச் சீவர்களில் ஜீவான்மாவே திருச்சபையாய் அதனுள் பரமான்மாவே பதியாய் நிற்பதால் - யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேதமற்று எல்லாந் தானாக நிற்றல்.

இவ்வண்ண நின்றால் மேற்குறித்த அரும்புருஷார்த்தங் கைகூடும். ஒருமையென்பது தனது அறிவு ஒழுக்கம் ஒத்த இடத்தில், தானே கூடும்; மற்ற இடத்தில், தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்பது. ஆங்கீரச ஆண்டு கார்த்திகை மீ ௰௨ உ.

நான்கு புருஷார்த்தம்

மனிதன் முக்கியமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டியன அடியில் குறித்த 4 விஷயங்களாம். அவையாவன: ஏமசித்திசெய்தல், சாகாத கல்வி கற்றல், கடவுணிலையறிதல்-அம்மயமாகுதல், தத்துவநிக்கிரகஞ் செய்தல். இந்நான்கையும் பூரணமாக அடைதல் வேண்டும்.

நான்கு வகை ஒழுக்கம்

ஒழுக்கம் 4 வகையாம். 1. இந்திரிய ஒழுக்கம், 2. கரண ஒழுக்கம், 3. ஜீவ ஒழுக்கம், 4. ஆன்ம ஒழுக்கம்.

1. இந்திரிய ஒழுக்கம்

இவற்றுள் இந்திரிய ஒழுக்கம் ஆவது: கொடிய வார்த்தை முதலியவை யாடாமலும் செவிபுகாமலும் நிற்றல்; நாத முதலிய ஸ்தோத்திரங்களை அதிசயிக்காமல் உற்றுக்கேட்டல்; மற்றவைகளைக் கேளாதிருத்தல்; அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல்; கொடூரமானவற்றைக் கேளாதிருத்தல், பாராதிருத்தல்; ருசியின் மேல் விருப்பமில்லா திருத்தல்; சுகந்தம் விருப்ப மில்லாமல் அனுபவித்தல்; இனிய வார்த்தை யாடுதல்; பொய் சொல்லாதிருத்தல்; ஜீவர்களுக்கு இம்சை நேரிடுங் காலத்தில் அதை எந்தவிதத் தந்திரத்திலாவது தடைசெய்தல்; பெரியோர்கள் எழுந்தருளி யிருக்கும் இடத்திற்குச் செல்லுதல்; உயிர்களுக்கு உபகார நிமித்தம் சஞ்சரித்தல்; உயிர்களுக்கு மனத்தாலும், வாக்காலும், சரீரத்தாலும், தனத்தாலும் தன் சத்தியின் அளவு மீறாமல் உபகரித்தல்; மலஜலாதிகளை அளவு மீறாமலும் குறையாமலும் கிரமமாய்க் கழியும்படி சரபேத அஸ்தபரிச தந்திரத்தாலும், ஔஷதிகளாலும், ஆகாரத்தாலும், பௌதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் முதலியன இந்திரிய ஒழுக்கமாம்.

2. கரண ஒழுக்கம்

கரண ஒழுக்கமாவது: உண்மையான கடவுள் ஒருவரே என்று சத்திய சங்கல்பம் கொள்ளல்; சிற்சபையின்கண் மனஞ் செல்லுவது தவிர, வேறு எந்தவகை ஆபாசத்திலும் செல்லாமல் அதை இழுத்து மேற்குறித்த இடத்தில், அதாவது, கடவுளிடத்தில் நிறுத்துவது; பிறர்குற்றம் விசாரியாது இருத்தல்; தன்னை மதியாதிருத்தல், செயற்கைக் குணங்களா லுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவமயமாக நிற்றல்; பிறர்மேல் கோபியா திருத்தல்; தனது சத்துருக்களாகிய தத்துவங்கள் - அரிஷ்டவர்க்கங்கள் - மேல் கோபித்தல்; அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலிய இவற்றையே கரண ஒழுக்க மென்பர்.

3. ஜீவ ஒழுக்கம்

ஜீவ ஒழுக்கம்: எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், கோத்திரம், சூத்திரம், குலம், சாத்திரம், தேசமார்க்கம், உயர்வு, தாழ்வு முதலியனவாகிய பேதம் அற்றுத் தானாக நிற்றலாம்.

4. ஆன்ம ஒழுக்கம்

ஆன்ம ஒழுக்கம்: எண்பத்து நான்கு லக்ஷம் யோனிபேத முள்ள ஜீவர்களிடத்திலும் இரக்கம் வைத்து, ஆன்மாவே சபையாகவும் அதனுள்ளொளியே பதியாகவும் கண்டு பூரணமாக நிற்றல் ஆன்ம ஒழுக்கமாம்.

101. சுத்தசன்மார்க்க சாதனம்

(பரோபகாரம், சத்விசாரம்)

பரோபகார மென்பது யாது? தேகத்தாலும் கரணத்தாலும் இந்திரியத்தாலும் திரவியத்தாலும் ஆன்மாக்களுக்கு உபகரித்தல், திரவியம் நேராதபட்சத்தில், திரிகரண சுத்தியாய் ஆன்மநேய சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் சீவர்களினது வாட்டத்தைக் குறித்தும் பிரார்த்தித்தல். சத்விசார மென்பது கடவுளினது புகழையும் ஆன்மாவின் தரத்தையும் நமது சிறுமையையும் கடவுளின் தரத்தையும் இடைவிடாது விசாரித்து, நமது குறை யெல்லாம் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது. சிவானுபவமாகிய தேகத்திரயம் பெறுவதற்கு மேற்குறித்த இரண்டு துவாரந் தவிர வேறில்லை. மேலும் தயவென்பது இரண்டு வகைப்படும். யாவெனில் கடவுள் தயை ஜீவ தயை ஆகிய இரண்டு. கடவுள்தயை யென்பது இறந்தஉயிரை எழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், மிருக பட்சி ஊர்வன வாதிகளுக்கு ஆகாரம் நியதியின்படி அருட்சத்தியால் ஊட்டிவைத்தல், சோம சூரி யாக்கினிப் பிரகாசங்களைக் கால தேச வண்ணம் பிரகாசஞ் செய்வித்தல், பக்குவிகளுக்கு அனுக்கிரகித்தல், அபக்குவிகளைச் செய்யவேண்டிய அருள் நியதியின்படி தண்டனை செய்வித்துப் பக்குவம் வருவித்தல். ஜீவதயை யென்பது தன் சத்தியினளவு உயிர்க்கு உபகரித்தல் அல்லது ஆன்மநேய சம்பந்தம் பற்றித் தயாவடிவமாயிருத்தல்.

சுத்த சன்மார்க்க சாதனம்

சுத்த சன்மார்க்க சாதனம் 2 வகைப்படும்: பரோபகாரம், சத்விசாரம். பரோபகாரம் என்பது தேகத்தாலும், வாக்காலும், திரவியத்தாலும் உபகாரஞ் செய்வது. சத்விசாரம் என்பது நேரிடாத பக்ஷத்தில் ஆன்மநேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது. கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல், தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல். இந்த மார்க்கத்தால்தான் சுத்தமாதி மூன்று தேகங்களைப் பெறவேண்டும்.

கடவுள் தயவும் ஜீவ தயவும்

கடவுள்தயை, ஜீவதயை யென்பது:- கடவுள்தயை யென்பது இறந்தவுயிரை யெழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல்,

மிருக பக்ஷி ஊர்வன வாதிகளுக்கு ஆகாரம் கொடுத்தல், கால சக்கிரத்தின்படி சோமன் சூரியன் அக்கினிப் பிரகாசங்களை அளவு மீருமல் நடத்திவைத்தல் முதலியன. இவற்றை விரிக்கில் பெருகும். ஜீவதயை யென்பது தன் சத்தியளவு உயிர்க்கு உபகரித்தல், ஆன்ம நேய தயா விசாரத்தோடு இருத்தல், அன்னிய ஜீவதோஷ விசாரம் கனவிலும் செய்யாதிருத்தல் முதலியவாம்.

சுத்த சன்மார்க்க சாதனம்

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் என்னவென்றால்: எல்லா ஜீவர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்புமே முக்கியமானவை. உதாரணம் அருட்பெருஞ் சோதி ஆண்டவர் சொல்லியது: "கருணையுஞ் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக மற்றெல்லாம் மருணெறி யெனவே எனக்கு நீ உரைத்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்" *

சன்மார்க்க சாதனம்

சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக்கேட்டு அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாம். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால், காலந் தாழ்க்காது எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம். இந்தக் குணம் வந்தவன் எவனோ அவன்தான் இறந்தவரை எழுப்புகிறவன்; அவனே ஆண்டவனு மாவான்.

102. சுத்த சன்மார்க்கப் பிரார்த்தனை

ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெலாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கிவிடுகின்றன. பிரார்த்தனை செய்ய வேண்டுமாகில் இப்படித்தான் செய்யவேண்டும்.

பாதி இரவி லெழுந்தருளிப் பாவி யேனை யெழுப்பியருட்
சோதி யளித்தென் னுள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போலிவ் வுலகம் பெறுதல் வேண்டுவனே. **

என்பதே என் பிரார்த்தனை யாகும்.

---

* திரு அருட்பா 3503
** திரு அருட்பா 3630

103. சுத்த சன்மார்க்க சத்திய ஞானசாரம்

ஜீவகாருண்யத்தால் பிரமன் ஆயுசும், பாசவைராக்கியத்தால் விஷ்ணு ஆயுசும், ஈசுர பக்தியால் ருத்திரன் ஆயுசும் பிரம்மஞானத்தால் என்று மழியாத சுவர்ணதேக முதலியவைகளைப் பெற்றுக் கடவுள் மயமாகலாம். எப்படியெனில் : கடவுள் சர்வ ஜீவதயாபரன், சர்வ வல்லமையுடையவன் ; ஆகையால், நம்மையும் சர்வஜீவதயையுடையவர்களாய்ச் சர்வவல்லமையையும் பெற்றுக்கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார். ஞானிக்குத் தயவு அதிகப்பட்டிருக்கிறபடியால், கேளாதகேள்வி முதலிய மஹா அற்புதங்களான இறந்தாரெழுதல் முதலிய அற்புத வல்லமையைப் பெற்றிருக்கின்றார். எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய அருள் விசேஷம் விளங்குகின்றதோ, அந்த ஜீவர்களிடத்தில் கடவுள் விளக்கம் விசேஷமாயிருக்கும். மற்றவர்களிடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக் காலங்களில், கடவுளிடத்தில் அன்பும் ஜீவர்களிடத்தில் பக்தியும் செலுத்த வேண்டும். ஆதலால் பக்தியென்பது மனநெகிழ்ச்சி, மனவுருக்கம். அன்புஎன்பது ஆன்மநெகிழ்ச்சி, ஆன்மவுருக்கம். எல்லா வுயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலே யீசுர பக்தியாம். அந்தக்கரண சுத்தியின் பிரயோசனம் பக்தியை விளைவிப்பது. ஜீவகாருண்ய முண்டானல் அருளுண்டாகும், அருளுண்டானல் அன்புண்டாகும், அன்புண்டானல் சிவானுபவ முண்டாகும். **தத்துவவொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழிலொழுக்கம் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன.** தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு ஜாதியேற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன : ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம். கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்தசிவசன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமே யல்லது, இல்லாவிடில் கூடாது.

கடவுள் மயமாவது

ஜீவ காருண்யத்தால் பிரமாவினுடைய ஆயுசும், பாசவைராக்கியத்தால் விட்டுணுவுடைய ஆயுசும், ஈசுரபத்தியால் ருத்திரனயுசும், பிரமஞானத்தால் என்று மழியாத சுவர்ண தேகம் முதலியவையும் பெற்றுக் கடவுள் மயமாகலாம்.

தயவும் கடவுளும்

கடவுள் சர்வஜீவ தயாபரர். ஆகையால் சர்வவல்லப முடையவர். அதுபோல் நம்மையும் சர்வ ஜீவ தயையுடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி செய்வார். ஞானிக்குத் தயை அதிகப் பட்டிருப்பதால், அவர் இறந்தவர்களை யெழுப்புதல் முதலிய அற்புதங்களைச் செய்யும் வல்லப முடையவரா யிருக்கின்றார். யாரிடத்தில் தயவு அதிகப்பட்டிருக்கின்றதோ, அவரிடத்தில் கடவுள் இருக்கின்றார். அந்தத் தயை யில்லாதவர்களிடத்துக் கடவுளிருந்து மில்லாமையா யிருக்கிறார். கடவுளிடத்தில் சதா அன்பும் பத்தியும் செலுத்த வேண்டும்.

பத்தி

பத்தி என்பது மனநெகிழ்ச்சி மனவுருக்கம். அன்பு என்பது ஆன்மநெகிழ்ச்சி ஆன்மவுருக்கம். ஈசுவரபத்தி என்பது எல்லாவுயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதல். ஜீவகாருண்ய முண்டானால் அருள் உண்டாகும்; அருள் உண்டானால் அன்புண்டாகும்; அன்புண்டானால் சிவானுபவம் உண்டாகும். அந்தக்கரண சுத்தியின் பிரயோஜனம் பத்தியை விளைவிப்பது.

[வேறு குறிப்பு]

தத்துவ நியாயத்தை அனுசரித்துச் சமயங்க ளேற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழில் நியாயத்தை அனுசரித்து ஜாதிகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாக இருப்பன சமயஏற்பாடு ஜாதிஏற்பாடு முதலியவைகள் ஆதலால், இவைகளை விட்டொழித்துப் பொது நோக்கம் வந்தாலொழிய, காருண்ணியம் விருத்தி ஆகிக் கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி வல்லபங்களைப் பெறமுடியாது.

சத்திய ஞானசாரம்

ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரமாசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாத்திராசாரம் முதலிய ஆசாரங்களொழிந்து, சுத்த சன்மார்க்க சத்திய ஞானசாரம் ஒன்றே இதுதொட்டு வழங்கவேண்டும். அதாவது, பெருந்தயவே வடிவமாக இருக்கவேண்டும். அந்நியரின் தோஷம் விசாரியாமல் இருக்கவேண்டும்.

104. ஆன்ம இயற்கையாகிய தயாமூலதன்மம்

தர்மமென்பதற்குப் பொருள் சீவதர்மம், குலதர்மம், சாஸ்திர தர்மம், ஆசாரதர்மம், ஆசிரமதர்மம், சாதிதர்மம் முதலியவாக விரியும். இதில் அதினுண்மை அதின் தன்மை...தன்மை என்பது அதின் சுபா

வம். சுபாவமென்பது இயற்கைக் குணம். அதுவென்பது ஆன்மா. ஆதலால், **ஆன்மாவுக்கு இயற்கைக் குணம் தயை.** ஆன்மாவின் இயற்கையென்பதே தர்மத்திற்குப் பொருள். **ஆன்ம இயற்கையோடு இருந்தால் சிவமாகலாம்.** இதைப் பலவாகத் தர்மமென்று பெயரிட்டார்கள். அருள்வெளியாகிய ஆன்ம இயற்கையால் சிவானுபவத்தைப் பெறுவது உண்மை. இதற்கு வேதாகமங்களில் பலபட விரிந்த நாமங்கள் அனந்தம். அவற்றில் சில :- அருட்சத்தி, அருள்வெளி, விருஷபம், தர்மதேவதை, அநாதியியற்கைக்குணம், பரஞானம், அகரவுகரம், அருள்நடம், அன்பு, ஆன்மநெகிழ்ச்சி, ஆன்மஅசைவு, சுத்தசத்துவம், ஆன்மஅறிவின்பேதம்—என இதை விரித்தார்கள். அருள்வடிவாய்ச் சிவமாகிப் பின்னமன்றிப் பூரணமாயிருப்பது நிரதிசயானந்தம். ஆனந்தமென்பது சந்தோஷம். நிரதிசயமென்பது ஆனந்தமின்மை(?). சீவர்களுக்குத் திருப்தி யின்பத்தை நேர்ந்தவரையில் செய்வது ஆனந்தானுபவம்.

தருமம்

தர்மமாவது ஜீவதர்மம், குலதர்மம், சாஸ்திரதர்மம், ஆசாரதர்மம், ஆசிரமதருமம், ஜாதிதருமம் முதலாகப் பலவகையாம். இதனது உண்மை ஆன்மாவின் தன்மை. தன்மை என்பது ஆன்மாவின் சுபாவம். சுபாவமென்பது ஆன்மாவின் சுபாவகுணம். சுபாவகுணமென்பது ஆன்மாவின் இயற்கைக்குணம், தயை. ஆன்மாவினியற்கை என்பதே தருமத்துக்குப் பொருள். தருமத்தோடு கூடியவன் தேக நஷ்டத்தை அடையமாட்டான்.

அருளொளி

அருள்வெளியில் சன்மார்க்கத்திலுள்ள அனுபவங்களைப் பெறலாம். இதற்கு அருட்சத்தி என்றும், அருள்வெளி என்றும், ரிஷப மென்றும், அதின் தன்மை என்றும், அநாதி இயற்கை என்றும், பரஞான மென்றும், பூர்ணநிஷ்டை என்றும், அகரஉகர மென்றும், அருள்நடன மென்றும், ஆன்ம நெகிழ்ச்சி என்றும், ஆன்ம அசைவென்றும் பலபட விரிந்த நாமங்கள் உண்டு. அருள்வெளியின் வடிவாய் உண்மை என்னும் சிகாரமாகிய பதியோடு கூடிமௌனானந்தத்திலிருப்பதே உண்மை.

ஆனந்தம்

ஆனந்தமென்பது சதா சந்தோஷத்தோடு எதிரிட்ட ஜீவர்களைத் திருப்தியால் சந்தோஷிப்பித்துத் தானதிசயமின்றி நிற்றல்.

105. ஜீவகாருண்யமே முத்திக்கு முதற்படி

நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவரெழுந்தருளி இருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள்வேண்டும். அவ்

வருள் அன்பினாலல்லது வேறு வகையா லடைவதரிது. இவ்வன்பு ஜீவகாருண்யத்தா லல்லது வேறுவகையால் வாராது. ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு. இந்த ஜீவகாருண்ய முண்டாவதற்கு ஏது அல்லது துவாரம் யாதெனில்: கடவுளுடைய பெருமையையும் தரத்தையும் நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே. அன்னிய வுயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே ஜீவகாருண்யம். இதுதான் முத்தியடைவதற்கு முதற் படியாயிருக்கின்றது. ஆதலால் இதைப் பாதுகாத்தல் வேண்டும்.

ஜீவகாருண்யமும் சித்தியும்

நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு, அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள்வேண்டும். அவ்வருள் அன்பினாலல்லது வேறு வகையா லடைவது அரிது. அவ்வன்பு ஜீவகாருண்ணியத்தா லல்லது, வேறு வகையில் வாராது. ஜீவகாருண்ணியத்தின் லாபமே அன்பு. இந்த ஜீவகாருண்ணியம் உண்டாவதற்கு மார்க்கம் யாதெனில்: கடவுளினது பெருமையையும் வல்லமையையும் தரத்தையும் நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தல்தான். அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாமல் நடத்தலே ஜீவகாருண்ணியம். இதுதான் சித்தி பெறுவதற்கு முதற் படியாக விருக்கின்றது. ஆதலாலிதைப் பாதுகாத்தல்வேண்டும்.

106. ஞானசித்தியும் ஒளிநிலையும்

இரவில் தீபமில்லாத விடத்தில் இருக்கக்கூடாது. ஏனெனில், அஃது பிராண நஷ்டம் பண்ணும். ஆதலால், நமது கிருகத்தில் தீபம் வைத்து இருளைப்போக்கி ஆனந்த மயமாய் **நித்திரை யில்லாதிருந்தால், ஆயுள் விருத்தியாம்.** இஃது சாத்தியனுக்கு. சாதகன் ஒருவாறு நித்திரை செய்தல் வேண்டும். கிருகத்தில் இருளில்லாது எங்கும் பிரகாசமாய் தீபம் வைத்தால், மேற்படி இருள் அந்தத் தீபத்தில் அடங்கும். அதுபோல் ஜீவதீபமாகிய நாம் வசிக்கிறகிருகத்தில் பிரகாசமில்லாவிட்டால், மேற்படி இருள் ஜீவப் பிரகாசமாகிய நம்மிடத்தில் சேர்ந்து நஷ்டத்தைப் பண்ணும். அதுபோல் ஆன்ம வாசமாகிய இந்தத் தேகமாகிற கிருகத்தில் அருட்பிரகாச மில்லாது மருளாகிய அஞ்ஞான சம்பந்தமுடைய இருள் சேர்ந்தால் பிராண நஷ்டம் சீக்கிரமாம்.

ஆதலால், நாம் **நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணை ஆசாரியர் அனுக்கிரகத்தால் திறக்கப்பெற்றுக் கொள்வது நலம்.** ஏனெனில், மேற்படி நெற்றிக்கண்ணைத் திறக்கப்பெற்றுக்கொண்டவனுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப்பகல்போல் தெரியும். அவன் தான் சத்தஞானி. மேற்படி ஞானி தயவோடு ஒரு பிரேதத்தைப் பார்த்த மாத்திரத்தில் பிரேதம் உயிர்பெற்றெழும். மேற்படி ஞானிக்கு ஆன்

மாக்களினது அபக்குவ பரிபாகத்தால் சினம் தோன்றினல். உடனே அந்த ஜீவன் பஸ்பமாகி விடுவன். மேற்படி ஞானிக்கு மேற்குறித்த அடையாளங்களுள. மேற்படி கண்ணைத் திறப்பதற்கு ஒரு கதவும் பூட்டு முளது. மேற்படி பூட்டை அருளென்கிற திறவுகோலைக்கொண்டு திறக்க வேண்டும். ஆதலால், மேற்படி அருளென்பது ஆன்ம இயற்கையாகிய பெருந்தயவு. நாம் தயாவடிவமானல் மேற்படி அனுபவம் நேரும்.

மேலும் அந்தச் சுத்தஞானி இறந்த உயிர்களை எழுப்புவதற்குப் பிரமாணம் யாதெனில்: ஒருவாறு தீபப் பிரமாணத்தா லறிக. தீபப் பிரமாண மென்பது யாது? தீபத்தினிடத்தில் காரியஒளி, காரிய காரண ஒளி, காரண ஒளி என மூன்று. மேற்படி ஒளியாவன ஒளி, சோபை. பிரகாசம். ஆதலால் கடவுள் காரியமாய் பிரகாசம்போல் சுவர்ணதேகியாய்த் தோன்றினல், அதிதூரத்திலிருக்கிற இருளென்னும் அஞ்ஞானத்தைப் போக்கி ஆன்ம அனுபவத்தை வருவிப்பது பிரகாசமயம். அதுபோல் ஒளி மேற்படி பிரகாசத்திலடங்கிச் சோபை காரிய காரணமாய் இருக்கின்றதுபோல், ஆன்மாக்கள் அஞ்ஞானத்தில் கட்டுண்டு அறிவாகிய தீபத்தைக் கருதினல் மேற்படி அறிவாகிய தீபம் தோன்றின கணமே அதன் மயமாவார்கள். அதுபோல் கடவுளின் சோபையைக் கண்டால், பஞ்சகிருத்தியமுஞ் செய்யக்கூடும். ஒளியைத் தொட்டால் சுடுவதுபோல், இறந்த பிரேதத்தை அவர்க்குச் சமீபிக்கச் சேர்த்தால், தக்கணமே அது ஜீவிக்கும். மேலும் பிரகாசம் எங்குமுள்ளது. எந்த இடத்தில் புலை கொலை அகற்றிய சீவர்கள் பிரார்த்தித்தாலும் தக்கணமே அவரது காரண உருவமாகிய பிரகாசத்தில் நின்று காரிய உருவமாகிய ஒளி வடிவாய்த் தோன்றி அருள் செய்வர். இதற்குப் பிரமாணம்: சித்தமார்க்கத்தி லுள்ள துருசுச் சுண்ணத்தை மஞ்சளில் தோய்த்த நூலைநெடுந்தூரங்கட்டி, அங்கங்கு மனிதர்களை நிற்க வைத்து, மேற்படி காயாது உபகரணம் பூசி, சுண்ணத்தை அடியில் காட்டின தக்ஷணமே நுனியில் சிவப்பேறும்.

ஜீவனும் தீபமும்

இரவில் தீபமில்லாத இடத்தில் இருக்கப்படாது. ஏனெனில், அப்படியிருந்தால், அது ஆயுள் நஷ்டத்தை உண்டுபண்ணும். ஆகையால் நாம் வாழ்கிற வீட்டில் தீபத்தை வைத்து ஆயுளை விருத்திசெய்து கொள்ளவேண்டும். வீட்டில் எந்த இடத்திலும் தீபம் வைத்திருக்க வேண்டியது அவசியம். இருளிருக்கப்படாது. ஒரு வீட்டில் தீபம் வைத்தால் அந்த வீட்டிலிருந்த இருளெல்லாம் அந்தத் தீபத்தி லடங்கிச்சேரும். அதுபோல் இந்த ஜீவனகிய தீபம் இருக்கிற இடத்தில் விளக்கில்லாவிட்டால் அந்த இடத்திலிருக்கிற இருளெல்லாம் ஜீவனகிய தீபத்தைச் சேர்ந்து தேக நஷ்டத்தை உண்டு பண்ணும். ஆதலால், அவசியம் தீபம் இருக்கவேண்டியது.

தயா வடிவம்

பூர்வஞான மென்பது நெற்றிக் கண்ணாற் பார்த்தல். ஒருவன் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணைப் பெற்றுக்கொள்வானானால் அவனுக்கு எல்லாம் பட்டப் பகலைப்போற் றெரியும். அவன்தான் சுத்தஞானி. அந்த நடுக்கண்ணைப் பெற்றுக்கொண்ட சுத்தஞானி தயவோடு ஓர் பிணத்தைப் பார்த்த மாத்திரத்தில், அந்தப் பிணம் உயிர்பெற்று மீள வெழுந்திருக்கும். ஒருவனைக் கோபித்துப் பார்த்தால், உடனே அவன் பஸ்பமாய் விடுவான். இதுதான் நடுக்கண் பெற்ற சுத்தஞானிக் கடையாளம். இந்த நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணுக் கொரு கதவும் பூட்டு மிருக்கின்றது. அந்தக் கதவின் பூட்டை அருளென்கிற திறவுகோலைக் கொண்டு திறக்கவேண்டும். அருளென்பது பெருந்தயவு. ஆகவே தயவே வடிவமாக இருக்கவேண்டியது.

கடவுள் அனுக்கிரகம்

தீபத்தில் ஒளி, சோபை, பிரகாசம் என்னும் 3-ல் பிரகாசம் காரணஅக்கினி, சோபை காரியகாரணஅக்கினி, ஒளி காரிய அக்கினி. பிரகாச மயத்தில் கடவுள் காரியமாய் சொர்ணதேகி ஆனாலும், பிரகாசத்தைப்போல் அதிதூரத்திலிருக்கிற இருளாகிய அஞ்ஞானத்தைப் போக்கி ஆன்ம அனுபவத்தை வருவிப்பது.

ஒளியெப்படி அடங்கிச் சோபை காரியகாரணமா யிருக்கிறதோ அதுபோல, ஜீவர்கள் இருளில் மூழ்கிக் கிடந்த காலத்தில், விளக்கினிடத்து லட்சியம் அதிகரித்த தருணம், ஒளியைக்கண்டால் அதன் மயமாவார்கள். அதுபோல் கடவுளினது சோபையைக் கண்டால், சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களும் செய்யக்கூடும். ஒளியைத் தொட்டால் சுடுவதுபோல் இறந்த ஜீவர்களை ஆண்டவருக்குச் சமீபத்தில் சேர்த்தால் உடனே ஜீவிப்பார்கள். ஆண்டவரது பிரகாசம் எங்கும் உள்ளதால், எந்த இடத்தில் புலை கொலையில்லாமல் ஜீவர்கள் முயற்சி செய்கிறார்களோ, அந்த இடத்தில் கடவுள் வந்து காரண உருவமாகிய பிரகாசத்தில் நின்றும் காரிய உருவமாகிய ஒளியாகித் தோன்றி அனுக்கிரகிப்பது சுபாவம். இதற்குப் பிரமாணம்: துருசுச் சுண்ணத்தை மஞ்சளில் நனைத்து, அதிக நீளமுள்ள நூலின் ஒரு தலைப்பைச் சுண்ணத்தில் படும்படி நனைத்த உடனே, அந்நூல் முழுமையும் சிவப்பேறுவது போலாம்.

107. தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்

தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்: அகல் - தேகம், எண்ணெய் - இரத்தம், திரி - சுக்கிலம், பிரகாசம் - ஆன்மா, ஆதலால் மேற்குறித்த தீபத்தினது திரியைத் தூண்டிவிட்டாலும், காற்றுள்ள இடத்தில் வைத்தாலும், காற்றில்லா விடத்தில் வைத்தாலும், பெருந்

தீபச் சமீபத்தில் சேர்த்தாலும், விட்டில், பிரமரம், மூஷிகம், மார்ச்சாலம் முதலிய அஜாக்கிரதையாலும், மேற்படி தீபம் நஷ்டமாகும். புத்திமானிடத்தில் தீபத்தினது உபகரணங்களைக் கொடுத்து ஒரு நாளைக்குத் தீபம் பார்க்கச் சொன்னால், புத்தி விசாலத்தால் மேற்குறித்த அஜாக்கிரதையின்றி, தகளிக்குச் சூடேறாமலும், எண்ணெயில் அழுக்கு ஏறாமலும், வர்த்தி தூசு இறுகல் தளர்ச்சி பருமன் இவைகளில்லாது - சிறு திரி போட்டு, அடிக்கடி தூண்டாமல், தீபத்தை மற்றொரு தினமு மிருக்கச் செய்விப்பான். மேற்குறித்த குற்றங்களோடு தீப மேற்றினால், பதினைந்து வினாடி அல்லது கணம் இதில் சிட்டம் கட்டுவது இயற்கை. தூசு போக்கி வைத்தால், பதினைந்து நிமிஷத்திற் கொரு விசை சிட்டங் கட்டும். விசேஷ அறிவுடையவன் மேற்குறித்த லோகம் முதலியவற்றில் தீபம் வையாது, வைர படிகங்களில் அமைத்த தீபத் தகளியில், மேற்குறித்த தீபோபகரணங்களைத் திராவகமாக்கி, சுத்தாக்கினியால் பிரகாசமுண்டாக்குவன். அப்போது சிட்டமும் பிரகாச நஷ்டமும் நேரிடாது. ஆதலால் நம்முடைய தேகத்தில் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டி அடிக்கடி பெண்ணிடத்தாகிலும் வேறு தந்திரத்தாலாயினும் செலவு செய்து விட்டால், திரிபோய் ஆயுளாகிய பிரகாசம் நஷ்டமாய்விடும். ஆனால் சிட்டத்தை மாத்திரம் - தொள்ளாயிரத்து அறுபது நாழிகைக் கொருதரம் தேகசம்பந்தஞ்செய்து ஆபாசப்பட்ட சிட்டமாகிய சுக்கிலத்தை – வெளிப்படுத்தி விடவேண்டும். இது மந்தனுக்கு. அதிதீவிர பக்குவியாய் மேற்குறித்த வண்ணம் கடவுளிடத்தில் இலக்ஷியமும் ஜீவர்களிடத்தில் தயவுமுடையவனுக்கு சிட்டம் போன்ற **சுக்கிலாபாசம் நேரிடாது**. தேகம் நீடிக்கும்.

அதிதீவிர பக்குவி

சீவன் என்கிற தீபத்துக்குச் சுக்கிலம் திரி, இரத்தம் எண்ணெய். ஆகையால் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டிச் செலவு செய்து விட்டால் ஆயுசு நஷ்டமாய் விடும். ஆனால் சிட்டத்தை மாத்திரம் எடுத்துவிட வேண்டியது. அதாவது 16 தினத்திற்கு ஒருதரம் தேக சம்பந்தஞ் செய்து ஆபாசப்பட்ட சுக்கிலத்தை வெளிப்படுத்தி விட வேண்டும். **ஆசானுடைய அல்லது ஆண்டவருடைய திருவடியில் சதா ஞாபக முடையவனுக்குக் கோசத்தடிப் புண்டாகாது.** ஆகையால், தேகசம்பந்தம் ஏகதேசத்திற் செய்யலாமென்றது மந்தரத்தை யுடையவனுக்கே யன்றி, அதிதீவிர பக்குவிக்கல்ல.

108. நம்மை நஷ்டஞ் செய்யும் நான்கு

நம்மை நஷ்டஞ் செய்வன நான்கு. அவையாவன: **ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம்** - ஆகிய இந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இந்த நான்கினும் முக்கியமானவை **ஆகாரம்,**

மைதுனம். ஆதலால் இவ்விரண்டிலும அதனிலும் அதிக ஜாக்கிர தையோடு இருக்கவேண்டும். இந்த இரண்டிலும் முக்கியமானது **மைதுனம்.** ஆதலால், இந்த விஷயத்தில் எல்லாவற்றைப் பார்க்கிலு மதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அவ்வாறு இராவிடில் தேகம் அதி சீக்கிரத்தில் போய்விடும். பின்பு முத்தியடைவது கூடாது. முத்தியடைவதற்கு இம்மானிட தேகமே நக்கதாயும் வேறு தேகத்தா லதை யடைவது அரிதாயும் இருப்பதாதலால், எவ்விதத்தாலாயினும் தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்.

ஜாக்கிரதை

ஆகாரம், நித்திரை, மைதுனம், பயம் – இந்த நான்கிலும் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும், இவற்றில் முக்கியமானவை ஆகாரம் மைதுனம். இவற்றிலும் முக்கியமானது மைதுனம். இதனளவில் ஒரு மனிதன் தன்னை ஸர்வ ஜாக்கிரதையுடன் காக்க வேண்டும். இல்லை யாயின் அதி சீக்கிரத்தில் மரண மடைவான்; சந்தேகமில்லை. இல் வாழ்வானுக்கு மைதுனம் ஊற்றுக்கேணி நியாயத்தையுடையது.

தேக நஷ்டத்தின் முதற் காரணங்கள்

இந்த உலகத்தில் மனிதர்களுக்குத் தேகம் சீக்கிரத்தில் நஷ்டம் அடைவதற்குக் காரணம் இரண்டு. அவையாவன: ஆகாரம், மைது னம். ஆகாரத்தா லொன்பது பங்கு நஷ்டமும், மைதுனத்தா லொரு பங்கு நஷ்டமும் உண்டாகிறது. எப்படியெனில்: பிண்ட உற்பத்தியின் காலம் தொடங்கி இறந்து போகிற பரியந்தம் ஆகாரம் உண்டு. இது இயற்கை. சிசு, வாலிபம், விருத்தாப்பியம் – இந்தப் பருவங்களில் மைதுனம் கிடையாது. கவுமாரம், யௌவனம் – இந்த இரண்டு பருவங் களில் மாத்திரம் மைதுனம் உண்டு. இந்தப் பருவங்களிலும், நோயா லும் துக்கத்தாலும் தரித்திரத்தாலும் பசியாலும் பயத்தாலும் வேறு அநந்தவகையால் உண்டாகும் துன்பங்களாலும் மைதுனம் தடைப் படும். இந்தக் காலத்திலும் ஆகாரம் உண்டு. பொருந்தல் ஏகதேசம். நஷ்டமும் அப்படியே யிருக்கிறது. ஆகாரவிஷயத்தில் அதிக்கிரமம், அக்கிரமம், அஜாக்கிரதை, அசாதாரணம் இப்படிப்பட்ட உணவுகளை நீக்கி, சுத்த சத்துவ ஆகாரங்களைப் புசித்து ஆயுள்விருத்தி செய்து கொள்வது சுத்தசன்மார்க்க ஏற்பாடு.

109. துர் மரணம்

ஜீவர்களுக்கு வாந்திபேதி மாரடைப்பு முதலியவற்றால் நேரிடும் துர்மரணங்கள் ஆகாரக் குறைவாலும் மிகுதியாலும் அக்கிரம அதிக் கிரமத்தாலும் பொருந்தலாலும் – இவைபோன்ற பலவகைக் கெடுதியா லும் உண்டாகின்றன.

110. இல்வாழ்வானுக்கு நியாயம்

மைதுனம் ஊற்றுக்கேணி நியாயத்தை ஒத்திருக்கின்றது. அதாவது, ஊற்றுக்கேணியை இடைவிடாமல் 10 தினம் இறைத்தால், அதன் வருவாய் குறைந்து, அதில் சலமில்லாமல் போய்ப் பிரயோசனப்படாது. அதுபோல் இறைக்காத ஊற்றுக்கேணியிலுள்ள நீரிலழுக்கேறி, அதன் வருவாய் அடைபட்டு, அதன் சுரப்பு நின்றுவிடும். பின்பு அந்தக் கேணியிலுள்ள சலம் சூரிய உஷ்ணத்தினால் கிரகிக்கப்பட்டு ஒன்றுமில்லாமல் போய்விடும். இதுபோல் இடைவிடாது மைதுனஞ் செய்தால் இந்திரியத்தின் வருவாய் குறைந்து, அருமையாகக் கிடைத்திருக்கின்ற தேகம் அதிசீக்கிரத்தில் போய்விடும். மைதுனம் எந்தக் காலத்தும் இல்லாதிருத்தலினாலும் மேற் குறித்த ஊற்றுக்கேணி நியாயத்தால் கேடுண்டு. அதாவது மைதுனம் எந்தச் காலத்திலுமில்லா திருத்தலினால் இந்திரியத்தின் தன்மை கெட்டு, அதனால் அவ்விந்திரியத்தின் வருவாயடைபட்டு, மிகுந்திருந்த அவ்விந்திரியமும் உஷ்ணத்தினால் வற்றிவிடும். பின்பு தேகம் உடனே போய்விடும்.

111. சந்நியாசமும் காவி உடையும்

மூன்றாசைகளில் விசேஷம் பற்றுள்ளவர்களாகித் தயவில்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி குற்றமற்றவர்களுக்குச் சந்நியாசம் வேண்டுவதில்லை. சந்நியாசி காவி வேஷ்டி போடுவதற்கு நியாயம்: தயவில்லாத கடின சித்தர்களாதையால் தத்துவாபாசமுள்ளது; தத்துவத்தைச் செயித்து தயவை நடத்துவதற்கு யுத்தக்குறி அல்லது அடையாளமாகத் தரிப்பது காவி. வெற்றியான பிறகு அடைவது தயவு. ஆதலால் வெற்றிக்கொடி வெள்ளை. தயவு வெள்ளை யென்பதற்கு நியாயம்: தயவென்பது சத்துவம், சத்துவமென்பது சுத்தம், சுத்தமென்பது நிர்மலம், நிர்மலமென்பது வெள்ளைவருணம், வெள்ளை என்பது ஞானம், ஞானமென்பது அருள், அருளென்பது தயவு, தயவென்பது காருண்யம்.

சன்னியாசம்

மூவாசைகளில் விசேஷ பற்றுள்ளவர்களாகித் தயையில்லாத கடினசித்தர்கள் சன்னியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். அக்குற்றத்தை நீக்கினவர்கள் சன்னியாசம் செய்துகொள்ள வேண்டுவதில்லை. குடும்ப சன்னியாசிகளா யிருக்கலாம். தனேஷணம் தாரேஷணம் புத்திரேஷணம்...

தயவு

தயவு – சுத்தம், வெள்ளை வருணம், ஞானம், தயவு – அருள் காருண்ணியம்.

காவிவேஷ்டி

காவிவேஷ்டி தரிப்பது தயவுக்கு விரோதமானவைகளை ஜெயிப்பதற் கடையாளம்.

112. மகளிர் சமத்துவ நிலை

பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டியது. மேலும் பேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவையும் சொல்லிக் கொடுக்கவேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொரூப ரூபாதிகளைத் தெரிவித்துச் சரளமாக்கினால், பின் தடையின்றி நம்முடைய துரிய ஆசிரம காலத்தில் ஒத்திருப்பார்கள். "தெய்வந் தொழாஅள்" என்னும் தேவர் குறளால் இதை அறிக.

113. பொதுப் பார்வை

எல்லா உயிரையும் பொதுவாய்ப் பார்ப்பதென்பது தனக்குள்ள ஆகாரத்தைக் கொடுத்துவிட்டுத் தான் பட்டினியிருப்பதல்ல. அப்படி இருந்தால் பாவம். வந்தவர்களின் பசி அறிந்து, தாங்காதவர்களாகில் தனது ஆகாரத்தைக் கொடுத்தும், சகிப்பார்களாகில் எவ்வகையிலாவது முயற்சித்தும் பசியைத் தணிக்கவும். அதற்கும் இடம் இல்லையாகில், பச்சாத்தாபத்துடன் கடவுளைப் பிரார்த்தித்து இன் சொல்லினால் இனிக்கச் செய்து, தான்கெட்டிருப்பதே மேலான புண்ணியம்.

114. வந்தன முறை

ஆசாரியனுக்குச் சிஷ்யன் வந்தனஞ் செய்வதற்கும், பெரியவர்களுக்குச் சிறியவர் வந்தனஞ் செய்வதற்கும், எல்லவர்க்கும் ஞானிகள் யோகிகள் சாந்தர்கள் வந்தனஞ் செய்வதற்கும் காரணமும் அதன் பிரயோசனமும் யாதெனில் :—

வந்தனஞ் செய்வது ஆயுள் விருத்திக்கும் அறிவு விளக்கத்திற்கும் ஆதாரமா யிருக்கின்றது. சிஷ்யனுக்கும் சிறியோருக்கும் ஆசாரியனும் பெரியோரும் வந்தனஞ் செய்தால், ஆயுள் விருத்தியும் அறிவு விளக்கமும் குறைவாகும்.

இதற்குச் சம்பந்தம் யாதெனில், ஒரு ஜீவனுக்கும் திருவிளக்குக்கும் சம்பந்த மிருக்கின்றது. எப்படியெனில் : ஒரு திருவிளக்கு எரிவதற்கு நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை உதவுகிறது போல் ஒரு ஜீவனுக்கு ஆன்ம விளக்கத்துக்கும் மலப்போக்குக்கும் ஆதாரமான நிரஹங்காரமென்கிற நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை ஊட்டி விளக்கு வைக்கவேண்டியது. ஆனால் மேற் சொன்ன இரண்டுஞ் சந்திக்கும்போது நோக்கமான கெட்ட உஷ்ணத்தைச் சம்பந்தப் படுத்தினால் லாபஞ் செய்யாதோ வெனின், செய்யாது. திருவிளக்கு

ஜல உஷ்ணத்தையும் காற்றினு லுண்டாக வேண்டிய உஷ்ணத்திற்கு மேற்பட்ட அதிக உஷ்ணத்தையும் பெற்ருல் கெடும். அதுபோல், ஜீவனுக்கு மும்மலத்தாலாகிய உஷ்ணத்தையும் இன்னும் பற்பல பேதமுள்ள கெட்ட உஷ்ணத்தையும் சம்பந்தப் படுத்தினல், கெட்டுப் போய்விடும். இது யாவருக்கும் திருஷ்டாந்தமாய் இருக்கிற தல்லவா ?

இவற்ருல் ஆசாரியனையும் பெரியவர்களையும் சிஷ்யனும் சிறியவர் களும் வணங்கினல் ஆயுள் விருத்தியும், சிஷ்யனையும் சிறுவர்களையும் ஆசாரியரும் பெரியவர்களும் வணங்கினல் ஆயுள் குறைவும் உண்டாகு மென்கிற சம்பந்தம் எப்படியெனில்: திருவிளக்கு எரிய—சாதாரண காலத்தில் அதம பக்ஷத்துக்குரிய கொட்டை யெண்ணெய் இலுப்பை யெண்ணெய் முதலியவற்ருல் விளக்குவைக்கின்றதும், கொஞ்சம் விசேஷ காலத்தில் நல்லெண்ணெயினல் விளக்கு வைக்கின்றதும், கடவுள் சந்நிதானத்திலும் ஞானசாரியர் சந்நிதானத்திலும் பசுவின் நெய்யிட்டு விசேஷ விளக்கத்தை யுடைய விளக்கு வைக்கின்றதும் போல். கொட்டை எண்ணெய் முதலாகியதற் கொப்பாகிய் ஒரு ஜீவன் அதமபக்ஷம் மத்திமபக்ஷத்திற் குரிய ஒவ்வொரு மலத்தினு லுண்டாகிய தோஷத்தைப் போக்கிக் கொள்வதில் ஆத்ம விளக்கத் திற்கு ஆதாரமாகிறதும், விசேஷமாய் கடவுளாதி ஆசாரியர் சந்நி தானத்தில் வைக்கும் நெய்விளக்குக்கு ஒப்பான மும்மலப் போக்கான சுத்த நிரஹங்கார மென்கிற தைலத்தை ஆன்மாவுக்கு உண்டாக்கி வைப்பதில் ஜீவவிருத்தியு முண்டாகின்றது. திருவிளக்கு — அதன் உஷ்ண சம்பந்தமான தைலங்களை விட்டுக்கொண்டு வருவதில் விளக்கு எரிந்துகொண்டிருப்பது போலும், அதில் நல்லெண்ணெய் நெய் முதலியவை விட்டெரிப்பதில் விசேஷப் பிரகாசமாய் விளக்கு எரிவது போலும்—ஜீவனுக்கு அதன் உஷ்ண சம்பந்தமான மும்மலப்போக்கை யுண்டு பண்ணுவதில் ஜீவிப்பு விருத்தியுண்டாகிறதும், விசேஷமாய் நிரஹங்காரமென்கின்ற சுத்த உஷ்ணத்தை யுண்டுபண்ணிக்கொண்டு வருவதில் ஜீவனுக்கு விசேஷ விளக்கத்திற்குரிய ஜீவிப்பிருந்து கொண்டிருக்கின்றதும். இதனல்தான் தைலத்தைக் கொண்டிருக்கிற திருவிளக்கு விருத்தியாவதுபோல் மும்மலப் போக்கைக்கொண்ட ஜீவனும் ஆயுள் விருத்தியடைகின்றது. ஆதலால். ஆசாரியரையும் பெரியவர்களையும் சிஷ்யனும் சிறியோரும் வணங்குவதில் நிரஹங்கார சக்தி பெறுவதனல் ஜீவனுக்கு ஆயுள் விருத்தி யுண்டாகின்றது.

சிஷ்யனையும் சிறியோரையும் ஆசாரியரும் பெரியோரும் வணங்கு வதில் ஆயுட் குறைவு எப்படி யுண்டாவதெனில்: ஒரு மணிவரையில் எரியத்தக்க எண்ணெயிட்டு எரிவித்திருக்கும் சிறிய திருவிளக்குக்குச் சமீபத்தில் ஒரு பெரிய பந்தத்திற்கு ஒப்பான ஒரு பெரிய திருவிளக்கு

வைத்து எரித்தால், 1 மணி நேரம் எரியத்தக்க அந்தத் தீப உஷ்ணத்தைப் பெரிய தீபம் கிரஹித்துக்கொள்வதில் ஒருமணி நேரம் எரியவேண்டிய தீபம் அரை மணிக்குள் எரிந்துவிடுவதுபோல், ஆசாரியனும் பெரியோரும் சிஷ்யனையும் சிறியோரையும் வணங்குவதில், பெரிய தீவர்த்திக் கொப்பான ஆசாரியர் பெரியோர் என்கின்ற யோக்கியதையோடு, நிர்மல ரஹிதமான நிரஹங்காரமென்கின்ற மத்தாப்புக் கொப்பான விளக்கத்தைச் சிறிய விளக்கான சிஷ்யன் சிறியோர் முன்னிலைக்கு விளக்கி வைப்பதில், சின்ன விளக்கடைந்த குறைவைப்போல் ஜீவனுடைய ஜீவவிருத்தியைக் குறைக்கின்றது. இந்த நியாயத்தால், ஆசாரியனும் பெரியோரும் சிஷ்யனையும் சிறியோரையும் வணங்கினால், ஆயுள் குறைவை அடையுமென்று திருஷ்டாந்தமாய் இருக்கிறது.

ஆசாரியன் பெரியோர் ஞானி யோகி இவர்கள் சிறியோரையும் சிஷ்யரையும் வணங்கினால் ஆயுள் குறைவு வரமாட்டாது என்றதெப்படியெனின் :— மேற்குறித்தவர்களது விளக்கத்துக்கு மேற்பட்ட விளக்கம் இவர்களுக்கு அகத்திலுண்டாகுமானால் ஆயுள்விருத்திக்குக் குறைவு வரமாட்டாது. இதற்குத் திருஷ்டாந்தம் : சமயச் சார்பில் பரமசிவம் சுப்பிரமணிய சுவாமியிடத்தில் அனுக்கிரகம் பெற்றிருப்பதும், ஞானிகள் மாட்டுச் சம்பந்த சுவாமிகளை அந்தச் சுவாமிகளின் தாய் தந்தையர் வணங்கியதும் அப்பர்சுவாமி முதலியோரும் வணங்கியதுமுணர்க. மேலும் சமயமதாதீத ஞானிகளுக்கும் சமயமதங்கட்குட்பட்ட பெரியோர்களுக்கும் இவ்வுலகத்தின் கண்ணுள்ள ஜீவராசிகளின் தேகமாதியாவும் தமது பதியின் தூலசூக்கும மாதலாலும், தமது பரிபூரண ஆன்ம அனுபவத்தின்கண் தோன்றிய அனுபவங்களாகிய இயற்கை யுண்மை ஏகதேசங்களாதலாலும், எல்லாம் அவர்கட்குத் தாமன்றி இரண்டற்றிருப்பதாலும், எல்லாவற்றையும் இவர்கள் அத்துவிதத்தில் சிவமெனக் கண்டுணர்தலாலும் — இவர்கள் சென்றவிடமெல்லாம்கண்டு சிவமாயும் தாமாயும் நீக்கமறக் கைகூப்புவது இயற்கை.

ஆதலால், மலசகிதர்களான ஜீவர்கள் மதிப்புடையவர்களாதலால், ஆசாரிய சிஷ்ய பாவத்தில் வணங்கலாதி தொழிலால் ஜீவிப்பின்மையும் விருத்தியும் உண்டாகின்றன. மகான்கள் கைகூப்புவதில் ஆன்ம விருத்தி குறைவுபடாது ; ஜீவர்களின் அறிவு விளங்கும். ஏனெனில் : அவர்கள் சங்கல்பம் சுத்தமாதலால், இவர்களை மேலேற்றும்.

115. சுத்த சன்மார்க்க ஆகாரம்

சுத்த சன்மார்க்க சாதகர்கள் எக்காலத்தும் புழுக்காதிருக்கிற வஸ்துவைக் கொள்ளல் வேண்டும். புழுக்காத வஸ்துக்கள் யாவெனில் :— சர்க்கரை, தேன், கற்கண்டு, வெல்லம், அயம் முதலிய செந்தூரம்,

தாமிர முதலிய பஸ்மம். ஆதலால் அவசியம் ஆகாரத்திற்கு முக்கிய வஸ்து மேற்குறித்தவை. பரியாயத்தில் சர்க்கரையென்று லவணத்தைச் சொல்லுவது முண்டு. மேற்படி லவணத்தைத் துரிசு போக்கி ஜய லவணமாய்க் கட்டி ஆகாரத்தில் கொண்டால் தேகம் நீடிக்கும். இதன்றி, சத்வ பதார்த்தத்தில் லவணம் சிறுகச் சேர்த்துக் கொள்ளவுங் கூடும்.

சன்மார்க்க ஆகாரம்

நெய் பால் தயிர் மோர் — இவைகளை ஆகாரத்தில் விசேஷம் சேர்ப்பது தேக நஷ்டம். மனிதர்களுக்கு எல்லாத் தாதுக்களிலும் முதல் தாது கொழுப்பு. அதன் சத்து நெய். அதை எடுத்தால் தேக நஷ்டம். இதுபோல் பசுக்களினது முதற்றாது நெய். ஆதலால் அதையெடுப்பது சுத்த சன்மார்க்க மரபல்ல. சன்மார்க்கத்தில் தேகவிருத்தி செய்து கொள்வதற் காவது புறப்புற வமுதம். ஆதலால், ஊற்றுநீர் பொற்றலைக் கரிசலாங்கண்ணி வாழை தென்னை முதலியவற்றின்மேல் பெய்கிற பனிசலம் மழைச்சலம் — இவைகள்தான் சுத்தசலம் அல்லது அமுதம். அல்லது சாதாரண ஜலமுங் கொள்ளலாம். அதாவது மேற்குறித்த ஜலத்தை 5-ல் 3, 5-ல் 2 பாகம் நிற்கக் காய்ச்சி, சர்க்கரை வெல்லம் இவைகளைச்சேர்த்துக் குடிக்கலாம். இவைகள் தேகவிருத்தி செய்யும். சுத்த சன்மார்க்க மரபிற் குரியது இனிப்புத்தான். ஆதலால் தேன் சர்க்கரை கற்கண்டு வெல்லம் இவைகளை ஆகாரத்தில் சேர்த்துக் கொள்வது உத்தமம்.

உப்பு

தேக நஷ்டஞ் செய்வது உப்பு. உப்பைக் கட்டி யாகாரத்திற் சேர்ப்பது சித்தமார்க்கம்.

சர்க்கரை

சர்க்கரை எந்தக் காலத்திலும் புழுத்தலின்றாகலி னுத்தமவாகாரமாம். மற்ற வஸ்துக்கள் எல்லாம் புழுக்கும்.

சன்மார்க்க ஆகார விலக்கு

சுத்த சன்மார்க்க சாத்தியர்கள் நெய் முதலிய வஸ்துக்கள் கொள்ளப்படாது. அதுபோல் சாதகர்களும் ...... ஒருவாறு கொள்ளப்படும். ஏனெனில், ஓர் தேகத்திலுள்ள தாதுக்களில் முதல் தாது கொழுப்பு, அதின் அமிசமே பால், அதின் அமிசம் நெய், மேற்படி ஆபாசம் மோர் தயிர். ஆதலால், மேற்படி கொழுப்பு வெளிப்பட்டால், மேற்படி பசுவின்கண் கெடுதியும் நேரும். ஆதலால் கொலை. கன்றுக்கு ஒருவாறு விட்டு பாலை கிரகிக்கலாம். ஆதலால், இஃதால் ஜீவ இம்சை நேருதலால், மேற்படி வஸ்துக்கள் கொள்ளலாகாது; நேராத பக்ஷத்தில் கொள்ளலாம்.

சாதம்

சாதம் வடித்துச் சாப்பிடுதல் நலமா, பொங்கிச் சாப்பிடுதல் நலமா எனில் :—வடித்துச் சாப்பிடுவது அதிலுள்ள எண்ணெய் போய் விடுவதால் நலம். பொங்குவதில் எண்ணெய் போகாது ; தாமச குணம் உண்டாகும். இதுபோலவே உப்பு, புளி, மிளகாய் முதலிய வஸ்துக்களின் எண்ணெய் போகச்சுடவைத்துச் சாப்பிடுதல்வேண்டும். பச்சரிசி என்பது இப்போது கொண்டுவருவது அல்ல...மேலும் உஷ்ணத்தை உண்டுபண்ணக்கூடிய ஆகாரங்கள் கொள்ளுதல் வேண்டும்.

116. வெந்நீர்

அண்டத்தையும் பிண்டத்தையும் ஒருங்கே வளர்ப்பது புறப்புற அமுதம். ஆதலால் அஃதே கொள்ளல்வேண்டும். யாதெனில் :— ஊற்றுநீர், பொற்றலை, வாழை, தென்னை முதலியவற்றின் பேரிலுள்ள பனிஜலம், மழைஜலம்—இவைகள் கொள்ளலாம் ; சாதாரண ஜலங் கொள்ளுவது கெடுதி. ஏனெனில் மேற்படி ஜலத்தில் மூன்று குண முண்டு. எவையெனில் : விஷம், பூதம், அமுதம். இம்மூன்று மொன்று கவே இருக்கும். எப்படியெனில் : மேல்பாகத்தில் சிலிர்ப்பாகிய விஷமும், அதனடியில் ஏகதேசம் சுடுகையுள்ள பூதமும், அதனடியில் விசேஷ உஷ்ணமுள்ள அமுதமும் கூடி ஒன்றுயிருக்கும். மேற்படி ஜலத்தினது குணங்கள் ஆவன : பூதஜலம் தத்துவவிருத்தி செய்யும் ; அமுதஜலம் பிராணசக்தி செய்யும் ; விஷஜலம் தத்துவத்துரிசைப் போக்கும். ஆதலால் இடபேதத்தால் மேற்படி நீர்கள் தனித்தனி யாகவு முள்ளன ; ஒவ்வொன்றில் மும்மூன்றுகவும் விரியும். ஆதலால், மேற்படி சுத்தாமுதங்கிடையாத பக்ஷத்தில் இதர ஜலங்களைப் பச்சை யாகக் கொள்ளப்படாது ; வெந்நீராகக் கொள்ளுதல் வேண்டும். அந்நீரும் ஐந்து மூன்றும் ஐந்து இரண்டுமாகக் காய்ச்சி, சர்க்கரை வெல்லம் கற்கண்டு - இவைகள் சேர்த்துக்கொள்ளவும். நேராத பக்ஷத்தில், தென்னை நாயுருவி வாழை முதலிய வஸ்துக்களைச் சம்பந்தப்படுத்தி யாவது, சூரிய கிரணத்தில் வைத்தாவது, சூரியசரத்தால் பார்த்தாவது, சிகரத்தை உன்னியாவது கொள்ளல் வேண்டுமே யல்லது பச்சை யாய்க் கொள்ளப்படாது. சநிநீராடென்று சொல்வது சநிபோன்ற கருமையான கருகியநீராலாடென்று சொன்னது. யாதெனில் வெந்நீர். ஒருவாறு ஊற்றுநீர். இதன்றி - மற்றப்படி - சொல்வது தெரியாமை.

வெந்நீர்

சுத்த சன்மார்க்கத்தில் தேகவிருத்தி செய்தல் வெந்நீராதலால், எக்காலத்தும் சுத்தஜலம் சேர்க்கக்கூடாது. பச்சை ஜலத்தினிடத்தில் மூன்று குணமுண்டு: விஷஜலம், பூதஜலம், அமுதஜலம். இந்த மூன்றும் ஒன்றுகவே இருக்கும். ஜலத்தின் மேல் பாகத்தில் விஷமாகிய

சிலிர்ப்பும், அதனடியில் கொஞ்சம் சுடுகையுள்ள பூதமும், அதனடியில் விசேஷம் சுடுகையுள்ள அமுதமுமாக இருக்கும். பூதஜலம் தத்துவ விருத்தி செய்யும். அமுதஜலம் பிராணவாயுவை விருத்தி செய்யும். விஷஜலம் ஆபாசநீர்களாகப் பற்றும். ஆதலால் பச்சைஜலம் கொள்ளப் படாது. வெந்நீர் நேரிடாத பக்ஷத்தில், சர்க்கரை நாயுருவி தென்னை வாழை முதலிய வஸ்துக்களைச் சம்பந்தப்படுத்தியாவது கொள்ள வேண்டும்.

குளிர்ந்த ஜலம்

காலங்கடந்து குளிர்ந்த ஜலத்தில் குளித்து ஈர உடையுடன் இருப்பது தேகக்கெடுதி. குளிக்க வேண்டுமாகில் வெந்நீரில் குளிக்கவேண்டும்.

117. கரிசலாங்கண்ணியும் தூதுளையும்

கரிசாலையை தினே தினே பச்சையாகவாவது சமையல் செய்தல் முதலிய வகையாலாவது சாப்பிட்டு வரவேண்டும். பிரதம உள்ளுடம் பாகியதை நீடிக்கப் பண்ணும். மேற்குறித்த மூலிகையை அலக்ஷியம் செய்யாது ஆசாரியன் திருவடியின் கண்ணே இலக்ஷியம் வைத்து, எவ்வித தந்திரத்தினாலாவது தினம் தினம் உட்கொண்டால், தேகக் கெடுதியாகிய அசக்தம் நீங்கி, தேகம் வலுவுள்ளதாய் நெடுநாளைக்கு இருக்கும். முத்தியடைவதற்கு சகாயமாயுமிருக்கும். மகான்களிடத்தில் அனந்த காலம் காத்தாலும்மேற்குறித்த மூலிகையின் பிரயோஜனத்தையும் உண்மையையும் அனுபவத்தையும் வெளியிடார்கள். பரம கருணாநிதியாகிய நம் தலைவனால் கிடைத்தது. அசட்டையின்றி உட்கொள்ளல் வேண்டும். மேற்குறித்த மூலிகை ஜலமில்லாத இடத்தில் இருக்கிறது விசேஷ நன்று. ஜலமுள்ள இடத்திலுள்ளதில் காரமிராது. தந்தசுத்தி செய்து அண்ணக்கில் தர்ஜனி விரலால் தேய்க்க – மேற்குறித்த மூலிகையால் – பித்தநீர் கபநீர் வெளியாகி, கண்ணொளி விசேஷிக்கும். நேராத பக்ஷத்தில் பொற்றலைக் கையாந்தகரை கூடும். மேற்குறித்த மூலிகை செந்தூரம் செய்வதற்குச் சிறந்தது. உலர்த்திக் குழித்தயிலம் வாங்கியும் செந்தூரஞ் செய்யலாம். அது போலவே, அறிவை விளக்குவதற்கும், கவனசத்தி உண்டுபண்ணுவதற்கும், கரணம் ஓய்வதற்கும், கபத்தை அரிப்பதற்கும் யோக்கியதையுடைய ஓஷதி தூதுளை. அதை மேற்குறித்தபடி அனுஷ்டித்தால்விசேஷ நன்மை செய்யும். கரிசாலை தந்த சுத்தியால் வசீகரமும் நேரிடும். உண்மை.

கரிசலாங்கண்ணியும் தூதுளையும்

கரிசலாங்கண்ணியைப் பச்சையாகவாவது அல்லது சமையல் செய்தாவது தினந்தோறும் அனுஷ்டானம் செய்துவரவேண்டும். தேகம் திடமுள்ளதாகி நெடுநாளைக்கிருக்கும். தூதுளையையு மப்படியே சேர்த்துக்கொண்டு வந்தால், புத்தியை விகாசப்படுத்தும்,

118. பஞ்ச கவ்யம்

பஞ்சகவ்வியத்தின் உண்மை யாதெனில் :— கோமயம், மேற்படி ஜலம், கிருதம், ததி, க்ஷீரம் இவை ஐந்து. இவற்றின் குணம் : மேற்படி மயத்தால் பிருதிவி சுத்தி, ஜலத்தால் ஜலசுத்தி, கிருதத்தால் அக்னி சுத்தி, ததியால் வாயுசுத்தி, பயசால் ஆகாசசுத்தி. இதுபோல் பிண்டத்தில் பிருதிவியாகிய தேகத்திலுள்ள குருக்களையும் அசுத்த மலங்களையும் மேற்படி மயம்போக்கும்; நீர்க்கட்டு கோவை முதலிய வற்றை மேற்படி ஜலம் போக்கும்; உஷ்ண ஆபாசம் முதலியவற்றை மேற்படி கிருதம் போக்கும்; அதுபோல் வாயுவின் கெடுதியாகிய மலபந்த முதலியவற்றை மேற்படி ததிபோக்கும். ஆன்மாவாகிய பிராணச் சோர்வை மேற்படி க்ஷீரம் போக்கும்; மேலும் பசு மிருகத் தின் நக்ஷத்திர (?) விருக்ஷத்தின் மூலாதி பலங்களே பஞ்ச கவ்யங்க ளாம்.

119. பஞ்ச சபை

ஆண்டவ ரிருக்கும் பொது ஸ்தானங்கள் 5. இவைகள் பஞ்ச சபைகளாகச் சொல்லப்பட் டிருக்கின்றன.

பிருதிவி	- பொற்சபை
அப்பு	- ரஜிதசபை
தேயு	- தெய்வசபை
வாயு	- நிருத்தசபை
ஆகாயம்	- சிற்சபை

120. பஞ்ச அமுத ஸ்தானங்கள்

சுத்த அமுத ஸ்தானங்கள் 5.

1-வது அமுதம் நாக்கினடியில் இனிப்புள்ள ஊற்றுஜலம் போலிருக்கும்.

2-வது அமுதம் உள்நாக்குக்குமேல் இளகின இனிப்புள்ள சர்க்கரைப் பாகு போலிருக்கும்.

3-வது மூக்கு முனையில் காய்ச்சின சர்க்கரைப் பாகு போலிருக்கும்,

4-வது நெற்றி நடுவில் முதிர்ந்த சர்க்கரைப் பாகு போலிருக்கும்.

5-வது மகா இனிப்புள்ள மணிக் கட்டியாக விருக்கும்; அதிக குளிர்ச்சி யாகவு மிருக்கும்.

இந்த 5-வது அமுதத்தை யுண்டவர்கள் என்றும் அழியாத தேக சித்தியைப் பெற்றவர்கள்.

பஞ்ச அமுத ஸ்தானங்கள்

யோகானுக்கிரக பஞ்ச அமுத ஸ்தானங்கள் 5.

1-வது அமுதம் நாக்கு நுனியில். பக்குவ ஞானத்தால். சிருஷ்டி வல்லபப் பிரஞ்ஞையால்.

2-வது புவனமுதம் - நாக்குமத்தியில், பக்குவ **கிரியையால், ஸ்திதி** பிரஞ்ஞை யுணர்ச்சியால்.

3-வது மண்டலாமிருதம் - நாக்கினடியில், பக்குவ **இச்சை, சம்மார** உணர்ச்சியால்.

4-வது ரகசியாமிருதம் - உள்நாக்கடியில், பக்குவ **திரோபவம்.**

5-வது மௌனமிருதம் - உண்ணாக்குக்கு மேல், பக்குவ **அனுக்கிரகம்.** அனுக்கிரகம், சுபாவத்தினது அனுபவம், துரியநிலை.

121. ஏழு திரைகள்

இந்தப் பவுதிக உடம்பிலிருக்கிற நீ யாரெனில்: நான் ஆன்மா, சிற்றணு வடிவன். ஷெ அணு கோடி சூரியப் பிரகாசமுடையது, லலாடஸ்தான மிருப்பிடம், கால்பங்கு பொன்மை முக்கால்பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சத்திகளாகிய 7 திரைகளுண்டு. அவையாவன:

கறுப்புத் திரை மாயாசத்தி.
நீலத்திரை கிரியாசத்தி.
பச்சைத்திரை பராசத்தி.
சிவப்புத்திரை இச்சாசத்தி.
பொன்மைத் திரை ஞானசத்தி.
வெண்மைத்திரை ஆதிசத்தி.
கலப்புத்திரை சிற்சத்தி.*

---

* கரைவின்மா மாயைக் கரும்பெருந் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பேருறு நீலப் பெருந்திரை அதனால்
ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பச்சைத் திரையால் பரவெளி அதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
செம்மைத் திரையால் சித்துறு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
கலப்புத் திரையால் கருதனு பவங்களை
அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

— திருஅருட்பா, அருட்பெருஞ்ஜோதி அகவல் 813 - 826

122. ரசவாதம் ஏழு

ரசவாதம் 7

ஸ்பரிசவாதம்	-	குருசம்பந்தத்தால்
ரசவாதம்	-	ஓஷதிசம்பந்தத்தால்
தூமவாதம்	–	புகைவேதியால்
தாதுர்வாதம்	–	பஞ்சலோகங்களால்
வாக்குவாதம்	–	சொல்லால்
அக்ஷிவாதம்	-	பார்வையால்
சங்கல்பவாதம்	–	தியானத்தால் — செய்யப்படும்

உபரசவாதம் 7

மந்திரவாதம்	–	எழுத்துகள் சம்பந்தத்தால்
புரீஷவாதம்	-	மலமூத்திரத்தினல்
தூளனவாதம்	-	பாததூளிகை சம்பந்தத்தால்
வாயு பிரேரகவாதம்	–	சுவாசசம்பந்தத்தால்
தேவாங்கவாதம்	–	உபாசனையினல்
பிரவேச விசிரிம்பித வாதம்	-	பூததாதுவால்
தந்திரவாதம்	–	நிரேதுவாக — செய்யப்படும்

123. நவநிலை

நவநிலை என்பது அனுபவ மார்க்கம்.

1. விந்து
2. நாதம்
3. பரவிந்து
4. பரநாதம்
5. திக்கிராந்தம்
6. அதிக்கிராந்தம்
7. சம்மௌனம்
8. சுத்தம்
9. அதீதம்

124. குளிகை மணி ஒன்பது

குளிகை மணி ஒன்பதின் விவரம்:

1. பரம்பரமணி–அண்டத்தையும் அண்ட வஸ்துக்களையும் காட்டுவது.
2. பராபரமணி - பிண்டத்தையும் பிண்ட வஸ்துக்களையும் காட்டுவது.
3. அரும்பெறன்மணி - நினைத்ததை நினைத்தபடி அருளுவது.
4. ககனமாமணி - விண்ணுலக வஸ்துக்களை ஆட்டி வைக்கும்.
5. சரஒளிமணி – மண்ணுலகையும் மண்ணுலக வஸ்துக்களையும் ஆட்டி வைக்கும்.
6. கலைநிறைமணி - எல்லா வுலகத்தும் உலாவுதல்.
7. வித்தகமணி - சர அசர வஸ்துக்களிடம் விளங்குவது.

8. சித்திசெய்மணி - மகாசித்திகளை நடத்துவது.
9. வளரொளிமணி - அழியாப் பெருவாழ்வு அளிப்பது.*

125. திரயோதச நிலைகள்

திரயோதச நிலைகள் யாவெனில்:

1. பூதநிலை
2. கரணநிலை
3. பிரகிருதிநிலை
4. மோகினிநிலை
5. அசுத்தமாயாநிலை
6. அசுத்தமகாமாயாநிலை
7. சுத்தமாயாநிலை
8. சுத்தமகாமாயாநிலை
9. சர்வமகாமாயாநிலை
10. குண்டலிநிலை
11. பிரணவநிலை
12. பரிக்கிரகநிலை
13. திருவருள்நிலை

ஆ ௧ 13. இதற் கதீதத்தில் சுத்த சிவநிலை. இதற்குச் சத்தி, ஆகாயம், நிலை, வெளி, பிரகாசம், அனுபவம், பதம், இடம் முதலிய பெயருள்ளன.

மேலும், வர்னமாகிய எழுத்தாலும், வண்ணமாகிய ரூபத்தாலும், தொழிலாகிய பெயராலும் அனந்தமாக விரியும். இவை யாவும் ராக மென்கிற திரை நீங்கினல் ஒருவாறு தோன்றும். மேலும் இவைகள் படிப்பால் அறியக்கூடாது. அறிவது எப்படி யெனில்: ஒழுக்கம்

---

* அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே
பிண்டமும் அதில்உறு பிண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பராபர மணியே
நினைத்தவை நினைத்தவை நினைத்தாங் கெய்துற
அனைத்தையும் தரும்ஓர் அரும்பெறல் மணியே
விண்பதம் அனைத்தும் மேற்பத முழுவதும்
கண்பெற நடத்தும் ககனமா மணியே
பார்பதம் அனைத்தும் பகர்அடி முழுவதும்
சார்புற நடத்தும் சரஒளி மணியே
அண்டகோ டிகள்எலாம் அரைக்கணத் தேகிக்
கண்டுகொண் டிடஒளிர் கலைநிறை மணியே
சராசர உயிர்தொறும் சாற்றிய பொருள்தொறும்
விராவியுள் விளங்கும் வித்தக மணியே
மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும்
தேவரும் மதிக்கும் சித்திசெய் மணியே
தாழ்வெலாம் தவிர்த்துச் சகமிசை அழியா
வாழ்வெனக் களித்த வளர்ஒளி மணியே

— திருஅருட்பா, அருட்பெருஞ்ஜோதி அகவல் 1291 - 1308.

நிரம்பிக் கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்ப முண்டானால், நாம் தாழுங் குணம் வரும். அத்தருணத்தில் திருவருட் சத்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால், இடைவிடாது நன்முயற்சியில் பழகல் வேண்டும்.

126. ஞானயோக அனுபவ நிலைகள்

1. படிகமேடை
2. ஆயிரத்தெட்டுக் கமல இதழ்
3. ஓங்காரபீடம்
4. குண்டலிவட்டம்
5. ஜோதிஸ்தம்பம்
6. சுத்தநடனம்

இவற்றை அனுபவத்தினலறிக. இஃது நிராதார லக்ஷணம்.

127. சுத்த சன்மார்க்க அனுபவ ஸ்தானங்கள்

சுத்த சன்மார்க்கத்துக்கு அனுபவ ஸ்தானங்கள் கண்டத்துக்கு மேல்.

128. சகஜ நிலை

சமாதிப் பழக்கம் பழக்கமல்ல. சகஜப் பழக்கமே பழக்கம்.

129. சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல்

சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல் என்பவற்றிற்குப் பொருள் யாதெனில்:— அடியில் வருவனவேயாம். சாகாத்தலையென்பது ருத்திரபாகம், ருத்திரதத்துவம், வித்யாகலை, வஸ்து, அருளானந்தம், காரணக்கினி, சிவாக்கினி. வேகாக்காலென்பது மகேசுவரபாகம், மகேசுவரதத்துவம், சாந்திகலை, ஆன்மா, அன்பு, காரணவாயு. போகாப்புனலென்பது சதாசிவபாகம், சதாசிவதத்துவம், பிரதிஷ்டாகலை, ஜீவன், இரக்கம், காரணோதகம். இவை மூன்றும் சாகாத கல்வியைத் தெரிவிக்கும். ஆத்ம தத்துவாதி சிவகரணம் 36, நிர்மல குரு துரியா தீதம் 7; ஆக நிலைகள் 43, இந்த 43 நிலைகளில் ஒவ்வொரு நிலைகளிலும் மேற்குறித்தவை உள. மேலும் இவை மூன்றும் பிண்டத்தில் நாலிடத்திலும் அண்டத்தில் நாலிடத்திலும் உள. அவைகள் பிண்டாண்ட ருத்திர சதாசிவ பேதம். சாகாக் கல்வியைக் குறித்த 43 நிலைகளில் முதல்நிலை அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவன் பிரமன். அவனது காலம் ஒரு கல்பம். இப்படி 43 நிலைகளையு மேறி அனுபவத்தைப் பெற்றவன் காலங்கடந்த காலாதீதன்.

மேற்குறித்த மூன்றும் பரமார்க்கமாகிய ஞான யோகக் காட்சியில் உண்டாகும் யோகானுபவங்களின் உண்மைப் பொருள். அபர மார்க்கத்தில் சிலர் உப்பு வகைகளின் பேதமென்றும் ஓஷதி பேதமென்றும் பூதபேத மென்றும் சொல்லுவது உபாயமார்க்கம். அக அனுபவமே உண்மை. உபாய வகையாகிய அபரமார்க்கம் தேக பூஷணாதி காமிய சித்தியைத் தரும். உண்மை, நீக்கமற்ற சொரூப ஞானத்தைத் தருமென்றறிக. மேற்படி உபாயங்களை ஒருவாறு தெரிவிப்பதும் **சைவ சமயங்கள் தவிர வேறு எவ்வித சமயங்களிலுமில்லை.** அப்படியிருப்பதாகச் சொல்லியிருப்பதும் ஏகதேசமென்றறியவும். மேற்படி ஏகதேசங்கள் ... மந்திரங்களிலும் மேற்படி மூன்றும் வழங்குகின்றபடியால், ஒன்பது மாற்றுக்கு மேற்பட்ட தங்கரேக்கில் பஞ்சாக்ஷரத்தையடைத்து விக்கிரகத்தின் அடியில் வைக்க, மகத்துவங்களுண்டாகும். மேலும் மேற்படி உயர்வுடைய தங்கத்தில் விக்கிரகஞ் செய்துவைத்து ஓஷதியாதி லவணங்களை அதற்குச் சேர்த்து வைத்தால், விசேஷ சித்தி விளங்கும். இஃது திரிசியக் காட்சி. சுத்தசன்மார்க்கத்திற்கு உபாய வகைகளான அபரமார்க்கக் காட்சி கூடாது. பரமார்க்கமாகிய அகஅனுபவமே உண்மை. மேற்படி மூன்றையும் இலக்ஷியமாகவே கொள்க. உபாய வகையான வாச்சிய திரிசியக் காட்சிகள் பரோபகாரம். (?) ஆதலால், சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனலென்பவை இரண்டு புறத்திலுமுள. உபாய வகையை நம்புதல் கூடாது; உண்மையை நம்புதல் வேண்டும். **இஃது ரகசியம்.**

ஆங்கிரச ஞு புரட்டாசி மீ ருவ.

வேதாகமச் சிறப்பு

இந்து வேதாகமங்களில் மாத்திரந்தான் ஏமசித்தி ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கின்றது மற்ற எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாகாத கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படியிருக்கிறதாகக் காணப்படுமாகில், அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதின் ஏகதேசங்களென்பது உண்மை.

பொன்னும் மகத்துவமும்

ஒன்பது மாற்றுக்கு மேற்பட்ட பொன்னால் செய்த விக்கிரகங்கள் வைத்திருக்கும் தேவாலயங்களில் மகத்துவங்களுண்டாகும். மகத்துவத்தின் உயர்வு தாழ்வு பொன்னினது மாற்றுயர்வு தாழ்வாகவேயிருக்கும். மாற்றுயர்ந்த தங்கரேக்கில் பஞ்சாக்ஷரத்தை அடைத்து விக்கிரகத்தின் அடியில் வைக்க மகத்துவங்களுண்டாகும். இது ரகசியம்.

சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல்

சாகாத்தலை ஆகாசம், வேகாக்கால் வாயு, போகாப்புனல் அக்கினி. சாகாத்தலையென்பது ருத்திரபாகம், ருத்திர தத்துவம், வேகாக்கால்

என்பது மயேசுரபாகம் மயேசுரதத்துவம். போகாப் புனல் என்பது சதாசிவபாகம், சதாசிவதத்துவம். இம்மூன்றும் சாகாக்கல்வியைத் தெரிவிக்கின்றது. ஆத்மதத்துவாதி சிவகரணம் 36-ம் நிர்மல குரு துரியாதீதம் 7-ம் சேர்ந்து ஆனநிலை 43-ல் ஒவ்வொரு நிலையிலும் இவைகளுண்டு. மேலும் சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல் என்கிற தத்துவங்கள் பிண்டத்தில் 4 இடத்திலும், அண்டத்தில் 4 இடத்திலும் ஆக 8 இடத்திலும் உண்டு. இவைகள் பிண்டருத்திரர்கள் அண்டருத்திரர்கள் முதலிய ருத்திர மயேசுர சதாசிவ பேதமென்றறிக. சாகாக்கல்வியைக் குறித்த இந்த நாற்பத்துமூன்று நிலைகளில் முதனிலையின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டவன் பிரமன். அவனுக்கு ஆயுசு 1 கற்பம். இப்படி 43 நிலைகளும் ஏறி யனுபவத்தைப் பெற்றவன் காலங்கடந்தவன், காலரகிதன். சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல் என்பவற்றிற்குப் பொருள் சிலர் உப்புவகைகளின் பேதமென்று சொல்லுவது பிசகு. அவைக ளினுண்மைப் பொருளை மேற்குறித்தபடி யோகக் காட்சிகளில் அனுபவிக்கலாம். ஆகையால் இவைகள் யோக அனுபவங்களே யென்று அறியவேண்டும்.

130. மூவகைச் சித்தி

கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்தி எனச் சித்திவகை மூன்றும்.

கர்மசித்தியாவது :—

அணிமா – துரும்பை மேருவாக்குகிறது
மகிமா – மேருவைத் துரும்பாக்குகிறது
கரிமா – மேருவை ஒன்றுமில்லாமல் செய்கிறது
லகிமா – ஒன்றுமில்லாத இடத்தில் அனேகங்களாகச் செய்கிறது
பிராத்தி – வேண்டுவன அடைதல்
ஈசத்துவம் – குளிகை வல்லபத்தாலெங்கும் செல்லுகிறது
பிராகாமியம் – பரகாயப்பிரவேசம்
வசித்துவம் எழுவகைத் தோற்றமாகிய தேவமானுஷ்ய நரக மிருக பக்ஷி ஊர்வன விருக்ஷம் முதலியவற்றைத் தன்வசப்படுத்துகிறது.

தேகத்தைக் கல்பசித்தி செய்து கொள்ளுதல்; அபரமார்க்கி; சதாசிவாந்த அனுபவம்; சதாசிவகால வரை; பிரேதத்தை உயிர்ப்பித்தல்; சித்தி காலம் 3¾ நாழிகை முதல் 3¾ வருஷத்திற்குள்.

யோக சித்தி விவரம் :—64 சித்திகளையும் தன் சுதந்தரத்தில் நடத்துகிறது; சங்கல்பகுளிகை; பிராணகல்பதேகி; பிரமகாலம்; பராபரமார்க்கி சித்திகாலம் 12 வருஷ முதல் 108 வருஷத்திற்குள்; புதைத்த தேகத்தை நாசமடையாமுன் உயிர்ப்பித்தல்.

ஞானசித்திகளின் விவரம் - அறுபத்து நாலாயிரம் சத்திகளையும் தன் சுதந்திரத்தில் நடத்துகிறது. 647 கோடியாகிய *, 688 கோடி (?) பேதமாகிய மகாசித்திகளையும் தன்னிஷ்டம்போல் நடத்துகிறது ; காலம் கடந்தது ; அடியிலே முடியிலே சுத்தகர்ம, சுத்தயோக, சுத்தஞான சித்திவல்லபங்களைத் தன் சுதந்தரத்தால் நடத்துகிறது

131. சுத்தமாதி தேகங்கள்

சுத்தமாதி மூன்று தேக விவரம் : சுவர்ணதேகம், பிரணவதேகம், ஞானதேகம்.

சுவர்ணதேகம்	பிரணவதேகம்	ஞானதேகம்
காரிய ரூபம்	காரிய காரண ரூபம்	காரண ரூபம்
பரதேகம்	பரம்பர தேகம்	எங்கும் பூரணவியாபகம்
பர உணர்ச்சி	பரம்பர உணர்ச்சி	
பர அறிவு	பரம்பர அறிவு	பராபர அறிவு
பரத்துவம்	பரம்பர தத்துவம்	பராபர தத்துவம்
பொன் வண்ணம் அபரஞ்சி மாற்று	16 முதல் 108 வரையில் மாற்று, உரை படாதது	அளவு கடந்த மாற்று
12 வயது பருவம்	5 முதல் 8 வயது	சப்த மயதரிசனம்
நரை, திரை, பிணி, மூப்பு, மலம், ஜலம், வியர்வை, ஆகாரம், நித்திரை, தாகம், சாயை முதலியன இல்லாமை ரோம வளர்ச்சி தாழ்ச்சி இல்லாமை	தேகம் தோற்றும், பிடிபடாது	உருவம் தோற்றியும் தோற்ருமலும் இருக்கும்
கர்மசித்தி	சர்வ சித்தி	சர்வ மகாசக்தி, சர்வ சுதந்தரம்
கல்பதேகி அபரமார்க்கி	பிராண கல்பதேகி பர அபர மார்க்கம்	காலாதீதன்

132. சுவர்ணதேகிகள் ஆயுள்

சுவர்ண தேகிகள் ஆயுள்.

ஒரு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — நாலு லக்ஷத்து முப்பத்தீராயிரம்.

---

* ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு
கோடியும் விளங்கக் குலவுமெய்ப் பொருளே

- அருட்பெருஞ்ஜோதி அகவல் 911 - 2

இரண்டு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — எட்டு லக்ஷத்து அறுபத்து நாலாயிரம்.

மூன்று மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — பன்னிரண்டு லக்ஷத்து தொண்ணூற்று ஆருயிரம்.

நான்கு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — பதினேழு லக்ஷத்து இருபத் தெட்டாயிரம்.

ஐந்து மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதாயிரம்.

ஐந்து பூதங்களின் பேதம் பன்னிரண்டு லக்ஷத்து இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது கோடியாய் இருக்கின்றது.

133. அணுபக்ஷ சம்புபக்ஷ அனுபவ விவரம்

ஐந்து மாற்றுள்ள சுவர்ணதேகி பிரமன் வயசு — நாலு லக்ஷத்து முப்பத் தீராயிரம்.

ஆறு மாற்றுள்ள சுவர்ணதேகி விண்டு வயசு — எட்டு லக்ஷத்து அறுபத்து நாலாயிரம்.

ஏழு மாற்றுள்ள சுவர்ணதேகி ருத்திரன் வயசு — பன்னிரண்டு லக்ஷத்துத் தொண்ணூற்று ஆருயிரம்.

எட்டு மாற்றுள்ள சுவர்ணதேகி மயேசுரன் வயசு — பதினேழு லக்ஷத்து இருபத்தெட்டாயிரம்.

ஒன்பது மாற்றுள்ள சுவர்ணதேகி சதாசிவன் வயசு — நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதினாயிரம்.

இவர் அணுபக்ஷத்தார்.

அணுபக்ஷத்தில் நாற்பத்து மூவாயிரத்து இருநூறு லக்ஷங்கோடி விந்து சத்தியின் அளவு; அளவிறந்த கோடி நாதத்தின் அளவு.

அணுபக்ஷத்தில் பரவிந்து சுத்தமாயையைக் கடந்தது: பரநாதம் சுத்தமகாமாயையைக் கடந்தது.

சம்பு பக்ஷத்தில் பிரமன், விண்டு, ருத்திரன், மயேசுரன், சதா சிவன், விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் என்பவற்றில்:

பிரமன், விண்டு - சுத்த மகா மாயையைக் கடந்த ஞான அனுபவ [பேதம்
ருத்திரன் - சித் அனுபவம்
மயேசுரன் - ஆனந்த அனுபவம்
சதாசிவன் - சத் அனுபவம்
விந்து - சிதானந்த அனுபவம்
நாதம் - சதானந்த அனுபவம்
பரவிந்து - சச்சிதானந்த அனுபவம்
பரநாதம் - சிவானுபவம். இவை ஒருவாறு.

உபதேசக் குறிப்புகள் முற்றிற்று.

3. சுப்பிரமணியம்

திருச்சிற்றம்பலம்

சுப்பிரமணியம் என்பது என்ன? நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தியிருக்கின்றது. இந்த ஜோதிமணியை ஷண்முக மென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடந் தாண்டி விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடி யிருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேக மென்பதையும் ஷண்முக மென்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக் கப்பால் சாந்தநிறைவாயுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவான உள்ளமே சுப்பிரமணியம்.

ஆறு சோதியாயும், ஆறறிவாயும், ஆறு தலையுடையதாயும் இருப்பதால் முகம் ஆறு. கால் இரண்டென்பது தோன்றும் அறிவு, தோற்றுவிக்கும் அறிவு என்னும் இரண்டறிவாகிய விஷயவுணர்ச்சியும், நிர்விஷய வுணர்ச்சியுமேயாம். கை பன்னிரண்டென்பது ஆருதாரங்களிலுள்ள பிரகாச அப்பிரகாச மாகிய பன்னிரண்டுமாம். தசாயுதம் அபய வரத மென்பவை யாவெனில்: வச்சிரம் என்பது தீக்ஷண்ணிய வுணர்ச்சி; வேல் என்பது சத்தி, அருள், அறிவு; மணி என்பது ஆன்ம விளக்கமாகிய நாதம்; த்வஜம் என்பது கீர்த்தி; ஸரஸிஜம் என்பது தயவு; குக்குடம் என்பது மாச்சரிய மில்லாத நிறைவு; பராகம் என்பது பாசநீக்கம்; தண்டம் என்பது வைராக்கிய அறிவு; பாணம் என்பது அன்பு; அபயம் என்பது சமாதான உணர்ச்சி; வரதம் என்பது நிராபாரமாகிய ஆதரவென்னுஞ் சகிப்பு; கடப்ப மாலை என்பது சர்வ தத்துவ கண்டனம்; பல வர்ணமுள்ளதும், விசித்திர வடிவமானதும், மறதி முதலிய குணங்களுக்குக் காரணமானதும், மாயைக்கு இருப்பிடமாயுள்ளதும் ஆன மூலப்பிரகிருதியே மயிலென்பது.

மயிலின் மேல் சுவாமி ஏறிக்கொண்டிருத்தல் முதலியவற்றிற்குக் காரணம் என்னவென்றால்: பிண்டாண்ட மாகிய இந்தத் தேகத்திலும் அண்டத்திலும், மூலாஞ்ஞான [illegible]ரணம[illegible]ள்ள கேவலமாகிய பிரகிருதிமாயையின் அசுத்த கேவலமாகிய அசுத்தாசுத்த மகாஅகங்காரமென்னும் இராக்ஷச அம்சமான சூரதத்துவம் அதின் சோதரமான மூவகைத் தத்துவத்தோடு, அஞ்ஞான தசையில், ஆன்ம அறிவையும், பிண்ட விளக்கமான தேவர்களையும், விஷய விளக்கமான இந்திரியங்களையும், நாடி விளக்கமான யந்திரங்களையும், பிராண விளக்கமாகிய

உயிரையும் விழுங்கித் தன்னரசு செலுத்தும். அந்தச் சூரதத்துவத்தை வதைக்கும்போது, ஷை தத்துவம் மகாமாயையாகிய மாமரமாயும், மாச்சரியமாகிய கோழியாயும், விசித்திரமாயையென்னும் மயிலாயும், மகா மதமாகிய யானைமுகமாயும், அதிகுரோதமாகிய சிங்கமுகமாயும் விளங்கும். சர்வ தத்துவங்களையுந் தன்வசமாக்கி, அகங்காரக் கொடி கட்டி, அஞ்ஞான நாடகம் செய்த தத்துவ அகங்கரிப்பை அடக்கி, பதி பசு பாசம் அநாதிநித்தியம் என்னும் சித்தாந்தத்தை விளக்கிக் காட்டுவதற்காக, மாச்சரிய குக்குடத்தைப் போதமாகிய கையால் அடக்கியும், விசித்திரமாயையாகிய மயிலைக் கீழ்ப்படுத்தி மேலிருந் தடக்கியும், ஆபாசதத்துவங்களைச் சம்மரித்தும், சுத்தவிஷய புவனமாகிய தேவலோகத்தை நிலைபெறச் செய்தும், இந்திரபதியான ரூபேந்திரனுடைய பெண்ணாகிய தாந்தரதத்துவ மென்னுந் தெய்வயானையை இடப்பாலமைத்தும், இந்திரியங்களாகிய வேடர்களின் கண்ணிற் புலப்பட்ட மானசமென்னும் மானினது கர்ப்பத்திலுண்டான வள்ளியாகிய சுத்த மனதை வலத்தில் வைத்தும், நவதத்துவ காரணமாகிய நவவைராக தத்துவமாகிய வீரர்களைச் சமீபத்திலிருத்தியும், சகல கேவலங்களுக்கும் நினைப்பு மறப்புக்கும் இடையில் விவேகவடிவாயும், பாதம் முதல் நாபி வரையில் உஷ்ணவுருவாயும், நாபி முதல் கண்டம் வரையில் ஆதாரநாடியுருவாயும், கண்ட முதல் புருவமத்தி வரையில் மணியுருவாயும், உச்சியில் ஒளியுருவாயும், புத்தியில் சுத்தஅறிவாயும், அனுபவத்தில் நித்தியமாயும், எங்கும் நிறைவாயும், கோணத்தில் ஆறாயும், எக்காலமும் மதங்களில் ஆறாயும், சமயத்தில் ஆறாயும், ஜாதியில் ஆறின் கூட்டமாயும் விளங்குகின்ற உண்மைக் கடவுளே சுப்பிரமணியம்.

சுப்பிரமணியம் ஒருமுகம், மூன்றுமுகம், நான்குமுகம், ஆறுமுகம் ஆனதற்குக் காரணம்: ஒன்று மிரண்டு மல்லாத ஒப்பற்ற பரப்பிரம சொரூபம் நம் பொருட்டுக் குழூஉக்குறியாய், பாவனைக்கு ஒன்றென்று நிச்சயிக்கும், பரகாரண நிமித்தம் (?) ஆகிய அறிவுருவமே ஒருமுகமென்று ஞானிகள் சொல்லுவார்கள். சுத்தராஜசம், சுத்ததாமசம், சுத்த சாத்விகமாகிய மூன்று குணங்களின் கூட்ட விளக்கமாகிய முக்குண விளக்கமே மூன்றுமுகம். பசுமனம், சுத்தமனம், உள்மனம், சங்கலித மனம் என்னும் நான்கு தத்துவங்களின் கூட்ட விளக்கமே நான்குமுகம். சத்த அறிவின் மூலம், ஒளி யறிவின் மூலம், சுவை யறிவின் மூலம், பரிச வறிவின் மூலம், வாசனை யறிவின் மூலம், ஆத்ம அறிவின் மூலம் என்னும் ஆறு தத்துவங்களின் கூட்டறிவின் மூலகாரணப் பிரகாச விளக்கமே ஆறுமுகம்.

மயிலின் காலின்கீழும் வாயிலும் பாம்பு இருப்பதென்ன? விசித்திரமாயையின் காரியவுருவமான அகங்காரம் தோன்றி வெளிப்படுங்

கால், மூலாங்காரத்திலும் அதிகரிப்பிலும் பிராணவாயு வென்னும் பாம்பானது கீழும் மேலும் உண்டாயினும், அகங்காரத்தின் முகப்பாகிய மயில் வாய் மூலமாய்ப் பிராணவாயுவினது வேகத்தை விழுங்கிக் கொண்டிருப்பது இயற்கைதான்.

படைவீடென்பதென்ன? அடங்கி இருக்குமிடம். அடங்கியிருக்கும் ஸ்தானங்களே இயற்கைவிளக்கம் தங்குமிடங்களாகும். இவற்றிற்கு ஊர் ஆருவானேன்? ஏரகமென்பது அழகு பொருந்திய உள்ளமென்னும் இடம். திருவாவினன்குடி யென்பது திரு - ஆ - இன்ன - குடி: திரு - இலக்குமியாகிய சந்தோஷமும், ஆ - பசுவாகிய விளக்கமென்னுஞ் சீவனும், இனன் - சூரியனாகிய புத்தியும், ஒன்று கூடி விளங்கும் ஆன்மஅறிவின் சுத்தகாரிய இடம். பழமுதிர்சோலை யென்பது இந்திரிய கரண சீவ முதலிய அனுபவப் பழங்களாகிய பிரயோசன வின்பங்கள் நீங்கிக் குறைவற்ற அறிவாய் விளங்கும் இடம். திருச்சீரலைவாய், திருச்செந்தில், செயந்திபுரம் என்பன: சுத்தமனத்தின் முகத்தில் விஷயக் கடலின் அவாவாகிய அலையடித்துக் கொண்டிருக்கும் இடமாகிய கரை, செந்துக்களினது இருதய ஸ்தானமாகிய மனம், அஞ்ஞான சூரனை நிவர்த்தித்துச் சந்தோஷகரத்தைப் பெற்ற பதிமனத்தின் விளக்கம். திருப்பரங்குன்ற மென்பது அசைவிலா ஒன்றான விளக்கத்தையுடைய விவேக உல்லாச வின்ப நிறைவு. குன்று தோருடல் என்பது மலைதோருடல். மலை என்பது அலைவில்லாத உணர்ச்சிக்கு முதற்காரணமா யுள்ள துரிய நன்னிலை. இத்துரியம் பரதுரியம், சுத்ததுரியம், குருதுரியம், சிவதுரியம், சத்திதுரியம் முதலிய துரியமலைகள் அனுபவக் காட்சியில் அனந்தம் உண்டு. மேற்குறித்த அனுபவக் காட்சிகளுக்குத் தேகத்தி விடம் எவை? கோசத்தினடி, தொப்புளின் கீழ், தொப்புள், வயிற்றில் தொப்புளுக்கு மேல் மார்புக்குக் கீழ், மார்பு, நெஞ்சு ஆக 6.

பிரமாவைச் சிறையில் வைத்த தென்பது யாது? சுத்த மன சங்கல்ப சிருஷ்டித் தொழிலையுடைய பிரமாவாகிய மனத்தைக் கிரியையில் பிரவேசிக்க வொட்டாமல், சுத்த விளக்க விவேக நிறைவா யுள்ள சுப்பிரமணிய தத்துவத்தால் சர்வ பிண்ட விஷயங்களாகிய தோன்றல், வளர்தல், குற்றம் நீங்கல், ஒன்றினிடத்தில் மலைவடைதல், தெளிதல் முதலிய பஞ்ச கிருத்தியங்களை விவேக முன்னிலையில் நடத்துங்கால் சலிப்பறப் பந்தித்து இருப்பதே சிறையிட்டது.

ஈசுவரனுக்கு உபதேசித்த தென்ன? உருத்திர தத்துவமாகிய பிரேரக நிலையான காரண தத்துவ முடிவான ஈசுவர தத்துவத்தினியற்கை ஞானம் ஏறிக் கிரியை குறைந்திருப்பதால், கிரியாகாரண பூதமாயும் ஞானகாரண அமிசமாயும் விளங்கும் பிரணவமாகிய

உண்மை நிறைவான கிரியையற்ற நிர்விஷய அனுபவம் ஈசுவர தத்துவத்திற்கு - நியதி செய்வது ? - சுத்த விவேக தத்துவ அதிஷ்டாதாவான சுப்பிரமணியம் அன்றித் தோன்றாது. இதுபற்றி யுபதேசஞ் செய்தாரெனலாயிற்று.

கங்கையிலுள்ள நாணற்காட்டிற் பிறந்தது என்பது என்ன? ஆன்ம இயற்கைக் குணமாகிய தயவே கங்கை. ஆன்மாவின் அனுபவ மத்திய நிலையாகிய சகித்தலென்னும் — சர்வ விஷயங்களிலும் அகங்காரமென்னும் தலையெடாமல் — கீழ்ப்படிந்த குணமே நாணல். இவ்விரண்டின் மத்தியில், அனுபவத்திற்கு இயற்கை விளக்கமாய் விளங்கும் பகுத்தறிவாகிய விவேகம் தோன்றுவதே யுற்பத்தியானது.

பின் கார்த்திகை அரிவை பால் கொடுத்த தென்ப தென்ன? விவேக விளக்கந் தோன்றுங்கால், பெண்பாலின் குணமாகிய சமனை யென்னும் சத்தியின் விளக்கத்தால் இன்பமாகிய அமுத கிரணம் விவேகத்திற்கு ஊட்டுவதே பால் கொடுத்தல்.

சுவாமி அம்மையிடத்தில் குழந்தையைக் கொடுக்க, அம்மை குழந்தை ஆறையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கையால் தடவ, முகம் ஆறும் ஒன்றி வேறாயும், உடல் ஒன்றாயும், கால் இரண்டாயும் ஆனதென்ன ? பரமாத்மாவாகிய சுவாமி அருளென்னுஞ் சத்தியுடன், தயவென்னும் நதிக்கரையில், சகிப்பென்னும் நாணற்காட்டில், சமாதி முதலியகாலத்தில்? தோன்றி விளங்கும்போது, சுத்த வாசனை தோற்றமாகிய அறு பொறியாகிய குழந்தையை யருள் வசமாக்க, அருட்சத்தி விகாரமன்றி அவிகாரமாய் அறு பொறியையும் அருட்போதக் கையால் அடக்க, விஷயங்களை அறிந்து தோயாமலிருக்க அறுபொறிகள் ஒன்றாயும், குறி ஆறாயும், அனுபவவிளக்கம் சாதனவிளக்கம் இரண்டுந் திருவடியாயுந் தோன்றி, சமாதிநிலை விளங்குவதே.

பிண்டத்தில் இவ்வண்ணமாக இருக்க, அண்டத்தில் இவற்றிற்கு ஊர், ஆலயம், மூர்த்தி, செய்கை முதலியன உண்டாவானேன்? ஆன்மாக்கள் புண்ணிய பாவ கருமங்களால் பேதப்பட்டு, மந்தம் மந்த தரம் ராஜசம் தாமசம் கருமம் முதலிய வேறுபாடுகளால் அனாதி தொடங்கி இன்றளவில் - உயிர்த்திரள் ஒன்றானாலும் - கரணக் கூட்டுறவால் வெவ்வேறு தன்மையாய் விளங்குகின்றன. ஆதலால் மாகருணையுடைய கிருபாநிதியாகிய சிவபெருமான் திருவருளை அங்கையிற்கனி யெனவுணர்ந்த அனாதி நித்திய முத்த சித்தராகிய ஈசுவரதத்துவ புவனானுபவ ஈசுவரனால், நாம் உய்யும்பொருட்டு உலகத்தின்கண், பாச நூல்[1] பசு நூல்[2] பதி நூல்[3] அனுபவ நூல்[4] என்னும் புராண[1] வேத[2] ஆகம[3] உபநிஷத்துக்கள்[4] உண்டு பண்ணப்பட் டிருக்கின்றன.

அவற்றின் வாயிலாகக் கர்மகாண்டம், பத்திகாண்டம், உபாசனகாண்டம், தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை முதலிய பேதங்களும், இவற்றிற்கு முக்கியமான ஆசாரம், வருணம், ஆசிரமம் முதலியவைகளும், இவற்றிற்கு ஏதுவான சரியாதி நான்கும், இவற்றிற்கு அடைவாகிய சாலோகாதி நான்கும், இவற்றிற்கு மார்க்கமாகிய தத்துவம், புவனம், பதம், வர்னம், மந்திரம், கலை முதலியனவும் நிர்ணயித்து, பாவநாசத்திற்கு ஏதுவான அனசன சாந்திராயண முதலிய பிராயச்சித்தங்களை விதித்து, இவைகள் செய்வதற்கு யோக்கியமான நதி முதலியவற்றையும், அவற்றிற்கு அங்கமான - தத்துவானுபவங்களாகிய உண்மை நாமங்கள் கெடாதிருக்க - திருப்பெயர் முதலியவைகளை மூர்த்தி ஸ்தல முதலியவைகளுக்கு ஏற்படுத்தி வழங்கச் செய்தார்கள்.

உபாசிக்கின்றவர்களுக்குத் தத்துவநாமங் கெடாமல் அருட்சத்தி தோன்றக் கிருத்திகையையும், வேதாந்த விளக்கத்திற்கு விசாகத்தையும், சதா சுபத்தைக் குறிக்கச் செவ்வாயையும், ஆறு குறியைக் குறிக்கச் சஷ்டியையும், **ஞான நிறைவைக் குறிக்கத் தைப் பூசத்தையும்** சுட்டினர்கள். தத்துவங்களைக் கையிலெடுத்து ஆடுவதான போதமென்னுங் கையால் விஷய பலத்தைத் தத்துவமாகிய காவடியில் கட்டித் தானாகிய தோளிலேற்றித் தான் கெட்டுத் தான் அவனாகிப் போத வடிவனாய், சங்கல்ப தீவிரனாய், சுப்பிரமணிய தத்துவமாய் விளங்கும் திருவுருவ முன்னுக்கு விஷயாபாவ நியாயமே காவடி யெடுத்ததாயும், சுத்த வைராக்கிய நிச்சய சிவபோதமே இடும்பனையும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இருதயாகாச ஷட்கோண வடிவமே யந்திரமாய், அதன் அங்க வேறுபாடே நாற்பத்து முக்கோணமாய், உபாங்கமே நவகண்டமாய், உண்மையே சகரமாய், விஷய நீக்கமே ரகரமாய், நித்திய திருப்தியே அகரமாய், நிர்விஷயமே ணகரமாய், பாவ நீக்க ஏதுவே பகரமாய், ஆன்ம இயற்கைக்குணமே வகரமாய் விளங்குவதே ஆறெழுத்து. நமது சரீர இருதய ஸ்தானமே கோயிலாய், மாயாவிசித்திரமே மயிலாய், நாபியந்தமே பலிபீடமாய், உண்ணாவின் மேலந்தமே கொடி மரமாய், பஞ்சகோசங்களே பிராகாரமாய், முக்குணங்களே வில்வமரமாய், ஆன்ம தயையே தடாகமாய், வாயே வாசலாய், அனுபவ நிலையே கோபுரமாய் விதிக்கப்பட் டிருக்கின்றன.

ஞானிகள் கடவுளை எங்கும் உபாசிப்பார்க ளென்றும், **யோகிகள் இருதயத்தில் உபாசிப்பார்க** ளென்றும், **கர்ம காண்டிகள் அக்கினியில் உபாசிப்பார்க** ளென்றும், **பத்தி காண்டிகள் விக்கிரகத்தில் உபாசிப்பார்க*** ளென்றும் விதித்திருக்கிறது. அதற்கு ஒத்த

* ஊன்கணார்க்குப் படிமையினும், அந்தணர்க்கு வேள்வித்தீயினும், யோகிகட்கு உள்ளத்தினும், ஞானிகட்கு எவ்விடத்தும் வெளிப்படுதலால் - பரிபாடல் 2 - 65, பரிமேலழகர் உரை

வண்ணம் தத்துவ விசாரத்தையே ஆலய மாக்கினர்கள். ஆலயத்தில் விளங்கும் மூர்த்தியின் பால், பாசங்களில் செல்லும் ஆத்மாக்களை சிவ பாசத்தில் பாசநூலைக்கொண்டு அழுத்தி, பசு நூலைக்கொண்டு(?) மேற்குறித்த தந்திர மந்திர கலைகளைக் குருமூலமாய் உபதேசகலை யால் விளக்கி, காண்டத் திரயத்தால் நிலைக்கப்பண்ணி, பதிநூலால் அறிவைவிளக்கி, அனுபவநூலால் சமாதியைத் தெரிவித்திருக்கிறது. இவற்றைச் சீவர்கள் மறவாதிருக்க மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல், ஆலயத்தில் மூர்த்தியாகிய சண்முகப்பெருமானைத் தத்துவ வுருவமென்று விளக்கிக் காட்ட, அர்ச்சக வுருவமான ஆசாரியன், நமது அறிவாகிய கர்ப்பூரத்தில், சுப்பிரமணிய உண்மையாகிய விளக்க மென்னும் பிரகாசத்தைக் கொண்டு, அசுத்த விஷய முதலிய எண்ணங் கள் நம்முடைய பொறிகட்குப் புலப்படாமலிருக்க, உண்மை நாதக் குறியாகிய மணியொலியுடனே தரிசிப்பிக்கச் செய்தும்; வேறு பராக் கன்றித் ததாகாரமாய் நிற்க, நமது தரத்திற்கொத்த உபசாரதியர் களால் வழிபடச் செய்தும் — தத்பல மடைய உத்தமர்கட்கு அன்ன வினியோகம் செய்வது மார்க்கமென்று சித்தாந்தம் பண்ணினர்கள்.

இவ்வண்ணமாய், அநாதி தொட்டு இன்றுவரை சென்ற நாட்களி லுள்ள **அருணகிரியார் குமரகுருபரர் நக்கீரர்** முதலிய மகான்கள் தொண்டுசெய்து, உத்தம ஞானிகளாய் நித்திய முத்தர்களாய் விளங்கு கின்றார்கள். ஆதலால் நாம் யாவரும் அவ்வுண்மைக் கடவுளை வேதாகம விதிப்படி உண்மையாய்ப் பத்தி செய்து அவர் அருளைப் பெறவேண்டும்.

திருச்சிற்றம்பலம்

சுப்பிரமணியம் முற்றிற்று

4. அருள்நெறி

திருச்சிற்றம்பலம்

கடவுளது திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? அருளென்பது கடவுள் தயவு. ஜீவகாருண்ய மென்பது ஜீவர்கள் தயவு. ஆதலால் சிறு வெளிச்சத்தைக்கொண்டு பெரு வெளிச்சத்தைப் பெறுவதுபோல், சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டு பெருந்தயவாகிய கடவுளருளைப் பெறவேண்டும்.

அக் கடவுள் தயவாகிய அருள் எத்தன்மை யுடையது? நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்தினுக்கு நன்மை தீமையை விளக்கிக்காட்டுவதாயும், வேதாகம கலைகளைக் கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும், அறிபவர்களின் தரத்திற் கொத்ததாயும், அறிபவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

அத் தன்மையான அருள் பிண்ட அண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகின்றது? காண்பார் காணுமிடம் காணப்படுமிடம், அறிவார் அறியுமிடம் அறியப்படுமிடம், தூண்டுவார் தூண்டுமிடம் தூண்டப்படுமிடம், சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப்படுமிடம், அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம், கருதுவார் கருதுமிடம் கருதப்படுமிடம், முகருவார் முகருமிடம் முகரப்படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படுமிடம் முதலியவாய் விளங்கும்.

இவ் வண்ணம் விளங்கும் அருளை நாம் பெறுவதற்கு உபாயம் என்ன? புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியாரைத் துணைக்கொண்டு, அவரால் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது, செய்யில், அவ்வருளைப் பெறலாம்.

நன்மை தீமை என்பவை யாவை? நன்மை தீமை யென்பவை புண்ணிய பாவம். புண்ணிய மென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும். பாவ மென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் இருக்கும்.

புண்ணிய பாவங்கள் நம்மை எவ்வா றடைகின்றன? மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் அடையும். மேலும், மனத்தினிடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும், ஆகப் பன்னிரண்டு வகையாய் நம்மையடையும். அவையாவன :—மனத்தினால் பரதாரகமனம் பண்ண

நினைத்தல், அன்னியருடைய சொத்தைக் கிரகிக்க நினைத்தல், அன்னியருக்குத் தீங்குசெய்ய நினைத்தல், முடியாத காரியங்களை நினைத்து அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமை யடைதல் - இவை நான்கும் மனத்தினால் செய்யும் பாவங்கள். வாக்கினால் பொய்சொல்லல், கோட்சொல்லல், புறங்கூறல், வீணுக்கழுதல்- இவை நான்கும் வாக்கினால் உண்டாகும் பாவங்கள். தேகத்தினால் பிறர் மனைவியைத் தழுவுதல், புசிக்கத்தகாத வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல், அன்னியர்களை இம்சை செய்தல், தீங்குசெய்கிறவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செய்தல்-இந்நான்கும் தேகத்தா லுண்டாகும் பாவங்கள். இவை போன்றவைகளைத் தவிர்த்து அன்னியர்களுக்கு நன்மை யுண்டாக நினைத்தல், பொறாமை யடையாதிருத்தல், அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல், தனது மனைவி தவிர அன்னியமான பெண்களைத் தாய் சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல் - இவை மனத்தால் வரும் புண்ணியங்கள். பொய் சொல்லாமை, கோட்சொல்லாமை, இன்சொல்லாடல், தோத்திரம் செய்தல் - இவை நான்கும் வாக்கினா லுண்டாகும் புண்ணியங்கள். அன்னியர்களுக்குத் தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலான நன்மையான கிருத்தியங்களெல்லாம் தேகத்தாலுண்டாகும் புண்ணியங்கள்.

அறிந்து செய்த பாவங்களும் அறியாது செய்த பாவங்களும் எவ்வாறு நீங்கும்? அறிந்த பாவங்கள் செய்தபின், தனக்குப் பாவம் செய்ததாக எவ்வகையிலாவது தெரிந்தபின், "நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும், மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும் அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், தாக்ஷிண்ய உடன்பாட்டாலும், உணவு பற்றியும், புகழ் பற்றியும், வழக்கம் பற்றியும் செய்து விட்டோமே!" என்று பச்சாத்தாபப் பட்டுப் பெரியோர்களை யடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச்சித்தங்களைக் கைக் கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச்செய்வதுமன்றி; யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களிற் சென்று வசித்து, இயன்ற அளவில் அன்ன விரயஞ் செய்தால் நீங்கும். மேலும், சத்தியற்றவர்களாயும் வார்த்திகர்களாயுமுள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாத்தாபத்துடன் பாவ காரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற் கொத்த தெய்வங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

அறியாத பாவங்கள் யாவெனில், நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும், தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவங்களாம். இதன்றி அவை மனத்திற்குப் புலப்படாமலும் உண்

டாகும். இவைகள் யாவும் தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத் தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்துபசரித்தலாலும் தெய்வம் பரா வலாலும் நீங்கும்.

பிராயச்சித்த முதலியவைகள் செய்யாவிட்டால் பாவங்களாலடை யுங் கதியென்ன? மனத்தால் செய்யும் பாவங்கட்குச் சண்டாளாதி சரீரமுண்டாகும். வாக்காற் செய்த பாவங்கட்கு மிருகம் முதலான சரீரமுண்டாகும். தேகத்தால் செய்யும் பாவங்கட்கு மரம் முதலான சரீரமுண்டாகும்.

வேதாந்திகள் "பாவம் முதலிய கருமங்களும், புண்ணியம் முதலிய ஏதுக்களும் நமக்கில்லை, நாம் சர்வசாக்ஷி" என்கின்றார்களே— அஃதென்ன? தேகவாசனை, இந்திரியவாசனை, கரணவாசனை, பிராண வாயுவின் செயற்கையிலுண்டாகும் வேறுபாடு முதலிய நன்மைகளில் சலிப்பற்று ஆகாரம், நித்திரை, பயம் முதலியவைகளில் தாம் சலித்தும் சோர்ந்தும் திடுக்கிட்டும் இல்லாமல், நிவாததீபம் போல் விளங்கும் ஜீவன்முத்தர்கள் சமூகத்தில் பாவ கிருத்தியங்கள் நடவா; புண்ணி யங்களும், பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரி யாகக் காண்பார்கள். அத் தன்மையுடைய நித்திய முத்த சுத்த ஞான தேக சித்தர்கட்குப் பாவபுண்ணியமில்லையென்று அவர்கள் சொல்ல வேண்டியதில்லை; நமக்கே தெரியும்.

மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும், சரீர மாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேகமாயும் அசுத்தப் பொறியாயும் அசுத்தக் கரணமாயும் அசுத்த அனுபவமாயும் அசுத்த அறிவாயும் இருப்பது போல் இரா. தத்தபடத்தைப் போல் காரியத்தில் இலதாயும் காரணத்தி லுளதாயும், அறிவேவடிவாய் அறிவேபொறியாய் அறிவேமனமாய் அறிவேயழகாய் அறிவேயுருவாய் அறிவேயுணர்வாய் அறிவேயனுபவமாய் அறிவேயறிவாய் விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

அருள்நெறி முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

5. திருவருண் மெய்ம்மொழி

ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியின் உண்மை ஒழுக்கங்களைக் குறிக்கும் அருட்பிரகாசத் தந்தையார் திருவருண் மெய்ம்மொழி

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப்பெற்ற நண்பர்களனைவரும் நாமும் அறியவேண்டுவதும் ஒழுகவேண்டுவதும் யாதெனில்:

இயற்கையிற்றானே விளங்குகின்றவராய் உள்ளவ ரென்றும், இயற்கையிற்றானே உள்ளவராய் விளங்குகின்றவரென்றும், இரண்டு படாத பூரண இன்பமானவ ரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள் களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங் களையும், மற்றை எல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்று வித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல், பக்குவம் வருவித்தல், விளக்கஞ் செய்வித்தல் என்னும் ஐந்தொழில்கள் முதலிய பெருங் கருணைத் தொழில்களை இயற்றுவிக்கின்றவரென்றும், எல்லாம் ஆனவ ரென்றும், ஒன்றும் அல்லாதவ ரென்றும், சர்வ காருண்ய ரென்றும், சர்வவல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வு இல்லாத் தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே, அகம் புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்தமெய்யறிவு என்னும் பூரணப் பொதுவெளியில், அறிவா ரறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை இவ்வுலகி னிடத்தே ஜீவர்களாகிய நாம் அறிந்து அன்புசெய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும் பலவேறு மதங்களி லும் பலவேறு மார்க்கங்களிலும் பலவேறு லக்ஷியங்களைக்கொண்டு, நெடுங்காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவு

மின்றி விரைந்து விரைந்து பல்வேறு ஆபத்துக்களினல் துன்பத்தி லழுந்தி இறந்து இறந்து வீண் போயினேம்; வீண்போகின்றேம்.

ஆதலால் இனிமேலும் ஜீவர்களாகிய நாம் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண்போகாமல் உண்மை அறிவு, உண்மைஅன்பு, உண்மைஇரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று, நற்செய்கை உடையவர்களாய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொதுநெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்பசித்திப் பெருவாழ்வில் பெருஞ் சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு - மேற் குறித்த உண்மைக்கடவுள் தாமே திருவுள்ளங்கொண்டு சுத்த சன் மார்க்கத்தின் முககிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் **ஞானசபையைச் சித்திவளாகம்** என்னும் இச்சந்நிதானத்திற் கடுத்த **உத்தரஞானசிதம்பரம்** அல்லது **ஞானசித்திபுரம்** என்று குறிக்கப் படுகின்ற **வடலூர் பார்வதிபுரத்தில்** தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து, "இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங் காலம் அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்தருளித் திருவிளையாடல் செய்தருள்கின்றும்" என்னும் திருக்குறிப்பை இவ் விடத்தே தாயினுஞ் சிறந்த பெருந்தயவுடைய நமது கருணையங் கடலாராகிய அருமைத் தந்தையார் **அருட்பிரகாச வள்ளலார்** முன் னிலையாகப் பலவாற்ருனும் பிரசித்தப்பட வெளிப்படுத்தி, அருட் பெருஞ்ஜோதி சொருபராய் அப்பெருங்கருணை வள்ளலாரது உடல் பொருள் ஆவிகளைக் கொண்டு **பொற்சபை சிற்சபைப்** பிரவேசஞ் செய்வித் தருளி, அரியஅவரது திருமேனியில் தாம் கனிவுறக் கலந் தருளிய எல்லாம்வல்லசித்தத் திருக்கோலங்கொண்டு, அருளரசாட்சித் திருமுடி பொறுத்து அருள் விளையாடல் செய்தருளு நிமித்தம், ஈரேழு பதினன்கு உலகங்களி லுள்ளவர்கள் யாவரும் ஒருங்கே, இஃது என்னை! இஃது என்னை! என்று அதிசயிக்கும்படி வெளிப்பட எழுந்தருளும் தருணம் அடுத்த அதிசமீபித்த தருணமாயிருத்தலினல் - அங்ஙனம் வெளிப்படுந் திருவரவுபற்றி எதிர்பார்த்தலாகிய விரதங் காத்தலில் நிற்கும் அல்லது நிற்கவேண்டிய நாம் எல்லவரும் மேற்குறித்த அசிந்திய அற்புதத் திருவரவு நேரிட்ட கணத்திற்றுனே, சுத்தசன்மார்க்க அரும் புருஷார்த்தங்களின் பெரும் பயன்களாகிய **எக்காலத்தும் நாசமடை யாத சுத்த அல்லது சுவர்ணதேகம், பிரணவ தேகம், ஞானதேகம் என்னும் சாகாக்கலானுபவ சொருப சித்தித் தேகங்களும்** தன் சுதந்தரத்தால் தத்துவங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப் பெரு வல்லபமும், கடவுள் ஒருவரே என்றறிகின்ற உண்மை ஞானமும், **கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி** முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட்பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்பசித்திப் பெரு

வாழ்வை அடைவதற்கான சுத்தசன்மார்க்கத் தனிப்பெரு நெறியைப் பற்றுவதற் குரிய உண்மை ஒழுக்கங்களில் நாமெல்லவரும் தனித்தனி ஒழுக வேண்டுவது அவசியமாகலில், அவ்வொழுக்கங்கள் இவை என உணரவேண்டுவது.

சன்மார்க்கப் பெருநெறியின் ஒழுக்கங்கள் **இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம்** என நான்கு வகைப்படும்.

அவற்றுள் **இந்திரிய ஒழுக்கம்** என்பது — நாத முதலிய ஸ்தோத்திரங்களை உற்றுக்கேட்டல், மற்றவை கேளாதிருத்தல், கொடுஞ்சொல் முதலியவை செவிபுகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின்மீது விருப்பமின்றியிருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் **ஞானேந்திரிய** ஒழுக்கமும்; இனிய வார்த்தையாடுதல், பொய் சொல்லாதிருத்தல், ஜீவஹிம்சை நேரிடுங்கால் எவ்விதத் தந்திரத்திலாவது தடைசெய்தல், பெரியோரிடத்திற் செல்லுதல் - என்றால் - சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல் உயிர்க்கு உபகரிக்க நிமித்தம் சஞ்சரித்தல், உயிர்க்கு உபகார நிமித்தம் கையால் உபகரித்தல், மலஜல பாதைகள் அளவு மீறாமலும் கிரமங் குறையாமலும் அளவைபோல் தந்திர ஔஷதிகளாலும் ஆகாரப் பக்குவத்தாலும் பவுதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் **கருமேந்திரிய** ஒழுக்கமும் ஆகும்.

கரண ஒழுக்கம் என்பது—சிற்சபையின்கண் மனதைச் செலுத்துவது தவிர மற்றெந்தவகை ஆபாசத்திலும் செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்துதல், பிறர் குற்றம் விசாரியாதிருத்தல், தன்னை மதியாதிருத்தல், செயற்கைக் குணங்களாலுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவ மயமாயிருத்தல், பிறர்மேற் கோபியாதிருத்தல், தனது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல், அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலியவாம்.

ஜீவ ஒழுக்கம் என்பது—எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு, முதலிய பேதமற்றுத் தானாக நிற்றல் முதலியவாம்.

ஆன்ம ஒழுக்கம் என்பது—எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிடத்து முள்ள ஆன்மாக்களிடத்து மிரங்கி, ஆன்மாவே சபையாகவும் அதனுள்ளொளியே பதியாகவும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலியவாம்.

இங்ஙனம் கூறிய ஒழுக்கங்களுள்ளே இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கம் என்னு மிவற்றை நாம் ஒவ்வொருவரும் உண்மை

யுணர்ச்சியுடன் மேற்கொண்டு ஒழுகவேண்டும்; **ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் என்னும் இரு வகையான அரிய ஒழுக்கங்கள் திருவருட் டுணை பெற்ற பின்னரன்றிக் கைகூடா.** ஆதலால், அவ்வொழுக்கங் களைப் பெற்று ஒழுகவேண்டுவதற்கும் ஆன நன்முயற்சிகளில் பழக வேண்டும். அன்றியும் —

இவ் வண்ணமான ஒழுக்கங்களில் இயன்ற மட்டில் ஒழுகப் பெற்று, இடந் தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப்பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப்பழகி இருத்தல் வேண்டும். அன்றியும் —

சைவம், வைணவம், சமணம், பவுத்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும் அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும் தெய்வங்களும் கதிகளும் தத்துவசித்தி விகற்ப பேதங்களென்றும், அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், புராணங்கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவசித்திக் கற்பனைக் கலைகளென்றும், வேதாந்தம் சித்தாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங் களும் சுத்த சன்மார்க் கானுபவ லேசசித்தி பேதங்க ளென்றும் கேள்விப்பட்டிருக்கின்றனம். ஆகலில், அத் திருவார்த்தைகளில் உண்மையான நம்பிக்கை கொண்டு, அவ்வவற்றின் உண்மைகளை உள்ளபடியே உணர்த்தப்பெற்று அவைகளின் அனுபவங்களை அடை தல் வேண்டுவதுபற்றி, அவ்வச் சமய மதாசாரங்களைச் சிறிதும் அனுட்டி யாது நிற்றலும், அவற்றில் சத்திய வுணர்ச்சி கொள்ளாமல் விடுதலும் வேண்டும். அன்றியும் —

உலகியற்கண் பொன் விஷய இச்சை, பெண் விஷய இச்சை, மண் விஷய இச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும் நமது அறிவை ஓர் அணுத்துணையும் பற்றுவிக்காமல், பொதுப்பட நல்லறிவு, கடவுள் பத்தி, உயிரிரக்கம், பொதுநோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களில் நின்று, உண்மையுரைத்தல், இன்சொல்லாடல் உயிர்க்குபகரித்தல் முதலியவாகக் குறித்த நற்செய்கைகளையும் உள்ள படி பெற்று, **சித்திவளாகம்** என்னும் இம்மஹா சந்நிதானத்திற்றனே தரிக்கப்பெறவும்; உலகமுகப்பட்ட பராக்கினல் விலகி ஏமாந்து விடாமலும்; நமது எல்லாம் வல்ல ஆண்டவனர் அற்புதத் திருவரவு குறிக்கும் வெளிப்படுகைக்கு எதிர்பார்க்கும் நிலையினராய், எல்லா அண்ட சராசரங்களையும் தமது தனித் திருவருட் செங்கோல் கொண்டு நடாத்துவித் தருளும் பேரருட் பெருங் கருணை வாய்ந்த தனிப்பெருந் தலைவனது அரிய திருவருகைச் சம்பந்தமான வழிபடுகை அல்லது

மங்கலம்புனைதல் முதலிய திருப்பணியினிடம் நமது கரணேந்திரியங்களை விடுத்துக் குதூகலத்துடன் விந்துவிளக்கம் நாதஒலி என்பவற்றால் புறக்கடையில் விலகப்படாமலும்; ஆண்டவனரது அருளற்புத ஞான சித்தத் திருமேனியின் மங்கலத் திருக்கோலத்தைக் கண்காட்சியாக உடல் குழைய உள்ளங்குளிர ஆனந்தக் கண்ணீர்கொண்டு பரவசத்துடன் தரிசிக்கப் பெறும் பெரும் புண்ணிய முடையவர்களாய் எதிர்பட வாய்க்கப்பெறவும் நின்றோமே யோனல்:

நாம் எல்லவரும் சுத்த சன்மார்க்கத்தினுக்கு உரிமையுடையவர்களாகி, அறிவுவந்தகால முதல் கண்டறியாத அற்புதக் காட்சிகளையும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும், அறிந்தறியாத அற்புத அறிவுகளையும், அடைந்தறியாத அற்புதக் குணங்களையும், செய்தறியாத அற்புதச் செயல்களையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும்—வெளிப்படத் தரிசிக்கும் அதே கணத்தி னுள்ளே—பெற்றுப் பெருங்களிப்புடன் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வு என்னும் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் வாழப் பெறுவோம்.

இது சத்தியம், இது சத்தியம், இது சத்தியம்.

இங்ஙனம் நமது ஆண்டவரால் விரித்து விவகரிக்கப்பட்ட மலையிலக்கான பொய்யாப் பெருமொழி யென்னும் கருணரசத்தின் வெள்ளப் பெருக்கத்தில் ததும்பி வழிந்த மந்திரத் திருவருண் மெய்ம்மொழிகளின் சுருக்கம்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

திருச்சிற்றம்பலம்

திருவருண்மெய்ம்மொழி முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

6. பேருபதேசம்

ஸ்ரீமுக வருஷம், ஐப்பசிமீ, எ௳, புதவாரம், பகல் அ மணிக்கு, மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதல் முதல் கொடி கட்டினவுடனே நடந்த விவகாரத்தின் குறிப்பு.

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் இனியும் வீண்காலம் கழித்துக்கொண் டிராதீர்கள். இது முதல் சாலைக்கு ஆண்டவர் போகிற—பத்துத் தினமாகிய கொஞ்சக் காலம்—வரையில், நீங்கள் எல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எது வென்றால்: நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய் வத்தினுடைய நிலை எப்படிப் பட்டது? என்று விசாரிக்க வேண்டியது. அதற்குத் தக்கபடி, நீங்கள் ஒருமித்தாவது, அல்லது தனித்தனியாக வாவது, உங்களறிவிற்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்களுடன் கூடியா வது, அல்லது—**வேலாயுத முதலியாரைக் கேட்டால் மனுஷ்யதரத் தில் போதுமான வரையில் சொல்லுவார்**—அவரிடம் அப்படிக் கேட் டாவது நல்ல விசாரணையி லிருங்கள். அல்லது, தனியாகவும் விசாரிக்க லாம். இவ்விசாரணை முகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்க மின்றி மூடிக்கொண்டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமா யிருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத்திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கினால், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப்போய்விடும். அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்டதென்றால், கருமைக்கு முதல் வர்ணமான பசுமையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்கவேண்டுமென ஸ்தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும்—இவ்வண்ணமாக, இருக்கின்றபோதும் படுக்கின்றபோதும் இடைவிடாது இவ்விசாரத்தோடு ஆண்டவர் நமக் குண்மை தெரிவிக்க வேண்டு மென்கின்ற முயற்சியுடனிருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்துகொள்ளலாம்.

அவ்விசாரம் பரம் அபரம் என்று இரண்டு வகையா யிருக்கின்றது இவற்றிற் பரம் பரலோக விசாரம், அபரம் இகலோக விசாரம். இவ் விரண்டில் இகலோக விசாரம் விசார மல்ல. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக்கின்றானே யென்றால், அவ்விசாரம் விசார மாகாது, உண்மை விசாரமு மல்ல, ஏனெனில்: விசார மென்கின்ற

தற்குப் பொருள்: வி-சாரம் என்பதில் வி சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது; அது மேலும் பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. ஜலத்தி லிருக்கின்ற பாசியை நீக்குவது போல், நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடி யிருக்கின்ற பச்சைத் திரையாகிய ராகாதிகளை விசார அதியுஷ்ணத்தா லல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்கமுடியாது. அந்த உஷ்ணம் யோகியி னுடைய அனுபவத்தில் தெரியும் அதை மனுஷ்ய தரத்தில் உண்டு பண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் தெய்வத்தை நினைக்கின்றதிலும் அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள் வனம் மலை முழை முதலிய வற்றிற்குப் போய், நூறு ஆயிரம் முதலிய வருஷகாலம் தவஞ் செய்து, இவ்உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்ளுகிறார்கள். இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்ளுகிறதைப் பார்க் கிலும், தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்ற திலும்—இதை விடக்—கோடிப் பங்கு, பத்துகோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக் கொள்ளலாம். எவ்வாறெனில்: ஒரு ஜாம நேரம், மனத்தில் இக விசார மின்றிப் பர விசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டாவது அல்லது ஸ்தோத்திரம் செய்து கொண்டாவ திருந்தால், நாம் பெற வேண்டி யதைப் பெற்றுக் கொள்ளலாம். ஆதலால், இவ்வுலகத்தில் வி-சார மென்கின்ற உண்மை தெரியாது, விசாரமென்று வழங்கி, அதைத் துக்க மென்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த்தம் பண்ணக் கூடாது. அவர்கள் பண்ணுகின்றது - துக்கமே விசாரமென்கின்றது-அது தப்பு; அவ்வர்த்தமு மன்று. சார மென்கின்றது துக்கம். விசார மென் கின்றது துக்க நிவர்த்தி. வி உபசர்க்கம். சாரமென்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது வி. ஆதலால், விசார மென்கின்றது முன் சொன்னபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆதலால் இடைவிடாது நாம் விசார வசத்தரா யிருக்கவேண்டியது. மேலும் வி-சார மென்பது: வி விபத்து; சாரம் நீக்குதல், நடத்தல். ஆதலால் இடைவிடாது நன் முயற்சியின்கண் பயிலுதல் வேண்டும்.

மேலும், சிலர் "இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக் கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்டவர் வந்தவுடனே பெற வேண்டியதை நாம் பெற்றுக்கொள்ளப்படாதோ?" என்று வினவலாம். ஆம், இஃது - தாம் வினவியது நலந்தான். ஆண் டவர் வரப்போகின்றது சத்தியந்தான். நம்மவர்களின் திரை நீங்கப் போகின்றதும் சத்தியந்தான். நீங்களெல்லவரும் பெற வேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகின்றதுஞ் சத்தியந்தான். ஆனால், முன் சொன்ன ராக சம்பந்தமான பச்சைத்திரை இரண்டு கூறாக இருக்கின்றது.

யாவெனில்: அசுத்தமாயாதிரை சுத்தமாயாதிரை யென்னும் இரண்டு மாம். இவை கீழ்ப்பாகத்திலொருகூறும் மேற்பாகத்திலொருகூறுமாக இருக்கும். கீழ்ப்பாகத்திலுள்ளது அசுத்தமாயாதிரை. மேற் பாகத்தில் சுத்தமாயாதிரை இருக்கும். இவற்றில் அசுத்தமாயாதிரை இகலோக போக லக்ஷிய முடையது. சுத்தமாயாதிரை பரலோக சாத்தியத்தை யுடையது. இவற்றில் - ஆண்டவர் வந்து அனுக்கிரகஞ் செய்கின்ற போது, முயற்சியில்லாத சாதாரண மனுஷ்யர்களுடைய கீழ்ப்பாகத்தி லிருக்கிற அசுத்தமாயை யென்னும் பச்சைத்திரையை மாத்திரம் நீக்கு வார். ஆதலால், அக்காலத்தில் நாம் அத்திரை நீங்கியவுடன் கூடிய வரையில் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்கலாமேயல்லது, பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகிறதற்குக் கூடாது. மேலும், பஞ்சகிருத்திய விபவங்களும் இதர சித்தி முதலியவையும் ஆன்மானுப வத்தையும் செய்யவும் பெறவும் கூடாது. பின்னும் நன்முயற்சி செய்தே மேலேற வேண்டும்.

மேலும், **இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல்** முதலியவை யும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால் நாம் எல்லவரும் இத்தருணம் இப்போதே விசேஷ நன்முயற்சியுடனே இருந்தால், ஆண்டவர் வருகிறபோது, நம் கீழ்ப் பாகத்திலுள்ள அசுத்தமாயாதிரையோடு கூடி மேற்பாகத்தி லிருக்கிற சுத்தமாயையினுடைய பச்சைத்திரையும் நீங்கிப்போய்விடும். கருமையிற் பச்சை வண்ணமுடையது அசுத்தமாயாதிரை. பொன் மையிற் பச்சை வண்ணமுடையது சுத்தமாயாதிரை. கருமையிற் பச்சை வண்ணமுடைய அசுத்தமாயாதிரை நீங்கினபிறகு, மற்ற எட்டுத் திரைகளும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். இத்திரை களின் விவரத்தைத் திருவருட்பெருஞ்ஜோதி அகவலில் கண்டுணர்க. மேலும், இது நீங்கினவுடனே ஒருவன் பஞ்சகிருத்திய முதலானவை யுஞ் செய்வான். ஆதலால், ஒவ்வொருவரும் முயற்சியுடனே இருந் தால், அதற்குத் தக்க லாபத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லக்ஷியம் வைத்துக்கொண்டிருந்த **வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம்.** ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறி யன்றித் தெய் வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்ன தென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனுந் தெரிவிக்காமல், பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்: கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்தியலோகாதிபதி யென்றும் பெயரிட்டு, இடம் வாகனம் ஆயுதம் வடிவம் ரூபம் முதலிய

வையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பதுபோல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். "தெய்வத்துக்குக் கை கால் முதலியன இருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது, அப்படியே கண்ணை மூடிக் கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்குப் பத்து வருஷம் எட்டு வருஷம் பிரயாசை எடுத்துக்கொண்டால், அற்ப சித்திகளையடையலாம். அதற்காக அவற்றில் லக்ஷியம் வைத்தால், ஆண்டவரிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிற லக்ஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய்விட்டால், நீங்கள் அடையப்போகிற பெரிய பிரயோஜனம் போய்விடும். அல்லது, அதில் முயற்சிசெய்து, அவ்வளவு காலம் உழைத்து, அந்த அற்பப்பிரயோஜனத்தைத் தெரிந்து கொண்டு, அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம் அடைந்தால், முக்கிய லாபம் போய்விடும். ஆகையால், அவைகளில் லக்ஷியம் வைக்காமல், ஆண்டவரிடத்திலேயே லக்ஷியம் வைக்கவேண்டியது. முன் சொன்ன ஏகதேச சித்தி கற்பனையென்கின்றது வாசகப் பெருவிண்ணப்பத்தாலும் இயல்வேதாகமங்கள் புராணங்கள் என்ற அருள்விளக்கமாலைப் பாசுரத்தாலு*முணர்க. மேலும் அதிற்கண்ட குறிப்பையுந் தெரிந்துகொள்ளுங்கள்.

இது போல் வியாகரணம், தொல்காப்பியம், பாணிநீயம் முதலியவைகளில் சொல்லி யிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறெனில்: தொண்ணூறு தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின் உண்மை நான்

---

* இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்
மயல்ஒருநூல் மாத்திரந்தான் சாலம்என அறிந்தார்
மகனேநீ நூலனைத்தும் சாலம்என அறிக
செயல்அனைத்தும் அருளொளியால் காண்கஎன எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயல்அறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

—திரு அருட்பா 4176

சொன்ன பிறகு தெரிந்து கொண்டீர்களல்லவா? இப்படியே ஒன்று இரண்டு முதல் நூறு முதலான இலக்கங்களுக்கும் உகர இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப் பெயராக இட்டிருக்கிறார்கள். தொல் - நூறு தொண்ணூறென்றும், தொல் – ஆயிரம் தொள்ளாயிரமென்றும் வழங்குகின்றன. தொல் என்பது ஒன்று குறையத் தொக்கது. தொன்மை தொல்லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிரமென்றும், ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால், சிறு குழந்தைகள் கூட அறிந்து கொள்ளும்.

இதுபோல், **சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம்.** அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேயன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனெனில், அவைகளிலும்—அவ்வச்சமய மதங்களிலும்—அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக்கூடுமேயல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும், **இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானே யிருக்கின்றேன்.** நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்லமுடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலருக்கும் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய்விட்டது. பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற—திருவருட்பாவில் அடங்கியிருக்கிற—ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், **அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.**

இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேலேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டு விட்டீர்களானால், என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக் கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கி

விட்டதென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது யாதெனில்; அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தாரென்று வாசகப் பெரு விண்ணப்பத்திலும், "எத்தேவரையும் நின் சாயையாய்ப் பார்த்ததே யன்றித் தலைவவேறெண்ணியதுண்டோ* என, "தேடியதுண்டு நினது ருவுண்மை" என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும் விண்ணப்பித் திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம்யாதெனில். "கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக"** என்றது தான். **என்னை யேறுநிலை மிசை யேற்றி விட்டது யாதெனில் தயவு.** தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது.

அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை இருந்தால் தான் தயவு வரும். தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். **இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது.** அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுட னிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப் படாத முரட்டுத்தனமாய் எப்படி யிருந்தாலும், அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்; மிரட்டிச் சொல்லுவேன்; தெண்டன் விழுந்து சொல்லுவேன்; அல்லது பொருளைக் கொடுத்து வசப் படுத்துவேன்; அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச் செய்து விடுவேன்.

---

* மாயையாற் கலங்கி வருந்திய போதும்
வள்ளல்உன் தன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால்
தலைவவே றெண்ணிய துண்டோ
தூயபொற் பாதம் அறியநான் அறியேன்
துயர் இனிச் சிறிதும்இங் காற்றேன்
நாயகா எனது மயக்கெலாம் தவிர்த்தே
நன்றருள் புரிவதுன் கடனே. — திருஅருட்பா 3635

** கருணையும் சிவமே பொருள்எனக் காணும்
காட்சியும் பெறுகமற் றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கறி வித்த
வண்ணமே பெற்றிருக் கின்றேன்
இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம்
எய்திய தென்செய்வேன் எந்தாய்
தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும்
சிறுநெறிப்பிடித்ததொன் றிலையே. — திருஅருட்பா 3503

நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும் இராத்திரிகூட "நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷணநேரம் இருக்க மாட்டார்களே என்று, என்று..." ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக்கொண்டேன். அது இங்கே இருக்கிற ஜனங்கள் மட்டில் மாத்திர மல்ல. உலகத்திலிருக்கிற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக் கொண்டேன். ஏன் அப்படி ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன் என்றால்: எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கையுண்மை யேகதேசங்க ளாதலாலும், நான் அங்ஙனம் **ஆன்ம நேய ஒருமைப்பாட் டுரிமை** வைத்துக்கொண் டிருக்கிறேன்.

இப்போது நீங்கள்—இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களா யிருந்தாலும்—சாலைக்குப் போகக் கொஞ்ச தின மிருக்கின்றது—அதற் குள்ளாக நீங்கள் நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடுகூட, மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ளவேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்துக்கு அப்படிச் செய்து கொண் டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ்வுலகத்தி லுள்ள எல்லா ஜீவர்களும் நன்மை யடையப் பிரார்த்தித்தும், ஆண்டவரிடத்தில் கேட்டுக்கொண்டும் வருகின்றேன். ஆதலால், நீங்கள் அப்படிச் செய்துகொண் டிருங்கள்.

சமயந் தவிர மதங்களில் உள்ள வேதாந்தி சித்தாந்தி யென்று பெயரிட்டுக்கொண்ட பெரியவர்களும் உண்மை யறியாது, சமயவாதிகளைப் போலவே ஒன்று கிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆதலால் நீங்கள் அஃது ஒன்றையும் நம்பவேண்டாம் எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்லவில்லை. "தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலே யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்!" என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்துகொள்ள வில்லை யென்றால்: ஒரு பதார்த்தத்தை அனுபவித்தா லல்லது அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை யுள்ளபடி அனுபவித்தா லல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வாராது. ஆதலால், தெய்வத்தைத் தெரிந்து கொள்ளவேண்டு மென்கிற முக்கிய லக்ஷியத்திலிருந்து கொண்டு விசாரஞ் செய்துகொண் டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால்: அண்டத்தில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் - இவைகள் எப்படிப்பட்டன? இவைகளி

னுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும், பிண்டத்தில் நாம் யார்? இத் தேகத்தின்கண் புருவம் கைம்மூலம் - இவைகளிலும் இவை போன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோன்றாதிருப்ப தென்ன? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அந் நகம் வளர்தலும்—இவைபோன்ற மற்றத் தத்துவங் களினது சொரூப ரூப சுபாவங்களும் என்ன வென்னும் பிண்ட விசாரமுஞ் செய்துகொண்டிருங்கள். இப்படி இடைவிடாது விசாரஞ் செய்துகொண் டிருந்தால், இவ்வுலகத்தின்கணுள்ள ஜனங்கள் அதைக் குறித்து ஏளனமாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர் களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை லக்ஷியம் செய்யக்கூடாது.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வர விடுத்தவர் - ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானல்—காதிலும் மூக்கி லும் அதற்கு வேண்டிய பொத்தல்க ளிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா" என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்க னிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத்தின்கண் அலக்ஷியம் தோன்றி னல், நிராசை உண்டாம், ஆதலால், சரியை முதலிய சாதகம் நான்கில், நான்காவது ஞானத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கில், மூன்ருவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனாகிய நிராசை யென்னும் படி உண்டாகின்றது. ஆகையினலே, இந்த விசாரத்திலிருந்துகொண் டிருங்கள்.

இவ் விசாரஞ் செய்துகொண்டிருந்தால், ஆண்டவர் வந்தவுடனே, கண்டமாக உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவிப்பார். மறுபடியும் உங்களுக்கு உரிமை வந்தவுடனே அகண்டமாகத் தெரிவிப் பார். ஆதலால் நீங்கள் இந்த முயற்சியிலிருங்கள். இரண்டரை வருஷமாக நான் சொல்லிக்கொண்டு வந்தேன். இனிச் சொல் பவர்கள் சில நாள் தடைப்பட்டிருப்பார்கள். இனி நீங்கள் இது வரைக்கும் இருந்ததுபோல் இராதீர்கள். இது கடைசி வார்த்தை. இது முதல் - கொஞ்ச காலம் - சாலைக்குப் போகின்ற வரைக்கும், ஜாக்கிரதையாக மேற்சொன்ன பிரகாரம் விசாரஞ் செய்துகொண் டிருங்கள்.

மேலும், சமய மதங்களில் தெய்வத்தினது உண்மையைக் குழூ உக்குறியால் குறித்து, அக்குறிப்பையும் வெளிப்படையாகக் காட்டாது சிவாயநம என்றும், நமசிவாய என்றும், இது போன்ற அனந்த

வர்ணங்களைச் சேர்த்து, ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஆறு எட்டு பத்து பதின்மூன்று பதினைந்து பதினாறு இருபத்துநான்கு முதலிய சங்கையில் மந்திரங்களாய் அமைத்து வழங்கி வருவிக்கவிட்டு நடந்து வருகின்றது. அவ்வவ் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும் ஆதலால்... நாம் அடைய வேண்டுவது முடிவான ஆன்மலாப மாகிய சிவானுபவமே யன்றி வேறில்லை. இங்குள்ள எல்லவர்க்கும் சுவர்க்க நரக விசாரமில்லை. சுவர்க்க நரக விசாரமுள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பலவகைச் சாதனங்களைச் செய்து அற்ப பிரயோஜனத்தைப் பெற்று, முடிவில் தடைப்பட்டுத் திருவருட்டுணையால் கருணை நன் முயற்சி யெடுத்துக்கொண்டு, பின் முடிவான சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அஃது அருமை.

இத் தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை —தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திர வாக்கியத்தை —எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித்தெழுந்த—உண்மையறிவனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய **ஆன்ம நேய உரிமைப்பாட் டுரிமையைப்** பற்றிக் குறிப்பித்தேன்; குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளை யிட்டது யாதெனில்: நமக்கு முன் சாதனம் கருணை யானதினாலே, ஆண்டவர் முதற்சாதனமாக

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்"* என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயாகாரிக ளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்தமாயாகாரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம். மேலும் இறந்தவர்

* தாயுமான சுவாமிகள்—கருணாகரக்கடவுள் -7.

கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால் இத்தருணம் **இக்காலமே சன்மார்க்கக் காலம்.**

இதற்குச் சாக்ஷியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக்கொண்டது. அக்கொடி இப்போதுதான் கட்டிக்கொண்டது. அக்கொடி உண்மையில் யாதெனில்: நமது நாபி முதல் புருவமத்தி ஈருக ஒரு நாடியிருக்கின்றது; அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம்; அச் சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது; இக்கொடி நம் அனுபவத்தின்கண் விளங்கும். இவ் அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்.

உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்துகொள்வாரில்லை. கொடி கட்டிக் கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்துகொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரியவொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார், தெரிவிக்கின்றார், தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது நான் சொல்லிவந்த பிரகாரம் ஜாக்கிரதையுடன் உண்மையறிவாய் விசாரம் செய்துகொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரணமான தயவிருக்க வேண்டியது. அந்தத் தயவு வருவதற்கு ஏதுவான உரிமையும் கூட இருக்கவேண்டும். இப்படி இருந்துகொண்டிருந்தால் ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மையையும் பெற்றுக் கொள்வீர்கள். **இது சத்தியம், சத்தியம், சத்தியம். இஃது ஆண்டவர் கட்டளை.**

எல்லோர்க்கும் தாய் தந்தை அண்ணன் தம்பி முதலான ஆப்தர்கள் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப் பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம். இது **ஆண்டவர் கட்டளை.**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

பேருபதேசம் முற்றிற்று.

திருமுகங்கள்

1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள்

2. புதுவை வேலு முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள்

3. மற்றைய அன்பர்களுக்கு வரைந்த திருமுகங்கள்

4. திருமுகக் குறிப்புகள்

1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள்

திருமுகம் 1

நட்பின் ஆர்வம்

உ

சிவமயம்

அருளறி வொழுக்க முதலிய சுபகுணங்களிற் சிறந்த சிரஞ்சீவி ரத்தின முதலியார்க்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் உண்டாவனவாக. தமது சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

மகா-ா-ா-ஸ்ரீ நாயக்கரவர்களுக்கு தற்காலமிருக்கின்ற தேக பக்குவத்தை தெரிந்து கொள்ளவேண்டு மென்கிற விசாரம் மிகவும் உடையவனாகவிருக்கின்றேன். நான் அவசியம் இரண்டு அல்லது நான்கு மாதத்திற்குள் அவ்விடம் வருவேன். அதை நாயக்கரவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அவசியம் வருவேன். தாங்களும் சாக்கிரதையோடிருக்கவேண்டும்.

சிரஞ்சீவி நமசிவாயப் பிள்ளை அவ்விடம் படிக்க வேண்டு மென்று வருகின்றான். அவனை படிப்பின் விஷயத்தில் மாத்திரம் அடிக்கடி விசாரிக்கவேண்டும். தங்களுடையவும் நாயக்கருடையவும் க்ஷேம சரித்திரங்களை விரைவில் தெரிந்துக்கொள்ளவேண்டும். மனம் அவலங் கொள்ளுகின்றது. ஆகலில் தெரிவிக்க வேண்டும்.

சிரஞ்சீவி சிரஞ்சீவி
இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்

இஃது
சிரஞ்சீவி இரத்தின முதலியா ரவர்களுக்கு
கொடுப்பது.

திருமுகம் 2

இல்வாழ்வான் இயல்பு

31 - 5 - 1858

உ

சிவமயம்

சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேலுண்டாவதாக. இந்தக் கடிதம் கொண்டுவருகிற சி. குமாரசாமி பிள்ளை படிக்க வேண்டுமென்று விரும்பியிருக்கிறபடியால், அவனுக்கு எந்த விதத்தில் படிப்பித்தால் படிப்பு வருமோ அந்த விதத்தில் படிப்பிக்கவேண்டும். சிரஞ்சீவி நமசிவாயத்துக்கும் இதுவே. இது விஷயத்தில் உனக்கு விரித்து எழுதுவதி லுனக்கு மனம் சலிக்கும் என்று இந்த மட்டில் நிறுத்தினேன். உன்னுடையவும் ௱-௱ திருவேங்கட முதலியார் முதலானவர்களுடையவுமான விபவ க்ஷேமங்களை தெரிவிக்கவேண்டும். மேலும் தெ. வீட்டுக்கார அம்மாளுக்கு என் வந்தனத்தைக் குறிப்பிக்கவேண்டும். மற்ற சங்கதிகளைப் பின்பு தெரிவிக்கிறேன். நானும் இன்னும் இரண்டு மாசத்தில் வருகிறேன். வேணும் சிரஞ்சீவி.

உ

சிவமயம்

சிரஞ்சீவி முருகப்பிள்ளை மாப்பிள்ளைக்கு சகலபாக்கியமும் புத்திர சம்பத்தும் தீர்க்காயுளும் மென்மேலுண்டாவதாக. சிரஞ்சீவி குமாரசாமி அவ்விடம் வருகிறபடியால் அவனுக்கு படிப்பும் முயற்சியும் ஊதியமும் உண்டாகின்ற வகை எவ்வகை - அவ்வகை ஆராய்ந்து கூட்ட வேண்டும். இதுவன்றி உனக்கு முக்கியம் தெரிவிக்க வேண்டுவது ஒன்று என்னென்றால் - பழமை பாராட்டலும் கண்ணோட்டம் செய்தலும் சுற்றந் தழுவலும் அவசியம் சமுசாரிக்கு வேண்டும் என்பது நீ மாத்திரம் அடிக்கடி கவனிக்க வேண்டும். நீ இப்போது முன் மாப்பிள்ளையல்ல, புதுமாப்பிள்ளை. எம்போல்வார் மேல் ஞாபகமிராது ஆதலால் ஞாபகப்படுத்தினேன். நானும் சில மாதத்தில் வருகிறேன், வேணும் சிரஞ்சீவி.

காளயுக்தி — இங்ஙனம்
வையாசி கூ௯உ — சி. இராமலிங்கம்

இது
சென்னை சி — வி. இரத்தின முதலியாருக்கு
விடுக்கப்பட்டது.

திருமுகம் 3

பஞ்சாக்கர உபதேசம்

உ

சிவமயம்

இது ரகசியம்

அன்பு அறிவு இரக்கம் ஒழுக்க முதலிய நற்குணங்களாற் சிறந்து நமது கண்மணிபோல் விளங்குகின்ற அன்புள்ள தங்களுக்கு சிவ பெருமான் திருவருளால் சிவஞானமும் தீர்க்காயுளும் சிந்தித மனோரத சித்தியும் மேன்மேல் உண்டாவதாக. நாளது வரையில் இவ்விடத்தில் ம-ா-ா-ஸ்ரீ நாயக்கரவர்களும் யானும் க்ஷேமம். தங்களுடைய க்ஷேம விபவங்களை அடிக்கடி தெரிவிக்கவேண்டும். எனக்கு எழுதிய கடிதம் இரண்டும் வரக்கண்டு அறிந்தேன். அந்தக் கடிதங்களில் குறித்தபடி இதன் அடியில் சில சிவசந்நிதான சாட்சியாகத் தெரிவிக்கிறேன்.

பிர்ம விஷ்ணு ருத்திராதிகளுடைய பதங்களும் அந்தக் கர்த்தாக்களும் அவர்களால் சிருட்டி திதி சங்காரம் செய்யப்பட்டு வருகிற தேகாதி பிரபஞ்சங்களும் அனித்தியம் - ஆகலில் - நித்தியமாகியும் என்றும் ஒரு தன்மை யுள்ளதாகியும் சச்சிதானந்த வடிவமாகியும் அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய **சிவமே நமக்குப் பொருள்.** அன்றியும், தாய் தந்தை குரு தெய்வம் சிநேகர் உறவினர் முதலியவர்களும் மேற்குறித்த சிவத்தின் திருவருளேயல்லது வேறில்லை. நாம் பல சனனங்களையுந் தப்பி மேலான இந்த மனிதப் பிறவி யெடுத்தது சிவத்தின் திருவருளைப் பெறுவதற்கே. எவ்வகைப் பிரயாசத்திலாவது அந்த அருளை அடையவேண்டும். அந்த அருள் எவ்வகையால் வருமென்றால் - எல்லா வுயிர்களிடத்திலும் தயவும் பிரபஞ்சத்தில் வெறுப்பும் சிவத்தினிடத்தில் அன்பும் மாறாது நம்மிடத்திருந்தால் அவ்வருள் நம்மை யடையும். நாமும் அதனை யடைந்து எதிரற்ற சுகத்தி லிருப்போம். இது சத்தியம் இனி மேற்குறித்த சாதனத்தை நாம் பெறுவதற்கு சிவபஞ்சாக்ஷரத் தியானமே முக்கிய காரணமாக இருக்கிறது. ஆகலில், இடைவிடாது நல்ல மனத்தோடு அதனை தியானிக்கவேண்டும். அதனை யிதனடியில் குறிக்கின்றேன்.

- ஓம் சிவாயநம -

"நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்".[1]

---

1. நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.
- திருவாசகம் 553

" சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க் கபாய மொருநாளு மில்லை " [2]

" நான் செய்த புண்ணியம் யாதோ சிவாயநம வெனவே ஊன் செய்த நாவைக்கொண் டோதப்பெற்றேன்." [3]

இதனைக் கண்டு தியானித்து வந்தால் பின்பு எல்லாம் விளங்கும்.

தை மீ எஉ. சி. இராமலிங்கம்

இதை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டப்படாது

இது

சிரஞ்சீவி மகா-ா-ா-ஸ்ரீ இரத்தின முதலியார்
அவர்களுக்கு கொடுப்பது.
சிவானுக்கிரகம் விளங்க.

திருமுகம் 4

அருள் அறம்

27 - 5 - 1860

உ

சிவமயம்

சிரஞ்சீவி நமது ரத்நமுதலியாருக்கு சிவ கடாக்ஷத்தினால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக. தாம் எழுதிய கடிதம் வரக்கண்டு அதிலுள்ளவைகளை அறிந்துகொண்டேன். பரம சிவத்தினிடத்தே மாறாது மனத்தை வைத்துக்கொண்டு புறத்தே ஆயிரம் பெண்களை விவாகஞ் செய்துக் கொள்ளலாம். அன்றியும், விவாகஞ் செய்துக் கொண்டாலும் அதனால் வருத்தப்பட நம்மை சிவ பெருமான் செய்விக்க மாட்டார். ஆதலால் சந்தோஷமாக விவாகத்துக்குச் சம்மதிக்கலாம். தாம் தடை செய்ய வேண்டாம். எந்தக் காலத்தில் - எந்த இடத்தில் - எந்த விதமாக - எந்த மட்டில் - எதை அனுபவிக்க வேண்டுமோ அதை அந்தக் காலம் - அந்த இடம் - அந்த

---

2 சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாதவெல்லாம்
விதியே மதியாய் விடும். - நல்வழி 15 (ஔவையார்)

3. நான்செய்த புண்ணியம் யாதோ சிவாய நமவெனவே
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்பவரார்
வான்செய்த நான்முகத் தோனும் திருநெடு மாலுமற்றைத்
தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே.
- திருஅருட்பா 2260

விதம் - அந்த மட்டு - பொருந்தப் பொசிப்பிக்கின்றது திருவருட் சத்தியா யிருந்தால், நமக்கென்ன சுதந்தர மிருக்கின்றது. எல்லாம் திருவருட்சத்தி காரியமென்று அதைத் தியானித்திருக்க வேண்டும். உண்மை இது. இதைக்கொண்டு தெளிந்திருக்கவேண்டும்.

சிரஞ்சீவி சுந்தரப்பிள்ளை தமக்குக் கொடுக்கவேண்டிய ரூ. ய-ம் இன்னம் இரண்டு மூன்று மாசத்தில் கொடுப்பார். அவ்வளவு காலமும் சகித்திருந்து வாங்கிக்கொள்ளவேண்டும்.

தாம் சிவத்தியானத்தை விடாது, செய்யவேண்டிய காரியங்களைச் செய்து வரவேண்டும். வாழ்க வாழ்க.

சிதம்பரம் இராமலிங்கம்

ரவுத்திரி ஞு வையாசி மீ யசு உ

இ:ஃது

மகா-ா-ா-ஸ்ரீ இரத்ந முதலியார் அவர்களுக்கு.

திருமுகம் 5

இறை எண்ணம் எஞ்சாத உலகியல்

உ

சிவமயம்

சிரஞ்சீவி ரத்ன முதலியாரவர்களுக்கு நடராஜானுக்கிரகத்தால் சிவக்கியானமும் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக. தங்கள் மணக்கோலத்தை காணக் கொடுத்து வைய்யாதவனாகிருந்தாலும் கேட்டு மகிழும்படி பெற்றேன். தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி தெரிவிக்க வேண்டும். தாங்கள் சிவசிந்தனையை விடாமல் சர்வ சாக்கிரதையோடு லௌகீகத்தை நடத்தி வரவேண்டும் அசலார் யாராவது இவ்விடம் வருகின்றவர்களிடத்தில் ஒன்று அல்லது இரண்டு லாங்கிளாத்து பீசு வாங்கி அனுப்பினால் அதன் கிரயத்தை பின்பு செலுத்திவிடலாம். இதற்கு பிரயாசம் வேண்டாம்.

இதற்குள் வைத்த கடிதங்களில் ஒன்று ம-ா-ா-ஸ்ரீ சூரி செட்டியார் சோமு செட்டியார் வசம் கொடுக்கவேண்டும். தாங்களே போய்க் கொடுக்கவேண்டும். கேட்டால் மனிதர் மூலியமாக வந்ததாகச் சொல்ல வேண்டும். மற்றொன்று நாயக்கர்வாள் தாயார் இருக்கிற ராணிப் பேட்டைக்கு தபால் மூலமாக அனுப்பவேண்டும். நான் இன்னும் சில நாள் பொறுத்து வருகிறேன். வேணும்.

இது ரகசியம்

இங்ஙனம்

ஆடி மீ யசு உ சி. ராமலிங்கம்.

ஆறுமுகப் பிள்ளை அத்தான் கடிதம் — கிஷ்ணப்ப நாய்க்கன் அக்கிராரம் ராமாஞ்சு கட்டடத் தெருவு கீழண்டை வாடை செல்லப்ப முதலியார் கடிதம் சேர்க்கவேண்டும்.

இஃது
நல்லண்ண முதலியார் தெருவு சுப்பராய பிள்ளை
வீட்டுக் கெதிர்வீடு மஹாராஜஸ்ரீ
ரத்தன முதலியாரவர்களுக்கு

திருமுகம் 6

ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம்

௳

சிவமயம்

சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு அம்பலவாணர் அனுக்கிரகத்தினல் தீர்க்காயுளுஞ் சிவக்கியானமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாவதாக. தமது சுப விபவங்களும், ௱-௱ திருவேங்கட முதலியார் முதலியவர்களது சுப சரித்திரங்களும் அடிக்கடி கேட்க விரும்புகிறேன். இங்ஙனம் யானும் ௱—௱ நாயக்கரவர்களும் க்ஷேமம். தாம் முன்னர் எழுதிய கடிதமும் பின்னர் எழுதிய கடிதமும் அதன் பின்னர் பங்கியில் வரவிடுத்த வத்திரமும் அது அது வரத்தக்க காலங்களில் வரக் கண்டுகொண்டேன். வருத்தம் பாராது வரவிடுத்த ஒரு பீசும் ஒன்பது லக்ஷம் பீசுகளாகக் கொண்டேன். இதுவே அமையும். இனி வருத்தம் எடுத்துக்கொள்ள வேண்டாம். பின்பு பார்த்துக் கொள்ளலாம். இதுவன்றி என் பொருட்டு வேறு வகைகளாலும் பிரயாச மெடுத்துக் கொள்ளவேண்டாம். தாமாத்திரம் க்ஷேமமாக சிவானுக்கிரகத்தால் சுலிப்பற நெடுங்காலம் வாழ்வுற நான் கண்டு களிப்பதே எனக்குப் போதுமான திர்ப்த்தி. இது உண்மை உண்மை. நான் சிலகாலஞ் சென்று அவ்விடம் வருவதற்கு எண்ணங் கொண்டிருக்கிறேன். ஆனல் எமது ஆண்டவன் திருவுள்ளம் எவ்வண்ணமோ தெரிந்ததில்லை. ஆயினும், நான் அங்ஙனம் வருவதற்குள் தாம் இங்ஙனம் வருவதற்குக் கூடுமான கால நேரிடின் தாம் வரவும் நான் காணவும் ஆவலுள்ளவனகவே இருக்கின்றேன். கூடுமான கால நேராவிடில் வரவேண்டுவதில்லை. நான் வந்து காண்கிறேன். அன்றி தாம் சாக்கிரதையாக தமது தேகத்தை உபசரித்து வரவேண்டும். வரவுக்குத் தக்க செலவு செய்ய வேண்டும். இனி விசேடமான அலுவல் நேரிடுகிற பரியந்தம் இப்பொழுது நேரிட்டிருக்கின்ற அலுவலைப் பார்த்து வரவேண்டும். என் எண்ணத்தின்படி ஆண்டவன் விரைவில் தமக்கு விசேஷ சவுக்கியத்தை யுண்டுபண்ணுவார் என்கிற நம்பிக்கையை யுடையவனக

இருக்கிறேன். தாம் இடைவிடாது பரமசிவமே பொருளெனக் கொண்டுப் பஞ்சாக்கரத்தையே சிந்தித்து வரவேண்டும். நான் ா-ா சோமு செட்டியார்க்குக் கடிதம் எழுதவே மாட்டேன். அவர் கலியாணத்துக்கு எனக்கொரு கடிதம் எழுதினர். அதற்குப் பதிலாகவும், அவர் அன்பை சோதிக்கும் பொருட்டாகவுமே எழுதி தம்மாற் கண்டு கொண்டது. இவரைப்போல் ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம். நமக்கு இவர்களெல்லாம் ஒரு திரணமாகத் தோற்றுகின்றார்கள். இவர்கள் லக்ஷியம் வேண்டுவதில்லை. நாம் சிவபெருமான் திருவடிகளுக்கு அடிமையானோம். நமக்கு ஒருவிதத்தாலுங் குறைவில்லை. இது உண்மை. சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சி. ராமலிங்கம்.

இஃது
சென்னப் பட்டணம் பெத்து நாய்க்கன்பேட்
டை ஏழுகிணற்றண்டை வீராசாமிப் பிள்ளை
தெருவில் ந.அ-வது கதவு நெம்பர் வீட்டில்
ம-ா-ாஸ்ரீ முதலியார் இரத்தின முதலியா
ரவர்களுக்கு சேர்ப்பிக்கவேண்டும்.

திருமுகம் 7

சாதுக்கள் சார்பு

உ

சிவமயம்

நற்குணங்களிற் சிறந்து சிவானுபவ விருப்பத்திற் சித்தத்தை வைத்து நமது கண்மணிபோல் விளங்கிய சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு தீர்க்காயுளும் சிவக்கியானமும் சகல சம்பத்தும் மேல் மேல் உண்டாவன வாக.

தமது சுப சரித்திர விபவங்களையும் ா-ா-திருவேங்கட முதலியார் முதலாகியவர்களது விபவங்களையும் கேட்க விருப்ப முள்ளவனாகி யிருக்கிறேன்.

செய்யுள்

உய்வ தாமிது நங்குரு வாணையொன் றுரைப்பேன்
சைவ மாதிசித் தாந்தத்து மறைமுடித் தலத்தும்
நைவ தின்றியாங் கதுவது வாயது நமது
தெய்வ மாகிய சிவபரம் பொருளெனத் தெளிவீர்.

இங்ஙனம் சிவபரம்பொருளை அனுபவித்தற்கு முக்கியம் ஜீவ காருண்யம், பாசவைராகம், சிவபத்தி. இவை கிடைத்தற்குமுதற் கருவி சாதுக்கள் சார்வு. ஆகலின் அவசியம் சாதுக்கள் சார்புவேண்டும். நல்லது, சாதுக்கள் சார்பு, தற்காலத்திற் கிடைப்பினுங் கிடையா

விடினும் நம்மை எழுபிறப்பென்னும் பெருங்கடலைக் கடப்பித்துப் பேரின்பமென்னும் கரையிலேற்றும் சைவப் பதியிற்றெய்வப் புணையாக வாய்த்த திருமந்திரமாகிய பஞ்சாக்கரத்தை இடைவிடாது சிந்தித்துக் கொண்டும் சிவபிரான் திருவடிகளைப் பாவித்துக்கொண்டும் வருவது முக்கியத்தினு முக்கியம். ஆகலில் நமக்கு இது அவசியம் பற்ற வேண்டிய காரியம். மற்றவைகளைக் குறித்து அறிவறிகத் தமது நன் மனத்திற்கு நான் விரிக்க வேண்டுவதில்லை.

இனி - திரவிய விஷயத்தில் என்னைக் குறித்து விசேஷ முயற்சி யெடுத்துக் கொள்ள வேண்டாம்.

... ...
... ...
... ...
... ...

அனுப்பும்படி நேரிட்டால் ரிஜிஸ்டர் செய்து அனுப்ப வேண்டும். நான் அவசியம் பங்குனி மாதத்திற்குள் வந்து சேருவேன். தாம் தேக முதலியவற்றை, பக்குவமாகத் திருவருள் சகாயத்தால் காத்தல் வேண்டும். இங்ஙன ௱-௱- நாயக்கர்வாள் க்ஷேமம். அவர்கள் தாயாரிடத்திலிருந்து ஏதாவது கடிதம் வரில் இங்கே அனுப்ப வேண்டும். வேணும் சிரஞ்சீவி.

சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது
சென்னப்பட்டணம் பெத்து நாயக்கன் பேட்டை ஏழு
கிணற்றண்டை வீராசாமிப் பிள்ளை தெருவில்
௱-௱ சுப்பராயபிள்ளையவர்கள் வீட்டுக்கு
எதிர்வீடு ம-௱-௱-ஸ்ரீ முதலியார்
இரத்தின முதலியார் அவர்களுக்கு சேர்வது.*

திருமுகம் 8

அபேத நேயம்

16 - 9 - 1860

உ

சிவமயம்

அன்பு அறிவு முதலிய நற்குணங்களிற் சிறந்து சிவநேசத்தான் மேம்பட் டெமது கண்மணி போன்று விளங்கிய சிரஞ்சீவி ரத்தின முதலியாருக்கு சிவக்கியானமும் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன் மேல் உண்டாவதாக.

---

* இது கூடலூரில் தபாலில் சேர்க்கபபெற்ற தேதி 3 - 9 - 1860

அவ்விடத்திய சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தாம் ரிஜிஸ்டர் செய்வித்து அனுப்பிய கடிதமும் அதற்குள் அடங்கிய இருபத்தைந்து ரூபாய் நோட்டும் தாமசப் படாமல் வந்து சேரப் பெற்றுக்கொண்டேன். இது விஷயத்தில் தமக்கு விசேஷம் பிரயாசம் நேரிடச் செய்கிறேன். ஆயினும் அந்தப் பிரயாசம் சிவ கடாக்ஷத்தால் நேரிட்டதாகலின் பின்பு தமக்கும் எனக்கும் தடைபடாத நிம்மதியையும் சத்துவ சந்தோடத்தையும் உண்டுபண்ணுமென்கிற நிச்சயத்தினல் நானது தெரிவிக்க நேரிட்டது. ஆனல் இது குறித்து விசேஷ முயற்சியும் பிரயாசமும் தமக்கு நேரிடுமே என்ன செய்வது என்கிற விசாரமும் ஒரு பக்கம் உடையவனகவே யிருக்கிறேன். இனி வேறு வகையாற் பலவாக விரிப்பதென்ன. நானே தாமாகவும் தாமே நானகவும் பழமை தொட்டு வந்த அபேத நேயத்தை எண்ணி, மற்ற இடங்களில் கனவிலும் லக்ஷியஞ் செய்து குறிக்கப்படாத குறிப்பை தம்மிடத்தே குறித்தேன். இது எம்பெருமானுக்கும் சம்மதமாக விருக்கும். ஆகலில் தமக்கும் சம்மதமாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். இவை தாம் வாங்குகிற இடமும் வாங்குகிற வகையும் அதற்கு எல்லையிட்டுக்கொண்ட வண்ணமும் மற்றவைகளையும் தெரிவிக்கவேண்டும். இவ்விடத்தில் ம-ா-ா-ஸ்ரீ நாயக்கர் அவர்களும் யானும் மற்றவர்களும் க்ஷேமம்.

இங்ஙனம்
சிதம்பரம்
புரட்டாசி மீ உ. இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன் பேட்டை ஏழு
கிணற்றுக்கு அடுத்த கீழண்டை வீராசாமிப் பிள்ளைத்
தெருவில் ா-ா சுப்பராயப்பிள்ளையவர் வீட்டுக்கு
எதிர்வீட்டில் இருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ரத்தன
முதலியாரவர்களுக்குக் கொடுப்பது
சரூர் சரூர்.

திருமுகம் 9

அமைதி இன்மை

உ

சிவமயம்

அன்பு அறிவு தயவு முதலிய நற்குணங்களிற் சிறந்து எனது கண்மணி போன்று எனது இதயத்திருக்கும் சிரஞ்சீவி ரத்ந முதலியார்க்கு சிவக்கியானமுந் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக.

தாம் அனுப்பிய கடிதமும் பங்கியில் அனுப்பிய புத்தகங்களும் வந்து சேர்ந்தது. சேர்ந்தவென்று தெரிவிப்பதற்கு அமைதியின்மையில் கால நீட்டித்தது. ஆதலின் அது குறித்து வேறு நினைக்க வேண்டா.

இவ்விடம் வருவதற்கு எவ்விதத்தாலும் தடையில்லா திருந்தால் வரல் வேண்டும். அன்றி அலுவலால் – காலத்தால் – இடத்தால் - வேறு வகையால் சிறிது சிறிது தடை நேரினும் தாம் இங்கு வரல் வேண்டா. யான் அவசியம் தை மாசி அல்லது பங்குனி இவைக்குள் அங்கு ஓர் காரியம் பற்றி வருவதாக நிச்சயித்திருக்கின்றேன். ஆகலில் தடையுண்டாயின் வருதல் தவிர்க. இன்றாயின் வருக. இங்ஙனம் யானும் ம – ா – ா நாயக்கரவர்களு மற்றவர்களும் க்ஷேமம். தமது சுப சரித்திரங்களும் ம – ா – ா திருவேங்கட முதலியார் சுப சரித்திரங்களும் அடிக்கடி வெளிப்படுத்துக.

வேணும் சிரஞ்சீவி.

சிதம்பரம்
இராமலிங்கம்

கார்த்திகை மீ
உ௰௬

இஃது

சிரஞ்சீவி நமது இரத்ந முதலியார் அவர்கட்கு.

திருமுகம் 10

நிர்ப்பந்த ஏற்பாடு

30 - 12 - 1860

உ

சிவமயம்

நற்குணங்க ளெல்லாவற்றிற்கும் இடனாகிய நன்மனக் கருவியொடு எனது இதயத் திடைவிடாது இருக்கின்ற சிரஞ்சீவி இரத்திந முதலியாரவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவஞானமும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாவதாக.

நாளது வரையில் இவ்விடத்தில் யானும் ா - ா நாயக்கரவர்களும் க்ஷேமம். தமது சுபசரித்திரங்களை கேட்க ஆசையுள்ளவனாகி விருக்கின்றேன். எனக்கும் நாயக்கரவர்களுக்கும் தபால் மார்க்கமாகத் தாம் அனுப்பிய கடிதங்கள் வந்து சேர்ந்து சங்கதிகளை தெரிந்து கொண்டேன்.

நான் சென்னபட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளது வரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுதும் எழுதி வைக்க வேண்டு மென்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால் அப்படி அப்படி சிதறிக் கிடக்கின்றன. ஆயினும் அவைகளைச் சேர்ப்பிக்க

சுமார் இரண்டு மாதம் பிடிக்கும். ஆகலால் நான் பங்குனிமீ அவசியம் வருகிறேன். வரும்போது கொண்டு வருகிறேன். இது உண்மை. எவ்விதமாவது உ மாதத்திற்குள் தமது இடத்தில் இருக்கச் செய்கிறேன். குமாரசாமி பிள்ளை சண்முகப் பிள்ளை ரெட்டியார் இவாள் இடங்களில் தற்காலம் இருக்கின்ற பாடல்கள் சுமார் ருய - க்கு உட்பட்டதாகவே இருக்கும். வெளிப்பட்ட பாடல்கள் பலபல. ஆகலால் மன்னிக்க வேண்டும்.

அன்புள்ள என் கண்மணிபோன்ற தாம் இனி இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்ய - பிரார்த்திக்கிறேன். அதாவது இந்தப் பாடல்கள் பங்கியில் அனுப்பி என்னிடஞ் சேர்கின்ற பரியந்தம் நான் ஒருவேளை போசனந்தான் செய்வேன் என்று எழுதியதைப் பார்த்த பின்பு நான் சாப்பிடுகிற சாதம் உடம்பில் பொருந்தவில்லை. பட்டினி கிடந்தவனைப் போல இருக்கிறேன். ஆகலால் என்னை நிம்மதியுள்ளவனுக்க எண்ணங் கொண்டு ஒரு வேளை போசனங் கொள்ளுகிற நிபந்தனை நீக்கி உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லது நான் சலிப்பைத் தவிரேன். ஒருவேளை போசனம் உள்ளவனாகவே இருப்பேன். இது சத்தியம். என் மேல் ஆணை. தாம் மேற்குறித்த நிற்பந்த ஏற்பாட்டைத் தவிர்த்து உடனே யெனக்குத் தெரியப் படுத்த வேண்டும். உ மாதத்திற்கு பின்பு பாடல்கள் அவசியம் சேரும்.

மார்கழி மீ ௰அ உ — சிதம்பரம் இராமலிங்கம்

இஃது

சென்னபட்டணம் பெத்து நாய்க்கன்பேட்டை
ஏழு கிணத்துக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத்
தெருவில் கலக்டர் கச்சேரி ா-ா சுப்பராயப்
பிள்ளை யவர்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் ா-ா
ரத்தின முதலியார் அவர்களுக்கு வருவது.

திருமுகம் 11

தற்காலத்தில் சிதம்பரம்

20 - 3 - 1861

உ

சிவமயம்

அன்பறி வொழுக்கத்தாற் சிறந்து நமது கண்கள் போன்று விளங்கிய சிரஞ்சீவி ரத்ன முதலியார்க்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் சிவக்கியானமும் மேன்மேல் உண்டாவனவாக.

இங்கு ம-ா-ா நாயக்கரவர்களும் யானும் க்ஷேமம். அங்கு தமது சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

தாம் மாசி மீ உய்ச உ வரைந்து விடுத்த கடிதம் பங்குனி மீ உ உ காணப்பட்டது. அக் கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பரத்தில் வசிப்பது சம்மதமானாலும் இதுவிஷயத்தில் வசிப்பது சம்மதமின்று. ஏனெனில் சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் இஸ்கூல் கிரம மல்லாததாகத் தற்காலத்தில் காணப்படுகிறது. அன்றியும் அவ்வலுவல் இராஜாங்க சம்பந்த அலுவலாக விருந்தால் நன்றாக விருக்கும். அவ்வா றின்றி ஒருமையில்லாத சில இந்துக்கள் சம்பந்தமானதாக விருக் கின்றது. **சிதம்பரம் தற்காலத்தில்** நமது உயிர்த் துணைவராகிய நடராஜப் பெருமானைப் பற்றி நாம் போவதற்கும் இரண்டொரு தினம் இருப்பதற்கும் தக்கதே யன்றி வேறொரு வகையாலுந் தக்கதாகத் தோன்றவில்லை. ஆயின் அது கலிகால வண்ணம். ஆகலின் இதனடி யில் எழுதுஞ் சில வரிகளிற் குறித்த வண்ணத்தை முழுதும் நம்ப வேண்டும். அதாவது நான் இந்த மாசக் கடையிலாவது சித்திரை மாச முதலிடை கடையிலாவது அவ்விடம் வருவேன். வந்த பின்பு என் கருத்தை வெளிப்படுத்துகிறேன். எந்த விதத்தாலும் தாம் என் சமீபத்தி லிருக்கவேண்டு மென்றே இரவும் பகலும் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். என் பிரார்த்தனைப் பிரகாரம் இன்னுஞ் சில காலத்துள் கூட்டுவிப்பார். இதற்குச் சந்தேக மிராது. ஆதலின் அங்கு நான் வருமளவும் சகித்திருக்க வேண்டும். சிவ பஞ்சாக்கரத்தை சதா கருத்தில் வைத்துக் கொண்டே காரியங்களை நடத்த வேண்டும். எவ்வகையிலும் என் தேகம் இருந்தால் சமீபத்திலிருக்கும்படி சிவானுக் கிரகத்தால் செய்துக்கொள்ளுவேன். தாம் இது குறித்து சலனப்பட வேண்டாம். தேக முதலான கருவிகளைப் பக்குவமாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும். மேற் குறித்தபடி வருகிறேன். **விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல்** இவைகளை அங்கிருந்து இங்கு வந்திருந்து பிரயாணப்பட்டங்கு வருகின்ற பெரிய தமக்கையார் வசத் தில் சுமார் ஒரு மாதமாயிற்று, கொடுத்தனுப்பினேன். அவாள் மத்தி யில் கருங்களவால் கையில் மெய்யில் உள்ளவைக ளெல்லாம் இழந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அவாள் இன்னு மத்தியில் பந்துக் களிடமாக இருக்கின்றார்கள் போலக் காணுகின்றது. ஆகலின் அவர் கள் அவ்விடம் வந்தவுடன் மேற்படி புத்தகங்களைச் சேர்ப்பிப்பதும் அல்லாததும் உடனே அவசியம் எனக்குத் தெரியப்படுத்தவேண்டும். மற்ற சங்கதிகளெல்லாம் நான் அவ்விடம் வந்த பின்பு பேசிக்கொள்ள லாம். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

பங்குனி மீ கூ உ. இங்ஙனம்

சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன்பேட்டை
ஏழுகிணற்றுக்குக் கீழண்டை வீராசாமிப்பிள்ளை
வீதியில் ம-ா- சுப்பராயப் பிள்ளை யவர்கள்
வீட்டுக்கு எதிர் வீட்டில் ம-ா-ஸ்ரீ இரத்தின
முதலியார் அவர்களுக்கு.
ஜரூர் ஜரூர்.

திருமுகம் 12

பாலும் நீரும் போலும் பார்ப்பன சினேகம்

7 - 5 - 1861

உ

என் மனத்தில் இடைவிடாது விளங்குகின்ற குணமணியாகிய சீரஞ்சீவி ரத்தன முதலியாருக்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சிவக்கியானமுஞ் சகல சம்பத்தும் மென்மேல் உண்டாவதாக. தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்ப முள்ளவனாக விருக்கிறேன். நான் வையாசி மாசம் ௩௰ உ திக்குள்ளே அவ்விடம் வருவேன். அவசியம் தியாகராஜப் பெருமானையும் உன்னையும் காண வேண்டும் என்கிற விருப்பம் விசேஷ முள்ளவனாக விருக்கிறேன். ஆதலால் வருவது நிச்சயம் நிச்சயம். இது அன்றி பகவத் பத்தியிற் சிறந்தவராகிய வரதாசாரிய சுவாமிகள் திருவையிந்திரபுரத்துக்கு வந்ததாகக் கேள்விப்பட்டேன். அந்த சுவாமிகளைச் சென்னபட்டணத்தில் தாம் கண்டால் ஒன்று சொல்லவேண்டுவது.

அதென்ன வெனில்

பாலு நீரும்* போலும் பார்ப்பன சிநேகம்

என்று நான் தெரிவித்ததாகத் தெரிவிக்கவேண்டும்.

வேணும் சிரஞ்சீவி.

சித்திரை மீ
உ௰எ உ

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

---

* பேயும் அஞ்சுறும் பேதை யார்களைப்
பேணும் இப்பெரும் பேய னேற்கொரு
தாயும் அப்பனும் தமரும் நட்பும்ஆய்த்
தண் அருட்கடல் தந்த வள்ளலே

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை ஏழுகிணற்றண்டை வீராசாமிப் பிள்ளை தெருவு, கலக்டர் கச்சேரி சுப்பராயப் பிள்ளை அவர்கள் வீட்டிற்கு எதிர்வீடு ம-ா-ா-ஸ்ரீ முதலியார் ரத்தன முதலியார் அவர்கட்கு

திருமுகம் 13

அருந்தல் பொருந்தல் அளவு

10 - 6 - 1861

உ

சிவமயம்

அன்பு அறிவு தயவு சிவநேய முதலிய நற்குணங்களிற் சிறந்து என்னிரு கண்மணி போன்றென் னிதயத் திருக்கும் சிரஞ்சீவி சிரஞ்சீவி ரத்தன முதலியாரவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவக்கியானமும் சௌக்கிய தேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாவனவாக. தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன்.

தாம் வைகாசி மீ ௰௯ உயில் வரைந்துவிடுத்த கடிதம் ஷெ மீ ௩௰ ஆந்தேதியில் என்னிடம் வரப்பெற்றேன். அவ்வளவு காலம் கடிதம் தாமசப் பட்டதற்குக் காரணம் கடிதம் மேல் விலாசத்தில் கூடலூர் ஜில்லா தபால் ரயிட்டர் என்று குறித்திருந்தது பற்றி. ஆகலின் இனி வரைந்தனுப்பும்போது பரங்கிப்பேட்டை தபால் ரயிட்டர் பார்வை

நீயும் நானும்ஓர் பாலும் நீருமாய்
நிற்க வேண்டினேன் நீதி ஆகுமோ
சாயும் வன்பவம் தன்னை நீக்கிடும்
சாமி யேதிருத் தணிகை நாதனே.

மாலின் வாழ்க்கையின் மயங்கி நின்பதம்
மறந்து ழன்றிடும் வஞ்ச நெஞ்சினேன்
பாலின் நீர்என நின்அ டிக்கணே
பற்றி வாழ்ந்திடப் பண்ணு வாய்கொலோ
சேலின் வாட்கணார் தீய மாயையில்
தியங்கி நின்றிடச் செய்கு வாய்கொலோ
சால நின்உளம் தான்எவ் வண்ணமோ
சாற்றி டாய்திருத் தணிகை நாதனே.

- திருஅருட்பா 138 ; 140.

யிட்டு புவனகிரியைச் சார்ந்த கருங்குழி என்று வரையவும். அன்றி, கூடலூர் ஜில்லா தபால் ரயிட்டர் மேல்விலாசம் பார்வையிட்டு ஷ துக்குடியைச் சார்ந்த கருங்குழியிலிருக்கும் என்ருவது வரையவும். இவ்விருவகையுமில்லாமல் கூட்லூர் ஜில்லா தபால் ரயிட்டர் மேல் விலாசம் பார்வையிட்டு புவனகிரியைச் சார்ந்த கருங்குழி என்று வரைந்தால் நாட் செல்வதுமன்றி தபால் கூலியும் இரட்டிக்கும். இது அறிக. இனி,

தாம் தம்முடைய தேகத்தை சாக்கிரதையாக உபசரித்து வர வேண்டும். **சாக்கிரதை என்பது அருந்தல் பொருந்தல்களில் மித போசனம் மிதபோகம்.** மித போஜனமாவது - கோபம் - விராகம்- அலக்ஷியம் – முயற்சி – விரைவு – இவை முதலிய ஏதுக்களால் குறைத் தல் - விருந்து சுவைவிருப்ப, முதலிய ஏதுக்களால் ஏற்றல் இல்லாமல் சமமாகப் பொசித்தலாம். மித போகமாவது அதிபரிச்சயம் அதிஞாபக முதலிய ஏதுக்களால் இரவு பகல் தோற்ருது பொருந்தல். விராகம் அலக்ஷிய முதலிய ஏதுக்களால் பொருந்தா திருத்தல். இவை இரண்டு மின்றி மாதத் திரண்டுவிசை மாதரைப்புல்குவது என்றபடி பொருந்த லாம். ஆகலின் இவ்வாறு நடத்தவேண்டும். இனி மருந்து கொள்ளும் போது நெய் நல்லதாகக்கொண்டு சாப்பிடவேண்டும். பாலும் அவ் வாறே. நான் தம்முடைய தேகத்திற்கு விசேஷம் திடம் உண்டாகத் தக்க அவுஷதங்கொண்டு வருவேன். அது பரியந்தம் முன் குறித்தபடி சாக்கிரதையாக இருக்கவேண்டும். நமக்கு எவ்விதத்தாலும் சிவ பெருமான் திருவடியும் சிவபஞ்சாட்சரியும் அன்றி வேறு சகாயில்லே. ஆகலில் அவைகளை இடைவிடாது சிந்திக்கவேண்டும். ம-ா-ா நாயக்க ரவர்களுடைய சம்மதமும் இது. வேணும்.

சிரஞ்சீவி.

வையாசி மீ
நடுவ

சிதம்பரம் * இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை
ஏழு கிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத்
தெருவு கலக்டர் கச்சேரி ா-ா சுப்பராயப் பிள்ளை

---

* கையொப்பமிட்டிருக்கக் கூடிய இடம் வழிபாட்டிற்காகக் கத்தரித்து எடுக்கப்பட்டிருக்கிறது. கையெழுத்தைத் தனியாகக் கத்தரித்து எடுத்துத் தாயத்துக்குள் வைத்து அணிந்து கொண்டனர் என்றும் கேள்வி.

அவர்கள் வீட்டிற்கு எதிர்வீடு ம-ா-ா-ஸ்ரீ
இரத்தின முதலியார் அவர்கட்கு
சுரூர் சுரூர் சுரூர்.

திருமுகம் 14

சிவபஞ்சாக்ஷரத் தியானம்

5 - 9 - 1861

உ
சிவமயம்

அன்பு அறிவு தயவு முதலிய சுபகுணங்களைப் பூண்டு எமது கருத்தினுங் கண்ணினும் உவந்து உலாவுகின்ற சி. இரத்ந முதலியார் அவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவக்கியானமும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக.

தமது சுப சரித்திர விடயங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். தாம் இவ்விடம் விட்டுப் பிரயாணப் பட்ட நாள் தொடங்கி நாளது வரையில் தமது சுபசரித்திர வண்ணம் இவ்வண்ணமென்று விசேஷம் தெரிந்து கொள்ளாதவனாக விருக்கிறேன். ஆதலால் அதை தெரிவிக்கவேண்டும். நான் புரட்டாசிமீ அவ்விடம் பிரயாணப்பட்டு வருவதாக ஓர் காரியம் பற்றி நிச்சயித்திருந்தேன். அந்த நிச்சயத்துக்கு ஓர் தடை நேரிட்டது. என்னெனில் நான் புசித்து வருகின்ற கிரகத்தில் யோக்கியராகவும் தலைவராகவும் இருந்த ரெட்டியார் நாளது மீ உ௰உ பதவி யடைந்தார். ஆதலால் உடனே வருவது ஓர் வகை நிந்தைக் கிடமாக இருக்கின்றது. அதனால் மார்கழி மீ பிரயாணப் படுவதாக எண்ணுகின்றேன். எம்பெருமான் எண்ணம் எப்படியோ தெரிந்ததில்லை. இவ்விடத்தில் மழையில்லாமல் அதிக வெப்பமாக இருக்கின்றது. அவ்விடத்திலெப்படி யிருக்கின்றதோ தெரிந்ததில்லை. தாம் சிவபஞ்சாக்ஷர தியான பரராகி சதா சந்தோஷ சகிதராக இருக்க வேண்டுவதே என் வேண்டுகோளாக விருக்கின்றது. தேக முதலிய கருவிகளைத் தக்க வண்ண நடத்தி வர வேண்டுகிறேன். ா-ா திரு வேங்கட முதலியார் முதலானவர்களுக்கும் வந்தனம் குறிப்பிக்க வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி. இங்கு ா-ா நாயக்காவர்கள் க்ஷேமம்.

துன்மதி ஸ்ரீ
ஆவணி மீ
உ௰உ உ

சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது
சென்னபட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை
ஏழு கிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளை
தெருவு கலக்டர் கச்சேரி ஶ்ரீ-ஶ்ரீ சுப்பராயப்
பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு ஶ்ரீ-ஶ்ரீ-ஸ்ரீ இரத்தந
முதலியா ரவர்களுக்கு
இருந்துவருமிடம் கருங்குழி.

திருமுகம் 15

வரையாது வரைதல்

உ
சிவமயம்

அற்புத குணாகரமாகி யெம்முள்ளத் தமர்ந்த சிரஞ்சீவி ரத்ந முதலியார்க்கு தீர்க்காயுளும் சிவஞானமும் சகல சம்பத்து மேன் மேல் உண்டாவனவாக. அவ்விடத்திய சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விருப்பமுள்ளவனாக விருக்கிறேன். இதனடியில் வரைகின்ற சில வரிகளின் கருத்து மனத்தைச் சலிப்பிக்கு மென் றுணர்ச்சி தோற்றினும் வரையாது வரைகின்றேன்.

ம-ஶ்ரீ-ஶ்ரீ-ஸ்ரீ நாயக்கரவர்கள் தங்கள் தாயார் பரமபத மடைந்து விட்டதாகத் தபாலில் கடிதம் வரக்கண்டு அதனிமித்தம் ஆண்டு அடைகின்றனர். முன்போல் பிரயாசம் எடுத்துக்கொண்டு இருபது ரூபாய் கடன் வாங்கத்தக்க இடத்தில் வாங்கிக் கொடுத்தால் நான் அவ்விடம் வந்தபின் அவ்விடத்துத் தமக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் நேரிட்டிருக்கிற நிர்ப்பந்தங்களை யெல்லாம் திருவருட்டுணையால் நிவர்த்தி செய்யக்கூடும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

நான் இன்னும் சிலநாளில் அவசியம் அவ்விடம் வருவேன். ம-ஶ்ரீ-ஶ்ரீ-ஸ்ரீ திருவேங்கட முதலியார் முதலானவர்களுக்கு வந்தனம்.

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

தை மீ
உயஅ உ

இஃது
ம-ஶ்ரீ-ஶ்ரீ-ஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார்
அவர்கட்கு.

திருமுகம் 16

தனித்துறைதல்

உ

சிவமயம்

அன்பு அறிவு ஒழுக்கங்கண் முதலிய சுப குணங்களிற் சிறந்த தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் மேன்மேலுண்டாவனவாக. புண்ணியப் பயனுற் பெற்ற தேகத்தை கூடிய வரையில் சாக்கிரதையோடு பக்குவ மார்க்கத்தில் நடத்த வேண்டும். நான் பங்குனி மாசக் கடையில் அவ்விடம் வருகிறேன். இதன்றியும் இந்தக் கடிதம் கொண்டு வருகிற அம்மாளுக்குத் தாங்கள் கடன் வாங்குகிற இடத்தில் இரண்டு வராகன் கடன் வாங்கிக் கொடுக்க வேண்டும். தங்களுக்கு இப்படிப்பட்ட விடயத்தில் நேரிடுகிற சல்லியங்களை கடவுள் விரைவில் நிவர்த்தி செய்விப்பார். இது நிச்சயம். தற்காலம் நான் வேரூர் நிமித்தம் தனித்து கூடலூரைச் சார்ந்த நெல்லிக்குப்பம் கரும்பாலையாடுந் தோட்டத்தி லிருக்கிறேன். இந்தக் கடிதம் கொண்டு வருகின்றவர்கள் இவ்விடத்தில் வந்து தேக மெலிவைக் காட்டியபடியால் — இதே சமயத்தில் இவ்விடத்தில் எனக்கு வழக்கமாகக் கடன் கொடுக்கிறவர்கள் சமீபத்திலில்லை. இவர்கள் தேக பக்குவ நிமித்தம் அவ்விடம் போவதாகக் குறித்தபடி தங்களுக்கு இந்தப் பிரயாசம் வைத்தேன். மற்ற சங்கதிகளை நான் அவ்விடம் வந்தபோது தெரிந்து கொள்ளலாம்.

மாசி மீ
௰௫ உ.

சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது
சென்னையில் மஹாராஜஸ்ரீ இரத்தின
முதலியாரவர்கள் சமுகத்திற்கு

திருமுகம் 17

பலஇடங்களில் உறைதல்

15 - 7 - 1862

உ

சிவமயம்

அன்பு அறிவு முதலிய நல்லொழுக்கத்திற் சிறந்து என்னுயிரை யொத்து உள்ளத்திலிருந்த சிரஞ்சீவி ரத்ந முதலியார்க்கு சிவ கடாக்ஷத்தினுல் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக.

அவ்விடத்திய சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன்.

தமது கருத்தின் வண்ணம் முடிதல் வேண்டுமென்றி யானுந் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன். அன்றி வேறென் செயக் கடவேன். அன்றி, தமதிதயம் சிவபெருமான் திருவடிக்கண்ணே யன்றிப் பிறவொன்றினும் பொருந்தா திருத்தல் வேண்டு மென்றும் பிரார்த்திக்கின்றேன். தாம் உலகியற்கண் ஒழுகுங்கால் கழிநடை யொருவன் கட்பார்வை போன்றொழுகல் வேண்டு மென்றும் பிரார்த்திக்கின்றேன். அன்றி உணவுறக்க முதலியவற்றா லுடம்பை மெல்லென நடத்தல் வேண்டும். இஃதென் வேண்டுகோள்.

இனி ம-ா-ா-ஸ்ரீ நாயக்கரவர்கள் ம-ா-ா-ஸ்ரீ வேலு முதலியாரிடமாக இருப்பதாக அவரது கடிதத்தா லறிந்தேன். தமதிடத்திருப்பதாகச் சிலர் சொல்லா லறிந்தேன்.

அவரெங்கு இருப்பினும் அவர்க்குத் தாம் அறிவிப்பது — நான் சென்னபட்டணம் அவசியம் வரவேண்டும். ஆதலின் நான் அவ்விடம் வருவதற்கு எவ்வளவு காலம் பிடித்தாலும் அதுபரியந்தமும் பட்டணத்தில் தானே இருக்கவேண்டும். நான் வந்த பின்பு உடன் கூடிக்கொண்டு ஆண்டவன் திருவுள்ளப்படி சஞ்சரிக்கலாம். இதனைத் தெரிவிக்க வேண்டும். தற்காலத்தில் யான் வசிக்குமிடம் இதுவென்று குறிப்பதற்குக் கூடாத பலவிடங்களாக இருத்தலில் இருக்குமிடம் இதுவென்று குறிக்கவில்லை. மன்னிக்கவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி சிரஞ்சீவி.

இராமலிங்கம்.

ஆடி மீ ௨ உ

இஃது
சென்னபட்டணம் பெத்து நாயக்கன்பேட்டை
ஏழுகிணற்றுத் தெருவுக்கு அடுத்த கீழண்டை
வீராசாமிப்பிள்ளை தெருவு கலக்டர் கச்சேரி
சுப்பராயப் பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு
ம-ா-ா-ஸ்ரீ இரத்தின
முதலியாரவர்கட்கு.

திருமுகம் 18

கூடலூரில் உறைதல்

உ

சிவமயம்

அன்பு அறிவு செறிவு கல்வி கேள்வி முதலியவற்றினிறைந்து சிவபெருமான் திருவடி நேயத்திற் சிறந்து என்னன்பிற் கியைந்து விளங்

கிய சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு சிவ கடாக்ஷத்தால் சிவக் கியானமும் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேலுண்டாவதாக.

தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். நான் ஆடி மீ ரு உ புறப்பட்டு கூடலூர்க்குப் போய் ஐப்பசி மீ ௧௪ உ கருங்குழிக்கு மீட்டும் வந்தேன். வரினும் இன்னும் இருபது தினத்தில் வடமேற்கே ஓர் ஊர்க்குப் போய் அங்கிருந்து திருவொற்றியூர்க்கு வருவதாக நிச்சயித்திருக்கிறேன். நான் வடமேற்கே போகக் கருதிய ஊர்க்குப் போய் அவ்விடத்தே முடிக்க வேண்டிய காரியத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து புறப்படுவதற்கு சுமார் ௩ மாசம் பிடிக்கும் போல் தோற்றுகிறது. ஆகலால், தாம் தேக முதலிய கருவிகளை செவ்வனிறுத்தி நடத்தவேண்டுமென்று எழுதுவது தவிர வேறொன்றும் எழுதுவது அவசியமாகத் தோற்றவில்லை நமது சிவபெருமான் திருவடிகளையும் சிவ பஞ்சாக்ஷரியையும் இடைவிடாமல் தியானஞ் செய்து வர வேண்டுமென்பது ஒன்றே முக்கியம் என்று தமது குறிப்பிற் காணப்பட்டது ஆகலிற் குறித்தேனில்லை. சாக்கிரதையோடு இருக்கவேண்டும். ஶ்ரீ-ஶ்ரீ திருவேங்கிட முதலியார் முதலானவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்க வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சிதம்பரம்
ஐப்பசி மீ ௨௰௩ உ. இராமலிங்கம்.

இஃது
சென்னபட்டணம் ஏழுகிணற்றுக்கடுத்த வீரா
சாமி முதலியார் வீதி மஹாராஜராஜஸ்ரீ முத
லியார் இரத்தின முதலியார் அவர்கள்
திவ்ய சமுகத்திற்கு.

திருமுகம் 19

நிர்ப்பந்த நிவர்த்தி

உ

சிவமயம்

சுப குணங்களிற் றலைமை பெற்றுயர்ந்து எமது கண்மணி போன்று விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிந்தித மனோரத சித்தியு மேன்மேலும் உண்டாவனவாக. இவ்விடத்தில் நாளது பங்குனி மீ ௨௰௭ உ புதவாரம் இரவில் நான் பொசிக்கின்ற கிரகத்தில் தற்காலம் எசமானனாக விருந்த ராமகிருஷ்ண ரெட்டியா ரென்பவர் வானுலகு அடைந்தார். அவர் சம்மதப்படி அவர் தேகம் சமாதியில் வைக்கப்பட்டது. இந்த சங்கதி தாங்கள் அறிய வேண்டுவது. அன்றியும், நமது நாயக்கரவர்களுக்கும் சுந்தரம்மாளுக்கும் தெரியப்படுத்த வேண்டும். அன்றியும், நமது வேலு முதலியார் அவர்களுக்கும்

நேரிட்டபோது தெரியப்படுத்த வேண்டும். இதுவன்றியும் சுந்தரம்மாளுக்கும் அத்தானுக்கும் நமது நாயக்கருக்கும் நமது வேலு முதலியாருக்கும் தாங்கள் அவசியம் அறிவிக்கவேண்டுவது ஒன்று. அதாவது சித்திரை வைகாசி இவ்விரண்டு மாதமும் போக ஆனிமீ இருபது தேதிக்குமேல் என் தேகம் இருந்தால் அவசியம் சென்னபட்டணம் வருவேன். இது தவறாது. ஆகலில் அதுபரியந்தம் மனம் பொறுத்திருக்கவேண்டு மென்றும் இவர்களுள் சுந்தரம்மாள் அத்தான் இவர்களுக்கு முக்கியம் தெரிவிக்க வேண்டுவது ஒன்று, என்னெனில் மேற்குறித்த ஆனி இருபது தேதி பரியந்தம் பட்டபாட்டை பட்டுக்கொண்டு இருந்தால் அதன்பின் அவர்களுக்கு எந்த எந்த விஷயத்தில் நிற்பந்தங்களோ அவைகளை யெல்லாம் நிவர்த்தி செய்து பிரயாசம் தோன்றாதபடி செய்விக்கலாம் என்று உறுதியாகச் சொல்ல வேண்டும். நமது நாயக்கரவர்களுக்கு சொல்லவேண்டுவது தேகத்தைப் பக்குவமாக அதிக முயற்சியால் வருந்தாமல் நடத்தவேண்டு மென்றும், ஆனி இருபது தேதிக்குமேல் தாங்கள் சமீபத்தில் இருக்கப் பெறலாம் என்றும் சொல்லவேண்டும் நமது வேலு முதலியார் அவர்களுக்கு தற்காலம் தேகம் எந்த பக்குவத்திலிருக்கின்றதோ வென்கிற ஐயுறவோடிருக்கின்றே னென்று சொல்ல வேண்டும். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிரதையாக வைத்திருக்கவேண்டும். அவசியம் தமக்கைக்கும் ஷையார்க்கும் கடிதத்தின் வண்ணம் தெரிவிப்பது மன்றி பதில் எழுதவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

இங்ஙனம்
சி. இராமலிங்கம்.

இஃது
சென்னபட்டினம் பெத்து நாயக்கன்பேட்டை
ஏழுகிணற்றுத் தெருவுக்குக் கீழ் பக்கம்
வீராசாமிப்பிள்ளை வீதியில் கலக்டர் கச்சேரி
ா-ா சுப்பராய பிள்ளை வீட்டுக்குஎதிர்வீட்டில்
ம-ா-ா-ஸ்ரீ இரத்தின முதலியார்
அவர்களுக்கு.

திருமுகம் 20

உளத்தின் புடைபெயர்ச்சி

உ

சிவமயம்

சற்குண சிரோமணியாகி நமது கண்மணி போன்று விளங்கிய சிரஞ்சீவி இரத்ந முதலியார்அவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்துஞ் சிவஞானமு மேன்மே லுண்டாவனவாக,

சி. தருமலிங்கப் பிள்ளையின் வசத்திலனுப்புவித்த கழல்க ளிரிரண்டும் பூணப்பெற்றனம்.

சுமார் பதினைந்து தினத்திற்குமுன் யாம் விடுத்த கடிதம் அங்ஙனம் வரப்பெற்றதும் பெருததும் புலப்பட்டேமின்று. புலப்படுதற்கு அவாவுகின்றும்.

இனி ஈராண்டு பலவகைக் கருவிகளால் பதப்படுத்தி யேழைகள் பலர்க்கும் உபயோகிக்கும் பொருட்டு நம்மாட்டிருந்த ஓர் பேருமுப்பு—ஓர் அசாக்கிரதையால் தன்மை கெடப்பெற்றது. இங்ஙனம் பெறினும் நம் பெருமான் றிருவுளக் குறிப்பு அங்ஙன மிருந்ததென்று கருதி அமைதி பெற்றுமாயினும், பிணிகளாற் பிணிப்புண்ட ஏழைகளைக் கருதும்போதெல்லாம் ஒரு சிறிது உளம் புடைபெயர்கின்றும். ஆகவின் அப் புடைபெயர்ச்சியை இன்னும் இரண்டு மூன்று திங்களி னீக்கப் பெற்று ஆண்டு அவசியம் வருவேம். யாம் வருமளவும் தேக முதலிய கருவிகளைக் கடைக்கணித்து வருக. சிவபிரான் றிருவடித்துணை யன்றி வேறு துணை நமக்கு இன்மையின் அவற்றை இடைவிடாது நினைக. வாழ்க வாழ்க. சிரஞ்சீவி. சிவபெருமான் திருவருட்டுணை மேன்மேலுண்டாக. *

திருமுகம் 21

ஆரவாரப் பிரயாணம்

19 - 5 - 1864

உ

சிவமயம்

கல்வியிற் கேள்வியிற் கடலினுஞ் சிறந்து
அன்பறி வொழுக்கம் அமைந்தென் னிரண்டு
கண்போன் றென்பாற் கனிவுகொண் டமர்ந்த
குணரத் தினநீ குடும்பத் துடனே
தீர்க்க ஆயுளும் செல்வப் பெருக்கும்
நோயற்ற வாழ்வும் நுவலரும் கீர்த்தியும்
சிவந்திகழ் ஞானமும் சித்தியும் பெற்று
வாழ்க வாழ்க மகிழ்ந்தருட் டுணையால்
வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் வரவிடுத்த கடிதத்தை கண்ணுற்றுக் களித்

---

* கையொப்பம், தேதி, முகவரி எழுதப்பெற்ற இடங்கள் கிழிந்துவிட்டன.

தேன். அந்தக் கடிதத்தில் தாங்கள் குறித்தபடி இன்னுஞ் சிலகாலத்துக்குள் திருவருள் கூட்டுவிக்கும். இது உண்மை. சந்தேகிக்க வேண்டாம்.

தங்களுக்குப் புத்திரப் பேறு உண்டாயிற்றென்று கேள்விப்பட்டு அளவு கடந்த சந்தோஷத்தை யடைந்தேன். குழந்தையை நன்றாகப் பாராட்டி ... சகல விஷயத்திலுஞ் சாக்கிரதையா இருக்க வேண்டும். நான் சுமார் அறுபது தினத்துக்குள் அவ்விடம் வருகிறேன். அல்லது பத்து தினம் அதிகப்பட்டாலும் அவசியம் வருவேன். நமது அன்பராகிய மகா-ா-ா ஸ்ரீ வேலு முதலியார் ... தற்கு ஆனிமாசம் பிரயாணப் படுவதாக எழுதியிருக்கிறார்கள். அவர்கள் வந்தால் என் பிரயாணம் எல்லவர்க்கும் வெளிப்படும். வெளிப்பட்டால் அநேகர் என்னுடன் கூடிவர பிரயாணப்படுவார்கள். ஆரவாரப் பிரயாணமாக முடியும். ஆகவில் தாங்களும் அவர்களுக்கு இது விஷயத்தில் தெரிவிக்க வேண்டும். நான் மாத்திரம் ரகசியமாக வரும்படி நிச்சயித்திருக்கிறேன். அவசியம் வருவேன். தங்கள் மாமனர் மகா-ா-ா ஸ்ரீ திருவேங்கட முதலியாரவர்களுக்கு ... அவர்கள் எழுதின கடிதங்களுக்குப் பதில் நான் அவ்விடம் வந்த பின்பு தெரிவிப்பதாக சொலல் வேண்டும். நமது நாயக்கரவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்கவேண்டும். வாழ்க.

இங்ஙனம்

வைகாசி அ உ சி. இராமலிங்கம்.

இஃது

சென்ன பட்டணம் ராயல் ஓட்டல் மகா ா-ா வேலு முதலியா ரவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் தங்கள் இஷ்டராகிய ரத்தின முதலியார் அவர்களிடம் சேர்ப்பிக்கப் பிரார்த்திக்கிறேன்.

திருமுகம் 22

அரிபிரமாதிகளுக்கும் உள்ள காரியம்

உ

சிவமயம்

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற்
கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறந்தவரை
எழுப்புகின்ற வுறுவ னேனும்

கருவாளை யுறவிரங்கா துயிருடம்பைக்
கடிந்துண்ணும் கருத்த னேலெங்
குருவாளை யெமதுசிவக் கொழுந்தாளை
ஞானியெனக் கூறெ ணுதே. —வாழ்க.

சிரஞ்சீவி

அன்பு அறிவு முதலிய சுபகுணங்களிற் சிறந்த தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகலசம்பத்தும் மேன்மேல் உண்டாவனவாக. அவ்விடம் இன்னுஞ் சில தினத்தில் அவசியம் நான் வருவேன். வந்த பின்பு தங்கள் வருத்த மெல்லாம் சிவபெருமான் திருவருளால் நிவர்த்தியாய் விசேஷ சௌக்கிய நேரிடும் என்று துணிந்திருங்கள். ஈ-ஈ திருவேங்கட முதலியார் காலஞ் சென்றதைக் குறித்து விசாரப் படுகின்றேன். ஆயினும் அது அரிபிரமாதிகளுக்கும் உள்ள காரியம். ஆதலால் புதிதல்ல வென்று துணிந்தேன். சிவபஞ்சாக்ஷர தியானத் தோடு சாக்கிரதையாக இருங்கள். அஞ்சவேண்டாம். சிரஞ்சீவி.

இங்ஙனம்
சி. இராமலிங்கம்.

மனைவி புத்திரர் முதலானவர்களது க்ஷேமங்களை தெரிவிக்க வேண்டும். தேகத்தை பக்குவமாகப் பாராட்டி வரவேண்டும்.

இஃது
சிரஞ்சீவி இரத்தன முதலியாரவர்கள் சமுகத்திற்கு.
வாழ்க வாழ்க.

திருமுகம் 23

சிவாயநம என்பார்க்கு அபாயம் இல்லை

20 - 9 - 1864

உ

அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்கள் வாய்ந்து நம்மிடத்து உள்ளன்பு வைத்த சிரஞ்சீவி இரத்தின முதலியார்க்கு சிவகடாக்ஷத்தினல் தீர்க்காயுளும் திடதேகமும் சகல சம்பத்து மேன் மேலுண்டாவனவாக.

தங்கள் சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தங்களுக்கு இருமலால் தேகம் அபக்குவமாக விருக்கிறதாகத் தபாலில் எனக்குத் தெரிவித்தார். அவர் தெரிவித்தது தொடங்கி என் நினைப் பெல்லாம் தங்களிடமாகவே யிருக்கிறது. நித்திரை பிடிக்கிறதுமில்லை. நான் தொடங்கிய காரியங்கள் ஒன்றும் நடக்கிறதுமில்லை, மனம்

ஆலை பாய்ந்துக் கொண்டே யிருக்கிறது. உடனே புறப்படுவேன். இவ்விடத்தில் ஒரு பெரிய தடை நேரிட்டிருக்கின்றது. அது இன்னும் பதினைந்து தினத்தில் விடும். அதற்கு மேல் பிரயாணப்படுகிறேன். எவ்விதத்தினும் ஐப்பசி மாசம் ய௨௨யில் பிரயாணப் பட்டு வருகிறேன். தாங்கள் நமது சாமி அவர்களைக் கொண்டு உபசாந்தி செய்துக்கொண்டு அதிக உழப்பெடுத்துக் கொள்ளாமல் சாக்கிரதையாக வரவேண்டும். கடினமான அவுஷதங்களைக் கொள்ள வேண்டாம்.

முசுமுசுக்கை சமூலங் கொண்டு வந்து பசும்பாலி லூற வைத்து உலர்த்தி இடித்துச் சூரணமாக வைத்துக்கொண்டு நித்தியம் காலையில் தேயிலைத் தண்ணீர் காய்ச்சி சாப்பிடுவது போல சலத்தில் போட்டு சுண்ட வைத்து பசும்பால் சர்க்கரை மிளகுப்பொடி கலந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு வரவேண்டும். இதை சாமிகளுக்குத் தெரிவித்து அவரைக் கொண்டு செய்வித்து சாப்பிட்டுக் கொண்டு வர வேண்டும். உத்தியோகம் தடையாயிருந்தால் அதை விடுத்து தேகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். தேகம் பக்குவமான பின்பு சிவானுக்கிரகத்தால் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம். அது பரியந்தம் கடன் பட்டாவது ஜீவனம் செய்யலாம். அது குறித்து அஞ்ச வேண்டாம். மேற்குறித்தபடி நான் அவசியம் வருகிறேன். நமது மெய்யன்பர் வேலு முதலியார்க்கும் நான் வருவது நிச்சயமென்று குறிக்க வேண்டும். நமது நாயக்கரவர்களுக்கும் அப்படியே. இந்தக் கடிதம் கண்டவுடன் தங்கள் தேக நிலையை தபாலில் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் என் மனம் சஞ்சலித்துக் கொண்டே யிருக்கும். ஆகலில் தெரிவிக்க வேண்டும். தாங்கள் '**சிவாயநம வென்று சிந்தித் திருப்பார்க் கபாய மொருநாளு மில்லை**' என்பதை சத்தியமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

புரட்டாசி மீ
சூ ௨

தங்கள் அன்பன்
சி. ராமலிங்கன்.

இஃது

சென்னப்பட்டண ராயல் ஓட்டல் மஹா-ா-ா-ஸ்ரீ முதலியார் வேலு முதலியா ரவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு பெத்து நாயக்கன் பேட்டை வீராசாமிப் பிள்ளை தெருவில் மஹா-ா-ாஸ்ரீ இரத்தன முதலியாரவர்களுக்கு சேர்ப்பிக்க வேண்டும். தங்களுக்கும் கடிதம் இதற்குமுன் எழுதி இதனுடன் தபாலில் விடுத்திருக்கிறேன்.

திருமுகம் 24

சிவானந்த போக சாத்தியம்

20 – 4 – 1865

உ

திருச்சிற்றம்பலம்

சுபம் உண்டாகுக. கல்வி கேள்விகளிற் பயின்று அன்பறிவொழுக்கங்களிற் சிறந்து அருளொடு கிளர்ந்த வாக்கத்தி னுயர்ந்து குணமணியாக விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாகுக.

தங்களுடைய சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். அரி பிரமாதிக ளெத்துணையும் பெறுதற்கு அரியதாகிய சிவ சம்பந்தத்தை முன் செய்த தவப் பயனாற் பெற்றனம். அங்ஙனம் பெற்ற நாம் சிவானந்த போக சாத்தியத்தை காலமுண்டாக அடைதல் வேண்டும். அதனை அடைதற்கு சிவபஞ்சாக்ஷர தியானமன்றி வேறு ஏதுக்கள் ஒன்றுமின்று. இஃது த்ருவருளாணை. என்னின், நாம் செல்லுங் காலமெல்லாம் சித்த சுத்தியோடு சிவபஞ்சாக்ஷர தியானத்தில் சர்வசாக்கிரதையைப் பெற்று வரவிற்கு ஒத்த செலவோடு வாழ்தல் வேண்டும். இஃதே நமது கடமை. இனி இங்ஙனம் இருவர் பிணியாளர் வேறு கதியின்றி என்பாற் புகலடைந்திருக்கின்றனர். அப்பிணி சிறிது சாந்தப்பட்டவுடன் பிரயாணப்பட்டு அவ்விடம் வர நிச்சயித்திருக்கிறேன். சிவபெருமான் திருவுள்ளக் கருத்தறியேன். நமக்குரிய நேயர் முன்னவராகிய ா-ா நாயக்கர் முதலானவர்கட்கும் என் வந்தனங் குறிப்பிக்கவேண்டும். வரதாசாரியா ரவர்கள் தற்காலம் எவ்வித நிலையிலிருக்கின்றனர். அந்நிலையும் தெரிதல் வேண்டும். நேயர் ா-ா கந்தசாமி முதலியார்க்கும் என் வந்தனங் குறிப்பிக்கவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சித்திரை மீ — சி. இராமலிங்கம்
மஉ

இஃது

சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை
ஏழுகிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத்
தெருவில் ம-ா-ா முதலியார் இரத்தின முதலியார்
அவர்கள் சமுகத்திற்கு.

திருமுகம் 25

தென்னாட்டின் சிறப்பியல்

உ

சிவமயம்

கல்வி கேள்விகளிற் சிறந்து அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்களை அணியாக அணிந்த சிரஞ்சீவி இரத்ந முதலியா ரவர்களுக்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன் மேலுண்டாவனவாக.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். மஹா-ா-ா-ஸ்ரீ வேலு முதலியார்க்கும் அவர்களிடமாகத் தற்காலத் திருக்கின்ற நாயக்கரவர்களுக்கும் என் வந்தனங் குறிப்பிப்பது மன்றி இக்கடிதத்தினுள் ளடங்கிய கடிதத்தை அவர்களிடத்திற் சேர்ப்பிக்க வேண்டும். இது நிற்க. அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுவது ஒன்று. என்னெனில் தாங்கள் சென்னப் பட்டணத்தை விட்டு நெல்லூர்க்கு உத்தியோக விஷயமாகப் போகக் கருதி பிரயத்தினஞ் செய்வதாயும் தற்கால அலுவல் தானே நீங்கிவிடுவதாயும் கேள்விப் பட்டேன். கேட்ட நாள் தொடங்கி மனஞ் சஞ்சலித்துக் கொண்டே யிருக்கின்றது. ஆனால் என்ன செய்வது. திருவருள் நடத்த நடக் கின்றோம் என்று சமாதானஞ் செய்துக் கொண்டாலும் என் மனம் அமைதி பெறவில்லை. ஆகவில் அவ்வாறு நேரிடில் முன்னதாக எனக்குத் தெரிவிக்க வேண்டும். நான் கடவுளைப் பிரார்த்திக்கிற தென்னெனில் சென்னப்பட்டணத்தை விடுத்தால் பட்டணத்துக்குத் தென்பாகத்தில் அலுவல் நேரிட வேண்டுமென்று பிரார்த்திக்கிறது தான். என் பிரார்த்தனை திருச்செவிக்கு ஏறுமோ ஏறாதோ தெரிந்த தில்லை. என்ன செய்வேன். எப்படி யானாலும் ஆகட்டும். எனக்கு உடனே பிரயாணத்தின் உண்மை இன்மை தெரிவிக்க வேண்டும். தாங்கள் எழுதிய கடிதம் நாற்பது நாளைக்குமேல் நான் காணப்பெற் றேன். நானும் அவசியம் தை-மாசி-க்குள் அவ்விடம் வரப் பிரயாணஞ் செய்கிறேன். வந்தால் ஒரு மாதம் இரண்டு மாதத்துக்குமேல் அவ் விடத்திலிருக்க சம்மதமில்லை. சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சி. ராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் மஹா ராஜ ராஜ ஸ்ரீ முதலியார்
இரத்தின முதலியா ரவர்கள் திவ்விய
சமுகத்திற்கு.

திருமுகம் 26

பசியில்லாதவன் பழஞ்சோறு கண்டது

சிவமயம்

அருளறி வொழுக்கங்களிற் சிறந்து கல்வி கேள்விகளிற் பயின்று எமது கட்கிமை போன்று விளங்குகின்ற சிரஞ்சீவி ரத்தின முதலியார்க்கு

சிவகடாக்ஷத்தால்

தீர்க்காயுளுந் திடதேகமும் சிந்தித மனோரத சித்தியு மேன்மே லுண்டாவனவாக. தங்கள் சுபசரித்திர விபவங்களும் ம-ா-ா நாயக்கரவர்கள் சுபசரித்திர விபவங்களும் அடிக்கடி கேட்க விருப்ப முள்ளவனாக விருக்கின்றேன்.

தாங்கள் வரவிட்ட பங்கி தபாலி லடங்கிய புத்தகமும் - கடிதமும் முன்னும் பின்னுமாக வரப்பெற்றேன்.

இவற்றுள் பங்கி தபாலி லடங்கிய புத்தகத்தைக் கண்டபோது பசியில்லாதவன் பழஞ்சோறு கண்டாற் போலுங் குறிப்பில்லாதவனாக விருந்தேன். ஏனெனில் திருவருள் சாக்ஷியாகத் திருவடிக் கண்ணன்றி வேறொன்றையும் என் மனம் விரும்புகிறதாகத் தோற்றவில்லை. என்றால் இந்த – பனை ஏட்டையும் அதில் வரைந்த சிறுபிள்ளை விளையாட்டையுந் தானோ விரும்பும். விரும்பாது விரும்பாது. யாரோ தங்களுக்கு வீணாக அலுப்புண்டு பண்ணினார்கள். அது குறித்து வியசனமடைந்தேன். ஆனால் அந்த வியசனத்தை உடனே தங்கள் கடிதத்தைக் கண்டு மாற்றிக் கொண்டேன். எப்படியென்றால் தங்களுடைய க்ஷேமமும் நாயக்கரவர்களுடைய க்ஷேமமும் தெரியவில்லையே யென்று உள்ளபடி எண்ணமிட்டிருந்தேன். அந்த எண்ணத்தை மாற்றி ஷ்டி இருவரது க்ஷேமங்களும் அந்தக் கடிதத்தில் குறித்திருந்த படியாலே விசேஷம் சந்தோஷம் உண்டு பண்ணியது. ம-ா-ா நாயக்கரவர்கள் முளைமூலம் எடுத்துக்கொண்டு இப்போதுதான் உடம்பு பக்குவமாகி வருகின்றது என்றபடி இன்னும் தாங்கள் அவர் தேகம் சரியான பக்குவத்தை யடையும் வண்ணம் பாராட்டி வரவேண்டும். தங்கள் தேக முதலிய கருவிகளையும் சாக்கிரதையாகப்பார்த்துப் பாராட்டிக்கொண்டு வரவேண்டும்.

நாயக்கரவர்களுக்கு தெரிவிப்பது. எந்த விதத்திலும் இன்னும் நாலைந்து மாசத்துக்குள் சமீபத்திலிருக்கும்படி சிவகடாக்ஷ நேரிடும். சந்தேகிக்க வேண்டுவ தில்லை. அது பரியந்தம் பொறுத்திருக்க வேண்டுமென்று தெரிவிப்பது தான். இது வல்லாமலும் தங்களுக்கு நான் தெரிவிப்பது ஒன்று. என்னெனில் நான் எந்தப் பிறப்பிலும்

தங்களை விடமாட்டேன். தாங்களும் இன்னும் சில நாள்களுக்குள் சமீபத்தி லிருக்கும்படியாகவே சிவானுக்கிரகத்தால் பார்ப்பேன். உண்மை உண்மை. ம-ா-ா-ஸ்ரீ நமது உள்ளன்பர் வேலு முதலியார்க்கும் ஸ்ரீ சிதம்பர சாமிக்கும் வந்தனம்.

வேணும் சிரஞ்சீவி.

ஆடி மீ இங்ஙனம்
உ௰௩ உ சிதம்பரம்
இராமலிங்கம்

இஃது
சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை
ஏழு கிணற்றுத்தெருவுக்குக் கீழ்ப்பக்கம் வீரா
சாமிப் பிள்ளை வீதியில் கலக்டர் கச்சேரி ா-ா
சுப்பராய பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு
மஹாராஜராஜஸ்ரீ ரத்தின முதலியார் அவர்கள்
திவ்விய சமுகத்திற்கு.
சுபமுண்டாக

திருமுகம் 27

இறைவன் தம் உள்ளிருந்து பாடுவித்தவை

உ
சிவமயம்

அன்பறி வாசாரங்களிற் சிறந்து சிவபத்தியினுஞ் ஜீவகாருண்யத்தினுந் தலைநின் றெம துள்ளத்திற் கலந்து விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன்மேலுண்டாக.

துஆ சூடு ஹு நவம்பர் மீ ௰௩ உ ரிஜிஸ்டர் செய்தனுப்பிய தங்கள் கடிதத்தைக் கண்ணுற் றறிந்து கொண்டேன்.

அக்கடிதத்திற் குறித்த விஷயம் எனக்கத்துணை யவசியமின்றாயினுந் தங்கள் கருத்தின்படி இறைவ னென்னுள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் தாங்களாயினும் ம-ா-ா செல்வராய முதலியாரவர்களாயினும் தாங்கள் வரைந்தபடி செய்துக்கொள்ளலாம். இனி எழுதுவதற்கு சமயமின்று. ஆகலின் இங்ஙனம் அமைதி செய்தாம்.

சுமார் இருபது தினஞ் சென்ற பின்னர் சமய முண்டாம்.

ஆண்டு வரைவன வரைதும், சிரஞ்சீவி சிரஞ்சீவி. சிவ சிவ

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது
சென்னபட்டணம் பெத்துநாயக்கன்
பேட்டை ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமி
பிள்ளை வீதியில் இங்கிலிஷ் இஸ்கூல் மாஸ்டர்
மஹா-ா-ா-ஸ்ரீ இரத்தன முதலியாரவர்கள்
சமுகத்துக்கு

திருமுகம் 28

திரு அருட்பா அச்சேறுதல்

உ

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலுஞ் சிறந்த தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன் மேல் உண்டாக.

தாங்க ளனுப்பிய பங்கிக் கட்டும் தபாலும் வந்து சேர்ந்தன. தாங்கள் சிவத்தியான சகிதராய் வரவுக்குத் தக்க செலவு செய்து கொண்டு தேகத்திற்கு திடமுண்டாகும்படி உபசரித்துக்கொண்டு சாக்கிரதையோ டிருக்கவேண்டும். படிப்பிக்கிற விஷயத்தில் அதிக அதிக்கிரம பிரயாசை எடுத்துக் கொள்ளப் படாது. தங்களுக்கு இருக்குங் கடனைக் குறித்து அணுவளவும் அஞ்சப்படாது. நான் வைகாசி மாதக் கடைசியில் அவசியம் அவ்விடம் வருகிறேன். இது நிச்சயம். இவ்விடத்தில் நாயக்கர் க்ஷேமமாக இருக்கிறார். ஆயினும் அவர்க்கு இவ்விடத்திலும் நிம்மதியில்லை, அன்றி ஒற்றியூர் பாடல் களையு மற்றவைகளையும் அச்சிடத் தொடங்குகிறதாய்க் கேள்விப்படு கிறேன். அவைகளை தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் வந்தவுடன் இவ்விடத்தி லிருக்கின்ற இன்னுஞ் சில பாடல்களையுஞ் சேர்த்து அச்சிட்டுக் கொள்ளலாம். பின்பு தங்க ளிஷ்டம். நமது சிநேகிதர் மகா-ா-ா-ஸ்ரீ வேலு முதலியாரவர்களுக்கு இதைத்தெரியப் படுத்துவீர்களாக. தங்கள் குடும்ப க்ஷேமமும் சுந்தரம்மாள் – புருஷர் - சுந்தரப்பிள்ளை முதலானவர்களுடைய க்ஷேமமும் மற்ற சிநேகர் முத லானோர் க்ஷேமமும் தெரிவிப்பீர்களாக. எனக்கு சாவகாசமில்லாமை யால் இம்மட்டில் நிறுத்தினேன். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சிதம்பரம்
இராமலிங்கம்.

இந்தக் கடிதம் தங்கள் மட்டில் வேலு முதலியார் மட்டில் வழங்க வேண்டும். நாயக்கர் வந்த நாள் தொட்டு தேக அசவுக்கியத்தோடே யிருக்கிறார்கள்.

இஃது
சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மகா-ா-ா-ஸ்ரீ வேலு
முதலியாரவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு
ஏழுகிணற்றுக் கடுத்த வீராசாமிப் பிள்ளை தெருவில்
மகா-ா-ா-ஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களிடஞ்
சேர்ப்பிக்க கோருகிறேன்.

திருமுகம் 29

ஆரவாரத்திற்கு அடுத்த பெயர்

28-3-1866

அன்புள்ள தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக. தாங்கள் வரைந்து விடுத்த கடிதமும் இப்பாடல்களும் இரண்டு தினத்திற்கு முன் என்னிடஞ் சேர்ந்தன. இன்று குறை நிரம்பப் பெற்றன கொள்க. அன்றி, நான் இத்திசைக்கண் வந்தபின் இங்ஙனமிருந்து தங்களிடத்திற் போந்த சில பாடல்களில் ஒன்றும் வெளிப்படாதிருத்தல் வேண்டும். என்னையெனில் நான் இங்ஙனம் வந்த பின்னர் **சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளுஞ் சாத்திர மாலைகளுமாக சுமார் ௨௱ மாலைகள் செய்யப்பட் டிருக்கின்றன.** அவைகள் வெளிப்படும்போது வெளிப்படுத்திக் கொள்ளலாம். இது நிற்க. முன்னோர் கடிதத்தினுன் குறித்த பாயிரத்தை இன்னுஞ் சில தினஞ் சென்ற பின்னர் அனுப்புகிறேன், தற்காலம் என்னினைவு விரிதற்கின்மையால். தாங்கள் தேகத்தை சாக்கிரதையாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும். நமது அன்பர் ம-ா-ா வேலு முதலியார் ம-ா-ா-ஸ்ரீ செல்வராய முதலியார் முதலானவர்களுக்கும் நான் அவசியம் இரண்டு மாதத்தில் அவ்விடம் வருவதாக குறிப்பித்தல் வேண்டும். ம-ா-ா நாயக்கர் சாமிக்கு பித்த விசேஷத்தால் சிறிது குணம் விகற்பித்து அடிக்கடி சொல்லாமற் போவதும் பின்பு வருவதுமாக விருக்கின்றார். இது நிற்க. தெ. ஆறுமுகப்பிள்ளை யவர்களுக்குஞ் சுந்தரம்மாளுக்கும் இன்னும் ஒரு மாதஞ் சென்ற பின்னர் நான் சொன்னபடி செய்விப்பதாக தெரியப்படுத்த வேண்டும். அன்றியும் சௌ. விசாலாக்ஷி யம்மையும் அவர் புருஷனும் இவ்விடத்தில் நேர்ந்த சொல்ப வரும்படி போதாமை யென்று சுமார் ௨௰ நாள்களுக்கு முன்னரே இவ்விடம் பிரயாணப்பட்டு அவ்விடம் வந்தார்கள். இது நிற்க.

இராமலிங்கசாமி யென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை - ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில். இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்.

ஜீவகாருண்ணியமும் சிவானுபவமும் அன்றி மற்றவைகளை மனத்தின்கண் மதியாதிருத்தல் வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

குரோதன ஸு இங்ஙனம்
பங்குனி மீ ௰௨ சிதம்பரம்
இராமலிங்கம்.

திருமுகம் 30

பசித்தாரது பசி நீக்கலே பேர் பெருஞ் செயல்

19 - 4 - 1866

உ

அருட் குணங்களனைத்து மமைந்தென் னற்றுணையாய் விளங்கிய தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேல் விளைக. வரைந்து விடுத்த நல் வாசகத்தைக் கண்ணுற்றறிந்தனன். **குடும்ப கோடம், பொது வேதம், மெய்ம் மொழிப் பொருள் விளக்கம், சன்மார்க்க விளக்கம்** என்பவைகளை நூதனமாக ஏற்படுத்தக் கருதியபடி வரையாக் கடிதப் புத்தகம் மூன் றென்னிடத் திருக்கின்றன. அவை அமையும். ஆகலில் அது விடயத்திலுழத்தல் வேண்டா. நான் வருமதிக் கடையில் அங்ஙனம் போதுதற் குளங்கொண் டிருக்கின்றனன். இஃ துபாய மன்றுண்மை. அருநெறி செல்வோர்க்கு மச்சுறுத்தத் தக்க விவ்வெய்ய பருவத்தின்கண் வான் பெயலறியா வன்னெறிப்பட்டு மெய்வருத்தங் கோட லொன்றோ. எவ் வகையானுங் களைகணின்றிப் பசித்தாரது பசி நீக்குதற் பொருட்டே திருவருளாற் கிடைக்கும் பொருட் கருவியை அங்ஙனஞ் செலுத்தலின் றி யிங்ஙனஞ் செலுத்தும் வெறுஞ் செயற்பாட்டிற் றொருப்படுங் குறைமையுங் கோடற் கிடனும். ஆகலில் இது விடயத்திற் றுணிந் துரைத்தற்குச் சித்தமுநாவுஞ் செல்வன வல்ல. முன் குறித்தபடி வரற்குத் தடைநேரின் அன்று துணிந்து வரைவல். இஃதென் கருத்து. பின்னர் தங்கள் கருத்தின்படி செய்க. இஃதுலகியற் பிழைத்த சிலர்க்கு வரைதல்போல் வரைந்ததன்று. உள்ளமொத்து வரைந்த தென்க. இதனை நமது உள்ளன்பர் செல்வராய முதலியா ரவர்கட்குங் குறிக்க. என்னையன்றித் தன்னையுங் கருதார் அன்றிப் பொன்னையுங் கருதார் என்று கருதப்படு மன்பர் வேலு முதலியார்க்கு ஓர் உத்தர கடிதம் வரைந்தனன். தாங்கள் எனக்கு இருமையும் தொடர்ந்த துணைவராக நினைக்கின்றேன். அன்றி வேறென்னை நினைப்பேன். தங்களுக் கன்றியும் நமது செல்வராய முதலியாரவர்களுக்கும் கடனிருந் தால் திருவருளால் நீங்கிவிடும். அது குறித்துச் சலிக்க வேண்டா வென்று குறிக்க. நாயக்கர்சாமி யென்பவர் தற்கால மிவ்வுலகி லிருக்கின்ற தான்றோன்றிச் சாமிகளிற் றலைநின்ற சாமி யென்க.

என்னை - அறிய வேண்டுவனவற்றை யறிய முயலாமையோடு பித்த மயக்கான் மனஞ்சென்ற வழி சென்று பித்தச்சாமி யென்னும் விசேடப் பேர் ஒன்று மிகையாகக் கொண்டிருக்கின்றனர். ஆகலில் சூழும் வண்ணஞ் சூழ்க. அன்றி **சிவ சிந்தனையுஞ் ஜீவ கருணையுங் கைவிடாது ஓங்குக.** வேறு விடயங்களைச் சந்தி செய்யும் பந்த சந்தி சத்தியாலே மாறாது விழித்திருக்க. சுபம் பெறுக.

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

அக்ஷய ஹூ
சித்திரை மீ அ உ

இஃது

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மஹா-ா-ா-ஸ்ரீ வேலு முதலியா ரவர்கள் மேல்விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்றுக் கடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் மஹா-ா ா-ஸ்ரீ இரத்தின முதலியா ரவர்கள் சமுகத்திற்கு தயவு செய்விக்க. சுபம்.

திருமுகம் 31

பலர் பலர் விவகாரம்

11 - 6 - 1866

. உ *
சிவமயம்

கல்வி கேள்வி அன்பு அறிவு ஒழுக்கந் தயை முதலியவற்றாற் சிறந்து எனக்கோர் துணையாய் விளங்கிய தங்கட்கு குரு கடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாக.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

இந்தக் கடித முன்னிலையால் தங்களைக் காணுகின்ற பெரியபுராணிகர்க்கு சுமார் ச மாத பரியந்தம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் ச தாங்கள் கடன் வாங்குகின்ற இடங்களில் வாங்கி மாத மாதம் கொடு ... ... வேண்டும். இவ் ...... வாங்கிக் கொடுத்தனு ... அவர் கையில் பணமிருந்தால் விரைவில் செலவழிந்து போம். அது தங்களுக்குந் தெரியும். இந்தக் காலம் மிகவும் உஷ்ணகாலமாக விருத்தலால் தாங்கள் தேகத்தை சாக்கிரதையாகப் பாராட்டிக்கொண்டு வரவேண்டும். இந்த

பெரியபுராணிகர் தற்காலம் உடம்பு அபக்குவராக வருகின்ருர். தாங்கள் கடிதம் எழுதக் குறிக்கும்போது இவர் தரத்தையுங் குறிக்கவேண்டும். எனக்குத் தற்காலம் பலர் பலர் விவகார முதலியவற்ருல் உடம்பு அபக்குவமாக விருக்கின்றது. நான் கூடலூரி லிருக்கின்றேன்.

சிதம்பரம் *
இராமலிங்கம்

அக்ஷய ஹூ
வைகாசி மீ ௩௰௨

நான் அவ்விடம் வருகின்ற காலம் சமீபத்தில் குறிக்கின்றேன்.

இஃது
சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை ஏழு கிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் மஹாராஜராஜஸ்ரீ முதலியார் ரத்தன முதலியா ரவர்கள் திவ்விய சமுகத்துக்கு, நன்மை.

திருமுகம் 32

கால விகற்பம்

22 - 7 - 1866

உ
சிவமயம்

அன்பு அருள் அறிவு முதலியவற்ருற் சிறந்த தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் திடதேகமும் சகல சம்பத்து மேன் மேலுண்டாக வென்று பிரார்த்திக்கிறேன்.

தங்கள் தேக விஷயத்தில் அதிகமாக சாக்கிரதையாக சிவத் தியானத்தை விடாமல் வரவுக்குத் தக்கபடி நடக்கவேண்டுமென்று மிகவும் கோருகிறேன்.

முன்னர் நான் பெரிய புராணிகர் விஷயத்தில் எழுதின கடிதத் திற்குப் பதில் தாங்கள் எழுதின கடிதம் வந்து சேர்ந்தது. ஆயினும் என்மனம் இக் கால விகற்பத்தால் விகற்பித்துக் கொண்டிருப்பதால் உடனே பதில் தெரிவிப்பதற்குத் தடையாயிற்று. அது குறித்து வேறு நினைக்கவேண்டாம். நான் இன்னும் இரண்டு மாசத்திற்குள் அவசியம் அவ்விடம் வந்து சுமார் இருபது தினத்திற்குள் பிரயாணப் பட்டுத் திரும்புவதாக நினைத்திருக்கிறேன். அப்போது தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியவை தெரிவிக்கிறேன். தாங்கள் உடம்பு விஷயத்

---

* உ சிவமயம் இருந்த இடமும், கையொப்பமிட்ட இடமும் வழிபாட்டிற்காகக் கத்தரித்து எடுக்கப்பட் டிருக்கின்றன.

தில் அதிக சாக்கிரதையும் சமுசார விஷயத்தில் அதிக வண்மையு முடையவர்களாக விருங்கள். நமது ஈ-ஈ செல்வராய முதலியாரவர் களுக்கும் இப்படியே தேக முதலியவற்றில் சாக்கிரதையும் சிவத் தியானத்தை விடாமையும் உள்ளவர்களாக வேண்டுகிறேன். அதையுங் குறிக்கவேண்டும். பெரிய புராணிகர் விஷயத்தில் முன்பு நான் குறித்தபடி இன்னுஞ் சிலகாலம் பிரயாசை எடுத்துக் கொள்ளுங்கள். நான் பின்னே அந்தப் பிரயாசையை மாற்றுகிறேன். சுந்தரம்மாள் அவர் புருஷனர் பெண்கள் முதலானவர்களுக்கும் நான் வருதலைக் குறிப்பிக்கவேண்டும். அன்றி சிரஞ்சீவி நமசிவாயப் பிள்ளை அவ்விடம் வந்திருக்கிறார். அவர்க்குந் தெரியப்படுத்துங்கள். வேலூர் ஈ-ஈ வேலு முதலியார் முதலானவர்களுக்கும் ஈ-ஈ கந்தசாமி முதலியார் முதலானவர்களுக்கும் அங்ஙனமே குறிக்கவேண்டும். எழுதுவதற்குத் தருணமல்லாத மனத்தொடும் இதை எழுதினேன். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

ஆடி மீ
அ உ

சி. நமசிவாயப் பிள்ளைக்கு பதில் இன்னுஞ் சில தினத்தில் தெரி விக்கிறதாகக் குறிக்கவேண்டும்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல்ஓட்டல் மகா-ஈ-ஈ-ஸ்ரீ முதலியார் வேலு முதலியார் அவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு ஏழு கிணற்றுக் கடுத்த வீதியிலிருக்கும் ஈ-ஈ இரத்தின முதலியார் அவர் களுக்கு சேர்ப்பிக்க வேண்டும். இதனுடன் தங்களுக்கும் ஒரு கடிதம் எழுதி தபாலில் போட்டிருக்கின்றது.
சுபம் சுபம்.

திருமுகம் 33

பெரியவர் சிவபதம் அடைவு

உ

அன்பு அறிவு தயவு கல்வி கேள்வி முதலிய சிறந்த தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக. தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்கவேண்டும்.

பெரியவர் சிவபதம் அடைந்த . . . செவ்வாய்க்கிழமை சாயங் காலம் தெரிந்துகொண்டேன். நான் சமீபத்திலிருக்கவும் சிதம்பரத்தில்

சமாதி வைக்கவும் அவர்கள் எண்ணியபடி நேரிடாமல் . . . விட்டதை . . . இது நிற்க. . . .

. . . . .

. . . . .

படத் தொடங்குவார்கள். அதனால் காலமும் செலவும் நீட்டிக்கும். காலமும் வேற்றுமையாக இருக்கின்றது. ஆதலால் சிநேகர் மகா-ள-ள-ஸ்ரீ வேலு முதலியாருக்கு கடிதம் எழுதி . . . அந்தக் கடிதப்படி அவர்கள் நடத்துகின்ற பட்சத்தில், தாங்களும் அன்பர் செல்வராய முதலியார் நாயக்கர் முதலானவர்களும் உடனிருந்து நடத்துவிக்க வேண்டும். நான் ஐப்பசி மாசம் அவ்விடம் வருகிறேன். நான் வருவதற்கு முன்பே வேலு முதலியாரவர்கட்கு தெரிவித்து அவர்கள் வந்த பின்பு அவர்களுடன் வருவேன். நான் வந்த பின் அவர்களுக்கு நேரிட்டிருக்கிற கடன் . . . நீங்களும் . . .

. . . . .

. . . . .

. . . . .

கடன் முதலிய சல்லியங்களை ஆண்டவர் விரைவில் நிவர்த்தி செய்வார். தாங்களாவது முதலியாராவது சஞ்சலிக்க வேண்டாம் . . . வடிவேலுப் பிள்ளை, தாயார், சுந்தரம்மாள், புருஷன் முதலானவர்களுக்கும் இன்னும் இரண்டு மாதத்திற்குள் ஜீவனத்துக்கு இடம் ஏற்படுத்துவார் கடவுள். அவர்களிடம் திடஞ் சொல்லவேண்டும். நமசிவாயப் பிள்ளையை நான் தெரிவிக்குமளவும் அவ்விடந்தானே இருக்கும்படி சொல்லவும். அவன் . . .

. . . . .

. . . . .

பிரசவமான சங்கதி தெரிவிக்கச் சொல்லவும். உடனே தாங்கள் எனக்கு கூடலூருக்கு அவ்விடத்திய சங்கதிகளை தபாலில் தெரிவிக்க வேண்டும்.

சிரஞ்சீவி.
சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் ம-ள-ள-ஸ்ரீ வேலு
முதலியார் அவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு
ஏழுகிணற்றுக் கடுத்த வீராசாமிப் பிள்ளை
தெருவில் மகா-ள-ள-ஸ்ரீ ரத்தின
முதலியார் அவர்களிடம்
சேர்ப்பிக்கக் கோருகிறேன்.

திருமுகம் 34

விண் படைத்த பொழில் தில்லை

26 - 11 - 1866

உ

கல்வி கேள்விகளாலு மன்பறி வொழுக்கங்களாலுஞ் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக வேண்டும்.

தங்கள் சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். மகா-ா-ா ஸ்ரீ அப்பாசாமி செட்டியா ரவர்கட்குத் தாங்கள் வரைந்த கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பர விஷயமான பாடல்களை தங்கள் கருத்தின்படி அச்சிட்டுக் கொள்ளுங்கள். அன்றியும் 'கண்டா யென்றோழி' என்கிற பாடல்களை வைத்திருக்கின்றவர் தற்காலம் சமீபத்திலில்லை. அவர் வந்தவுடன் வாங்கி யனுப்புகிறேன். 'விண்படைத்த பொழிற்றில்லை யம்பலத்தா னெவர்க்கு மேலானு னன்பருள மேவுநடராஜன்' எனல் வேண்டும். இது நிற்க நான் தற்காலம் அவ்விடம் வருவதற்கு சமயமாகத் தோற்றவில்லை. ஆயினும் நமது . . . தலைவராகிய கடவுளது திருவுளச் சம்மதிக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எந்த இரவில் எந்தப் பகலில் திருவுளச் சம்மத வுத்தரம் எனக்குக் கிடைக்கின்றதோ, அந்த இரவில் அந்தப் பகலில் பிரயாணப்படுவதற்கு யாதொரு தடையு மிராது. இரவும் பகலும் இதை நினைத்துக் கடவுளை தியானிக்கின்றேன். அவர் உத்தரத் தடையன்றி வேறு தடை யாதொன்றுமில்லை. தாங்கள் தேக முதலியவற்றில் சாக்கிரதையுடையவராய் சிவத்தியான சகிதராக இருங்கள். அன்றி இ . . . லீவில் இவ்விடம் வருவதற்காவது அல்லது மற்ற எவ்விடம் போவதற்காவது எண்ணமிருந்தால் அதை முன்னதாக எனக்குத் தெரிவிப்பீர்களாக. நமது அன்பர் மகா-ா-ா செல்வராய முதலியா ரவர்கட்கும் இதை குறிப்பிக்க வேண்டும். பெங்களூர் மகா-ா-ா வேலு முதலியார் தற்காலம் என்ன அலுவலில் இருக்கின்றார். தெரிவிக்கவேண்டும். சுந்தரம்மாளுக்கும் அவர் புருஷனுக்கும் வருமாதத்தில் ஜீவனோபாய விருத்தி உண்டுபண்ணுவிப்பதாகச் சொல்லுங்கள். என்னைக் குறித்த மற்றவர்களுக்கும் அங்ஙனங் குறிப்பீர்களாக. சிரஞ்சீவி சிரஞ்சீவி சிரஞ்சீவி.

இங்ஙனம்
சி. இராமலிங்கம்.

இதனடியில் எழுதுவதை தாங்கள் ஞாயிற்றுக்கிழமை . . . . யாவது அல்லது ஓய்வு ஏற்படும் எந்த தினத்திலாவது மகா-ா-ா வேலு முதலியாரவர்கட்கு காண்பிப்பீர்களாக.

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலும் சிறந்த நண்பராகிய மகா - ா - ா - ஸ்ரீ வேலு முதலியா ரவர்கட்கு வந்தனம். தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிரதையாக நடத்திக்கொண்டு சிவத்தியான சகிதராக இருங்கள். நான் மகா - ா - ா - ஸ்ரீ ரத்தின முதலியார் அவர்களுக்கு வரைந்த வாசகத்தைப் பாருங்கள். எந்தத் தினத்தில் பிரயாணப்படலா மென்றே இரவும் பகலும் விரைந்து விரைந்து நினைக்கின்றேன். தாங்கள் இந்தப் பக்கம் வரும்படி எண் ணங்கொண்டால் முன் எனக்குத் தெரிவிப்பீர்களாக. எழுதுவதற்கு அசந்தர்ப்பத்தால் இப்படி எழுதினேன். மன்னிப்பீர்களாக. வந்தனம்.

அக்ஷய ஹு　　　　　　　　　　　　சிதம்பரம்
கார்த்திகை மீ ௰௨ ௳　　　　　　　　　இராமலிங்கம்.

இஃது
சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை
ஏழுகிணற்றுக்குக் கீழ்பக்கம் வீராசாமிப் பிள்ளை
தெருவில் மகா - ா - ா - ஸ்ரீ முதலியார் இரத்தின முதலியா
ரவர்களுக்கு வருவது.
சுபம்.

திருமுகம் 35

எஞ்சி நின்ற நூல்கள்

அன்பறிவு முதலியவற்றிற் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் மேன்மேல் சுபம் உண்டாக. தாங்கள் குறித்தபடி வரைந்து அனுப்பி னேன். இவை மிகவும் விரைவில் வரையப்பட்டன. ஆகலால் மிகவும் மெதுவில் பார்க்க வேண்டும்.

சிதம்பரம் இராமலிங்கம்.

மற்றைச் சங்கதிகளைப் பின்னிட்டு தெரிவிக்கிறேன். அன்றி, இதில் குறிக்கின்றவைகளை இனி அச்சிடுவதாகக் குறிப்பீர்களாக. அவை —

நடராஜ நிபுணம் – நடராஜ விசித்திரம் – நடராஜ மதுரம் – நட ராஜ அலங்காரம் - நடராஜ ஞான நாடகம் – நடராஜ ஆனந்த நாட கம் - சிதம்பர வுபதேசம் – சிற்றம்பல நடனம் – பொன்னம்பல நடனம்- பொது நடனம் - தத்துவ நடனம் - ஆனந்த நடனம் - அதீத நிலை – அருள் விளக்கம் – மெய்ப்பொருள் விளக்கம் - மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் – சன்மார்க்க விளக்கம் – சாதன விளக்கம் - கலாந்த விளக்

கம் – யோகாந்த விளக்கம் – நாதாந்த விளக்கம் – போதாந்த விளக்கம் – வேதாந்த விளக்கம் – சித்தாந்த விளக்கம் – அண்ட விளக்கம் - பிண்ட விளக்கம் – பிரகிருதி விருத்தி - தத்துவ விருத்தி - சுத்த சிவ ராசியம் – பரசிவராசியம் – மந்திரக் கொத்து - மகாவாக்கிய வகை - பொது வேதம் - குடும்ப கோஷம் – இயல்வகை – அளவை வகை – ஞாய வகை – இலக்கண விருத்தி - தர்க்க விருத்தி - தென்மொழி விளக்கம் – வடமொழி விளக்கம்– உலகியல் விளக்கம் – கலைமரபு.

இந்த தபால் வந்தவுடன் சேர்ந்த செய்தி தெரிவிக்கவேண்டும்.

திருமுகம் 36

பொன் வினவு

3 - 5 - 1868

உ

சிவமயம்

அன்பு அறிவு தயை முதலிய சுபகுணங்களிற் சிறந்த உண்மையன்பராகிய தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக வென்று திருவருளை சிந்திக்கின்றேன். தங்கள் சுப சரித விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். மற்ற சங்கதிகளை எனக்கு சாவகாசம் நேரிட்டபோது எழுதித் தெரிவிக்கின்றேன். தற்காலம் வேண்டுவதை இதனடியில் எழுதுகிறேன். அதாவது பொன்னுரைக்கின்ற உரைகல் ஒன்று வெள்ளியுரைக்கின்ற உரைகல் ஒன்று இவைகளையும் இவைகளுக்கு அடுத்த தராசு முதலிய கருவிகள் வைக்கின்ற பை ஒன்று இம்மூன்றும் வாங்கி பங்கியில் அனுப்பவேண்டும். சுமார் ரு பலம் அ பலம் நிறுக்கத்தக்க தராசு நேரிட்டாலும் அதனுடன் அனுப்ப வேண்டும்.

தேகத்தை பக்குவமாகப் பாராட்டிக்கொண்டு சிவசிந்தையும் ஜீவகாருண்ணியமும் மாறாமல் சாக்கிரதையோடு இருப்பீர்களாக. இதை **சமரசவேத சன்மார்க்க சங்கத்தவ** ரல்லாதவர்களுக்கு வெளிப்பட வாசிக்கப்படாது. வேணும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

விபவ ஹு	இங்ஙனம்
சித்திரை மீ	சிதம்பரம்
உயகூ உ	இராமலிங்கம்.

Stamped இஃது

சென்னபட்டணம் ஏழு கிணற்றுக் கடுத்த
வீராசாமிப் பிள்ளை வீதியில் கீழண்டை

வாடை நெ. ௲ய௮-வது கதவிலக்கமுள்ள
வீட்டில் இறுக்கம் ம-ா-ஸ்ரீ இரத்தின
முதலியா ரவர்களுக்கு
Madras

திருமுகம் 37

திருநாவலூர்
26 - 5 - 1868

உ
சிவமயம்

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலுஞ் சிறந்த தங்கட்கு திருவருள் வலத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக.

தங்கள் சுபசரித விபவங்களை அடிக்கடி கேட்டு மகிழ விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். தாங்கள் அனுப்புவித்த பங்கியில் தாங்கள் கடிதத்தில் குறித்தபடி இருக்கக்கண்டு களிப்பொடு பெற்றுக் கொண்டேன். தாங்கள் அனுப்புவித்த பங்கிவந்த தினத்திற்றானே யெனக்கு ஊர்ப்புறங்களிற் போக அவசியமான பிரயாண நேரிட்டபடியால் உடனே பங்கிவந்த செய்தியைத் தங்களுக்குத் தெரியப் படுத்துவதற்குக் கூடாமையாயிற்று. இந்தக் கடிதமும் கொள்ளடத்தின் வடகரையில் திருநாவலூரிலிருந்து எழுதினேன். என்னுடன் சுமார் ௨ய பெயர்கள் வந்திருக்கின்றார்கள். மற்றவர்கள் சாலையிலிருக்கின்றார்கள். நான் சாலைக்கு வந்தவுடன் மற்ற சங்கதிகளைத் தபாலில் தெரிவிக்கிறேன். தாங்கள் சாக்கிரதையோடு தேகத்தைப் பக்குவமாகப் பாராட்டிக் கொண்டு சிவசிந்தையோ டிருக்க வேண்டும். தங்களுக்கும் நமக்கும் அன்பராகிய செல்வராய முதலியா ரவர்களுக்கும் இங்ஙனம் தெரிவிக்கவேண்டும். வாழ்க வாழ்க வாழ்க. நான் சுமார் பத்து தினத்தில் தருமச்சாலைக்கு வந்து சேர்வேன்.

விபவ ௵ — சிதம்பரம்
வையாசி ௴ ௰௫ உ — இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ஏழுகிணற்றுக்கு அடுத்த
வீராசாமிப் பிள்ளை வீதியில் ௲ய௮-வது கதவி
லக்கமுள்ள வீட்டில் மஹாராஜராஜஸ்ரீ
முதலியார் இரத்தின முதலியா ரவர்கள்
திவ்விய சமுகத்திற்கு.

திருமுகம் 38

உலக போக உவர்ப்பு

20 - 8 - 1869

உ

என் பிரியமுள்ள ரத்தன முதலியாரவர்களுக்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவனவாக.

தாங்கள் எழுதிய கடிதத்தைக் கண்ணுற்றறிந்தேன். சடமும் துக்கமும் அநித்தியமு மாகிய உலகபோகத்தை விரும்புகின்ற மற்றவர்களைப்போல மயங்குதல் வேண்டாம். தங்கள் கருத்தின்படி நமது உயிர்த்துணைவனாகிய நடராஜப் பெருமான் திருவருளால் அதிசீக்கிரத்தில் கைகூடுமென்று நம்பியிருங்கள். நான் எப்போது கடித்த்தால் தெரிவிக்கிறேனோ அப்போது யாதொரு தடையுஞ் செய்யாமல் அக் கடிதத்திற் குறித்த வண்ணம் என்னிடம் வந்து சேருவதற்கு மனமுள்ளவர்களாக விருங்கள். தேகத்தை சாக்கிரதையாக பாராட்டி வாருங்கள். மற்ற சங்கதிகளை பின் தெரிவிக்கிறேன். இதனுள் வைத்த கடிதத்தை செல்லப்ப முதலியார்க்கு சேர்ப்பியுங்கள். தாங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம் அஞ்சவேண்டாம்.

ஆவணி மீ ௨௰ ௨

இங்ஙனம் *
சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் ம-ா-ா-ஸ்ரீ வேலு முதலியார் அவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்று வீதிக்கு சமீபம் ா-ா இரத்தின முதலியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு சேர்ப்பிக்க வேண்டும்.

இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள் முற்றுப்பெற்றன.

---

* இங்ஙனம் கையொப்பமிட்டிருக்கக் கூடிய இடம் வழிபாட்டிற்காகக் கத்தரித்து எடுக்கப்பட்டிருக்கிறது.

2. புதுவை வேலு முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள்

திருமுகம் 1

இந்த நாய்க்குப் பணம் என்ன செய்ய

15 - 2 - 1859

உ

சிவமயம்

கல்வி கேள்விகளாற் சிறந்து சிவபக்தி ஜீவகாருண்யஞ் சாந்தம் அன்பு முதலிய நற்குணங்களைப் பெற்ற நண்பர்க்கு அனந்தமுறை வந்தனம் வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களைக் கேட்க மிகவும் விருப்பமுள்ள வனாக விருக்கிறேன்.

தைமாசம் உ௰உ உ தபால் மார்க்கமாகத் தாங்கள் வரவிடுத்த கடிதம் வரப்பெற்று வாசித்தறிந்து கொண்டேன். அதற்குமுன் ஷை தை மீ'த்தில் தங்களுக்கு நான் எழுதி யனுப்புவித்த கடிதம் தங்களிடம் வந்து சேர்ந்ததில்லை போலத் தோன்றுகின்றது. அதை மன்னிக்க வேண்டும். 'நல்லாரெனத் தானனி விரும்பிக் கொண்டாரை அல்லா ரெனினு மடக்கிக்கொளல் வேண்டும்'* என்றபடி ா-ரத்ன முதலியா ரைத் தாங்கள் அடக்கிக்கொண்டது பெரிய காரியம். அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் வாக்கினால் சமீபித்தும் மனத்தினால் நெடுந்தூர மாகியும் இருக்கவேண்டும். ா-மாப்பிள்ளை முதலியார் முதலானவரிடங் களிலும் இப்படியே இருக்கவேண்டுமென்று நான் சொல்ல வேண்டுவ தென்ன, தங்களுக்குத் தெரிந்தது தானே.

ஐயா! தற்காலத்தில் தங்கள் மனத்தில் நேரிட்ட சஞ்சலங்களை நிவர்த்திசெய்து இனியொரு காலங்களிலும் வாராதவண்ணம் பாது காத்து சதா சவுக்கியத்தைப்பெற்று சந்தோஷமடைய அனுக்கிரகிக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். தாங்களும் இரவும் பகலும் நமது ஆண்டவனை இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டு சாக்கிரதையோடு இருக்கவேண்டுமென்று தங்களையும் பிரார்த்திக் கிறேன். நம்மைப்பெற்ற தாயைப் பார்க்கிலும் அனந்தங்கோடி பங்கு நம்மிடத்தில் தயவுள்ளவன் நமது ஆண்டவன். ஆகலால் நமக்கு ஒரு காலத்திலுங் குறைவு நேரிடாது. இது சத்தியம். ஆனால் நாம் நம்

---

* நல்லா ரெனத்தான் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு. — நாலடியார் 221

பிக்கை தவறாது இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் நான் விரித்துத் தங்களுக்குச் சொல்லவேண்டுவ தென்ன. என் போன்றவர்களெத்தனை பேருக்கோ தாங்கள் சொல்ல வல்லவர்களாக விருக்கின்றீர்கள். தங்களிடத்தில் நான் என்ன காரியஞ் சொல்லி யிருந்தேனோ அந்தக் காரியந் தங்கள் மனமட்டில் நிற்குமல்லவா. ஆதலால் அந்தக் காரியத்தைக் குறித்தே தற்காலம் பிரயத்தனப் பட்டுக்கொண் டிருக்கிறேன். நமது ஆண்டவன் அனுக்கிரகத்தால் அது முடியுங் காலத்தை இன்னுஞ் சில நாளில் தெரிந்து கொள்ளலாம். தாங்கள் இப்போது இவ்விடம் விஜயஞ்செய்ய எந்த விதத்தினும் எண்ண வேண்டுவதில்லை. நான் வந்துவிடுகிறேன். தாங்கள் வரவுக்குத் தக்க செலவு செய்துக்கொண்டிருக்க வேண்டும். பின்பு இஷ்டப்படி யெல்லாஞ் செய்ய நமது ஆண்டவன் அனுக்கிரகிப்பான். இதற்குச் சந்தேகமிராது. இது உண்மை. இந்த உண்மை தங்களுக்குத்தான் தெரியும். ஆதலால் தங்கள் மட்டில் இது தெரிவித்தேன்.

ஐயா ! நானோ புத்தி தெரிந்த நாள் தொடங்கி இதுபரியந்தமும் இந்தப் பிண உடம்பும் இதற்குக் கொடுக்கின்ற பிண்ட துண்டங்களும் பெருஞ் சுமையாக இருக்கின்றதே, ஐயோ, இது என்றைக்குத் தொலையும் என்று எண்ணி எண்ணி இளைத்துத் துன்பப் படுகின்றவனாக இருக்கிறேன். இப்படிபட்ட இந்த நாய்க்குப் பணம் என்ன செய்ய. ஐயா, என்னைக் குறித்துத் தாங்கள் பண விஷயத்தில் பிரயாசமெடுத்துக் கொள்ளவேண்டாம். தாங்கள் வேறு விதத்திலும் செலவுக்கு இடம் பார்க்கவேண்டாம். தாங்கள் மார்கழி மீ ம-ா-ா-ஸ்ரீ முதலியார் நற்குணமணியாகிய சீனிவாச முதலியார்க்கு எழுதிய கடிதத்தால் அவர்கள் என்னைக் கேட்க நான் மறுக்க, மறித்தும் தங்கள் கடிதம் வர, இதனால் தங்கள் மனத்திற்கு வருதத முண்டாமென்று ஷை முதலியார் அவர்களிடத்தில் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டேன். மற்றவை அவாளிடத்திற்றானே யிருக்கிறது. இதனைத் தாங்கள் அறியவேண்டும். ம-ா-ா-ஸ்ரீ சீனிவாச முதலியார் மிகவு நல்லவர்கள், சிநேக பாத்திரர்கள், நல்ல புத்திமான்.

தங்கள் மட்டில் எழுதிய இந்தக் கடிதம் தங்கள் மட்டில் தானே இருக்க கிர்பை செய்யவேண்டும்.

மற்ற சங்கதிகளைப் பின்பு தெரிவிக்கிறேன். சரணம்.

இங்ஙனம் *
சிதம்பரம்
இராமலிங்கம்.

மாசி மீ ரு௨

* கையொப்ப மிட்டிருக்கக் கூடிய இடம் வழிபாட்டிற்காகக் கத்தரித்து எடுக்கப்பட்டிருக்கிறது.

இஃது

சென்னப்பட்டணம் ராயல் வோட்டெல் மஹா ராஜராஜஸ்ரீ முதலியா ரவர்கள் பு. வேலு முதலியார் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு வருவது.

சரூர் சரூர்

திருமுகம் 2

நடராஜப் பெருமான் திருஉளம்

23 - 5 - 1862

உ

சிவமயம்

அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்களைப் பூஷணமாக மேம்பாட்டிற் பூண்டு என் மனத்தி லிடைவிடாது கண் மணி போன்று இருந்த தங்கட்கு விண்ணப்பம்.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்பமுள்ளவனாக விருக்கின்றேன். சித்திரை மீ உயசூ உ தாங்கள் அனுப்பிய கடிதம் வையாசி மீ யஎ உ* என்னிடத்தில் வரப்பெற்றேன் நான் கனவினும் தங்களை மறக்கின்றவனல்ல. மறந்தவனுமல்ல. ஆனால் கால வேற்றுமையாலே நான் மறந்தவனாகத் தங்களுக்குத் தோற்றுகின்றது. அவ்வாறு எண்ணவேண்டாம் இது சத்தியம்.

நான் இந்த விசை பிரயாணப்பட்டு வருவது அவசியமானது என்று நம்பிக்கையோடு சொல்லுவேன். ஆயினும் சில தினம் ஏறும் அல்லது குறையும். அவ்வளவே அன்றி வருவது மாத்திரம் உண்மை. ஆகலில் தாங்கள் வரவேண்டுவதில்லை. அவசியம் நான் வருவேன் வருவேன் வருவேன். ஆனால் நடராஜப் பெருமான் திருவுளம் அறியேன். எவ்விதத்தினும் வருவதற்கு மாத்திரம் சந்தேகமில்லை. தங்கள் ஞாபகம் எக்காலத்திலும் என் மனத்தைவிட்டு நீங்காது விரித்து எழுதுவதற்கு சமய நேரிடாதபடியால் இந்த மட்டில் நிறுத்தினேன். மன்னிக்கவேண்டும். அநேக வந்தனம்.

வைகாசி மீ இங்ஙனம்
யக உ* சி, இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல் ஓட்டல் மஹாராஜ ராஜஸ்ரீ முதலியார் வேலு முதலியா ரவர்கள் திவ்ய சமுகத்திற்கு.

---

* இவற்றில் ஏதோ தவறு இருக்கிறது.

திருமுகம் 3

இடைவிடாத சிவ சிந்தனை

7 - 11 - 1862

உ

அன்பு அறிவு கல்வி கேள்வி முதலியவற்றிற் சிறந்து சிவநேயத்தில் நிறைந்து விளங்கிய தங்கட்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறே னல்லது வேறென்றும் விரும்பினே னில்லை. தாங்கள் சுமார் இருபது தினத்திற்கு முன் எழுதி தபாலில் அனுப்பிய கடிதம் கூடலூரில் வந்து சேரப்பெற்று அதிலுள்ள சங்கதிகளை யெல்லாம் அறிந்து கொண்டேன். நான் ஐப்பசி மீ ௰௪ உ கூடலூரைவிட்டுப் புறப்பட்டு அவசியமான ஒரு காரியம்பற்றி கருங்குழிக்கு வந்தேன். இனி தங்கட்கு முன் குறித்தபடி வட மேற்கே ஒரு ஊர்க்கு வேறொரு காரியத்தின் பொருட்டு சுமார் ௰ தினத்திற்குள் பிரயாணம் செல்வது உண்மை. அங்கிருந்து புறப்பட்டு சென்னபட்டணம் வருவது நிச்சயம். ஆனால் நிறைய மூன்று மாசஞ் செல்லும்போல் தோன்றுகிறது. தாங்கள் என் மேல் தயவுசெய்து அது பரியந்தம் சகித்திருங்கள். ா - ா நாயக்கரவர் களுக்கும் இவ்வாறே தெரியப்படுத்துங்கள். இது விஷயத்தில் செல வுக்கு ஒன்றும் வேண்டுவதில்லை. வேண்டியிருந்தால் வேண்டிய போது தெரிவிக்கிறேன். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிர தையொடு வைத்துக்கொண்டும் சிவபஞ்சாக்ஷரியையும் சிவபெருமான் திருவடிகளையும் இடைவிடாது சிநதித்து தியானித்து வரவேண்டு மென்பது என் பிரார்த்தனை. தங்களை ஒரு கணப் போதாயினும் மறந்த வனல்ல. தாங்கள் கூடிய மட்டில் சர்வஜாக்கிரதையோடும் இப்போது இருக்கிறபடியேயிருங்கள். இன்னுஞ் சில காலத்துள் விசேஷ சவுக்கி யம் நேரிடுமென்று உண்மையாகச் சொல்லுகிறேன்.

வந்தனம் வந்தனம்.

ஐப்பசி மீ — சிதம்பரம்

௰௩ உ — இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மஹாராஜ
ராஜஸ்ரீ முதலியார் வேலு முதலியா ரவர்கள்
திவ்ய சமுகத்திற்கு

திருமுகம் 4

அவ்வையார் திருவாக்கு சத்தியம்

2 - 3 - 1863

உ

சிவமயம்

அன்பு அறிவு தயவு முதலிய சுபகுணங்களிற் சிறந்து நமது கண்மணி போன்றுள்ள நண்பர்க்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

மாசி மாசம் அ உ யில் எழுதி தபாலில் விட்ட தங்கள் கடிதம் என்னிடத்து ஷெ மீ உய உ யில் வரப்பெற்று அதிலுள்ள சங்கதிகளை அறிந்த நான் துன்பக்கடலில் விழுந்தேன். இன்னும் எழுந்ததில்லை. ஆனால் எழுந்திராம லிருக்கமாட்டேன். தங்களுடம்பிற்கு அபக்குவ மென்று அறிந்த பொழுதே என் மனம் தங்களைப் பார்க்க வேண்டு மென்றும் தங்களுக்கு சவுக்கியம் உண்டாக வேண்டு மென்றும் கடவுளைச் சிந்தித்துக்கொண் டிருக்கின்றது. இது மாத்திரமோ. என் கண்கள் தங்களைக் காணவேண்டு மென்று துடிக்கின்ற என் கால்கள் தாங்களிருக்குந் திசையை நோக்கி நடக்கவேண்டுமென்று ஊருகின்ற. இவைகளைத் தற்காலத்தில் ஒரு பெரிய நிர்ப்பந்தந் தடுக்கின்றது. அதை தெரிவிக்கிறேன். நான் பொசிக்கின்ற ரெட்டியார் வீட்டில் தற்காலத்தில் எசமானராக விருக்கிற ராமகிருஷ்ண ரெட்டியார் என்பவர்க்கு சுமார் ௨ மாசந் தொடங்கி உஷ்ண பேதியாகிக் கொண்டிருந்தது. மத்தியில் மத்தியில் நிற்பதும் பேதியாவதுமாக இருந்தது. இப்பொழுது சுமார் இருபது தினமாக வரை கடந்த பேதியாகி எழுந்திருக்க மாட்டாமல் மலசலம் படுக்கையில்தான் விடும் படியான அவ்வளவு அசத்தியும் மெலிவுமாக இருப்பது. சுமார் எட்டு தினத்திற்கு முன் போய்விட்ட தென்று கைவிட்டு விட்டார்கள். பின்பு சிவானுக்கிரகத்தால் அணுமாத்திரம் சௌக்கியம்போல் தோற்றுகின்றது. இப்படிப்பட்ட வேளையில் நான் புறப்பட்டு வந்தால் உலகம் நிந்திக்கும். கடவுளுக்குஞ் சம்மத மிராது. ஆனபடியால் அஞ்சுகிறேன். என்ன செய்வேன். அவர்க்கு உடம்பு சிறிது பக்குவமானால் புறப்பட்டு விடுவே னிற்கமாட்டேன். கடவுள் என்ன நினைத்திருக்கிறாரோ, அதுவுந் தெரிந்ததில்லை. சிவானுக்கிரகத்தால் பக்குவப் படுவதாக விருந்தால் க? மாசஞ் செல்லும் சிறிது எழுந்து நடக்க வென்று தோற்றுகிறது. ஆதலால் கொஞ்சம் லகுவான வுடனே பிரயாணப்பட்டு தங்களைப் பார்க்க வருவேன். உண்மை. தாங்கள்

கூடியவரையில் சாக்கிரதையாக விருந்து உடம்பை பக்குவஞ்செய்து கொள்ளவேண்டும். நான் இடைவிடாது கடவுளைப் பிரார்த்திக் கிறேன்.

உ

சிவமயம்

தாங்கள் அஞ்சவேண்டாம். 'சிவாயநம வென்று சிந்தித்திருப் பார்க் கபாய மொருநாளு மில்லை உபாயம் இதுவே மதியா மிதல்லாத வெல்லாம் விதியே மதியாய்விடும்' என்ற **அவ்வையார் திருவாக்கு சத்தியம் சத்தியம் சத்தியம்.** ஆதலால் அதை இடைவிடாது சிந்தித் துக் கொண்டே வாருங்கள். தங்கள் பிணிகள் பறந்தோடிப்போம். இதை நம்பவேண்டும். தாங்கள் பயப்படாது இருக்க வேண்டும்.

ம–ா–ா–ஸ்ரீ நாயக்கரவர்களுக்கு தெரிவிக்கவேண்டியது ஒன்று. என்னெனில் நான் அவசியம் வருகிறேன். அது பரியந்தம் **தேக சாக்கிரதை மனோசாக்கிரதை** முதலான சாக்கிரதையோடு அஞ்சா மல் இருக்கவேண்டு மென்று தெரிவிக்க வேண்டும். ஸ்ரீ சிதம்பர சாமிகள், ம-ா-ா-ஸ்ரீ ரத்தன முதலியார் முதலானவர்களுக்கும் பர்வதம்மாளுக்கும் என் வந்தனம் குறிப்பிக்க வேண்டும். தாங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். வந்தனம்.

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

மாசி மீ
உ௰ உ.

திருமுகம் 5

நிம்மதி இல்லை

உ

சிவமயம்

நற்குணங்களிற் சிறந்த நண்பராகிய தங்கட்கு வந்தனம் வந்தனம். தாங்கள் பங்குனி மீ ௰அ உ சுக்கிரவாரம் காலையில் எழுதி விட்ட கடிதம் வரக்கண்டு அதிலுள்ள சங்கதிகளை அறிந்து கொண்டேன். இதன் அடியில் எழுதுகின்றவைகளை கவனமாகப் பார்க்கவேண்டும். என்னெனில் நான் பங்குனி மாசக் கடைசியில் வருவதாக முன் குறித் திருந்தது உண்மைதான். ஆனல் நான் ஒருவர் நிமித்தம் ஒப்புக் கொண்ட ஒரு காரியம் இன்னும் முடிவுபெற இல்லை. அது பங்குனி மீ கடைசியில் முடிந்தாலும் அல்லது சித்திரை மாசத்தில் முடிந்தாலும் முடிந்தவுடன் பிரயாணப்பட்டு அவ்விடம் வருவேன். இது உண்மை. இது நிற்க, எனக்கு நிம்மதியில்லாமல் தாங்க ளிவ்விடம் வந்தால்

தங்களுக்கு எப்படி நிம்மதி வரும். வாராது. ஆதலால் நான் அவ் விடம் வருமளவும் தாங்கள் இவ்விடம் வாராமலிருக்க வேண்டும். இதை அலக்ஷியமாக எண்ணவேண்டாம். எந்தவிதத்திலும் நான் அவ்விடம் வரத்தா னிருக்கிறேன். வருவேன் வருவேன். அவசரப் படவேண்டாம். அவசரப்பட்டால் நிம்மதி வாராது. ஆதலால் பொறுத் திருங்கள். எவ்விதத்திலும் என் இஷ்டப்படியே தாங்களிருந்தால் நன்மை. இது உண்மை உண்மை. கடிதம் அகப்படாத குறையால் இந்த மட்டில் எழுதினேன். மன்னிக்கவேண்டும். வந்தனம்.

பங்குனி மீ சி. இராமலிங்கம்
உ௰அ

ம-ா-ா-ஸ்ரீ முதலியார் வேலு முதலியார் அவர்கள் ...

திருமுகம் 6

பாயிரங்கள்

உ

சிவமயம்

அன்பு அறிவு கல்வி கேள்வி முதலியவற்றில் சிறந்த தங்களுக்கு வந்தனம். தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்பு கின்றேன். தங்கள் மனத்திலுள்ள குறிப்பை சிரஞ்சீவி சுந்தரப் பிள்ளை யால் தெரிந்துகொண்டேன். தாங்கள் உலகநடை தெரிந்த விவகாரிக ளாதலால் தாங்களே தங்கள் கருத்தின்படி செய்துக்கொள்வதில் யாதொரு விகற்பமும் நேரிடாதென்று நம்புகிறேன்.

நான் அது விஷயத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் தாங்கள் நேரே அவர்களை அழைத்து ஒருமையோடு தங்கள் கருத்தின்படி ஏற் பாடு செய்துக்கொள்வது உத்தமமாகத் தோன்றுகிறது. தங்கள் கருத் தின்படி செய்துக் கொள்வதற்கு நான் தடையானவ னல்ல.

ஆகலில் யாவர்க்கும் மனது விகற்ப மாகாதபடிக்கும் தயவு வேறு படாதபடிக்கும் தங்கள் கருத்தின்படி நடத்தலாம். மற்ற சங்கதிகளை தை மாதத்தில் தெரிவிக்கிறேன். வந்தனம்.

மார்கழி மீ இங்ஙனம்
௰ரு உ சிதம்பரம் இராமலிங்கம்.

தாங்கள் என் விஷயத்தில் மிகவும் சுதந்தர முடையவர்க ளாத லால் இப்படி எழுதினேன்.

அன்புள்ள ஐயா

நமது சுந்தரப்பிள்ளை எழுதின பாயிரம் நன்று யிருக்கின்றது. அதை அச்சிடுவிப்பீர்களாக.

அன்றி நமது சிதம்பர சாமிகள் பாயிரமும் நன்றாயிருக்கின்றது. அதையும் அப்படி செய்க. வந்தனம்.

திருமுகம் 7

திருச்சிற்றம்பலம்

அன்பு அறிவு இரக்கம் ஈஸ்வரபக்தி முதலிய நற்குணங்களாற் சிறந்த, எனக்கு நற்றுணையாக விளங்கிய தங்கள் சமுகத்திற்கு வணக்கஞ் செய்து வரையும் விண்ணப்பம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்டு மகிழ விருப்ப முள்ளவனாக இருக்கின்றேன்.

அன்புள்ள ஐயா, தாங்கள் ஆடி மீ ௰௬ உ விடுத்த கடிதம் நேற்றைய தினம் வரக்கண்டு அதிலுள்ளவைகளை அறிந்து கொண்டேன். இனி, இதன் அடியில் எழுதும் வரிகளைச்சற்றே தயவுசெய்து பார்க்கத் தொடங்கினால் தங்கள் தோள்களே துணையாகக் கொண்டு பார்ப்பீர்க ளென்று நம்புகிறேன். சுந்தரமுதலி என்பவரும், கந்த முதலி என்பவரும் பேரால் பெரியவர்களாகத் தோன்றினும் குணத்தால் குன்றிமணியிலும் சிறியவர்களாகக் காண்கிறார்கள்.

இவர் தற்காலத்திற் செய்த மோசம் தங்களுக்குச் சிறிது துன்பஞ் செய்வது. ஆனால் இதுபெரிதல்ல, இனி உடனே தங்களுக்கு உண்டு பண்ணிய நஷ்டத்துக்கு ஈடாக, இந்த இருவரும் மோசம்போய் நஷ்டப்பட, அதைக்கண்டு தங்களுக்கு நேரிடும் துன்பமே பெரிதாகக் காணுமென்று உண்மை யாகச் சொல்ல மாட்டுவேன். மோசஞ் செய்தவர் நாசமடைவார்கள் என்கிற உலக வழக்கு வீண் போகாது. இது குறித்துத் தாங்கள் கிலேசப்பட வேண்டுவதில்லை. தங்களுக்கு நடராஜப்பெருமான், ஒரு விதத்திலும் குறைவு வரச் செய்யார். இது சத்தியம். நான் அவ்விடம் வருமளவும், தாங்கள் தற்காலத்தி லிருக்கிறபடியே ஓர் அலுவலில் இருக்கவேண்டும் நான் வந்த பின்பு, தங்கள் இஷ்டப்படியே நடத்திக் கொள்ளலாம். என் தேகம், மறையாமலிருக்கு மாகில் எவ்விதத்திலும் தங்கள் கருத்தை நடராஜப் பெருமான் திருவடித்துணையைக் கொண்டு முடித்துவிப்பேன். இதில் சந்தேகம் வேண்டுவதில்லை.

என்னிடத்தில் தங்களுக்கு இருக்கின்ற பிரியம் எவ்வளவு அதில் எண்மடங்கு தங்களிடத்தில் எனக்கு இருக்கின்றதென்று நான் சொல்வதென்ன, கடவுளுக்குத் தெரியும். ஆதலால் என்னிடத்தில் அவ நம்பிக்கை வேண்டுவதில்லை. நான் வருவதற்குத் தடையென்ன வென்றால், நமது நடராஜப் பெருமானைக் கேட்குந்தோறும் "நல்லது

இன்னஞ்சற்றே பொறு, இன்னஞ்சற்றே இரு'' என்று உத்தரவாகிறது. இதை அசலார்க்குச் சொன்னால் நம்பார்கள். தங்கள் மட்டில் மாத்திரம் குறிப்பித்தேன். ஆனால் ''இன்னஞ் சற்றே யிரு'' என்றபடியால் இரண்டொருமாதமாகக் காணுகின்றது. தாங்கள் அவசரப்படவேண்டாம். இப்போது எவ்வளவு வருத்தப்படுகின்றீர்களோ அதற்குப் பதின்மடங்கு சௌக்கியம் பின்பு கிடைக்கும். இது உண்மை, உண்மை, உண்மை. நான் எவ்வகையாலும், இன்னும் இரண்டு மாதத்தில் வருகிறேன். அது பரியந்தம் பொறுத்திருக்க வேண்டும். சிவானுபவச் சொருபியாகிய சுவாமி சிதம்பர சுவாமிகள், வெள்ளை வேட்டி திருச்சிற்றம்பல சுவாமிகள், ஓதுவாமூர்த்தி சுந்தரம் பிள்ளை இவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்க மனமிருந்தால் குறிப்பிக்கலாம். இனி தாங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். சதா நடராஜப் பெருமானைச் சிந்தித்துக்கொண்டு அலுவலை நடத்த வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். வந்தனம், வந்தனம்.

புதுவை வேலு முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள் முற்றுப்பெற்றன.

3. மற்றைய அன்பர்களுக்கு வரைந்த திருமுகங்கள்

திருமுகம் 1

சிவஞான விருப்பினர்

2 - 8 - 1866

உ

சுபம் உண்டாக. சுபம்.

அன்பு அறிவு ஒழுக்கம் கருணை முதலிய நன்மைகளாற் சிறந்து சிவத்தைப் பொருளென் றுணர்ந்து சன்மார்க்கத்தில் விளங்குகின்ற தங்கட்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்பமுடைய வனாக விருக்கிறேன்.

அன்புள்ள ஐயா - சுமார் இருபத்தைந்து தினத்திற்கு முன் இவ் விடத்திலிருந்து சிவஞான விருப்பினராகிய ராமலிங்க மூர்த்திகளும் சண்முகப் பிள்ளை என்பவரும் தங்களிடம் போய் வருவதாகக் குறித்து வந்தார்கள். அவர்கள் அவ்விடம் வந்திருப்பதும் வேறிடம் போயிருப் பதுந் தெரியவில்லை. தங்களிடத்தில் அவர்கள் இருந்தால், தற்காலம் அவ்விடத்தில் மழை யில்லாமையால் மிகவும் நிற்பந்தமாக விருப்ப தாய் கேள்விப்படுகிறேன். ஆதலால், தாங்கள் அவர்களை இவ்விடம் வரும்படி செய்யவேண்டும். அவர்கள் தங்களிடத்தில் இல்லாமல் வேறிடத்தி லிருந்தால், அவ்விடம் இவ்விடமென்று எனக்குத் தெரி விக்கவேண்டும். தாங்களும் சிவத்தியான சகிதர்களாய் தேக விஷயத் திலு மற்றைக் குடும்ப விஷயத்திலும் சர்வ சாக்கிரதையோடு இருக்க வேண்டும். நற்குணத்திலும் சிவபத்தியிலும் சிறந்த தங்கள் தம்பி யார்க்கும் தங்கள் புத்திர சிகாமணிக்கும் என் க்ஷேமம் குறிக்கவேண் டும். நான் தற்காலம் கூடலூரி லிருக்கின்றேன். வந்தனம். நமது ராமலிங்க மூர்த்திகளுக்கும் வந்தனம்.

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

அக்ஷய ஹு ஆடி மீ ௰௧ உ

பதில் உத்தரம் தபால் மார்க்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

இஃது

திருநறுங்குன்றம் மஹாராஜராஜஸ்ரீ நயினர் ராமசாமி நயினரவர்கள் திவ்விய சமுகத்திற்கு

திருமுகம் 2.

ஆருதாரத்தில் அனுகதம்

சத்குரவே நம:

கல்வி கேள்விகளிற் சிறந்து அருளறி வொழுக்கங்களி னியைந்து விளங்குகின்ற தங்கட்கு அனந்த முறை வந்தனம் வந்தனம். தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்ப முள்ளவனாக விருக்கிறேன். தாங்கள் கொத்தன் வசம் அனுப்புவித்த கடிதமும் நாகவல்லியும் சப்பிர பலங்களும் வரப்பெற்றேம். இவ்விடம் கடிதம் அனுப்புந்தோறும் இந்தப் பிரகாரம் அனுப்புவது பிரயாசம் என்று என் மனம் என்னை வருத்துகின்றது. இது நிற்க. இனி தங்கள் கடிதத்துக்கு உத்தரம் எழுதுகிறேன்.

அதாவது தங்கள் தமயனார் விஷயத்தில் தாங்கள் எத்தன்மை யுடையவர்களாக இருக்கின்றீர்களோ அத்தன்மை நானும் உடையவனாக விருக்கின்றேன்.

சீரகத்தைக் கியாழஞ் செய்து, அந்த கியாழத்தில் சுக்கை யூற வைத்து, சாமம் சென்ற பின்பு எடுத்து உலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு, அந்தத் தூள் காசிடை, அதில், பஸ்பம் அரிசியிடைவைத்து, நெய்யில் குழைத்துச் சாப்பிடவேண்டும். பத்தியம் இச்சா பத்தியம். தலைமுழுக்கு பசு நெய்யில் முழுகவேண்டும். ஆருதாரத்தில் அனுகதத்தில் சத்தி சிவம் பத்திதழில் இருப்பதாகவே கொள்ளவேண்டும். இரண்டிதழ் ஆசனமாகக் கொள்ளவேண்டும். அன்றியும், பன்னிரண் டிதழில் எட்டிதழ் சத்தியிருப்பு, இரண்டிதழ் சிவத்தின் இருப்பு, மற்றை யிரண்டிதழ் மேலுங் கீழும் அடையிருப்பு. இது இன்னுஞ் சிலநாள் சென்ற பின்பு தங்களுக்கு நன்றாக அனுபவப் படும். கூடலூர்க்கு மனிதனை அனுப்ப அந்த வேஷக்காரன் எவ்விடத் துக்கோ போயிருக்கிறதாக இன்னும் பத்துதினஞ் சென்ற பின்பு வருவா னென்று அவன் பெண்சாதி சொன்னதாகச் சமாச்சாரங் கொண்டுவந்தான். இனி இன்னும் சுமார் ஒரு மாதஞ் சென்ற பின்பு தங்கள் கருத்தின்படி தெரிவிக்கிறேன். மன்னிக்க வேண்டும். தாங்கள் தங்கள் தேகத்தை பொன்போல சர்வ சாக்கிரதையோடு பாராட்டிக் கொண்டு வரவேண்டும். வந்தனம் மன்னிக்க. வந்தனம்.

இங்ஙனம்

ஆவணி மீ அ உ

தங்களிஷ்டன்

சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது க்ஷேமம்

மஹாராஜராஜஸ்ரீ பிள்ளை பொன்னுசாமிப் பிள்ளை யவர்கள் திவ்விய சமுகத்திற்கு. க்ஷேமம்.

திருமுகம் 3

சிவ புண்ணியத் திருவிழா

3 - 6 - 1868

உ

சிவமயம்

சத்தியக் கியானனந்த சொருப சாக்ஷாத்கார சுத்த சிவகுல சிவாசார சிவானுபவ சிவப் பிராமணோத்தம சிவத்துவ போதக சிகாமணிகளாகிய சுவாமி யவர்கள் பரம கருணாம்பர பத்ம பாத யுகள சந்நிதிக்கு அடிமை பக்தி பூர்வகமாக அனந்த முறை தண்டனிட்டுச் செய்து கொள்ளும் விண்ணப்பம்: சுவாமிகள் கடாக்ஷித்தருளிய நிருபத்தைப் பூசித்து வாசித் தறிந்தேன். அந்த நிருபத்திற் குறித்தபடி சிவ புண்ணியத் திருவிழாவைத் தரிசிக்கும்படி பிரயாண சித்தனயிருந் தேன். இத் தருணத்தில் இந்த பார்வதிபுரத்தில் பிராமணர் இரு வர்களுக்கு இராஜாங்க விவகார வழியில் ஒரு பெரிய ஆபத்து நேரிட்டு அவர்களைப் பிடித்துக்கொண்டு போயிருக்கின்றார்கள். அவர்கள் இத் தருணத்தில் சிறிது சகாய் செய்தால் உயிர் வாழ்வோம் இல்லாவிடில் உயிரிழந்து விடுவோ மென்று பரதபித்து எழுதிய கடிதம் வந்து சேர்ந்தபின் நான் அவ்விடம் வரும் பிரயாணம் ஆலசியப்பட்டது. இங்கு கூடியவரையில் அவர்கள் விஷயத்தில் சகாய் செய்ய வேண்டுவது கருணைக்கு இலக்ஷிய மாகலில், என் மனது இவ்விடம் வருவதற்கும் அவ்விடம் போவதற்கும் துணிவு தோற்றாமல் ஊசலாடுகின்றது. இது சிறிது துணிவு பெற்றபின் நான் வருகின்றேன். தற்காலம் அடிமை வந்திருப்பதாகவே சாமிகள் திருவுளங்கொண்டு மேற்குறித்த சிவ புண்ணியத் திருவிழாவை சிறப்பாக நடத்துவிக்க வேண்டு மென்றும் சுவாமிகள் திருவடிகளைச் சிந்தித்துப் பிரார்த்திக்கின்றேன். மற்றவைகளை நான் சந்நிதியில் வந்து விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன். அடிமையின்மேல் கருணாநிதியாகிய சாமிகள் திருவுள்ளம் வேறுபடாதென்கிற துணிவுபற்றி இங்ஙனம் விண்ணப்பம் செய்துகொண்டேன். சாஷ்டாங்க தெண்டன்.

விபவ ௵	இங்ஙனம்
வைகாசி மீ	சிதம்பரம்
உ௰௩ உ	இராமலிங்கம்.

இஃது
சிதம்பரம் துக்குடி ஆடூரில் சத்குணகர தயாம்பர
சாமிகள் சபாபதி சிவாசாரிய சாமியவர்கள் சுபகுண
நடன விபவ சந்நிதிக்குப் பார்வதிபுரத்தி லிருந்து
வருவது.

திருமுகம் 4

இலக்கண நுண்மாண்இயல்

உ

உணர்ந்தோரா னியல்வகைய வின்ன வென்றவற்றிற் பின்மொழி மதிக்கு முன்மொழி மறைக்கு முதலீறு விளங்க முடிப்பதாய பின்மொழி யடைசார் முன்மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு

பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளைத்து வணக்கஞ் செய்த ககந நீரெழி லென்றும் வான் வழங்கு பண்ணிகார மென்றும் நாகச்சுட்டு மீ னென்றும் வேறு குறிப்ப தொன்று

அண்மைச் சுட்டடுத்த வேழாவதன் பொருண்மை யும்மையடுத்த பல்லோர் வினைப் பெயர்ப் பொருள் குறிஞ்சி யிறைச்சிப் பொருளொன்ற ளேடு புணர்ப சேய்மைச் சுட்டடுத்த வத்திறத்தியல்யாது

இரண்டனுருபொடு புணர்ந்த தன்மைப் பன்மை யாருவதன் பொருட் டாக்கினர்க் குய்த்த கற்பிய லதிகரிப்பின் வருந் தலைமகட் பெயர விரண்டினோடிரண் டிரண் டுகக் கழிவிலைப் பெயரவு மகார வீற்று முதனிலைத் தனிவினைச் செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சத் தனவாகக் கலம்பகச் செய்யுளுறுப்பாற் சிறத்தும்

இரு வகை முதற்பொருளொன்றன் பாகுபாட் டுறுப்பிற் குறித்த வைம் பெரும் பூதத்தோர் விசேடணத் தெதிர்மறை நடுக்குறை யியற்சொற் பெயர வுயிர்ப் பெயராக வெதிர்காலங் குறித்து நின்றது சிலவினைச் சார்பான் விலங்கு சூடிய வரைவில் வெளியாம்

இதனோ டிரு வகைப்பட்ட வோர் சார் புது நிலஞ் செல வுய்த் தனம் வேண்டுழி வேண்டியாங் குய்க்க மற்றைய பின்னர் வரைதும்

இற்றே விசும்பிற் கணைச்சலம்

இங்ஙனம்
நங்கோச்சோழன் வீரமணி
சூடியார் திருவாணைப்படிக்கு.

திருமுகம் 5

திருவருள் வல்லபம்

உ

சுவாமிகளுக்கு வந்தனம்.

தங்கட்குத் தற்காலம் நேரிட்டிருக்கிற ஆபத்தைக் குறித்து அஞ்ச வேண்டாம். அஞ்சவேண்டாம். இந்த ஆபத்தால் தேக ஆனி நேரிடாது. கால பேதத்தால் நேரிடினும் நான் தங்களை எவ்விதத்தாலாயினும் திருவருள் வல்லபத்தைக் கொண்டு திரும்பவும் பார்ப்பேன், பேசிக் களிப்பேன். இது சத்தியம். இது சத்தியம். இந்த வார்த்தை யென் வார்த்தை யன்று. **திருச்சிற்றம்பல முடையார் செல்வப்பிள்ளை வார்த்தை.** தேகத்திற்கு ஆனி வருவதாகக் கண்டாலும் அஞ்சவேண்டாம். வந்தால் வரட்டும். திரும்பவும் உடனே மிகுந்த விரைவில் என்னைப் பார்த்துப் பேசிக் களிப்பீர்கள். திருவருளாணை யிது. சற்றுங் கலங்க வேண்டாம். திருச்சிற்றம்பலம்.

மற்றைய அன்பர்களுக்கு எழுதிய திருமுகங்கள் முற்றுப்பெற்றன.

4. திருமுகக் குறிப்புகள்

1. நமது நேயம்

தேக முதலிய கருவிகளைச் செவ்வையாக நிறுத்தி ... பஞ்சாக்ஷரியும் திருவடியும் ஒன்றே நமது நேயம்.

2. தியானமயம்

தியான மயமானல் பொசிப்பு மாறும்.

3. இறைவனது எண்ணம்

கல்வி கேள்விகளாற் சிறந்து மெய்யுணர்வோடு விளங்கிய . . . தாக.

. . . என் எண்ணமொன்று இறைவன் எண்ணமொன்ருனல் அறிவறிந்த உமக்கு இவ் விஷயத்தில் இன்னும் விரிக்க வேண்டுவதென்ன. இருப்பது என் எண்ணம். கருத்தன் எண்ணம் எவ்வண்ணமோ தெரிந்ததில்லை. தாம் தேகமுதலிய கருவிகளை இயற்பட நடத்தல் வேண்டும். சிவத்தியானத்தோடு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நான் அவசியம் திருவருளை முன்னிட்டு சில காலத்தில் அங்ஙனம் வருவேன் . . . துணிவு . . . திண்ணம்.

4 தேகபக்குவமும் சிவத்தியானமும்

என் கண்மணி போன்று என்னுள்ளிருந்த தமக்கு . . . உண்டாவதாகவும், தேகத்தைப் பக்குவமாக வைத்துக்கொண்டு சிவத்தியானஞ் செய்து கொண்டு வர வேண்டியது.

5. வாழ்த்து

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலும் சிறந்து நமது நற்றுணையாய் விளங்கிய தங்கட்கு குருகடாக்ஷத்தால் . . . தாக.

6. திருவடித்துணை

சற்குண சிரோமணியாகிய நமது கண்மணி போன்று விளங்கிய . . . சிவக்கியானமும் . . . வனவாக.

. . . விடுத்த லிகிதம் அங்ஙனர் வரப்பெற்றதும் பெருததும் புலப்பட்டேயின்று. புலப்படுதற்கு அவாவுகின்றும். தேக முதலிய கருவிகளைக் கடைக்கணித்து வருக. சிவபெருமான் திருவடித் துணையன்றி வேறு துணையின்மையின் அவற்றை யிடைவிடாது நினைக.

7. நன்னெறி

செல்லும் போது செலுத்துவேன் சிந்தையை
வெல்லும் போது விடுவேன் வெகுளியை*

8. திடதேகமும் தியானமும்

தேகதிட முண்டாகும்படி உபசரித்துக்கொண்டு ஜாக்கிரதையோடு தியானித்துக்கொண் டிருக்க.

9. முத்திநிலையும் தேகசாதனமும்

அநித்திய மென்பது அரிபிரமாதிகளுக்கு முள்ளது. முத்தியடையும் வரையில் தேகம் வேண்டும்.

10. ஜாக்கிரதை

இங்கு வந்திருக்கிறவர்க ளெல்லாம் அதிகாரம்பண்ண வந்திருக்கின்றார்கள். நீ என்னைப்போல் ஏழை. தனிமையாய் ஜாக்கிரதையாய் இரு.

---

* செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே.

வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினாற்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே.

— திருமந்திரம் 2103 ; 2303

11. சுக்கிலம் மேலேறல்

சுக்கிலம் மேலேற்றும் பழக்கத்திற்குப் பத்தியம் தூக்கம் சோம்பல் ஆகாது.*

12. சிவானந்த மேலீடு

ஹிதமஹிதம் கெட — திரோதானம் கெடும்.
இருவினை யொப்பால் — மாமாயை பஞ்சகிருத்தியம் போம்,
முன்னிலையான அவன் அவள் அது நீங்கிப் பரமாகக் கண்டால் — கர்மம் கெடும்.
வடிவின் வாசனை கெட — மாயை நீங்கும்.
சிவானுபவம் மேலிட — ஆணவம் கெடும்.

---

* சுக்கிலம் மேலேறுவதாவது: கீழே சுக்கிலப்பையில் சேர்வது குறைந்து மேலே பிரமரந்திரத்தில் சேர்வது மிகுதிப்படுதலாம். சப்த தாதுக்களுள் அஸ்தி மூலாதாரத்திற்கும், மேதை சுவாதிட்டானத்திற்கும், மாமிசம் மணிபூரகத்திற்கும், உதிரம் அனாகதத்துக்கும், துவக்கு விசுத்திக்கும், மச்சை ஆக்ஞைக்கும், சுக்கிலம் சகஸ்ராரத்திற்கும் உரியன. உற்பத்தியாகும் சுக்கிலத்தில் இரண்டரை வராகனெடைக்கு ஒரு வராகனெடை கோசநுனியிலும், ஒரு வராகனெடை நாபியிலும், அரை வராகனெடை பிரமரந்திரத்திலும் சேர்கின்றதென்பது அடிகளின் உபதேசக் குறிப்பு (பக்கம் 260). கோசத்திற் சேர்வது புணர்ச்சியில் வெளிப்பட்டுக் கருத்தரிக்கச் செய்வது. பிரமரந்திரத்திற் சேர்வது அமுதமாவது. சத்தியப் பெருவிண்ணப்பத்தில் ‘மேனிலைச்சுக்கிலம் கீழ்நிலைச்சுக்கிலம் முதலிய சுக்கில வகைகளும்’ என்று அடிகள் கூறுவதில் கீழ்நிலைச்சுக்கிலம் கீழே விந்துப்பையில் சேர்வதையும் மேனிலைச் சுக்கிலம் சகஸ்ராரத்திற் சேர்வதையும் குறிப்பதா யிருக்கலாம். சிவ பெருமான் ஊர்த்துவரேதஸ் உடையவர். விந்து மேலேறுவதே ஊர்த்துவ ரேதஸாம் காமத்தால் விந்து கீழிறங்கும், ஞானத்தால் மேலேறும்.

தூக்கத்தைப்பற்றி அடிகளின் உபதேசக்குறிப்பு பக்கம் 307; 319 காண்க. ‘ தூக்கமும் சோம்பும் என் துன்பமும் அச்சமும் ஏக்கமும் நீக்கிய என் தனித் தாயே’ என்பது அடிகள் அருளிய அருட்பெருஞ் சோதி அகவல் (1113-4) “நெடுநீர் மறவி மடி துயில் நான்கும் கெடுநீரார் காமக்கலன்’ என்பது திருக்குறள் (605). நம்மை நஷ்டஞ் செய்வன நான்கு என்று அடிகள் கூறும் ஆகாரம், நித்திரை, மைதுனம், பயம் என்னும் நான்கும், இந்நான்குடன் சோம்பலும் சேர ஆக இவ்வைந்தும் தத்துவந் தொண்ணூற்றாறில் பூதகாரியம் இருபத்தைந்தில் தேயுவின் காரியங்களாம். ஆகாரம் $\frac{1}{4}$, நித்திரை $\frac{1}{8}$, மைதுனம் $\frac{1}{16}$ பயம் 0 என்று அடிகள் வரையறுத்திருத்தல் அருமையானது (நித்திய கருமவிதி, பக்கம் 247).

13. தசகாரியம்

தத்துவரூபம் — பூதமுதல் நாததத்துவமீறாக உள்ளவெல்லாம் நாமல்லவென்று அறியும் போதம்.

தத்துவதரிசனம் — தத்துவம் சடம், சடம் நம்மையறியாது, நாம் சித்துருவென்று அறியும் போதம்.

தத்துவசுத்தி — சித்துருவினை மறைத்தது இஃதென்றோர்தல்.

ஆன்மரூபம் — ஆணவமகன்று ஆசாரியனருளால் தன்னை யடைதல்.

ஆன்மதரிசனம் — நாம் சித்துருவன் என்று மகிழ்தல்.

ஆன்மசுத்தி — செயலற்று ஈசனருள் அடைதல்.

சிவரூபம் — சிவமாகத் தரிசித்தல்.

சிவதரிசனம் — உயிர் ஆனந்திப்பது.

சிவயோகம் — எல்லாந்தானாக யோகு செய்தல்.

சிவபோகம் — சிவத்தோடு அத்துவிதமாகி நிற்றல்.

திருமுகக் குறிப்புகள் முற்றிற்று.

அழைப்புகள், அறிவிப்புகள், கட்டளைகள்

1.	சாலைத் தொடக்க விழா அழைப்பு	25 - 4 - 1867
2.	சாலை விளம்பரம்	23 - 5 - 1867
3.	கிளைச் சாலைகள்	1867
4.	சன்மார்க்க விவேக விருத்தி	1867
5.	சன்மார்க்க போதினி	1867
6.	சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம்	27 - 4 - 1870
7.	அன்பர்களுக்கு இட்ட சாலைக் கட்டளை	26-10 - 1870
8.	சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை	30 - 3 - 1871
9.	சன்மார்க்கப் பெரும்பதி வருகை	12 - 4 - 1871
10.	சமரச வேத பாடசாலை	11 - 1 - 1872
11.	சபை விளம்பரம்	25 - 1 - 1872
12.	சாலையிலுள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை	9 - 3 - 1872
13.	சன்மார்க்கப் பிரார்த்தனை	12 - 5 - 1872
14.	சபை வழிபாட்டு விதி	18 - 7 - 1872
15.	சன்மார்க்க சங்கத்தார் பழக்க விதி	25-11 - 1872
16.	சித்திவளாக விளம்பரம்	8 - 9 - 873
17.	சித்திவளாக வழிபாட்டு விதி	1873
18.	சன்மார்க்க சங்கத்தார்க்கு இட்ட இறுதிக் கட்டளை	30 - 1 - 1874

1. சாலைத் தொடக்கவிழா அழைப்பு

(1)

உ

கடவுள் துணை

சாந்த சித்தமுடைய சாமியவர்களுக்கு வந்தனம்.[1]

சிதம்பர தலத்துக்குச் சுமார் இருகாத வழிநடை யெல்லையில் கூடலூரைச் சார்ந்த வடலூ ரென்றும் பார்வதிபுரமென்றும் வழங்கப் படுகின்ற ஊருக்கு வடபுரத்தில் சென்ன நகரிலிருந்து கும்பகோணத் திற்குப் போகின்ற பெரிய பாட்டை கஉடு-வது மயிலில் மஞ்சகுப்பத்தி லிருந்து விருத்தாசலம் போகின்ற பாட்டை உங-வது மயிலில் பிரபவ ஞு வைகாசி மீ ௰கஉ [2] குருவாரம் உதயகாலம் சிங்கலக்கினத் தில் **சமரச வேத தருமச்சாலையின்** செங்கற் கட்டடங்களுக்கு அஸ்தி வாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலை யெடுப்புகளுந் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன்மேய்ந்த மண்கட்டடச் சாலையில் ஒரு சார் ஆகார தரும விருத்தியுந் துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருக்கின்றது.

ஆதலால் அந்தத் தினத்தில் அவ்விடத்தில் அன்பர்களுடன் எழுந்தருளி அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

(2)

உ

கடவுள் துணை

அன்புந் தயையுமுடைய ஐயா வந்தனம்.[3]

சிதம்பர தலத்திற்குச் சுமார் இருகாத வழி நடை யெல்லையில் கூடலூரைச் சார்ந்த வடலூ ரென்றும் பார்வதிபுர மென்றும் வழங்கப் படுகின்ற ஊருக்கு வடபுறத்தில் சென்ன நகரி லிருந்து கும்பகோணத் திற்குப் போகின்ற பெரிய பாட்டை கஉடு-வது மயிலில் மஞ்சகுப்பத்தி லிருந்து விருத்தாசலம் போகின்ற பாட்டை உங-வது மயிலில் பிரபவ ஞு வைகாசி மீ ௰கஉ குருவாரம் உதய காலம் ருஷப லக்கினத் தில் [4] **சமரச வேத தருமச்சாலையின்** செங்கற் கட்டடங்களுக்கு அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலை யெடுப்பு

1. அடிகளின் பெயரால் துறவிகளுக்கு அனுப்பப்பெற்றது.
2. 23 - 5 - 1867
3. சங்கத்தார் பெயரால் மற்ற அன்பர்களுக்கு அனுப்பப்பெற்றது.
4. லக்கின மாற்றம் பிரதி பேதம் போலும்

களுந் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன் மேய்ந்த மண்கட்டடச்சாலையில் ஒரு சார் ஆகார தரும விருத்தியுந் துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருக்கின்றது.

ஆகலில் அந்தத் தினத்தில் தாங்கள் தங்கள் மனைவியர் புத்திரர் துணைவர் தந்தையர் தாயர் உறவினர் சிநேகர் முதலியவர்களோடும் வந்திருந்து அந்தத் தரும விசேஷ விருத்தியை விபவமாக நடத்துவிப் பீர்களென்று நம்புகின்றோம்.

பிரபவ ஞு சித்திரை மீ யசஉ	சமரச வேதத் தருமச்சாலைத் தலைவராகிய சிதம்பரம் இராமலிங்க பிள்ளை யவர்கள் கட்டளைப்படி ஷை தருமச்சாலையை நடத்து கின்ற சமரச வேத சன்மார்க்க சங்கத்தாரில் ஒருவராகிய மு. அப்பாசாமி செட்டி

---

2. சாலை விளம்பரம்

23 - 5 - 1867

உ

திருச்சிற்றம்பலம்

ஜீவகாருண்ய ஒழுக்க விளம்பரம்

கல்வி கேள்விகளாற் பகுத்தறியத் தக்க அறிவையுடைய உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்க ளனைவர்க்கும் வந்தனஞ் செய் தறிவிக்கை.

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்க ளிந்தப் பிறப்பினு லடையத் தக்க பிரயோசனத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடையவேண்டும்.

அந்தப் பிரயோசனம் யாதோ வெனில் : எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லாச் சீவர் களையும், எல்லாச் செயல்களையும், எல்லாப் பயன்களையும் தம்து பரி பூரண இயற்கைவிளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கைஉண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கையின்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வை அடைவதே இந்த மனிதப் பிறப்பினுல் அடையத் தக்க பிர யோசனமென் றறியவேண்டும்.

---

5. 25 - 4 - 1867 வியாழன்

இயற்கையின்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனால் அடையவேண்டு மெனில்: கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக் கொண்டே அடைய வேண்டுமென் றறியவேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனால் பெறக்கூடு மெனில்: ஜீவகாருணிய ஒழுக்கத்தினற் கடவுளருளைப் பெறக் கூடு மல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாதென்று உறுதி யாக அறிதல்வேண்டும்.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவதெது வெனில்: எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகளுக் குண்டாகின்ற பசியென் கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே முக்கிய லக்ஷிய மென்றறியவேண்டும்.

ஆகலில் அந்த ஜீவகாருணிய ஒழுக்கத்தை நடத்தும் பொருட்டு கூடலூர் ஜில்லா கூடலூர் தாலூக்காவைச் சார்ந்த வடலூ ரென் கின்ற பார்வதிபுரத்தில் **சமரச வேத தருமச்சாலை** யென்றொரு தருமச்சாலை ஏற்படுத்தப்பட் டிருக்கின்றது. அது பலர் சகாயத்தா லேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயை யுடைய புண்ணியர்கள் தங்கள் தங்களாற் கூடியவரையில் பொருண் முதலிய உதவிசெய்து அதனால் வரும் லாபத்தைப் பாகஞ் செய்துகொள்ள வேண்டு மென்பது எங்கள் கோரிக்கை.

உலக முழுதும் ஆளுகின்ற சக்கிரவர்த்தியாகிய அரசனுக்கும் உலக முழுதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்த வீரனுக்கும் மூன்றாசைகளையும் ஒழித்து உண்மையறிந்து பிரமானுபவத்தைப் பெற்ற ஜீவன் முத்தர்களுக்கும் பசி நேரிட்டபோது மன மிளைத்தும் வலி குலைந்தும் அனுபவந் தடைபட்டும் வருந்துகின்றார்க ளென்றால், எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டால் என்ன பாடுபடார்கள்! பசி அதிகரித்த காலத்தில் முகம் புலர்ந்து போகின்றது, உச்சி வெதும்புகின்றது, பிரமரந்திரம் அடைபடு கின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது, கண் பஞ்சடைந்து எரிந்து நீருலர்ந்து குழிந்து போகின்றது, நாசி அழன்று கலைமாறி பெருமூச்சு விடுகின்றது, நாக்கு நீருலர்ந்து தடிப்பேறுகின்றது, மெய் முழுதும் கருகி சக்தியற்று ஸ்மரணை கெடுகின்றது, வாக்கு குழறித் தொனி மாறுகின்றது, கைகளும் கால்களும் தடதடத்துச் சோர்ந்து தடுமாறுகின்றது, மலசல வழி வெதும்பி வேறுபடுகின்றது, உரோமம் வெறிக்கின்றது, பற்கள் கருகித் தளர்கின்றது, இரத்தமுஞ் சலமும் சுவறுகின்றது, சுக்கிலம் தன்மை மாறி வறளுகின்றது, எலும்புகள் குழைந்து நோக்கா டுண்டாகின்றது, நாடி நரம்புகள் வலியிழந்து

மெலிந்து கட்டுவிடுகின்றது, வயிறு பகீரென்கின்றது, மனசு தளர்ந்து நினைவு மாறுகின்றது, புத்தி கெட்டு நிலை மாறுகின்றது, சித்தம் கலங்கித் திகைப் பேறுகின்றது, அகங்காரம் குலைந்து அச்ச முண்டாகின்றது, பிரகிருதி சுருங்குகின்றது, கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் மறைபடுகின்றது, தாபசோபங்கள் மேன்மே லுண்டாகின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஏககாலத்தி லுண்டாகின்றது எல்லாச் சீவர்களுக்கும் பொதுவாகவே யிருக்கின்றது. ஆகாரமுண்டு பசிநீங்கிய தருணத்தில் தத்துவங்க ளெல்லாம் தழைந்து கடவுள் விளக்கமும் ஆன்மவிளக்கமும் அகத்திலும் முகத்திலும் வெளிப்பட்டு, திருத்தியின்ப முண்டாகின்றது. ஆசலில் நாமனைவரும் எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டபோது மிகவும் கருணையுள்ளவர்களாகி நம்மாற் கூடியமட்டில் அந்தப் பசியென்கின்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்ம லாப மென்று அவசியம் அறியவேண்டும்.

பிரபவ ஹு
வைகாசி மீ ௰௯௨
பார்வதிபுரம் சமரச
வேத தருமச்சாலை

இங்ஙனம்
சமரச வேத
சன்மார்க்க சங்கத்தார்

---

3. கிளைச் சாலைகள்

1867

சமரச வேத தருமச்சாலையைச் சார்ந்த வைத்தியசாலை, சாஸ்திர சாலை, உபகாரச்சாலை, விருத்திசாலை, உபாசனசாலை, யோகசாலை, விவகாரசாலை - இவைகளைக்குறித்து சமரச வேத சன்மார்க்க சங்கத்தவர்கள் ஏற்படுத்திக்கொண்ட கையொப்ப ஏற்பாடு.

---

4. சன்மார்க்க விவேக விருத்தி

1867

உ

சற்குரவே நம:

சன்மார்க்க விவேக விருத்தி

விளம்பரம்

அறிவுடைய நண்பர்க்கு அன்பொடு வந்தனஞ்செய்து அறிவிக்கை. நண்பர்களே!

உலகில் வழங்கும் பிறப்புகளுள் உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்ட நாமனைவரும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பொருளின் அனுபவங்களைக் காலமுள்ள போதே அறிந்து அனுபவித்தல் வேண்டும். அங்ஙன மறிந்து அனுபவிப் பதற்குச் சன்மார்க்க விவேக விருத்தியே சாதனமாதலின், அதனை யடைதற்குத் தக்க நன்முயற்சிக் கோர் முன்னிலையாகச் **சன்மார்க்க விவேக விருத்தி** யென்னும் பத்திரிகை யொன்று வழங்குவிக்கு நிமித்தம், இதனடியில் தனித்தனி நம்மா லியன்ற வளவில் மாதந் தோறும் பொருளுதவி செய்வதாகக் கையொப்பமிட்டு மேற்குறித்த வண்ணம் நமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வழங்குவிப்போமாக.

இங்ஙனம்
சன்மார்க்க சங்கத்தார்.

எண்	ஊர்பேர்	கையொப்பம்	துகை ரூ.	அ.	பை.
௲	சிதம்பரம்	இராமலிங்கம்	க	0	0
உ	கூடலூர்	வெங்கடேசய்யர்	க	0	0
ங	கூடலூர்	மு. அப்பாசாமி செட்டி	க	0	0
ச	கூடலூர்	துரைசாமி நாயகன்	க	0	0
ரு	ஷை யூர்	சின்னசாமிப் பிள்ளை	0	அ	0
சு	ஷை யூர்	கா. அய்யாசாமி	0	அ	0
எ	கூடலூர்	தேவநாத பிள்ளை	0	ச	0
அ	கூடலூர்	பழூ. சின்னதம்பி	0	உ	0
கூ	ஷை	ம. வீராசாமி	0	உ	0
க0	ஷை	கா. இரத்தின ௲	0	உ	0
கக	ஷை	கா. மு. தேவநாயகம்	0	அ	0
கஉ	ஷை	வி. இராஜா	0	ச	0
கங	ஷை	இராமையர்	0	உ	0
கச	ஷை	விசுவலிங்க முதலியார்	0	உ	0
கரு	புதுவை	குமரப்ப சதாசிவ செட்டி	0	அ	0
கசு	கூடலூர்	விஜயரகுநாதன்	0	உ	0
கஎ	ஷை	அப்பாவுஞானியார்	0	உ	0
கஅ	புதுவை	மு. அண்ணு சுப்பராய௲	0	உ	0
ககூ	புதுவை	F. குப்புசுவாமி நாயுடு	0	உ	0
உ0	கூடலூர்	ந. சிவசிதம்பர செட்டி	0	ச	0
உக	புதுவை	கி. துரசாமி	0	அ	0
உஉ	திருப்பாதிருப்புலியூர்	அ. க. பரமானந்தன்	0	சு	0
உங	திருமயிலை	முருகேச முதலியார்	0	உ	0
உச	திருக்கோவலூர்	சுப்பிரமணியன்	0	உ	0
25	அரசூர்	இராஜகோபாலு	0	அ	0

26	ஆலப்பாக்கம்	சு. நாயினுரெட்டி	௦	௮	௦
27	கூடலூர்	வரதராசன்	௧	௦	௦
28	டி புதுப்பாளய சிரஸ்ததார்	ரூமச்சந்திர ஜீ	௦	௮	௦
29	டி நாஜர்	வா.........ரெட்டி	௦	௮	௦
30	கூடலூர்	கெ.........தன்	௦	௨	௦
31	கூடலூர்	குமாரசாமி ஜீ தம்பி ஆறுமுகம்	௦	௨	௦
௩௨	கூ	ம. அரங்கநாதன்	௦	௪	௯
௩௩	புதுவை	கநகசபை	௦	௪	௦
௩௪	நெல்லி	கொமரகுரு	௦	௨	௦
௩௫	சிதம்பரம்	ஆனந்தநாதசண்முக சரணாலயன்	௦	௨	௦
௩௬	கல்பட்டு	ராமலிங்கம்	௦	௨	௦
௩௭	சி தருமச்சாலை	சண்முக பிள்ளை	௦	௨	௦
௩௮	க டி	நமசிவாயன்	௦	௨	௦
௩௯	சி வேட்டவலம்	அரங்கசாமி	௦	௨	௦
௪௦	வேட்டவலம்	அப்பாசாமி பண்டாரியார்	௧	௦	௦
௪௧	சிதம்பரம்	குழந்தைவேலு	௦	௨	௦
௪௨	சிதம்பரம்	பாவாடைப் பிள்ளை	௦	௨	௦
௪௩	சிதம்பரம்	நா. அருணாசலப் பரதேசி	௦	௨	௦
௪௪	பனப்பாக்கம்	ஆறுமுகம்	௦	௨	௦
௪௫	பொலவநூர்	வேலாயுதம்	௦	௨	௦
௪௬	பறங்கிப்பேட்டை	பரங்கிப்பேட்டை காதர் சாயபு	௦	௧	௦
௪௭	வடலூர்	ஆதிப் படையாச்சி	௦	௨	௦
௪௮	ஒறத்தூர்	அண்ணாமலை நயினார்	௦	௨	௦
௪௯	திருநறுங்குன்றம	சி. தானப்ப நயினார்	௦	௨	௦

---

5. சன்மார்க்க போதினி

1867

. . . . .

. . . . .

ஆபால விருத்தர்கள் வரையில் யாவர்க்கும் பயில்விக்கும் சன்மார்க்க போதினி என்கிற சாஸ்திர பாடசாலை யொன்று நியமிக்கப்படும்.

பார்வதிபுரம்
பிரபவ ஞு மீ ௨

தமிழ் ஆரியம் இங்கிலீஷ் சன்மார்க்கபோதினி. . . சாலையில் உபய கலாநிதிப் பெரும்புலவர் தொ. வேலாயுத முதலியார் முதலிய அறிஞர்களால். . . .

6. சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம்

27 - 4 - 1870

உ

திருச்சிற்றம்பலம்

இஃது தூற்றுமல் வைக்க.

சமரச வேத சன்மார்க்க சங்கம் கூடி விளங்கும் காலம் எது ? அது நமக்கு அறிவு வந்த நாள்தொட்டு அந்நாள் பரியந்தம் இறந்து போன நமது சினேகர், உறவினர், அடுத்தோர் வார்த்திபர், வாலிபர், பாலியர், குமாரர், ஆண்மக்கள், பெண்மக்கள் என்பவர் எல்லாம் உயிர்பெற்று எழுந்து மேற்குறித்த சங்கத்தில் கூடி விளங்கும் காலமாகும். **இது விஷயத்திற் றருக்கஞ் செய்யப்படாது.** உண்மை.

பிரமோதூத ஸு
சித்திரை மீ யசூஉ
உத்தரஞான சித்திபுரம்

---

7. அன்பர்களுக்கு இட்ட சாலைக் கட்டளை

26 - 10 - 1870

உ

திருச்சிற்றம்பலம்

அன்புள்ள நம்மவர்களுக்கு அன்புட னறிவிப்பது.

ஒருவனைப் பற்றி அனந்தம் பேர்களுக்கு நன்மையுண்டாம் என்பதை உண்மையாக நம்பியிருங்கள் என்னு லுங்களுக்கு நன்மை கிடைப்பது சத்தியம். நான் இன்னுங் கொஞ்ச தினத்தில் திருவருள் வலத்தால் வெளிப்படுகின்றேன். அது பரியந்தம் பொறுத்திருங்கள். நான் மிகவும் சமீபத்தில்தானே வெளிப்படுவேன். அஞ்சவேண்டாம். சாலையை லகுவாய் நடத்துங்கள். திருச்சிற்றம்பலம்.

---

8. சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை

30 - 3 - 1871

உ

திருச்சிற்றம்பலம்

அன்புள்ள நீங்கள் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச் சாலைக்கு மிகவும் உரிமையுடையீர்க ளாகலில் உங்களுக்கு உண்மையுடன் அறிவிப்பது.

நீங்களும் உங்களை அடுத்தவர்களும் சிற்றம்பலத் தந்தையார் திருவருளாற் சுகமாக வாழ்வீர்களாக,

கர்ம கால முதலிய பேதங்களால் யார்க்காயினுந் தேக ஆனி நேரிட்டால் தகனஞ் செய்யாமல் சமாதியில் வைக்கவேண்டும். இறந்தவர்கள் திரும்பவு மெழுந்து நம்முடன் இருக்கப் பார்ப்போம் என்கிற முழு நம்பிக்கையைக் கொண்டு எவ்வளவுந் துயரப்படாமலும் அழுகுரல் செய்யாமலும் சிற்றம்பலக் கடவுள் சிந்தையுடனிருக்கவேண்டும். புருடன் இறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டாம். மனைவி இறந்தால் புருடன் வேறு கல்யாணப் பிரயத்தனஞ் செய்யவேண்டாம். பிள்ளைகள் இறந்தால் சஞ்சலிக்க வேண்டாம். கர்ம காரியங்கள் ஒன்றுஞ் செய்யவேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்டமட்டில் அன்ன விரயஞ் செய்யவேண்டும். இவ்வாறு உண்மையாக நம்பிச் செய்யுங்கள். செய்திருந்தால், சமரசவேத சன்மார்க்க சங்கமும் மேற்படி தருமச்சாலையும் நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் **சிதம்பரங் கோயில் திருச்சபைகளைப் புதுக்கி** நிலைபெறவிளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் கருணை கூர்ந்து எனது தந்தையாராகிய எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுரம் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சி கொடுக்குந் தருணம் மிகவும் அடுத்த சமீபமாக விருக்கின்றது அந்தத் தருணத்தில் சாலைக்கு உரியவர்களாகி யிருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்தருளுவார். இது சத்தியம். இது சத்தியம். இந்தக் கடிதம் வெளிப்பட்டறிந்து கொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பியருளுவார். இது வெளிப்பட்டறிந்தபின் தகனஞ் செய்தல் கூடாது அது சன்மார்க்கத்திற்குத் தக்கதல்ல. ஆகலில் மேற்கண்டபடி உண்மையான நம்பிக்கையுடன் வாழ்வீர்களாக.

எனக்கு உலக அறிவு தெரிந்தது தொட்டு எனது தந்தையார் திருவருளை நான் அடையும் வரையில், என்னுடன் பழகியும் என்னை நம்பி யடுத்தும் என்னைக் கேள்வியால் விரும்பியும் எனக்கு உரிமைப்பட்டும் இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்து சமரச சன்மார்கக சங்கத்தை விருத்தி செய்விக்கத் திருவுள்ளத்துக் கருதிய பெருங் கருணை வள்ளல் சாலைக்கு உரியவர்களாகி யிருந்தும் அவநம்பிக்கையுடன் இருக்கின்றவர்கள் விஷயத்திலும் இந்த உபகாரம் செய்தேயருளுவர். ஆனால் அவர்கள் சன்மார்க்க சங்கத்திற்கு மாத்திரம் அருகராகார்கள். ஆகலில் நம்பிக்கையுடன் இருங்கள். பெரிய களிப்பை யடைவீர்கள். இது சத்தியம். இது சத்தியம்.

பிரமோதூத ஹூ
பங்குனி மீ ௰௮ வ
பார்வதிபுரம்

இப்படி
சிதம்பரம்
இராமலிங்கம்.

9. சன்மார்க்கப் பெரும்பதி வருகை
12 - 4 - 1871

உ

திருச்சிற்றம்பலம்

சுவாமிகளுக்குத் தெரிவிப்பது

சுத்த சிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந்தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும். அதன்மேலும் அதன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திரபேதங்களும், ஜாதிபேதங்களும், ஆசாரபேதங்களும் போய், சுத்தசன்மார்க்கப் பெருநெறி யொழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இது உயசு மாதத்திற்குமேல். இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி. இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னை யடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையு மில்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள், அஞ்சவேண்டாம்.

பிரஜோற்பத்தி ஞு
சித்திரை மீ கஉ

---

10. சமரச வேத பாடசாலை
11 - 1 - 1872

உ

திருச்சிற்றம்பலம்

இஃது சமரச வேத பாடசாலை

இதில் வாசிக்க விரும்புகின்றவர்கள் பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாகி, நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களையும் உண்மையுரைத்தல் இன்சொல்லாடல் உயிர்க் குபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாகியிருத்தல் வேண்டும்.

இதில் வாசிக்கின்றவர்களுக்கு சிலகாலம் வாசித்து ஒருவாறு வாசிப்பிற் பயிற்சி நேரிட்டால், அந்தப் பயிற்சிக்கும் அவரவர்கள் குடும்பத்திற்கும் தக்கபடி மாதந்தோறும் பொருளுதவி செய்யப்படும். காலை மாலை சுமார் ஐந்தைந்து நாழிகை வாசித்தல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்.

பிரஜோற்பத்தி ஞு
தநுர்மதி உ௰கூ உ

---

11. சபை விளம்பரம்

25 - 1 - 1872

உ


திருச்சிற்றம்பலம்

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களே!

அறிவு வந்த காலமுதல் அறிந்து அறியாத அற்புத அறிவுகளையும், அடைந்து அறியாத அற்புத குணங்களையும், கேட்டு அறியாத அற்புதக் கேள்விகளையும், செய்து அறியாத அற்புதச் செயல்களையும், கண்டு அறியாத அற்புதக் காட்சிகளையும், அனுபவித் தறியாத அற்புத அனுபவங்களையும், இது தருணந் தொடங்கிக் கிடைக்கப்பெறுகின்றேன் என்றுணருகின்ற ஓர் சத்திய வுணர்ச்சியாற் பெருங்களிப்புடையேனாகி இருக்கின்றேன்.

நீவிர்களும் அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டும் என்று எனக்குள்ளே நின்று நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய **ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைப்** பேராசை பற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன்.

இயற்கையிற்றானே விளங்குகின்றவரா யுள்ளவ ரென்றும், இயற்கையிற்றானே யுள்ளவராய் விளங்குகின்றவ ரென்றும், இரண்டு படாத பூரண இன்பமானவ ரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும் மற்றெல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல், பக்குவம் வருவித்தல், விளக்கஞ் செய்வித்தல், முதலிய பெருங்கருணைப் பெருந்தொழில்களை



சத்திய தருமச்சாலை, வடலூர்

23 – 5 – 1867

பழைய தோற்றம். வாயிலில் சாதுக்கள் இருவர் நிற்கின்றனர்

இயற்றுவிக்கின்றவ ரென்றும், எல்லாம்ஆனவ ரென்றும், ஒன்றும் அல்லாதவ ரென்றும், சர்வகாருணிய ரென்றும், சர்வவல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர்வில்லாத் தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் சத்திய அறி வால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம்புற முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப் பொதுவெளியில் அறிவார் அறியும் வண்ணங்க ளெல்லாமாகி விளங்கு கின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை இவ்வுலகினி டத்தே ஜீவர்கள் அறிந்து அன்புசெய்து அருளையடைந்து அழிவில் லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பல வேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும் பல வேறு மதங்களிலும் பல வேறு மார்க்கங்களிலும் பல வேறு லக்ஷியங்களைக் கொண்டு, நெடுங் காலமும் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவு மின்றி விரைந்து விரைந்து பல வேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண் போகின்றார்கள்.

இனி இச்சீவர்கள் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண் போகாமல், உண்மையறிவு, உண்மையன்பு, உண்மையிரக்க முதலிய சுப குணங்களைப்பெற்று நற்செய்கை யுடையராய், எல்லாச் சமயங் களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்குஞ் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று, பெருஞ் சுகத்தையும் பெருங் களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு, மேற் குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங் கொண்டு சுத்த சன் மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்று வித்து "இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப் படாத நெடுங்காலம் அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம்" என்னுந் திருக்குறிப்பை வெளிப்படுத்தி, அருட்பெருஞ் ஜோதியராய் வீற்றிருக்கின்றார்.

ஆகலின், அடியிற் குறித்த தருணந் * தொடங்கி வந்து வந்து தரிசிக்கப் பெறுவீர்களாகிற் கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படை வதும் அன்றி, இறந்தவர் உயிர்பெற்றெழுதல் மூப்பினர் இளமையைப்

---

* அடியில் தருணம் எதுவும் குறிக்கப்பெற வில்லை. சபைத் தொடக்க நாளில் 25 - 1 - 1872-ல் வெளியிட்டதெனக் கொள்வது பொருத்தம்.

பெற்று நிற்றல் முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்.

சென்னப்பட்டணம்
இராஜதானியைச் சேர்ந்த
கூடலூர் ஜில்லா டி
தாலூகா வடலூர்
அல்லது பார்வதிபுரம்

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்க பிள்ளை.

---

12. சாலையி லுள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை

9 – 3 – 1872

உ

சிவமயம்

அப்பாசாமி செட்டியா ரவர்களுக்கு,

இந்த சாலையால் எனக்கு மிகவும் சலிப் புண்டாகிறது. அந்த சலிப்பு இரண்டு பக்கத்திலும் உபத்திரவம் பண்ணும். ஆதலால் சாலையி லிருக்கிறவர்க ளெல்லாம் சன்மார்க்கத்திற்கு ஒத்து வாயடங்கி மனமடங்கி இருக்கவேண்டும். என்மேற் பழியில்லை. சொல்லிவிட்டேன். பின்பு வந்ததைப் படவேண்டும்.

பிரஜோத்பத்தி ஸு
மாசி மீ உ௯அ உ

---

13. சன்மார்க்கப் பிரார்த்தனை

12 - 5 - 1872

உ

ஸ்ரீ பார்வதிபுரம் என்னும் உத்தரஞானசிதம்பரத் திருப்பதிக்கண்ணே அகிலாதாரமாய் விளங்கும் ஸ்ரீ சமரச வேத சன்மார்க்க சங்கத்துப் பெருந்தலைப் பதியாக வீற்றிருந்தருளும் அருட்பெருஞ் சோதியராகிய எமது ஆண்டவனர் திருச்சந்நிதிக்கு யானெனும் போத நாச வந்தனஞ் செய்த விண்ணப்பம்.

எம்மிறையவரே !

இது பரியந்தம் யானுகத் தேடியதோர் பொரு ளென்ப தில்லையாகவே, தேவரீர் பெருங்கருணையால் என்னை உய்யக்கொள்ள உபகரித்தருளிய உடல் பொரு ளாவி என்னும் மூன்றையும் அறியாமையால் யான் எனது என்று கொண்ட தோர் சுதந்தரமானது துன்ப வின்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றி

இருந்த தொன்றை யான் பெரும் பொருளாக வெண்ணி நின்றனன். ஆதலால் அச் சமரச சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் சமுகத்து நிற் கப்பெற்ற விசேடத்தால் அத் தற்சுதந்தரப் பொருளைத் தேவரீர் பெருங் கருணைச் சந்நிதி முன்னே அர்ப்பித்தனன். இனி, தேவரீர் அதனை அருள் வசமாக்கி ஏழையாகிய என்னையும் என்னை யடுத்த சுற்றம் என்னேடு பழகிய நட்பின ராதியரையும் உய்யக் கொண் டருளுக.

ஆங்கிரச ௵	இங்ஙனம்
வைகாசி மீ முதல் ௨	அடிமை
மேட்டுக்குப்பம்	க. இராமலிங்கம்

---

14. சபை வழிபாட்டு விதி

18 - 7 - 1872

௨

திருச்சிற்றம்பலம்

ஞானசபை விளக்க விபவ பத்திரிகை.

அன்புடைய நம்மவர்களுக்கு வந்தனம்.

இன்று தொடங்கி சபைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை யென்றும், சாலைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை யென்றும், சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்க மென்றும் திருப்பெயர் வழங்குதல்வேண்டும்.

இன்று தொடங்கி அருட்பெருஞ்சோதி ஆண்டவரது அருட் பெருஞ்சித்தி வெளிப்படும் வரைக்கும் ஞானசபைக்குள்ளே தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும். பித்தளை முதலியவற்றால் செய்த குத்துவிளக்கு வேண்டாம். மேலேற்றுகிற குளோப்பு முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக் கண்ணாடி விளக்கு வைக்குங் காலத்தில், தகுதியுள்ள நம்மவர்கள் தேகசுத்தி கரணசுத்தி யுடையவர் களாய் திருவாயிற்படிப் புறத்தி லிருந்துகொண்டு விளக்கேற்றி, பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவர் கையிற் கொடுத்தாவது எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியர் கையிற் கொடுத்தாவது, உட்புற வாயில்களுக்குச் சமீபங்களில் வைத்து வரச் செய்விக்கவேண் டும். நாலு நாளைக்கு ஒருவிசை காலையில் மேற்குறித்த சிறியரைக் கொண்டாயினும் பெரியரைக் கொண்டாயினும் உள்ளே தூசு துடைப் பிக்கவேண்டும். தூசு துடைக்கப் புகும்போது நீராடி சுத்த தேகத் தோடு கால்களில் வத்திரம் சுற்றிக்கொண்டு புகுந்து முட்டிக்கா விட்டுக் கொண்டு தூசு துடைக்கச் செய்விக்கவேண்டும். விளக்கு வைக்கின்ற போதும் இங்ஙனமே செய்விக்கவேண்டும். விளக்கு வைத்தற்கும்

தூசு துடைத்தற்கும் தொடங்குகின்ற பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவரும் எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியரும் பொருள் இடம் போகம் முதலியவற்றில் சிறிதும் இச்சை இல்லாதவர்களாய் தெய்வ நினைப்புள்ளவர்களாய் அன்புடையவர்களா யிருத்தல் வேண்டும். விளக்கு வைக்கும்போதும் தூசு துடைக்கும்போதும் நம்மவர்களில் நேர்ந்தவர்கள் புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லெனத் துதிசெய் தல்வேண்டும். யாவரும் யாதொரு காரியம் குறித்தும் தற்காலம் உள்ளே போதல் கூடாது. ஞானசபைத் திறவுகோல் ஒருவர் கையிலும் வெளிப்பட விருக்கப்படாது. அத் திறவுகோலை வேறொரு பெட்டிக்குள் வைத்து அப் பெட்டியைப் பூட்டி அப் பெட்டியைப் பொற்சபைக்குள் வைத்து அப் பெட்டித் திறவுகோலை ஆஸ்தான காவல் உத்தா வாதியா யிருக்கின்றவர் கையில் ஒப்புவித்தல் வேண்டும்.

தொடர்ச்சி காலம் நேர்ந்த தருணம் எழுதுகிறேன்.

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

ஆங்கிரச ஹு
ஆடி மீ ௩ உ

---

15. சன்மார்க்க சங்கத்தார் பழக்க விதி

25 - 11 - 1872

சித்திவளாகத்திலும் தருமச்சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிகை

ஆங்கிரச ஹு கார்த்திகை மீ ௰௨ உ

ஆண்டவர் ஒருவர் உள்ளார் என்றும், அவர் பொதுப்பட உலகத்தி லுள்ளார் யாவரும் சன்மார்க்கப் பெரும்பயன் பெற்று நித்திய வாழ்வு வாழ்தற்பொருட்டு வெளிப்படக் காரியப்படுகின்றனர் என்றும், அதுகாலையில் நாமும் ஆன்மலாபத்தைப் பெற்றுக்கொள்ளுவோம் எனவும் நம்பி இங்கே வசிக்கும் யாவரும் வழிபாடு விஷயத்தில் ஒரு தடையும் சொல்லாது ஒத்து இருத்தல் அவசியம். அன்றியும் கால பேதத்தால் அல்லது மற்றவகையால் அவ்வத் தருணங்களில் நேரிடும் குரோதத்தால் விளையும் துவேஷாதிகள் உண்டாயினும் அல்லது உண்டாகிறதா யிருந்தாலும் உடனே ஜாக்கிரதைப் பட்டு அதை முற்றிலும் மறந்துவிடல் வேண்டும். அப்படி யிருத்தல் மேல்விளைவை யுண்டுபண்ணா திருக்கும். அப்படி இனிமேல் ஒருவரை யொருவர் அதிக்கிரமித்த வார்த்தைகளால் சண்டை விளையத் தக்கதாக வைதாலும் அப்படி வைதவர்களையும் அந்த வைதலைக் கேட்டுச் சகிப்பவர் களோடு மறுபடி அத் துவேஷத்தை ஒருங்கே விட்டு மறந்து மனக்கலப்

புடன் மருவுதல் வேண்டுவது. அபபடி மருவாதவர்களையும் உடனே ஒதுக்கிவிட வேண்டுவது. அல்லது குரோதத்தால் விளையும் அக்கிரம அதிக்கிரம வார்த்தைகளைக் கேட்டு தாங்கள் எதிர்த்து வார்த்தையா டாமல் கூட்டத்தாரில் அப்போது இருக்க வாய்ந்த இரண்டொருவர்க் குத் தெரிவித்தல் வேண்டும். அப்படி தெரிவிக்காதவர்களும் எதிர்த்துச் சண்டை தொடுப்பவர்களும் இங்கிருத்த லனுவசியம். அப்படிப்பட்ட வர்களை ஒரு பேச்சு மில்லாமல் இந்த இடம் விட்டுப் போய்விடத் தக்க முயற்சி ஒவ்வொருவரும் செய்தல் வேண்டுவது.

சி. இராமலிங்கம்.

---

16. சித்திவளாக விளம்பரம்

8 – 9 – 1873

உ

திருச்சிற்றம்பலம்

உலக அறிவிப்புப் பத்திரிகை

ஞானசித்திபுர மென்றும் உத்தரஞானசிதம்பர மென்றும் பிரமா ணிக்கப்படுகின்ற வடலூர் சத்தியஞானசபைக்கு முக்கிய சம்பந்த முடையதாகி அடுத்த கருங்குழி யெல்லை மேட்டுக்குப்பத்தில் வழி படப்படுகின்ற சித்திவளாகத்தில் வந்திருக்கின்றவர்களும், வருகின்ற வர்களும், வருபவர்களுமாகிய ஜனங்களுக்கு அறிவிப்பது.

மேல்குறித்த விடத்தில் இந்த மாதத்திற் கடுத்த புரட்டாசி மாதம் ஐந்தாம் தேதியில் அற்புத விளக்கம் நேரிடுவதாக ஓர் வதந்தி வழங்கப் படுகின்றது. அது கேள்விப்பட்டு நப்புதலோடு நீர்கள் நீர்களும் பொருள் வகையாலும் தேக வகையாலும் உழைப் பெடுத்துக் கொண்டு பின்பு நிட்டூரப்பட்டுக் கொள்ளுதல் வேண்டாம். அந்தக் கேள்வி யுண்மையல்ல. இவ்விடத்தில் அற்புதம் விளங்குவது மெய்யோ பொய்யோ, இந்தக்காலமோ எந்தக்காலமோ, ஆகலில், இந்த அறிவிப்பினல் ஜாக்கிரதையோடு உங்களுங்களுக்கு அடுத்த காரியங்களைவையோ அவைகளைச் செய்வீர்களாக.

ஸ்ரீமுக ஹு
ஆவணி மீ உ௰௫ உ
மேட்டுக்குப்ப மென்னும்
சித்திவளாகம்

சிதம்பரம்
இராமலிங்க பிள்ளை.

---

17. சித்திவளாக வழிபாட்டு விதி

1873

சுவாமிகள் ஸ்ரீமுக ஞு கார்த்திகை மீ' த்தில் உள்ளிருந்த விளக்கைத் திருமாளிகைப் புறத்தில் வைத்து,

"இதைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன். இனி கொஞ்சகாலம் எல்லோரும் - ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிறபடியால் - உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல், 'நினைந்து நினைந்து' என்னும் தொடக்க முடைய-உஅ பாசுர மடங்கிய-பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற் செய்யுங்கள். நானிப்போது இந்த உடம்பி லிருக்கின்றேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்."

என்று திருவாய்மலர்ந் தருளினார்கள்.

---

18. சன்மார்க்க சங்கத்தார்க்கு இட்ட இறுதிக் கட்டளை

30 - 1 - 1874

ஸ்ரீமுக ஞு தை மீ' யகூ உ

"நான் உள்ளே பத்துப் பதினைந்து தின மிருக்கப்போகிறேன். பார்த்து அவநம்பிக்கை யடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது வெறு வீடாகத்தா னிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக்கொடார்."

அழைப்புகள், அறிவிப்புகள், கட்டளைகள்
முற்றுப்பெற்றன.

விண்ணப்பங்கள்

1. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

2. சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்

4. சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

1. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

இயற்கை உண்மைய ரென்றும், இயற்கை அறிவின ரென்றும், இயற்கை யின்பின ரென்றும், நிர்க்குண ரென்றும், சிற்குண ரென்றும், நித்திய ரென்றும், சத்திய ரென்றும், ஏக ரென்றும், அநேக ரென்றும், ஆதிய ரென்றும், அநாதிய ரென்றும், அமல ரென்றும், அருட்பெருஞ் ஜோதிய ரென்றும், அற்புத ரென்றும், நிரதிசய ரென்றும், எல்லா மானவ ரென்றும், எல்லா முடையவ ரென்றும், எல்லாம் வல்லவ ரென்றுங் குறிக்கப்படுதன் முதலிய அளவு கடந்த திருக்குறிப்புத் திருவார்த்தைகளாற் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும் அனுபவிக்க விளங்குகின்ற தனித் தலைமைப் பெரும் பதியாகிய பெருங் கருணைக் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தில் துரும்பினுஞ் சிறியேமாகிய யாங்கள் சிற்றறி வாற் செய்துகொள்ளுஞ் சிறு விண்ணப்பங்களைத் திருச்செவிக் கேற் பித்தருளி யெங்களை யிரக்ஷித்தருளல் வேண்டும்.

எல்லாச் சத்திகளும், எல்லாச் சத்தர்களும், எல்லாத் தலைவர்களும் அறிந்துகொள்ளுதற்கு மிகவு மரியதாய், எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாத் தத்துவிகளுக்கும் அப்பா லப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞான வெளியில் தமக்கு ஒரு விதத்தாலும் ஒப்புயர்வு சிறிதுங் குறிக்கப்படாத தனிப்பெருந் தலைமை யருட்பெருஞ்சோதியராகி விளங்குகின்ற தேவரீரது தனிப் பெருந் தன்மைக்கு மெய்யறிவுடை யோரால் விதிக்கப்பட்ட வேதாகமங்களும் பெருந்தகை வாசகத்தைப் பெறாது சிறுதகை வாசகங்களைப் பெற்றுத் திகைப்படைகின்றன வென்றால், மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியேமாகிய யாங்கள் திருச்சமுகத்தில் விண்ணப்பித்தற் குரிய பெருந்தகை வாசகத்தை எவ்வா றறிவோம்! எங்ஙனஞ் செய்வோம்! ஆகலில் கருணாநிதியாகிய கடவுளே! யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி யெங்களைக் காத்தருளல் வேண்டும்.

தாயினுஞ் சிறந்த தயவுடைக் கடவுளே! இயற்கையே அஞ்ஞான விருளில் அஞ்ஞான வுருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்திற் பயின்று ஏதுந் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங் கருணை யாற் பவுதிக வுடம்பிற் சிறிதறிவு தோற்றி விடுத்த அஞ்ஞான்றுதொட் டிஞ்ஞான்றுவரையும், அது கொண்டு அறிவே வடிவாய், அறிவே யுருவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே யறிவாய், அறிவே யனுபவமாய் அனுபவிக்கத் தெரிந்துகொள்ளாது, குற்றமே வடிவாய்க், குற்றமே யுருவாய்க், குற்றமே பொறியாய்க், குற்றமே

மனமாய்க், குற்றமே யறிவாய்க், குற்றமே யனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள் திருச்சமுகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய்க் குற்றமே குறிக்குமென் றறிந்தோ மாயினும், குற்றங் குறியாத வகை விண்ணப்பஞ் செய்தற்கு ஒருவாற்றானு முணர்ச்சியில்லோ மாதலிற் றுணிவு கொண்டு விண்ணப்பிக்கின்றோம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் தேவரீர் திருவருட் பெருமைக்கியற்கையாதலின் இவ் விண்ணப்பங்களிற் குற்றங் குறியாது கடைக்கணித் தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

அஞ்ஞான விருளில் ஒன்றுந் தெரியா துணர்ச்சி யின்றிக்கிடந்த காலம் போக, அவ்விருளை விட்டு நீங்கிய காலத்தே, இவ்வுலகினிடத்து புல், நெல், மரஞ், செடி, பூடு முதலியவாகவும் கல், மலை, குன்று முதலியவாகவும் பிறந்து பிறந்து, களையுண்டல், வெட்டுண்டல், அறுப்புண்டல், கிள்ளுண்டல், உலர்ப்புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத் தாவரயோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்; பின்னர் எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி முதலியவாகவும் தவளை, சிறுமீன், முதலை, சுறு, திமிங்கில முதலியவாகவும் பிறந்து பிறந்து தேய்ப்புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல், பிடியுண்டல் முதலிய பல வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ் வூர்வன நீர் வாழ்வன யோனிவர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்; பின்னர் ஈ, வண்டு, தும்பி, குருவி, காக்கை, பருந்து, கழுகு முதலியவாகப் பிறந்து பிறந்து அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல், உலைப்புண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந் திறந்து அப் பறவையோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தேம்; பின்னர் அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து பிடியுண்டல் அடியுண்டல், குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல் தட்டுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து அவ் விலங்குயோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தேம்; பின்னர் பசாசர், பூதர், இராக்கதர், அசுரர், சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல் திகைப்புறுதல், போரிடுதல், கொலைபடுதல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத் தேவயோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தேம்; பின்னர் காட்டகத்தார் களவுசெய்வார் கொலைசெய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து பயப்படல், சிறைப்படல், சிதைபடல் முதலிய அவத்தைகளால்

இறந்திறந்து அந் நரகயோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தேம்.[1]

அங்ஙனம் யாங்கள் அப் பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் அவலமும் களைப்பும் துன்பமுந் திருவுளத் தடைத்து இரங்கி யருளி அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம் மனித தேகத்திற் செலுத்தியருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யுங் கைம்மாறு ஒன்றுந் தெரிந்தோ மில்லை.

உயிர்களின் அகத்தும் புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்சோதி யாண்டவரே! இம் மனித தேகத்திற் செலுத்திய காலத்திலும் தாய் வயிற்றிலும் சிசுப் பருவத்திலும் குமாரப் பருவத்திலும் பல வேறு அவத்தைகளால் அறிவின்றி யிருந்தோ மாகலில், தேவரீர் பெருங் கருணைத் திறத்தை யறிந்துகொள்ளாமல் வீண்போது கழித்தோம். அப்பருவங்கழிய இப்பருவத்தினிடத்தே, எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களை யும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும், மற்றை யெல்லா வற்றையும் தோற்றுவித்தும், விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்கு வித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும்,[2] எங்கும் பூரண ராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக் கடவுளை உண்மை யன்பாற் கருத்திற் கருதி வழிபாடு செய்யின் அக் கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்கு மென் றும், அத் திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத் தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை யடைதல்கூடு மென்றும், எங்கள் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட வுணர்த்தியருளப் பெற்றோம். அவ்வுணர்ச்சியைப் பெற்றது தொடங்கிக் கடவுள் வழிபாடு எஞ்

1. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

– சிவபுராணம் 26-31

என்னும் திருவாசகப் பகுதி ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.

2. தோற்றுவித்தல் – சிருட்டி. விளக்கஞ் செய்வித்தல் – திதி. துரிசு நீக்குவித்தல் – சங்காரம். பக்குவம் வருவித்தல் – திரோபவம். பலன்தருவித்தல் – அனுக்கிரகம்.

ஞான்று செய்வோம்? கடவுள் திருவருள் விளக்கம் எந்நாளடைவோம்? மரணம், பிணி, மூப்பு முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்? என்று மழியாத பேரின்ப சித்தி எக்காலங் கிடைக்கும்? என்று எண்ணி யெண்ணி வழிதுறை தெரியாமல் வருந்தி நின்ற தருணத்தே —

களைப்பறிந் துதவுங் கருணைக் கடலாகிய கடவுளே! தேவரீர் 'நெடுங்காலம் மரண முதலாகிய அவத்தைகளால் துன்பமுற்றுக் களைப்படைந்த உங்களை அவ்வவத்தைகளி னின்றும் நீக்கிக் களைப்புங் கலக்கமுந் தவிர்த்து அழியாத பேரின்பசித்தியை அடைவித்தற் பொருட்டாகவே **பூர்வஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரமென்று குறிக்கப்படுகின்ற உத்தர ஞான சித்திபுரத்தில்** யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடஞ்செய்வோ' மென்றும், 'அது தருணம் மிகவும் அடுத்து சமீபித்த தருண' மென்றும், 'அப்பதியினிடத்தே யாம் அருள்நடம் புரிதற்கு அடையாளமாக ஓர் **ஞானசபை** காணுதல் வேண்டு' மென்றும் திருவருட் குறிப்பால் அறிவித்தது மன்றி, அருளுருவாகி எங்க ளகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாதோர் தடைகளு மின்றி அத்திருஞான சபையுந் தோன்றி விளங்கச் செய்வித்தருளிய தேவரீர் பெருங்கருணையைக் கருதுந்தோறும் பெருங்களிப்படைகின்றேம். இனி அத்திருஞானசபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிப்பித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றேம். அருட்பெருஞ்ஜோதி யாண்டவரே! தேவரீர் அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராத வண்ணஞ் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்றுவித்தருளல் வேண்டும்.

சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே! அத்திருவலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை யடியர்க ளாக்கி உண்மை யறிவை விளக்கி உண்மை யின்பத்தை யளித்துச் சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை யடைவித்து நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள், என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரம முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்மநேய

ஒருமைப் புரட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித் தருளல் வேண்டும்.

எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி யாண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!

திருச்சிற்றம்பலம்

சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம் முற்றிற்று

2. சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

இயற்கை யுண்மை நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவ வெளியில், இயற்கை விளக்க நிறைவாகி விளங்கிய அருட்பெருஞ் சோதி சொருபராய், இயற்கை யின்ப நிறைவாகி யோங்கிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை எல்லா உயிர்களும் இன்பமடைதற் பொருட்டுத் திருவுளக் கருணையாற் செய்தருளுகின்ற சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே!

அறிவென்பது ஓர் சிறிதுந் தோற்றாத அஞ்ஞான மென்னும் பெரிய பாசாந்தகாரத்தில் நெடுங்காலம் சிற்றணுப்பசுவாகி யருகிக்கிடந்த அடியேனுக்குள் உள்ளொளியாகி யிருந்து அப்பாசாந்தகாரத்தினின் றும் எடுத்து, எல்லாப் பிறப்புடம்புகளிலும் உயர்வுடைத்தாகிய ஆறறிவுள்ள இம்மனிதப்பிறப்புடம்பில் என்னைவிடுத்துச் சிறிது அறிவு விளங்கச்செய்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று சொல்வேன்!

எல்லாம் வல்ல இயற்கை உண்மைக் கடவுளே! உபசாரத்தாற் பெற்ற தந்தை யென்பான் ஒருவனது சுக்கிலத் துளியின்கண் என்னை யோர் பகுதிப் பேரணுவுருவிற் பெருகி வெளிப்பட விருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகி யிருந்து அப்பகுதிப் பேரணுவுருவைச் சிருட்டித்தருளினீர். அன்றிப் புறத்தில் யாவராலுஞ் சகிக்கப் படாத அதன் அருவருப்பையும் அசுத்தத்தையும் தீநாற்றத்தையும் சகித்து, அச்சுக்கிலத் துளியினிடத்து ஓர் ஆவியுருவாகியிருந்து, அத் துளியின்கண்ணுள்ள பல்வகைவிரோத தத்துவங்களாற் சிறிதுந் தடைபடாமல் என்னுருவையுங் காத்தருளினீர். அன்றி. அங்ஙனம் அரும்பிய ஆன்ம சத்திக் கலைகள் வெளிப்பட விளக்கி வளர்த்து மருளினீர்,

உபசாரத்தாற் பெற்ற தாயென்பாள் ஒருத்தியின் சோணிதத் திரளில் என்னுருவைச் சேர்க்கும் வரையில், அப்போதப்போது என்னுருவைச் சிதைப்பதற்கு எதிரிட்ட துரிசுக ளெல்லாவற்றையு நிக்கிரகஞ் செய்தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று சொல்வேன்.

எல்லா முடைய இயற்கை விளக்கக் கடவுளே! தாய் கருப்பையிற் சோணிதத் திரளிற் சேர்த்து என்னை ஓர் பூதப் பேரணு உருவிற் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகி யிருந்து அப் பூதப்பேரணு வுருவைச் சிருட்டித் தருளினீர். அன்றிப் புறத்தில் எவராலுஞ் சிறிதுஞ் சகிக்கப்படாத அதனசுத்தம் அருவருப்பு துற்கந்த முதலியவற்றைப் பொறுத்து அச்சோணிதத் திரளில் ஓர் ஆவியுருவாகி யிருந்து, அத்திரளினுள்ள பல்வகை விரோத தத்துவங்களால் சிறிதுந் தடைபடாமல் என்னுருவைக் காத்தருளினீர்.

அன்றியும், அவ்விடத் தெதிரிட்ட துரிசுக ளெல்லாவற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். அன்றி, அங்ஙனம் பூத்த ஆன்மசத்திக் கலைகள் வாட்டமடையாது வெளிப்பட்டு விளங்க வளர்த்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையினிடத்துப் பூதப்பேரணு வுருவிற் கிடந்த என்னை அக்கருப்பையிற் பவுதிக பிண்டவடிவி லிருத்தும் வரையில், நச்சுக்கிருமி, நச்சுக்காற்று, நச்சுச்சுவாலை முதலிய உற்பாத வகைகளால் எனது பூதப் பேரணுவுருச் சிதறி வேறுபடாமலுங் காத்தருளினீர். அன்றியும், தாய் கருப்பையிற் பவுதிக பிண்ட வடிவில் என்னை யிருத்திய காலத்திலும், எனது இச்சை ஞானக்கிரியைகளை வெளிப்படுத்துதல் முதலிய உபகரிப் பதிகரிப்புகளுக் குரிய உபயோக தத்துவ வுறுப்புக ளெல்லாவற்றையும் குறைவின்றி வகுத்தமைத்து வளர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், அடியேன் தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற்கிடந்த காலத்து, இரும்பிற் பெரிதுங் கடினமுடையதாய் இருட்குகையிற் பெரிதும் இருளுடையதாய் மிகவுஞ் சிற்றள வுடையதாய் அசுத்த முதலிய வற்றால் நிரம்பிய அக்கருப்பையினுள் நெருக்கத்தாலும் வெப்பத்தாலும் புழுங்கிய புழுக்கத்தினால் வருந்தி வருந்திக் களைத்தபோ தெல்லாம், அங்ஙனம் அமுதக்காற்றை அடிக்கடி மெல்லென வீசுவித்து அவ்வருத்தமுங் களைப்புந் தவிர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்து பசியினாற் பரதவித்து மூர்ச்சித்தபோ தெல்லாம், பூதகாரிய அமுதத்தை எனக்கு ஊட்டுவித்துப் பசியை நீக்கி மூர்ச்சை தெளிவித் தருளினீர். அன்றியும் தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்து பேய்வெருட்டாலும் பேரி

ருட்டாலும் பயந்தபோ தெல்லாம், நாதவொலியாற் பேய்வெருட்டை யும் விந்து விளக்கத்தாற் பேரிருட்டையுந் தவிர்த்து, என் பயத்தை நீக்கி யருளினீர். அன்றி, தாய் கருப்பையின்கண் நேரிட்ட பெருந்தீ, பெருங்காற்று, பேரோசை, பெருவெள்ளம், பெரும்புழு முதலிய உற் பாத துரிசுகளனைத்தையுந் தவிர்த்துக் காத்து, அப்பிண்டவடிவில் எனக்கு ஓரறிவையும் விளக்கி யருளினீர்.

அன்றியும், உலகினிடத்தே பிறந்து அனுபவிப்பதற் குரிய சுபவனு பவப் பெருக்கம் ஆயுட் பெருக்கம் முதலிய நன்மைகளையும் எனக்கு அப் பிண்ட வடிவின்கண்ணே அமைத்தருளினீர்.

அன்றியும், சோணிதக் காற்றின் அடிபடல் யோனிநெருக்குண் ணல் முதலிய அவத்தைகளால் அபாயம் நேரிடவொட்டாமற் காத்து இவ்வுலகினிடத்தே தோற்றுவித் தருளினீர்.[3] இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட்பெருங்கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!

எல்லா மாகிய இயற்கை யின்பக் கடவுளே! தந்தை யென்பவ னது சுக்கிலப் பையின்கண் யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி தாயென்பவளது சோணிதப் பையின்கண் சென்றடைந்த கணப்போ திற்கு முன் கணப்போது வரையுமாக, என்னுலொருவாறு அளவிடப் பட்ட ஒரு கோடி ஒன்பது லக்ஷத் தறுபதினுயிரங் கணப்போது பரியந் தம்[4] எவ்வகைத் தடைகளும் வாராதபடி, பகுதிப்பேரணு வுருவிற்கிடந்த

---

3. மானிடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
— போற்றித் திருஅகவல் 13 - 25

என்னும் திருவாசகப் பகுதி ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.

4. ஒரு கோடி இருபத்தொன்பது லக்ஷத் தறுபதினுயிரங் கணப் போது பரியந்தம் - ச. மு. கந்தசாமி பிள்ளை பதிப்பு 1924.

எனது அகத்தினும் புறத்தினும் அருவாகியும் உருவாகியும் சலித்தன் முதலிய வின்றி அன்பொடும் அருளொடும் பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட்பெருங்கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப் போது பாதுகாத்தலிற் சலிப்படைந்தும் தளர்ச்சியடைந்தும் அருவருப்புற்றும் சுதந்தரமற்றும் பராக்கிலிருந்துந் தடைபடுகின்ற தந்தை முதலிய ஜீவர்கள் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்விதத்தினுஞ் சிறிதாயினும் மனந் துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனாகி யிருக்கின்றேன். ஆகலில் தேவரீரது திருவருட் பெருங் கருணையை யென்னென்று கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!

அருட்பெருஞ் ஜோதித் தனித்தலைமைக் கடவுளே! தாயென்பவளது சோணிதப் பையின்கண் யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி இவ்வுலகிற் றோன்றிய கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக, என்னா லொருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷங் கணப்போது பரியந்தம், எவ்வகைத் தடைகளும் எவ்வகை ஆபத்துகளும் வாராதபடி பூதப் பேரணு வுருவிலும் பிண்டப் பெருவடிவிலும் கிடந்த என தகத்தினும் புறத்தினும் அருவாகியும் உருவாகியும் சலித்தன் முதலியவின்றிப் பெருந்தயவினோடு பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலிற் சலித்தும் தளர்ந்தும் அருவருத்தும் பரதந்திரித்தும் பராக்கடைந்தும் தடைபடுகின்ற தாய் முதலிய ஜீவர் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்வகையினும் எத்துணையும் மனந் துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனாகி யிருக்கின்றேன். ஆகலில் தேவரீரது திருவருட் பெருங்கருணையை என்னென்று கருதுவேன்! எங்ஙனந் துதிப்பேன்!

யாவராலும் பிரித்தற்கொருவாற்றானுங் கூடாத பாசமென்னு மகாந்தகாரத்தில் யானது வென்னும் பேதந் தோன்றாது அருகிக் கலந்து அளவிறந்த காலம் முன்பின்னென்பதின்றி மூர்ச்சித்துக்கிடந்த என்னை அம்மகாந்தகாரத்தி னின்றும் ஓர் கணப்பொழுதினுள் அதிகாரணக் கிரியையால் அதிகாரணப் பகுதியுருவிற் பிரித்தெடுத்தருளிய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

சத்திய ஞானானந்தத் தனித் தலைமைக் கடவுளே! காரணக் கிரியையாற் காரணப்பகுதியுருவினும், அதிசூக்குமக் கிரியையால் அதிசூக்குமப் பகுதியுருவினும், சூக்குமக் கிரியையாற் சூக்குமப் பகுதி யுருவினும், பரத்துவ சத்திசத்தரால் பூதவுருவினும், அபரத்துவ சத்தி சத்தரால் பவுதிக வடிவினும் ஓர் கணப்போதினுள் என்னைச் செலுத்தாமற் செலுத்திய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

அகண்ட பூரணனந்த ராகிய அருட்பெருஞ்சோதிக் கடவுளே! ஜீவனை ஆதரிப்பிக்கும் பூதப் பிருதிவித் தோற்றமும், ஜீவனை விருத்தி செய்விக்கும் பூத நீர்த் தோற்றமும், ஜீவனை விளக்கஞ் செய்விக்கும் பூதாக்கினித் தோற்றமும், ஜீவனை அதிகரிப்பிக்கும் பூத வாயுத் தோற்றமும், ஜீவனை வியாபகஞ் செய்விக்கும் பூதவெளித் தோற்றமும்; உபப் பிருதிவி, உபநீர், உபாக்கினி, உபவாயு முதலிய தோற்றங்களும், அவைகளிருக்கு மிடங்களும் தொழிலிட முதலிய விடங்களும், ஒலியறிவு, உருவறிவு, சுவையறிவு, நாற்றவறிவு, பரிசவறிவு என்னும் ஐவகைக் குண வறிவுகளும், அவைக ளிருத்தற்குரிய செவி, கண், நாக்கு, மூக்கு, மெய் யென்னு முள்ளிடப் பொறிகளும், அவைகள் உத்தியோகித்தற் குரிய வெளியிடப் பொறிகளும், வசனித்தறிதல், நடந்தறிதல், கொடுத்தெடுத் தறிதல், மலம் விடுத்தறிதல், சலம் விடுத் தறிதல் என்னும் ஐவகைத் தொழிலறிவுகளும், அவைக ளிருத்தற் குரிய வாக்கு, பாதம், கை, நீர்வாயில், அபானவாயில் என்னும் கரும உள்ளிடப் பொறிகளும், அவைகள் தொழிற்படற் குரிய கருமப் புற விடப் பொறிகளும், நினைத்தல், விசாரித்தல், நிச்சயித்தல், அகங்கரித்தல் என்னும் சூக்குமக் கரணத் தொழில்களும், அவைகளை யியற்றும் மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னும் சூக்கும கரணங்களும், அவைகளை யியற்று விக்கும் அதிசூக்கும கரணங்களும், அக் கரணங்களின் உபகரணங்களாகிப் பலபல பேதப்பட்டு விரிந்த சத்துவம், ராஜதம், தாமச முதலிய குணங்களும், அவைக ளிருத்தற்கும் உத்தியோகித்தற்கும் இடங்களும், பருவஞ்செய்தல், தகுதிசெய்தல் இச்சைசெய்தல், தெரிவுசெய்தல், அதிகாரஞ்செய்தல், காரணஞ்செய்தல், காரியஞ்செய்தல் முதலிய இடைப்பாட்டுத் தொழில்களும், அவைகளை யியற்றும் பொழுது இயைபு, இச்சை, அறிவு முதலிய கருவிகளும், அக்கருவிகளுக் குரிய இடங்களும், அவைக ளுத்தியோகித்தற் குரிய இடங்களும், துரிசு நீக்குவித்தல், சுகம் விழைவித்தல், தூய்மை செய்வித்தல், இன்பமடைதற்கு வழியா யிருத்தல், துணையா யிருத்தல் முதலிய பரத்துவத் தொழில்களும், அவைகளை இயற்றுதற்குரிய தத்துவங்களும், அவைக ளிருத்தற்குரிய இடங்களும், பிரேரித்தற்குரிய இடங்களும், அறிதல், அறிவித்தல், அனுபவித்தல், அனுபவிப்பித்தல் முதலிய முக்கியத் தொழில்களும், அவைகளை இயற்றுகின்ற சத்திசத்தர்களும், அவர்க ளிருத்தற் குரிய இடங்களும், அவர்கள் அதிகரித்தற் குரிய இடங்களும், வாதவிருத்தி, பித்தவிருத்தி, சிலேட்டுமவிருத்திகளும், அவைகளிருக்கு மிடங்களும், உத்தியோகிக்கு மிடங்களும், சூரியசத்தி, சந்திரசத்தி, அக்கினிசத்தி, தாரகைசத்தி, பிரமசத்தி, மாயாசத்தி, ருத்திரசத்தி முதலிய சத்திகளும், அவர்களிருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும், அச்சத்திகளை நடத்துஞ் சத்தர்களும், அவர்க ளிருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும்,

நனவு, கனவு, சுழுத்தி முதலிய அவத்தைகளும், அவைக ளிருத்தற் குரிய இடங்களும், இங்ஙனம் இன்னும் பற்பல அகவுறுப்புகளும் அகப்புற வுறுப்புகளும்; மீத்தோல், புடைத்தோல், வன்தோல், மென் தோல்முதலிய தோல்வகைகளும், வெண்ணரம்பு, செந்நரம்பு, பசுநரம்பு, சிறுநரம்பு, பெருநரம்பு முதலிய நரம்பின் வகைகளும், பேரென்பு, சிற் றென்பு, நீட்டென்பு, முடக்கென்பு முதலிய என்பின் வகைகளும், நல்லிரத்தம், புல்லிரத்தம், கலவையிரத்தம், கபிலையிரத்தம் முதலிய இரத்த வகைகளும், மெல்லிறைச்சி, கல்லிறைச்சி, மண்ணிறைச்சி, நீரிறைச்சி முதலிய இறைச்சி வகைகளும், மேனிலைச் சுக்கிலம், கீழ் நிலைச் சுக்கில முதலிய சுக்கில வகைகளும், ஓங்கார மூளை, ஆங்கார மூளை முதலிய மூளை வகைகளும், தலையமுதம், இடையமுத முதலிய அமுத வகைகளும், வெண்மை, செம்மை, பசுமை, கருமை, பொன்மை என்னும் வண்ண வகைகளும், வெண்மையிற் செம்மை, வெண்மையிற் பசுமை, வெண்மையிற் கருமை, வெண்மையிற் பொன்மை; செம்மையின் வெண்மை, செம்மையிற் பசுமை, செம்மையிற் கருமை, செம்மையிற் பொன்மை; பசுமையின் வெண்மை, பசுமையிற் செம்மை, பசுமையிற் பொன்மை, பசுமையிற் கருமை; கருமையின் வெண்மை, கருமையிற் செம்மை, கருமையிற் பசுமை, கருமையிற் பொன்மை; பொன்மையின் வெண்மை, பொன்மையிற் செம்மை, பொன்மையிற் பசுமை, பொன்மையிற் கருமை என்னும் வண்ண பேத வகைகளும், இவைகள் இவைகள் இருத்தற்குரிய இடங்களும், செயல் வகைகளும், பயன் வகைகளும், இங்ஙன மின்னும் பற்பல புற வுறுப்புகளும், புறப்புற வுறுப்புகளும் எனக்கு உபகரிக்கும் பொருட்டு இப் பவுதிக வடிவின்கண் ஒருங்கே உண்ணின்று தோன்ற, உண் ணின்று தோற்றுது தோற்றுவித்த தேவரீரது திருவருட் பேராற்றலை எங்ஙன மறிந்து எவ்வாறு கருதி என்னென்று துதிப்பேன்![5]

சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின் கண்ணே, பேராசை, பெருங் கோபம், பெருமோகம், பெருமதம், பெருலோபம், பேரழுக்காறு, பேரகங்காரம், பெருவயிரம், பெருமடம், பெருமயக்கம் முதலிய பெருங் குற்றங்களே பெரும்பாலும் விளைவதற் குரிமையாகிய மற்றை யிடங் களிற் பிறப்பியாமல், குணங்களே பெரும்பாலும் விளைதற்குரிய இவ் விடத்தே, உறுப்பிற் குறைவுபடாத உயர்பிறப்பாகிய இம் மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித்தருளிய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை யென்னென்று கருதி யென்னென்று துதிப்பேன்![6]

---

5. தத்துவங்களும் உடற்கூறுகளும் அமைந்தவாறு கூறுவது.

6. தம்மைத் தமிழ்நாட்டிற் பிறப்பித்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறுவது.

அருட்பெரு வெளியின்கண்ணே அருட்பெருஞ் ஜோதி வடிவராகி விகற்ப மில்லாது விளங்குகின்ற மெய்ப்பொருட் கடவுளே! சிசுப் பருவந் தொடங்கிக் குமாரப் பருவம் வரையில் பேய் வெருட்டல், தோஷந் தாங்கல், பாலெதிரெடுத்தல், சவலைக் குருந்தாதல், நோய்ப் பிணிப்புண்டல், பசியாலரற்றல், பயத்தாலுலம்புதல், உண்டியுவட்டல் உடப்பொடு நேர்தல், முதலிய எவ்வகைத் தடைகளாலுந் தடைபடா மல், எனதகத்தும் புறத்தும் காத்திருந்து வளர்த்தருளிய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை என்னென்று கருதி யென்னென்று துதிப்பேன்![7]

அறிவாரறியும் வண்ணங்க ளெல்லா முடைய பேரருட் பெருஞ் ஜோதிப் பெருந்தகைக் கடவுளே! குமாரப் பருவத்திற்றானே உலகிற் சிறுவர்களுடன் கூடிச் சிறுவிளையாட் டியற்றல், சிற்றுண்டி விழைதல், சித்திரம் பயிறல், அதிசயம் பார்த்தல், அசங்கியம் பேசல், அவலித் தழுதல், சிறுசண்டை செய்தல், சிறுகுறும் பியற்றல், தன்வசத் துழலல், தாய்வயிற் சலித்தல் முதலிய குற்றங்களில் என்னைச் சிறிதுஞ் செலுத்தாமல், ஓர் சிறிது அறிவு விளங்கப் புரிந்து இடந்தனித் திருத் தல், இச்சையின்றி நுகர்தல், ஜெபதபஞ் செய்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க் கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய் திருத்தல் முதலிய நற்செய்கைகளில் என்னைச் செலுத்திய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்![8]

எல்லா மானவராயும் ஒன்று மல்லாதவராயும் எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்து நிறைந்து விளங்குகின்ற தனித் தலைமைக் கடவுளே! **குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரை யின்றியே** என்றாத்திற் பயின்றறிதற்கருமை யாகிய கல்விப் பயிற்சியை என துள்ளகத்தே யிருந்து பயிற்றுவித் தருளினீர்.[9]

இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெரு மறைப்பையும், போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற் கும் அறிதற்கும் மிகவு மிலேசுடையதாய்ப், பாடுதற்கும் துதித்தற்கு

---

7. குழவிப்பருவத்தே இறைவன் உடனிருந்து காத்தமையைக் கூறுவது.

8. பிள்ளைப்பருவத்தே தம்மைக் குற்றங்களில் செலுத்தாது குணங்களைப் பற்றச் செய்தமையைக் கூறுவது.

9. அடிகட்கு இறைவனே கல்விபயிற்றினன், வேறு ஆசிரியரிடம் பயின்றதில்லை என்பதற்கு இஃது ஆதாரமாம்.

மிகவு மினிமையுடையதாய், சாகாக் கல்வியை இலேசி லறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத் தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டு களைப்பாடுவித் தருளினீர். 10

அச் சிறுபருவத்திற்றனே ஜாதியாசாரம் ஆசிரமஆசாரம் என்னும் பொய்யுல காசாரத்தைப் பொய்யென் றறிவித்து அவைகளை யனுட்டியாமற் றடை செய்வித்து, அப்பருவம் ஏறுந்தோறும் ஏறுந்தோறும் எனதறிவை விளக்கஞ் செய்து செய்து என்னை மேனிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்கவைத் தருளினீர். 11

வாலிபப் பருவம் அடுக்குந் தருணத்திற்றனே, அப்பருவத்திற்கு மிகவும் உரிய விடய இச்சைகளைச் சிறிதுந் தலையெடுக்க வொட்டாது அடக்குவித் தருளினீர். 12

அவ் வாலிபப் பருவந் தோன்றுதற்கு முன்னரே, எல்லா உயிர் கட்கும் இன்பந் தருவதற்கு அகத்தும் புறத்தும் விளங்குகின்ற அருட் பெருஞ் ஜோதி யுண்மைக் கடவுள் ஒருவரே யுள்ளார் என்றறிகின்ற மெய்யறிவை விளக்குவித் தருளினீர். வாலிபப் பருவந் தோன்றிய போதே, சைவம், வைணவம், சமணம், பவுத்த முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும், தெய்வங்களும், கதிகளும், தத்துவசித்தி விகற் பங்க ளென்றும் அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவசித்திக் கற்பனைக் கலைகளென்றும், உள்ளபடியே எனக்கறி வித்து அச்சமயாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாமற் றடைசெய்வித் தருளினீர். அன்றியும் வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந் தம், யோகாந்தம், கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க் கானுபவ லேச சித்தி பேதங்க ளென் றறிவித்து, அவைகளையும் அனுட்டியாதபடி தடை செய்வித் தருளினீர்.

அங்ஙனஞ் செய்வித்தது மன்றி, உலகியற்கண் பொன்விஷய விச்சை, பெண்விஷய விச்சை, மண்விஷய விச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும் என்னறிவை யோரணுத் துணையும் பற்றுவிக்காமல்,

10. தமக்குத் தமிழ்ப்பற்றை உண்டாக்கியதற்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறுவது.

11. இளமையிலேயே சாதி ஆசாரம் முதலியன அடிகளிடத்தில் இல்லை என்பது இது.

12. வாலிபப் பருவத்தில் விடய இச்சைகள் இல்லை என்பதற்கு இஃது ஆதாரம்.

எல்லாவுயிர்களையும் பொதுமையி னோக்கி யெல்லா வுயிர்களும் இன்ப மடைதல் வேண்டுமென்னுங் கருணை நன்முயற்சியைப் பெறுவித்துச் சுத்த சன்மார்க்கத் தனிநெறி யொன்றையே பற்றுவித்து எக்காலத் தும் நாசமடையாத **சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம்** என்னுஞ் சாகாக்கலானுபவ தேகங்களும், தன் சுதந்தரத்தால் தத்து வங்க ளெல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப்பெரு வல்லபமும், கடவு ளொருவரே யென் றறிகின்ற வுண்மை ஞானமும், **கருமசித்தி, யோக சித்தி, ஞானசித்தி** முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட் பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்பப் பெருவாழ்வில் என்னை அடை விப்பதற்குத் திருவுளங்கொண்டு, அருட்பெருஞ் ஜோதியராகி, நான் எவ்விதத்தும் அறிதற்கரிய உண்மைப் பேரறிவை யறிவித்தும், நான் எவ்விதத்தும் காண்பதற்கரிய உண்மைப் பெருங் காட்சிகளைக் காட்டு வித்தும், நான் எவ்விதத்தும் செய்தற்கரிய உண்மைப் பெருஞ் செயல் களைச் செய்வித்தும், நான் எவ்விதத்தும் அடைதற்கரிய உண்மைப் பெரு நன்மைகளை அடைவித்தும், நான் எவ்விதத்தும் அனுபவித்தற் கரிய உண்மைப் பேரனுபவங்களை அனுபவிப்பித்தும், எனது அகத் தினும் புறத்தினும் இடைவிடாது காத்தருளி யெனது உள்ளகத் திருந்து உயிரிற் கலந்து பெருந்தயவாற் றிருநடஞ்செய்தருளுகின்றீர்.

இங்ஙனஞ் செய்தருள்கின்ற தேவரீரது திருவருட் பெருங்கரு ணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

திருச்சிற்றம்பலம்

சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் முற்றிற்று

3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

இயற்கை விளக்கம் என்கின்ற **சத்திய ஞானசபைக்கண்ணே,** இயற்கை உண்மை என்கின்ற சத்தியத் திருவுருவினராய், இயற்கை இன்ப மென்கின்ற சத்தியத் திருநடஞ் செய்தருள்கின்ற இயற்கைத் தனிப் பெருங் கருணைத் தனிப் பெரும் பதியாய தனித் தலைமைக் கடவுளே!

தேவரீர் திருவருட் சமுகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்திவல்லப தரத்தை வகுத்தறிந்து வாழ்த்துது மென்று அளவிகந்த முகங்களைக் கொண்டு அளவு கடந்த நெடுங்காலம் தத்தம் அளவை களால் தனித்தனி யளந்தளந்தும் ஒருமித் தளந்தளந்தும் ஒருவாற்றினு முடிவு தோற்றாமையின் வேதாகமங்க ளனைத்தும் ஆங்காங்கு கோடித் ததிசயிக்கின்றன வென்றும், அண்டசராசரங்க ளெல்லாவற்றையும்

படைத்தல், காத்தல், துரிசு நீக்கல் முதலிய தொழில்களால் நிகழ்த்துகின்ற அதிகாரத் தலைவர்களும் எவ்வகைத் தத்துவங்களையும் காரண காரிய திறத்தால் நடத்துகின்ற சத்தி சத்தர்களும் உணர்ந்துணர்ந்தும் உணர்ச்சிசெல்லாமையின் முயற்சிபற்றுது மயங்குகின்றன ரென்றும், பேரறிவாற் சிறந்த பெரியர்க ளெல்லாம் வியந்து வியந்து விளம்புகின்றனர். அதனல் திருவருட் சமுகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்தி வல்லப தரத்தை ஒருவராலும் ஒருவாற்ருனும் உணர்ந்து கொள்ளுதல் கூடாவென்று ஐயுறவின்றி அறிந்து கொண்டேன். இங்ஙனம் அறிந்துகொண்ட சிறியேன் அவ்வுண்மை ஞானிகளுக்குச் சித்தி வல்லப தரத்தைக் கொடுத் தருளிய திருவருட் சமுகத்தினியற்கை யுண்மை விளக்கத் தரத்தை எங்ஙனமறியத் தொடங்குவேன்!

மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியேன் பொய்யறிவாற் புனைந்துரைத்த பொய்யுரைகளையும் மெய்யுரைகளாகக் கருணையினுற் கடைக்கணித் தருளிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீரது திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங் கருணைப் பெருந்தன்மையைக் கருதுதற்கு விரும்பிய ஐந்தொழிற் கருத்தர் முதலியோர் தூய்மையுடைமை அன்புடைமை முதலிய சுபகுணங்களைக் கருதுதற் கருவியாய தமது கரணங்கள் முற்றுப் பெற்றில வென்று கருதுதலின்றி எண்ணி எண்ணி இரங்குகின்றன ரென்று அறிவுடையோர் வியந்துரைத்தலைப் பலசாற் பயின்று கேட்டறிந்தேன். இங்ஙனங் கேட்டறிந்த சிறியரிற் சிறியேன் அத்திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் காமம் வெகுளி முதலிய அவகுணங்கட் கெல்லாம் வைப்பிடமாகிய பராய்முருட்டன்ன கருங்கற் கரணத்தால் எங்ஙனம் கருதத் தொடங்குவேன்!

நாயிற் கடையேன் செய்த குற்றங்களை யெல்லாம் குணங்களாகக் கொண்டு என்னுள்ளகத்தே யமர்ந்து உயிரிற் கலந்த பெருங்கருணைப் பெருமானே! தேவரீரது திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங் குணப் பெரும்புகழைத் துதித்தற்கு விரும்பிய மூர்த்திகண் முதலியோர் துதித்தற் கருவியாய தத்தஞ் செந்நாவுறுப்புகள் வாய்மைகூறல் இன்சொற்புகறல் முதலிய ஒழுக்கங்களிற் சான்றில வென்று துதித்தலின்றி அச்சுற்று நிற்கின்றன ரென்று அறிஞருண்மை வாசகத்தாலறிந்தேன். இங்ஙன மறிந்த கடையேன் பொய்யுரைத்தல் பயனில் கூறன் முதலிய தீமைக்கட்பயின்று தடித்த எனது அசுத்த நாவினல் தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங்குணப் பெரும் புகழை எங்ஙனந் துதிக்கத் தொடங்குவேன்!

அண்டபிண்ட முதலிய எல்லாவற்றிற்கும் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ் ஜோதித் தனிப்பெரும் பதியாய

பூரணரே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை யுண்மைத் தரத்தை யறிதல் வேண்டு மென்றும், இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் கருதுதல் வேண்டு மென்றும், இயற்கைப் பெருங் குணப் பெரும்புகழைத் துதித்தல் வேண்டு மென்றும், எனதுள்ளகத்தே ஓவாதுறைந் தூற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகு கின்ற பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்ற தாகலின், ‘அறிவாரறிகின்ற வண்ணங்களும், கருதுவார் கருதுகின்ற வண்ணங் களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் ஆகிய எல்லா வண் ணங்களையு முடையவர் அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங்கடவுள்’ என்ற சத்திய ஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தன்மைசாலாத் தமியேன் அறிதற்கும் கருதுதற்கும் துதித் தற்குந் தொடங்கினேன்.

இங்ஙனந் தொடங்குதற்கு முன்னர், எனதறிவிற்கும் கருத்திற் கும் நாவிற்கும் இயல்வனவாகத் தோற்றிய வண்ணங்களுள் ஒன்றே னும் ஈண்டு இயற்படத் தோற்றாமையின், அருட்பெருஞ்சோதித் தனிப் பெருங் கடவுளே! தேவரீர் திருவருட் சமூகத்தின் இயற்கை வண் ணங்கள், எத்தன்மையவோ! எத்தன்மையவோ! வென்று உணர்ந் துணர்ந்து கருதிக்கருதி யுரைத்துரைத்து அதிசயிக்கின்றவ னானேன்.

இயற்கை யுண்மைத் தனிப்பெரும் பொருளாயும் இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும் இயற்கையின்பத் தனிப்பெருஞ் சுக மாயும் பிரிவின்றி நிறைந்த பெருந்தன்மையராய அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருள் வலத்தால் பொறி புலன் கரண முதலிய தத்துவங்க ளனைத்தையும் வென்று நின்மலராகித் தத்துவாந்தத்தில் நின்று தம்முண்மை யுணர்ந்து இயற்கை யுணர்ச் சியைப் பெற்று இயற்கையுண்மைக்கண் இயற்கை யின்பானுபவஞ் செய்கின்ற சுத்த யோகாந்தர்களும், சுத்த கலாந்தர்களும், சுத்த போதாந்தர்களும், சுத்த நாதாந்தர்களும் சுத்த வேதாந்தர்களும் சுத்த சித்தாந்தர்களுமாகிய சுத்த சன்மார்க்க ஞானிகளின் திருக்கூட் டங்களை நன் முயற்சியாற் றனித்தனி யடைந்து பத்தியாற் பணிந்து ‘அற்புதப் பெருஞ் செயல் புரிகின்ற ஐயர்களே! அருட்பெருஞ் ஜோதித் தனிப் பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுகம் இருந்த வண்ணம் உள்ளம் உவந்துரைத் தருளல்வேண்டும்’ என்று விண்ணப்பிக்கின்ற தோறும், ‘எல்லாப் பொருள் கட்கும், எல்லாக் குணங்கட்கும், எல்லாச் செயல்கட்கும், எல்லாப் பயன் கட்கும், எல்லா வனுபவங்கட்கும், மற்றெல்லாவற்றிற்கும் உருவ சொரூப சுபாவ முதலிய இலக்கணங்கள் அனைத்தும் தாமே யாகியும் தாமல்லராகியும் தாக்கியுந் தாக்கற்றும் அகத்தும் அகப்புறத்தும் புறத்தும் புறப்புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற இயற்கை

உண்மைக் கடவுளது இயற்கைத் திருவருட் சமுக மிருந்த வண்ணம் அந்தோ! அந்தோ!! எங்ஙனமறிவோம்! எவ்வாறு கருதுவோம்! என்னென்று கூறுவோம்!' என்று அவ்வக் கூட்டங்களினுந் தனித் தனி உரைத் துரைத்து நெகிழ்ந்து நெகிழ்ந்து நெட்டுயிர்க்கின்றார்க ளென்றும்; எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் தோற்றுவித்தலும், இயக்குவித்தலும், அடக்குவித்தலும், மயக்குவித் தலும், தெளிவித்தலு மாகிய தொழில்களை எளிதிற் கொடுத்தற் குரிய பூரண சுதந்தரத்தவர்களாய், இயற்கைச் சத்திய ஞான சுகானுபவ பூரண சொரூப சாத்தியர்களாய் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வி தத்தும் தடைபடாத நித்திய சுத்த சத்த ஞானதேகிகளாய், பூதசித்தி, கரணசித்தி, இந்திரிய சித்தி, குணசித்தி, பிரகிருதிசித்தி, புருடசித்தி விந்து சித்தி, பரசித்தி, சுத்தசித்தி, காலசித்தி, கலாசித்தி, விசுவசித்தி வியோமசித்தி, பிரமசித்தி, சிவசித்தி முதலிய பிண்டசித்தி, அண்ட சித்தி, பகிரண்டசித்தி, அண்டாண்டசித்தி என்கின்ற அந்தரங்க பகிரங்க தத்துவ தத்துவி சித்திகளெல்லாவற்றையும் திருக்கடைக் கணிப்பாற் செய்ய வல்லவராய், சடாந்த சமரச சத்தியராய் விளங்கு கின்ற சமரச சுத்த சன்மார்க்க ஞானிகளது சித்விலாசத் திருச்சபைக் கண்ணே, புண்ணிய வசத்தாற் புகுதப்பெற்று மனங்கனிந்து வணங்கி நின்று, 'சர்வ சுதந்தரராய சத்தியர்களே! இயற்கை யுண்மைத் தனிப்பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுக மிருந்த வண்ணம் திருவுளம் பற்றித் திருவாய்மலர்ந்து திருவார்த்தை யளித் தருளல் வேண்டும்' என்று விண்ணப்பிக்கின்றதோறும் திருவார்த்தை யளித்தலின்றிப் பெருங்கருணைத் திருக்கண்களில் ஆனந்தநீர் பொழிந்து சும்மா விருக்கின்றன ரென்றும் உணர்ந்தோர் வியந்துரைப்பக் கேள்வி யுற்று 'இயற்கைத் திருவருட் சமுக மிருந்த வண்ணம் என்னையோ! என்னையோ!!' வென்று குலாவிக் குலாவிக் கூவுகின்றவனானேன்.

அடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும், முடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலை யோக ஞானசித்தி யனுப வங்களினும், முடிநிலை யோக ஞானசித்தி யனுபவங்களினும், அடி நிலைத் தத்துவ ஞானசித்தி யனுபவங்களினும், முடிநிலைத்தத்துவ ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலை ஆன்ம ஞான சித்தி யனுபவங் களினும், முடிநிலை ஆன்ம ஞானசித்தி யனுபவங்களினும், சுத்த ஞானசித்தி யனுபவங்களினும், சமரச சுத்த ஞானசித்தி யனுபவங் களினும், அதுவதுவாகி நிறைந்தும், அதுவதுவாகி விளங்கியும், அது வதுவாகி யினித்தும், ஆங்காங்கு அதீதமாகிக் கலந்தும் இவை அனைத்துமாகி ஒருமித்தும் அதீதாதீதமாகித் தனித்தும் வயங்கு கின்ற பெருங் கருணைப் பெரும்பதியாய கடவுளே! எல்லாச் சத்தி களுக்கும், எல்லாச் சத்தர்களுக்கும், எல்லா மூர்த்திகளுக்கும்,

எல்லா மூர்த்தர்களுக்கும், எல்லாத் தேவிகளுக்கும், எல்லாத் தேவர்களுக்கும், எல்லாச் சாதனர்களுக்கும், எல்லாச் சாத்தியர்களுக்கும், எல்லா வுயிர்களுக்கும், எல்லாத் தத்துவங்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும், எல்லாக் குணங்களுக்கும், எல்லாச் செயல்களுக்கும், எல்லா அனுபவங்களுக்கும், மற் றெல்லாவற்றிற்கும் முதற் காரணமாயும், நிமித்த காரணமாயும், துணைக் காரணமாயும், இவை யல்லவாயும் விளங்குகின்ற திருவருட் சமுக மிருந்த வண்ணம் அறிந்து கொள்ளுதலிங்ஙனமானல், திருவருட் சமுகப் பெருங் கருணைப் பெரும் பதியாய தேவரீர் இயற்கைத் திருவண்ண மறிந்து கொள்ளுதல் எங்ஙனமோ ! எங்ஙனமோ !!

ஓ ! ஒப்புயர் வின்றி விளங்குகின்ற ஒருவரே ! தேவரீர் திருவண்ணமும் திருவருட் சமுகத் திருவண்ணமும் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்கும் எத்திறத்தானும் கூடாவாயினும் அடிமை யளவிற்கியன்ற படி அறியா தறிந்தும் கருதாது கருதியும் துதியாது துதித்தும் எனது உரிமையை ஊற்றஞ்செய்கின்றவனானேன். வந்தனம் ! வந்தனம் !

திருச்சிற்றம்பலம்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம் முற்றிற்று

4. சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

உத்தர ஞான சித்திபுர மென்றும் **உத்தர ஞான சிதம்பர** மென்றும் திருவருளா லாக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும் **பார்வதிபுர** மென்றும் **வடலூ** ரென்றும் உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று விளங்குகின்ற தெய்வப்பதியினிடத்தே, இயற்கை விளக்க நிறைவாகி யுள்ள ஓர் சுத்த சிவானுபவ **ஞானசபை**யில், இயற்கை யுண்மை நிறைவாகிய திருவுருவைத் தரித்து, இயற்கையின்ப நிறைவாகிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை எவ்வுயிரும் இன்பமடைதற் பொருட்டே செய்தருளுகின்ற எல்லாம் வல்ல தனித் தலைமைக் கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி யாண்டவரே ! தேவரீரது திருவருட் சமுகத்தில் யான் செய்துகொள்ளுகின்ற **சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்.**

இவ் வுலகினிடத்து ஆறறி வுள்ள உயர் வுடைத்தாகிய தேகத்தைப் பெற்ற யான் இத் தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்ப முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் நிவர்த்தி செய்து, இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு, எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எத்துணையும்

தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல்வேண்டுமென்பதே எனது சத்தியமான அதிதீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது.

எனது விருப்ப முயற்சி இங்ஙனமாக, அவத்தைகளெல்லாவற்றையும் நீக்கி இத்தேகத்தை நித்தியதேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்பசித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் எதனாற் பெறுதல் கூடுமென்று அறியத் தொடங்கிய தருணத்து, வேறு எந்த வழியாலும் பெறுதல்கூடாது, எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்தரம் ஒன்றாலே பெறுதல் கூடுமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி யறிந்தேன்.

பின்னர், திருவருட் சுதந்தரம் நமக்கு எந்த வழியாற்கிடைக்குமென்று அறியத் தொடங்கிய தருணத்து, எனது யானென்னும் தேக சுதந்தரம், போகசுதந்தரம், ஜீவசுதந்தரம் என்னு மூவகைச் சுதந்தரங்களும் நீங்கியவிடத்தே கிடைக்குமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி யறிந்தேன்.

ஆகலில், எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேகசுதந்தரத்தையும், போகசுதந்தரத்தையும், ஜீவசுதந்தரத்தையும், தேவரீர் திருவருட்கே சர்வசுதந்தரமாகக் கொடுத்து விட்டேன். கொடுத்த தருணத்தே, இத்தேகமும் ஜீவனும் போகப்பொருள்களும் சர்வசுதந்தரராகிய கடவுள் பெருங்கருணையாற் கொடுக்கப் பெற்றன மன்றி நமது சுதந்தரத்தாற் பெற்றனவல்ல வென்னும் உண்மையை அருளாலறிவிக்கவும் அறிந்து கொண்டேன். இனி இத்தேகத்தி னிடத்தும் ஜீவனிடத்தும் போகப்பொருள்களிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்றமாட்டாது. தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் தவிர்த்து, இத்தேகத்தையே நித்தியதேகமாக்கி எக்காலத்துமழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்.

இத்தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம்! வந்தனம்!

இங்ஙனம்
சிதம்பரம் இராமலிங்கம்

திருச்சிற்றம்பலம்

சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் முற்றிற்று

பின் இணைப்புகள் 1

அடிகள் அருளியவை

வியாக்கியானங்கள்

1. பொன்வண்ணத் தந்தாதி 22-ம் செய்யுள் உரை
2. வேதாந்த தேசிகர் குறட்பா ஒன்றன் உரை

உபதேசங்கள்

1. அனுஷ்டான விதி
2. கணபதி பூஜா விதி
3. செவ்வாய்க்கிழமை விரத முறை

1. பொன்வண்ணத் தந்தாதி 22-ம் செய்யுள் உரை

திருச்சிற்றம்பலம்

கட்டளைக் கலித்துறை

வேதியன் பாதம் பணிந்தேன்
பணிந்துமெய்ஞ் ஞானமென்னுஞ்
சோதியென் பாலுற வுற்றுநின்
றேற்கின்று தொட்டிதுவே
நீதியென் றான்செல்வ மாவதென்
றேன்மே னினைப்புவண்டா
ரோதிநின் போல்வகைத் தேயிரு
பாலு மொழித்ததுவே.

உரை

வேதியன் — சத்தார்த்த லக்ஷியனாகிய இறைவனது

பாதம் — திருவடிகளை

பணிந்தேன்—வணங்கினேன்

பணிந்து — பணிந்து (திருவருட் சமூகத்தில் நின்ற யான் அவனால் கடைக்கணிக்கப் பெற்றதனால்)

மெய்ஞ்ஞான மென்னுஞ் சோதி — மெய்யறி வென்னும் இயற்கை விளக்கமாகிய அவ் விறைவனது ஆண்பால் வடிவம் [சோதி என்பது சோதிப்பாலெனக் கொளற்பாலது.]

என்பாலுற — ஆன்ம சத்தி விளக்கமாகிய எனது பெண்பாலிற் கலக்க

உற்று நின்றேன்—ஐக்கியானுபவம் பெற்று நின்றேன்

(நின்றேற்)கு — அங்ஙனம் நின்ற என்னை இறைவன் மீட்டுங் கடைக் கணித்து

இன்று தொட்டு — இது பொழுது தொடங்கி

இதுவே — இவ்வனுபவ ஒழுக்கமே

நீதி யென்றான் — நீ அனுபவிக்கின்ற ஒழுக்கமாகுக என்று திருவாய் மலர்ந் தருளினன் (யானும்)

செல்வமாவ தென்றேன் — அடைதற்குரிய திருவருட்செல்வம் இங்ஙன மாவதென்று அங்ஙனமே நின்றனன்

மேல் — அதன் பின்னர்

நினைப்பு — இருவகைப் பாலினுங் கவர்பட நின்ற எனது நினைவு

வண்டாரோதி — வண்டு மொய்க்கின்ற இயற்கை மணம் வீசும் அளகத்தை உடையாய்

நின்போல் வகைத்து ஏ — இறைவனது அனுபவ விருப்பம் பற்றி வந்த தாபவிசேடத்தாற் பெண்பாற்குரிய நாணத்தை விடுத்துப் பலருங் கேட்கத் "தூது செல்லுதி" என்று என்னை வருந்தி ஏவுதலால் ஊக்க முதலியவுடைய ஆண்பாற்றன்மை அவையின்றிய நின் பெண்பாற் றன்மையிற் கலக்கப்பட்டு இருபாலும் ஒழித்து நின்ற நின் வண்ணம் போன்றதாய்

இருபாலும் — ஆண்பால் பெண்பால் என்னும் இரு பாலினிடத்துஞ் செல்லுகை

ஒழித்தது ஏ — நீங்கிற்று.

ஆகலில் நீயும் புறத்தே என்னை யொப்பாயாக.

இது சிவானந்தத்தை அகத்தே அனுபவித்த தோழி புறத்தனுபவம் விரும்பிய தலைவியை அறிவுறுத்தியது.

---

2. வேதாந்த தேசிகர் குறட்பா ஒன்றன் உரை

குறட்பா

மூன்றி லொருமூன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலையுந் துயர்.

உரை

(1. பௌராணிக மத சித்தாந்தம்)

மூன்றில் — பறவையில், கருடனில்.

ஒரு மூன்று — திரிமூர்த்தி சொருபராகிய எம்பெருமான், விண்டு.

மூவிரண்டு — 6 : ஷட்குணர், ஷாட்குண்ணிய பரிபூரணராய்-கன்னி, திருமகளென்னும் பிராட்டியாரோடு.

௩நான்கு — 12, துவாதச அடியார்களாகிய ஆழ்வாராதிகள் சூழ.

(முன்னான்கு) — 5, ஸ்ரீமத் பஞ்சாயுதபாணியாக.

தோன்ற—சேவை சாதிக்க.

தொலையுந் துயர் — துன்பம் நீங்கும்.

இதன் கருத்து — பறவை யென்னும் கருடாழ்வான் மீது, திரிமூர்த்தி சொருபராகிய எம்பெருமான், ஷாட்குண்ணிய பரிபூரணராய்த் திருமகளென்னும் பிராட்டியாரோடு, துவாதச அடியார்களாகிய ஆழ்வாராதிகள் சூழ ஸ்ரீமத் பஞ்சாயுதபாணியாக, எழுந்தருளி கல்யாண குணத்துடன் சேவை சாதிக்க, நமது துன்பங்கள் தொலையும்.

அன்றி

(2. அத்துவைதம்)

மூன்றில் — காரணம் சூக்குமம் தூலம் என்கின்ற மூன்று தேகத்தினுள் காரண தேகத்தில்.

ஒரு மூன்று — ஷெ தேகத்திற்குரிய மூன்று தத்துவங்களின் சொருப ரூப சுபாவங்களும்.

மூவிரண்டு — சூக்குமதேகத்திற்குரிய ஆறு தத்துவங்களின் சொருப ரூப சுபாவங்களும்.

முந்நான்கு — ஸ்தூலதேகத்திற்குரிய பன்னிரண்டு தத்துவங்களின் சொருப ரூப சுபாவங்களும்.

தோன்ற — ஐயந் திரிபு மயக்க மின்றித் தோன்ற — அத்தருணத்தே.

துயர் — பிறவித் துன்பம்.

தொலையும் — நீங்கும்.

அன்றி

(3. சிவாத்துவைதம்)

ஒருமூன்று மூவிரண்டு முந்நான்கு — 3, 6, 12: இருபத்தொன்றினை.

மூன்றில் — மூன்றில் கொடுக்க வந்த தொகையாகிய 7, காலம், நியதி, கலை, புருடன், மாயை, ராகம், வித்தை யென்னும் ஏழு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும்.

தோன்ற — சந்தேகம் விபரீதம் அஞ்ஞானம் அறத் தோன்ற.

தொலையுந் துயர்—துயர் தொலையும்.

அன்றி

(4. விசிஷ்டாத்துவைதம்)

மூன்றில் — சித்து அசித்து சிதசித்து என்கின்ற தத்துவத் திரயங்களில்.

ஒரு மூன்று — சித்தினிடத்து இச்சை அறிவு தொழில் என்கின்ற மூன்று குணங்களும்.

மூவிரண்டு — அசித்தினிடத்து மயக்கமின்மை, திரிபின்மை, ஐயமின்மை, விசித்திரமின்மை, அசுத்தமின்மை, விகாரமின்மை என்கின்ற ஆறு குணங்களும்.

முந்நான்கு — சிதசித்தினிடத்து அறிவு, கருணை, அன்பு, வாய்மை, நிராசை, தூய்மை, நிறைவு, ஒழுக்கம், பொறை, செப்பம், சால்பு, மறதியின்மை என்கின்ற பன்னிரண்டு குணங்களும்.
(ஆகக்கூடி சித்து அசித்து சிதசித்து என்னும் மூன்றின் குணங்களாகிய இருபத்தொன்றின் சொரூப ரூப சுபாவங்கள் ஐயந் திரிபு மயக்க மின்றி)

தோன்ற — விளங்க.

துயர் தொலையும் — துன்பமாகிய சகல கேவலங்கள் நீங்கும். சுத்தராவோம்.

1. அனுஷ்டான விதி

திருச்சிற்றம்பலம்

சிவகணபதயே நம வென்று குட்டிக் கொள்ளுகிறது. சிவகுரவே நம வென்று நமஸ்கரிப்பது.

கும்ப பூசை

சிவாய நம என்று நிரீக்ஷணஞ்* செய்வது.
அஸ்திராய நம என்று புரோக்ஷணம் செய்வது.
கவசாய நம என்று திக்பந்தனம் செய்வது.
அஸ்திராய நம என்று தாடனம் செய்வது.
சிவாய நம என்று தாளத்திரயம் செய்வது.
கவசாய நம என்று அவகுண்டனம் செய்வது.
சிவாய நம என்று தேனுமுத்திரை செய்வது.

அஸ்திராய நம என்று பத்து விசை ஜபம் செய்து, மூன்று விசை அஸ்திராய நம வென்று சிரசில் புரோக்ஷித்துக்கொண்டு, மேற்படியால் மூன்றுவிசை ஜபஞ்செய்து, மேற்படியால் மூன்று விசை தர்ப்பித்து, "ஆத்மதத்துவாய சுவதா, வித்யாதத்துவாய சுவதா, சிவதத்துவாய சுவதா" என்று அரை உளுந்து அமிழளவாக ஜலம் ஆசமித்து, அஸ்திராய நம வென்று கட்டைவிரல் மடக்கி அதரசுத்தி செய்து, கவசாய நம வென்று முகவாய்க்கட்டை இருபுறம், நாசி 2, கண் 2, காது 2, தோள் 2, தொப்புள், மார்பு — இப் பன்னிரண் டிடமுந் தொடுவது.

பின் திருநீறெடுத்து இடது கையில் வைத்து, அஸ்திராய நம வென்று ஜலம் புரோக்ஷித்து வலது தொடைமேல்வைத்து: "நிவர்த்தி கலாய நம, பிரதிஷ்டாகலாய நம, வித்தியாகலாய நம, சாந்திகலாய நம, சாந்தியாதீத கலாய நம, ஈசான மூர்த்தாய நம, தத்புருஷ வக்த்திராய நம, அகோர ஹிருதயாய நம, வாமதேவ குகியாய நம, சத்தியோஜாத மூர்த்தயே நம, ஹிருதயாய நம, சிரசே நம, சிகாயை நம, கவசாய நம, நேத்திரேப்யோ நம, அஸ்திராய நம" என்று ஜபித்து, கவசாய நம வென்று குழைத்து, அஸ்திராய நம வென்று நிருதி திக்கில் தெறித்து, ஈசான மூர்த்தாய நம வென்று சிரசிலும்,

---

* நிரீக்ஷணம் - பார்த்தல். புரோக்ஷணம் - தெளித்தல்,
திக்பந்தனம் - எட்டுத் திக்குகளிலும் நொடித்தல்,
தாடனம் - தட்டுதல். தாளத்திரயம் - மூன்று முறை தட்டுதல்,
அவகுண்டனம் - வளைத்தல். தேனு முத்திரை - பசுவின் முலைக் காம்புகள் போல் காட்டும் முத்திரை

தத்புருஷ வக்த்திராய நம வென்று நெற்றியிலும், அகோர ஹிருதயாய நம வென்று மார்பிலும், வாமதேவ குகியாய நம வென்று நாபியிலும், சத்தியோஜாத மூர்த்தயே நம வென்று முழங்கால் தோள் முழங்கை மணிக்கட்டு பக்கம் முதுகு கண்டம் - இந்த இடங்களில் தரித்துக் கொண்டு, கொஞ்சம் ஜலம்விட்டுக் கையலம்பி, முட்டி பிடித்து, சிவாய நம வென்று சிரசில் புரோக்ஷித்துக்கொண்டு, பின்பு முன் சொன்ன தத்வ மந்திரத்தால் ஆசமித்து, முன்போல் தொடுமிடந் தொட்டுக் கவசாய நம வென்று ஜலம் சூழ வளையவிட்டு, சிவாய நம வென்று மூன்று விசை அர்க்கியங் கொடுத்து, பஞ்சபிரம மந்திரத்துடன் ஹிருதய சிர சிகை கவச நேத்திர அஸ்திராதி மந்திரங்களால் தர்ப்பித்து, முன்போல் ஆசமனாதி தொடுமிடந் தொட்டு, அஸ்திராய நம வென்று மணையின் பேரில் புரோக்ஷித்து, பின்பு சிவகணபதயே நம வென்று குட்டிக்கொண்டு, சிவகுரவே நம வென்று நமஸ்கரித்து, தக்ஷிணாமூர்த்தியைத் தியானித்து, பஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டு ஜபஞ் செய்து, பின்பு சிவசூரியாய நம வென்று கையில் ஜலம் விட்டுச் சூரிய அர்க்கியங் கொடுத்து, பின்பு, பதினொரு விசை நமஸ்கரித்து, தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரிய புராணம் ஸ்தோத்திரஞ் செய்து, முன்போல் ஆசமனாதி தொடுமிடந் தொட்டு, விபூதி தரித்துக்கொண்டு, மணையின்பேரில் அஸ்திராய நம வென்று ஜலம் விட்டுத்தொட்டு, ஹிருதயாய நம வென்று மார்பிலும் நெற்றியிலு மிட்டு, பின்பு சிவதரிசனம் குருதரிசனம் செய்து, பின்பு விதிப்படி போஜனஞ் செய்து, பின்பு சிவாகமாதிகள் பாராயணஞ் செய்தல்.

திருச்சிற்றம்பலம்

2. கணபதி பூஜா விதி

திருச்சிற்றம்பலம்

நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு, தத்துவத்திரய மந்திரத்தால் ஆசமித்து, ஹிருதயத்தால் தொடுமிடந் தொட்டு, பஞ்சாக்ஷரத் தியானஞ்செய்து, கணபதியைப் பீடத்தை விட்டு அபிஷேகஸ்தான பாத்திரத்தி லெழுந்தருளப் பண்ணி, பீடத்தைச் சுத்தி செய்து, திருமஞ்சனஞ் செய்ய வைத்திருக்கின்ற தீர்த்த கும்பத்தைக் கந்த புஷ்பங்களால் சூழவும் "சிவாய நம, கவசாய நம" என்று சாத்தி, பின்பு பஞ்சாக்ஷரத்தால் பதினொரு விசை அர்ச்சித்து, அஸ்திராய படு வென்று மணியசைத்து, அஸ்திராய நம வென்று அர்க்கிய வட்டகையில் ஜலம் பூரித்து, பிரணவத்தா லேழு விசை கந்தாதிகளால் அர்ச்சித்து, பின்பு கணேசருக்கு ஆசன மூர்த்தி மந்திரத்தால் புஷ்பஞ் சாத்தி, தேவாரம் திருவாசகம் முதலியவைகளோதி அபிடேகஞ் செய்தல்.

விசேட தினத்தில் ஆகம விதிப்படி தைல க்ஷீர பல முதலியவற்றால் அபிடேகித்து, இடையே ஒவ்வொன்றுக்கும் ஜலத்தால் அபிடேகித்து, பின்பு சந்தனாதி கும்பஜலாபிஷேகஞ் செய்து, ஒற்றாடை சாத்தி யீரம் புலர்த்தி, வத்திரபூடணாதிக ளணிந்து, சிவாய நம வென்று வெண்ணீறும், கந்தகுரவே நம வென்று சந்தனமும், ஆசனமூர்த்தி மந்திரத்தால் புஷ்பமும், பஞ்சாக்ஷரத்தால் மூன்றுவிசை தூர்வாக்ஷதையும், தத்துவத்திரயத்தா லர்க்கியமுங் கொடுத்து, சாமான்னிய நிவேதனஞ்செய்து, தூபதீபங் கொடுத்து, பின்பு சுமுகாதி சிவாத்மஜாய நம ஈறாகவுள்ள சோடச மந்திரத்தால் அர்ச்சித்து, அர்க்கியங் கொடுத்து, கிரமப்படி விசேஷ நிவேதனாதி தூப தீபாராதனை செய்து, பத்திரஞ் சாத்தி, தோத்திரித்து, பிரதக்ஷிணாதி புஷ்பஞ் சாத்தி நமஸ்கரித்து, மனத்தால் ஹிருதயத்தி லெழுந்தருளப் பண்ணிக்கொண்டதாகச் சிந்தித்து, முன் சொன்னபடி ஆசமனஞ் செய்து, பஞ்சாக்ஷர ஜபஞ்செய்து, திருவெண்ணீறு தரித்துக்கொண்டு, போஜன விதிப்படி போஜனஞ் செய்யவும்.

மேலும், மேற் குறித்தபடி பூஜையை மானசிகமாகச் சுப்பிரமண்ணியம், சிவம், தக்ஷிணாமூர்த்தி, நடராஜமூர்த்தி இவற்றிற்கும் செய்யலாம். இவ்வணஞ் செய்திருந்தால் பரமாசாரியர் கிடைப்பார். அடி பரமாசாரியரை மானசிகத்தா லர்ச்சித்து உண்மை யறிந்து நிராசை மயமானல் சிவானுபவம் பெறலாம்.

திருச்சிற்றம்பலம்

3. செவ்வாய்க்கிழமை விரத முறை

திருச்சிற்றம்பலம்

திங்கட்கிழமை இரவில் பலாகாரஞ்* செய்து, செவ்வாய்க்கிழமை அருணோதயத்தி லெழுந்து, திருநீறு நெற்றியில் மாத்திரம் அணிந்து, நல்ல நினைப்புடன் அங்கசுத்தி தந்தசுத்தி முதலானவையுஞ் செய்து கொண்டு, சூரியோதயத்திற்கு முன் ஆசாரமான சுத்த சலத்தில் ஸ்நானஞ்செய்து, விபூதியைச் சலத்தினல் குழைத்து அனுஷ்டானப் படி தரித்துக்கொண்டு, கணபதியை நினைத்து, பின்பு ஸ்ரீ பஞ்சாக்ஷ ரத்தை நூற்றெட்டு முறை செபித்து, பின்பு சிவத்தியானம் செய்து, எழுந்து வாயலில் வந்து சூரியனைப் பார்த்து ஓம் சிவ சூரியாய நம வென்று மெதுவாகச் சொல்லி நமஸ்கரித்து, அதன் பின்பு அவ்விடத் திலேதானே நின்றுகொண்டு, தங்கள் தங்கள் மனத்திலிருக்கிற கோரிக்கைகளை முடித்துக்கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீ வயித்திய லிங்கரையும் தையனாயகியையும் முத்துக்குமாரசாமியையும் தியானித் துக்கொண்டு, பின்பு ஓம் வயித்தியநாதாய நம வென்று நூற்றெட்டு ஆயிரத்தெட்டு இரண்டில் எந்த அளவாவது செபித்து, ஒரு பலம் மிளகு சீலையில் முடிந்து வயித்தியலிங் கார்ப்பணம் என்று ஓரிடத்தில் வைத்து, சிவனடியார் ஒருவர்க்கு உபசாரத்தோடு அமுதுபடைத்து, பின்பு சுசியொடு பச்சரிசிப் பொங்கல் முதலான புசிப்பை அரை யாகா ரம் முக்கால் ஆகாரங் கொண்டு, அன்று மாலையில் சிவதரிசனஞ் செய்து, பாய் சயனம், கொட்டை** முதலாகியவையும் விட்டு, மெழுகிய தரையில் கம்பளம் விரித்துப் படுக்கவேண்டும்; சிவசரித்திரங் கேட்க வேண்டும்; செபஞ் செய்துகொண் டிருக்கவேண்டும்;. சந்தனம், புட்பம், தாம்பூலம், இராகம், சுகம், பெருந்தூக்கம் முதலானவையும் விட்டிருக்கவேண்டும்.

திருச்சிற்றம்பலம்

---

* பலாகாரம் - பழ ஆகாரம், பழ உணவு.

** கொட்டை - தலையணை.

பின் இணைப்புகள் 2

அன்பர்கள் எழுதியவை

1. அடிகளுக்கு அன்பர்கள் எழுதிய திருமுகங்கள்
2. சன்மார்க்க சங்கத்தினர் ஒருவர்க் கொருவர் எழுதிய திருமுகங்கள்
3. வடலூர்க்குடிகள் அடிகளுக்கு, சாலைக்காக எழுதிக் கொடுத்த இறைம் பத்திரம்
4. சன்மார்க்க சங்கத்தார் சாலைக்கு உபகரித்த பொருள்களின் அட்டவணை
5. அகர உயிரின் இலக்கண நியாய விசார வினாக்கள்

1. அடிகளுக்கு அன்பர்கள் எழுதிய திருமுகங்கள்

திருமுகம் 1

26 - 12 - 1866

சர்வஞ்ஞர்கள்

தாசில்தார் ஸ்ரீ நரசிம்மாச்சாரியார் எழுதியது

ஸ்ரீமச் சம்யத்த சத்குணபதி பூறன்னராய் கியானனுஷ்டான சம்பன்னராய் ரூஜயோக சாம்பரூச்சி சிங்காசன சீளராய் மஹான் களாயி யெழிந்தருளி இருக்கிற மகாரூஜரூஜஸ்ரீ ரூமலிங்கபிள்ளை அவர் களுடைய சன்னிதானத்துக்கு.

கா. நரசிம்மாசாரியார் யெழிதிய விக்கியாபன பத்திரிகை. இவடம் குடியாத்தத்தில் குசலம். தங்களுடைய ஆத்துமானுபவானந் தாதிசெயங்களுக்கு யெழிதி அனுப்பிவைக்கக் கோருகிறேன். இப்பவும் —

தாங்கள் சிற்காலத்துக்கு விசேஷானுக்கிறஹ பூற்வகமாய்யெழிதி அனுப்பிவைத்த ஆக்கியா பத்திரிகை சேர்ந்து மிகவும் ஆனந்த மடைய லானேன். தங்களுடைய ஆக்கியா பிரகாரம் சறிகை வெள்ளை தலை உருமாலை பியாங்கி துவாரூ இத்துடன் அனுப்பிவைக்கலாச்சுது. சேர்ந்த சங்கதி தெரியப்படுத்தக் கோருகிறேன். இந்த உருமாலையி னுடைய கிரயம் யெனக்கு சேற்குறதாக யெழிதிநீர்கள்.

தங்களுடைய ஆக்கியா பிறகாறம் நடப்பிவைக்க வேண்டியதே யென் வேலையே தவிற அதுனுடைய கிரயம் வாங்குகிற வேலை யென்னதல்ல. மஹான்கள் விஷயத்திலே கறணத் திறிய பூற்வகமாய் நடப்பிவைத்த ஙகங்கறியங்களை குறிச்சு தகுந்த விசேஷம் சுவாமியே குடுத்துக் கொண்டிருக்குற விஷயத்தில் அப்பேற் கொத்த கிறயத்தை விட்டுவிட்டு அல்ப்பமான திறவிய ரூப கிறயத்தை அபேக்ஷிக்குறது யெங்கையாவதுண்டோ. தாங்களே யோசிக்கவேண்டியது. கோவிந்தா சாறியரூடே சில சங்கதிகள் நான் சொன்னது தங்களுடைய தற்சனம் அப்பிடியாவது நேறிடுமென்னமோ வென்று தாத்பறியத்து னலேயே தவிற வேரில்லை. இவடம் தாங்கள் யேளி யெனக்கு தரிசனம் குடுக்கவேணு மென்று அபிசந்தி தங்களுக்கு இருந்தாலும் அதுக்கு பிறதிபாதகமாயி இருக்கப்பட்ட மஹா பாபங்களுக்கு ஆகரமான யென்னை தாங்கள் ரொம்பவும் ஸ்தோத்திறம் பண்ணதைக் குறித்து நான் மிகவும் அஞ்சிகுறேன். மஸ்தான் அவற்களுடன் தாங்கள் இவடம் யேளறதாய் யெழிதினீர்கள். அப்பிடி யேளறது தங்கத்துக் குப் பறிமள முண்டாப் போல சந்தோஷிக்க லாகுறது. தில்லை கோவிந்தரூச சுவாமியாருடைய சன்னிதிக்கு வருஷா வருஷமும

கோஷ்ட்டி சேற்க்க தாங்கள் நினைச்சால் ஒரு அப்பியந்தறமும் இருக்க மாட்டாது. இஷ்டம் சம்பூற்ண மாகாமல் போனதைக் குறித்து வியா குலம் காண வைத்தீர்கள். "காலோஹி துரதிக் கிரமண" என்கிற சீதா பிருட்டி வசனப் பிறகாரம் எல்லாம் காலத்துக்கு உள்பட் டிருக் கிறபடியால் அந்தந்த காலத்து குணங்கள் - கேத மோதங்கள் - தப்பு கிறதில்லை. அதுக்கு சிந்திச்சி பிறயோஜனமும் இல்லையென்று சற்வக்கியற்களாகிய தங்களுக்கு கியாபகப் படுத்துகிறேன். ம-ா-ா-ஸ்ரீ மஸ்தான் அவர்களுக்கு கோவிந்தாசாரியாற் அவர்களிடத்துக்கு ஒரு கடிதமும் அதுக்குமுன் தபால் மூலமாய் ஒரு கடிதமும் யெழிதி யிருக் கிறேன். அதற்கு வெகு னள் ஆயும் ஜவாபு வறவில்லை. அதுவும் யென் னுடைய தோஷமாகவே நினைக்குறேன். "கதா திரக்ஷியா மஹேருமம் ஜெகதச் சோக நூசனம்" யென்கிறபடி தங்களுடைய தற்சனத்துக்கு விசேஷமாய் அபேக்ஷித்து யிருக்கிறேன். இவ்வளவே சமாசாறம்.

௲அாகூ௰கூ ௵
டிசம்பற் ௴ உகூ ௳ காய - நரசிம்ஹாசார்ய *
குடியாத்தம்

க்ஷேமம் — இவை

இந்தக் கடிதம் சிதம்பறத்தில் ஊ ஸ்ரீமான் தில்ல கோவிந்தராஜ சுவாமி சன்னிதி தற்மகர்த்தருகிய கோமாண்டுர் கிற்ஷ்ணமாசாறியாற் அவர்கள் மேல் விலாசம் பார்த்துக்கொண்டு மஹாருஜருஜஸ்ரீ பிள்ளை யவர்கள் ருமலிங்க பிள்ளையவர்கள் சன்னிதானத்தில் குடுக்கத் தகுந் தது. குடியாத்தத்தி லிருந்து.

திருமுகம் 2

இசை விருந்து

4 - 2 - 1867

ஓர் அன்பர் எழுதியது

௳

ஐயா!

இன்று ராத்திரி நமது வீட்டில் 6 மணிக்கு நடக்கும் சிவகங்கை வயித்திநாதய்யர் பாட்டுக் கச்சேரிக்குத் தாங்கள் வந்திருந்து சிறப் பிக்கக் கோருகிறேன்.

1867 ௵ பிப்பிரவரி ௴ 4 ௳

ம-ா-ா-ஸ்ரீ கூடலூர் கருங்குழி ராமலிங்கம்
பிள்ளை யவர்களுக்கு. கருங்குழி.

---

* கையொப்பம் தெலுங்கில் உள்ளது.

திருமுகம் 3

அன்னதானத்து அடியார்கள்

கூடலூர் ஸ்ரீ துரைசாமி அவர்கள் எழுதியது

உ

கடவுள் துணை

விண்ணப்பம்

அன்புந் தயவுமுள்ள அய்யா அவர்கள் திருவடிகளுக்கு . . . . தெண்டநிட்ட விண்ணப்பம்.

நானும் விசுவலிங்க வுபாத்தியாயரும் நாளது மீ கஙூ உ சனிக்கிழமை ரு மணிக்கு மேல்பட்டு ஆபீசை விட்டு பிறையாணமாயி வடக்கு னேக்கி ரெட்டிச்சாவடிக் கடுத்த ஒரூரில் தங்கி விடியர்க்காலம் அழசிப் பாக்கம் சிங்கிரிகோவிலுக்குப் போயிப் பகற்போது போசனஞ் செய்துக்கொண்டு கஅ நாழிகைக்கு மேல்ப்பட்டு அவிடம்விட்டு பிறை யாண மாகினே மப்போது மாடுகளுக்கும் எங்களுக்கும் அருள் துணை யாயி மந்தார மிட்டு தென்றல் வீசுவதுபோல் கொண்ட லடித்தது. செல்லஞ்சேரி தூக்கணும்பாக்கம் வந்து ராவு கால மாகையால் ஜீவ காருண்ணியத்துக்குத் தகுதி யல்லாதவ ராயினு ரொருவர் வுள்ளேரிப் பட்டு வந்து தங்கி விடியர்க்காலே தெற்கு நோக்கி வருகையில் யெனக்கு நெஞ்சி கருத்து கொஞ்சம் பித்த ஜலமும் அஜீரணத்தால் சொர்ப்ப அன்னமும் வெளிப்பட்டுது. திருப்பணும்பாக்கம் ... ... அறிவானது தூண்டச் சீரகம் மிளகு பொடி செய்து சருக்கரை சேர்த்து நெய்யா லுண்டை செய்து நானும் உபாத்தியாயரும் பொசித்தோம். உடனே கூ? மணிக்கு கூடலூர் வந்து சேர்ந்து குரு கிருபையால் அவாளவாள் அலுவலைப் பார்த்து வருகிறேம்.

வைகாசிமீ ககஉ நடக்கப்போகிற அன்னதானத்திற்கு சுமார் முன்றுக்குமேல் நெல்லு வண்டிகளும் வொரு வண்டி காயிகரிகளுமாக நான்கு வண்டி தயாராகு மென்று நினைக்குறேன். ஆனல் அருள் கூட்டிவைக்கு மென்பதே அடியேன் துணிவு.

வருகிற சனிக்கிழமை சாயரகைஷ புறப்பட்டு திருமாணிக்குழி பாலூர் பக்கம் போகவேணு மென்கிற ஆசையிருக்கிறது. ஆனல் அடியேன் தேகம் அல்ப்ப பசியோடு கூடியதால் அளவுக்கு மேலிரண் டொரு கவளம் புசித்தால் முன் சொல்லிய பித்தாதிக்கம் அதிகப்படுமே யென்று யோசிக்குறேன். அதர்க்குத் தகுந்த மருந்து அல்லது விபூ திப் பிரசாதம் அனுக்கிரகம் செய்தால் அத் துணைப்பற்றி அன்ன

தானத்து அடியார்களில் யானொரு வடியேனாக மதிக்கப் பெறுவேன். அருள கூட்டிவைக்க வேண்டியது. வேணும் தெண்டநிட்ட விண்ணப்பம்.

இப்படிக்கு
கூ. துரைசாமி.

பிராமண சுவாமிகள் சுவாமிகளை சதா சேவை செய்துகொண்டு யிருக்க யென்றைக்கி கிடைக்குமோ வென்று விண்ணப்பஞ் செய்தார்களிக் காகிதத்துடன் அறப்பொடி பலம் அனுப்பிவைத்து யிருக்கிறேன். நோட்டிசு ஆயிரங் காப்பி* தயாராகின்றது. அதில் புருபு காப்பி வொன்று சமுகத்துக்கு அனுப்பியிருக்குது.

திருமுகம் 4

கதி அடையச் செய்யத் தக்க வழிகள்

14 - 5 - 1867

மற்றும் ஓர் அன்பர் எழுதியது

விற்த்தாஜலம்
பிரபவ ஞ வைகாசி மீ உ௨

எனதன்பிற் கடைக்கலமாகிய ஐயாவே!

தங்க ளனுக்கிறஹத்தினு லடியே னிவ் விற்த்தகாசியி லாடிய பாதத்தவ னுமத்தை சதா தங்கள் பாவினங்களால்ப் பன்னுதல் செய்து காலங்கழித்து வருகின்றேன். யினு மவனது கெண்டா ஓசையும் ஆராதிப்பவர்க ளினி தரிசனமு மில்லாதிருப்பதினுலேயே யேக்க முற்றிருக்குறேனென்பதை யுள்ளபடி அங் னரிந்துக் கொள்ளா தல்ல. யென் வாழ்நாள் முழுவதிலு மிப்ப நானிருப்பது போல் முக்தி யேக்கத்திலேயே யிருந்து நற்கதி யடைவேனென்கிற நம்பிக்கை யெவ்வளவேனு மில்லாதிருப்பதினு லிவ் வெளியேனை தங்களைவிட வேறே அக்கதியடையச் செய்யத்தக்கவர்க ளில்லை யென்றுங் கருதி இக்கடித மெழுதிக்கொள்ளத் துணிந்த யிவ்வேழையினிடத்தில் கிஞ்சித் திரக்கமு மனவூக்கமும் வைத்து தங்க ளருகி லிரித்தி யிவனுடக் கனைக் கழிப்பித்துக் கடைத்தேற்றிவைக்க, ஐயா! ஆயிரந் தரமாக வந்தனஞ் செய்குகிறேன்.

அதாவது, தங்களா லியற்றப்படப் போகிற சமரச வேத தருமச் சாலையில் தகுதியுள்ள வொரு வூழியனாக்கிக் கொள்ளும்படிக்கித் தா னிவனது கோறுதலா யிருக்குறது.

---

* வைகாசி 11, தருமச்சாலைத் தொடக்க விழா அழைப்பாக இருக்கலாம்.

இதைத் தங்களாழ்ந்த கருத்தில் யோசித் துடனே விடை யனுகிரஹிக்கவும். யெப்போது மெதிர்பார்த்திருக்கிற தங்க ளடிமைகளிலொருவ னனவனது அனேகவித வந்தனமும் சாஷ்டாங்க தண்டமும்.

இப்படிக்கு

. . . .

இஃது

குறிஞ்சிப்பாடி தபாலாபீசில் பார்த்துக்கொண்டு அடுத்த பார்வதிபுரத்தில் வீற்றிருக்குஞ் சமரச வேத தருமச்சாலைத் தலைவராகிய சிதம்பரம் மஹான் இராமலிங்கப் பிள்ளை அவர்க டிருச்சமுகத்திற்கு. குறிஞ்சிப்பாடி.

திருமுகம் 5

சிருட்டி தொட்டு உள்ள வித்தியாசப் பிராந்தி நீக்கம்

20 - 5 - 1867

சென்னை ஸ்ரீ முத்துகிருஷ்ண பிரமம் எழுதியது

உ

சுபமஸ்து

அருணாசலீஸ்வரன்பேட்டை
பிரபவ ஹு வைகாசி மீ அஉ

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூப சாட்சாத்கார சிவ சுப்ரமண்யக் கடவுளினது வரப்பிரசாதத்தினல் திருஅவதாரஞ் செய்த என்னருமைக் கண் மணியாகிய சமரச உள்ளம் வாய்ந்த இராமலிங்கமே!

முதலாவது :— முன்னல் சித்திரை மீ முதல்தெய்தி எழுதிய கடிதத்திற்கு பதில் ஒன்றும் காணமல், ஷி மீ உஉ-யில் எழுதி வரவிட்ட சமரச வேத தருமச்சாலையின் செங்கற் கட்டட முதலானதும் நாளது மீ யகஉ ரிஷப லக்னத்தில் ஆரம்பஞ் செய்வதற்கு இவனும் வரவேண்டுமென்று குறிப்பிட்ட பத்திரிகை நாளது மீ எஉ பார்க்க சந்தோடமாயிற்று. ஆனல் இவன் வருவதற்கு நாளில்லாமல் போனதால் நின்றுவிட லாயிற்று. முந்தி தெரிந்தால் ம-ா-ா வேலு முதலியாருடன் வந்துவிடுவேன். அல்லது தனித்தாவது வரலாம். அது என் பாக்கியம். அப்படிக் கிருந்தபோதிலும் என்னுடைய மங்கள வாழ்த்துதலானது ஷி மீ யகஉ முதலாய் ஷி கட்டட முதலாகியதும் நிர்விக்கினமாய் முடிந்தேறி நித்தியோச்சவமாய் தங்கள் உள்ளன்பிற் றேன்றிய சங்கல்பபடி எல்லா தருமங்களும் அபிவிர்த்தி

யாய் சந்திராதித்தர் உள்ளவரையிலும் நடந்துவரும்படி நமது சிவானந்தக் கருணைசமுத்திரத்தை பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றது.

உ-வது :—இவ்வண்ணம் இக்காலத்தில் இச் சிவகடாக்ஷ மிருந்து முடிப்பிக்குந் தன்மை யுடையது அவரது அடியார்களின் பக்தியின் மகிமையேயாம். அது இத்தன்மை யுடைய தென்று அளவிடப்படா தாதலாலும் ப்ரம்மத்தை நாடி துறந்தவர்களுக்கும் மற்றையோர்களுக்கும் இவ்வுலகத்தில் இப்போதுதான் இது நூதனமாக ஏற்படுகின்ற அன்னசாலையும் வித்தியானந்தமும் சமரச பக்குவங்களுமான பெரும்பாக்கியமான சிவானந்த செல்வத்தின் அருமையும், மேன்மையும், யோக்கியமும், சிலாக்கியமும் இவ்வள வென்று சொல்வதற்கு ஏடும் போதாது; நாவுமில்லை. இச்சிறந்த தெய்வத் தன்மையுள்ள கீர்த்தியானது ப்ரம்ம கியானம் அடையும் பொருட்டே இனி திரு அவதாரஞ் செய்யப் போகின்ற புமான்களுக்கும் உலக முள்ளளவும் உண் மகிட்சியை பூரணமாகச் செய்துவைக்கு மாதலாலும் இவ் விஷயத்தைக் குறித்து தனங் கொடுத்தவர்களுடைய புண்ணியமும் இதைக் குறித்து வாக்கு சகாயமும் சரிர சகாயமும் செய்தவர்களுடைய உள்ளன்பின் பெருமையும் எத்தன்மைத்தோ. வேதங்களாலும் அளவிடக்கூடாமை யென்று சகல சாஸ்திரமும் சொல்லுமாயின், ஒன்றுந் தெரியாதவனாகிய இவன் சொல்வ தென்னை யுள.

ந-வது :—இவனது தேகம் பட்டணத்திலும் உயிர் தங்களிருதயத்திலும் அடியார்களுடைய அன்பிலும் நாளது மீ யக உ முதல் உட்புகுந்து ஷ சிவ கைங்கரிய முடிந்தேறும் பொருட்டு நித்திய மங்கல வாழ்த்துதலோடு நிலைபெற்றிருக்கும். இனி யொருகால் அதைக் குறித்து மற்றவை ஆரம்பஞ் செய்யு நாளில் இரண்டு வாரத்துக்கு முன்னர் தெரிவிக்க சித்தமுண்டாயிருந்தால் இந்த தேகம் வந்து விடும். சித்த மறியவும். இதற்கு பதில் ஷ யக உ ஷ கைங்கரியம் ஆரம்பித்து ஆனந்தங் கொண்டாடிய பின்னர் அச்செய்தியை இவனுக்கும் ஒரு வரி யெழுதக் கோருகின்றனம்.

சுருதிப் பிரமாணம்

ஞானவாசிட்டம்

அறிஞர்க் குலகா னந்தமய மறியா தவருக் கிடர்மயமாஞ்
செறியு மிருளா மந்தகர்க்குச் செங்க ணுள்ளோர்க் கொளியாகும்
பிரிவில் பிரம மனைத்துமென நாடிற் பிரம மவனேயாம்
நறிய வமுதுண் டவனமுத மயத்தை நண்ணு திரானன்றே.

சிருட்டி தொட்டு இந்நாள் பரியந்த முண்டாயிருக்கும் வித்தியாசப் பிராந்தியை நீக்கும்பொருட்டு தங்களா லேற்படும் வித்தியானந்

தமும் அன்னசாலையும் வியாசபகவான் சுகருக்கு (ப்ரபஞ்சமதே ப்ரம் மோக மென்று) போதிச்சது போலவே பெத்தனும் முத்தனுமாகிய யாவருடைய அறிவின் கண்ணைத் திறந்து காட்டிவரு மென்று நம்பு கிறேன். அதற்கு மேல் நாரதர் சுகருக்கு (ஏகமே வாத்வைதம் ப்ரம் மோக மென்று) போதித்தது போல் மேற் சொல்லிய பசி வுபாதி நீங்கி வித்தியானந்த முண்டாயிருக்கும் தருமச்சாலையில் நின்றும் சிவ புனி தர்கள் அப்பேறடைவார்கள் எனத் தோன்றுகின்றது. சுபமஸ்து.

சிவகடாக்ஷந்துணை

திருச்சிற்றம்பலம்

(மேல் விலாசம்)
சென்னைக் கடுத்த
அருணசலிஸ்வரன் பேட்டை
ஷடி கோயிலுக்கு எதிர்
உஉசா-வது கதவிலக்கமுள்ள
திருமடத்திலிருக்கும்
இன்னன்.

இங்ஙனம்
தங்களன்பிற்
கூழியன்
திரு. முத்துகிருஷ்ணன்.

உ

கூடலூரில் மகா-ா-ா-ஸ்ரீ முத்துகிருஷ்ண இராம சாமி செட்டியார் குமாரர் அப்பாசாமி செட்டி யார் மேல்... வையிட்டு மகானுபாவராகிய சிதம் பரம் இராமலிங்க பிள்ளையார் சந்நிதானத்தில் கொடுப்பது. அவ ரெங்கே யிருந்தாலும் தட்ச ணமே அவரிடத்துக்கு அதிதீவரமாய் அனுப்பிவிடவும்.

அவசரம். சறூர் சறூர். Cuddalore.

திருமுகம் 6

புத்திமதி தெரிவிக்க வேண்டல்

17 - 7 - 1867

புதுவை ஸ்ரீ துரைசாமி அவர்கள் எழுதியது

உ

அன்புந் தயையு முடைய அய்யா அவர்கட் கனந் தானந்த வந்தன முற் றெழுதிக்கொண்டதி யாதெனின்.

அவிடத்திய சுபயோக க்ஷேமாதிசயத்தை அடிக்கடி கேழ்க்க ஆவலுள்ளவனாக யிருக்கிறேன். நீங்க ளனுப்பிய கடிதமும் ரூபாயும் வந்து சேர்ந்து அதிலுள்ள மிச்ச ரூ கூ-யும் அனுப்பித்திருக்கிறேன்.

யென்ற லாகவேண்டியவைகளுக் குத்தரவாக பலவாறு பிரார்த்திக் கின்றனன். ஈ - ஸ்ரீ வேலுமுதலியாருக்கும் ஈ - ஸ்ரீ நாயினு ரெட்டி யாருக்குந் தங்கள் கடிதத்தைக் காண்பித்தேன். ஈ - ஸ்ரீ வேலுமுதலி யார் நாளையதினம் காலமே பிரயாணப்பட்டுப் போரார்கள். நானும் ரெட்டியாரும் திண்டிவனம் வரையில் போய் வழி விட்டுவிட்டு வருகி ரோம். யெனக்கு வேண்டிய புத்திமதிகளை அடிக்கடி தெரிவித்தனுக் கிரகிக்கும்படி தங்க ளுபய சரணரவிந்தங்களை அஷ்டாங்க பஞ்சாங்க யேகாங்கமாய் பிரார்த்திக்கின்றனன்.

பிரபவ ௵ இப்படிக்கு
ஆடி மீ ௩௨ தொண்டன்
கி. துரசாமி.

இவை கூடலூரில் மகாகனம் பொருந்திய அய்யா அவர்கள் சமுகத்துக்குக் கொடுப்பது.

திருமுகம் 7

எண்ணம் ஈடேற அருள வேண்டல்

6 - 5 - 1869

ஸ்ரீ வாசுதேவன் அவர்கள் எழுதியது

உ

சிவமயம்

என தாருயிர்க் கோர் பெருந்துணையாய தங்களழகிய திருவடி களி லனேகமாய் வணங்கி செய்துக்கொள்ளும் விண்ணப்பமாவது.

எதிர் பார்த்துக்கொண்டிருந்த யேழையின் வினைவிலக விளங்கிய விளக்கமான தங்கள் கடிதம் கிடைத்து அற்ப புத்திக் கனுகுணமா யடிக்கடி வாசித்து வாசித்து வணங்கா நிற்க்கின்றேன்.

கிருபை கூறந் தனேகம் தடைகளை அனுவாக்கிக் கொண்டடியே னெண்ண மீடேற வருள பிரர்த்திக்கின்றேன்.

சித்திரை மீ உ௬ உ ப. வாசுதேவன்.

கூடலூரில் ஈ - ஈ - ஸ்ரீ......பிள்ளையவர்கள் மேல் விலாசம் பார்த்துக்கொண்டு சுவாமி அவர்கள் இராமலிங்க சுவாமி யவர்கள் சன்னிதியில் கொடுப்பது. Cuddalore.

---

2. சன்மார்க்க சங்கத்தினர் ஒருவர்க் கொருவர் எழுதிய திருமுகங்கள்

திருமுகம் 1

இறைவன் அருள் நோக்கம்

கூடலூர் ஸ்ரீ அய்யாசாமி பிள்ளை எழுதியது

கற்றற்பாலன கற்றுங் கேட்டற்பாலன கேட்டு முளங்கொள விளங்கு முணர்ச்சியுஞ் செய்தற்பாலன செய்தும் விடுத்தற்பாலன விடுத்து முறுபயனொடு கெழீஇய வொழுக்கமும் பெறீஇ நிலைத்தலை யமைந்த நேயர்க்கு பல்கால் வந்தனம்.

ஆண்டிறைவ ரருணோக்காற் சிறப்புடைத் திருவோ டுவப்புறல் வண்ண முற்படு வழக்கா னெப்புடை வருந்தோ றுணர்ந் துணர்ந்தத் தலை யுவகை சால்கிற்று மதனு னிடைக்கிடை வருமா றடுத்திவண் புரிக வன்றிப் பேருருக் காட்சியா னெடுஞ்சேய்மைக்கட் பிளவுபட்டமையி னுற்ற வுறுகட் குட்டஞ் சிற்றுருக் காட்சியானண்மைக்கட் பலகாற் கூடு நேயத்தினுற்ற வுவகைப் பெருநீர் நிலையாற் புடைபெயர்ப்பின்றி யடங்கலிற் சிறிதமைதி பெற்றும். வந்தனம்.

திருமுகம் 2

அடிகளார்க்கு உரிய திருமுகங்கள்

சென்னை ஸ்ரீ ரத்தின செட்டியார்

கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்க்கு எழுதியது

. . . .

அப்பாசாமி செட்டியார் அவர்கள் சமுகத்துக்கு அநேக நமஸ்காரஞ் செய்து எழுதிக்கொண்ட விண்ணப்ப மென்னவெனில் :

இவிடத்தில் யான் க்ஷேமம். அவிடத்தில் தங்களுடைய க்ஷேமங் களை விரும்புகின்றனன்.

இப்பவும் அவ்விடத்திலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ பிள்ளை அவர்கள் இராமலிங்க பிள்ளை அவர்கள் பேரால் இத்துடன் மூன்று கடிதம் தங்களைப் பார்வையிட்டு கொடுக்கும்படி எழுதியிருந்தே னல்லவா. அக்கடிதங்கள் மூன்றும் அவாளிடத்தில் கொடுத்திருப்பீர்களே. அந்த சேதியை யடியேன் அறியும்படி தாங்க ளொரு கடித மென் பேரா லனுப்பவேண்டியது. மேலு மவாள் கூடலூரிலே யிருக்கிறார்களோ அல்லது கருங்குழியி லிருக்கிறார்களோ அல்லது இன்னமெவ்விடத்திற் காகவது போயிருக்கிறார்களோ . . . . தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

மேலு மவா ளெவ்விடத்தி லிருக்கும்போது என் கடிதங்களைக் கொடுத்தீர்களோ அதையுஞ் சேர்த்து எழுதவேண்டும்.

எனக்கு மேல் விலாசம் :

சென்னப்பட்டணம் பெத்துநாயக்கன் பேட்டைக் குசிலி சவுளி ஊ - தஞ்சா செட்டி மேல் விலாசம் பார்வையிட்டு சை. இரத்தின செட்டிக்குக் கொடுப்பது என்று நட்பேட்டாக * வே தபால் மூலமா யனுப்பவேண்டியது.

இந்தக் காகிதம் பார்த்த வுடனே தயை செய்து கடித மெழுத மன்றுடுகிறேன். வேறு மனேக நமஸ்காரம். மேலும் பிள்ளை அவர்கள் தற்காலத்தில் வேறொரு இடத்தி லிருந்தால் அவ்விடத்திற்கு தபால் எழுதவேண்டிய மேல் விலாசமும் எழுதியனுப்ப வேண்டு மென்று பிரார்த்திக்கின்றேன்.

இக் கடிதம் அவாளிடத்திலேயே நேராய் கொடுக்கவேண்டியது.

இது
கூடலூரில் கடைத்தெருவுக் கடுத்த மகா - ா - ா - ஸ்ரீ
முத்து கிருஷ்ண அப்பாசாமி செட்டியார்
அவர்களுக்குக் கொடுப்பது.

திருமுகம் 3

சாலை அபிமானிகள்

கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்
சாலை அபிமானிகளுக்கு எழுதியது

உ

அன்புந் தயவுமுள்ள ஐயா வந்தனம்.

நாம் ஆன்மலாபத்தைப் பெற்றுக்கொள்ளு நிமித்தம் கடவுள் சம்மதப்படி யேற்படுத்திக்கொண்ட சமரச வேத தருமச்சாலையின் செங்கற் கட்டடங்களின் அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலை யெடுப்புகளும் தற்காலம் இலேசிலே நம்மாற் கட்டு வித்துக்கொண்ட விழன் மேய்ந்த மண் கட்டடச் சாலையில் ஒருசார் ஆகார தரும விருத்தியும் பிரபவ ஞு வைகாசி மீ கக உ குருவாரம் உதயகாலம் சிங்க லக்கினத்தில் துவக்கஞ் செய்வதாகத் தீர்மானித் துக் கொண்டபடி அன்றையதினத்தில் துவக்கும்போது மூவாயிரம் சனங்களுக்குக் குறையாமல் கூடுமென்று தோற்றுகின்றது. ஆகை யால் அத்தினத்தில் செல்லுகின்ற செலவு முழுவதும் இந்தத் தருமச் சாலையை யபிமானித்த நாமனைவரும் பாகஞ் செய்துகொண்டு செலுத்து வோமாக.

---

* நட்பேட்டாக – Not Paid ஆக

பிரபவ ஹு சமரச வேத தருமச்சாலைத் தலைவராகிய சிதம்பரம் இராமலிங்கப்பிள்ளையவர்கள் அனுமதிப்படி ஷை தருமச் சாலையை நடத்துகின்ற சமரச வேத சன்மார்க்க சங்கத் தாரில் ஒருவராகிய

மு. அப்பாசாமி செட்டி

திருமுகம் 4

திருக்கூட்ட சமேதர்

கூடலூர் ஸ்ரீ அய்யாசாமி பிள்ளை
தருமச்சாலை ஸ்ரீ நமசிவாயப் பிள்ளைக்கு எழுதியது

என தன்புள்ள நண்பரா மெந்தனங் தங்கட்குப் பன்முறை வந்தனம்.

இங்ஙனம் விடையேற்று தின மிராத்திரி எ மணிக்குக் கிரகத் திற்கு வந்து சேர்ந்தனன். மகா-ா-ா-ஸ்ரீ சதாசிவ செட்டியா ரவர்கள் கொடுத்த ரூ ா-க்கும் ரூ க-க்கு கூ 5? ஆக சில்லரை மாத்தித் தயார் செய்து வைத்திருக்கின்றேன். அவ்விடத்தில் சந்நிதானந் திருக்கூட்ட சமேதராய் தக்கண மடி பெயர்த்ததாய் கேழ்வியாகின்றேன். இதனால் சாலையில் விசேஷ கும்பவிராது பற்றியும் விசேஷ செலவிராது பற்றியும் க்ாசாக அதிக துகை யிருக்கில் விரளமா யிருக்குமானது பற்றியும் ரூ உடு-க்கு வட்டக்காசுகள் பைசுகள் அனுப்பி வைத்திருக்கிறேன். வ்ரப் பார்த்துக்கொள்வதன்றி உப்பும் சில சில்லரை சாமான்களும் அனுப்பியிருப்பதை வரப்பெறுவீர்களாக. அதில் சில்லரை சாமான்களை சதாசிவ செட்டியார் பெரிய தங்கையார் வசம் சேர்ப்பிக்க.

அரிசி ச-டு தினத்தில் அனுப்புகின்றேன்.

புதவாரம் அன்புள்ள நண்பன்
கூடலூர் வந்தனம்
கா. அய்யாசாமி.

உ

வடலூரில் சமரச வேத தருமச்சாலையில்
மகா-ா-ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் நமச்சிவாயப்
பிள்ளையவர்கள் இடம் கொடுப்பது

திருமுகம் 5

திருஅருட்பாவின் திருத்தொண்டர்கள்

ஸ்ரீ இரத்தின முதலியார்
ஸ்ரீ சண்முக பிள்ளைக்கு எழுதியது

உ

சிவமயம்

சமரச வேத சன்மார்க்க சங்கத்தாரி லொருவராகிய மகா-ா-ா-ஸ்ரீ சண்முக பிள்ளையவர்களுக்கு அனந்தஞ் சரணம்.

இவ்விடத்தி லின்றை வரையில் குருகடாக்ஷத்தால் யானும் மற்ற வர்களும் க்ஷேமம். அவ்விடத்தில் தங்களுடைய சுப சரித்திரங்களையும் சாலையிலுள்ள மற்றவர்களுடைய க்ஷேமங்களையும் அடிக்கடி தெரிந்து கொள்ள ஆவலுடையவனாக விருக்கின்றேன்.

தாங்கள் இந்த மீ உஉ உ வரைந்தனுப்பிய கடிதம் உரு உ வந்து சேர்ந்து எல்லா சேதிகளும் தெரிய வந்தது. மேலும் சன்னிதானம் கூடலூரிலிருந்து உ௰௩ உ சனிவாரம் மகா-ா-ா-ஸ்ரீ ஆறுமுக முதலி யாருக்கு மர விஷயத்தைக் குறித்து வரைந்து விடுத்த திருமுகத்தாலும் க்ஷேமங்கள் தெரிந்துகொண்டேன். சந்நிதானம் தருமச்சாலைக்கு உ௩ உ எழுந்தருளுவதாக அதில் குறித்திருந்தது. இது நிற்க. கூடலூரிலிருந்து மகா-ா-ா-ஸ்ரீ விசுவலிங்க வாத்தியார் அனுப்பிய பிரார்த்தனை பத்திரிகைகள் உா-ம் வந்து சேர்ந்து மதுரை இராமநாத புரம் திருவாவடுதுறை பெங்களூர் முதலிய வூர்களுக்கும் தபாலி லனுப்பிவிட்டு சென்னையிலும் வித்துவான்கள் பிரபுக்கள் பண்டிதர்கள் முதலியோர்க்கும் சேர்ப்பித்தேன். எல்லோரும் அதிக வியப்பையும் சந்தோஷத்தையும் அடைந்திருக்கின்றார்கள். ஆனால் தாமோதரம் பிள்ளைக்கும் ஆறுமுக நாவலருக்கும் அவரைச் சார்ந்த மற்றைச் சில பேர்க்கு மாத்திரம் வெறுப்பையும் கோபத்தையும் துக்கத்தையு முண்டு பண்ணிற் றென்று கேழ்விப்படுகிறேன். மகா-ா-ா வீராசாமி வாத்தியார் எழுதிய விஞ்ஞாபன பத்திரிகைக்கு பதிலுத்தரமாக "நல்லறிவுச் சுடர் கொளுத்தல்" எழுதி சென்னையி லுள்ள வொரு சிறுவன் பெயரா லதை வெளிப்படுத்தினர். அதில் வீராசாமி வாத்தியாரை விசேஷந் தூஷணை செய்திருக்கின்றது. இதைதான் சிதம்பரத்திற்கு அனுப்பியிருப்பார்கள். உங்களுக்கு அந்த புத்தகத்தை யனுப்புகிறேன் பாருங்கள். நான் தருமச்சாலைக்கு வந்திருந்தபோது இவ்விடத்தில் ஆறுமுக நாவலர் பிரசங்கஞ் செய்தபோது திருவருட் பாவை தூஷணை செய்தார். அந்த சமயத்தில் அந்த பிரசங்கத்தை கேட்க . . . ஒருவர் இதைக் கேட்டு சகியாதவராய் சிலநாள்

பொறுத்து "திருவருட்பா தூஷணை பரிகாரம்" என்று ஒரு பத்திரி கையை யெழுதி வெளிப்படுத்தினர். அதை அவ்விடம் அனுப்ப சம்மதியில்லாதவனு யிருந்தேன். ஏனெனில் நாவலர் செய்த தூஷணையை அந்த பத்திரிகையில் அவர் எழுதியிருக்கிறார். அது பற்றிதான் சம்மதியில்லை. ஆனல் தாங்கள் நாவலர் கொடிய செய்கை யிப்படிப்பட்டதென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு ஒரு பத்திரிகை யையும் அனுப்புகிறேன். மகா-ா-ா தொ. வேலாயுத முதலியார் நாவலரை லக்ஷியஞ்செய்து இதுவரையிலும் ஒன்றும் எழுதாமலிருந் தார். வீராசாமி வாத்தியார் தொந்திரவைக் குறித்து "நல்லறிவுச் சுடர் கொளுத்தல்" என்னும் பத்திரிகைக்கு பதிலெழுத ஆரம்பித்து எழுதிக்கொண்டு வரும்போது பெங்குளூரில் முதலியாருடைய மைத்துனர் இறந்துவிட்ட சமாசாரம் கேழ்விப்பட்டு ஷியாருடைய கர்ம்ம காரியத்திற்கு முதலியார் பெங்குளூருக்குப் போயிருக்கிறார். உ-ந தினத்துக்குள் வந்துவிடுவார். வந்தவுடனே அதை யெழுதி முடித்து அச்சிட்டு வெளிப்படுத்துவதாக வீராசாமி வாத்தியார் யோசித்திருக்கிறார். தாங்கள் கேட்டபடி தெய்வமணிமாலை மாத்திரம் உம புத்தகம் தற்காலம் அனுப்புகிறேன். மனு முறைகண்ட வாசகம் காப்பியாயிருப்பதால் பயிண்டுசெய்து அனுப்பிவைக்க கொஞ்சநாளா கும். திருத்தணிகைப் பதிகத்தில் நா . . ஞயார் வீட்டில் விசாரித்தேன் கிடைக்கவில்லை. இது சேதி தாங்களறியவும். மகா-ா-ா-ஸ்ரீ செல்வராய முதலியார் பல்லாரிக்குப் போயிருக்கிறார். மகா-ா-ா-ஸ்ரீ ஆறுமுக பிள்ளை சுந்தரம்மாள் முதலானவர்களும் க்ஷேமமாக விருக்கின்றார்கள். ஜீவகாருணிய வொழுக்கம் எழுதி முடிந்த சங்கதி ெ . . . . . .

இந்த ஏப்ரல் மீ முதல் ௳ தபால் கடிதங்கள் சேர்த்து எழுதி ? அணு தலை ஒட்டி யனுப்பக்கூடும். ? ரூபா இடை வரையில் ? அணு தலை. ? ரூபா முதல் க ரூபா இடைவரையில் க அணு தலை ஒட்ட வேண்டியது. மகா-ா-ா வீராசாமி முதலியாரைக் கண்டு விஞ்ஞாபனப் பத்திரிகையை வாங்கி பங்கியில் அனுப்புகிறேன். என் க்ஷேமத்தை யும் வந்தனத்தையும் எல்லாருக்கும் தெரிவிக்கும்படி பிரார்த்திக் கிறேன். சந்நிதானம் எழுந்தருளுகிற தேதியை அவசியம் தெரிவிக்க வேண்டும்.

விபவ ௵
பங்குனி மீ உம ௳
சோமவாரம்.

இங்ஙனம்
இறுக்கம் - இரத்தினம்.

திருமுகம் 6

அடியார் வரைவுகள்

11 - 5 - 1869

ஸ்ரீ இரத்தின முதலியார் ஸ்ரீ சண்முக பிள்ளைக்கு எழுதியது

உ

சிவமயம்

சமரச வேத சன்மார்க்க சங்கத்தார்களி லொருவராகிய ம-ா-ா சண்முக பிள்ளையவர்களுக்கு வந்தனம். இவ்விடத்தில் குருகடாக்ஷத்தால் இன்றை வரையில் யானும் டி சங்கத்தை யபிமானித்த மற்றவர்களும் க்ஷேமம். அவ்விடத்தில் தங்களுடைய க்ஷேமங்களையும் சாலையைச் சார்ந்த மற்றவர்களுடைய சுபசரித்திரங்களையும் அடிக்கடி தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் விருத்தாசலத்திலிருந்து சித்திரை மீ . . . அனுப்பிய கடிதம் . . . . முடித்தார். இன்னம் அச் . . . . வேறே சுத்த பிரதியாக இன்னம் எழுதவில்லை, எழு . . . . ளவர்கள் இ . . . . செய்துக் கொள்வதற்கு யாதொரு தடையுமில்லை. ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக முதலியார் . . . . . ான் எழுதிக் குறித்து விட்டார். . . . திருக்கிறுர் . . . . . அவருடன் நானும் வருவேன். ம-ா-ா-ஸ்ரீ செல்வராய முதலியார் பல்லாரியிலிருந்து இன்னம் வரவில்லை. எனக்கு வைகாசி மீ ௰உ முதல் ஆனி மீ ... உ வரையில் சுமார் ௬௰உ நாளைக்கு விடுமுறை. . . . . ஆறுமுக முதலியார் வந்தால் அவருடன் அவசியம் வந்துவிடுவேன். நாவலருக்கு சூலைநோய் லகுவாயிருப்பதாக சமாசாரம். அது எப்போதோ ஒரு . . . . கிறுர். . . . மாதத்துக் கொருவிசை அந்த . . . கஞ்செய்கிறது வழக்கம். அவருக்கு . . . . . ருந்த பல . . . . கட்டுக்கோப்புக்காக பிரித்த நிலத் . . . . . ய மரங்கள் சேர்ந்திருக்கிறதா. ரோட்டுவரையில் தெருவின் நீளம் . . . ருக்கிறதா. அந்தக் கட்டடங்கள் சத்திரங்கள் . . . . தெரியப்படுத்தவும். ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக முதலியாருக்கு அவ்விடத்தில் தானே சமுசாரத்தோடு இன்னஞ் சில தினங்களுக்குள்ளாக வந்துவிடவேண்டுமென்கிற கருத்திருக்கிறது. ஆகையால் அவருக்கும் கொஞ்சம் இடம் கொடுத்தால் நல்ல கட்டடம் செய்துக்கொள்வார். அதற்கு தடையிராது. ம-ா-ா அப்பாசாமி செட்டியாரவர்கள் தவிர மற்றவர்க ளின்னாரென்று விபரமாய் தெரிவிக்கவும். வீடு கட்ட உத்தேசஞ் செய்தவர்களார்.

இவ்விடத்திலும் மழையில்லாமல் அதிக வெப்பமாக விருக்கின்றது. இதுவரையில் எவ்வளவு தொகைக்கு கையொப்பமா யிருக்கிறது; அது விபரத்தை தெரிவிக்கவும். **ஜீவகாருணிய வொழுக்கம்** எழுதி முடிந்ததும் முடியாததும் தெரிவிக்காமல் மறந்துவிட்டீர்கள். மறவாமல் அவசியம் தெரிவிக்கவும். இந்த விசை மறக்க . . . ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக பிள்ளை சுந்தரம்மாள் இவர்கள் க்ஷேமமாக விருக்கின்றார்கள். என் வந்தனத்தையும் க்ஷேமத்தையும் எல்லாருக்கும் குறிப்பிக்கவும்.

சுக்கில ஹூ இங்ஙனம்
சித்திரை மீ ௩௰க உ இறுக்கம் - இரத்தினம்.

திருமுகம் 7

நம் பெருமான் எங்குளார் எனல்

8 – 6 – 1870

ஸ்ரீ வேலாயுத முதலியார்
ஸ்ரீ ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகளுக்கு எழுதியது

உ

பொன்னாரு மணிமன்றுட் புலிமுனியும்
பதஞ்சலியும் போற்று நிற்ப
மின்னாரு மிடைக்கயற்கண் மெல்லியல்வெற்
பரையன்மடப் பாவை காண
இன்னாமை யகன்றுலக முயவெடுத்த
திருவடிக்கே யெழிலா ரன்பு
பன்னாளும் பிரிவறிய வானந்த
நாதவருட் பண்ப போற்றி.

இவ்விடத்தில் அனைவரும் இட்ட பணிக்க ணிருக்கின்றோம். அவ்விடத்தில் இப்போ திருக்கும் க்ஷேமாதிசயங்களைப் பற்றி யடிக்கடி திருமுகம் கட்டளையாக வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

அடிமையினுடைய தேகம் வந்தது தொட்டு சீத நோயான் மிக வருந்தி யிப்போது கரு, உ௦ தினமாகச் சிறிது திருவருட் டுணையால் சுகமாக வருகின்றது. ஆயினும் தேகத்தில் தக்க வலி போதவில்லை, யதுவும் திருவருளால் உடனே கூடுமென்று நினைக்கிறேன். அது காரணம் பற்றி தங்களுக்கு அடிக்கடி விண்ணப்பம் எழுதத் தடைபட்டது. ஆயினும் தங்களையொத்த தாயினும் பெருங்கருணை யுடையவர் களே சேயினுடைய வழுக்குற்றங்களைக் கண்டு சினந்து முகம் பாரா

தொழியின் பின்பு அக்குழவி என்னை பயன்பெறும். அதுபோல ஏழை நாயடியேனது பெருங்குற்றங்களை யெண்ணி இது வரையிலும் ஒரு திருமுகமும் கருணை செய்யாது விட்டால் என் செய்வது. 'பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி' என்பதைச் சிந்தித்திருக்கு மெளியேனுடைய நெஞ்சம் அடுத்த பொழுதில் எந்தாயே நின்னருட்டிருமுகம் வரப்பெறுவே னென்னுந் துணிவு கொண்ட வென் கருத்தை முடிப்பித்தருள வேண்டுவது.

அது நிற்க. நம் பெருமான் இப்போது எவ்விடத் தெழுந்தருளி யிருக்கின்றது. சாலை என்ன ஸ்திதியி லிருக்கின்றது. அவ்விடத்திய காரியங்களை யார் பராமரிக்கின்றனர்கள். இது விபரங்களை யுடனே கட்டளையிடும்படி கோருகிறேன். அந்தப் பக்கங்களிலிருந்து இங்கு வருபவர்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றியபடியே சிலபல சொல்லுந் தோறு மனந் துடிக்கின்றது. ஆதலால் உண்மை விடயங்களை யுணர வருள் செய்தல் வேண்டும். முதலியாரவர்கள் ۞, ௬ விசை பிரயாணப்பட்டு தெய்விகத் தடையால் நிற்கும்படி நேரிட்டது. அதன் விவரத்தை நாம் நேரிற் காணும்போது தெரிந்து கொள்ளலாம். அப்படி யிருக்க முதலியாரவர்கள் நகை விஷயமாக நமது புதுவையி லிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ கு. சதாசிவ செட்டியாரவர்களுக்கு இரண்டு கடிதம் சந்நிதானத்திற்குத் தெரியாதபடியாய் எழுதியிருந்தும் நாளது வரையில் அதற்கு அவர் பதில் எழுதாமலே யிருக்கின்றார். அது விஷயத்தில் நம்முடைய முதலியாரவர்களுக்கு கொஞ்சம் தொந்தரையா யிருக்கிறது. ஆதலால் தாங்க ளிதுவிஷயத்தை யோரணுவளவும் சந்நிதானத்திற்குத் தெரியப்படுத்தாமற்படிக்கு வெளியிலும் சங்கதி தெரியாமற்படி கூடுமாயிருந்தால் சதாசிவ செட்டியாரை எவ்விதத்திலாவது கண்டு ஷெ நகைகள் என்ன என்ன நகை எவ்வளவு யாரிடத்தி லிருக்கிறது, வட்டி எவ்வளவு ஆயிற்று என்று விவரம் தெரியப்படுத்தும்படி தங்களுக்கு விண்ணப்பித்து சங்கதி தருவிக்கும்படி யுத்தரவு செய்திருப்பதால் இது விவரங்களை யுடனே தெரிவிக்க வேண்டியது. மறந்து விடாம லவசியம் தெரிவிக்க வேண்டும். சாலையிலுள்ள பெரியோர்கள் அனைவர்க்கும் அடிமை வந்தனத்தைக் குறிப்பிக்கவேண்டும். மற்ற சங்கதி பின்னால் தெரிவிக்கிறேன். வேணும் விண்ணப்பம்.

சென்னப்பட்டணம்
கஅஎ0 ௵
ஜுன் மீ அ ௨

இங்ஙனம்
அடிமை
தொ. வேலன்.

இந்தக் கடிதத்தை வெளிப்படுத்தாமல் தாங்களே பார்த்துக் கொண்டு பதில் உடனே எழுதும்படி கோருகிறேன்.

T. V.

கூடலூர் ஜில்லா குறிஞ்சிப்பாடி குப்பத்திலிருக்கும் தபால் ரயிட்டர் மேல் விலாசம் பார்வையிட்டு அடுத்த வடலூர் பார்வதிபுரம் சமரச வேதத் தருமச் சாலையி லிருக்கும் ஸ்ரீமது ஆநந்த நாத ஷண்முக சரணலய சுவாமிகள் சமுகத்திற் சேர்பபிக்க வேண்டியது.

திருமுகம் 8

ஆளுடையார் திருஆணை அமுத விருந்து

11 - 4 - 1871

ஸ்ரீ வேலாயுத முதலியார் முதலிய நால்வர்
ஸ்ரீ ஆநந்தநாத சண்முக சரணலய சுவாமிகளுக்கு எழுதியது

உ

பொன்னவிருந் திருமார்பன் புதல்வ னேடும் போற்றிசெயு
மம்பலத்தெம் புனிதன் பொற்றாள்
மன்னிவளர் திருநெஞ்சத் தென்றணவி மாதவமே
மகிழிருகண் மணியே என்றுந்
தன்னிகரா நந்தநாதப்பேர் சீர்த்த சண்முகநற்
சரணலயத்தெந் தாயே
நின்னிருதாண் மலர்க்கன்றி நீசனேன்புன் னெஞ்சிடங்கொண்
டுறுமேயோ நிலத்தின் பாலே

இவ்விடத் தனைவரு நங்குருமணி திருவருட் டுணையா லிட்ட கட்டளை யினிது புரிந்து வாழ்கின்றேம். அவ்விடத்தி னமரங்களுடைய வரு லீலைகளும் ஆளுடையார் திருவாணை யமுத விருந்தும் அமைந்த வாற்றலுக் கடியரேம் பலகாலு மடுத்தடுத் தறிய உள்ளுணர் வின்மையா லுழிதரா நின்றேமாக நற்றுணையாயினுய்க் கற்றறி கல்வியின் அற்றமுறாமை யாங்காங் கருள்க.

ஏழை யோர்க ளினிதுயு மாறு
மேவர விடுத்தவிம் மீன ரவியோர்
பதினெட் டாந்தேதிய வாய தெய்வத்
திருமுகச் சைவ மாமந் திரவின்
னமுதுபெற் றளவி னெம்மறி யாத
வாரா வின்பத் தளவின் மகிழ்ச்சி
பேராக் காதல் பெரிது விளை(ய)
பேறு பெற்றன மவ்வழிப்

பெறுபணி யதுவே யுற்றன முயலுபு
நற்றிற(க்) காட்சி யாருநா ளெண்ணி
யலமந் தலையப் போகுடை மனத்தேம்
புன்மைநோக் காதுயா மொழுகு றும்வகைத்
தோமறமற்று நற்றிறம் பலவுநல் குமதி
பெற்ற பேற்றிற் பெருந்தவத் தோயே.

வேணும் தெண்டனிட்ட விண்ணப்பம்.

இங்ஙனம்
ஏழையடிமைகள்
தொ. வேலன்.
இ. இரத்தினம்.
சி. செல்வராயன்.
ச. ஆறுமுகம்.

சென்னை
பிரமோதூத ஸ்ரீ
மீனரவி ௩௰ ௨

திருமுகம் 9

ஞானசபை வழிபாட்டுத் திருநிலைக் கண்ணுடி

22 - 10 - 1871

கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்
புதுவை ஸ்ரீ இரத்தின செட்டியார்க்கு எழுதியது

உ

சற்குரவேநம

ம-ா-ா செட்டியா ரவர்கள் இரத்தின செட்டியா ரவர்கட்கு பல முறை வந்தனம் வந்தனம். தாங்கள் நாளது மீ ரு உ கடைசியாக யெழுதிய கடிதத்தால் சகல சங்கதியும் தெரியலானேன். ஆனல் தாங்க ளெழுதியபடி நா னிப்போது வரக்கூடுமா யில்லை. ஏனெனில் எனக்குக் கண்ணோயா யிருக்கிறது. சவுக்கியமான பிறகு வர சித்தமா யிருக்கிறேன். ஒரு வேளை வர்த்தகாள் அதுவரைக்கும் கார்க்க .... தில்லையென்று சொல்லும்பட்செத்தில் இப்போது தீர்ந்தபேரஞ் சரி யல்ல வென்றும் உடையவர்கள் சொல்லுவதாக அவாள் முத்திரையை உடைத்துவிட்டு நகையை தங்கள் கைவசப்படுத்திக் கொண்டால் நான் வந்த பிறகாவது அல்லது எப்படியாவது ஓர் முடிவு செய்துக் கொள்ளலாம். தாங்கள் இதற்காக கார்ப்பதாக விருந்தால் உடனே வரும்படி கோருகிறேன். தங்கள் பெண்டுகளுக்கு சவுக்கியமாயிருக்கும். ஆதலால் அவாளையும் இட்டுக் கொண்டு வந்தால் சந்நிதானத்தை தெரிசித்துக் கொண்டு எல்லாரும் அவடம் மறுபடியும் போய் ஷை காரி யத்தை முடிவுசெய்துகொள்ளலாம். ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக முதலியார்

நாளை யல்லது உ நாள் பொறுத்து கண்ணாடி முதலியது வாங்க வருவதாக உத்தேசித்திருக்கிறார். எல்லாம் அவாளைக் கேட்டால் தெரியவரும். வேணும் பல முறை வந்தனம்.

பிரஜோற்பத்தி ஸு
அர்ப்பிசி மீ எ உ
தருமச்சாலை

மு. அப்பாசாமி செட்டி.

திருமுகம் 10

ஞானசபை வழிபாட்டுத் திருமிலைப் பெட்டகம்

புதுவை ஸ்ரீ இரத்தின செட்டியார்
கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்க்கு எழுதியது

உ.

சற்குருவே நம:

ஸ்ரீமது ம-ா-ா-ஸ்ரீ செட்டியா ரவர்கள் கூ. மு. அப்பாசாமி செட்டியா ரவர்களுக்கு பல முறையாய் வந்தனம் வந்தனம்.

இப்பவும் இவ்விடத்தில் யாவத்திருளும் க்ஷேமம். அவிடத்தில் நம்மிட சகோதராள் யாவத்திருளுடைய க்ஷேமங்களை அடிக்கடி அறிய விரும்புகின்றேன். தாங்கள் நாளது மீ ௲ உ* யெழுதிய கடிதம் உ உ பார்க்க சகலமும் தெரியலானேன். தங்களுக்கு திரேக அசௌக்கியமா யிருந்ததை கேழ்விப்பட்டு ா ஆறுமுக முதலியா ரவர்கள் கடுதாசியில் எழுதியிருந்தேன். அதற்கு நம்மிட குருநாதர் கிருபையினால் சவுக்கியமா யிருக்கு தென்கிற விபரம் தெரியலானேன். நான் பெட்டி வேலையை முன்னிட்டு தச்சன் வீட்டிலேயே இருந்து பெட்டி வேலையை முடித்தேன். அப்படி யிராமல் சாலைக்கு வந்துவிடுவேனே யானால் பெட்டி வேலை இவ்வளவு சீக்கிரத்தில் முடியமாட்டாது. பெட்டியை எடுத்துக்கொண்டு சாலைக்கி இன்றைய தினம் காலையில் பிரயாணப்பட்டு வருகிறதா யிருந்தேன். தங்கள் கடிதம் பார்த்த பின்பு பிரயாணம் தாமதப்பட்டது. அதேனெனில் முதலியார் இவ்விடம் வந்தபோது ரூ. ௱ா தயார் செய்து வைக்கவேண்டு மென்று சொன்னார். அது போல நான் உடனே தயார் செய்து வைத்துக்கொண்டு முதலியா ரவர்களுக்கு பல தண்டகம் சேதி தெரிவித்து வெகு நாள் காத்துக்கொண்டு இருந்து ஒன்றும் பதிலில்லாததினால் அச்சமயம் தங்களுக்கு பணம் அவசரமில்லை போல தோன்றி இவிடத்தில் சிலவாகிவிட்டது. இப்போது அவசரமென்று தாங்க ளெழுதி யிருப்பதைப் பற்றி இவிடத்தில் பணம் ரொம்பவும் கசாலா யிருப்பதுந் தவிர தாங்கள் எழுதிய

---

* பிரஜோத்பத்தி, மார்கழி க, 14 - 12 - 1871 வியாழன்

அவசரத்தை முன்னிட்டு எவ்வித பிரயாசையாவதுபட்டு ரூ. ௹ தயார் செய்துக்கொண்டும் பெட்டியை யெடுத்துக்கொண்டும் நாளது மீ ௰௨ யிவிடம் திங்கட்கிழமை தினம் பிரயாணப்பட்டு வந்து சேர முஸ்திப்பா யிருக்கிறேன். சாலையில் திருடர் வந்ததாகவும் சில பேருக்குக் காயம் பட்டதாகவும் புதுவையில் வெகு குபாராய் பேசிக் கொள்ளுகிறார்கள். கூடுமாயிருந்தால் முதலியார் குதிரை வண்டியை ௬௨ யாகிற செவ்வாய்க்கிழமை காலையில் குள்ளஞ் சாவடியில் அனுப்பி வைத்தால் சல்தியில் வந்து சேரக்கூடும். ரூபாயும் பெட்டியும் வருவதை முன்னிட்டு மேற்படி வண்டி வரும்படி எழுதலாயிற்று. மற்றப்படி சேதிக்கும் வேண்டிய காரியங்களுக்கும் அடிக்கடி யெழுதி யனுப்பி வைக்கக்கோருகிறேன்.........வந்தனம் வந்தனம்.

இப்படிக்கு
புதுவை. சு. றத்தன செட்டி

௨

இஃது கூடலூர் துக்குடி குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த சமரச வேத சன்மார்க்க சங்க தருமச் சாலையி லிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ செட்டியாரவர்கள் மு. அப்பாசாமி செட்டியா ரவர்களுக்குக் கொடுப்பது.

திருமுகம் 11

ஞானசபைத் திருப்பணி

9 - 2 - 1872

புதுவை ஸ்ரீ இரத்தின செட்டியார்
கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்க்கு எழுதியது

௨

ம-ா-ா செட்டியா ரவர்கள் மு. அப்பாசாமி செட்டியாரவர்கட்கு புதுவை ஷ்ர். சு. இரத்தின செட்டி யெழுதிக் கொள்ளும் வந்தனம் வந்தனம்.

இப்பவும் இவடத்தில் யாவத்திருளும் க்ஷேமம், அவடத்தில் யாவத்திருளுடைய க்ஷேமங்களை யறிய விரும்புகிறேன். கூடலூர் அமராவதி செட்டி சங்கதி அன்றைய தினம் ராத்திரிக்குள் பைசல் செய்து விட்டு பாரிக்கித்து வாங்கி ஸ்ரீ கோனேரி செட்டியாரிடத்தில் கொடுத்து விட்டு புதுவைக்கு வந்து விட்டேன். மேற்படியார் முதலுக்கு ௧ ஆக வட்டிக்கு தீர்மானம் பெற்றிருந்ததை ¾ ஆக வட்டி போட்டு முதலும் வட்டி சிலவு ரூ. ௲௬௰ கொடுத்து விட்டது. இரு

ளக்குரிச்சியான் மக னருணசல செட்டி இவர்கள் சங்கதிகளை பைசல் செய்து சாட்டி யெங்கள் மூலமாய் விட்டுவிட வேண்டுமென்று சொன்னதற்கு இருளக்குறிச்சியானுக்கு ரூ. ௱டும் தம்பி ஐயாசாமி செட்டியார் யேந்துக் கொண்டிருக்கிரு ரென்றும் அதையும் யேந்துக்கொண்டால் தங்கள் மூலமாய் சாட்டிவிடுகிறேனென்று அமராவதி செட்டியார் சொன்னுர். மாணிக்க செட்டியார் முதலான பேரும் அது சறிதானென்றும் சொன்னுர்கள். நான் தங்களை ஆலோசித்து யொழுங்கு செய்து கொள்ளுகிறேனென்று வந்து விட்டேன். இந்த சேதிகளெல்லாம் கோனேரி செட்டியாரையும் ஐயரையும் தங்களுக்குக் கடிதம் யெழுதும்படி ஜாக்கிறதை செய்து விட்டு வந்தேன். கோனேரி செட்டியார் சிலவு தொகை ரூ. ம எடுத்துக்கொண்டு மற்ற ரூபாயை யென்னிடத்தில் கொடுத்து விட்டார். கிஷ்ணயா துரைசாமி பிள்ளை சங்கதி முதல் ரூ. ௱டும் வட்டி ரூ. எ? நிலமை ரூ. கூ ே... ருபடி ரசீதுபடி சேரவேண்டியதாயிருந்தது. அதை அவருக்கு வேண்டிய ஞாயங்களைச் சொல்லி வட்டியிலும் லாபத்தையும் தள்ளி ரூ. டு வட்டிக்குக் கொடுத்து ரசீதை பெற்றுக்கொண்டேன். இது சேதி மேற்படியாருக்கு தெரிவிக்கவும். ௱-௱ ஆறுமுக முதலியாரவர்கள் சென்னபட்டணமிருந்து எனக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிரூர். மேற்படியார் புதுவை வந்து ரூபில் * பேசிக்கொண்டு போவதாய் எழுதியிருந்தார். மேற்படியார் இது வரையில் வரவில்லை. பண்ணுருட்டி மார்க்கமாய் போவதாயும் கேழ்விப்பட்டேன். மேற்படியார் அவடம் வந்து சேர்ந்தவுடன் மேற்படியார்கள் சேதி தெரிவிக்கும்படி நான் ரொம்பவும் க்ஷேமத்தை யறிய விருப்பமுடையவனு யிருக்கிறேனென்று சொல்லவும். சபைக்கி வாங்கின சாமான்கள் போக அவசியம் வாங்கவேண்டிய சாமான்கள் இருந்தா லுடனே சேதி தெரிவித்தால் வாங்கி யனுப்புகிறேன். தேக்க மரம் உ வண்டியிலேத்தி வரதராஜபிள்ளை அனுப்பி யிருக்கிரூர். மற்ற சேதிகளெல்லாம் நான் ரூபில் வந்து பேசிக்கொள்ளுகிறேன். வேணும் வந்தனம் வந்தனம்.

இப்படிக்கு

பிரசோத்பத்தி ௵ — புதுவை

தை மீ உஅ வ — சு. றத்தனசெட்டி.

உ

கூடலூர் துக்குடி குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த சமரச சங்க தருமச்சாலையி லிருக்கும் ம-௱-௱ செட்டியாரவர்கள் மு. அப்பாசாமி செட்டியாரவர்கட்கு கொடுப்பது.

---

* ரூபில் – நேரில்

திருமுகம் 12

பஞ்சாமுத நிவேதனம்

கூடலூர் ஸ்ரீ அய்யாசாமி பிள்ளை
கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்க்கு எழுதியது

உ

திருச்சிற்றம்பலம்

என தன்பரா மெந்தனந் தங்கட்கு வந்தனம்.

சந்நிதானம் நேத்திய தினம் ரூ. எ கொடுத்து பஞ்சாமுதம் செய்ய சாமான் வாங்கிவர சந்தைக்கு அனுப்பி யிருக்கிறார்கள். சந்நிதானம் சாலைக்கு எழுந்தருளும் அதி சமீபம் விரைவில் வந்து சேர வேண்டியது. அண்ணு அவர்கள் உத்தரவுப்படிக்கு.

திங்கட்கிழமை. கா. அய்யாசாமி

தங்களை காலைச் சுற்றிய பாம்பு என்று சந்நிதானம் கட்டளை யிட்டது. இந்த வார்த்தை உங்களுக்கு விசேஷ நன்மை யுண்டு பண்ணு மென்று தோற்றுகிறது.

கா. அ.

கூடலூரில் ம-ா-ா-ஸ்ரீ செட்டியார் அவர்கள்
மு. அப்பாசாமி செட்டியா ரவர்களுக்கு
கொடுப்பது.

3. வடலூர்க் குடிகள் அடிகளுக்குச் சாலைக்காக எழுதிக் கொடுத்த இனம் பத்திரம்

பட்டா நெம்பர்	பட்டாதாறன் பெயர்	தறம்	கேது நம்பர்	விஸ்தீறணம்			தீர்வை			ஆக விஸ்தீறணம்			ஆக தீர்வை		
௩	அருணாசலய்யர்	௬	௮௧௮	௧	௨	௨	௨	௰௪	௩						
		ஷை	௮௧௧	0	௧	௨	0	௩	௯						
		௧௧	௮௧௩	௧	௩	௧	௨	0	௬						
		௬	௮௧௬	௧	·0	௨	௨	௯	௨						
		ஷை	௮௧௮	0	௨	௧	0	௫	௮	௩	௧0	0	௮	௧	௪
௪	பறட்டபால பசி	௯	௯௭௮	0	௮	௧	0	௮	௯						
		ஷை	௧00௯	0	௬	௨	0	௬	௧௧	0	௧௪	௩	0	௧௫	௮
௬	அறணாசலம்	௯	௯௭௮	0	௭	௨	0	௮	0	0	௭	௨	0	௮	0
௭	பொன்னன் வகையறு	௬	௮௧௬	0	௭	0	≡	௨	௧						
		ஷை	௮௧௫	0	௧	௨	0	௩.	௯						
		௧௧	௮௨0	௧	௫	௩	௨	௪	௮						
		௯	௯௭௬	0	௩	௨									
		ஷை	௧0௧௧	0	௬	௧									
				0	௯	௩	0	௧0	௬	௨	௮	0	௪	௫	0
௯	ஷை முத்து	௯	௯௭௬	0	௩	௨	0	௩	௧௧						
		௧௧	௮௨.0	௨	௧௧	0	௪	௮	௭	௨	௧௪	௨	௪	௧௨	௬

பட்டா நெம்பர்	பட்டாதாறன் பெயர்	தறம்	கேது நம்பர்	விஸ்தீறணம்			தீர்வை			ஆக விஸ்தீறணம்			ஆக தீர்வை		
௨	சமட்டி அழகன்	௯	௯௭௯	0	௭	0	0	௭	௫	0	௭	0	0	௭	௫
௧௪	சின்றுன் சின்னபயல்	௯	௯௭௯	0	௧௫	௧	௧	0	௨	0	௧௫	௧	௧	0	௨
௧௫	இவறங்க பசி	௧௧	௮௧௩	0	௧	௧	0	௨	௧						
		௬	௮௧௬	0	௨	௩	0	௬	௧0						
		௯	௯௭௬	0	௧0	௨	0	௧௧	௨	0	௧௪	௨	௧	௪	௧
௧௬	தம்பி பசி	௬	௮௧௬	0	௪	0	0	௧0	0						
		௯	௯௭௬	0	௮	0	0	௮	௬						
		ஷ	௯௭௭	0	௪	0	0	௪	௩	௧	0	0	௧	௬	௯
௧௭	முத்து கண்ணு	௬	௮௧௧	0	௬	௧	0	௧௫	௮						
		ஷ	௮௧௬	0	௪	0	0	௧0	0	0	௧0	௧	௧	௯	௮
௧௮	ஞருயணன்	௬	௮௧௧	0	௬	௧									
		ஷ	௮௧௬	0	௩	௨									
				0	௯	௩	௧	௮	௪						
		௬	கைவிட்டது	0	0	௨	0	௧	௩	0	௧0	௧	௧	௯	௭
௧௯	சின்ன பசி	௬	௮௧௧	0	௬	௧									
		ஷ	௮௧௬	0	௩	௩									
				0	௧0	0	௧	௯	0	0	[illegible]	0	௧	௯	0
௨0	ருமலிங்கம்	௬	௮௧௧	0	௬	௧									
		ஷ	௮௧௬	0	௧௧	௩									
				௧	௨	0	௨	௧௩	0	௧	௨	0	௨.	௧௩	0

௨௧	வெங்கிடாசல பசி	௯	௯௭௩	௧	0	0									
		டி	௯௭௭	௨	௩	0									
				௩	௩	0	௩	௬	௨	௩	௩	0	௩	௬	௨
										௧௯	௧௫	0	௩௩	௧௨	௪
௩0	ஆனை பசி	௯	௫௭௮	0	௫	௫	0	௫	௭						
		௧௧	௮௭0	0	௮	0	0	௧௩	௧௧						
		௬	கைவிட்டது	0	௨	௨	0	௬	௩	0	௧௫	௩.	௧	௯	௯
௩௧	பிறமன்	௯	௯௭௮	0	௫	௧									
		டி	௧0௧௧	0	௪	௨									
				0	௯	௩	0	௧0	௪						
		௧௧	௮௨0	0	௭	0	0	௧௩	௬						
		௬	கைவிட்டது	0	௨	௨	0	௬	௩	௧	௩	௧	௧	௧௪	௧
௩௩	மொட்டவெங்கடாசலம்	௯	௯௭௮	0	௫	௧	0	௫	௬						
		௧௧	௮௨0	0	௮	0	0	௩	௬						
		௬	கைவிட்டது	0	௨	௧	0	௧௫	௮	0	௧௫	௨	௧	௮	௮
௩௬	சின்னருமன்	௯	௯ளூ௪	0	௧௧	௨	0	௧௨	௩	0	௧௧	௨	0	௧௨	௩

பட்டா நெம்பர்	பட்டாதாறன் பெயர்	தறம்	கேது நம்பர்	விஸ்தீரணம்	தீர்வை	ஆக விஸ்தீரணம்	ஆக தீர்வை
௫அ	சின்னதம்பி பசி	கக	அக௫	0 கக 0			
		௸	அக௪	0 ௧ ௨			
		௸	அ௨0	0 க௫ 0			
				க அ ௨	௨ ௬ ௪		
		௬	அக௫	0 க 0			
		௸	அக௬	0 ௨ 0			
				0 ௫ 0	0 எ ௬		
		௬	௬எ௬	0 எ 0	0 எ ௫	௨ ௨ ௨	௫ அ ௫
௫௬	பூசாரி சேபெருமாள்	௬	க00அ	0 கக 0	0 கக அ	0 கக 0	0 கக அ
௪0	பூசாரி சேவி	௬	அகக	௨ ௨ ௨	௫ ௬ ௫	௨ ௨ ௨	௫ ௬ ௫
௪௨	பூசாரி ஆனை	கக	அ௨0	க கக 0	௨ க௫ எ	க கக 0	௨ க௫ எ
௪௫	பிள்ளையான்	௬	௪.00க0	0 க௪ ௫	0 க௫ எ	0 க௪ ௫	0 க௫ எ
௪அ	சமட்டி பாலன்	௬	௬எஅ	0 ௬ ௫			
		௸	௬எ௬	0 ௬ ௫			
				க ௫ ௨	க ௪ ௬	க ௫ ௨	க ௪ ௬
௫௨	பொத்தி மொட்டயன்	௬	க00௬	0 கக 0	0 கக அ	0 கக 0	0 கக அ
௪எ	பூசாரிசின்னசெபெருமாள்	௬	அகக	க க க	௨. கக ௨	க க க	௨ கக ௨
௫எ	சீனன் சின்ன முத்தன்	௬	௬எ௬	க 0 0	க க 0	க 0 0	க க 0

சச	பூசாரி பரியன்	கக	அகங	௦	ங	உ									
		டி	அகச	௦	உ	க									
		டி	எஅங	௦	கக	உ									
கச௦	வெங்கடாசல னாய்க்கன்	கூ	கூஎச	க	க	க	க	கங	உ	க	க	க	க	கங	உ
		டி	கூசுகூ	உ	கரு	உ									
				௦	எ	௦									
கசக	ஆரியான்	கக	எஅகூ	ங	சு	உ	ங	கூ	கக	ங	சு	உ	ங	கூ	கக
கசஉ	சேவிகான்	கூ	கூஎரு	௦	கஉ	ங	க	ரு	சு	௦	கஉ	ங	க	ரு	சு
ககூகூ	காலிங்கரும பசி	கூ	கூஎரு	௦	கஉ	௦	௦	கஉ	௦	௦	கஉ	௦	௦	கஉ	௦
		டி	கூஎசு	௦	ச	௦	௦	ச	ங						
				க	ங	௦	க	ச	உ	க	எ	௦	க	அ	ரு
										சஉ	கக	௦	சுசு	கஉ	ச
உஉச	பெரிய குட்டிவெங்கிடாசலம்	கூ													
		டி	கூஎகூ	௦	கூ	௦	௦	கூ	எ						
			க௦௦அ	௦	ங	உ	௦	ங	அ	௦	கஉ	உ	௦	கங	ங
உஙஎ	மஞ்சக்கொல்லை னான்	சு	அகரு	௦	ரு	க	௦	கங	க						
		கக	அகச	௦	கங	௦	க	ரு	கக	க	உ	க	உ	ங	௦

பட்டா நெம்பர்	பட்டாதாறன் பெயர்	தறம்	கேது நம்பர்	விஸ்தீறணம்	தீர்வை	ஆக விஸ்தீறணம்	ஆக தீர்வை
௨௪௬	பொந்தயசேபெருமாள் முத்துமகன் பாலன்	௬	௮௧௫	௧ 0 0			
		டி	௮௧௮	௧ 0 0			
				௨ 0 0	௫ 0 0	௨ 0 0	௫ 0 0
௨௪௭	பறட்டமாரி பசி	௬	௮௧௮	௧ 0 0	௨ ௮ 0		
		௧௧	௮௧௪	௧ ௧0 ௧	௨ ௧௨ ௧	௨ =௧ 0	௫ ௪ ௧
௨௭௨	வெங்கிடசலனுன் வகையரு	௯	௯௭௭	௧ ௩ ௧	௧ ௪ ௬	௧ ௩ ௧	௧ ௪ ௬
	அனுதிகரம்பு	௯	௯௭௩	௨ ௮ 0			
		டி	௯௭௨	௩ 0 0			
		டி	௯௭௫	௧ ௮ 0			
				௭ 0 0	௭ ௭ 0		
		௪	௭௮௮	௧ 0 0	௩ ௪ 0	௮ 0 0	௧0 ௧௧ 0

ஆக ௧௫ ௧௩ 0 ௨௫ ௩ ௧0

ஆக ௫௮ ௮ 0 ௯௨ 0 ௨

யிதில் கண்டுயிருக்கற நிலங்களை சமரச வேத தர்ம்ம சாலைக்காக யினும் குடுக்கப்பட்டு இதுனடியில் கையெழுத்து வைக்கப்பட்டவர்கள் விவறம்.

2—2—67 ஞு*

வையித்திநுதய்யர் கையெழுத்து.

சிவசாமி அய்யர் கைஎழுத்து.

ஆதி பசி ** கயி எழுது.

மாரி பசி கையெழுத்து.

— இந்த கீறல் மஞ்சக்கொல்லை னுன் கைனாட்டு.

அருனுசல செட்டி கையி எழுத்து.

— இந்த கீறல் பரிய பசி கைனாட்டு.

— இந்த கீறல் சின்னுன் சின்னபயல் கைனாட்டு.

. . . .

வெங்கடாசல பசி கெயிழுத்து.

— இந்த கீறல் தம்பி பசி கைனாட்டு.

— இந்த கீறல் . . , பசி கைனாட்டு.

னுருயணன் பசி கைழுத்து.

. . . . ழுது.

. . . . பசி எழுது.

. . . . பசி கை யெழுத்து.

முத்து பசி காயிழுத்து.

சின்னதம்பி பசி கையிழுத்து.

— இந்த கீறல் மொட்டக்காளை சேபெருமாள் கைனாட்டு.

— இந்த கீறல் பொன்ன் பசி தம்பி சின்னது பசி கைஎழுத்து.

பொந்தயி சேபெருமான் அனுமதியில் முத்து பசி கையி எழுத்து.

. . . . . கை எழுத்து.

— இந்த கீறல் சேவிகான் கைனாட்டு.

— இந்த கீறல் சமட்டிபாலன் கைனாட்டு.

— இந்த கீறல் சே பெ பெருமான் கைனாட்டு.

— இந்த கீறல் பொன்ன பசி கைனாட்டு.

— இந்த கீறல் வெங்கடாஜல னுன் கைனாட்டு.

---

* அக்ஷய, தை, 22, சனி

** பசி - படையாச்சி என்பதன் சுருக்கம்

— இந்த கீறல் வய்யாபுரி . . . யன் கைனெட்டு.
கொமறசாமி படயாசி கையி யெழுத்து.
— இந்த கீறல் பூசாரி ஆண்டி பசி கைனெட்டு.
ராமசாமி க எது.
— இந்த கீறல் பூசாரி சேவி கை யெழுத்து.
— இந்த கீறல் குப்ப பசி கைனெட்டு.
— இந்த கீறல் அழகன் சம்மட்டி கைனெட்டு.
— இந்த கீறல் பெரியதம்பி பசி கைனெட்டு.
— இந்த கீறல் சின்னசேபெருமா பசி அனுமதியில் ஷெடியார் மகன் அரியபுத்திர பசி கைநாட்டு.
— இந்த கீறல் மொட்டை வெங்கிடாசல பசி மகன் ராமசாமிக்காக கார்டின் ஷெடியார் பெண்சாதி அங்கம்மாள் கைநாட்டு.
— இந்த கீறல் பெரியகுட்டி வெங்கிடாசலம் கையினெட்டு.
— இந்த கீறல் பிறமன் மகன் விடத்திறன் கையினெட்டு.
— இந்த கீறல் சின்னராமன் கயினெட்டு.

---

4. சன்மார்க்க சங்கத்தார் சாலைக்கு உபகரித்த பொருள்களின் அட்டவணை

31 - 12 - 1868

உ

சிவமயம்

சமரசவேத சன்மார்க்க சங்கத்து தருமச்சாலைக்கு ஷை சங்கத்தாரால் உபகரிக்கப்படும் பொருள்களுக்கு விவரமான அட்டவணை:—

(1) சென்னபட்டணத்தி லிருக்கும் சதரங்கப் பட்டணம் ஆறுமுக முதலியார் - விபவ ஞு மார்கழி மீ 18உ அனுப்பிய சாமான்களுக்கு விபரம்:

சிகப்பு சால்வை	கரு	ஆப் டிம்மி பேப்பர் தஸ்தா	௬
மல் பீசு	க	லெட்டர் பேப்பர் ரீம்	க
லாங்கிளாத்து பீசு	உ	பேனா கட்டு	உ
கார்பெட்டாக்கு என்கிற பை	க	இங்கி பவுடர்	௬
பயிண்டு செய்த ஆப்டிம்மி பேப்பர் புத்தகம்	உ	சிலேட்டு பென்சில் பொட்டி	க
பிரவுனுபேப்பர் தஸ்தா	௬	டெர்சல்	௬

(2) கஸ்டம் ஆபிசு முருகேச முதலியாரனுப்பிய சாமான்கள் விவரம்:

பச்சை பட்டுக்குட்டை	க

(3) சென்னப்பட்டணம் ரத்தின முதலியாருல வரவு:

ஜோடு	க
பட்டு அரைநாட் கயிறுகள்	உ

விபவ ஞு மார்கழி மீ 18உ வெங்கடேசய்யர்

5. அகர உயிரின் இலக்கண நியாய விசார விஞக்கள்

ஸ்ரீசுவாமிகளுக்கு ஆட்பட்ட சமரச வேத சன்மார்க்க சங்கத்து அறிஞர்களில் ஒருவராகிய ஸ்ரீ ஆனந்தநாத சண்முக சரணுலய சுவாமிகள் எழுதியவற்றுள் கண்டது :—

...புலவர்கள் பலர் அகங்காரத்தால் தம்மை மதியாது இயலறியாது எழுதியவாறே புலமையிற் பெரியோ மென்னுஞ் செருக்கின்றி... அறிவறிந் தடங்கியாரிற் சிலர் எழுதியவற்றிற் சில சில விடங்களில் வழுவினர். இவ்வழுக்கள் செருக்கால் வழுவியதன்று. விசாரத்தாலுஞ் சிவானுபவ மேலீட்டாலும் வழுவியது. இவற்றைத் தேவாரந் திருவாசக முதலிய உண்மை முறைகளிற் காண்கின்றேம். இக்காலத்து எமது ஆசிரியரை வணங்கி "ஐயரே! தேவரீர் எழுதிய சில வாசகத்தினுஞ் செய்யுளினுங் கருத்துக்கு விளங்கப் புலப்படாமை மயக்குகின்ற சொற்றொடர்கள் சில வுள வென்று எமது மாட்டாமையாற் றோன்றுகின்றது ; இதற்கு யாது செய்வேம்?" என்று விண்ணப்பஞ் செய்ய, அவர் "ஐய! நீர் அஞ்சற்க. யாம் எழுதிய வாசகத்தினுஞ் செய்யுளினும் அளவிறந்த குற்றங்களிருக்கின்றன ; என் செய்வேம்! விசார வசத்தால் ஆங்காங்குந் தவறினேம். அதனைப் பெருங் கருணையுள்ள எமது கடவுள் மன்னிப்பர். மற்றையரு மன்னித்தல் வேண்டும். யாம் யார்? எமக்கு யாது தெரியும்? புழுவினுங் கடைய புலையரிற் சிறியேம் இதனால் நாணுதலுடையேம்" என்றனர். ஐயர் புகன்ற மாற்றம் எவ்வாறென் றெண்ணி நிற்குந் தருணத்து எம்மை ஆண்டிருக்கப் பணித்து மீட்டுஞ் சொல்லுவர் :—

"அகரவுயிர் என்பது யாது? அகரவுயிர்க்கு

1. வரி வரலாற்றின் இலக்கணம் என்னை?
2. ஒலி வரலாற்றின் இலக்கணம் என்னை?
3. தன்மை வரலாற்றின் இலக்கணம் என்னை?
4. உணர்ச்சி வரலாற்றின் இலக்கணம் என்னை?

அதன்

5. உண்மை யனுபவ விலக்கணம் என்னை?

அகரவுயிர்க்கு

6. வரி யுரு விலக்கணம் என்னை?
7. ஒலி யுரு விலக்கணம் என்னை?
8. தன்மை யுருவி லிலக்கணம் என்னை?
9. உணர்ச்சி யுருவி லிலக்கணம் என்னை?

10. உண்மை யனுபவ வுருவி னிலக்கணம் என்னை ?

அகரவுயிரின்

11. வரிச் சொருப விலக்கணம் என்னை ?
12. ஒலிச் சொருப விலக்கணம் என்னை ?
13. தன்மைச் சொருப விலக்கணம் என்னை ?
14. உணர்ச்சிச் சொருப விலக்கணம் என்னை ?
15. உண்மை யனுபவச் சொருப விலக்கணம் என்னை ?

அகரவுயிர்க்கு

16. வரிச் சுபாவ விலக்கணம் என்னை ?
17. ஒலிச் சுபாவ விலக்கணம் என்னை ?
18. தன்மைச் சுபாவ விலக்கணம் என்னை ?
19. உணர்ச்சிச் சுபாவ விலக்கணம் என்னை ?
20. உண்மை யனுபவச் சுபாவ விலக்கணம் என்னை ?

அகரவுயிரின்

21. வரிச் செயற்கை யிலக்கண மென்னை ?
22. ஒலிச் செயற்கை யிலக்கண மென்னை ?
23. தன்மைச் செயற்கை யிலக்கண மென்னை ?
24. உணர்ச்சிச் செயற்கை யிலக்கண மென்னை ?
25. உண்மைச் செயற்கை யிலக்கண மென்னை ?

அகரவுயிரின்

26. வரி யதிகார விலக்கணம் என்னை ?
27. ஒலி யதிகார விலக்கணம் என்னை ?
28. தன்மை யதிகார விலக்கணம் என்னை ?
29. உணர்ச்சி யதிகார விலக்கணம் என்னை ?
30. உண்மை யதிகார விலக்கணம் என்னை ?

அகரவுயிரின்

31. வரிப் பொது விலக்கணம் என்னை ?
32. ஒலிப் பொது விலக்கணம் என்னை ?
33. தன்மைப் பொது விலக்கணம் என்னை ?
34. உணர்ச்சிப் பொது விலக்கண மென்னை ?
35. உண்மைப் பொது விலக்கண மென்னை ?

அகரவுயிரின்

36. வரிச் சிறப் பிலக்கணம் என்னை ?

37. ஒலிச் சிறப் பிலக்கணம் என்னை?
38. தன்மைச் சிறப் பிலக்கணம் என்னை?
39. உணர்ச்சிச் சிறப் பிலக்கணம் என்னை?
40. உண்மைச் சிறப் பிலக்கணம் என்னை?

அகரவுயிரின்

41. வரிக் குண விலக்கண மென்னை?
42. ஒலிக் குண விலக்கண மென்னை?
43. தன்மைக் குண விலக்கண மென்னை?
44. உணர்ச்சிக் குண விலக்கண மென்னை?
45. உண்மைக் குண விலக்கண மென்னை?

என்பன முதலாக இவ் வகர வுயிர் ஒன்றற்கே யின்னும் பற்பல இலக்கண நியாய விசார வினக்கள் உளவாயின், எம்போல்வா ருணர்ச்சிக்கண் அவ் வினக்களுக்கு விடை யெங்ஙனந் தோற்றும்? ஓரெழுத்திற்கே யிங்ஙனமானல் பற்பல வெழுத்துக்களுக்கும் அவ் வெழுத்துக்களா லாகிய சொற்களுக்குஞ் சொற்பொருள்களுக்கும் விடை கொடுப்பது எங்ஙனம்? ஆகலில் கற்றேமென்னுஞ் செருக்கை முழுதும் விடுத்து விசார வசத்தராகிச் சிவபெருமான் திருவருளைச் சிந்தித்திருத்தல் வேண்டும்'' என்று எம்மையோர் பொருளாகக் கருதி இரக்கத்தால் இசைத்தனர். ஆகலின் கல்வியிற் செருக்கடைதல் எவ்வாற்றனும் பொருந்தாது.

நடந்தவண்ணம் உரைத்தல்

கல்வி கேள்விகளால் சிறந்த அறிவுடையவர்களுக்கு வந்தனஞ்செய்து வெளிப்படுத்துகை.

அட்சய வருஷம் தை மாதம் 5ந் தேதியில் கூடலூரைச் சார்ந்த திருப்பாதிரிப் புலியூர்க்கு அடுத்தபெண்ணை நதித் தென்கரையில்உண்ணு மூலைச் செட்டிச் சாவடிக்குச் சமீபத்தில், ஓர் நைமித்தியத் திருவிழாவைப் பற்றி அறிவுடையோர் அநேகர் கூடினர். அவ்விடத்தில் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளும் இருந்தனர். அப்போது பிரமசமாஜம் சம்பேடு ஸ்ரீதரசுவாமி நாயக்கர் சிலருடன் வந்திருந்தனர்.

அதற்கு முன் திருப்பாதிரிப்புலியூரில், ஸ்ரீதரசுவாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தினுல் சந்தேகத்திலழுந்திய சிலர், தமது சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற்கு இஃதோர் தருணமென்று கருதி அக்கூட்டத்தில் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளை நோக்கி, ''ஐயா! பிரம்மத்தை நினைப்பது தகுதியென்றும், விக்கிரக ஆராதனை செய்வது தகுதியல்ல வென்றும் இங்கே வந்திருக்கின்ற ஸ்ரீதரஸ்வாமி நாயக்கரவர்கள் எங்கள் முன்பாகப் பலமுறை பிரசங்கித்தார். அதனுல் எங்களுக்குச் சந்தேக முண்டாகி இருக்கின்றது. அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்விக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் ''பிரம்மத்தை அறியத் தொடங்கினேர் அறிதல்வேண்டும், விக்கிரக ஆராதனைசெய்யத் தொடங்கினேர் செய்தல்வேண்டும். இவ்விரு வகையும் அது அதற்குரிய பக்குவர்களுக்கு அடுத்த வகைகள் என்று அறிய வேண்டும்'' என்று சொல்லினர்.

அப்போது அங்கிருந்தவர்களில் சிலர் நாயக்கரைப் பார்த்து ''இது விஷயத்தில் தங்கள் கோட்பாட்டைவெளிப்படுத்தி நிறுத்தல்வேண்டும்'' என்ருர்கள். நாயக்கர், லிகித மூலமாய் வெளிப்படுத்துவேன் என்ருர்.

அதுகேட்டு, "ஓர் சபையில் மாறுபட்ட இருவர் தங்கள் தங்கள் கோட்பாடுகளை அந்தச் சபையில் அறிஞர் அறிய எடுத்துரைத்து அதற்குத்தக்க சாட்சி, அநுமானம், உவமானம், சத்தம் முதலிய பிரமாணங்களும் உடன்படல், மறுத்தல், ஒருசார் உடன்பட்டு மற்றொருசார் உடன்படாமை, முற்றும் உடன்படல்போன்று உடன்படாமை முதலிய கோட்பாடுகளுக்கமைந்த பலவகை யுக்திகளும், அநுபவத்தோடு தர்க்க, உபதர்க்க, லட்சண உபலட்சணங்களுக்குப் பொருந்த விரித்து விவகரித்து அந்த விவகாரத்திற் சந்தேக விபரீத மயக்கத்திற்கு இடங்கொடாமல் முடிந்த நிச்சயத்தைப் பின்னர் லிகிதமூலமாய்ப் பிறரறிய வெளிப்படுத்தல் மரபேயல்லது, மாறுபட்டோர் இருவரும் வேறு வேறு இடங்களிலிருந்து அறிஞர் சபாதிபத்யமின்றித் தங்கள் தங்கள் மனஞ்சென்ற வழி அளவை எல்லையைக் கடந்து எழுதிக் கொள்வதில் ஞானந் தோன்றாது என்றும், ஒழியாத லிகிதச் சண்டையாக முடியுமென்றும் அது தர்க்க மரபல்லவென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

அங்கிருந்தவர்களில் சிலர் நாயக்கரைப் பார்த்து "ஐயா! தங்கள் கோட்பாட்டை வெளியிட்டுப் பிரமாணத்தால் நிலைபெறச் செய்து எங்களையும், அவ்வழியில் நடத்துவிப்பதற்கு அடுத்த தருணம் இதுவாக இருக்க அத்தருணத்தில் இப்படிச் சொல்வது தங்கள் கோட்பாட்டிற்கு அழகல்ல" என்றார்கள்.

உடனே நாயக்கர் "நித்திய-நிரஞ்சன-நிர்ம்மல-நிராமய-நிராலம்ப சொரூபமும் அவாங் மனோகோசரமுமான பிரமத்தை நினைப்பது தக்கதென்பதும், விக்கிரக ஆராதனை செய்வது தகாது என்பதும் எங்கள் பிரம்மசமாஜ வேதசமாஜ கோட்பாடு" என்று வெளியிட்டார்.

"அவாங் மனோகோசரமான பிரமம், மனதினால் எப்படி நினைக்கப்படும்? ஆகாயம் அடியாலும் படியாலும் அளக்கப்படும். காற்று கையாற் பிடிக்கப்படும். என்பவைபோல் வார்த்தை மாத்திரத்தால் அன்றி அர்த்த லட்சியானுபவங்களுக்கு இடம் பெறவில்லையே" என்று சுவாமி வினவினர்.

"மிதக்கியானமுள்ள நம்மிட மனத்திற்குப் பரிமித வஸ்துவைப் போல் அடங்காது என்று சொன்னதேயல்லாது ஏகதேசம் மனத்திற்கு விளங்காதென்று சொன்னதல்ல" என்று நாயக்கர் உத்தரித்தனர்.

"மனத்திற்கு அகோசரமென்பது, மனத்திற்குவிஷயப்படாததென்று பொருள் படுமேயல்லாது சிறிது விஷயமாகிப் பெரிது விஷயமாகாதென்று பொருள்படாதென்றும் அவ்வாறுபொருள் கொள்வது லட்சண

உபலட்சண விதியல்லவென்றும் ஒருகாலத்தில் ஒரு பொருள் விஷயமானால், மற்றொரு காலத்தில் சிறிது விஷயமாகும் பிறிதொரு காலத்தில் சிறிது விஷயமாகும். இவ்வாறு [illegible] றும், அவாங் மனோகோசரமென்றதில் மனத்திற்குச் சிறிது [illegible] படி வாக்குக்கும் சிறிது விஷயமாதல்வேண்டும் என்றும், இவ்வாறு மனவாக்குகளுக்குச் சிறிது விஷயமாகுமென்று கொண்டபோது கண், காது, மூக்கு, மெய், வாய், கை முதலிய மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகுமென்பது தானே விளங்குதலால் பிரம்ம லட்சணத்தோடு விரோதப்படுமென்றும் மன முதலான அந்தக் கரணங்களுக்கும் கண் முதலான இந்திரியங்களுக்கும் நாம ரூபக்கிரியைகள் விஷயமாகுமல்லது தத்துவாதீதமாகிய பிரமம் விஷயமாகுமென்பது விபரீத உணர்ச்சி என்றும் மனோலயம் கிடைத்த பின்னர் பிரம்மானுபவம் கிடைக்குமென்றும், மனம் சிறிது தோன்றினும் ஆத்மஞானம் விளங்காது என்றும் மனம், அசத்து, சடம், அநித்தியம், துக்கம், அசுத்தம் உடையது பிரமம், சத்து, அறிவு, நித்தியம், இன்பம், சுத்தம், உடையது. ஆகலின் மனத்திற்குப் பிரம்மம் எவ்வகையினும் விஷயமாகாது என்றும் இவ்வாறே வேதம் முதலிய கலைகளினும் ஆப்த வாக்கியங்களினும் ஆணையிட்டு இருப்பதென்றும் பிரம்மம் மனத்திற்கு விஷயப்படாதென்றும் பிரம்மம் மனத்திற்கு விஷயப்படாதென்பது அநுபவத்திற்கும், மற்ற ஹேதுக்களுக்குப் யூகங்களுக்கும் பொருந்துகின்ற பட்சமென்றும்'' சுவாமிகள் சொல்லினர்.

பின்னர் சிலபொழுது நாயக்கர் சும்மா விருந்தனர். அங்கிருந்தவரில் சிலர் நாயக்கரைப் பார்த்து, ''சும்மாவிருக்கப்படாது உத்தரிக்க வேண்டும்'' என்றார்கள். நாயக்கர் சற்று நேரம் சென்று மீளவும் ''மனத்தினால் பிரம்மத்தை நினைக்கக்கூடும்'' என்று முன் சொல்லியதையே சொல்லினர்.

''தங்கள் இஷ்டப்படி விதியைக் கடந்த விவகாரமும் நடைபெறுகின்றது. பிரமம், மனத்திற்கு விஷயமாகுமானால் கண்ணுக்கும் விஷயமாகும். இவைகளுக்கு விஷயமாகுமானால் மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகும் என்று நான் முன் சொல்லியதைத் தாங்கள் சிந்தித்துணர வேண்டும்'' என்று சுவாமிகள் சொல்லினர்.

நாயக்கர்-சற்று நேரம் சென்று ''மனத்திற்கு விஷயமாகும் [illegible] கண்ணுக்கும் விஷயமாகுமோ?'' என்றார். சுவாமிகள் ஆம் [illegible]

நாயக்கர் ''மற்ற இந்திரியங்களுக்கு விஷயமாகாமல் மனத்திற்கு விஷயமாகத் தக்கது ஒன்றுமில்லையோ? ஒன்றுமில்லையோ! என்று பல் முறை வியந்து வினவினர்.

மனத்திற்கே விஷயமாகத்தக்கது யாது? அதனைத் தாங்களே வெளிப்படுத்தல்வேண்டும்'' என்று சுவாமிகள் சொல்லினர்.

''ஆனந்தம் மனத்திற்கே விஷயமாவது'' என்று நாயக்கர் சொல்லினர்.

ஒரு ரூபவிஷயத்தைக் கண்கள் கண்டு. அந்த ரூபவிசேஷத்தால் ஆனந்த விருத்தியை அடைந்து. பின்னர் அதன் வழியாக மனத்திற்கும் அவ்வானந்தத்தை அடைவிக்குமென்றும், கண்கள் முன்னர் ஆனந்தத்தை அடைந்ததற்கு அடையாளம், அக்கண்களிலிருந்து சிந்துகின்ற பாஷ்பங்களே என்றும், அதை ஆனந்தபாஷ்பமென்று வழங்குவதே போதுமான பிரமாணமென்றும், இஃதன்றி நேத்திரானந்தம், சிரவணானந்தம் என்று அறிவுடையோர் பிரயோகிப்பதை யூகிக்கவேண்டும் என்றும் இங்ஙனம் கண் முதலிய இந்திரியங்களும் மனம் முதலிய கரணங்களும் ஆன்மாவுக்கு உபகாரக் கருவிகளாதலால் அவைகள் ஆனந்தம் அடைந்தனவென்பது உபசரிப்பென்றும் ஆனந்தம், பிரத்யேக ஆன்ம ஞான விஷயமென்பது உண்மையென்றும் சுவாமிகள் சொல்லினர்.

பின்னர் சற்று நேரம் சென்று ''ஓர் இந்திரியத்திற்கு விஷயமாவது வேறோர் இந்திரியத்திற்கும் விஷயமாகுமென்றது எப்படி? காதுக்குப் புலப்படுவது மூக்குக்குப் புலப்படாது. சருத்துக்குப் புலப்படுவது கண்ணுக்குப் புலப்படாது'' என்று நாயக்கர் சொல்லினர்.

முன்னர் அவாங் மனோகோசரமென்றதற்கு தாங்கள் கொண்ட கருத்தின்படி வாக்குக்கும் மனத்திற்கும் பிரமம் சிறிது விஷயமானால் கண்களுக்கும் கைகளுக்கும் சிறிது விஷயமாகுமென்று தாங்களே யூகித்து அறியலாமென்றும் ஒரு பொருள் மனத்தினால் நினைக்கப்படுமானால் காதினாலும் கேட்கப்படும். காதினால் கேட்கப்பட்டது கண்ணினால் காணப்படும், கைகளினால் பிடிக்கப்படுமென்பது உபதர்க்க உபலக்கணமென்றும் ஸ்தூலசூக்கும காரண பூதங்களால் உருவாகித் தோன்றுகின்ற பொருளினிடத்து மனமுதலான கரணங்களுக்கும் கண் முதலான இந்திரியங்களுக்கும் விஷயங்களாக்கத்தக்க பண்புகள் உண்டாயிருக்குமென்று அறிந்த பட்சத்தில் ஒரு பொருள் ஒரு பண்பினால் ஓர் இந்திரியத்துக்கு விஷயமாகுமானால் அந்தப் பொருள் மற்றொரு பண்பினால் மற்றோர் இந்திரியத்திற்கும் விஷயமாகுமென்று சாதாரண ஜனங்களாலும் அறியப்படும் என்றும், அட்சயோக ஞானத்தாலும், இந்திரியங்களின் சொரூபரூப சுபாவ வியாபக வியத்தி விசேஷ சாமாநிய முதலியவைகளையும் வெளிப்படுத்துகின்ற தத்துவ சாத்திரங்களாலும் பிரகிருதி சாத்திரங்களாலும் உய்த்துணர்ந்து தெளியப்படுமென்றும் கண்களும்

மனமும் அதி சுரஞேபாதான சம்பந்தமுடையதென்றும், மத்திய பூத தூல சூக்கும காரியமென்றும், இதனுல் மனத்திற்கு விஷயமாவது கண் களுக்கும் விஷயமாகுமென்றும், கண்களுக்கு விஷயமாவது மனத்திற்கும் விஷயமாகுமென்றும்'' சுவாமிகள் சொல்லினர்.

அந்த சமயத்தில் இவைகளைக் கேட்டு சூழ நின்ற திருவயிந்திபுரம் வைஷ்ணவப் பிராமண பண்டிதர்களும், ஸ்மார்த்த பண்டிதர்களும் அந்தச் சபையில் உட்புகுந்திருந்து சுவாமியை நோக்கி ''மனத்திற்குப் புலப்படுவது கண்களுக்கு எப்படிப் புலப்படும்?'' என்று வினவினர்.

'ஒரு பொருளில் ஸ்தூலப் பிரகிருதி சூக்கும பிரகிருதி, காரணப் பிரகிருதி மகா காரண பிரகிருதி, மூலப் பிரகிருதி என ஐவகை பிரகிருதி அங்கங்களுண்டென்றும் அவைகளில் காரணப் பிரகிருதி மகாகாரண பிரகிருதியங்கங்கள் மனத்திற்கு விஷயமாகும் என்றும் இவை சாதாரண லட்சணமென்றும் அசாதாரண லட்சணத்தில் கண்ணறிவு, பலமுறை சாதன லட்சியத்தால் நுட்பவறிவாகி மனத்திற்கு விஷயமாகின்ற காரண மகாகாரண பிரகிருதியங்களையும் அறியும் என்றும் இவ்வாறு அறிவது சாத்தியமே என்றும் இதனை யோக சாதன முதலிய வழிகளா லும் தத்துவ சாத்திரங்களாலும் அநுமான முதலிய பிரமாணங்களா லும் அறிந்து கொள்ளலாம் என்றும் அன்றி, மனத்திற்குப் புலப்படுவது பிரபஞ்சம்-அது கண்களுக்கும் புலப்படுமென்றும்'' சுவாமிகள் சொல்லினர்.

''மனத்திற்குப் பிரமம் புலப்படாதோ?'' என்று பண்டிதர் வின வினர்கள்.

''பிரமம் மாயாதீதமாதலால் மாயாகாரியமாகிய மனத்திற்குப் புலப்படாது என்றும்'' சுவாமிகள் சொல்லினர்.

ஆனல் பிரமத்தை எப்படி எல்லாம் அறியலாம்? என்று பண்டிதர் வினவினர்கள்.

''ஆன்மஞானத்தால் அறியலாம். என்று சுவாமிகள் சொல்லினர். பின்னர் சம்மதித்தவர்களாக பண்டிதர் சும்மாஇருந்தார்கள்.

அதன்மேல் அங்கிருந்தவர்களிற் சிலர் நாயக்கரைப் பார்த்து ''சும்மா இருக்கப்படாது, தருணநேரிட்டபோதே உத்தரிக்கவேண்டும்'' என்றூர்கள். நாயக்கர் வழக்கப்படி ''லிகித மூலமாக உத்தரிக்கிறேன்'' என்று சொல்லினர். அதுகேட்டு அந்தச் சபையிலுள்ளவர்களும் அதன் புறத்து நின்றவர்களும் சிறிது சிரித்தார்கள். அதுபொருமல் நாயக்கர்

"இன்னும் எட்டு தினத்திற்குள் இவ்விடத்தில் என்னைச் சிரித்தவர்களை எல்லாம் நான் சிரிப்பிக்கின்றேன்" என்று சபதம் கூறினர்.

அதுகேட்டு அந்தச் சபையில் உணர்வுந் தயவுமுடைய ஒருவர் இதென்ன கெர்வித வார்த்தை என்றனர்

அதுபொறுமல் நாயக்கர் அளவிறந்த கோபாவேசத்தொடும் கண்கள் சிவப்ப, தேகம் பதைப்ப வாயாற் சில பழிபடு வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே திடீரென்று எழுந்து இடி முழக்கினாற்போல் ஆரவாரித்தனர். இவருக்குச் சகாயமாய்ப் பின்வந்தவர்களும் நெருப்பில் நெய்விட்டதுபோல் கோபமுண்டு கோடித்தனர்.

அத்தருணத்தில் சுவாமிகள் நாயக்கருக்கும் மறறவர்களுக்கும் கோபம் தணியத்தக்க நல்ல வார்த்தைகளைச் சொல்லி எழுந்தவரை மீளவுமிருக்க வைத்து "ஐயா! நாயக்கரவர்களே! கெர்வித வார்த்தை யென்ற சத்தத்தின் லட்சியத்தை நாம் உள்ளபடி அறிந்தால் இவ்வளவு தீவிரம் நேரிடுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஆயினும் போனது போக இனியாவது இச்சபையார் அறிய பிரமம் மனத்திற்கு விஷயமாகா தென்று நான் தெரிவித்தபடி, தாங்களும் சம்மதிக்கின்ற பட்சத்தில் சம்மதமென்று சொல்லிச் சும்மாவிருக்கவேண்டும். சம்மதியாத பட்சத்தில், பி.மாணத்தாலும் யுக்தியாலும் அனுபவத்தாலும் தங்கள் கோட்பாட்டை நிறத்துவீர்கள்" என்று சொல்லினர்.

"நாயக்கர் இப்போது என்னை விட்டுலிட்டால் பின்பு லிகித மூலமாக வாதிக்கின்றேன்!" என்று சொல்லினர்.

"எதிர் நின்று வாதிப்பதற்குக் கூடாமையால் லிகித மூலமாய் வாதிப்பீர்கள் என்பதில் நம்பிக்கை இல்லை என்றும் லிகித மூலமாய் வாதிப்பது தர்க்கலட்சண மரபு அல்லவென்று முன்னரே குறித்திருக்கின்றேன்" என்றும் சொல்லி முடித்து பின்னர் அந்தச் சபையில் சிலரை நோக்கி "பிரம்மானுபவம், விக்கிரக ஆராதனை செய்தாலல்லது வாராதென்றும், விக்கிரகம் என்பது விசேஷ இடம் என்று பொருள்படும் என்றும், ஆன்மா இருப்பதற்கு கிரகம், மனிதர் முதலிய ஜீவதேகங்களென்றும் பிரம்ம பிரகாசமிருந்து வெளிப்படுவதற்கு விக்கிரகம் தேவ தேகங்களென்றும் அந்தத் தேவ தேகங்களாகிய விக்கரகங்களில் விதிப்படி பக்தியோடு உபாசிக்கில் பிரம்மப்பிரகாசம் எளிதில் வெளிப்பட்டு அனுக்கிரகிக்கும் என்றும் அவ்வாறு விசேட இடமென்று சொல்லப் படுகின்ற விக்கிரகங்களில் பிரம்மப்பிரகாசம் வெளிப்பட்டு அனுக்கிர

கித்ததற்கு அடையாளம் சிலகாலத்திற்கு முன் விக்கிரக ஆராதனம் செய்த பக்தர்கள் குஷ்டம், குன்மம் முதலான தீராத வியாதிகளைத் தீர்த்தும், இறந்தவர்களை எழுப்பியும், அசாத்தியமான அநேக மகத்துவங்களை நடத்தியும் இருந்ததே போதுமானதென்றும் இப்போதும் விக்கிரக ஆராதனை செய்கின்ற பக்தர்கள் சில மகத்துவங்களைச் செய்து வருகிறுர்களென்றும் பிரம்மசமாஜத்தார் வேத சமாஜத்தார் அந்த அடையாளங்களை உடையவர்களாய்த் தோன்றவில்லை என்றும், நாமெல்லாம் நமது பக்குவத்திற்குத் தக்கபடி விக்கிரக ஆராதனை செய்து, அதனுல் அருளைப் பெற்று, அதனுல் அறிவு விளங்கி, அதனுல் பிரம்ம சுகத்தை அனுபவிக்கலாமென்றும் சுவாமிகள் சொல்லிக் கொண்டே எழுந்தனர்.

அடிகள் பதிப்பின் (1851) முகப்பேடு. Photo Block

உ

திருச்சிற்றம்பலம.

ஒழிவிலொடுக்கம்.

சீகாழி.

திருஞானசம்பந்தசுவாமிகள்

திருவருள்பெற்ற

கண்ணுடையவள்ளல்

திருவாய்மலர்ந்தருளிச்செய்தது.

இஃது

திருப்போரூர்ச்

சிதம்பரசுவாமிகளால்

ருளிச்செய்த - உரையுடன்.

சிதம்பரம்.

இராமலிங்கபிள்ளை

யவர்களால்

பார்வையிடப்பட்டு.

மண்ணிப்பாக்கம்.

சபாபதிமுதலியா

ரவர்களால்

முத்தமிழ்விளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருது வருஷம் ஐப்பசிமீ

முதல்பதிப்பு.

அடிகள் பதிப்பின் (1855) முகப்பேடு. **Photo Block**

உ

சிவமயம்.

தொண்டமண்டலசதகம்.

படிக்கா[illegible]ல்

இயற்றப[illegible]

சுஅருசளூ ஜனவரிம[illegible]

ம - ா - ா - கனம்பொருந்திய

தொண்டமண்டலம்

துளுவவேளாளர்களேற்படுத்திய,

இயற்றமிழ்ப் போதசாலை

இரட்சகர்த்தராகிய

சொன்னூர்

ஐயாசாமி முதலியாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

சிதம்பரம்

இராமலிங்கபிள்ளையவர்களாற்

பரிசோதிக்கப்பட்டு.

[illegible] அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ராட்சஸ மார்கழி மீ

1865

முதற் பதிப்பின் (1879) முகப்பேடு. Photo Block – Enlarged.

உ

அருட்பெருஞ்சோதி

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கபிள்ளையவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

சிவகாருண்ய வொழுக்கம்

இஃது

கடலூர்டிஸ்ட்ரிக்ட் - இஸ்கூல் இனிஸ்பெக்டர்

சி - இரங்கசாமிபிள்ளை.

புதுவைக்கடுத்த

வைத்திருப்பம் - மே - அப்பாசாமிநாயகர்

இவர்கள்கேட்டுக்கொள்ள

கலவை - முத்தியாலுசெட்டியார் குமாரர்

ங்கரசெட்டியார் முயற்சியில்

பு. ் - கிருஷ்ண சாமிநாயகரால்

....

சபா - மாணிக்கபிள்'' சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்